ஏப்ரல் [illegible]
மே [illegible] } 1986

# தமிழரசு

SL
V2,1(m) N86
N86.4

5835

# தமிழரசு

1-4-1986 75 காசு



கூறப்பட்ட கட்டண உயர்வு—விலைவாசி உயர்வு போன்றவைகளால் பெரும்பகுதித் தொகை திரும்பப் போய்விடுகின்ற நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.

3. பொதுவாக, வளர்ச்சித் திட்டங்கள், வறட்சி-வெள்ள நிவாரணப் பணிகள், நலிந்தோர்க்கான நல் வாழ்வுத் திட்டங்கள், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருந்து அவதியுறுபவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் போன்றவற்றில் மத்திய அரசின் பங்காக ஒரு பகுதித் தொகை கிடைக்கின்றது என்றாலும், பெரும் பகுதித் தொகைக்கான பொறுப்புக்களை, மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுதான், ஏற்க வேண்டியிருக்கிறது. மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்களைச் சிறப் பாகவும் செம்மையாகவும் முடிக்க வேண்டுமானால், அதற்கு மிகுந்த பொருளாதார வசதிகள் தேவைப்படு கின்றன. பொருளாதார வசதிகளைப் பெருக்கிக் கொள்ள, வாய்ப்புக் கூறுகளும் அதிகார வரம்புகளும் வேண்டப்படுகின்றன. அவற்றிற்கான உரிமைகளும் மாநில அரசிடம் அமையப் பெறவேண்டியிருக்கின்றன.

4. இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1969ஆம் ஆண்டில், தாம் மறைவதற்கு முன்னால் எழுதிய கட்டுரை ஒன்றில், '' மாநிலங்கள், அதிக அளவில், அதிக அதிகாரம் பெறத்தக்க விதத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறிவருகிறேன் '' என்று திட்ட வட்டமாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

5. இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும் மக்களை வாழவைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமையவேண்டும் என்னும் கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி" வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சி அமைய வேண்டும். அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும். கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல்வேறு அரசியல் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

6. மைய-மாநில அரசு உறவுகள் குறித்து ஆய்வு நடத்தி, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அமைக் கப்பட்டுள்ள நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழுவிடம், பல்வேறு அரசியல் தரப்பினரால் மேலே குறிப்பிட்டுள்ள கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொள்கையின் அடிப்படை யில், தமிழக அரசும் கருத்துக்களை வற்புறுத்தியுள்ளது. இந்தக் கருத்துக்களை ஏற்று, நீதிபதி ஆர். எஸ். சர்க் காரியா ஆணைக்குழு, இந்தியாவில் இணைப்பாட்சி அரசுமுறை ஏற்பட, உரிய பரிந்துரைகளைச் செய்யும் —செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்போமாக !

7. தற்பொழுது தமிழக அரசுக்கும் தமிழக மக்க ளுக்கும் மிக்க வேதனையும், வருத்தமும் தந்துகொண் டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை இலங்கைவாழ் தமிழர்கள் பற்றிய பிரச்சினையாகும். இலங்கை அரசின் தூண்டுதல்பேரில், இலங்கைப் போர்ப்படை யினர் சனநாயக நெறிமுறைகளையும்—பண்புகளையும் —மனிதத் தன்மையையும் அத்துமீறிய வகையில், அழித்துவிட்டிருக்கும் அடக்குமுறை வன்செயல்களின் மூலம், இலங்கை வாழ் தமிழர்கள் படும் அவதிகள் குறித்தும், உயிர்-உடல்-உடைமை ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்தும் அன்றாடம் துக்ககரமான



செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அவர் களைப் பற்றிய துக்கச் செய்திகளும் துயரச் செய்திகளும் இங்குள்ளோர் அனைவர் உள்ளங்களையும் வாட்டி வதைத்து, வருத்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கின்றன. இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் வாழ்வுரிமை யையும், குடியுரிமை—மொழியுரிமை—தொழிலுரிமை பிரதிநிதித்துவ உரிமை போன்ற அடிப்படை உரிமை களையும் பெற்று, அச்சத்திற்கு இடமில்லாத அமைதி வாழ்வு பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதையும், அதற்கான எல்லாவிதமான நேரிய அரசி யல் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள இந்தியப் பேரரசு முன்வரவேண்டும் என்பதையும் இம் மன்றம் பல தடவைகளில் வற்புறுத்தி வந்திருக்கிறது. தமிழக மக்களின் வேண்டுகோள்களை ஏற்று, இந்தியப் பிரதமர் அவர்கள் அரசியல் முறையில் தீர்வுகாண பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்றாலும், இனிக் காலத்தாழ்வுக்கு இடமில்லாமல் விரைவில் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியப் பிரதமரைத் தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அண்மையில் இந்தியப் பிரதமர் இலங்கை அரசுக்குக் கூறியுள்ள அறிவுரைகளுக்கு



இலங்கை அரசு செவிமடுத்து, அவற்றிற்கு ஏற்ப செயலில் இறங்கும் என்று எதிர்பார்ப்போமாக !

8. தங்கள் உயிர்களைக் காத்துக்கொள்ள, இலங் கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி ஓடிவந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000ஆகப் பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம் களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, இவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில் இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வுப் பணிகளுக்காகவும், இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

9. தமிழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுக் கால வரலாற் றைப் புரட்டிப் பார்ப்போமேயானால், ஒவ்வோர் ஆண்டும் கடுமையான வறட்சி அல்லது பெருவெள்ளம் அல்லது கடும் மழை ஆகியவற்றால், தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்திருப்பதை அறியலாம். 1985—86ஆம் ஆண்டு இவற்றால் தமிழகம் ஒருசேர பாதிக்கப் படுகின்ற ஒரு தனித்தன்மை நிலவியது. இந்த ஆண்டில், ஒருபுறம் பெரும் வெள்ளத்தால் உயிரிழப்பும், பொரு ளிழப்பும் பெருமளவுக்கு ஏற்பட்டன ; மற்றொருபுறம் மழையின்மையாலும், நீர்ப் பாசனம் இன்மையாலும் கொடிய வறட்சிநிலை ஏற்பட்டது. இத்தகைய கேடு பயக்கும் பருவ நிலைகள் நிலவிய போதிலும், உணவு உற்பத்தியின் இலக்கை அடைவதில் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளோம். இதற்கான காரணம் அரசு மேற் கொண்ட தனி முயற்சிகளும், வேளாண் பெருங்குடி மக்கள் எடுத்துக்கொண்ட விடாமுயற்சிகளுமேயாகும். என்றாலும்,, வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளும், இழப்புக்களும் நமது வளர்ச்சிப் பணிகளைப் பெரிதும் பாதித்துள்ளன. போர்க்கால விரைவு அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப் பட்டன. வெள்ள நிவாரணப் பணிகளின் செலவாக, அதிக அளவாக ரூ. 66·8 கோடி மத்திய அரசால் அனு மதிக்கப்பட்டது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, மாநில அரசு இதுவரை சுமார் ரூ. 45 கோடி செலவழித்துள்ளது. இந்த நிதியாண்டின் முடிவுக்குள் ளாக செலவின் அளவு ரூ. 60 கோடியை எட்டிவிடும். அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மீதமுள்ள தொகை, வரும் நிதியாண்டில் தொடர்ந்து செலவிடப்படும்.

10. தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலை களைப் பற்றியும் புதிய திட்டங்களைப் பற்றியும் குறிப் பிடுவதற்கு முன்னர், இந்தியா முழுவதிலும் தற்பொழுது நிலவும் புதிய நிலைமைகளைப் பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். 1985—86ஆம் ஆண்டில், நாட்டில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய ஊக்கம் கொடுக்கும் நோக்கத்துடன், பல கொள்கைகளை புதிய கண்ணோட்டத்தில் அணுக, மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது. புதிய தொழில் கொள்கை, புதிய கல்விக் கொள்கை, நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை போன்றவை பற்றி மத்திய அரசின் அறிவிப்புக்கள், மத்திய அரசு நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையனவாகக் கருதப்பட வேண்டும்.

11. மேம்பாடு அடைந்துள்ள இந்த வளர்ச்சிச் சூழ் நிலையைத் தமிழ்நாடு அரசு முழுவதுமாகப் பயன் படுத்திக்கொள்ளக் கருதியுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம், தமிழ் நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழில் துறை, ஆண்டு ஒன்றுக்கு, சராசரி 8.1 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது என்றும், மற்ற மாநிலங் களின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதுவே மிக உயர்ந்த நிலையினது என்றும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலை நமக்குப் பெருமை யையும் பூரிப்பையும் அளிக்கக்கூடிய ஒரு நல்ல நிலை யாகும். வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரை யிலுங்கூட, பாதகமான பருவ நிலைகளின் காரணமாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலை இருந்து வருகிறது. 1986—87-ல் உணவு தானிய உற்பத்தி 92 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது. சர்க்கரை, அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை சற்றுக் கூடுதலாக ஆன நிலை யிலும், அவற்றைப் பொது விநியோகத்தின் மூலம் குறைந்த நியாயமான விலைக்கு வழங்கியதன் காரண மாகப் பொது மக்களின் இடர்ப்பாடு தவிர்க்கப் பட்டது. அரிசியைக் குறைந்த விலையில், பொது விநியோகத்தின் மூலம், வழங்குவதன் வாயிலாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 100 கோடி இழப்பு ஏற்படுகிறது.

12. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்குப் பயன் விளைவிக்கின்ற இருபது அம்சத் திட்டத்தினைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறது. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்தும் வகையில், அரசின் அனைத்துத் துறைகளும் முடுக்கிவிடப்பட்டு, சீரிய பணிகளைச் சிறப் பாக மேற்கொள்ளும்படி செய்தமையால், 1982—83, 1984—85 ஆகிய ஆண்டுகளில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு முதலிடத்தை அடையும் பேற்றினைப் பெற்றது. கடந்த ஆண்டுகளைப்போலவே, நடப்பு 1985—86ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு முதலிடத்தைப் பெறுவதற்கு ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் மாநில அரசு முறைப்படி மும்முரமாக மேற்கொண்டு வருகிறது. 1986 சனவரித் திங்கள் இறுதிவரை உள்ள கால அளவில், பயறு உற்பத்தி—கொத்தடிமை ஒழிப்பு—குடிசைப் பகுதியினர் மேம்பாடு—6 முதல் 14 வயதுக்குட்பட்டோரைப் பள்ளியில் சேர்த்தல்—சிறு தொழில்களைத் தொடங்குதல் போன்றவற்றின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் தமிழ்நாடு மிஞ்சி விட்டது. பாசன வளத்தைப் பெருக்குதல்—கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம்—உபரி நிலங்களைக் கையகப்படுத்தி வழங்கல்—ஏழையர்க்கு வீட்டுமனை வழங்குதல்—சிற்றூர்ப் புறங்களில் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்—கரிம வாயு உற்பத்தி செய்தல்—மரம் நடுதல்—கருத்தடை செய்தல்—முதியோர் கல்வி வழங்குதல் போன்ற அம்சங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில், 75 விழுக்காட்டிற்கு மேல் எய்தப்பட்டு விட்டன. 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் எல்லா இலக்குகளையும் எதிர்பார்க்கும் அளவுக்கு முடித்திட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

13. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமை யிலான இந்த அரசு, அனைத்துத் தரப்பினர்க்கும் ஏற்ற பல்வேறு நலப்பணிகளை மேற்கொண்டு, அவற்றைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வந்துள்ளது. இயற்கைச் சீற்றங்களால் பல இடர்ப் பாடுகள் ஏற்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் சமாளித்து, வளர்ச்சிப் பணிகள் ஏதொன்றையும் குறைத் துக்கொள்ளாமலும், அவற்றிற்குக் குந்தகமில்லாத வகையிலும், நலப்பணித் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடிந்தது என்பதே, நமது வலுவான நிதி நிலை நிருவாகத்தைக் காட்டுகிறது. இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில ஆண்டுகளில், ஊரகத் தன்னிறைவுத் திட்டம் என்னும் பயனுள்ள பெருந்திட்டம் ஒன்று ரூ. 216 கோடி மொத்தச் செலவில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஏழை எளிய குழந்தைகளுக்கும், பள்ளிச்சிறார்—சிறுமியர்க்கும் பயன்







# வரிகள் பல நீக்கம் - வளமான பணிகளுக்கு ஆக்கம்

## மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன்

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே,

1985—86ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1986—87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த அவையின் ஒப்புதல் பெறவேண்டி, அவையின்முன் வைப்பதில், பெருவிருப்பமும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைக் கடமையுணர்வும், பொறுப்புணர்வும் மிக்க உறுப்பினர் பெருமக்கள் எல்லோரும், நல்ல ஆதரவையும், சிறந்த ஒத்துழைப்பையும் நல்கி, பெருமகிழ்வோடு ஏற்பார்கள் என்று பேராவலோடு எதிர்பார்க்கிறேன்.

> பெரும்பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால்
> ஆற்ற விளைவது நாடு.

என்று ஒரு நல்ல நாட்டிற்கு நல்லிலக்கணம் கூறவந்த திருவள்ளுவப் பெருந்தகையார், மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார். மிக்க பொருள்வளம் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளைபொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்பது வள்ளுவனாரின் வாய்மொழியாகும். இத்தகைய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்திவரக் கூடிய ஒரு சிறந்த நிலப் பகுதியாகத் தமிழ்நாடு பொலிவு பெற்றுத் திகழ வேண்டும் என்பதில், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு, இன்றைய தமிழக அரசு, அரும்பணிகள் பலவற்றையும் நிறைவேற்றி வருகிறது.

2. தமிழ்நாடு அரசு மாநில அளவில், ஏற்படுகின்ற பிரச்சினைகள் பலவற்றையும் தீர்க்கக் கடமைப் பட்டிருக்கிறது. அதுபோல, இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற அரசியல்—பொருளாதார—சமூகப் பிரச்சினைகள், இந்தியாவின் கூட்டமைப்புக்குள் ஒரு உறுப்பாக இருக்கும் தமிழ்நாட்டையும் பாதிக்கும் போது, அவற்றையும் சமாளிக்க வேண்டிய கடப்பாடுடையதாகத் தமிழ்நாடு அரசு இருக்கிறது. இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம், புதிய வரிகள்—ஆயத்தீர்வை—ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம்—இரும்பு—நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல்—பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன. சில இனங்களில் மத்திய அரசு அளிக்கும் உதவித் தொகை கூடுதலாகி இருக்கிறது என்பதிலே மகிழ்ச்சி ஏற்பட்டாலும், மேலே

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
குரோதன - பங்குனி 18
மலர் : 16 இதழ் : 19
1-4-1986



தரத்தக்கத் திட்டமான முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் 1982–83ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றுத் தொடர்ந்து நல்ல நோக்கத்தில் நடைபெற்றுவருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்தத் திட்டம் மேலும் திருத்தியமைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த சத்துணவு—சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமாகத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, மொத்தத்தில் 1986–87-க்குரிய வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 168.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ–மாணவியர்க்குச் சீருடைகளும்—பாடநூல்களும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 1986–87இல் இத் திட்டத்திற்கு ரூ. 27.39 கோடி செலவாகும். இத்தகைய பரந்த—விரிந்த செயல் நோக்கத்தைக் கொண்ட ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்பட்ட நிலையில், அவற்றின் நடைமுறை குறித்துப் பலருடைய உள்ளங்களில் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவித்தாலும், அவை வெற்றி பெறும் நிலையில், நல்லவர்கள் அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுகின்றன என்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். இன்று இத் திட்டங்கள் தேசிய முன்னுரிமைத் திட்டங்களாக உருப்பெற்றிருப்பது, இம் மாநிலத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

**14.** ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோர்க்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது. வீட்டு வசதி செய்துகொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள், அவற்றைப்போன்ற மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் நெருங்கிய கூட்டு ஒத்துழைப்பு இதற்கு மிகவும் இன்றியமையாததாகிறது. வீட்டுவசதித் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட இருக்கும் நிறுவனம், வீட்டு வசதி–நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம் (HUDCO), வீட்டுவசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் (HDFC), ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க, முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தை நான்கு, ஐந்து வகைகளில் செயற்படுத்த திட்டமிடப்பட்டு வருகிறது. குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது, ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது, வீடுகட்ட ஏழைகளுக்குக் கடனுதவி அளிப்பது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட உதவுவது, தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித் தர ஊக்குவிப்பது போன்ற வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவானதொரு திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம் (NREP), கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் (RLEGP) ஆகியவற்றின்கீழ் அரசின் நேரடி உதவியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர முதற்கட்டமாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நிதி நிறுவனங்கள் மூலம் தேவைப்படும் நிதிகளைத் திரட்டுவதற்கான முயற்சிகள் முறைப்படி மேற்கொள்ளப்படும்.

**15.** கிருஷ்ணா ஆற்றுக் குடிநீர்த் திட்டத்தை ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து செயற்படுத்தத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து நிதி ஒதுக்கீடுகள் செய்து வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், தமிழ்நாட்டின் பங்கின் ஒரு பகுதியை நாம் முன்னதாகவே கொடுக்க முன்வந்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலத்தாழ்வு ஏற்படக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும் என்றாலும், இத் திட்டத்திற்கு இசைவு அளிப்பதில் மத்திய அரசு காலத்தாழ்வு செய்துவருவதன் காரணமாக, இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளும் காலத்தாழ்வு பெற்றுள்ளன. இத் திட்டத்தின் செலவில் பெரும்பாலான இனங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவில் இடம் பெறவேண்டியிருக்கின்றன. இத்திட்டத்தைத் துவக்கிவைத்த போது மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஓர் அருமையான எடுத்துக்காட்டு இத் திட்டமாகும் என்று புகழ்ந்துரைத்ததை ஈண்டு நினைவு கூறலாம். சென்னை மாநகருக்குக் கூடுதலாக நீர் வழங்கக்கூடிய, இன்றியமையாச் சிறப்பினைக் கொண்ட, இந்த முக்கியமான திட்டத்திற்குத் தேவையான அனுமதியை இந்திய அரசு விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தின் பங்கீட்டு விகிதத்திற்கு ஏற்ப ஆந்திரப் பிரதேச அரசும், அவர்களின் சார்பான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்யப்படாத நிலை ஏற்படின், தமிழ்நாடு அளிக்கும் பங்குத் தொகையைக் கொண்டு மட்டும் இத் திட்டப் பணியைக் குறிப்பிட்ட கால அளவு எல்லைக்குள் நிறைவேற்ற முடியாமற் போகக் கூடும். இந்த நிலைமை விளக்கப்பட்டு, அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அவசியம் ஆந்திரப் பிரதேச அரசிடம் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. 1986–87ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்குப் பயனபடுத்தத் தமிழ்நாடு அரசு ரூ. 45 கோடி ஒதுக்கியுள்ளது. உரிய அளவுக்கு ஆந்திரப் பிரதேச அரசின் பங்கீட்டுத் தொகையையும் தமிழ்நாடு அரசு எதிர்பார்க்கிறது.

**16.** ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு ஒவ்வோர் ஆண்டும் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. 1986–87ஆம் ஆண்டிற்கென ரூ. 45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிற்றூர்களில் பழுதுபட்ட இரும்பிலான மேல்நிலைத் தொட்டிகளுக்குப் பதிலாகச் சிமெண்ட் கற்கலவையினாலான மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க, இந்த ஒதுக்கீட்டிலிருந்து, ரூ. 5 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான தேவைகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து, தக்கச் செயற்குறிப்புக்களை வழங்குமாறு, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**17.** 1986–87ஆம் ஆண்டில் மின்சக்தித் துறையின் திட்டச் செலவை நாம் ரூ. 395 கோடியாக உயர்த்தி நிர்ணயித்துள்ளோம். இந்த வகையில் ஏற்படும் செலவினங்களுக்காகத் தமிழ்நாடு அரசு அளிக்கவேண்டியுள்ள ரூ. 300 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கூட்டுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்புக்கள் அரசின் ஆய்வில் உள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிதி உதவி அளிப்பது பற்றி, ஆசிய வளர்ச்சி வங்கி மதிப்பீடு செய்து வருகிறது. பழுப்பு நிலக்கரி இயற்கையிலேயே அதிகமாகக் கிடைக்கும் நெய்வேலியில், மின் உற்பத்தி அளவை அதிகமாக்கக்கூடிய திட்டங்களுக்கு இந்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க்கிறோம். ஒப்புதல் கிடைக்கும் நிலையில், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏற்படும். தமிழ்நாடு, மின்சக்தித் துறையில் தன்னிறைவு அடைய வேண்டும்—அடைய முடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

**18.** தஞ்சை டெல்டாப் பகுதியில் இயற்கை வாயு கணிசமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதனைத் தோண்டி எடுக்கும் முயற்சி மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கும் எண்ணெய் வளம் தரமுயர்ந்ததாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இது பொதுவாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு—குறிப்பாகத் தஞ்சை மாவட்டப் பகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். மத்திய அரசு, இந்த வளத்தைப் பயன்படுத்தி அதற்கு ஏற்ற தொழிற்சாலைகளை உருவாக்கவும், மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தவும் முன்வரவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

**19.** 1985–86ஆம் ஆண்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். 1985–86ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நான் இந்த அவையின்முன் வைத்தபோது, திட்ட ஒதுக்கீடு பற்றியோ, மத்திய நிதியுதவியின் அளவு பற்றியோ திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவிக்கும் நிலையில் இல்லை. ஏனெனில், திட்டக் குழுவுடன் நடத்தும் விவாதங்கள், அப்பொழுது முடிவடையாமலிருந்தன. பின்னர், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவைவிட, கணிசமான அளவுக்குக் கூடுதலான திட்டச் செலவிற்குத் திட்டக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதில் தமிழ்நாடு மகிழ்ச்சிக்குரிய வகையில் வெற்றி கண்டது. மேலும், நமது வற்புறுத்தலுக்கிணங்க, திட்டப் பணிகளுக்காக மத்திய அரசின் நிதியுதவியின் பங்கும் உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,150 கோடியாக இருக்க, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்தது. திட்டத்திற்கான மத்திய அரசின் உதவியும் ரூ. 665 கோடியிலிருந்து ரூ. 1,438 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் 82·54 விழுக்காடும் மத்திய அரசின் நிதியுதவியைப் பொறுத்த வரையில் 116·28 விழுக்காடும் உயர்ந்துள்ளன. நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேற்குறிப்பிடப்பட்ட இரு இனங்களிலும் மிக அதிக அளவில், உயர்ச்சியைப் பெற்றுள்ள ஒரு சில மாநிலங்களில், தமிழ்நாடு முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

**20.** மத்திய நிதியுதவியைப் பெறும் வகையில், இம் மாநிலத்திற்கு நீண்ட நெடுங்காலமாக இழைக்கப்பட்டுவந்த அநீதியைப்போக்கி, ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய மற்ற மாநிலங்களுக்கும் இம் மாநிலத்திற்கும் இடையே நிலவி வரும் ஏற்றத்தாழ்வை, நியாயத்தின் அடிப்படையில் நீக்கவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அவ்வப்போது வற்புறுத்தி விடுத்த வேண்டுகோள்களை மத்திய அரசு ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். மேலும், 1985–86 ஆம் ஆண்டிலும் 1986–87ஆம் ஆண்டிலும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாயின் பங்கும் ஓரளவுக்கு உயர்ந்துள்ளது. மத்திய அரசின் வரிவசூல் நிலை சற்று உயர்ந்திருப்பதே இதற்குக் காரணம். இந்த இரண்டு சாதகமான சூழ்நிலைகளாலும், மாநில அரசின் வரிவசூல்—சிறு சேமிப்பு வசூல் ஆகிய இரு வகைகளிலும் வருவாயைப் பெருக்கிக் கொள்ள மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும், மிகைப்பற்றைத் தீர்க்க ரூ. 38·9 கோடி மத்திய அரசிடமிருந்து நடுத்தரக் காலக் கடனாகப் பெற்றமையாலும், நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்து, முன்னர் எதிர்பார்க்கப்பட்ட தோராயமான ரூ. 264·20 கோடி பற்றாக்குறையைப் பெருமளவுக்குச் சரிக்கட்ட முடிந்தது. இதனால், வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் பலவற்றையும் மேற்கொள்ள இயலும் என்பதற்கான நம்பிக்கையும் உறுதிப்பாடும் ஏற்பட்டிருக்கின்றன. 1985–86 இல் முடிவான பற்றாக்குறை ரூ. 7·45 கோடியாக இருக்கும்.

**21.** இந்த ஆண்டு சனவரித் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நடந்த விவாதத்திற்குச் சட்ட மன்றத்தில் நான் பதில் அளிக்கும்போது, 1987 சனவரித் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் கள்-சாராய விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், 1986–87ஆம் நிதி ஆண்டில், ரூ. 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986–87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**22.** எனினும், 1987–88ஆம் நிதி ஆண்டில், மதுவிலக்கின் மூலம் வருவாய் இழப்பு ரூ. 250 கோடியாக இருக்கும் என்று கணக்கிட வேண்டிவரும். மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் வருவாய் இழப்பில் 50 விழுக்காட்டை, ஈடு செய்யும் ஒரு திட்டத்தை மத்திய அரசு முன்பு அறிவித்தது. ஆனால், 1977–78இல் மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பைப் பொறுத்து மட்டுந்தான் மத்திய அரசு ஈட்டுத் தொகை வழங்கும் என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்குக் கொள்கையை நிலைநாட்டுவதன் மூலம் இப்பொழுது ஏற்படக் கூடிய வருவாய் இழப்பைப் பொறுத்தும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவில் ஈட்டுத்



அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. மேலும் தொழில் துறை வேலைவாய்ப்பை அதிகரிக்கும் ஓர் ஆதாரமாக இருந்து வருகிறது. தொழில்களுக்கான ஊக்கத் திட்டங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தில், சில சலுகை நடவடிக்கைகளுக்கான அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. அளிக்கப்படும் சலுகைகள், தொழில் நடத்துவோரின் கூடுதல் வருவாய்ப் பெருக்கத்திற்கான வழிகள் என்று கொள்ளப்படாமல், பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கும்,



அல்லல்களைக் களைவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஆன நெறிப்படுத்தும் செயல் முறைகளாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

**44.** கீழ்க்கண்ட பொருள்களின் மீது இருந்து வரும் விற்பனை வரிகள் அறவே நீக்கப்படுகின்றன :—

(1) துத்தநாகம் பூசிய இரும்புவாளிகள்.

(2) வீடுகளில் பயன்படுத்தப்படும் கரி மற்றும் நிலக்கரி மாத்தவிடு, உமி போன்ற பொருட்களாலான எரிபொருட்கள் **(Briquettes).**

(3) நாட்டுச் சர்க்கரை **(Bhoora Sugar)** மற்றும் கற்கண்டு.

(4) நுரை ரப்பரால் **(Foam Rubber)** தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் **(Quilt beds).**

(5) மெழுகுவர்த்திகள்.

(6) படச்சட்டங்கள் மற்றும் படங்கள்.

(7) வெள்ளி மெட்டி **(Metty).**

(8) போட்டி விளையாட்டுப் பொருள்கள்

(9) அனைத்து இசைக்கருவிகள்.

(10) விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்திவிதைகள்.

**45.** கீழ்க்கண்ட வகைகளில், சாதாரணப் பொதுமக்களுக்கும், நுகர்வோர்க்கும் தொழில் துறையினர்க்கும் உதவிடும் தன்மையில், தற்போதுள்ள வரி விதங்கள் குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்கப்படுகின்றன :—

(1) மக்களின் உயிர்காக்கும் 41 வகையான மருந்துகள் மீதிருந்துவரும் 8 சதவிகித வரி 4 சதவிகித வரியாக குறைக்கப் படுகிறது.

(2) குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பால்உணவுப் பொருள்கள் மீதான 10 சதவிகித வரி, 4 சதவிகித வரியாகக் குறைக்கப் படுகிறது.

(3) இழுவை வண்டிகள் (உந்துகலம் இழுக்கும் குடியிருப்பு வண்டி—**Trailers**) மீதான 15 சதவிகித வரி, 9 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.



(4) பரிசுச் சீட்டுகள் **(Lottery Tickets)** மீதான 20 சதவிகித வரி 10 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(5) கோழித் தீவனத்தின் மீதான 5 சதவிகித வரி, 2 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

**46.** இம் மாநிலத்திலுள்ள தொழில் துறையினர்க்கும், வணிகர்களுக்கும் உதவும் வகையில், கீழ்க்கண்டுள்ளவாறு வரி விதிப்பு முறைகளை நெறிப்படுத்தவும், மற்றும் வரி விகிதங்களைக் குறைக்கவும் கருதப்பட்டுள்ளது :—

(1) தற்பொழுது உள்ள வணிகவரிச் சட்டத்தின் முதல் அட்டவணையின் கீழ் வரும் இறுதிப் பொருள்களைத் தயாரிக்கப் பயன்படும் அனைத்து உறுப்புப் பாகங்கள், மூலப் பொருள்கள் மற்றும் செய்முறைப் பொருள்கள் **(Processing Materials)** (சாராயக் கலவைச் சாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது தயாரிப்புக்கள் தவிர) ஆகியவற்றின் மீது தற்பொழுதுள்ள 10 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலாக உள்ள வரி விகிதங்கள் இனி 4 சதவிகித வரியாகச் சீராகத் திருத்தி அமைக்கப்படும். இச் சலுகையால் இம் மாநிலத்தில் இறுதிப் பொருள்களின் விலை பொதுவாகக் குறைந்து நுகர்வோர்க்குப் பயன் அளிக்கும்—பயன் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

(2) சிறு தொழில் முனைவோர்களின் கோரிக்கையை ஏற்று, மின் சக்தி உற்பத்தி செய்யும் பொறிகள் **(Generators)** மீதான 12 சதவிகித வரி இனி 8 சதவிகித வரியாகக் குறைக்கப்படுகிறது.

(3) நமது மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் அளிக்கவும், உள்ளூர் தயாரிப்பாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுப் பொருட்கள் மற்றும் பாகங்கள் மீதான 10 சதவிகித வரி இனி 6 சதவிகித வரியாகக் குறைக்கப்படும். நமது மாநிலத்திற்கு வெளியே தயாரிக்கப்பட்டு இங்கே வந்து விற்பனையாகும் மின்னணுச் சாதனங்கள் மீது ஒரே சீராக 10 சதவிகித வரி விதிக்கப்படும்.

**47.** வணிக வரி விதிமுறைகள் தொடர்ந்து நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. சென்ற வரவு-செலவு நிதி அறிக்கையில்கூட நான் வணிகத் துறையின் பிரச்சினைகளைச் சீராக்கப் பலமுனை வரிகள் சிலவற்றை ஒருமுறை வரிகளாக மாற்றும் சில மாற்றங்களைக் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆண்டும் எளிமை பயக்கும், சில நெறிமுறைப்படுத்தும், திட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(1) வெல்லம், சீரகம் மற்றும் சீயக்காய் **(Soap Nut)** ஆகியவற்றின்மீதான 5 சதவிகித பல முனை வரி இனி 8 சதவிகித ஒரு முனை வரியாக மாற்றப்படும்.

(2) செயற்கைப்பசை **(Synthetic Adhesives)** மற்றும் பாரபின் மெழுகு ஆகியவற்றின் மீதான 5 சதவிகித பலமுனை வரி இனி 8 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும்.

(3) தாவர எண்ணெய்களைப் பொறுத்தவரையில், 3 சதவிகித பலமுனை வரி, இனி 4 சதவிகித ஒருமுனை வரியாக மாற்றப்படும். மேலும் மாநிலங்களுக்கிடையே நிகழ்கிற தாவர எண்ணெய் விற்பனையின்மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

(4) இம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலைக்கு இதுவரையில் இருந்துவரும் முதல் விற்பனை வரி என்பது, இனிமுதல் கொள்முதல் மீதான வரியாக மாற்றி அமைக்கப்படும். வெளி மாநிலங்களிலிருந்து வரும் நிலக்கடலையின் மீதான வரி முதல்முனை விற்பனை வரியாக மாற்றியமைக்கப்படும்.

(5) தற்போது பருத்தி நூலின்மீது பலவிதமான வரி வீதங்கள் இருக்கின்றன. பின்னப்பட்ட உள்ளுடைக்கு **(Hosiery)**ப் பயன்படுத்தப்படும் நூல்மீது 2 சதவிகித வரியும், கைத்தறி ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நூல் **(Hank yarn)** மீது 3 சதவிகித வரியும், மற்ற நூல் வகைகள்மீது 4 சதவிகித வரியும் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் வகைகள் அனைத்தையும் சமமாகக் கருதி இனி அனைத்திற்கும் ஒரே சீராக 3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(6) துருப்பிடிக்கா எ.்.குப் **(Stainless Steel)** பொருள்கள் மீது தற்போது 10 சதவிகித விற்பனை வரி இருந்து வருகிறது. தற்பொழுதுள்ள நடைமுறையில் உள்ள வரி ஏய்ப்பு வழி வகைகளை அடைக்கும் வண்ணம் இனி இவ் வரியை இரண்டாகப் பிரித்து, முதல் விற்பனையின்போது 6 சதவிகித வரியாகவும், இறுதி விற்பனையின்போது 4 சதவிகித வரியாகவும் விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(7) விற்பனை வரி கட்டுவதற்காக பதிவு செய்வதற்கான குறைந்த அளவு விற்பனை வரையறை தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 மதிப்புள்ள விற்பனையாகும். இனி இவ் வரையறை ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு ரூ. 75,000 என அதிகரிக்கப்படும். ஆனால் பதிவுக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 என மிகக் குறைந்த அளவுடையதாக இருப்பதால், அதனை இனி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 என்று உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. கிளைகள் அல்லது கிடங்குகளுக்கான கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 என்று உயர்த்தப் படும்.

(8) விலை உயர்வுப் போக்குகளைக் கருத்தில் கொண்டும், சிறிய அளவில் விற்பனை வரி செலுத்துவோர் மற்றும் குறிப்பாகத் தொழில் முனைவோர் மூலதன முதலீட்டிற்கான நிதி ஆதாரங்களைச் சீரிய முறையில் பயன்படுத்தவும் கூடுதல் விற்பனை வரியின் சுமையிலிருந்து ரூ. 10 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு விற்பனை உள்ள விற்பனை வரி செலுத்துவோர்க்கு இனி மொத்தமாக விலக்கு அளிக்கப்படும். அதாவது இதுவரையில் ரூ. 3 இலட்சமாக இருந்த வரிவிலக்கு வரையறை இனி ரூ. 10 இலட்சம் வரிவிலக்கு வரையறையாகும் என்று மாற்றி அமைக்கப்படுகிறது.

(9) மேலே எடுத்துள்ள முடிவின் மூலம் ஏற்படும் இழப்பை ஒருவகையில் ஈடுகட்ட, மிக அதிகமாக விற்பனை செய்யும் பெரும் வணிகர்கள் செலுத்தும் கூடுதல் விற்பனை வரியில் சிறிதளவு உயர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ரூ. 10 இலட்சத்துக்கு மேல் ஆண்டு விற்பனை செய்யும் வாணிகத்தின் மீது ஒரே சீராக 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இனி 10 இலட்சத்திலிருந்து ரூ. 40 இலட்சம் வரையில் ஆண்டு விற்பனையின் மீது 1.25 சதவிகித கூடுதல் விற்பனை வரியும், ரூ. 40 இலட்சத்திற்கு மேல் நடைபெறும் ஆண்டு விற்பனையின் மீது 1.5 சதவிகித கூடுதல் விற்பனை வரியும் விதிக்கப்படும்.

(10) ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை செய்பவர்களுக்குச் சுருக்கமான வரி மதிப்பீடு செய்யும் முறை இருந்து வருகிறது. இம்முறையில் பல கட்டுப்பாட்டு வரையறைகள் உள்ளன. இவற்றால் வணிகர்களுக்குப் பெருத்த இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்று அவர்களால் முறையிடப்பட்டது. இனி வணிகர்கள் மற்றும் விற்பனை வரி செலுத்துபவர்கள் ஆகியோர் சுருக்கமான வரி மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்த உதவிபுரியும் வகையில், இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தும் அறவே நீக்கப்படுகின்றன. வணிகர்கள்மீது நம்பிக்கைவைத்துச் செய்துள்ள இந்த ஏற்பாட்டை, வணிகர்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த நம்பிக்கை வீணாகிப்போய், மீண்டும் கட்டுப்பாடுகளை அடுத்துவரும் ஆண்டுகளில் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

(11) இப்பொழுது உருட்டப்பட்ட இரும்பு மற்றும் எ.்.கு ஆகியவை விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, இறுதிப் பொருள்களின் தயாரிப்பின்போது பயன்படும் கழிப்பு இரும்பின்மீது 4 சதவிகித வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையைச் சீர்படுத்தும் வகையில், இனிக் கழிப்பு இரும்பிற்கு விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களித்துவிட்டு, இறுதிப் பொருள்கள் மீது மட்டும் 4 சதவிகித வரியை விதிக்கக் கருதப்பட்டுள்ளது.

(12) ஓட்டல் விடுதிகளில் அமைந்துள்ள ஆடம்பர வசதிகளைப் பொறுத்து விதிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தை சீர்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(13) 1984ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் முதல் தமிழ்நாட்டில் வேலை ஒப்பந்தங்கள் மீது வரி விதிக்கப்பட்டது. இதன் செயற்பாட்டில் ஏற்படும் சில இடர்ப்பாடுகள் பாதிக்கப் பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மனித உழைப்பு மட்டுமே நிறைந்த வேலைகளைப் பொறுத்துச் சலுகை




காட்டவும், வரி விகிதங்களைத் தகுந்தவாறு சீர்திருத்தி அமைக்கவும் கருதப்பட்டுள்ளன.

(14) குத்தகை மீதான வரியைச் சீராகவும், செம்மைபடுத்தி அறிமுகப்படுத்தவும் அரசு விரும்பியுள்ளது. பல்வேறு குத்தகை நிறுவனங்களுடன் அரசு கலந்துரையாடல் நடத்திச் சில முடிவுகளை உருவாக்கியுள்ளது. அவற்றின் அடிப்படையில் குத்தகை மீதான வரி சீர்படுத்தப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படும்.

(15) உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகம் செம்மையாக நடைபெற அவைகளின் நிதிச் சுயச்சார்பு நிலையை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருமானம், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. இந்த அமைப்புக்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் தற்போது இருந்துவரும் கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணம் மேலும் 10 சதவிகிதம் அளவில் அதிகரிக்கப்படும்.

(16) மாநிலத்தின் வெளியே கிளைமாற்றம் அல்லது தரகுமுகவர் மூலமாகக் கொண்டு செல்லப்படும் இறுதிப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள், செய்முறையில் உள்ள பொருள்கள் மற்றும் உபயோகப் படுத்தப்படும் பொருள்கள் ஆகியவற்றின் மீது 2 சதவிகித கொள்முதல் வரியை விதிப்பதற்கான அறிவிப்பைக் குஜராத் மாநிலம் தனது வரவு-செலவு நிதி நிலை அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள இறுதிப் பொருள்கள் தயாரிப்பாளர்களால் பயன்படுத்தப்படும் பொருள்கள் குறித்து நாம் சலுகைகள் அறிவித்திருக்கிறோம். வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்மீது விதிக்கக்கூடிய மேற்கண்ட புதிய வரியை முறைப்படி குடியரசுத் தலைவரின் அனுமதிபெற்று, 1986-87ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்த தமிழக அரசு எண்ணியுள்ளது.

**48.** இன்று அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளையும், நெறிப்படுத்தும் முறைகளையும், சீரமைப்புத் தன்மை

தொகையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**23.** ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 960 கோடி செலவிற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்க, நாம் இறுதியாகச் செலவிடக்கூடிய தொகை ரூ. 1,069 கோடியாக அமையும். 1986—87ஆம் ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 1,153 கோடி என மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்திருக்க, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,200 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், நாம் திட்டங்களுக்காகச் செலவிடுவது ரூ. 2,269 கோடியாக அமையும். மொத்தத் திட்டச் செலவில் இது 39 விழுக்காடாகும். திட்ட இலக்குக்கு மேல் சாதனையை ஆண்டிற்கு ஆண்டு எய்திக்காட்ட முடியும் என்பதைத்தான் தமிழக அரசு தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.

**24.** கடந்த காலத்தில் பல்வேறு துறைகளைப் பொறுத்து, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முக்கிய மான பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் ஒதுக் கப்பட்ட நிதி ஒதுக்கம் பற்றியும், ஏற்பட்ட சாதனைகள் பற்றியும், 1986—87ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதி யுள்ள திட்டங்கள் பற்றியும், அவற்றிற்காகச் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பற்றியும் ஓரளவுக்கு விவரங்கள் தொகுக்கப்பட்டு, இணைப்பாக இவ்வுரையுடன் வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை யெல்லாம் படித்துப் பார்த்து, நிலைமைகளைத் தெளிவு படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு செயற்படுத்தக் கருதியுள்ள சில முக்கியமான புதிய திட்டங்கள் குறித்து மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

**25.** காவலர் நலனுக்காகவும், காவற் படையை நவீனப்படுத்துவதற்காகவும், மொத்தம் ரூ. 27.67 கோடி செலவில் திட்டங்கள் தொடங்கப்பெறும். 1986—87ஆம் ஆண்டில், காவல் துறையினர் குடியிருப்பு கள் கட்டுவதற்காக ரூ. 8 கோடியும், காவற் பணியை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்காக ரூ. 1.7 கோடியும் அனுமதிக்கப் பட்டுள்ளன.

**26.** தரிசு நில மேம்பாடு, அழிந்துபட்ட காடுகளை மீண்டும் வளர்த்தல் ஆகியவற்றிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 76 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அழிந்துபட்ட இயற்கையான காடுகளை மீண்டும் வளர்க்க, ஒருங்கிணைந்த அணுகு முறை இத் திட்டத்தில் பின்பற்றப்படும்.

**27.** தெரிந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில், பின் தங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டத்தை ரூ. 50 இலட்சம் இறுதிச் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

**28.** சென்னை மாநகராட்சிப் பகுதி மேம்பாட்டுக் காக, ரூ. 2.81 கோடி இறுதிச் செலவில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் தானியங்கித் துப்புரவு வண்டிகள் வாங்குதல், ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல், நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடிகள் கட்டிக் கொடுத்தல் போன்றவை அடங்கும். இதுபோல, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளின் மேம் பாட்டிற்காக ரூ. 2.4 கோடி இறுதிச் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றில் சாலை அமைத்தல், தார் பாவுதல், தொடக்கப் பள்ளிகளுக் காகக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவை அடங்கும்.

**29.** சென்னையில், ரூ. 54 இலட்சம் இறுதிச் செலவில் மோட்டார் வாகனப் பாகங்கள் வடிவமைப்பு






நிலையத்தையும், கோயம்புத்தூரில் ரூ. 60 இலட்சம் இறுதிச் செலவில் நவீனக் கருவி நிலையம்—பயிற்சி நிலையம் ஆகியவற்றையும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**30.** கல்வி எப்பொழுதுமே மாநில அரசின் தலையாய முன்னுரிமையைப் பெற்று வந்துள்ளது. 1985—86 வரவு-செலவுத் திட்டத்தில், கல்வி மேம்பாட்டிற்காக ரூ. 468 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, 1986—87இல் ரூ. 551 கோடி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. 1986—87ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டு களைப் போலவே, கூடுதல் ஆசிரியர் பதவிகளுக்கு அரசு அனுமதி அளிக்கவுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளி களுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தனியாக ரூபாய் 1 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

**31.** தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 48.43 இலட்சம் இறுதிச் செலவில் விபத்து-அவசரச் சிகிச்சைத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள துணை நிலையங்களில் மேலும் நல்ல இட வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, ரூ. 50 இலட்சம் செலவில் கட்டடங்களைக் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**32.** 1986—87ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர்க்கு கல்வி வசதிகளை விரிவாகச் செய்துகொடுக்கத் தனி முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நடு நிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தும் திட்டம் ஒன்று ரூ. 80.62 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. தற்பொழுதுள்ள பள்ளிகளில் மேலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற் காக ரூ. 1 கோடி இறுதிச் செலவில் அறைக் கலன்களும், ஆய்வுக் கூடக் கருவிகளும் வாங்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பள்ளி மாணவ-மாணவியர்களுக்காக ரூ. 50 இலட்சம் செலவில் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

**33.** தமிழ்நாட்டில் ஏற்கெனவே சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலை வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ரூ. 11.58 கோடி இறுதிச் செலவில் புதிய சாலைகளும் பாலங்களும் அமைக்கப்படவுள்ளன. 1986—87இல் இதற்காக ரூ. 3.05 கோடி செலவிடப்படும்.

**34.** 1986—87இல், கூட்டுறவுத் துணிப் பதப்படுத்தும் பிரிவு ஒன்று ரூ. 75 இலட்சம் இறுதிச் செலவில் அமைக்கப்படவிருக்கிறது.

**35.** பொதுத் துறை நிறுவனங்களின் திறனை மேம் படுத்தும் பொருட்டும், மிகுந்த பலனை விளைவிக்கும் பொருட்டும், அரசு எடுத்துக் கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள், மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் நிறை வேறி வருகின்றன.

**36.** பரவலான முறையில் தொழில்களின் வளர்ச் சியை உருவாக்கவும், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத் தவும் தனியார் துறை—பொதுத் துறை—கூட்டுத் துறை—கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் மூலம், நிதி நிறுவனங்களின் உதவியோடு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் நல்ல பலன்களைத் தந்து வருகின்றன.

**37.** தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு ஆண்டில் பொதுவாக ஆதாயம் தரத்தக்க வகை யில் செயற்பட்டு வந்திருக்கின்றன. பெரும்பாலான செயல்திறன் குறியீடுகளைப் பொறுத்த மட்டில் அவை அனைத்திந்திய குறியீட்டு அளவைத் தாண்டியுள்ளன.

**38.** தமிழ்நாடு மின்வாரியம் மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையிலும், உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையிலும் செயல்பட தமிழக அரசு எல்லாவிதமான உதவிகளையும் ஒத்துழைப்பு களையும் செய்து வருகிறது.

**39.** இவ்வரசு அரசு ஊழியர்களுக்குப் பல முன்னோடித் திட்டங்களை அறிவித்துள்ளது. 1985—86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த வாறு நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அவற்றின்மீது அரசு ஆணைகள் வெளியிட்டதோடு மட்டுமல்லாமல், அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலான நன்மைகள், அரசு ஊழியர்களுக்குப் பின் தேதியிட்டு 1—10—1984 முதல் வழங்கப்பட்டன. அண்மையில் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர்களும் கோரியதன் அடிப்படையில், நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் தென்படுகின்ற முரண்பாடு களைப் பரிசீலித்துத் தேவையான திருத்தங்களைப் பரிந்துரை செய்வதற்காக, அரசு, திரு கார்த்திகேயன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒருநபர் குழுவை அமைத்துள்ளது. இக் குழு பல்வேறு ஆசிரியர், அரசு ஊழியர் பிரதிநிதிகளின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து வருகிறது. குழுவின் பரிந்துரை அரசுக்கு விரைவில் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை கிடைக்கப்பெற்றவுடன், ஆராய்ந்து அவற்றின்மீது தக்க ஆணைகள் அரசால் வெளியிடப்படும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**40.** பணியிலிருக்கும்போது இறக்க நேருகின்ற அரசு ஊழியர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற குடும்ப நலத் தொகை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆகக் கடந்த ஆண்டு உயர்த்தப்பட்டது. அதேபோல் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு




தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டத்தின்கீழ், ரூ. 5,000 வழங்கும் திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்தது. இவ்வாறாக, அரசு ஊழியர்களுக்கான நல்ல திட்டங்களின் பட்டியலில் இன்னொரு புதியத் திட்டத்தையும் தற்பொழுது இவ்வரசு அறிவிக்கக் கருதியுள்ளது. வீடு கட்டுவதற்காக முன்பணம் பெற்ற அரசு ஊழியர், அரசுப் பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால், அவருடைய கணக்கில் நிற்கின்ற பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்வதற்காக, வீடு கட்ட முன்பணம் வாங்கிய அரசு ஊழியர்களுக்கென, ஒரு தனி குடும்ப நல நிதியை ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின்கீழ் வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவர்களில் யாராவது பணியில் இருக்கும்போதே இறக்க நேரிட்டால் பாக்கித் தொகைகள் வட்டியுடன் தள்ளுபடி செய்யவும் இத் திட்டம் வழிவகை செய்யும். வீடு கட்ட முன்பணம் பெறும் அனைவரும் இத் திட்டத் தில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் மாதா மாதம் கட்டக்கூடிய தவணைத் தொகைக்கு ஏற்ப குறைந்த அளவு கட்டணத்தை இந்த நல நிதிக்குச் செலுத்த வேண்டும். முழு விவரங்கள் கொண்ட ஆணை விரைவில் வெளியிடப்படும்.

**41.** இங்கு சில திட்டங்களைப்பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்டியுள்ளேன் என்றாலும், முக்கியமான துறைகள் பற்றிய விளக்கக் குறிப்புகள், மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம், இவ்வுரையின் பிற்சேர்க்கையாக வைக்கப் பட்டுள்ளன.

**42.** வரி அமைப்புகளில் ஏற்படுத்த இருக்கின்ற மாற்றங்களைப்பற்றி விளக்குவதற்கு முன்னர் நான் மாநிலத்தின் மொத்த நிதி நிலைமைப்பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். 1986—87-ல் மாநில அரசின் நிதிநிலை மனநிறைவு அளிப்பதாக இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்க்கு தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வருவாய்க் கணக்கில் உபரி ரூ. 223.25 கோடியாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது. செலவினங்களில் இயன்ற அளவு சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் அரசின் போக்கினால், வருவாய்க் கணக்கில் உபரி காட்ட முடிந்திருக்கிறது. இதன்மூலம் மூலதன முதலீட்டு நடவடிக்கைகள் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன் பலனாக மாநிலத்தின் அடிப் படை நிதி ஆதாரங்கள் மேலும் வலுப்பட வழி ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறே மூலதனக் கணக்கி லான செலவு ரூ. 172.44 கோடியாக உயர்ந்துள்ளது. பொதுக் கடன்—பொதுக் கணக்கு, கடன்கள் மற்றும் முன்பணங்கள் என்பவற்றின்கீழ் உள்ள பற்று வரவுகளைக் கருத்தில்கொண்ட பின்னர், 1986—87ஆம் ஆண்டிற் கான பற்றாக்குறை ரூ. 4.79 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. துவக்கத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையான ரூ. 7.45 கோடியையும் சேர்த்துக் கொண்டால், 1986—87 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 12.24 கோடி இறுதிப் பற்றாக்குறையாக அமையும். வரி வசூல் நடவடிக்கைகளையும், வருமானப் பெருக்க நடவடிக்கை களையும் தீவிரப்படுத்துவதன் மூலம் இந்தப் பற்றாக் குறையை ஈடு செய்வதோடுமட்டுமல்லாமல் அதற்கு மேலும் வருவாயைப் பெருக்க இயலும் என்று நான் உறுதி யாக நம்புகிறேன். பல்வேறு சலுகைகளை அளிக்கவும் வரிவிதிப்பு முறையைச் சிறிது சீரமைக்கவுமான வழிமுறைகளை மேற்கொள்ள, இத்தகைய நிதி நிலைமை நமக்கு ஊக்கம் பயப்பதாக இருக்கிறது.

**43.** நமது மாநிலத்தின் மொத்த வருவாயில் தொழில் துறையின் பங்கு கடந்த சில ஆண்டுகளாக

களையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களும், பொது மக்களின் பல்வேறு தரப்பினரும் ஏற்று, மகிழ்ச்சியுறுவார்கள் என்று நான் பெரிதும் உறுதி கொள்கிறேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகள் மூலம் அரசுக்கு ரூ. 20 கோடிக்கு மேலாக வருவாய் இழப்பு ஏற்படக்கூடும். எனினும், இச் சலுகைகள் காரணமாக உற்பத்தியும், விற்பனையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாலும், சில சீரமைப்புக்கள் கொள்முதல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றில் வருவாயைச் சிறிதளவு பெருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதாலும் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஈடுகட்ட முடியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

**49.** விளைபொருள் உற்பத்தி—செய்பொருள் உற்பத்தி ஆகியவற்றைப் பெருக்கியும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி வருமானம்—வரியில்லா வருமானம் ஆகியவற்றை ஈட்டியும், அப்படி ஈட்டப்பட்ட வருமானங்களைச் செம்மையுறக் காப்பாற்றியும், காப்பாற்றப்பட்ட வருமானங்களை நீதி–நேர்மை–சட்டம்–திட்டம் ஒழுங்கு—தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத்துத் தந்தும் ஆட்சிபுரிய வேண்டும் என்ற குறள்நெறிக் கருத்திற்கு இணங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கி வருகின்ற தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

**50.** இந்த நிதி நிலை அறிக்கையில், தமிழக அரசின் நிதி நிலைமை, கொள்கை, குறிக்கோள், திட்டம், சாதனை போன்றவை சுட்டிக் காட்டப்பட்டிருப்பதோடு மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து பயன்பெறும் பொருட்டு, இதோடு இணைத்துள்ள பிற்சேர்க்கையில், சென்ற காலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்தும், எதிர் காலத்தில் நிறைவேற்றப்பட இருக்கின்ற பணிகள் குறித்தும், விளக்கமாகவும், தெளிவாகவும் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**51.** இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, சீருரை ஆற்ற இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தோடும், தூய நோக்கத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், பண்பட்ட உள்ளத்தோடும் வழங்கும் கருத்துக்கள், நாடு மேலும் வளம் பெறவும், மக்கள் மேலும் நலம் பெறவும் பயன் படுவனவாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த அவையின் பெயரும் புகழும் தொடர்ந்து நிலை நாட்டப்பட எல்லோரும் தத்தம் உதவியையும், ஒத்துழைப்பையும் தந்தருளுமாறு எல்லோரையும் வேண்டுகிறேன். விவாதங்கள் சூடு அற்றனவாய், ஒளிமிகுந்தனவாய் அமையட்டும்.




**52.** இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட, எனக்கு செவ்விய முறையில் உதவியையும், ஒத்துழைப்பையும் புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை–பிற துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள் —அலுவலாளர்கள் ஆகியோர்க்கும், தொடர்புடைய எல்லோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**53.** 1986–87ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை உவந்து ஏற்குமாறு அவையினரை அன்புடன் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

### கல்வி

கல்வித் துறையில் மாநில அரசின் சாதனைகள் கற்றறிந்தவர் பலராலும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. சிறந்ததொரு கல்வித் திட்டம், வளம் செறிந்த வருங்காலத்திற்கு இன்றியமையாதது என்பதை, அரசு நன்கு உணர்ந்துள்ளது என்பது, கல்வித் துறையில் அடைந்துள்ள சாதனைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

**2.** தொடக்கக் கல்வியைப் பரப்பும் பணியில் மாநில அரசு, அனைவரும் வியக்கும் வகையில், செயற்பட்டு வந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அனைத்திந்திய நிலையில் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகளில் 91 விழுக்காடு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்க, தமிழ்நாட்டில், இவ் வகுப்புகளில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு, 98·66 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று, ஆறு முதல் எட்டு வரையுள்ள வகுப்புகளில், அனைத்திந்திய நிலையில் சேர்ந்துள்ள மாணவர்களின் விழுக்காடு 51 ஆக இருக்க, தமிழ்நாட்டில் 72.18 விழுக்காடு மாணவர்கள், இவ் வகுப்புகளில் சேர்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 1985–86-ல், ஆறு முதல் பதினான்கு வரையுள்ள வயதுத் தொகுதியில், கூடுதலாக 2.25 இலட்சம் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 31–12–1985-க்குள், 2.97 இலட்சம் மாணவர்கள் சேர்ந்துவிட்டனர் என்பது, பெருமைக்குரிய சாதனையாகும். துவக்கக் கல்வித் துறையில், தமிழக அரசு வெற்றிவாகைசூடி முன்னேறி வருவதற்கு முக்கியமானதொரு காரணம் முதலமைச்சரின் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் என்றால், அது மிகையாகாது.

**3.** ஒவ்வொரு நிலையிலும், கல்வியை மேம்படுத்துவதற்கு, அதிக வசதியைச் செய்து தர, மாநில அரசு இடைவிடாத முயற்சி செய்து வருகிறது. இதனையொட்டி, 1985–86ஆம் ஆண்டில் மட்டும் 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும், 49 மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்க, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**4.** அரசு உயர்நிலைப் பள்ள்கள், மேல்நிலைப் பள்ளிகள் பல போதிய கட்டட வசதியின்றி பல்லாண்டுகளாக அவதியுற்று வருகின்றன. எனவே, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுக்குக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு, அரசு சிறப்பிடம் அளித்து வருகிறது. 1977–78 முதல், 1985–86 வரையில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்காகக் கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ. 23 கோடிக்கும் மேல், அரசு செலவிட்டுள்ளது. 668 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை ஒன்றோடு கூடிய ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13 கோடி ஆகும். சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 2 கோடி ஆகும்.

**5.** கல்லூரிக் கல்விக்காக, அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதில், தமிழக அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்தி வந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், தற்போதுள்ள அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 65 பட்டப்படிப்பு பாடமுறைகளும், 30 புதிய பட்ட மேற்படிப்பு பாடமுறைகளும், 13 மாலை நேரக் கல்லூரிப் பட்டப்படிப்பு பாடமுறைகளும் தொடங்கப்பட்டு சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகமும், கோடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகமும் தோன்றின.

**6.** தற்போது மாநிலத்தில், 31 பொறியியல் கல்லூரிகளும், 129 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் செயற்பட்டு வருகின்றன. ஒருபக்கம் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்கள் அதிக அளவில் முன் வருவதாலும், மற்றொரு பக்கம் அரசு அல்லது அரசு நிதி உதவி பெறும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த அரசு நிதி ஆதாரங்கள் பற்றாக் குறையாயிருப்பதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதி உதவியில்லாமல், சொந்த நிதியைக் கொண்டு செயற்படும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், பொறியியல் கல்லூரிகளையும் தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்த, அரசு தற்போது அனுமதி அளித்து வந்துள்ளது. எனினும், இந்த நிறுவனங்களை முறையாக நடத்துவதற்கானப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசு வரையறுத்துள்ளது. அவை முறைப்படி நடைபெறாவிட்டால், அவற்றிற்கான அனுமதி மறுக்கப்படும் என்றும் அவை எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில், அரசு நிதி உதவியில்லாமல் சொந்த நிதியைக் கொண்டு, 87 பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும், 23 பொறியியல் கல்லூரிகளையும் தொடங்க, அரசு அனுமதி அளித்துள்ளது. பொறியியல் கல்லூரிகளில் தற்போது ஏறத்தாழ 5,700 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில், 22,000 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**7.** இந்தியா ஏழ்மையிலும் வறுமையிலும் உழலும் நாடு. இங்கு, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே, முதியோர் கல்வித் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி, மீண்டும் மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை. முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதில், தமிழக அரசு, தலைசிறந்த சாதனை புரிந்துள்ளது. முதியோர் கல்வி மையங்களில் மகளிரைச் சேர்ப்பதில் 1983–84, 1984–85 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், தொடர்ந்து சிறந்த முறையில் செயற்பட்டமைக்காக, மத்திய அரசு, தமிழக அரசுக்கு ரூ. 25 இலட்சம் பரிசளித்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 21,856 முதியோர் கல்வி மையங்கள் செயற்பட்டு வருகின்றன. இம் மையங்களில் 6.82 இலட்சம் முதியோர் கல்வி பயில்கின்றனர். இவர்களில், 5.8 இலட்சம் பேர் மகளிர்; 3.14 இலட்சம் பேர் ஆதிதிராவிட, பழங்குடி வகுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம்

**8.** முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்ததன் மூலம், குழந்தைகளின் உடல் நலன், ஊட்டச் சத்து ஆகியவற்றைப் பேணிக் காத்து, சிறார்களின் உடல் நிலையை மேம்படுத்துவதில், தமிழ்நாடு அரசு, மேற்கொண்டுள்ள தலையாய முயற்சி, நாடெங்கிலும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இத் திட்டத்தின் வெற்றி கண்டு, ஏனைய மாநிலங்களும் ஊக்கம் பெற்று, தமிழக அரசின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இத்தகைய திட்டத்தை, அந்தந்த மாநிலங்களிலும் செயலுக்குக் கொண்டுவந்துள்ளன. 58,000 மையங்கள் மூலம் 2+முதல் 9+ வரையிலுள்ள வயதுத் தொகுதியிலுள்ள 66 இலட்சம் சிறார்கள் பயனடையும் வகையில், 1982ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத் திட்டத்தினால், இன்று, 66,504 மையங்கள் மூலம், 86.88 இலட்சம் சிறார்களும், 2 இலட்சம் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களும் பயனடைகின்றனர். இத் திட்டத்தின் பயன், முதியோர் ஒய்வூதியம் பெறுவோர்களுக்கு, 15–1–1983 முதற்கொண்டும், முன்னாள் படைவீரர்களுக்கும், படைவீரர் இறந்துவிடின், அவர் மனைவிக்கும் 1–1–1984 முதற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின் பயன், 10 முதல் 15 வயது வரை உள்ள சிறார்களுக்கும், கிடைக்கும் வகையில், இத் திட்டம் 15–9–1984 முதற்கொண்டு விரிவாக்கப்பட்டது. இத் திட்டத்தினால், சுமார் 2 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் ஏழைப் பெண்கள்; ஆதரவற்ற மகளிர் ஆவர். முதல் ஆண்டில், ரூ. 100 கோடி செலவில் தொடங்கப்பட்ட இத் திட்டம், இப்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 169 கோடி செலவில், செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**9.** இத் திட்டத்தினால் பயன் பெறுபவர்களுக்கு, ஊட்டச் சத்து நிலையும், உடல் நலனும் உயர்ந்துள்ளன என்பது, இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்விலிருந்து, தெளிவாகத் தெரிய வருகிறது. கிராமப் பகுதிகளில் சிறார்களிடையே சாதாரணமாகக் காணப்படும் வாய்ப்புண், இரத்தமின்மை, வெண்விழிப் புள்ளி (Bitot's spots) போன்றவை குறைந்து, இந்த நோய்களினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இத் திட்டம் செயலுக்கு வந்துள்ள பள்ளிகளில், மாணவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்த வண்ணம் உள்ளது.

# ஏழைச் சிறுவர்களுக்கு இலவசப் பாடநூல்— சீருடைத் திட்டம்



### இலவசப் பாட நூல்—சீருடைத் திட்டம்

**10.** ஏழைச் சிறார்கள் பயனடையும் வகையில், விரிவான திட்டமொன்றைக் கொண்டு வரும் நோக்கத்துடன், அரசு, ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள வகுப்புகளில் படிக்கும் ஏழைச் சிறார்களுக்குப் பாடநூல்களையும், சீருடைகளையும் இலவசமாக வழங்க முடிவு

**24.** 1986–87-ல், தென்னை வளரும் பரப்பளவை, 1.70 இலட்சம் எக்டேராக அதிகரித்து 172 கோடி நெற்றுக்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986–87-ல், 17 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை அடையும் வகையில் எண்ணெய் வித்துக்களின்கீழ், 15.12 இலட்சம் எக்டேர் பரப்பளவில், இவை பயிரிடப்படும். 1986–87-ல், எண்ணெய் வித்துக்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம், தோராயமாக ரூ. 15.39 கோடியாகும்.

### கால்நடை

**25.** கால்நடை வளர்ப்பு, கிராமப்புற பொருளாதாரத்தின் முக்கியமான அங்கமாகும். பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களில் இது முக்கியமான பங்கு வகிக்கிறது. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. எனவே, மாநிலத்தில் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்த மாநில அரசு பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

**26.** தமிழ்நாட்டில், 11 தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டங்களும், 1,220 துணை நிலையங்களைக் கொண்ட 62 மைய கிராமங்களும் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள், 1985–86-ல் 50 துணை நிலையங்களைக் கொண்ட ஒரு தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டம் உடுமலைப்பேட்டையில் தொடங்கப்பட்டது. 1985–86-ல் (31–12–1985 வரையில்) 3.56 இலட்சம் கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்புச் செய்யப்பட்டது. தீவிரக் கால்நடை வளர்ப்புப் பகுதியில், 3.25 இலட்சம் செயற்கைக் கருத்தரிப்புகள் சரிபார்க்கப்பட்டன. கால்நடைகளுக்கு இத் திட்டத்தின் மூலம் 77,630 கன்றுகள் பிறந்த விவரமும் நேரில் சரிபார்க்கப்பட்டது.

**27.** 1986–87ஆம் ஆண்டில் செயற்கைக் கருத்தரிப்பு முறையை மேலும் 250 மையங்களுக்கு விரிவுபடுத்த, அரசு முடிவு செய்துள்ளது.

### பாசனம்

**28.** காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு காண, மாநில அரசு, தீவிர அக்கறை கொண்டுள்ளது. தமிழக முதல்வரும், கருநாடக மாநில முதல்வரும் 1984 சனவரி திங்களிலும், 1985 நவம்பர் திங்களிலும் இப் பிரச்சினைபற்றிக் கலந்துரையாடினர். விரைவிலேயே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடரப்பெறவேண்டும். இப் பிரச்சினையில் இருதரப்பாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க ஒரு தீர்வை விரைவிலேயே காண வேண்டுமென்ற முறையில்தான் தமிழக அரசு முயன்று வருகிறது.



**29.** உலக வங்கியின் உதவியுடன் பெரியாறு–வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தும் பெருந் திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் முதல் கட்டமாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 10,305 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது. முதல் கட்டப் பணிகளுக்காக, ரூ. 44.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் 23 மில்லியன் டாலர் நிதி உதவியுடன், 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள், 1984 டிசம்பரில் முடிக்கப்பட்டன. உதவித் தொகையான 23 மில்லியன் டாலர்களும் உலக வங்கியிடமிருந்து ஏற்கெனவே முழுமையாக கிடைத்து விட்டது.

**30.** இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக, ரூ. 56.86 கோடி செலவிட, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 7,521 எக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிப்பதே இரண்டாம் கட்டப் பணியின் நோக்கமாகும். இந்த இரண்டாம் கட்டப் பணிக்காக உலக வங்கி, 35 மில்லியன் டாலர் அளிக்கிறது. இரண்டாம் கட்டப் பணிகள், 1988 ஏப்ரல் திங்களுக்குள்ளாக முடிக்கப்படவேண்டும். 1985–86ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1,439 இலட்சத்தில், 1986ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31ஆம் நாள் வரையில், ரூ. 1059.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**31.** தமிழ்நாட்டில் இயற்கைப் பாசன ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. இந்த ஆதாரங்கள் ஏற்கெனவே முடிந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு விட்டன. எனவே, எஞ்சியுள்ள பாசன ஆதாரங்களைப் பயன்படுத்த இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின்கீழ், 66,000 எக்டேர் நிலத்துக்குப் பாசன வசதியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்க, 72,720 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறைவான பாசன ஆதாரங்களே எஞ்சியிருப்பதால், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கூடுதலாக 40,000 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதிகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இதற்காக ரூ. 154 கோடி செலவாகும்.

**32.** சிறுபாசனத் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 10,900 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூ. 13.83 கோடி செலவில், 10,982 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதியை ஏற்படுத்த, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**33.** ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், தமிழ்நாட்டில், பாசன ஏற்பாட்டின்கீழ் வராத 150 ஏரிகளை, நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும், இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தண்ணீர்ப் பங்கீடு, உரிய அளவில் இருக்கும் வகையில், பாசன ஆதாரங்களைப் பெருக்குவதே, இத் திட்டத்தின் நோக்கமாகும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்—கட்டுப்பாட்டு அமைப்பை மேலும் சீரமைத்தல் ஆகியவற்றிற்காக ஏரிக் கரைகள், மதகுகள், உபரி நீர் ஏற்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக, 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 504.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**34.** பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக, 1985–86ஆம் ஆண்டுக்கு ஏற்பளிக்கப்பட்ட திருத்தச் செலவு மதிப்பீடு, ரூ. 39.33 கோடியாகும். இதனால் நடப்பாண்டில், கூடுதலாக 20,000 எக்டேர் நிலம் பாசனம் பெறும் என்றும், புன்செய் தானிய உற்பத்தி 49,080 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 260 மெட்ரிக் டன்னும் கூடுதலாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றன. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக, 1986–87ஆம் ஆண்டில், ரூ. 39.92 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கூடுதலாக, 17,060 எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசன வசதிகள் உருவாக்கப்படும். இதனால், புன்செய் தானிய உற்பத்தி, 37,090 மெட்ரிக் டன்னும், நன்செய் தானிய உற்பத்தி 4,052 மெட்ரிக் டன்னும், கூடுதலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

**35.** மத்திய அரசு, 1–4–1985 முதல் விரிவான பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, வரையறுக்கப்பட்ட



பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், வட்டார கிராமப்புற வங்கி ஆகியவற்றின் மூலம் நெல், கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட பயிர்க் கடனின் 150 விழுக்காடு கட்டாயமாகக் காப்புறுதி செய்யப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறு, சொற்ப நில உழவர்கள் தாம் செலுத்திய பிரிமியத் தொகையில் 50 விழுக்காடு என்ற விகிதத்தில் உதவித் தொகை பெறத் தகுதியானவர். இத் திட்டத்தின்கீழ் நெல்-1 1985 பயிர் பருவத்தில் 140 வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த 45,000 உழவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தங்கள் பயிர்களைக் காப்புறுதி செய்துள்ளனர்.

### கூட்டுறவு

**36.** கூட்டுறவுச் சங்கங்கள், உழவர்களுக்குத் தொடர்ந்து வேளாண்மை இடுபொருட்கள் வழங்கி வருகின்றன. நடப்பாண்டில், 1985 டிசம்பர் இறுதிவரையில் ரூ. 56.02 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் உழவர்களுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87ஆம் ஆண்டில் ரூ. 82 கோடி மதிப்புள்ள இரசாயன உரங்கள் வினியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலையும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான காய்கறிகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயற்படுத்துவதற்காகவும், காய்கறி உற்பத்தியாளர்களுக்கென்றே, வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் மொத்தம் 516 காய்கறி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### காட்டு வளமும் தோட்ட வளமும்

**37.** சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் முதல் நிலை, 31–3–1987 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் 21,268 எக்டேர் பரப்பளவிலும் 610 கி.மீ. அளவிலும் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

**38.** சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், காப்பு வனங்களுக்கு வெளியே செயற்படுத்தப்படுகிறது. குறிப்பாக, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் மூலமாகச் சமுதாய நிலங்களில், மரங்களை வளர்க்கும் திட்டம், அதிக அளவில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. 24 கோடி மரக்கன்றுகளை நடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றுக்கான நிதிகளிலிருந்து 15 கோடி மரக்கன்றுகள் நடப்படும். எஞ்சிய 9 கோடி மரக்கன்றுகள், சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழும் ஏனைய திட்டங்களின்கீழும் நடப்படும்.

**39.** தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் செவ்விய முறையில் செயற்பட்டு வருகின்றது என்பதும், அது இதுவரையில் தனக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும், ஈடு செய்து, இப்போது ஆதாயத்தில் இயங்கி வருகின்றது என்பதும் மகிழ்ச்சிக்குரியது. இக் கழகம், 1985–86ஆம் ஆண்டில், 42,800 டாலர் மதிப்புள்ள, அதாவது ரூ. 5.35 இலட்சம் மதிப்புள்ள, தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது.

### உணவு

**40.** நமது மாநிலத்தில் இந்த ஆண்டில் நிலவிய கடுமையான பருவ நிலைமை காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. கொள்முதல் அளவை அதிகரிக்க காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள்முதலை, அரசு, 1–11–1985ஆம் நாளிலிருந்து கொண்டுவந்தது. இருப்பினும், இப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மேலும் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், உற்பத்தி ஊக்கத் தொகை குவின்டால் ஒன்றுக்கு ரூ. 20-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. குறுவை பருவத்தில், அரசு 2.9 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்தது. சம்பா பருவத்திற்கும் இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. இத்துடன், கொள்முதலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் ஒதுக்கப்படும் அளவை அதிகரிக்க வேண்டுமென, மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்டது. மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஓரளவுக்கு ஒதுக்கீட்டின் அளவை இப்போது அதிகரித்துத் தந்துள்ளது.

**41.** மத்திய அரசு அளிக்கக்கூடிய தனிக் கூடுதல் ஒதுக்கீடு, 1986 சனவரிக்கும் நீட்டிக்கப்பட்டது.




செய்துள்ளது. இத் திட்டத்தினால், ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ. 27 கோடி செலவாகிறது. குழந்தைகளின் வருங்காலம் வளம் மிக்கதாக அமையும் பொருட்டு, குழந்தைகளுக்கு முழுச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

### விளையாட்டுக்கள்

**11.** விளையாட்டுப் பணிகளை மேலும் தீவிரப்படுத்துவதற்காக, இவ்வரசு, விளையாட்டு மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைத்துள்ளது. இக் கழகம், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளித்து தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது.

### தமிழ் வளர்ச்சி—பண்பாடு

**12.** தென் மாநிலங்களிடையே பண்பாட்டு நிகழ்ச்சிகளைப் பரிமாற்றம் செய்து வட்டாரப் பண்பாடுகளைப் பேணிக் காப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, தென் மண்டலப் பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 5 கோடி வழங்க மத்திய அரசு முன்வந்துள்ளது. தென் மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து இதற்குச் சமமான தொகையை வழங்கும். தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் ஊக்கமளித்து உதவும் நோக்கத்துடன், அவர்களுக்குத் தாராள நிதியும், பட்டங்களும், பரிசுகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

### மக்கள் நல்வாழ்வு

**13.** கி.பி. 2000-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதார வசதியளிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அதற்கேற்ப, தரமான சிறந்த மருத்துவ வசதி அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கான மருத்துவ உதவி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, 5,000 பேர் வாழும் சமவெளிப் பகுதிகளிலும் 3,000 பேர் வாழும் மலை/பழங்குடியினர் பகுதியிலும் சுகாதாரத் துணை நிலையங்களை அரசு ஏற்படுத்தி வருகின்றது. 1985 மார்ச் வரையில், 5,860 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், கூடுதலாக 1,084 சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

**14.** தொடக்கச் சுகாதார நிலையங்கள் 436, நிலை உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதார நிலையங்கள் 30 சிறு அளவிலான சுகாதார நிலையங்கள் 260 ஆகியவற்றில் தற்போது, கிராமப்புற சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில், அதாவது, 1985–86-ல், புதிய தொடக்கச் சுகாதார நிலையங்கள் 20 ஏற்படுத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### குடும்ப நலம்

**15.** குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில், தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் இருந்து வருகிறது. 1984–85-ல், குடும்பநலத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்தியதைப் பாராட்டும் வகையில், மத்திய அரசு, இந்த அரசுக்கு, ரூ. 2.5 கோடி பரிசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில், 1985–86லும் இதே வேகம் இருந்து வருகின்றது. கருத்தடை செய்வதற்கு ஊக்குவிப்போருக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 50 கொடுக்கப்படும் என்று அண்மையில் அரசு அறிவித்துள்ளது. 1985–86ஆம் ஆண்டு 4.75 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 31–1–1986 வரையில், 3,77,681 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்ட ஏனைய முறைகளைப் பிரபலப்படுத்துவதிலும் இதே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### குடிநீர் வழங்கல்

**16.** சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கக் கூடிய கிருஷ்ணா நதி நீர் திட்டம் தொடர்பான பணிகள் இரண்டு மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைக்கப் படவிருக்கின்ற கால்வாயின் மொத்த நீளம் 25.275 கி.மீ. ஆகும். இதில், காடுகளல்லாத பகுதிகளில், சுமார் 24 கி.மீ. நீளக் கால்வாய் அமைக்கும் பணி நடந்தேறி வருகின்றது. இக் கால்வாய் அமையவிருக்கும் வனப் பகுதியைக் காப்பு வனப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், வனப் பகுதியில் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு எல்லைக்குள் கால்வாய் அமைக்கும் பணி தொடர்பாக, இதுவரை ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, தமிழ்நாடு அரசு, இத் திட்டத்திற்குத் தன் பங்குத் தொகையாக, ஆந்திரப் பிரதேச அரசுக்கு, இதுவரையில் ரூ. 47 கோடி வழங்கியுள்ளது.

**17.** குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள ஒவ்வொரு கிராமத்திலும், குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, கிராமப்புறக் குடிநீர் வழங்குத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், தமிழ்நாட்டில், மொத்தம் 14,702 குடியிருப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. இவற்றுள் 11,614 குடியிருப்புகளில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. இருந்தபோதிலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததன் காரணமாகப் பொதுவாக எல்லா இடங்களிலும் நிலத்தடி நீர் மட்டம் இறங்கி விட்டது. இதன் விளைவாகக் குடிநீர்ப் பிரச்சினை உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை, 14,826ஆக உயர்ந்து விட்டது. இவ்வாறாகப் புதிதாக குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ள குடியிருப்புகளில், 4,891 குடியிருப்புகளுக்கு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. ஆக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 13,023 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. கிராமப் புறக் குடிநீர் வழங்குத் திட்டத்திற்காக, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 175 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், கிராமப்புறக் குடிநீர் வழங்கு விரைவுத் திட்டத்தின்கீழ், 1986–87ஆம் ஆண்டில், மேலும் ரூ. 15 கோடி செலவிடப்படும்.

**18.** கடந்த சில ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ், ஏராளமான கைப் பம்புகளும் விசைப் பம்புகளும் நிறுவப்பட்டுள்ளன. இவையாவும் சமுதாயச் சொத்துக்கள். எனவே, இவற்றைப் பேணிப் பராமரிக்க வேண்டியது மிக முக்கியம். கைப் பம்புகளையும் விசைப் பம்புகளையும் சீராகப் பராமரித்து வர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இவ்வரசு, பராமரிப்பு என்பதன்கீழ் ஒதுக்கப்படும் ஆண்டு மானியத் தொகையை ரூ. 20.70 இலட்சத்திலிருந்து, ரூ. 50.00 இலட்சமாக உயர்த்தியுள்ளது. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்துக்கான, ரூ. 24 கோடி நிதியிலிருந்தும், இதற்காக, அரசு, ரூ. 2 கோடி வழங்க முடிவு செய்துள்ளது. எதிர்காலத்தில், குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ்ச் செய்யப்படுகின்ற நிதி ஒதுக்கத்தில், 10 விழுக்காடு பராமரிப்புக்கென ஒதுக்கப்படும்.

**19.** உலக வங்கியின் உதவியுடன், 1984–85ஆம் ஆண்டில், ரூ. 149.42 கோடி மொத்தச் செலவில் மேற்கொள்ளப்பட்ட, குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்தசெலவிலான துப்புரவுத் திட்டங்கள், செவ்வனே நடந்தேறி வருகின்றன. இத் திட்டங்கள், 4½ ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்படும். 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக, ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் ஃபுளூரைடு கலந்த நீர்நிலைகளுடன் கூடிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமும் சீராக நடந்தேறி வருகிறது. 1986–87ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்காக, ரூ. 4,80.83 இலட்சம் ஒதுக்கப்பட்டது. நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வருகின்ற 42 திட்டங்களோடு, 1986–87-ல், ரூ. 10,21.25 இலட்சம் செலவில், மேலும் 15 புதிய திட்டங்களை, மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வேளாண்மை

**20.** இந்த ஆண்டில் இம் மாநிலத்தில் பருவ மழையின் போக்கு விநோதமாக இருந்தது. ஒருசில பகுதிகளில் கடும் மழை பெய்தது; மற்றப் பகுதிகளில் மழை மிகவும் குறைவாக இருந்தது. பருவ மழையின் இத்தகைய போக்கினால், மாநிலத்திற்கு சங்கடமான நிலை ஏற்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில், டெல்டா பகுதியில், சம்பா நெல் பயிரைக் காப்பாற்ற, நீர் விடுமாறு கர்நாடக அரசைக் கேட்கும் நிலை ஏற்பட்டது. எனினும், இந்தப் பாதகமான சூழ்நிலையை ஈடு செய்யும் வகையில், இம் மாநிலத்தில் தீவிர கோடைக்காலப் பயிர் சாகுபடித் திட்டம் ஒன்றை, இம் மாநில அரசு மேற்கொண்டது. பாதகமான பருவநிலை இருந்த போதிலும் நெல், சிறுதானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தியளவு, முறையே 50 இலட்சம் மெட்ரிக் டன், 20 இலட்சம் மெட்ரிக் டன் ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87ஆம் ஆண்டில், உற்பத்தித் திட்டம் முனைப்பாக்கப்பட்டு,



64 இலட்சம் மெட்ரிக் டன் நெல், 24 இலட்ச மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 4 இலட்சம் மெட்ரிக் டன் பயறுவகைகள், 5.2 இலட்சம் பேல்கள் பருத்தி என்ற உற்பத்தி அளவு கிட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**21.** டெல்டா பகுதியில் அரசு ஏகபோக கொள்முதல் உரிமையை மேற்கொண்டிருக்கிறது. எனவே, உற்பத்தி ஊக்கத் தொகையைக் குவின்டால் ஒன்றுக்கு ரூ. 35 ஆக அதிகரித்துள்ளது.

**22.** தமிழ்நாட்டில், இயற்கை வளங்கள் மிகவும் குறைவு. எனவே, மண்வளம், நீர்வளம் போன்ற அடிப்படை இயற்கை வளங்களைப் பொருத்தமான அளவில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். நில மேம்பாடு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்புத் திட்டம், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் போன்ற திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், மண் வளத்தையும், நீர்வளத்தையும் தக்க முறையில் பயன்படுத்த அரசு முயன்று வருகின்றது. பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டப் பகுதியில் ரூ. 30.98 கோடி செலவில், பண்ணை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான புதிய திட்டமொன்றுக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 14.15 கோடி செலவில், 1,754 கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பு அணைகள் ஆகியவை கட்டப்பட்டன. இதனால், கிராமப் பகுதிகளில், வேலைவாய்ப்புக்கள் உருவாகி, நீரை மேலும் சிக்கனமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

**23.** எண்ணெய் வித்துக்களின் மொத்த உற்பத்தியைப் பெருக்கியும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியாகும் பரப்பளவை அதிகரித்தும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தும், சமையல் எண்ணெய் பற்றாக் குறையை சரி செய்தும் ஏற்றங்காணும் நோக்கத்துடன், எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மூல விதைகள் வழங்குவதைப் பெருக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் மேற்பார்வையின்கீழ், மூல விதைகளை உற்பத்தி செய்வது உட்பட, விதைப் பண்ணைகள் அனைத்திலும், எண்ணெய் வித்துக்களின் தரமான விதை உற்பத்தியையும் எண்ணெய் வித்துக்கள் துறை மேற்கொண்டிருக்கிறது. 1986–87-ல், 11,990 மெட்ரிக் டன் வேர்க்கடலை விதைகளையும், 120 மெட்ரிக் டன் எள்ளையும், 990 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளையும், 63 மெட்ரிக் டன் ஆமணக்கு விதைகளையும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

வழக்கமாக வழங்கப்படும் 40,000 டன் அரிசிக்குமேல் கூடுதலாக 25,000 டன் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

42. நெல் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதனால், திங்கள் ஒன்றுக்கு ஒரு அட்டைதாரருக்கு அதிக அளவாக வழங்கப்பட்டு வந்த 20 கிலோ அரிசியை, அரசு, 12 கிலோவாகக் குறைத்துள்ளது. ஆனால், ஒரு சிறுவருக்கு அல்லது வயது வந்த ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த அளவு மாற்றப்படவில்லை. இந்த திருத்த அளவு வீதங்கள் 1-11-1985 முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. 15-9-1984ஆம் நாளுக்கு முன்னர் கிராமப் பகுதிகளில் அட்டைதாரர் 6 கிலோ அரிசியை பெறத் தகுதியுடையவராவார். இந்த அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய அளவு தாராளமானதாக இருக்கிறது.

43. தமிழ்நாட்டில், நீண்டகாலமாக, வலுவான பொது விநியோகமுறை உள்ளது. இது 20,723 நியாயவிலைக் கடைகள் மூலம் செயற்படுத்தப் படுகிறது. இவற்றில் 15,648 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், 5,011 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், 64 நியாயவிலைக் கடைகளைத் தனியார் நிர்வாகங்கள், மலைத் தோட்ட நிர்வாகங்கள் போன்ற ஏனைய அமைப்புகளும் நடத்துகின்றன. ஒரு கடைக்கான சராசரி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 575 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பல நியாய விலைக் கடைகள் ஆதாய மற்ற நிலையில் செயற்படுகின்றன. ஆகையால், நியாயவிலைக் கடைகளை நடத்த ஒவ்வோர் ஆண்டும் அரசு உதவித் தொகையாக ரூ. 3 கோடி செலவிடுகிறது. 1985ஆம் ஆண்டில், 11.05 இலட்சம் டன் அரிசி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இதுடன், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 2.19 இலட்சம் டன் அரிசி வழங்கப் பட்டது.

44. பொதுவான ரக அரிசியின் விலை 1981 பிப்ரவரியில் நிர்ணயிக்கப்பட்டது. அதன் பின்னர், மத்திய அரசு நெல் கொள்முதல் விலையையும் அரிசி விற்பனை விலையையும் 5 முறை உயர்த்தியுள்ளது. இருப்பினும், பொதுவான ரக அரிசியைப் பொறுத்த மட்டில், கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 என்ற மிகக் குறைவான விலையையே மாநில அரசு பின்பற்றி வருகிறது. பொது விநியோக முறையில், குறைவான விலையில் அரிசி விற்பனை செய்யப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, வழங்கப்படும் உதவித் தொகை வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 கோடி செலவுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

பொது விநியோகம்

45. இம் மாநிலத்தில், விலை நிலைமையைக் கண்காணிப்பதற்கு, அரசு, தீவிர முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. மத்திய அரசின் வரிவிதிப்பு நிதிக் கொள்கைகளும் நாட்டின் மொத்த உற்பத்தி அளவும் விலை நிலவரத்தைப் பாதிப்பதால் இதில் மாநில அரசின் பங்கு வெகுவாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. எனினும், மாநில அரசைப் பொறுத்தவரையில், பொது விநியோக முறை மூலம் விற்பனையைச் சீரிய முறைப்படுத்துவதைக் கண்காணித்து, விலையைக் கட்டுப்பாட்டில் வைத்துவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மோசமான பருவநிலை இருந்தபோதிலும், பொது விநியோக முறை மூலம் விற்பனை செய்ததால், அரிசியின் விலையேற்றம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறாக, 1985 மே திங்களுக்கும் 1985 செப்டம்பர் திங்களுக்குமிடையே அரிசி விலை அதிகரித்தபோதிலும்,



சென்ற சில மாதங்களில் அரிசிவிலை கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது. நடப்பு அறுவடைப் பருவத்தில், விலை, மேலும் சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், தேயிலை ஆகியவற்றின் விலைகளும் குறைந்திருக்கின்றன. பயறு வகைகள், காய்கறிகளின் விலை, குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கத்தைத் தவிர, மற்றப்படி ஒரே சீராக இருந்து வருகின்றது. விலைகளின் ஏற்றத்தைக் கட்டுப்படுத்த, இந்த அரசு போதிய அளவு கண்காணிப்புப் பணியை முறையாக மேற்கொண்டு வருகிறது.

மீனவம்

46. வீடுகள் தேவைப்படும் மீனவர்களுக்கு அவற்றைக் கட்டித் தருவதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது. இது வரை, 11,404 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. 9,738 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986–87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக ரூ. 50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.



தொழில்கள்

47. தமிழ்நாட்டில், மத்திய அரசு, அதிக அளவு முதலீடு செய்ய வேண்டுமென்ற கருத்தை மாநில அரசு அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. காந்த நாடாக்களை ரூ. 10 கோடி முதலீட்டில் தயாரிப்பதற்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்கு, மத்திய அரசு, அண்மையில் இசைவுக் கடிதத்தை வழங்கியுள்ளது. கனரக வாகனத் தொழிற்சாலை, சேலம் உருக்காலை, சென்னை உரத் தொழிற்சாலை போன்ற ஏனைய மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசுத் துறைத் திட்டங்களின் விரிவுத் திட்டத்திற்கு, நாம் நிலங்களை இலவசமாகக் கொடுத்துள்ளோம். தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திலுள்ள சுழல் உலை ஆலை, ரூ.765 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் வணிக உற்பத்தி விரைவில் தொடங்கப்படும். முழுக்க முழுக்க ஏற்றுமதி நோக்கில், கருங்கல்லைச் செதுக்கி மெருகேற்றும் தொழிற்சாலையை, ரூ. 640 இலட்சம் செலவில் மணலியில் அமைப்பது சம்பந்தப் பட்ட பணிகள் முடிவடைந்துவிட்டன. இத் தொழிற்சாலை, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். இது விரைவிலேயே வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிதி நிறுவனங்கள், ஆதாயம் ஈட்டத் தொடங்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1984–85 வரை ரூ. 121 இலட்சம் நிரண்ட ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1984–85 ல் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறு

வனம் (SIPCOT) ரூ. 116 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. படித்து வேலையற்றிருப்பவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கும் பிரதமரின் திட்டத்தின்கீழ், நாம் இலக்கைத் தாண்டி விட்டோம். இத் திட்டத்தின்கீழ், 1984–85-ல், 22,500 பேருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பணி

48. நாளுக்கு நாள் பெருகி வரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, தனித் திறம் பெற்ற பணியாளர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. தற்போது, நமது மாநிலத்தில், 40 தொழில் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், 5 நிறுவனங்கள் மகளிருக்கானவை. இந் நிறுவனங்களில், மொத்தம் 15,120 மாணவ, மாணவியர் பயிலுகின்றனர். இருந்தாலும், பெருகி வரும் பணியாளர் தேவையைச் சமாளிக்க 1986–87-ல், மேலும் இரண்டு தொழில் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

கதர்-கிராமத் தொழில்கள்

49. கிராமப் புறங்களில் தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு, அரசு, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தொழில் உற்பத்தியைப் பொறுத்த வரையில், கதர்-கிராமத் தொழில்கள் வாரியம், மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களை உற்பத்தி செய்வதில் முக்கியப் பங்கு ஆற்றுகிறது. கிராமப்புறங்களில் வேலையற்றவர்களுக்கும் உரிய வேலைவாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கும், பெருமளவில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதில் இவ் வாரியம் முக்கியப் பங்காற்றி வருகிறது. இவ் வாரியம் தன் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவுகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் கதர்த் தொழிலையும் கிராமத் தொழில்களையும் வளர்த்து, அதன்மூலம், கிராமப்புறங்களில் உள்ள தனித்த பிரிவினருக்கு, அந்தந்தக் கிராமங்களிலேயே, கிடைக்கின்ற கச்சாப் பொருட்களைக் கொண்டு, சிறிய மூலதன முதலீட்டுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

50. இவ் வாரியம், 1984–85ஆம் ஆண்டில், ரூ. 108.82 கோடி மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்தது. 1985–86ஆம் ஆண்டில் இது ரூ. 119 கோடியாக உயர்ந்துள்ளது. 1986–87ஆம் ஆண்டில் ரூ. 130 கோடி மதிப்புள்ள பொருட்கள், கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

51. 1984–85ஆம் ஆண்டில், ரூ. 105 கோடி மதிப்புள்ள கதர், கிராமத் தொழில் உற்பத்திப்



பொருட்கள் உற்பத்தியாகியுள்ளன. 1985-86-ல் ரூ. 125 கோடி மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87-ல் ரூ. 137 கோடி மதிப்புள்ள கதர்-கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதுவரை, இவ் வாரியம் 6.03 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது. 1985–86-ல் மேலும் 63,000 பேர் இவ் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டு முடிய 7.33 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தறி

52. தொடக்கக்காலமாகவே, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், கைத்தறித் தொழில், மிக முக்கியமான பங்காற்றி வந்துள்ளது. இத் தொழில், ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. எனவே, இத் தொழிலில், மாநில அரசு, மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இம் மாநிலத்தில், மொத்தம் 5.56 இலட்சம் தறிகள் உள்ளன. இவற்றுள் 3.82 இலட்சம் தறிகள், ஏற்கெனவே 1,800 தொடக்க நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் கொண்டு வரப்பட்டு விட்டன. கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் வருகின்ற நெசவாளர்களின் நூல் தேவையை, மாநிலத்திலுள்ள 17 கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன. 1986–87-ல் கைத்தறித் துறையின்கீழ்த் தள்ளுபடிகளாகவும் உதவித் தொகைகளாகவும் அரசு ரூ. 18.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்காக, அரசு, சேமிப்பு-பாதுகாப்புத் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

மின்சக்தி

53. நமது மாநிலம், சீரான பொருளாதார வளர்ச்சி அடையவேண்டுமானால், மின்சாரப் பற்றாக்குறையின் பிடியில் சிக்காமல் இருக்க வேண்டியது அவசியம். இதனைக் கருத்திற்கொண்டு, ஏழாவது திட்டத்தில் மொத்தத் திட்ட நிதி ஒதுக்கமான ரூ. 8,750 கோடியில், மின்சக்தித் துறைக்கு ரூ. 2,000 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. 1985–86-ல் மின்சக்தித் துறைக்கு ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1986–87-ல் ரூ. 395 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

54. நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களான சோலையாறு புனல்மின் திட்டம் (20 மெ. வா.), காடம்பாறை நீரேற்றுத் திட்டம் (400 மெ. வா.), தூத்துக்குடி அனல்மின் திட்டம் (120 மெ.வா.), குந்தா மின் உற்பத்தி நிலையம்-V (20 மெ. வா.), மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை-I (420 மெ. வா.) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் தொடங்கப்படும். நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட புதிய திட்டங்களில், மேட்டூர் அனல்மின் திட்டம் நிலை II-ன் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ.வா.), தூத்துக்குடி விரிவுத் திட்டத்தின் ஒரு பிரிவு (420 மெ. வாட்டில் 210 மெ. வா.), நுண்ணிய புனல்மின் திட்டங்கள் மூன்று (16 மெ. வா.) ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்படும். மாநில அரசுத் துறையின்கீழ் மொத்தம் 1,416 மெ.வா. உற்பத்தி செய்யப்படும். மேலும், ஏழாவது திட்டத்தில் வடசென்னை அனல்மின் திட்டத்தைச் (630 மெ.வா.) செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. எனினும், இதன்

பயன்கள் எட்டாவது திட்டக் காலத்தில்தான் கிடைக்கும். இத்துடன், கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது பிரிவு, நெய்வேலி இரண்டாவது அனல்மின் நிலையம் (இது கட்டப்பட்டு வருகிறது), ஆந்திர மாநிலத்திலுள்ள ராமகுண்டம் உயர் அனல்மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து மின்சக்தியைப் பெறும். மாநில-மத்திய அரசுத் துறைத் திட்டங்களிலிருந்து தமிழ் நாட்டின் பயனுக்குக் கிடைக்கும் மொத்த நிறுவு திறன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், 3,344 மெ. வாட்டாக இருந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில், இது, 5,184 மெ. வாட்டாக உயரும்.

55. நடப்பாண்டில், இம் மாநிலத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்ததால், மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தியின் அளவு குறைந்தது. இந்த ஆண்டில் 1985 ஜூலையிலிருந்து 1986 சனவரி இறுதி வரையிலான மின் உற்பத்தி, 10 ஆண்டு சராசரியுடன் ஒப்பிடுகையில், 1,035 மி. யூனிட் குறைந்தது.

56. எண்ணூர், தூத்துக்குடி அனல்மின்நிலையங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த, வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்ததனால், இவற்றின் செயல்திறன் இந்த ஆண்டு வெகுவாக மேம்பாடு அடைந்துள்ளது. தூத்துக்குடி அனல்மின் நிலையம், 1985–86-ல், 65 விழுக்காடு PLF-ஐ அடைந்தது. இந் நிலையம், 1983–84-ல், 51.5 விழுக்காட்டையும் 1984–85-ல் 62 விழுக்காட்டையும் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதற்கும் 67 விழுக்காடு PLF-ஐ அடையும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரை, ரூ. 100.10 கோடி செலவில் விரிவான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பயன்கள் ஏற்கெனவே கிடைக்கத் தொடங்கியுள்ளன. தொடங்கப்பட்டதிலிருந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய இந் நிலையம், கடந்த ஆண்டு வரை, 36 விழுக்காடு PLF-ஐ மட்டுமே எய்தியுள்ளது. 1985–86-ல், அடைந்த PLF 50 விழுக்காடு ஆகும். ஆண்டு முழுவதற்குமான PLF 51 விழுக்காடு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



57. அனல் மின் நிலையங்கள் சிறந்த சாதனைகளை ஆற்றியபோது, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில், 1985ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்ட இரண்டாவது பிரிவிலிருந்து கூடுதலாக (235 மெ. வா.) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லையானால், இம் மாநிலத்தில் மின் பற்றாக்குறை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். தற்போது உயர் அழுத்த மின் சக்தி தேவைப்படும் 1,000 தொழிற்சாலைகளுக்கு 40 விழுக்காடு மின் வெட்டு உள்ளது. விவசாயிகளுக்கு இரு முறைமாற்று திட்டத்தின்கீழ்ப் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. நெய்வேலியிலுள்ள இரண்டாவது அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 1986 ஏப்ரலில், செயல்படத் தொடங்கியவுடன், மின்சார நிலைமை சீரடையக்கூடும்.



58. இயக்கச் செலவுகளைக் குறைக்க மின் வாரியமும், அரசும் கவனம் செலுத்தி வருகின்றன. இயக்கச் செலவைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எண்ணூர்-தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள், மின் உற்பத்திக்காகப் பயன் படுத்தும் எண்ணெய் அளவு, குறைந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தமட்டில், மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் அளவு 1983–84-ல், ஒரு பிரிவிற்கு 57 மில்லியன் லிட்டர் என்றிருந்தது. 1984–85-ல் ஒரு பிரிவிற்கு 48 மில்லியன் லிட்டர் ஆகக் குறைந்தது. 1985–86இல் இதுவரை ஒரு பிரிவிற்கு 12.06 மில்லியன் லிட்டர் மட்டுமே ஆகியுள்ளது. எண்ணூர் அனல் மின் நிலையத்தில்கூட பயன்படுத்தப்படும் எண்ணெய் அளவு, ஒரு பிரிவிற்கு 7.8 மில்லியன் லிட்டர் குறைந்துள்ளது.

59. அண்மையில் தொழிலாளர் சங்கங்களுடன் செய்து கொண்ட ஊதியத் திருத்த ஒப்பந்தத்தில், முதல் முறையாக ஊதியத் திருத்தத்துடன் தொழிலாளர்களுக்கான பணிச் சுமை குறித்தும் விவாதிக்கப்பட்டு, அதிகப் பணி அளவு கோட்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

60. செலவைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலையும், சரக்குக் கட்டணமும், மின்சக்தி வாங்குவதற்கான செலவும், அடிக்கடி உயர்வதனால், மின் வாரியத்தின் நிதி நிலை கடும் சுமைக்குள்ளாகியுள்ளது. 1986ஆம் ஆண்டு சனவரி திங்கள் 9ஆம் நாள் முதல், நிலக்கரியின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 28 அதிகரித்ததால், 1985–86ஆம் ஆண்டில் ரூ. 2.47 கோடியும், 1986–87-ல் ரூ. 10.71 கோடியும் கூடுதல் செலவு ஏற்படும்.

### போக்குவரத்து

61. திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு, 1–4–1985-லிருந்து தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் போக்குவரத்து வசதிக்காக திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு, மற்றொரு புதிய போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படவிருக்கிறது. மதுரையை ஆண்ட புகழ்வாய்ந்த இராணி மங்கம்மாளின் பெயர் அதற்குச் சூட்டப்படும்.

### தொழிலாளர் நலன்

62. தொழிலாளர்களுடன் நல்லுறவு தொடர்ந்து நிலவச் செய்வதில் மாநில அரசு முக்கிய பங்காற்றி வருகிறது. அரசு தலையீட்டின்பேரில், தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. 20 அம்சத் திட்டத்தின்கீழ், தமிழ் நாட்டில், இதுவரை ரூ. 44.45 இலட்சம் மொத்தச் செலவில் 32,575 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 1985–86-ல் 1,100 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இம் மாநில அரசு, 1,109 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்துள்ளது.

### ஊரக வளர்ச்சி

63. ஊரகப் பகுதிகளில் நிலவும் வறுமையை அகற்றுவது இவ்வரசின் முக்கியமானதொரு நோக்கமாகும். இதனைக் கருத்திற் கொண்டு மத்திய அரசும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. தமிழ் நாட்டில் வறுமை ஒழிப்புத் திட்டம் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ. 1,46.61 கோடி செலவிடப்பட்டது. கிராமப்புறத்து மக்கள் ஆதாயந்தரும் தொழில்களில் ஈடுபட்டுத் தங்களின் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்வதற்காகச் சுமார் 13,96,016 பேருக்கு உதவி அளிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். 1985–86ஆம் ஆண்டில் சுமார் 2 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 29.22 கோடி ஒதுக்கப்படும்.

64. கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் மற்றொரு திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ்க் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப்பில்லாத காலங்களில், அங்குள்ள மக்களுக்கு ஆதாயகரமான வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இதைத் தவிர, இத் திட்டத்தின்கீழ்ச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள் போன்ற நிலையான சமுதாய சொத்துக்களை உருவாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆறாவது திட்டக் காலத்தில், 1980–81 முதல் 1984–85 வரை, ரூ. 1,64.18 கோடி செலவிடப்பட்டு, 17,98.05 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. இத் திட்டம், ஏழாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 287 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க 1985–86ஆம் ஆண்டுக்கு, மொத்தம், ரூ. 47.72 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1986 பிப்ரவரி இறுதி வரையிலான கால அளவில், 216.75 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1986–87-ல், இத் திட்டத்திற்கு, ரூ. 40.88 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

65. சிறு, சொற்ப நில உழவர்களுக்கு உதவும் பெருந் திட்டம் ஒன்றையும் மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ்ச் சிறு உழவர்களுக்கும், சொற்ப நில உழவர்களுக்கும் சிறுபாசனம், கிணறுகள், விசைபேற்றங்கள், நில மேம்பாடு, வேளாண்மை இடுபொருட்கள் ஆகியவற்றிற்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசும், மாநில அரசும் இத் திட்டத்திற்குச் சம அளவில் நிதி உதவி அளிக்கின்றன. இத் திட்டம், 1983–84-ல் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 28,303 சிறு, சொற்ப நில உழவர்களுக்கு உதவுவதற்காக ரூ. 972.41 இலட்சம் செலவிடப்பட்டது. 1984–85ஆம் ஆண்டில் ரூ. 14,19.36 இலட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டத்தால் 55,960 சிறு, சொற்ப நில உழவர்கள் பயன்பெற்றனர். 1985–86-ல் (1986 பிப்ரவரி வரை) ரூ. 571.95 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 28,457 சிறு, சொற்ப நில உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

66. கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்காகச் செயற்படுத்தப்படும் மற்றொரு பெருந் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டமாகும். இது ஒரு மத்திய அரசு



பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ், நிலமற்ற குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்காகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தருவது இத் திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சமாகும். 1985–86-ல், ரூ. 10.44 கோடி செலவில், 11,000 வீடுகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டது. இந்த வீடுகள், பின்னர் இலவசமாக இவர்களுக்கு வழங்கப்படும். 1983–84, 1984–85 ஆண்டுகளில், இம் மாநிலத்திற்கு முறையே ரூ. 8.90 கோடி, ரூ. 44.50 கோடி ஒதுக்கப்பட்டன. 1985–86-ல் மத்திய அரசு, ரூ. 44.44 கோடி ரொக்கமாகவும், ரூ. 6·72 கோடி மதிப்புள்ள கோதுமையையும் வழங்கியுள்ளது. 1985–86-ல் 304.90 இலட்சம் உழைப்பு நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1986–87-ல், இத் திட்டத்திற்காக ரூ. 34·35 கோடி ரொக்கமும் 79,000 மெட்ரிக் டன் உணவு தானியமும் செலவிடப்படும்.

### காவல் துறை

67. சட்டம்-ஒழுங்கைச் சரிவரப் பராமரிப்பதற்காக காவல் படையை நவீனப்படுத்தி, வலுப்படுத்த மாநில அரசு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது. 1985–86ஆம் ஆண்டில் ரூ. 3.56 கோடி மொத்தச் செலவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் மேலும் இரு அணிகள் ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

### நீதிமன்றங்கள்

68. வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக நாகப்பட்டினத்திலும் இராமநாதபுரத்திலும் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

### வருவாய்த் துறை

69. மாவட்டத்தின் நிர்வாகத்தை நெறிப்படுத்தித் திறமையை அதிகரிப்பதற்காக, அரசு, 1985-ல், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா மாவட்டம் என்று மூன்று மாவட்டங்களையும், பரமக்குடி, பழனி, கோடைக்கானல் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களையும், வாடிப்பட்டி வட்டம் என்றொரு புதிய வட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவந்தது. தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டமும், செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்யூர் வட்டமும் விரைவிலேயே தொடங்கப்படும். ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் கூட்டு அவையில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதைப் போலவே, திருநெல்வேலி மாவட்டத்தையும், வடஆர்க்காடு மாவட்டத்தையும், 1986–87-ல் இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.



**குடும்பத்துடன் கவிராச பண்டிதர்**

கொண்ட திருக்குறள் குமரேச வெண்பாவில், ஒவ்வொரு குறளுக்கும் பொருத்தமான கதை சொல்லப்பட்டிருக்கிறது.

''இந்த இனிய தமிழ் இலக்கியத்தை எழுதி முடிக்க அவருக்குப் பதினான்காண்டுகள் ஆகியிருக்கின்றன என்றால், எவ்வளவு அரிய கருத்துக்கள் அதிலே திரட்டித் தரப்பட்டுள்ளன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்'' - என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு த. பெரியாண்டவன் நன்றி கூறினார்.

**கவிராசர் வரலாறு**

நூற்றாண்டு விழா நாயகரான கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனார் - திருச்செந்தூர் அந்தாதி, மாசிலாமணி மாலை, அணியறுபது, தர்ம தீபிகை, வீரபாண்டியம், உலக உள்ளங்கள், கம்பர் கவித்திறம், அகத்திய முனிவர், கவிகளின் காட்சி, தமிழர் வீரம், பாஞ்சாலங்குறிச்சி வீரர் சரித்திரம் முதலாம் பகுதி - இரண்டாம் பகுதி, கல்வி நிலை போன்ற பல பக்தி நூல்களும், அற நூல்களும், காப்பியங்களும், தேசப்பற்று மிகச் செய்யும் நூல்களும், மொழி பெயர்ப்பு-உரை நடை - திறனாய்வு - வரலாறு தொடர்பான நூல்களும் எழுதிய தன்னிகரற்ற தமிழ்ப்புலமை மிக்கவராவார். ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளும் இவருக்குத் தெரியும்.

இவரெழுதிய நூலொன்று ஆங்கிலத்தில் ' Light of virtue' என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல்கள் அனைத்தும் கவிராச பண்டிதரின் பெரும் புலமைக்குச் சான்றாக விளங்குகின்றன. திருவள்ளுவர் நிலையத்தின் மூலம் அவரே அனைத்தையும் அச்சிட்டு வெளியிட்டார்.

இவர் அப்படிப் பதிப்பித்த நூல்களில் ''திருக்குறட் குமரேச வெண்பா'' தான் அளவால் மிகப் பெரிய நூலாகும்.

இவரெழுதிய இன்னும் சில நூல்கள் கையெழுத்துப் படியாகவே உள்ளன. விரைவில் அவை அச்சாகி வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

> [illegible] நூல்கள் [illegible] 'அரிய பெரிய [illegible] வாசகம் இருக்கும். [illegible] தற்பெருமை ஆகாதா?' என ஒரு முறை அவரிடமே கேட்கப்பட்[illegible]. அதற்கு அவரளித்த பதில் [illegible]:
>
> ''[illegible] நூல்கள் அருமையும் பெருமையும் வாய்ந்தவை என்பதை உணர்ந்துகொண்டிருந்தும் சொல்லத் [illegible] —கோழைகளாகத் தமிழ்ப்பெருமக்கள் இருப்பதனால் தானே 'அரிய பெரிய நூல்கள்' என்று வற்புறுத்த வேண்டிய அவசியம் அல்லது அவலம் ஏற்பட்டுவிட்டது..''

10.3.1886-ல், ஆவுடையம்மாள் - பெருமாள்சாமி தம்பதிகளுக்குப் பிறந்தவர் கவிராச பண்டிதர் செகவீரர். திருநெல்வேலி மாவட்டத்தில், மணியாச்சிக்கு வட கிழக்கே ஒரு கல் தூரத்தில் உள்ள ஒட்டநத்தம் இவரது சொந்த ஊர்.

வீரபாண்டிய கட்ட பொம்மன் மரபிலே தோன்றிய பெருமை இவருடையது.

**படிப்பும், முடிப்பும்**

பாண்டியனார் தம் ஐந்தாம் வயதில் பள்ளி புகுந்தார். திண்ணைப் பள்ளிக் கூடப் படிப்பு. தாளோ புத்தகமோ ஏதும்இல்லை. எல்லாவற்றையும் பனை ஓலையில் எழுதிப் படிக்கின்ற நிலையிலேயே இவரது தொடக்கக் கல்வி அமைந்தது. இவர் இளமையிலேயே கண்ணும் கருத்துமாய்ப் பயின்று வநதார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, உலக நீதி போன்ற நீதி நூல்கள் பாடமாய் அமைந்தன. தாயின் நல்வழி காட்டுதலாலும், அரவணைப்பினாலும் தீய பழக்கங்கள் ஏதுமின்றி இளமையிலேயே நல்லொழுக்கச் சீலராய்த் திகழ்ந்தார்.

ஆயினும் ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்பு முற்றுப் பெற்று விட்டது. கல்விக் கட்டுப்பாடுகள் கழிந்த பின்னர் கம்பும் சிலம்பும், மல்லும் வில்லும் எனப் பொழுதைக் கழித்தார். மூன்றாண்டுக் காலம் கடைகளிலே வேலை பார்த்தார்.

மறுபடியும் அவருக்குக் கல்வியின்மேல் நாட்டம் ஏற்பட்டது. எனவே, தாம் செய்து வந்த மளிகைக் கடை வேலையை நிறுத்திவிட்டு மீண்டும் தாமே கல்வி கற்க முயன்றார். இந்த வகையில் தாயுமான சுவாமிகள் பாடல்கள் முதலாகப் பற்பல நூல்களை அவரே கற்கத் தொடங்கினார். பிறகு தம் ஊருக்கு வந்திருந்த சிவானந்த சுவாமிகள் என்னும் முனிவரிடமும், இலக்கண முத்தையா என்னும் பெரியாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார்.

கவிராச பண்டிதர் தமிழ் மொழியில் புலமை பெற்று விளங்கியதோடு அமைந்தாரில்லை. ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றுப் புலமைத் திறத்தோடு விளங்கினார்.

உடல் தூய்மையோடு ஒழுங்கு, பணிவு முதலியவற்றையும் பாண்டியனார் தம் மாணாக்கருக்குக் கற்பித்தார். இளையவரேயன்றி முதியோர் சிலரும் வெளியூர் மக்கள் சிலரும் இவரிடம் பாடம் கேட்டுச் சிறப்படைந்தனர்.

பாண்டியனாருக்கு 27 ஆம் வயதில் திருமணமானது. இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வந்த இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். அவர்கள் அனைவருமே அவரது தமிழ்ப் பணிக்கு உறுதுணையிருந்தார்கள்.

செகவீர பாண்டியனாரின் இலக்கியத் தொண்டு எண்ணி எண்ணிப் பாராட்டத்தக்கது. ஆசிரியராய் இருந்து இளைஞர்களுக்குக்கும், பெரியவர்களுக்கும் தமிழறிவு ஊட்டிய தகைமையாளர் அவர். சொற்பொழிவுகள் ஆற்றுவதன் வாயிலாகவும் தமிழ்த் தொண்டு புரியும் பணியை மேற்கொண்டு வந்தார். இவ்வகையில் பாலகாண்டம் முதல் பட்டாபிடேகம் வரை அனைவரும் வியக்கும் வண்ணம் இவர் ஆற்றிய இராமாயணச் சொற்பொழிவு இவருடைய முதல் சொற்பொழிவாய் அமைந்து பெருமை சேர்த்தது.

தொடர் சொற்பொழிவு, தனி சொற்பொழிவு, வானொலிச் சொற்பொழிவு, அயல் மாநிலச் சொற்பொழிவு, வெளி நாட்டுச் சொற்பொழிவு என்னும் நிலைகளில் இவர் தம் இலக்கியத் தொண்டு பரந்து விரிந்தது. இராமாயணம், கந்தபுராணம் போன்ற தொடர் சொற்பொழிவுகளும், தமிழர் வீரம், மன நலமும் மனிதனும், திருவாசகத்தில் ஒரு வாசகம் போன்ற பொருள்களில் அமைந்த தனிச் சொற்பொழிவுகளும் இவருக்குப் பெருமை சேர்த்தன.

கவி நிலை, தொழில் பாட்டு, புராண நூல்களில் திருக்குறள், மனை மாட்சி, காந்தி வழி - புலனடக்கம், கவிதை விளக்கம், வில்லியாழ்வாரின் சந்தக் கவித்திறம் என்பன போன்ற தலைப்புகளில் இவர் ஆற்றிய வானொலிச் சொற்பொழிவுகள் குறிப்பிடத்தக்கவை.

தாமே பயின்றும், தக்கவர்களிடம் கற்றும், புலமைத் திறன் எய்திய கவிராச பண்டிதர் பாண்டியனார் தமிழுக்குச் செய்த தொண்டுகளில் தலையாயது அவர் படைத்த படைப்புகளே என்பது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை.

நூல் வெளியீட்டால், இருந்த பொருளையும் இழந்து நின்றார் கவிராசர். இந் நேரத்தில் எவ்வகையிலும் அவருக்குத் துணையாயிருந்த மனைவியாரும் மறைந்தார். புலமையாளரிடமே உரிமை கொள்ளும் வறுமையோடு மதுரையில், மேல மாசி வீதியும் திண்டுக்கல் சாலையும் சந்திக்கும் முனையிலிருந்த மேற்குப் பார்த்த மிகப் பழைய பெரிய வீட்டிலேயே சோர்ந்திருந்தார்.

> கவிராச பண்டிதருக்கு விழா நடத்தி, அவரது புத்தகங்களை வெளியிட நிதி உதவும் நோக்கோடு சிலர் அவரிடம் சென்று சம்மதம் கேட்டனர். கவிராசர் சொன்ன பதில் என்ன தெரியுமா?
>
> ''நீங்களெல்லாம் நமக்கு மிகவும் வேண்டியவர்கள். அதனால் என்னை அதிகமாக அவமானப்படுத்திவிட மாட்டீர்கள் என்று நான் ஓரளவு நம்பலாம். எனது வெளியீடுகளின் அருமை பெருமைகளைத் தமிழ் மக்கள் அறிந்து விலைகொடுத்து வாங்கி ஆதரித்தால் போதும். என் வெளியீடுகளில் இருநூறு செட் விற்க ஏற்பாடு செய்தால் ஒரு விழா நடத்துவதைவிட அதிகமாக நான் பெருமைப்பட முடியும்!''
>
> —விழாவுக்குச் சம்மதம் கேட்கப் போனவர்கள், வியந்து வாயடைத்துப் போனார்கள்.



அப்போது இதற்கு முன் கண்டறியாத ஒருவர் வந்து அவருக்கு உதவி செய்ததும் பாண்டியனாருக்கு வியப்பு ஏற்பட்டது. அவரே சிவசுப்ரமணியபிள்ளை என்று அறிந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்.

**பாண்டியனார் பண்புகள்**

1936ல், மனைவியை இழந்து தனியே வாழ்ந்த பாண்டியனாரிடம் சிலர் மறுமணத்திலுள்ள அறங்களை எடுத்துக்கூறி திருமணத்திற்குஉடன்படுமாறு வேண்டினர். அவர் மறுத்துவிட்டார்.

இவர் எப்போதும் கைத்தடியுடனேயே காட்சியளிப்பார்.

செகவீர பாண்டியனாரைப் பாராட்டாத சான்றோர்களே இல்லை எனலாம். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், மறைமலையடிகள், ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற சான்றோர்களும், பேராசிரியர்கள் பலரும், அரசியல் தலைவர்கள் பலரும், அமைச்சர்கள் பலரும் இவரை— இவர் தம் தமிழ்த் தொண்டினைப் பெரிதும் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

இவர் நூல்களைச் சென்னை, மைசூர் பல்கலைக் கழகங்கள் பாட நூலாகவும் ஏற்றுள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகம் இவர்தம் அரும் தொண்டைப் பாராட்டிப் பரிசு அளித்துள்ளது. மதுரை, கரந்தைத் தமிழ்ச் சங்கங்கள் இவர்தம் தொண்டினைச் சிறப்பித்துள்ளன. இவர்தம் பணிக்கு உயர்வு அளிக்கும் வண்ணம் தமிழக அரசு 1966-இல் இவரை மதுரைப் பல்கலைக் கழகக் குழுவின் ஒருவராக நியமித்துச் சிறப்பளித்தது.

82 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த இவர் ஏறக்குறைய 60 ஆண்டுகள் முழுமையாகத் தமிழ்ப் பணி செய்வதிலேயே கழித்திருக்கிறார். இவர் புகழுக்கு ஆதாரம் தன்னம்பிக்கை, உழைப்பும் தன்மானமும் இவரது உடன் பிறப்புகளாகும்.

தமிழ்ப் பெரியார்களைப் போற்றிப் பாராட்டி அவர்தம் தொண்டினை உலகறியச் செய்யும் உயர் நோக்கத்தைக் கொண்டிருக்[illegible] தமிழக அரசு, அந்[illegible] [illegible] தமிழ்ப்புலவ[illegible] [illegible] செகவீ[illegible] [illegible]னாரின் நூற்றாண்[illegible] [illegible]வயும் சிறப்[illegible] கொண்[illegible] [illegible]மகிழ்ந்தது.

— நமது செய்தியாளர்

புதிதாக ஒரு மாவட்டம் அமைக்க, அரசுக்குத் தோராயமாக, தொடர் இனச் செலவாக ரூ. 3.5 கோடியும், தொடரா இனச் செலவாக ரூ. 11 கோடியும் ஆகும். இருந்தபோதிலும், கட்டடங்களுக்கான விரிவான மதிப்பீடுகளும், பணியாளர்களுக்கான குடியிருப்புகள் பற்றிய செயற்குறிப்புகளும் இன்னும் இறுதி செய்யப்படவில்லையாதலால், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. 1986–87ஆம் ஆண்டில், இதற்குத் தேவையான கூடுதல் நிதிகள் வழங்கப்படும்.

### நிறுவன நிதி

**70.** முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படும் முன்பணங்கள், வேறுபாட்டு வட்டி விதங்கள் அடிப்படையில் வழங்கப்படும் முன்பணங்கள், நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படும் முன்பணங்கள் ஆகியவற்றிற்காக இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள



வரையறைகளை தமிழ்நாடு விஞ்சியுள்ளது. 1985 நவம்பர் வரை நலிந்த பிரிவைச் சேர்ந்த 6.35 இலட்சம் பேருக்கு ரூ. 1,63.71 கோடி அளவுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### அறக்கட்டளைகள்

**71.** ஆலயங்களின் பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், இவ்வரசு, கோவில்களையும் குளங்களையும் பழுது பார்த்துச் சீரமைத்துத் திருப்பணி செய்வதற்கென, 1986–87ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் மானியம் வழங்க முடிவு செய்துள்ளது.

### ஆதி திராவிடர் நலம்

**72.** ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு ஏற்கெனவே பல சமூக நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆதி திராவிடரின் பொருளாதார வளர்ச்சியையும், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, ஆதி திராவிடர் சிறப்பு அம்சத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1986–87ஆம் ஆண்டில் இச் சிறப்பு அம்சத் திட்டத்தின்கீழ், ரூ. 1,25.55 கோடி செலவிடப்படும். ஆதி திராவிடர்களின் கல்வி மேம்பாட்டிற்குச் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள கல்வி வசதிகளை மேம்படுத்த, பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களுக்காகப் பல கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. 135 கட்டடங்களைக் கட்ட இதுவரையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 110 கட்டடங்கள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய கட்டடங்கள் விரைந்து கட்டப்பட்டு வருகின்றன. இதேபோன்று, மாணவியர்க்கான இல்லக் கட்டடங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ்க் கட்டப்பட்டு வருகின்றன. 101 மாணவியர் இல்லங்கள் கட்ட, அனுமதி அளிக்கப்பட்டிருக்க, 61 கட்டடங்கள் ஏற்கெனவே கட்டிமுடிக்கப்பட்டு விட்டன.

**73.** பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்த வரையில், 2 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள், 1986–87-ல் உதவி பெறும். இந்திய அரசிடமிருந்து ரூ. 14 கோடி சிறப்பு உதவியாக எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகை சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ், மேற்கொண்டும் வேலைவாய்ப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும். இத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவி, பொருளாதார நிலையில் நலிந்துள்ள ஆதி திராவிடர் குடும்பங்கள் ஏழ்மைக் கோட்டைக் கடந்து செல்ல உதவியாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்

**74.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நல்ல கல்வி வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசு, பள்ளிகளையும், மாணவர் இல்லங்களையும் தொடங்கியுள்ளது. இப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மொத்தம் 52,500 மாணவர்கள் பயிலுகின்றனர். மொத்தமுள்ள 543 மாணவர் இல்லங்களில், சுமார் 31,000 மாணவர்கள் தங்கியுள்ளனர். பெருகிவரும் மாணவர் இல்லத் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, ஒவ்வோராண்டும் புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.

### வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சி

**75.** இம் மாநிலத்தில் வீட்டு வசதிகளைப் பெருக்குவதிலும், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பாராட்டத்தகு சாதனை புரிந்துள்ளது. குறைந்த வருமானத் தொகுதியினருக்கான வீடுகள் கட்டும் திட்டங்களை வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, அரசு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளது. குடிசை மாற்றுத் திட்டங்களுக்கும், குடிசைப் பகுதி மேம்பாட்டுக்கும், அரசு, தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. குடிசை மாற்று வாரியம், 1986–87–ல் குடிசை மாற்றுப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ரூ. 1.75 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், குடிசை மாற்று திட்டங்களை மேற்கொள்வதற்காக 1986–87-ல் வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 67.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1986 மார்ச் 17ஆம் நாளன்று மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1986-87ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையின் முன்வைத்து ஆற்றிய உரை.**



# கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார்



கன்னித் தமிழ் வல்லார், கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் நூற்றாண்டு விழா, 10.3.86 அன்று சென்னை மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. முழுநாள் விழாவாக வெலிங்டன் அம்மையார் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில், அன்று காலை நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு 'சிலம்பொலி' சு. செல்லப்பன் வரவேற்றார். தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் விழாத் தலைமை தாங்கினார்.

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனாரின் நூல்கள் பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது.

'குமரேச வெண்பா' பற்றி டாக்டர் இரா. குமரவேலனும், 'பாஞ்சாலங்குறிச்சி வீர சரிதம்' பற்றி டாக்டர் இ. சுந்தரமூர்த்தியும், 'கம்பன் கலை நிலை' பற்றி டாக்டர் அன்பரசியும், 'இந்தியத் தாய்நிலை' பற்றி டாக்டர் க.ப. அறவாணனும் உரையாற்றினார்கள்.

மாலை நேர நிகழ்ச்சிக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

### நூல் வெளியீடு

டாக்டர் அன்பரசி எழுதிய செகவீர பாண்டியனாரின் 'கம்பன் கலைநிலை' ஆய்வு நூலை, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் வெளியிட்டார். அந் நூலின் முதல் படியைச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு க. சுப்பு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழா நிறைவுரையாற்றினார்.

"கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் எழுதிய திருக்குறள் குமரேச வெண்பா, வீர பாண்டியம் போன்ற அரிய தமிழ் இலக்கியங்களை அனைவரும் படித்துணரும் நிலை வர வேண்டும். அதற்கான பெரும் பொறுப்பைக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் மேற்கொள்ள வேண்டும். 5 ஆயிரத்து 990 பக்கங்கள்

*கவிராச பண்டிதர் சிறந்த மேடைப்பேச்சாளரும் ஆவார். நகைச்சுவையும் சிலேடையுமாக நன்றாய் ரசித்துப் பேசுவார். நடுநடுவே— "அர்த்தமாகுதா?" என்று கூட்டத்தில் இருப்பவர்களைக் கேட்டுக் கொண்டே, அவர், குழந்தைக்கும் புரிகிற எளிமையோடு பெரியவர்களுக்கும் புரிவதற்கு அருமையான கருத்தை விளக்கும் அழகே அலாதியானது.*

# படமும் செய்தியும்



தமிழ்நாட்டுக்குச் சுற்றுலா வந்த அமெரிக்கச் சிறுவர், சிறுமியர்கள் சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை, 20.3.86 அன்று சந்தித்தனர் அப்போது அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார் முதல்வர்.






தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில் 12.3.1986 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சோவியத் நாட்டு கலாச்சார அமைச்சரும் பொலிட்பிரோ உறுப்பினருமான டெமிசீவ் அவர்களை சென்னையிலுள்ள சோவியத் தூதரகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 15.3.1986 அன்று சந்தித்து உரையாடினார். அப்போது தஞ்சாவூர்த் தட்டைப் பரிசாக அளித்தார் மாண்புமிகு அமைச்சர்.



# மனம் கவர் மலர்க் கண்காட்சி



மலர்கள் மணத்தை மட்டுமல்ல, மனத்துக்கு மகிழ்ச்சியையும் தருகிறது.

மலர்கள் கண்ணுக்குக் குளுமையை மட்டுமல்ல, காட்சிக்கு விருந்தாகவும் அமைகிறது.

அத்தகைய கண்கவர் கண்காட்சியைக் காணும் வாய்ப்பு அண்மையில் கிட்டியது.

சென்னை விவசாய தோட்டக் கலைச் சங்கத்தின் சார்பில் 135-வது மலர்க் கண்காட்சி மார்ச் திங்கள் 7,8,9 ஆகிய மூன்று நாட்கள் நடந்தது.

மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தோட்டக் கலையையும், விவசாயத்தையும் இணைத்துச் சங்கமாக அமைத்துள்ளனர். இந்தச் சங்கம் இந்தியாவிலேயே மிக அதிக காலம் நடைபெறும் சங்கமாகும். நம்முடைய நாட்டில் பல்வேறு வகையான சீதோஷ்ண நிலையாக இருந்தாலும், எல்லா வகைப் பூக்களையும் ஓரிடத்தில் வைத்துப் பாதுகாக்க முடியும். விஞ்ஞான ரீதியில் இந்தப் பூக்களை எப்படி வளர்ப்பது என்பதற்கு ஒரு கலையே இருக்கிறது.''

தமிழ்நாடு போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு வி.ஆர். லட்சுமி நாராயணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மலர்க் கண்காட்சி அமைப்பாளர் திரு வி.கிருஷ்ணமூர்த்தி, தோட்டக் கலைச் சிறப்புச் செயலர் திரு.வி.வாசுதேவன், திரு.வி.ஜி. பன்னீர்தாஸ், திரு. வி. ஜி. சந்தோஷம், திரு. ஜி.உமாபதி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.டி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்களும் மலர்க்கண்காட்சியைப் பார்வையிட்டார்.

மலர்க் கண்காட்சி நிறைவு விழாவுக்கு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்தக் கண்காட்சியைப் பார்த்தபோது கண்ணுக்குக் குளிர்ச்சியும், எண்ணங்களுக்கு எழுச்சியும் ஏற்பட்டது. இங்கு பச்சைப் பசேலெனச் செடிகள், தோட்டங்கள் காட்சி தருகின்றன. இங்கு இருப்பது ஊட்டி, கொடைக்கானலில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி ஆதிலட்சுமி ராமச்சந்திரன் அவர்கள் மலர்க் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

அழகிய மலர்த் தோட்டங்களைப் பார்க்க ஆவலாகச் செல்கிறோம்.

கண்ணைப் பறிக்கும் அந்த அழகிய செடி இருவண்ணங்களில் காட்சியளிக்கிறதே! அமராந்தஸ் அதன் பெயர் என்று அறிந்து,



அதை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

விதவிதமான மலர்கள் பூத்துக் குலுங்கும் காட்சி மகிழ்ச்சியைத் தருகிறது.

ஓரிடத்தில் ரோஜாக்களின் கூட்டம். ரோஜாவில்தான் எத்தனை வகைகள்; எத்தனை வண்ணங்கள்! அந்த இரத்தச் சிவப்பு ரோஜா... அப்பப்பா! இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

'வாழையடி வாழை' என்கிறோம். ஆனால் இங்கே வாழையடி அன்னாசியும், காபியும் இருக்கக் கண்டு வியக்கிறோம். ஆம். ஒரே இடத்தில் வாழை, அன்னாசி, காபி, கரி பலா, பாக்கு ஆகியவை ஒன்றாக வளர்கின்ற பாங்கினைப் பார்க்கிறோம்.

அதோ! அது என்ன புதுவகைப் பூ! சுவிட்சர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மலர்ச் செடியின் பெயர் பேபி கராணியம். இதன் தனிச் சிறப்பு மலர்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கின்றன. இதேபோல சுவிட்சர்லாந்திலிருந்து தருவிக்கப்பட்ட அழகிய குரோட்டன் செடிகள் இவ்வாண்டு மலர்க்கண்காட்சியில் அறிமுகம் செய்யப்பட்டன. அது மட்டுமல்ல, மண்ணில்லாமல், நீரிலேயே வளரும் செடிவகையும் அறிமுகமாகும் புதுவகையாகும்.

இந்த மலர்க்கண்காட்சியில்-நிரந்தரமாக உள்ள மலர்க் காட்டில் நெட்டை குட்டை மரங்களும், பன்னிறச் செடிகொடிகளும், பசுமையான புல் தரைகளும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றன.

இந்தக் கண்காட்சியைக் கடந்த ஆண்டில் 25,000 பேர் பார்த்து ரசித்தார்கள். இந்த ஆண்டு இதன் எண்ணிக்கை இரு மடங்காக உயர்ந்துள்ளது, மலர்களின்பால் மக்களுக்குள்ள ஈடுபாட்டை உணர்த்துகிறது.

விவசாயத் தோட்டக் கலைச் சங்கத்தில் 3000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கண்காட்சியில்





அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

உங்கள் வீட்டில் தோட்டம் போட இடம் இருக்கிறதா? செடி கொடிகளை எப்படிப் போடலாம் என்று யோசிக்கிறீர்களா? அந்தக் கவலையே வேண்டாம். விவசாயத் தோட்டக் கலைச் சங்கத்திடம் தொடர்பு கொண்டால் போதும், அவர்களே உங்கள் இல்லந்தேடி வந்து இனிய மலர்ச் செடிகளை வளர்க்க, காய்கறித் தோட்டங்கள் போட தக்க ஆலோசனைகளையும், செய்முறைகளையும் விளக்கிக் கூறுவார்கள். இதற்கெல்லாம் குறைந்த கட்டணமே வசூலிக்கிறார்கள்.

விவசாயத் தோட்டக் கலைச் சங்கம் மக்கள் மனத்தைக் கவரும் வகையில், பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தவிருக்கிறது.

* ஜப்பானிய முறையில், இச்சங்கத்தின் வளாகத்தில், ஒரு திடலை அமைத்து, 'போன்சாய்' தாவரங்கள் வளர்த்தல்.

* சென்னை நகரில் அமைந்துள்ள சாலையோரத் திடல்களை, மாநகராட்சித் துணையோடு பராமரித்தல்.

* அடுக்குமாடிக் குடியிருப்புகள் பெருகிவரும் இந்நாளில் அம்மக்களின் ஆசையை நிவர்த்திசெய்யும் வகையில், அவர்களின் வசதிக்கென மாடித்தோட்டம், தொங்கும் தோட்டம் போன்றவற்றை ஏற்படுத்தித் தர வசதிகள் செய்தல், இவையன்றி, வீட்டிற்குள்ளே வளர்க்கப்படும் நிழல் தேவை தாவரங்களையும், அழகுத்தாவரங்களையும் அமைத்துத் தரவும், ஆலோசனைகள் வழங்குதல்.

* தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப. அவர்களின் ஆலோசனையின்படி போகன்வில்லா போன்ற தண்ணீர் அதிகம் தேவைப்படாத தாவர வகைகளை அதிகப்படுத்துதல், அதன் மூலம் சென்னையை மேலும் பசுமையாக்கும் முயற்சியை உறுதுணையாக இருத்தல்.

மலர்க்கண்காட்சியைப் பார்த்து விட்டு மலர்ந்த முகத்துடன் வெளியே வருகிறோம்.

தோட்டம் ஒன்று - மலர்கள் பலவகை. இது ஒருமைப்பாட்டை உணர்த்தவில்லையா?

நமது செய்தியாளர்

---

[illegible]



குடிநீரை உபயோகிக்கும்போது அது கலங்கி இருக்கிறதா அல்லது தூய்மை கெட்டு இருக்கிறதா அல்லது தெளிவாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் நம்மில் பலர் அதனைப் பருகுகின்றோம். ஏதாவது சந்தேகம் இருந்தால், அந்த நீரைக் காய்ச்சியோ, வடிகட்டியோ பயன்படுத்துகின்றோம்.

ஆனால் இத்தகைய முன்னெச்சரிக்கையை, பானங்களில் ஐஸ் கட்டிகளைப் போட்டுப் பருகும்போது பொதுவாக நாம் அனுசரிப்பதில்லை. ஐஸ் கட்டிகள் எல்லாமே தூய்மையானவை என்று சொல்ல முடியாது. எந்த நீர் பனிக்கட்டியாக உறைந்துள்ளதோ அந்த நீரைப் பொறுத்தே அதன் பண்பும் அமைகின்றது.

பாக்டீரியா போன்ற நுண்கிருமிகள் சிலவகைகள் எந்தவித சீதோஷ்ண நிலைகளிலும் வாழும் திறன் கொண்டவை. உறைந்திருக்கும் பனிக்கட்டியிலும் சில நுண்கிருமிகள் வாழ்கின்றன. இதனை உட்கொள்ளும் நபர்களிடம், பாக்டீரியாவினால் ஏற்படும் தொத்து நோய்கள் பரவ சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இதனால் இப்போது, மூன்றாவது உலக நாடுகளில் இத்தகைய நோய் பரவுதலைத் தடுக்க, ஐஸ் கட்டிகளில் ஏற்படும் தூய்மைக்கேடுகளைப் பற்றி குறிப்பாக ஆராய்ந்து வருகிறார்கள்.

—நன்றி: 'வானொலி'



# ஆசியாவில் மிகப்பெரிய வானியல் ஆராய்ச்சி நிலையம்

வானியல் ஆராய்ச்சி, இந்தியாவில் முதன்முதலாகத் தமிழகத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது!

1972ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலராக இருந்த வில்லியம் பெட்ரியினால் தனிப்பட்ட முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட வானியல் ஆராய்ச்சி பின்பு கிழக்கிந்தியக் கம்பெனியினால் தொடரப்பட்டது. கப்பற்படைப் போக்குவரத்து மற்றும் ஏனைய கப்பல்களுக்கு உதவியாக ஆரம்பித்த ஆராய்ச்சி, கோள்கள்பற்றியஆராய்ச்சிக்காக விரிவுபடுத்தப்பட்டது.

1831 முதல் 1843ஆம் ஆண்டு வரை காமஸ் கிளேன்வில் டைலர்



என்னும் ஆராய்ச்சியாளர் 11,015 நட்சத்திரங்களைக் கண்டறிந்து பட்டியல் தயாரித்துச் சாதனை புரிந்தார்.

19ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஐரோப்பாவில் சூரிய மண்டலபௌதிகம்போன்றவானியல் ஆராய்ச்சிகள் புதிதாக மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பா பகுதி குளிர் பிரதேசமாக உள்ளமையால் சூரிய மண்டல ஆய்வுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடு கருதி வெப்பமண்டலப் பிரதேசமான இந்தியாவில் சூரியமண்டல ஆய்வு நடத்துவதற்காக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொடைக்கானலில் ஒரு வானியல் ஆய்வு நிலையம் நிறுவப்பட்டது. 1901ஆம் ஆண்டு எவர்ஜெட் என்னும் ஆராய்ச்சியாளர் சூரியனின் மீதுள்ள சூரியப் புள்ளிகளின் இயக்கம் பற்றிய ஆய்வின் போது தான் கொடைக்கானல் நிலையம் உலகப்புகழ் பெற்றது.

இரவில் நட்சத்திர மண்டல ஆய்வுக்குக் கொடைக்கானல் நிலையம் அவ்வளவாகப் பயன்படவில்லை. எனவே பெங்களூரில் உள்ள இந்திய வானியல் பௌதிக ஆராய்ச்சி நிறுவனம் புதிய இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தது. இதற்காக வடக்கே திருப்பதியில் தொடங்கிதெற்கேகன்னியாகுமரி வரை பல இடங்களில் முதலில் தேர்வு செய்யப்பட்டது.

வானத்தில் தூசியே இருக்கக் கூடாது என்பது ஒரு தகுதி. வானத்தில் மேகக்கூட்டம் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்பது இன்னொரு தகுதி. ஆண்டின் 365 நாட்களும் வானம் தெளிவாகத் தெரியக்கூடிய இடமென்பது இன்னொரு தகுதி. இவை அனைத்தும் ஒருங்கிணைந்த இடமாகக் காவலூர் அமைந்திருக்கிறது. 4 ஆண்டு ஆய்வுக்குப் பின்பு காவலூரைத் தேர்ந்தெடுத்து இங்கே 1963ல் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது.

## ஆசியாவிலேயே பெரியது

1963 முதல் 1968 வரை 5 ஆண்டுகள் தொலைநோக்கிகள் பொருத்தப்பட்டன. காவலூரில் வானியல் ஆராய்ச்சிகள் தொலைநோக்கியால் கண்டறிவதோடு படங்களும் பிடிக்கப்படுகின்றன. 38 சென்டிமீட்டர் விட்டமுள்ள தொலைநோக்கி மூலம் ஆராய்ச்சி செய்யப்பட்ட பின்பு 1972-ல் 102 சென்டிமீட்டர் விட்டமுள்ள பெரிய தொலைநோக்கி ஒன்று நிறுவப்பட்டது. தற்போது நிறுவப்பட்டுள்ள பெரிய தொலைநோக்கியின் விட்டம் 234 சென்டிமீட்டர். அதாவது 94 அங்குலமாகும்.

காவலூரில் மொத்தம் 4 தொலைநோக்கிகள் உள்ளன.



இவற்றின் விட்டம் முறையே 15, 30, 40, 94 அங்குலங்களாகும். 94 அங்குல தொலைநோக்கி 120 டன் எடை உள்ளது. சாதாரணமாக நாம் காணும் பொருளை விட 20 மடங்கு பெரியதான நட்சத்திரங்களும் கிரகங்களும் தெரியும். 94 அங்குலத் தொலைநோக்கியை நிறுவ ரூ.6 கோடியே 50 லட்சம் செலவாகும். இது இன்னமும் முழுமையாக நிறைவடையவில்லை. ஒரு சில மாதங்களில் முழுமையாகநிறைவடைந்த பின்புதான் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். அதுவரை 40 அங்குலத் தொலைநோக்கி மூலம் தான் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94 அங்குலத் தொலைநோக்கியின் இன்னொரு சிறப்பம்சம் இதனை வடிவமைத்து உற்பத்தி செய்யப்பட்டதெல்லாம் வெளிநாட்டு உதவியில்லாமல் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்டதாகும். இத் தொலைநோக்கியோடு கம்ப்யூட்டர் இணைக்கப்பட்டிருப்பதால் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பார்க்கவேண்டுமெனக் கம்ப்யூட்டரில் தகவல் கொடுத்தால் தொலைநோக்கி தானாகவே நாற்புறமும் சுழன்று நட்சத்திரத்தைக் கண்டு பிடித்துக் காட்டிக் கொடுத்து விடும்.

காவலூர் வானியல் ஆய்வு நிலையத்தில் ஹேலி வால் நட்சத்திரம் 29.8.85 அன்று படம் பிடிக்கப்பட்டது. அப்போது பூமியிலிருந்து 43 கோடி கிலோ மீட்டர் தொலைவில் அது இருந்தது. பின்பு 27.12.85ல் படம் பிடிக்கப்பட்டபோது 9 கோடியே 27 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. 11.4.86 அன்று படம் பிடிக்கும்போது 6 கோடியே 28 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் ஹேலி வால்நட்சத்திரம் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

1985 நவம்பர் திங்களில் தோன்றத் தொடங்கிய ஹேலி வால் நட்சத்திரத்தை தற்போது தமிழ்நாடு உட்பட இந்தியா முழுதும் அதிகாலை 4½ மணியிலிருந்து 6 மணி வரை வெறுங் கண்ணால் பார்க்க முடியும்.

மார்ச் 25க்குப் பிறகு அது நள்ளிரவு 1 மணிக்கே தெரியத் தொடங்கி - அதிகாலை 5 மணி வரை தெளிவாகத் தெரியும்.

வானத்தின் தென்கிழக்குத் திசையில் 45 டிகிரி கோணத்தில் தற்போது காட்சி அளித்து வரும் இது, ஏப்ரல் 15ஆம் நாளுக்குப் பிறகு வானத்தின் மேற்குப் பகுதிக்குச் சென்று விடும். அப்போது இரவு 7 மணிக்குத் தெரியத் தொடங்கி 8½ மணிக்கு மறைந்து விடும். ஏப்ரல் 25 வரை இதனை நன்றாகப் பார்க்க முடியும். மே மாத இறுதி வரை லேசாகத் தெரியும். அதன் பிறகு மறைந்து விடும். பின்னர் கி.பி. 2061வது ஆண்டில் தான் காண முடியும்.

காவலூர் வானியல் ஆராய்ச்சி மையத்திற்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி வருகை தந்தபோது வானியல் விஞ்ஞானி டாக்டர் வைணுபாப்புவின் பெயரைச் சூட்டினார். டாக்டர் வைணுபாப்பு மாணவராக இருந்தபோதே ஒரு வால் நட்சத்திரத்தைக் கண்டறிந்தபோது உலக வானியல் அறிஞர்கள் அவரைப்பாராட்டி, அந்த வால் நட்சத்திரத்திற்கு 'பாப்பு வால் நட்சத்திரம்' எனப்பெயர் சூட்டினார்கள்.

டாக்டர் வைணுபாப்பு வெளிநாட்டில் படித்து அங்கேயே தங்கி விடாமல் இந்தியாவிற்குத் திரும்பி வானியல் ஆராய்ச்சியில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். வைணுபாப்புவால் நிறுவப்பட்ட பெங்களூர் இந்திய வானியல் பௌதிக ஆராய்ச்சி நிறுவனமும் நைனிடாலில் உள்ள உ.பி. மாநில வானியல் ஆய்வு சாலையும் பெரும் புகழ்பெற்றவைகளாகும்.

தொகுப்பு :

**எஸ்.எம். கலைமணி,**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**

**வட ஆர்க்காடு மாவட்டம்**





# ஹேலி வால் நட்சத்திரம்

டாக்டர் வை. செல்வமுத்து
**கணிதத் துறைத் தலைவர்,**
**நந்தனம் அரசினர் கல்லூரி.**

"பிச்சைக்காரர்கள் சாகும் போது, வால்நட்சத்திரங்கள் தோன்றுவதில்லை. மன்னர்களின் மரணத்தை வானமே ஒளிவீசிக் காட்டுகிறது'' என்றார் சேக்ஸ்பியர். ஆதித்த கரிகாலனின் மறைவின்போது, தூமகேது தோன்றியதாக, 'பொன்னியின் செல்வனில்' 'கல்கி' குறிப்பிட்டார். வால் நட்சத்திரத்தால் வரும் கேடுகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள, ஜப்பானிய மன்னர்கள் விசேட பூசைகளைச் செய்தனர். வால் நட்சத்திரம் மறையும் வரை உயிர் வதையைத் தடை செய்தனர்.

'வான மண்டலத்துத் தீமைகளை அப்புறப்படுத்த, கடவுள்கள் பயன்படுத்திய துடைப்பங்களே வால் நட்சத்திரங்கள். அவர்கள் தள்ளிய தீமைகள் பூமியில் விழுந்து போர்-வெள்ளம்- கொள்ளை நோய் போன்ற கொடுமைகளை ஏற்படுத்தின' எனச் சீனர்கள் நம்பினர். ''வால் நட்சத்திரங்கள் எரியும் தீப்பந்துகள். அவற்றால் போர்-பஞ்சம்-புயல் போன்ற கேடுகள் வரும்'' என்றார் கிரேக்க மேதை அரிஸ்டாட்டில். ஆயிரக்கணக்கான ஆண்டுகள், மக்களிடையே இத்தகைய அச்சத்தையும் பீதியையும் வால்நட்சத்திரங்கள் ஏற்படுத்துவதற்குக் காரணம்: அவை வானத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று தோன்றின. மற்ற நட்சத்திரங்களுக்கு இல்லாத - உருவிய வாள் போன்ற நீண்ட வால்களைப் பெற்றிருந்தன. எரி நட்சத்திரங்களைப் போன்று, கண நேரத்தில் தோன்றி மறையவில்லை - மாறாக மாதக் கணக்கில் காட்சியளித்தன. முக்கியமாக அவற்றின் பாதைகள், மற்ற விண்மீன்கள் - கோள்களின் இயக்கம் போல் எந்த விதிக்கும் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே அவற்றைக் காணும்போது, அச்சம் தலை தூக்கியது. அவற்றால் வரும் கேடுகள் பற்றிப் புதிய புதிய கட்டுக்கதைகள் உலா வரத் தொடங்கின.

**ஹேலி வால் நட்சத்திரம் 1910 மே 13-ஆம் நாள் கொடைக்கானல், வானியல் ஆராய்ச்சி நிலையத்தில் எடுத்த புகைப்படம்.**



சீன வரலாற்றில், கி.மு. 613-லேயே வால் நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. அவற்றைத் 'தெய்வீகத் துடைப்பம்' எனச் சீனர்கள் குறிப்பிட்டனர். 'நீண்ட முடியுள்ள நட்சத்திரங்கள்' எனக் கிரேக்கர்கள் கூறினர். அரிஸ்டாட்டில் (கி.மு. 384—322) ''பூமியிலிருந்து கிளம்பும் வாயுக்கள், காற்று மண்டலத்தைத் தாண்டி மேலே சென்றதும், தீப்பந்தமாக மாறி, சில மாதங்கள் எரிந்து மறைகின்றன'' என்றார். அரிஸ்டாட்டிலுக்கு இருந்த மதிப்பின் காரணமாக சுமார் 2,000 ஆண்டுகள், அவரது கருத்தை எதிர்த்துப் பேச யாருக்கும் துணிவில்லை. ஒவ்வொரு முறை வால் நட்சத்திரம் தோன்றும்போதும் அதனைப் பதிவு செய்து கொள்வதும், பின்னால் நடைபெறும் உற்பாதங்களுடன் தொடர்பு படுத்திப் பேசுவதோடும் வால் நட்சத்திர ஆராய்ச்சியாளர் தமது ஆய்வினை முடித்துக் கொண்டனர்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தான், வால் நட்சத்திரங்கள் பற்றிய முறையான அறிவியல் ஆய்வு தொடங்கியது. 1531-39-ல் தோன்றிய பல வால் நட்சத்திரங்களைக் கவனித்த இத்தாலிய விஞ்ஞானி கிரோலாமோ பிராக்காஸ்டோரோ என்பவர்,

அவற்றின் வால்கள் எப்போதும் சூரியனுக்கு எதிர் திசையில் செல்வதைக் கண்டுபிடித்தார். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆட்டோவான் கோரிக் என்பவர், ''வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தைச் சார்ந்தவை. கோள்களைப் போல், வால் நட்சத்திரங்களும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதை ( Ecliptical ) யில் செல்லும். எனவே குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை அவை மீண்டும் தோன்றும்'' என்றார். ஆட்டோவானின் அற்புதக் கற்பனை என்று உலகம் தள்ளி விட்டது. ஆட்டோவானின் கருத்தில் நம்பிக்கை கொண்டவர்களுள் ஒருவர் தான்- தற்போது உலகமெல்லாம் பேசப்படும் எட்மண்ட் ஹேலி என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி.

1656-ல் இங்கிலாந்தில் வசதியான குடும்பத்தில் பிறந்த எட்மண்ட் ஹேலி, 1682-ல் தோன்றிய பிரகாசமான வால் நட்சத்திரத்தைக் கண்டார். அதன் பாதை அமைப்பு - வேகம் ஆகியவற்றை ஆராய முற்பட்டார். வால்நட்சத்திரங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்தார். பல ஆண்டுகள் ஆய்வு செய்து கிடைத்த தகவல்களை ஒப்பிட்ட போது, 1456, 1531, 1607, 1682 ஆகிய ஆண்டுகளில் தோன்றிய வால் நட்சத்திரங்கள், ஏன் ஒரே வால் நட்சத்திரமாக இருக்கக் கூடாது என்ற கேள்வி அவர் மனத்தில் எழுந்தது. தயங்கினார் - தளராது ஆராய்ந்தார். தொடர்ந்து 1705-ல் வெளியிட்ட கட்டுரையில், ''1682-ல் தோன்றிய வால் நட்சத்திரமே 76 ஆண்டுகளுக்குப்பின் 1758-ல் மீண்டும் தோன்றும்'' என ஆருடம் கூறினார். உலகமெல்லாம் ஒரே பரபரப்பு. ஆனால் ஹேலியின் அறிவிப்பின் உண்மை அறிய ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்க வேண்டுமே! தமது ஆருடம் சரியா என்று அறிய ஹேலியே 102 வயது வரை வாழ வேண்டும். ஹேலி 1742-ல் தனது 82-வது வயதில் மறைந்தார். உலகமும் அனைத்தையும் மறந்து, வேறு திசைகளில் கவனத்தைத் திருப்பி விட்டது. 1758- வந்தது. யாரும் ஆர்வம் காட்டவில்லை. நவம்பர் மாதத்தில், ஜோகன் ஜார்க் பாலிஸ்ட் என்ற ஜெர்மனி விவசாயி ''ஒரு வால் நட்சத்திரத்தைப் பார்த்தேன்'' என்ற போது, உலகம் திடீரென விழித்துக்கொண்டது. அடுத்த மார்ச் மாதம், வெள்ளிப்பந்து போல் - ஒளி வீசும் வாலுடன் வால் நட்சத்திரம் பவனி வந்தபோது, ஹேலியின் ஆராய்ச்சி உண்மையாயிற்று. பெயரில்லாமல் சூரியனைச் சுற்றி வந்த அந்த வால் நட்சத்திரத்திற்கு ஹேலி வால் நட்சத்திரம் என்றபெயர் கிடைத்தது. பூமியைப் போல், வால் நட்சத்திரமும், சூரியனை ஒரு குறிப்பிட்ட வேகத்தில் சுற்றி வருகின்ற பொருள் தான் என்ற உண்மை வெளியானது. மூட நம்பிக்கைகள் முடம்பட்டன.

பாறைத் தூசுகளுடன், மெதென், அமோனியா, கார்பன்-டை - ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் கலந்த அழுக்குப்பனிப் பந்துகளே வால் நட்சத்திரங்கள். பூமியைப் போன்று, அவை நமது சூரிய குடும்பத்தைச் சார்ந்தவை. வால் நட்சத்திரம் சூரியனுக்கு அருகே வரும்போது சூரிய வெப்பத்தால் பனி உருகித் தூசுகள் வெளிக் கிளம்புகின்றன. இதனால் வால் நட்சத்திரம் ஒரு நட்சத்திரத்தைப் போல் பிரகாசிக்கத் தொடங்குகிறது. இதனை உட்கரு அல்லது கோமா (Coma) என அழைப்பர். சூரியனை நெருங்க நெருங்க வெப்ப மிகுதியால், மென்மேலும் தூசுகளும் வாயுக்களும் வெளிப்பட்டு, சூரியனின் கதிர்வீச்சால், அவை வால் நட்சத்திரத்தின் பின்புறம் தள்ளப்படுகின்றன. வால் நட்சத்திரத்திற்கு வால் முளைக்கும் விதம் இதுதான். வால், சூரியனுக்கு எதிர் திசையில் செல்வதும் இதே காரணம் தான். சில வால் நட்சத்திரங்களுக்குப் பல வால்கள் முளைப்பதுமுண்டு.



**மார்க் டுவெயினும் ஹேலியும்**

*1895 நவம்பரில் ஹேலி நட்சத்திரம் காணப்பட்டபோது, தனது கிண்டலான—கேலியான எழுத்துக்களால் பெரும் புகழ் அடைந்த அமெரிக்க எழுத்தாளர் மார்க் டுவெயின் பிறந்தார். 1910-ல் மீண்டும் ஹேலி நட்சத்திரம் வந்தபோது, அவர் மரணப் படுக்கையில் இருந்தார். "உங்களுக்கு ஒன்றும் நேராது" என நண்பர்கள் உற்சாகப்படுத்தினர். மார்க் டுவெயின், தமக்கே உரிய பாணியில், "நான் வால் நட்சத்திரத்துடன் வந்தேன். அதனோடு தான் போவேன்" என்றார். அவர் வாக்குப் பொய்க்கவில்லை.*

வால் நட்சத்திரத்திற்கும், சூரியனுக்கும் இடையேயுள்ள தூரம் குறையக்குறைய வாலின் நீளம் அதிகமாகும். சூரியனிலிருந்து விலகிச் செல்லத் தொடங்கியதும், வாலின் நீளம் குறைந்து கொண்டே வந்து, வெறும் நட்சத்திரம் போல் தோன்றி, கடைசியில் பழைய பனிப்பந்தாகி மறைகிறது. வால் நட்சத்திரத்தில் வாலாகக் காட்சியளிக்கும் துகள்கள் அனைத்தும், மீண்டும் உட்கருவுடன் சேர்வதில்லை. இதனால் ஒவ்வொரு முறை சூரியனைக் கடக்கும் போதும், வால் நட்சத்திரத்தின் எடை சிறிது குறைகிறது. இம்மாதிரி எடை குறைந்து கொண்டே வந்த பியாலா என்ற வால் நட்சத்திரம் (6 வருடம் 9மாதத்திற்கு ஒரு முறை காட்சி அளிக்கும்) 1852-ல் இரண்டாக உடைந்து காணப்பட்டது. 1866 முதல் காணவில்லை. (மரணமடைந்தது எனலாம்!).

சக்தி மிக்க தொலை நோக்கிகளால், ஆயிரக்கணக்கான வால் நட்சத்திரங்களின் பாதைகளை விஞ்ஞானிகள் கணித்து விட்டனர். 3½ வருடத்திற்கு ஒரு முறை காட்சி தரும் என்கே வால் நட்சத்திரம் முதல், 2040 ஆண்டுகளுக்கு ஒரு முறை காட்சி தரும் டோனாட்டி போன்ற பல வால் நட்சத்திரங்களை விஞ்ஞானிகள் அறிவர்.

தற்போது வானில் உலாவரும் ஹேலி வால்நட்சத்திரத்தின் குறுக்களவு சுமார் 8 மைல்கள் தான். வாலின் நீளமோ 5 கோடி மைல்கள் ஆகும். (இதை வைத்துத் தான் அனுமாரின் வாலுக்கு நீளம் சேர்த்தனரோ!) கி.மு. 87-ல் இது காட்சியளித்ததாக, கிரேக்க வரலாற்றில் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கணக்கின்படி 1985-ல் தோன்றுவது 28 - வது முறையாகும். இம்முறை, பூமியின் நடுவரைக்குத் தென் பகுதியில் உள்ளவர்களுக்கு, நன்றாகக் காண வாய்ப்பு உண்டு. காவலூர் தொலை நோக்கி நிலையத்தார் அளிக்கும் தகவலின் படி, மார்ச்சு மாதம் முழுவதும் வானத்தின் தென் கிழக்குப் பகுதியில், அதிகாலை 4.30 மணி முதல் 5 மணி வரை காணலாம். வருகிற ஏப்ரல் 9-ல் (அன்று அமாவாசை) நன்கு பிரகாசமாகத் தென்படும்.

இம்முறை சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் செயற்கைக் கோள்கள், ஹேலி வால் நட்சத்திரத்திற்கு அருகே சென்று புகைப் படங்கள் எடுக்கின்றன. இதனால் வால் நட்சத்திரங்களின் உட்கரு பற்றிய புதிய விவரங்கள் கிடைக்கும்.





# நித்தமும் வளரும் கைத்தறித் தொழில்

நீண்ட காலமாக இயங்கிவரும் கிராமியத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. 1984-85-ஆம் ஆண்டு முடிய 68 சதவிகித நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளனர். **தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டி தமிழ் நாட்டைப் பொறுத்த வரை 68% கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன.**

**கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டுவந்து சலுகைகள் வழங்கல் -**

கைத்தறி நெசவாளர்களைச் சுரண்டாமல் பாதுகாக்கத் தக்க நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டிய அவசியத்தைக் கைத்தறித் துறைக்கான வளர்ச்சித் திட்டங்கள் வலியுறுத்துகின்றன. கடந்த பத்தாண்டுகளிலும் அதற்கு மேற்பட்ட கால அளவிலும் நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருவது தான் அதற்கான தீர்வு என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

31.12.1985ல் தமிழ்நாட்டில் 1600 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. 1985-86ல் மொத்தம் 20,000 கைத்தறி நெசவாளர்களை, நெசவாளர் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1985-86ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவி என்னும் திட்டத்திற்காக ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1984-85ல் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித் துணியின் உற்பத்தி 159.31 மில்லியன் மீட்டர்களாக இருந்தது. 1985-86ல் உற்பத்தியை 175 மில்லியன் மீட்டர்களுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.12.85 முடிய 129.30 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

---

**இரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.,**
**இயக்குநர்,**
**கைத்தறி மற்றும் துணி நூல் துறை**

தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்படும் ஒவ்வொரு நெசவாளருக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காகப் பருத்தித் தறி ஒன்றுக்கு ரூ.200, பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றுக்கு ரூ. 250, பாலியஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ. 500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டுக் கடன் உதவி அளிக்கப் பட்டு வருகிறது.

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அடிப்படையில் நிதி உதவி**

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டுத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் (NABARD) மறு நிதி உதவி அளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந் நிறுவனம் வங்கி விகிதத்தைவிட 2½% குறைந்தவட்டி விகிதத்தில் கடன் உதவி அளித்து வருகிறது. இச்சலுகையின் மூலம் தலைமை (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7½% வட்டியில் நடைமுறை மூலதனம் பெற்று வருகின்றன.

இத்திட்டம் 1985-86ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்

றப்பட்டு 1985-86ஆம் ஆண்டுக்கு 139.24 கோடி ரூபாய் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனமாக வழங்க அனுமதித்துள்ளது.

**மூலப் பொருள் வழங்குதல்**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 4.33 இலட்சம் கதிர்கள் திறனைக் கொண்டு, ஆண்டிற்கு சுமார் 1.44 இலட்சம் பேல்களைப் பலதரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பாலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ-ஆப்டெக்ஸிற்கு விற்கப்பட்டு, அவை தமிழ்நாட்டில் முக்கிய நெசவாளர்கள் மையங்களில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, தமிழ்நாட்டில் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.51 கோடி மூலதனச் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனீ, எட்டையபுரம் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன. இவற்றுள், எட்டையபுரம் கூட்டுறவு நூற்பாலை செயற்கை இழை நூல் போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகின்றது. கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதி திராவிடர்கள் நலனுக்காக வென்றே அமைக்கப்பட்ட ஒன்றாகும். கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரைத் தலைவராகக் கொண்ட நூல் விலை நிர்ணயக் குழு, நூற்பாலைகள் கோ-ஆப்டெக்ஸிற்கு வழங்கும் நூல்களின் விற்பனை விகிதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் தேவைப்படும் நூலின் அளவுகளுக்கேற்பக் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், அவற்றிற்குப் பலதரப்பட்ட எண்ணிக்கையில் நூல் ஒதுக்கீடு செய்து வருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகள், இந்த ஒதுக்கீடுகளை கோ-ஆப்டெக்சின் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும் நல்கி வருகிறது.

**கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவிகள்.**

இந்திய அரசின் நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு அரசு கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களைக் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. மேலும், இரண்டு கூட்டுறவுக் கைத்தறி ஏற்றுமதித் திட்டங்களை, கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. இத்திட்டங்களின் மூலம், இது வரையில் 18,350 கைத்தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் 1985-86ஆம் ஆண்டில் 31.12.85 வரை ரூ.512 இலட்சம் மதிப்புள்ள 63.01 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 593.40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை



செய்யப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள் நலிந்த மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அச்சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை நல்கி வருகின்றன.

**தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)**

கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாட்டில் உள்ள 1600 பிரதம நெசவாளர்கள் சங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50·/. ஐ கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் 613 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகின்றது. இச்சங்கம் கடந்த 1984-85ஆம் ஆண்டில் ரூ. 66.14 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ. 89.90 கோடி மதிப்புக்கு விற்பனை செய்துள்ளது. மத்திய அரசின், மலிவு ரகத் துணிகளை அளிக்கும் ஜனதா ரகத் திட்டத்தினை இச்சங்கம் நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேஷ்டிகள் மற்றும் சேலைகள், லுங்கிகள் போன்றவை கிடைக்கின்றன. தவிர அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சித்துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகளைக் கடனில் விற்பனை செய்யும் திட்டத்தினையும் கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

**கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடி**

கைத்தறித் துணியின் விற்பனையிலைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கும் கைத்தறித் துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பதும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மானியத் தொகையினை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் 1985-86ஆம் ஆண்டிற்கு 45 நாட்களுக்கு 20 சதவிகிதச் சிறப்புத் தள்ளுபடி அளிப்பதற்கு முன் வந்துள்ளது. மேற்படித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டில் அரசு ரூ. 16 கோடி அளவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு 1985-86ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்



திட்டத்தில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நிதியுதவி கோரியுள்ளதன்பேரில் ரூ.2.60 கோடி அரசு வழங்கி உள்ளது. எனவே, இதுவரை ரூ.12.60 கோடி நிதி, இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு இவ்வாண்டு ரூ.10 கோடி நிதியுதவி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் அதிக அளவில் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்ய இது உதவியாக இருக்கும்.

**நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்**

1962ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெசவாளர் வீட்டு வசதித் திட்டம், மீண்டும் கொண்டுவரப்பட்டு 1979-80ஆம் ஆண்டிலிருந்து புதிய மாற்றி அமைக்கப்பட்ட நெசவாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றியமைக்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ் ஒரு வீடு கட்டுவதற்கு ரூ.12,000 செலவாகிறது. இதில் அரசு மானியமாக ரூ.1,000 அளிக்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ரூ.9,700 அளவிற்குக் கடன் உதவி செய்கிறது. மீதித் தொகையான 1300 ரூபாயை, பயனடையும் நெசவாளர் செலுத்த வேண்டும். கூட்டுறவுத் துறையின்கீழ், கைத்தறி நெசவாளர்களின் பயனுக்காக 3219 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொண்டதில் 31.12.85 முடிய 3027 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேலும் 192 வீடுகள் பல்வேறு நிலையில் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு 85-86ஆம் நிதி ஆண்டில் ரூ.10 இலட்சம் மானியமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்**

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும், அதன் துணைத் தொழில்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இக்கழகம் 2028 தனியார் கைத்தறி நெசவாளர்களுக்களுக்கு நடைமுறை மூலதனத்தினைக் கடனாக ரூ. 196.55 இலட்சம் அளித்துள்ளது.

**தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்**

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் பிரதம பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் அதன்



சரிகை உற்பத்தியை மாதம் ஒன்றுக்கு 500 மார்க்குகளிலிருந்து சுமார் 1000 ஆக உயர்த்தியுள்ளது.

கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை மாதம் ஒன்றிற்கு சுமார் 10 லட்சம் மீட்டர் கைத்தறித் துணிகளுக்கு வெளுக்கப்படுதல், பிரிண்ட் செய்தல்: சாயம் போடுதல், பளபளப்பாக்குதல் முதலிய பதனிடும் வசதிகள் செய்து கொடுக்கும் திறனுடையது. இவ்வாலையில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குத் தேவையான நூலும் சாயமிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான கடன் வசதித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும் தம் பணியாளர்களுக்கும் இத்திட்டத்தினைக் கொண்டு வர, மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனிஅமைப்பினை கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற பெயரில் ஏற்படுத்தி விற்பனையைப் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் குறைந்தளவு இரண்டு கோடி ரூபாய் அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறைக்கும், துணை இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப் பாதுகாப்புத் துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தும் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்குக் கைத்தறிச் சீருடையினை இலவசமாக வழங்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகக் "கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம்" என்ற நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகின்றது. இத்திட்டத்தின்கீழ் கட்டுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களையும் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இது வரை சுமார் 1,02,300 கைத்தறி நெசவாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு 6 காசு தருகின்றனர். அரசு ஒரு ரூபாய்க்கு 3 காசு வீதம் மானியம் அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7 சதவிகிதம் வட்டி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில் உள்ள தொகையும் அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ.3000, ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது

மொத்தத்தில் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் நித்தமும் வளர்ச்சி பெற்று வருகிறது என்று சொல்வது சாலப் பொருந்தும்.

# நெல்லை மாவட்டத் தொழில் மையம்

மாவட்டத்தில் தொழில் வளம் பெருகவேண்டும். சிறுதொழில்கள் கிராமத் தொழில்கள் பெருமளவில் வளர்த்து பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும் என்கிற மையக் கருத்துடன், மாவட்டத் தொழில் மையம் உருவாக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் 1-7-78 முதல் செயல்பட்டு வருகிறது.

தொழில் தொடங்க தேவைப்படும் பூர்வாங்கத் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கி, தொழில் தொடங்கி நடத்த, நிலம், கட்டடம், இயந்திரம் ஆகியவற்றிற்கு ஆகும் நிதி வசதிக்கான ஏற்பாடுகளுக்கு உதவி, உரிமங்கள் ஒப்புதல் பெற்றுத்தரல், சிறுதொழில் பதிவு, மானியங்கள், வட்டியில்லா விற்பனை வரிக்கடன், வியாபாரச் சந்தைக்கு உதவுதல் போன்றதொழில்முகவர்களுக்குத் தேவையுறும் அனைத்துப் பணிகளுக்கும் உதவுதல் போன்ற செயல் திட்டங்கள் தொழில் மையத்தில் உள்ளன.

தொழில் மையத்தில் பல்வேறு தொழில்களுக்கென 1000-க்கு மேற்பட்ட தொழில் திட்டங்கள் உள்ளன. புதிதாகத் தொழில் தொடங்க வருகிறவர்கள் உணவு, இரசாயனம், பொறியியல்போன்ற தொழில்களில் தங்கள் விருப்பத்திற்கும்தொழில் நுட்பத் தகுதிக்கும், அனுபவத்திற்கும் ஏற்றவாறு தொழில்களைத் தேர்வு செய்து தொழில் நுட்ப ஆலோசனை பெறலாம். 15,681 பார்வையாளர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன.


மு. இராசகோபாலன்
பொது மேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்,
திருநெல்வேலி.




புதிதாகத் தொழில் முகவர்களைக் கண்டறிய, தொழில் ஊக்குவிப்பு முகாம்களை இம்மையம் நடத்துகிறது. மாவட்டத்தில் உள்ள 31 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் 93 ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தி 5632 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

**சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்**

தொழில் முகவர்கள் தொழில் திட்டம் தேர்வு செய்த பின்னர், செயல்திட்டத்தில் முதல் கட்டமாகத் தற்காலிகச் சிறுதொழில் பதிவுசெய்த சான்றிதழ் வழங்கப் படுகிறது. இது ஓர் ஆண்டுக் காலத்திற்குச் செல்லுபடியாகும். தேவையினைப் பொறுத்து ஓராண்டிற்கு மேலும் புதுப்பிக்கப்படுகிறது. இவ்விரண்டாண்டுக் காலகட்டத்தில் தொழில் தொடங்கி உற்பத்தி ஆரம்பித்த பின்னர் தொழில் மையம் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்குகிறது. தற்காலிகச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் பெற்றதிலிருந்து உற்பத்தி தொடங்கி நிரந்தரச் சான்றிதழ் பெறும் காலம் வரையிலும் தொழில் முகவர்களின் பல்வேறு செயல் திட்டங்களுக்குத் தொழில் மையம் வழி நடத்துனராக, ஆலோசகராக இருந்து பணியாற்றுகிறது.

30-11-85 முடிய தொழில் முனைவோருக்கு 11087 தற்காலிகச் சான்றிதழ்களும், 2757 நிரந்தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன் வழி 23701 பேர்களுக்கு வேலை வாய்ப்புப் பயன் கிட்டியுள்ளது.






4758 கைவினைத் தொழில்கள் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**உரிமங்கள் பெறுதல்**

தொழில்கள் தொடங்கி நடத்த பொதுச்சுகாதாரத்துறை தொழில்சாலைகளின் ஆய்வாளர் துறை, நகர் மற்றும் ஊர்அமைப்புத் துறை, ஊராட்சி ஒன்றியத்தின் உரிமமோ அல்லது நகராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டால், நகராட்சி ஒன்றியத்தின் உரிமமோ பெறப்படல் வேண்டும். இவ்வகை உரிமங்கள் பெற தொழில் மையம் தக்கவாறு உதவுகிறது. மின்சார இணைப்பு விரைவில் கிடைப்பதற்கும் உதவுகிறது. 405 உரிமங்கள் மற்றும் மின் இணைப்புகளுக்கும் உதவப்பட்டுள்ளது.

நிதி வசதி: தொழில் மையம் விதைப்பணக்கடன் வழங்குகிறது. இதுகாறும் 265 தொழில்களுக்கு ரூ. 29.42 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொழில்களுக்குத் தேவையான நிதிவசதியில் நிலம், கட்டடம், இயந்திரம் பெறத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை அணுகப் பரிந்துரை செய்யப்படுகிறது. இயந்திரம் மட்டும் தவணை முறைத் திட்டத்தில் பெற தேசிய சிறு தொழில் கழகம் உதவுகிறது. நடைமுறைமூலதனத்திற்கு வங்கிகளை அணுகலாம். அதற்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

தொழில் மையத்தில் நிதிவசதிப் பணிகளுக்கென மேலாளர் ஒருவர் பணியாற்றுகிறார். இது வரை 3173 நபர்களுக்கு ரூபாய் 367.81 இலட்சம் நிதி வசதி பெற்றுத் தரப்பட்டுள்ளது. தவணை முறைத் திட்டத்தில் இயந்திரம் பெற 66 தொழில் நிலையங்களுக்கு 38.67 இலட்சம் உதவப்பட்டுள்ளது.

7 தொழிற்கூடங்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

1-1-80-க்குப் பின்னர் உற்பத்தியைத் தொடங்கிய தொழில் நிலையங்களுக்கு மின்சார மானியம் வழங்கப்படுகிறது. 113 தொழில்களுக்கு மின்சார மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி, ராதாபுரம், விளாத்திகுளம் வட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15 சதவிகிதம் முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது. 50 தொழில்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு ரூ. 8.63 இலட்சம் மானியம் சிட்கோ நிறுவனம்மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

**சுய வேலை வாய்ப்புத் திட்டம்**

இந்தியப் பிரதமர் அவர்களின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டு வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வழிவகைகள் செய்யப் பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் சிறப்பம்சம், எந்தவித ஜாமீனும் இன்றி ரூ.25,000 வரை கடனாக வழங்கப்படுவதும், அதில் 25 சதவிகிதம் மானியமா வழங்கப்படுவதும் ஆகும்.

இத்திட்டத்தில் பயன் பெற ஒருவர் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றிருக்க வேண்டும். வேலையில்லாதவராகவும் 18 வயது முடிவுற்றவராகவும் 35 வயது முடிவுறாதவராகவும் இருக்க வேண்டும், 1983-84ஆம் ஆண்டில் 740 பேர்களுக்கு ரூபாய் 1.10 கோடியும், 1984-85ஆம் ஆண்டில் 917 இளைஞர்களுக்கு ரூ. 1.47 கோடியும் கடனாகத் தொகை பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. 1985, 86ஆம் ஆண்டு 1,000 பேர் பயன்பெறத் திட்டம் உள்ளது. 30-11-85 முடிய 390 பேர்களுக்கு ரூபாய் 78.05 இலட்சம் வங்கிகளுக்குக் கடன் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 85 முடிய 499 பேர்களுக்கு ரூபாய் 1 கோடி வரை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆக, இரண்டு ஆண்டில், படித்த இளைஞர்கள் பல்வேறு புதிய தொழில்களைத் தொடங்கி உள்ளார்கள்.

இளைஞர்களுக்குத் தொழில்களில் ஏற்பட்டுள்ள புதிய ஆர்வம் தொழில் தொடங்குபவர்களுக்கு அரசின் பலவகைச் சலுகைகள், வசதிகள் மற்றும் தொழில் மையத்தின் ஊக்கப் பணிகள் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்து மாவட்டப் பொருளாதார வளம் உற்பத்திபெருகி, வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பது திண்ணம்.

ஆடுதுறை 31 மற்றும் கோ.39 (அமராவதி) ஆகிய இரு ரகங்களையும் கரு ஒட்டு சேர்த்து அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்பட்ட ஏஎஸ் 19789 என்ற வளர்ப்பு. ஏஎஸ்டி 16 என்றபுதிய ரகமாக இவ்வாண்டு (1986) தமிழக உழவர் பெருமக்களுக்கு அரிய பரிசாக வெளியிடப்பட்டுள்ளது.

இப் புதிய இரகத்தின் செடிகள் வளர்ந்து சாயாதவை. (90-95 செ.மீ.) வயது 110-115 நாட்கள். இந்த ரகம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் எக்டேருக்குச் சராசரி 5.6 டன் தானிய விளைச்சலை அளித்துள்ளது. இவ்விளைச்சல் டிகேஎம் 9 இரகத்தை விட 13.9 சதவீதம் அதிகமாகும். மேலும் தமிழகத்திலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள், பல்லட ஆய்வுப் பாத்திகள், அனுசரணை ஆராய்ச்சித் திடல்கள், மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டத்தின் ஆய்வுகள், அனைத்து நாட்டு நெல் விளைச்சல் ஆய்வுப் பாத்திகள் அனைத்திலும் ஆடுதுறை 36, ஐஆர் 50, ஐ.ஆர்.36 ஆகிய ரகங்களை விட 4.6-24.6 சதவிகிதம் வரை அதிக விளைச்சலை அளித்துள்ளது. இதன் அதிக அளவு தானிய விளைச்சல் திறன் எக்டேருக்கு 9.8 டன் ஆகும்.

ஏஎஸ்டி 16 எக்டேருக்குச் சராசரியாக 8 டன் வைக்கோல் தரவல்லது. இந்த விளைச்சல் டிகேஎம்.9, ஆடுதுறை 31, ஆடுதுறை 36, ஐ.ஆர்.50, கோ.37 (வைகை), மற்றும் ஐஇடி.1444 (இராசி) ஆகிய இரகங்களை விட 4.6-60.1 சதவிகிதம் அதிகமாகும்.

இப்புதிய ரகம் எக்டேருக்கு 120 கிலோ வரை தழைச்சத்தை ஏற்கும் திறன் படைத்தது. அரவையின்போது அரிசி காணும் திறன் 71 சதவீதமாகும். ஏஎஸ்டி 16 அரிசியிலுள்ள 10.25 சதவிகிதம் புரதச்சத்து, டிகேஎம்.9 (6.9%) மற்றும் ஆடுதுறை 36 (8.53%) ஆகியவற்றிலுள்ளதைவிட அதிகமாகும். சோறு மற்றும் பலகாரங்கள் செய்ய மிகவும் ஏற்றது.

இந்த ரகத்தில் 35 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நட்ட போதும் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை. தமிழகம் முழுவதும் சொர்ணவாரி/கார்/குறுவை பட்டத்தில் (ஏப்ரல்-ஜூலை மாதங்களில் நாற்றுவிட) டிகேஎம் 9, ஆடுதுறை 31, ஆடுதுறை 36, வைகை, இராசி, ஐ.ஆர்.50 ஆகிய ரகங்களுக்கு மாற்று ரகமாகப் பயிரிட ஏற்றது. மேலும் பிந்திய தாளடி-பிந்திய பிசானத்தில் (நவம்பரில் நாற்றுவிட) மற்றும் நவரை (டிசம்பர் ஜனவரியில் நாற்றுவிட) பருவத்தில் சாகுபடி செய்யவும் உகந்தது.

ஏஎஸ்டி.16 நெல் ரகத்தில் அதிக விளைச்சல் பெறக் கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# புதிய நெல்ரகம் ஏஎஸ்டி 16



**பயிரிட ஏற்ற இடங்கள்**

தமிழகமெங்கும், ஆடுதுறை31, ஆடுதுறை 36, டிகேஎம்.9, வைகை, இராசி, ஐ.ஆர்.59 ரகங்களுக்கு மாற்று ரகமாகப் பயிரிட ஏற்றது.

**பருவம்**

1. சொர்ணவாரி-கார்-குறுவை பட்டம் (ஏப்ரல்-ஜூலை மாதங்களில் நாற்றுவிட)

2. பிந்திய தாளடி-பிந்திய பிசானம் பட்டம் (நவம்பரில் நாற்றுவிட)

3. நவரைப் பட்டம் (டிசம்பர்-ஜனவரியில் நாற்றுவிட)

விதையளவு(ஏக்கருக்கு)24கிலோ.

நாற்றங்கால் பரப்பு: 8 செண்ட் (செண்டுக்கு 3 கிலோ விதை).

நாற்றங்கால் தயாரிப்பு: 8செண்ட் நாற்றங்காலில் 400கிலோ தொழு உரம் இட்டு, பின்பு நீர் பாய்ச்சி நன்கு உழவும் அல்லது 160 கிலோ பசுந்தழை உரத்தை மக்கச் செய்து உழவு செய்த வயலில் கடைசி உழவில் செண்டிற்கு 2 கிலோ டை அம்மோனியம் பாஸ்பேட் உரமிட்டு நன்கு பரம்படித்து நீரைச் சீராக வைக்கவும்.

நாற்றின் வயது 25-35 நாட்கள்.

நடவு இடைவெளி: 15X10செமீ (சதுரமீட்டருக்கு 66 குத்துக்கள்).

நடவு: குத்திற்கு 2-3 நாற்றுக்களை மேலாக (2 செ.மீ.ஆழத்தில் இருக்குமாறு நடவு செய்யவும்),

**நடவு வயலில் உரம் (கிலோ-ஏக்கர்)**

அடியுரமாக ஏக்கருக்குத் தழைச்சத்து 20 கிலோ, மணிச்சத்து 20 கிலோ, மற்றும் சாம்பல் சத்து 20 கிலோ இடவேண்டும்.

மேலுரமாக ஏக்கருக்குத் தழைச்சத்து 20 கிலோவை நட்ட 15ஆம் நாள் 10 கிலோ, 35ஆம் நாள் 10 கிலோவும் இடவேண்டும்.

களை நீக்கம்: நட்ட 5-வது நாளுக்குள் 800முதல் 1000 மில்லி பூட்டோகுளோர் எனும் களைக்கொல்லி மருந்தை 20 கிலோ மணலுடன் நன்கு கலந்து வயலில் 2.5 செ.மீ. ஆழ நீரை நிறுத்தி, சீராக இடவும். களைக் கொல்லி இட்ட பின்பு நீரை வடிக்கக்கூடாது. இரண்டாவது களை தேவைப்பட்டால் எடுக்கலாம்.

நீர் பராமரிப்பு: 2.5 செ.மீ. அளவுக்கு அதிகமில்லாமல் நீர் இருக்க வேண்டும். தூர்கட்டும் பருவம், பால்பிடித்து மணிகள் முற்றும் பருவம் ஆகியவற்றில் மெழுகுப் பத அளவு ஈரம் இருக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: பூச்சி நோய்களைச் சிறப்பாகக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்கவும்.

பருவத்தில் விதைத்தல் ,ஒரு பகுதியில் ஒரே சமயத்தில் விதைத்தல், விதை நேர்த்தி, நாற்றங்காலில் பாதுகாப்பு, நடவு வயலில் பயிருக்கு ஏற்படும் பொருளாதாரச் சேதத்தைக் கருத்தில் கொண்டு தேவையான பொழுது, உகந்த பூச்சி பூசனக் கொல்லி மருந்துகளைச் சிபாரிசுப்படி உரிய அளவில் உபயோகித்தல் போன்றவை இதில் அடங்கும்.

அறுவடை: பயிர் பூத்த25-40 நாட்களில் கதிரின் அடிப்பாகத்தில் உள்ள 4-5 மணிகள் பசுமையாக இருக்கும்போதே அறுவடை செய்யவும்.

சேமிப்பு: கதிர் அடித்தவுடன் நெல்லை உடனே காய வைக்கவும். சேமிப்பதற்கு முன் மீண்டும் இரண்டு காய்ச்சலிட்டு விதையின் ஈரப்பதத்தை 10-12சதத்துக்குள் கொண்டு வரவும்.

தகவல் : வி: வில்பிரட் மானுவல்
சு. வைரவன்
கோ. கணேசன்
தி. சுந்தரம்.
எஸ். பழனிச்சாமி
மா. சுப்பிரமணியன்


[illegible] (calculator) [illegible] 4000 [illegible]

# வேலா சுறா



சென்னைக்கு அருகில் ஆந்திரக் கடற்கரைக்குச் சமீபத்தில்-மிகப் பெரிய சுறா மீன் ஒன்று 16.2.86 அன்று பிடிக்கப்பட்டது.

பூங்காவனம் குப்பம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கண்ணாடி நாரிழைப் படகில் மீன் பிடிக்கச் சென்றபோது இந்தச் சுறா மீன் சிக்கியது. இதனை மிகவும் கஷ்டப்பட்டு கரை சேர்த்தனர்.

ரம்பம் போன்ற மூக்குள்ள இந்தச் சுறா, வேலா வகையைச் சார்ந்தது. இது 17 அடி நீளம் உள்ளது.

இந்த மீனைப் பற்றிய தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| பெயர் | : பிரிஸ்டிஸ் பெரோடேட்டி |
| தமிழ்ப் பெயர் | : வேலா சுறா |
| இனம் | : பெண் |
| மொத்த நீளம் | : 5 மீட்டர் 30 செண்டி மீட்டர் |
| ரம்பம் போன்ற மூக்கின் நீளம் | : 1 மீட்டர் 30 செண்டி மீட்டர் |
| எடை | : சுமார் 1 டன் |



## ஒருங்கிணைந்த பழங்குடியினர்க்கு குறைந்த விலையில் கோதுமை, அரிசி விநியோகம்!

மைய அரசு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் அமலில் உள்ள பகுதிகளில், கோதுமை கிலோ ரூ.1.50, அரிசி கிலோ ரூ. 1.85 என்ற குறைந்த விலையில் உணவு தானியங்களைக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கும் திட்டத்தை அனுப்பியது. தமிழ்நாடு அரசு அத்திட்டத்தைப் பரிசீலித்து கோதுமை கிலோ ரூ.1.50, அரிசி கிலோ ரூ. 1.40 என்ற விலையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம் அமலில் உள்ள ஒன்பது பகுதிகளில் உள்ள 38,072 குடும்ப அட்டைதாரர்களுக்குச் செயல்படுத்த முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு மலைகள், கொல்லி மலைகள், கல்ராயன் மலைகள், அரநூத்து மலை, பச்சை மலை ஆகிய பகுதிகளிலும் வடார்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலையிலும், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சை மலையிலும் செயல்படுத்தப்படும்.

இத் திட்டத்தில் குடும்ப அட்டைக்கு அதிக பட்சமாக மாதமொன்றுக்கு 30 கிலோ கோதுமை வழங்கப்படும். இதற்கு மேல் கோதுமை தேவைப்படுவோர், பொது விநியோக முறையில் விற்கும் விலையில் வாங்கிக் கொள்ளலாம். மாதமொன்றுக்கு, பெரியவர்களுக்கு 4 கிலோ, சிறுவர்களுக்கு 2 கிலோ விதம், ஒரு குடும்ப அட்டைக்கு 12 கிலோ வரை அரிசி கொடுக்கப்படும்.

---

## நீரிழிவு ஒரு நோயே அல்ல!

நீரிழிவு ஒரு நோயே அல்ல. இரத்தத்திலும் சிறுநீரிலும் அதிக அளவு சர்க்கரை உள்ள ஒரு நிலையே நீரிழிவு. இதைக் கட்டுப்படுத்தாவிட்டால்தான் இது ஒரு நோயாக மாறுகிறது.

இந்தக் கட்டுப்பாட்டிற்கு உணவுப் பழக்கம் மிகவும் முக்கியமானது.

உணவுக்கட்டுப்பாட்டிற்குப் பின்னும் சர்க்கரை நிலை குறையாமல், மாத்திரை, ஊசிகளால்தான் குறையும் என்ற நிலை வந்தால், மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

மாதம் ஒரு முறையாவது மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

உடலின் எந்தப் பகுதியிலாவது சிறிதளவு காயம் ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரிடம் காண்பித்து, சிகிச்சை பெறவேண்டும்.

நாள்தோறும் நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஈரத் துணியுடன் இருக்கக் கூடாது.

இறுக்கமாக ஆடைகள் அணிவது தவறு.

காலணிகள் இல்லாமல் நடக்கக்கூடாது.

வயதிற்கும் சக்திக்கும் ஏற்ப உடற்பயிற்சி செய்யவேண்டும்.

முடிந்தவரை மனதை அமைதியுடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரவில் வெகுநேரம் கண் விழித்திருக்கக் கூடாது.

உடலின் எடை அதிகமாவதோ அல்லது குறைவதோ நல்லதல்ல.

திடீரென வியர்த்தாலோ அல்லது மயக்கமாக, பலவீனமாகத் தோன்றினாலோ உடனே மருத்துவரிடம் செல்லவேண்டும்.

நோய் உள்ளவரின் குழந்தைகளும், நெருங்கிய உறவினர்களும் சர்க்கரை நிலையைப் பரிசோதித்துக் கொள்ளுதல் நல்லது.

அரிசியை ஒதுக்கி கோதுமை சாப்பிடுவதால் மட்டும் பயனில்லை, உணவின் அளவுதான் முக்கியம்.

சர்க்கரையை எந்த விதத்தில் இருந்தாலும் ஒதுக்கிவிடுங்கள்.

எந்த நேரத்திலும் பசியுடன் இருக்கக் கூடாது.

சீரான உணவு முறையாலும் சாதாரண உடற்பயிற்சியாலும் சர்க்கரை நிலையைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்.

—டேனிடா செய்தி மடலிலிருந்து



## உணவு உற்பத்தியில் உத்வேகம்

சி. பி. இராமநாதன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் வேளாண்மைக்கும், வேளாண்மை விரிவாக்கத்திற்கும், உணவு உற்பத்திக்கும் மிகவும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

வேளாண்மை என்று கூறும் போது பழைய சாகுபடி முறைகளை விட்டுவிட்டு, நவீன தீவிரச் சாகுபடி முறைகளைக் கையாளுதலும், அதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுதலுமே நமது குறிக்கோள்களாகும்.

நவீன சாகுபடி முறைகள் என்ற புதிய நோக்கில், வேளாண்மைப் பொறியியல் துறையானது பல்வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

### டிராக்டர்கள் மூலம் நவீன இயந்திர உழவு

விவசாயத்திற்கு மிகவும் முக்கியம் நல்ல தரமான, வளமான நிலம். மண்ணின் வளமும் அதிலும் நன்கு பண்படுத்தப்பட்ட மணலும் மிகவும் தேவை. அப்போதுதான் விதைக்கப்பட்ட விதை நன்கு முளைத்து, வேர் விட்டு வளர்ந்து, பூத்து, காய்த்து பலன் தரும். பெய்யக்கூடிய சிறிதளவு மழையையும், மானாவாரி நிலங்களில் மண்ணுக்குள் இழுத்து பயிருக்குக் கிடைக்குமாறு செய்யும்.

''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'' என வள்ளுவர் கூறியுள்ளார். அதன்படி இந்த உலகமே ஏரின் இயக்கத்தைப் பொறுத்தே உள்ளது. பழைய முறைப்படி நாட்டுக் கலப்பை மூலம் உழவு செய்யும்போது சரியான ஆழமும், மண்ணை நன்கு கிளறி புரட்டி விடுதலும், விரைந்து உணவு செய்தலும் இயலாமல் போய்விடுகிறது. தற்போதைய முறையில் முன்னேற்றம் செய்து கண்டுபிடிக்கப்பட்ட டிராக்டர், புல்டோசர் போன்ற பல நவீனக் கருவிகள் உள்ளன.

உழுவதற்கும், விதைப்பதற்கும், உரமிடுவதற்கும், களை எடுப்பதற்கும் மற்றும் அறுவடை செய்வதற்கும் என மண்ணுக்கும், பயிருக்கும் ஏற்றவாறு பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விலை கொடுத்து வாங்க இயலாத விவசாயிகள் வாடகைக்காவது இவற்றைப் பெறுவதற்கு வாய்ப்புகள் நிறையப் பெருகி உள்ளன.

தவிரவும், மானாவாரி நிலங்களாக இருந்தால் சாதாரணமாக விதைப்பதற்கு முன்னர் கோடையில் ஒரு உழவு செய்தல் மிகவும் நல்லது. இந்தக் கோடை உழவினால் மண் நன்கு பண்படுத்தப்படுகிறது. காற்றோட்டம் ஏற்படுத்தப்படுகிறது. கோடையில் பெய்யும் மழை நீர் வீணாகாமல் வயலில் நிறுத்தப்படுகிறது. அடுத்து வரும் விதைக்கும் பட்டத்தில் உழவு செய்யும்போது மண் நன்கு பக்குவப்பட்ட நிலையில் இருப்பதால், விதைக்கும் விதைகள் நன்கு முளைக்கின்றன. எனவே இந்தக் கோடை உழவிற்கு டிராக்டர்கள் மூலம் கல்டிவேட்டர் இணைத்து உழவு செய்தல் மிக்க பயன் தருகிறது.

சாதாரணமாக ஒரு ஏக்கர் உழவு செய்ய ஒரு மணிநேரம் மட்டுமே ஆகும். பழைய முறையில் நாட்டுக் கலப்பையினால்

இவ்வளவு பரப்பு உழவு செய்ய முடியாதது மட்டுமல்ல, மண்ணும், நன்கு ஆழமாகவும், புரட்டியும் உழவு செய்ய இயலாது. தமிழக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பொறுப்பில் ஏராளமான டிராக்டர்கள், கல்டிவேட்டர் உழவிற்குத் தயாராக இருக்கின்றன. மிகக்குறைந்த வாடகையாக மணிக்கு ரூ. 45 மட்டுமே பெற்றுக் கொண்டு வேறெந்தச் செலவும் இன்றி உழவு செய்து தர வசதியுள்ளது.

சென்ற 1984-85-ஆம் ஆண்டில் இம்மாதிரி கோடை உழவும் மற்றும் பிற பருவ கால உழவும் செய்தவகையில் ஏராளமான விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 1984-85-க்கான இலக்காக 3200 மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டதில் 3540 மணி நேரம் சாதனை எய்தப்பட்டுள்ளது.



கரடுமுரடான காடுகளையும், மேட்டுப் பாங்கான பகுதிகளையும், சரிவான நிலங்களையும், திருத்தி, சமன் செய்து, சாகுபடிக்கு ஏற்றவகையில் அமைத்துத் தர புல்டோசர்கள் என்ற பெரிய நவீன இயந்திரங்கள் தற்போது தமிழகத்தில் நிறைய புழக்கத்தில் உள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை இந்த புல்டோசர்களை மிகவும் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்குகிறது. எல்லாச் செலவுகளும், டீசல் செலவும் உட்பட மணிக்கு ரூ.125 மட்டுமே வசூல் செய்யப்படுகிறது. இதனால் வெகுஆண்டுகளாகத் . தரிசாய்ப் போட்டிருந்த காடுகள் கழனிகளாகிப் பயிர் விளைவித்துப் பயன் பெற்று வருவதைக் கண்கூடாகக் காணலாம். அருகிலேயே ஒருகிணறும் இருந்து விட்டால் நன்செய் நிலமாகவே மாற்றிவிடலாம்.

புதுக்கோட்டை வேளாண்மைப் பொறியியல் துறையின் விரைவுத் திட்ட அலுவலகத்தில் ஆறு புல்டோசர்கள் இப்பணிக்கென்றே இருக்கின்றன. 1984-85ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 9100 மணி நேரத்தையும் மிஞ்சி 10,074 மணி நேரங்கள் புல்டோசர்கள் இயங்கி 20 அம்சத் திட்டத்தில் ஒரு சாதனை எய்தப்பட்டுள்ளது.

### சிறு பாசனத் திட்டங்கள்

இந்த வகையில் புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தலும், ஏற்கெனவே உள்ள கிணறுகளில், குழாய்க்கிணறுகள் அமைத்தலும் பாறைக் கிணறுகளை வெடி வைத்து ஆழப்படுத்தலும் அடங்கும்.

தோட்டக் கலை நிலங்களுக்கு மிகவும் இன்றியமையாதது கிணற்று நீர்ப்பாசனம், புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்குப் பகுதியான குளத்தூர் தாலுகாவில் பாறைக் கிணறுகளும், கிழக்குப் பகுதியில் வெட்டப்பட்ட மண் கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவை அதிகமாக உள்ளன. பருவ கால மாறுபாட்டின் காரணமாகவும், இங்கு மழை சரிவரக் கிடைக்காத காரணத்தாலும், நில நீர் மட்டம் தாழ்ந்து கிணறுகள் வற்றிவிடும் நிலையில், வேளாண்மைப் பொறியியல் துறை சிறு பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள கீழ்க்கண்ட நவீனக் கருவிகள் விவசாயிகளுக்குக் கைகொடுக்கிறது.

இதனால் புதிய குழாய்க்கிணறுகள் குறைந்த ஆழத்தில் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள மண் கிணறுகளில் அடியில் துளையிட்டு குழாய்க் கிணறு அமைக்கவும் முடியும். இதனால் நீர் வசதி ஏற்பட்டு சாகுபடி செய்யவும், வறட்சியை ஓட்டி, பயிரைக் காக்கவும் முடியும்.

### விரைத் துளைக் கருவிகள்

இது ஒரு இயந்திரத் துளைக் கருவியாகும். இதன் மூலம் 1000 அடியும் அதற்கு மேலும் நிலத்தில் துளையிட்டுக் குழாய்க் கிணறுகள் அமைக்கலாம்.

### பாறை வெடிக்கும் கருவி

ஒரு அதிக அழுத்தம் கொண்ட காற்றழுத்தக் கருவியுடன் இணைந்து இயங்கும் இக்கருவியினால், பாறையான கிணற்றில் துளையிட்டு, வெடிவைத்து தகர்த்தி கிணற்றை ஆழப்படுத்தலாம். இதனால் கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்து கிடைக்கிறது. வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட பாறைத் தூள்களை அப்புறப்படுத்த கிரேன் என்ற மோட்டாரில் இயங்கும் கருவியும் வாடகைக்குக் கிடைக்கிறது. இதன் மூலம் பாறைகளை எளிதில் விரைவில் அப்புறப்படுத்தலாம்.

### ஹாமர் டிரில்

பாறைக் கிணறுகளில் அடியில் துளையிட்டால் நீர் ஊற்று உடைக்கப்பட்டு கிணற்றுக்கு நீர் நிறையும் என்று வாய்ப்பு இருக்கும் இடங்களில், இக்கருவியினால் துளையிடலாம். இது ஒரு நவீனக் கருவியாகும். இதனால் மிக விரைவில் துளையிட்டுக் கிணற்றில் நீர் வசதியைப் பெருக்கலாம்.

மேற்கண்ட எல்லாக் கருவிகளும் விவசாயிகளுக்கு மட்டும் மிகவும் குறைக்கப்பட்ட வாடகையில் தரப்படுகின்றன. விவசாயமில்லாக் காரணங்களுக்குத் தரப்படுமேயானால், வாடகை அதிகமாகும். இந்த வாடகை விவரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அருகில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரப் பிரிவு அலுவலகங்களில் எந்நேரமும் தெரிந்து கொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 19்4-85ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சிறு பாசனத் திட்டச் சாதனைகள்:

புதிய குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு 160. இதில் 163 அமைக்கப்பட்டுள்ளது. கிணறுகளினால் குழாய்க் கிணறு அமைக்க இலக்கு 300. இதில் 301 அமைக்கப்பட்டுள்ளது. கிணறுகளை ஆழப்படுத்த இலக்கு 70. இதில் 70 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் விரைவுத் திட்டத்தின் மூலம் விவசாயப் பெருக்கத்திற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உதவி செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இதே பணியினைத் தொடர்ந்து செய்து உணவு உற்பத்தியில் தன்னை ஈடுபடுத்திவருகிறது.



# தமிழ்நாட்டில் குடும்பநலம்

குடும்பநலத் திட்டம் 1956ல் மத்திய அரசால் துவக்கப்பட்டது. அப்போதிருந்தே தமிழ்நாடு அரசு அதைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாடு இப்பணியில் முன்னணியில் இருக்கிறது; திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது. எனவே மத்திய அரசும் மற்ற மாநிலங்களும் தமிழ்நாடு அரசைப் பெரிதும் பாராட்டுகின்றன.

**அறுவைச் சிகிச்சையில் 1984-85ல் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. இவ்வரிய சாதனைக்காக முதல் பரிசு ரூ. 2.5 கோடி தமிழகத்திற்கு மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.**

**1984-85ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு தந்த குறியீடு 4,75,000 அறுவைச் சிகிச்சைகள். 5,25.341 அறுவைச் சிகிச்சைகள் செய்து குறியீட்டையும் மிஞ்சி 110.6 சதவிகித வெற்றியைப் பெற்றுவிட்டது.**

தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் ,மக்கள் தாமாக ஏற்றுக் கொள்கிற திட்டமாக அமைந்து நிறைவேறி வருகிறது. எல்லா அரசியல் கட்சிகளும், எல்லாச் சமயத்தாரும்,. சமுதாயப் பணி அமைப்புகளும், மகளிர் அமைப்புகளும், அரசு ஊழியர்களும் குடும்பநலத் திட்டம் நிறைவேற ஒத்துழைக்கிறார்கள். பொது மக்களும் சிறுகுடும்ப நெறியை ஏற்றுக்கொண்டு இத்திட்ட நிறைவேற்றத்திற்கு உதவுகிறார்கள். எனவேதான் தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது.

### குடும்பநலத் திட்டப் பணிகள்

குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்ற ஐந்து வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் தொடர்பு, விளக்கப் பணிகளை விரிவுபடுத்துதல், மருத்துவ உதவிகள், பின்கவனிப்பு, தாய் - சேய் நலம் பேணல் ஆகிய ஐந்து வகைப் பணிகளை மேற்கொண்டு குடும்பநலத் திட்டத்தை அரசு நிறைவேற்றி வருகிறது.

எந்தத் திட்டமும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். எந்தக் கொள்கையும் சரியாகப் பரப்பப்பட வேண்டும். அந்த வகையில் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய பிரச்சாரத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குடும்ப நல மக்கள்



கல்வி மற்றும் தகவல் அலுவலர்கள் மேற்கொள்கிறார்கள். மேடைப் பேச்சு, திரைப்படம், நாடகம், வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்தும் திட்டப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

'ஒரு குடும்பம் ஒரு வாரிசு' என்ற நெறியை, நிலத்தைப் பங்கு போட்டு குறுக்கிக்கொள்வதைத் தடுக்க விரும்பும் விவசாயப் பெருமக்களே கூட ஏற்றுக் கொள்கிறார்கள். ஓய்வு பெறுவதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே குழந்தை பெறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மாத ஊதியம் பெறும் ஊழியர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

33 வயதுக்குப் பிறகு குழந்தை பெறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்து அரசு ஊழியர்களுக்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

**குடும்பநலக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப் படங்களுக்கு மூன்று பரிசுகளைத் தமிழக அரசு ஆண்டுதோறும்** வழங்குகிறது . முதல் பரிசு ஒரு இலட்சம் ரூபாய், இரண்டாவது பரிசு ரூ.50 ஆயிரம்; மூன்றாவது பரிசு ரூ. 25 ஆயிரம் ஆகும். அவ்வாறே நாடகங்களுக்கு இரண்டு பரிசுகளை வழங்குகிறது. முதல் பரிசு ரூ. 15 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ. 10 ஆயிரம் ஆகும்.

மேடைப் பிரச்சாரங்களைத் தொடர்ந்து, மேலும் பணி விரிவாக்கப்பட்டு, மக்களின் இல்லங்களுக்கும் இந்தக் கருத்துக்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. குடும்பநல அலுவலர்கள், இல்லங்களுக்குச் சென்று தகுதியுள்ள தம்பதியரோடு தொடர்பு கொண்டு உதவுகின்றனர். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தகுதியுள்ள தம்பதியர் பற்றிய பதிவேடு உள்ளது. இந்தப் பதிவுப் புத்தகம் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு, புதிய தம்பதிகளின் பெயர்களும் பதிவு செய்யப்படுகின்றன. இத் தம்பதியரோடு தொடர்பு கொண்டு குடும்ப நலத் திட்டத்தினால் வரும் பயன், அதற்குரிய அரசின் ஊக்கத்தொகை, அரசு ஏற்படுத்தியுள்ள வசதிகள், கருத்தடை முறைகள் ஆகியவற்றைப் பற்றி குடும்ப நல ஊழியர்கள் எடுத்துரைத்து, தேவையான உதவிகளையும் செய்து வருகின்றனர்.

### பணி வசதிகள்

சிறுகுடும்ப நெறியை ஏற்றுக் கொள்கிற தம்பதியருக்கு அவர்கள் விரும்புகிற முறையைக்கடைப் பிடிக்கத் தக்க வசதிகள் செய்யப் பட்டுள்ளன. அறுவைச் சிகிச்சைக்குரிய வசதிகள் எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ளன. மேலும், மாநகராட்சி நகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்களின் மருத்துவமனைகளிலும், அரசு உதவி பெறும் தன்னியக்க நிறுவனங்களிலும் அறுவைச் சிகிச்சை வசதிகள் உள்ளன.

தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள 383 குடும்பநல மையங்கள் உள்ளன. நகர்ப் பகுதிகளில் 245 குடும்ப நல மையங்கள் உள்ளன. அறுவைச் சிகிச்சைக்குப் பின் சிகிச்சைபெறுவோரைக் கவனிக்க, பேறுகால



வடபழனியில் உள்ள மாநகராட்சி மருத்துவ மனையின் பேறுகால பின்பணி மையத்தில், அறுவைச் சிகிச்சை பெற்ற தாய்மார்கள் டி. வி, வீடியோ கண்டு களித்தல்.

பின்பணி மையங்கள் 56 உள்ளன. அறுவைச்சிகிச்சைசெய்து கொள்ளும் தாய்மார்கள் 3 நாட்கள் மருத்துவ மனையில் தங்க வேண்டியதிருக்கும். அவர்களுக்காக உள்ள பின் கவனிப்பு மையங்களில் நல்ல வசதிகள் செய்யப்பட்டு, பொழுது போக்க தொலைக்காட்சி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அறுவைச் சிகிச்சை பெற்றோரையும், பிற கருத்தடை முறைகளைப் பின்பற்றுவோரையும் நேரில் தொடர்புகொண்டு மேலும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை அலுவலர்கள் செய்து தருகின்றனர். அதனால் குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நிறைவு பெறுகிறார்கள். மற்றவர்களுக்கும் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

### தாய்-சேய் நலம் பேணல்

சிறு குடும்ப நெறியை ஏற்றுக் கொள்ளவேண்டுமானால் பிறக்கிற குழந்தைகள் நலமாக உயிர் வாழ நாம் உறுதியளித்து நம்பிக்கையூட்ட வேண்டும். பிறந்த குழந்தையைக் காத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பிறந்தால்தான் சிறுகுடும்ப நெறியை ஏற்க மக்கள் முன் வருவார்கள். எனவே குழந்தை நலக் காப்பு குடும்ப நலத் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாக அரசால் மிகுந்த அக்கறையுடன் கவனிக்கப்பட்டு வருகிறது. அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்பச் சுகாதார மையங்களிலும் தாய் சேய் நலங்காக்க எல்லா வசதிகளும் உள்ளன.

இத்தகைய திட்டங்களால் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. குடும்ப நலத் திட்டத்தை விரைவுபடுத்தத் தமிழக அரசு ஊக்க ஊதியத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. முன்னர் அறுவைச்சிகிச்சைக்காக ஆட்களை அழைத்து வருவோருக்கு, ஒரு தந்தையை அழைத்துவந்தால் ரூ.10, ஒரு தாயை அழைத்து வந்தால் ரூ.12 என்று ஊக்க ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்தத் தொகை ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது அரசு ஊழியர் மட்டுமல்ல, வேறு யார் அழைத்து வந்தாலும், அழைத்து வருவோருக்கு ரூ.50 வழங்கப்படும்.

மாண்புமிகு இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் அடங்கிய குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தனிச் செல்வாக்கும் ஈடுபாடும் பெரிதும் உதவுகிறது. தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே, தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., ஆகியோரின் ஆர்வமும் இத்திட்டத்தின் வெற்றியை ஊக்குவித்து வருகிறது.

### பிறப்பு விகிதம்

| | ஆயிரத்துக்கு தமிழ் நாட்டில் | இந்தியா வில். |
|---|---|---|
| 1977 | 29.3·/. | 33.00·/. |
| 1981 | 26.1·/. | 33.9·/. |

கி.பி.2000ல் பிறப்பு விகிதத்தை 1000க்கு 21 ஆகக்குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்

| | தமிழ் நாட்டில் | இந்தியா வில் |
|---|---|---|
| 1961-71 | 22.3·/· | 24.8·/. |
| 1971-81 | 17.5·/. | 25·/. |

(1978 கணக்கீடு)

| | | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | சிசு மரணம் விகிதம் |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு | ... | 28.1·/. | 10.9·/. | 81.2./. |
| இந்தியா | ... | 35.2·/. | 12.5·/. | 127·/. |

— தகவல் : குடும்பநலத் துறை



# கண்ணான கல்யாணம்!

தமிழக விழியிழந்தோர் சங்கம்
ஒளி உண்டு பயம் இல்லை

மங்கல இசை காற்றிலே மிதந்து வருகிறது; அதைத் தொடர்ந்து பாண்டு இசையும் கேட்கிறது. இசை வரும் திசை நோக்கிச் செல்கிறோம்.

மணப்பந்தல். திரளான கூட்டம். மணமக்களைப் பார்க்கிறோம். ஒரு ஜோடி அல்ல, ஆறு ஜோடிகள். புத்தாடை அணிந்து பூரிப்புடன் காட்சி அளிக்கின்றனர். ஆனால்.. ஆனால்..அவர்களெல்லாம் பார்வையற்றவர்கள்!

மார்ச் திங்கள் 9ஆம் நாள் சென்னைத் தண்டையார்ப்பேட்டையில் பார்வையற்றோர் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு நம்மோடு ஏராளமான பார்வையற்றவர்களும் வருகை தந்திருந்தார்கள். இந்தத் திருமணத்துக்கு அரிமா சங்கமும், தமிழ்நாடு விழியிழந்தோர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

மணக்கோலம் பூணும் மணமக்கள்:

1. வீராசாமி-கண்ணம்மாள்
2. துரைசாமி-மாரியம்மாள்
3. ராஜாங்கம்-சுசீலா
4. லூயிஸ்ராஸ்-அமலோர்பவ-மேரி
5. கீதா-மருதன்
6. கணேசன்-மனோன்மணி

மணமேடைக்கு ஒவ்வொரு ஜோடியாக வருகிறார்கள். அரிமா சங்க கவர்னர் திரு வாஞ்சிநாதன் அவர்கள் முன்னிலையில் மணமக்கள் ''இன்பத்திலும் துன்பத்திலும் கணவன் மனைவியாகச் சேர்ந்து வாழுவோம்'' என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாலை எடுத்துத்தர மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டார்கள். சம்பிரதாயப்படி தாலி எடுத்துக் கொடுக்க மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டினார் - அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவினார்.

மணமக்கள் முகத்தில் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளம். இது காண்போர்க்குக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

பிறகு மணமக்களுக்கு எவர்சில்வர் பாத்திரங்களையும், ஊன்றுகோல்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அவர் மணமக்களை வாழ்த்திப் பேசும் போது குறிப்பிட்டார்—

''தமிழ்நாட்டில் ஊனமுற்றவர்கள் 10 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களில் பார்வையற்றவர்கள் 1 இலட்சத்து 92 ஆயிரம் பேர் ஆவர். இவர்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றங்களில் அரசு உதவிகள் செய்து வந்தாலும், இது போன்ற சமூக நலச் சங்கங்களும் உதவ முன்வர வேண்டும்.

''தமிழக அரசு பார்வையற்றவர்களுக்காக 11 பள்ளிகளையும், மானிய உதவியுடன் 9 பள்ளிகளையும் ஆரம்பித்துள்ளது. இவற்றில் 1800 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்''




சமூக நலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.சி.தங்கராஜ், இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''நீங்கள் மன உறுதியுடன் வாழ வேண்டும். வாழ்க்கையைச் சுமையாக ஆக்கிக் கொள்ளாமல், இனிமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

இந்தத் திருமண விழாவோடு விழி இழந்தோர் சங்கத்தின் 6வது மாநில மாநாட்டின் தொடக்க விழா, பார்வையற்றோருக்கான அட்டைப் பெட்டி செய்யும் தொழிற்சாலை தொடக்க விழா, சங்கத்தின் காலாண்டிதழின் வெளியீட்டு விழா ஆகியவையும் நடந்தன.

இந்த விழாவில் திரு.டி.ஆசீர் நல்லதம்பி, திரு லயன்ராதாகிருஷ்ணன், திரு விசுவநாதன், திரு தேவராஜ் மற்றும் பலர் பேசினார்கள்.

பார்வையற்ற மணமக்கள் பல்லாண்டு வாழவும், அவர்கள் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெறவும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவும் வேண்டும் என்று நம்மையறியாமலேயே வாழ்த்துகிறோம். ஆம். மானசீகமாக அவர்களிடம் விடைபெற்று மகிழ்ச்சியுடன் வெளியே வருகிறோம்.

—நமது செய்தியாளர்

# வெண்மைப் புரட்சி

ஆவின் பால் தமிழகமெங்கும் வெண்மைப் புரட்சியை உண்டாக்கி வருகிறது.

நாளுக்கு நாள் தேவையும் பெருகி, உற்பத்தியும் பெருமளவில் உயர்ந்து வருகிறது.

காலப்போக்கில் குஜராத்திலுள்ள 'ஆனந்த்'தையும் விஞ்சுகின்ற அளவுக்குப் பால்வளம் பெருகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் உறுதுணையும் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, பால் வளத்துறை, நுகர்வோர்களை நேரிடையாகச் சந்தித்து, அவர்களது குறைகளை, ஆலோசனைகளை அறிந்துகொள்ளவும், அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்து செயலாற்றி வருகிறது.



18.3.86 அன்று தலைமைச் செயலகத்தில் உள்ள மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறையில், நுகர்வோர் சந்திப்பு நடைபெற்றது. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து 50 நுகர்வோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். தத்தம் பகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துக் கூறினார்கள்.

மாண்புமிகுஅமைச்சர்அவர்கள், பாலின் தரம், கொள்ளளவு, பால் தாமதமாகக் கிடைத்தல், குறித்த நேரத்திற்குள்ளாகவே பால் தீர்ந்து விடுதல், பால் கவர் கசிவு, கலப்படம் போன்ற குறைபாடுகளை உடனே களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

தானியங்கு பால் வழங்கு நிலையங்களில் காணப்படும் குறைபாடுகள், முறைகேடுகளையும், அவை சுகாதாரக்கேடாக விளங்குவதையும் சிலர் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறகு செய்தியாளர்களிடம் கூறியபோது தெரிவித்த கருத்துக்களாவன:

''நாளொன்றுக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் லிட்டர் பால் உபரியாக உள்ளது. எனவே, பால் தட்டுப்பாடோ அல்லது பால் கார்டு வழங்குவதில் குறைபாடோ இருக்காது.

''சென்னையில் மட்டும் நாளொன்றுக்குச் சுமார் ஐந்து லட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் நலனைப் புறக்கணித்துவிட்டு, மொத்தமாக டீக்கடை போன்றவற்றுக்கு விற்பனை செய்வது, தண்ணீர் கலந்த கலப்படப் பால் விற்பது போன்ற குறைபாடுகளைப் போக்குவதற்காக உயர் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களும், திடீர்ச் சோதனைகளும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

''சென்னை மாநகரில் தற்போது 61 தானியங்கிப் பால் வழங்கு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மே மாதத்துக்குள் மேலும் புதிதாக 14 அமைக்கப்பட்டு இந்த எண்ணிக்கை 75 ஆக உயர்த்தப்படும். விரைவில் இது நூறாகவும் உயர்த்தப்படும்.''

மக்கள் குறைபோக்க நடந்த இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையப் பொது மேலாளர் திரு எம்.எச். ஜலால், இ.ஆ.ப., விற்பனை மேலாளர் திரு மீர்கயாம் அலி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு கே. சிவகாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

—நமது செய்தியாளர்



# நூல் நயம்



## ஆற்றல் கவிதைகள்

ஆசிரியர்: ஒன்பதாம் தொகையார் கவிஞர் ஆற்றலரசு.

விற்பனை உரிமை: கவிதா பப்ளிகேஷன், 3-2, கன்னியம்மன் கோவில் தெரு, மேட்டுப் பாளையம், சென்னை. 33.

விலை: ரூ. 30 பக்கம்: 176

மரபுக் கவிதைகள் கொண்ட இந்நூல் படிப்போர் மனத்துக்கு விருந்தளிக்கின்றது. கவிதைகளுக்குரிய சித்திரங்கள் கண்களுக்கு விருந்து படைக்கின்றன.

இந்நூலில் உள்ள 'சின்னஞ் சிறுசுகளுக்குரிய கவிதைகள்' சுவை நல்குகின்றன. பெரியோரும் படித்து இன்புறும் வண்ணம் அமைந்துள்ளன. 'ஒரு சொல் கவிதைகள்' சுவையூட்டுவதுடன் ஆசிரியரின் மொழித் திறமைக்குக் கட்டியம் கூறுகின்றன. தமிழ் மொழியின் மீது அவருக்குள்ள பற்றுதலை, 'நாடும் மொழியும்' என்ற பகுதி உணர்த்துகிறது. 'தத்துவம்' பகுதியிலுள்ள கவிதைகள் பயனுள்ள பல்வகைச் சேதிகளைத் தெரிவிக்கின்றன. இசைப் பாடல்கள் இனிமையையும் பொருள் நயத்தையும் தருகின்றன.

உயிருக்கு மேலாம் தாய்-நாடு
நீ
உயிரைக் காத்திடப் போராடு

— என்னும் கவிதை வரிகள் நாட்டுப்பற்றை எடுத்துரைக்கின்றன.

சாதிதனை ஒழித்திடுவோம்—
நற்
சாந்திதனை வளர்த்திடுவோம்

—என்னும் வரிகள் பேதமற்ற சமுதாயத்தை வலியுறுத்துகின்றன.

நீயில்லா இடமில்லை
வையத்துள்ளே
நீயின்றி உயிரில்லை
மெய்தானில்லை

'காற்றே கடவுள்' என்ற கவிதையில் உள்ள இந்த வரிகள் கவிஞரின் வாதத் திறமையை எடுத்துரைக்கின்றன.

மொத்தத்தில் பழச்சாற்றுக் கலவை போல, பயனுள்ள கருத்துகளை இக் கவிதை நூலில் காண முடிகிறது.

—தமிழ்ப்பித்தன்

## மலைத் தென்றல்

ஆசிரியர் : கவிக்குயில் பொன் ஐயனாரப்பன்

வெளியீடு: தமிழ்மணி புத்தகப் பண்ணை, 281, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலை, சென்னை-600 005.

விலை ரூ.10 பக்கம் 112

அகப்பொருள் குறித்தும் புறப்பொருள் குறித்தும் நெய்யப்பட்ட முப்பதுக்கு மேற்பட்ட மரபுக் கவிதைகள் இந்நூலில் உள்ளன. இவற்றில் சந்தக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

துறவி ஆனான், பஞ்சமே பறந்து போ, சாவே விலகி நில் என்ற தலைப்புகள் கொண்ட கவிதைகள் சுவை நல்குகின்றன. ஒன்றில் இரண்டு கண்டேன் என்னும் கவிதை, உலகில் எந்த ஒரு பொருளுக்கும் இருவகையான குணநலன்கள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறது. துன்ப நாட்கள் என்ற கவிதை, படிப்போரின் இதயத்தை நெகிழச் செய்கிறது.

## சக்தியளிக்கும் சாயிபாபா

ஆசிரியர் : மயிலைத்தொண்டன்

வெளியீடு: தமிழ்மணி பதிப்பகம்
107ஏ பெரியார் பாதை
(மேற்கு) சூளை மேடு,
சென்னை—600 094,

விலை ரூ.8 பக்கம்: 116

சீரடி என்னும் ஊரில் வாழ்ந்த சாயிபாபா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் தெரிவிக்கிறது.

''எல்லாக் கடவுளும் ஒன்றே; அவர்களில் உயர்வு தாழ்வு கிடையாது. தெய்வத்தில் பிரிவில்லை — உயிரில் வேற்றுமை இல்லை'' என்ற தத்துவங்களைப் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக சாயிபாபா எடுத்துக் காட்டியதை இந்நூல் விளக்குகிறது. பாபா — தொண்டர்க்குத் தொண்டராக விளங்கிய நேர்த்தி இந்நூலின் மூலம் தெளிவாகிறது.

இன்றைய விஞ்ஞான உலகத்தவர் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் சில நிகழ்ச்சிகள் இல்லை என்றாலும் அன்பின் அடிப்படையில் அந்நிகழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்பதால் அவை நமது இதயத்தைத் தொடுகின்றன. எளிய, இனிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

## ஓடாதே! துரத்தப்படுவாய்

ஆசிரியர்: பட்டுக்கோட்டை பிரபாகர்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்
17, கங்கை அம்மன் கோயில்
தெரு, வடபழனி,
சென்னை—600 026.

விலை: ரூ.8 பக்கம் 112

பிரசன்னா என்னும் ஆடவனின் பேச்சில் ஏமாந்து போய் தனது பெண்மையை இழந்துவிடும் புவனா, அவனை எப்படியும் சந்தித்து அவனுக்கு மனைவியாகிவிட வேண்டும் என்ற முயற்சியில் இறங்குவதைத் தொடக்கமாக்கி - பல்வேறு நிகழ்ச்சிகளை அடுக்கடுக்காக அமைத்து விறுவிறுப்பான முறையில் இந்த நவீனத்தை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர். இறுதியில் புவனா-பிரசன்னாவால் கொலை செய்யப்படும் நிகழ்ச்சி படிப்போரை ஏமாற்றத்திற்கு ஆளாக்குகிறது. 'உண்மை வெல்லும்' என்ற வாசகம் பொய்யானதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

புவனாவின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொண்டபோதும், அவளை மனமார நேசித்து, அவளது மரணத்திற்காக வருந்தி, 'என் மனைவி போய்விட்டாள்' என்று சொல்லிக் கண்ணீர் விடும் பாலுவின் பாத்திரம் மறக்க முடியாதது.

பெண்கள், வாழ்க்கையில் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது இந்த நவீனம்.

—எஸ்.எஸ்.சுந்தரம்



## சென்ற இதழில்....

அண்மையில் மறைந்த கலாசேத்ரா நிறு வனரும் பரத நாட்டிய மேதையுமான திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர் களின் உருவப் படத்தைச் சென்ற இதழ் அட்டை (16.3.86) அலங்கரித்தது.

# முன்னாள் ஆளுநர் கே.கே.ஷா மறைவு

தமிழ்நாட்டின் முன்னாள் ஆளு நர் திரு கே.கே.ஷா அவர்கள், 14.3.86 அன்று மாரடைப்பால் மரணம் எய்தினார்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த கொலபா மாவட்டத்தில் 1908ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் நாளன்று பிறந்த கே.கே. ஷா, வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்.

1967ஆம் ஆண்டு மைய அர சின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராகவும், 1969ஆம் ஆண்டு நல்வாழ்வுத்துறை அமைச் சராகவும் பொறுப்பேற்றிருந்த அவர் 1971ல் தமிழக ஆளுநராகப் பதவி ஏற்றார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

''கே. கே. ஷாவின் மரணத் தால் எனது நெருங்கிய நண்பரை இழந்து விட்டேன். அவர் ஒரு சிறந்த நிர்வாகி. சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு துறை களில் மிகச் சிறப்பாகப் பணி யாற்றினார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத் தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் கூறியிருப்பதாவது:

''அவர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடு படுத்திக் கொண்டவர். பல்வேறு பொறுப்புகளை ஏற்றுத் திறம் பட நிர்வகித்தவர். மத்திய அர சில் அமைச்சராக இருந்து சிறப் பாகச் செயல்பட்டவர்.

''அவர் தமிழகத்தில் ஆளுநராக இருந்தபோது, பல்வேறு அரசி யல் மாறுதல்கள் ஏற்பட்டன என்பதால் அவருடைய பதவிக் காலம் தமிழக மக்களுக்கு நன்கு நினைவில் இருக்கும்.

''சிறந்த தேசியவாதியாகவும், நிர்வாகியாகவும் திகழ்ந்த அவ ருடைய மறைவு, நமது பொது வாழ்விற்கு ஏற்பட்ட இழப்பு என்பதில் ஐயமில்லை.

''அவரை இழந்து வாடும் அனை வருக்கும் என் சார்பிலும் தமிழக அரசின் சார்பிலும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள் கிறேன்''



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 19.3.86 அன்று,மேதகு முன்னாள் ஆளுநர் திரு கே.கே. ஷா அவர்களின் மறைவுக்கு இரங் கல் தெரிவிக்கும் வகையில் 2 நிமிடம் அஞ்சலி செலுத்திய பின் னர், ஒருமணிநேரம் அவை ஒத்தி வைக்கப்பட்டது. அதேபோல மேலவையிலும் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு, அவை ஒருமணி நேரம் ஒத்தி வைக்கப் பட்டது.

## அறிவுச் சுடர்கள்!

வீரனாக இரு, கோழைத்தனத்தை ஒட்டு. நான் ஒரு இந்தியன் என்பதில் பெருமைகொள். நான் இந்தியன், எல்லா இந்தியர்களும் என் சகோ தரர்கள் என்று உரக்க உரை.

—விவேகானந்தர்

அறிவு உடையவர்கள் வேறொன்றும் இல்லாத வராயினும் எல்லாம் உடையவரே. அறிவில்லாத வர் எல்லாமுடையவராயினும் ஒன்றுமில்லாதவரே.

—திருவள்ளுவர்

நான் அடிமையாக இருக்கமாட்டேன்; ஆகவே நான் எஜமானனாகவும் இருக்கமாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம்.

—ஆபிரகாம்லிங்கன்

அடிமைத் தளைகளைப் பூண்டு இலக்கியக் கல்வி கற்பதைவிட சுதந்திரம் பெற்று எழுத்து வாசனை அறியாதவர்களாகயிருந்து கல்லுடைத்துப் பிழைத்தல் மேல்.

—காந்தியடிகள்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்
16-4-1986 ரூ. 1

# தமிழரசு

7189
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
1986
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
-8



## புதியதோர் உலகு செய்வோம்



+ முதலமைச்சரின் இலவசப் பாட நூல் திட்டத்துக்கிணங்க 1 முதல் 8 ஆம் வகுப்புக்கான இலவசப் பாடநூல் வழங்கல்.
+ அனைத்து மாணவரும் தத்தம் தாய் மொழியில் கல்வி பயில வசதியாக மொழிகளில் பாடநூல்கள்.
+ தமிழில் பயிலும் கல்லூரி மாணவர்க்கு 27 பாடங்களில் 911 பாட நூல்கள்.
+ அனைத்து மாணவர்க்கும் அவரவர் பள்ளி வாயிலாக மலிவு விலையில் குறிப்பேடுகள்.
+ உபரி நிதியினைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டட வசதி.
+ அகில இந்தியாவிலும் பிற எந்த மாநிலப் பாடநூல் நிறுவனத்திலும் இல்லாத சாதனையாகச் சொந்தத்தில் 10 மாடி அலுவலகக் கட்டடம்.

கோடம்பாக்கம் எம். குமார்
மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600 006

# மாண்புமிகு முதல்வர் வழங்கும் தமிழ்ப் புத்தாண்டுச் செய்தி



நான் வணங்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும்
பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான
உடன்பிறப்புக்களே!

உங்களனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளையொட்டி என் இனிய நல்வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் பேசும் மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த உலகத் தமிழ்ச் சங்கத்தை, சித்திரை முதல் நாளன்று மதுரையில் நான் தொடங்கி வைக்கிற மங்கள நிகழ்ச்சியுடன் இந்தத்தமிழ்ப் புத்தாண்டு தொடங்குவது நாம மட்டுமின்றி உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவருமே பெருமிதமடையத்தக்க ஒன்றாகும்.

மொழி, இனம், கலாச்சாரம், நாகரீகம் போன்றவை மக்களை ஒன்று சேர்ப்பதற்கும், சமுதாயத்தை உயர்த்துவதற்கும், மேன்மைப்படுத்துவதற்கும் பயன்பட வேண்டும். இந்த உயரிய குறிக்கோள்தான் தமிழ்ச்சமுதாயத்தின் குறிக்கோளாகும். நமது தமிழ்நாடு உலகிற்குத்தந்தமிகப் பெரிய லட்சிய முழக்கம்தான் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கிற புறநானூற்று வரிகள்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய சித்திரை 3
மலர் : 16 இதழ் : 20
16-4-1986 தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்

ஜுந்த ஜனய லடசயத்தை மனதில் கொள்ளாத காரணத்தால் சிங்கள ஜெயவர்த்தனா அரசு இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களை தொடர்ந்து வாட்டி, வதைத்து, கொன்று குவித்து வருகிறது.

இலங்கை சிங்கள அரசின் தமிழ் இன அழிப்புக் கொடுமை முன்பை விட, தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது என்றாலும் இலங்கையில் ராணுவக் கொடுமைகள் நிற்கவும், தமிழகம் வந்துள்ள அகதிகள் இலங்கைக்குத் திரும்பிடவுமான ஒரு சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை. இந்நிலையில் இலங்கையின் ராணுவ நடவடிக்கைகளில் சில அயல்நாடுகளின் தொடர்பு இருப்பதை இந்திய அரசும் உணர்ந்துள்ளதைக் காண்கிறோம். இந்தக் காரணங்களால் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் புதிய கோணங்கள் தோன்றியுள்ளன. அடுத்து என்ன நட்வடிக்கை எடுப்பது என்பதில் இந்திய அரசுக்கு இருக்கிற பல்வேறு சங்கடங்கள், கட்டுப்பாடுகள், தடைகள் நமக்குத் தெரியும் என்றாலும், இலங்கைத் தமிழர் பிரச்னையின் தீர்வுக்கு மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஏதேனும் உரிய நடவடிக்கையை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று, தவித்துக்கொண்டிருக்கிற தமிழ் நெஞ்சங்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய இந்தப் பிரச்னையை, தீய சக்திகள் தவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய ஆபத்து இருப்பதால் மத்திய அரசு இலங்கைத் தமிழருக்கு கவுரமான வாழ்வு கிடைக்கச் செய்யும் முயற்சிக்கு முன்னுரிமையும், முதலிடமும் தரவேண்டுகிறேன்.

அண்மையில் தமிழகம் முழுவதும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்தது. மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்றுள்ளனர். மோதல்களுக்கும் பூசல்களுக்கும் இடம் தராமல் மக்களுக்குத் தொண்டாற்ற உள்ளாட்சி அமைப்புகள் முன் வர வேண்டும் என்பதை நான் தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்னரே தெரிவித்திருந்தேன். இத்தேர்தல் முடிவுகளுக்கு உள்நோக்கம் கற்பித்து, தொடர்ந்து பேதங்களை அதிகரிப்பது எனக்கு உடன்பாடல்ல. மேலும், குறுகிய அரசியல் கண்ணோட்டங்களைச் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளைப் பயன்படுத்த சில அவசரக்காரர்கள் முயற்சி செய்தால் அவற்றைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு மக்களுக்கு உண்டு என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் கடந்த ஆண்டு மூன்றாம் முறையாக முதல்வர் பொறுப்பை உங்கள் கட்டளைப்படி ஏற்று, அமரர் பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில் இம்மாநில அரசை நடத்தி வருகிறேன். மக்களுடைய அன்பும், பாசமும், அரவணைப்பும் எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்துள்ளன. நான் நல்ல உடல் நலத்துடனும் உற்சாகமான மனதுடனும் திடமான இதயத்துடனும் விளங்குவதை நேரில் கண்ட லட்சோப லட்சம் மக்கள் எப்படி முகமலர்ச்சியுடன் என்னை வாழ்த்தினார்கள் என்பதைக் கடந்த சில மாதங்களாக நான் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சிகளின் வாயிலாக உணர முடிந்தது.

தாழ்த்தப்பட்ட மற்றும் நலிந்த பிரிவினருக்கு மூன்று ஆண்டுகளில் முப்பது லட்சம் வீடுகள் போன்ற நீண்ட கால சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. இருப்பினும் தமிழக மக்கள் நலனுக்காக இந்த அரசு தீட்டும் திட்டங்களை மலிவுபடுத்தி - அதன் வாயிலாக வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவோர் தங்களுடைய பாதையிலிருந்து மாறவில்லை என்பதையும் நான் உணர்கிறேன்.

அமரர் அண்ணா காட்டிய வழியில் நாட்டை நடத்துவது என்கிற குறிக்கோளுக்காக நாம் தொடங்கிய தர்மயுத்தம் இன்னும் முடியவில்லை என்பதைத்தான் சில நிகழ்ச்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

'மக்களுக்கு நியாயமானதொரு வாழ்வை அளிப்பது என்கிற அடிப்படையைச் சுற்றித்தான் எல்லா லட்சியங்களும் இயங்குகின்றன' என்று அமரர் பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டார்கள்.

நமது மாநில மக்களை முன்னேற்றுவது - இந்திய ஒருமைப்பாட்டுக்கு பக்கபலமாக நிற்பது என்கிற புனிதக் குறிக்கோள்களை நோக்கி நமது லட்சியப் பயணம் அமைந்திருக்கிறது. ஆனால் இந்தக் குறிக்கோள்களுக்குக் கூடத் தடைகள் ஏற்படலாம் என்பதை வரலாறு காட்டுகிறது.

ஒரு சில தீய நெஞ்சங்களின் குரோத உணர்வு - எப்படிப்பட்ட விபரீதங்களை நாட்டிற்கு ஏற்படுத்தக் கூடும் என்பதை பஞ்சாபில் நடைபெறும் பயங்கரவாத வன்முறை வெறியாட்டங்களினால் நாடு உணர்ந்திருக்கிறது. நாட்டுக்கு விரோதமான சக்திகள் பிற பகுதிகளில் தலை தூக்காமல் விழிப்புடன் இருக்கவேண்டிய அவசியத்தை பஞ்சாப் நிலவரம் நமக்கெல்லாம் உணர்த்துகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'அல்லவை தேய அறம் பெருகும்'- என்றார் வள்ளுவர்.

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக விளங்கும் சக்திகளை நமது ஒற்றுமையாலும் உழைப்பாலும் முறியடிக்க அனைத்துப் பிரிவினரையும் அழைக்கிறேன். வறுமைக்கும், அறியாமைக்கும், சமூகத் தீமைகளுக்கும், பிளவு மனப்பான்மைகளுக்கும் எதிராக நாம் தொடங்கியுள்ள ஆக்க வழி - அறவழிப் புனிதப் போரின் வெற்றிக்கு நம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உத்வேகம் பெறுவோம்.

அனைவருக்கும் என் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.

(எம். ஜி. இராமச்சந்திரன்)

சென்னை
11-4-86

# முத்திரை பதிக்கும் சித்திரை

## கவிஞர் சுரதா

சித்திரையே! புத்தாண்டின் பிறப்பே! மீண்டும்
திரும்பிவரும் வெய்யிலெனும் விரிப்பே! தீயின்
முத்திரையே! முன்வகுத்த ஒவ்வோ ராண்டின்
முன்னுரையே! உன்னுடைய வருகை யாலே,
தித்திக்கும் திருமணங்கள் நிகழக் கூடும்;
தென்னாட்டின் பனிப்பருவம் இனிமேல் ஓடும்;
அத்—தைமகள் முன்புவந்தாள்! இரண்டு மாதம்
ஆனபின்னர் சித்திரையே நீவந் துள்ளாய்!

மழைத்துளியும், தென்பொதிகைத் தென்றல் காற்றும்,
மற்றவர்கள் அழைப்பையெதிர் பார்ப்ப தில்லை
அழைத்தாலும் சிலர்வருவ தில்லை; நீயோ
அழைப்பின்றி வந்துள்ளாய்! இதனை எண்ணிப்
பழித்தாலும் சிலருன்னைப் பழித்தல் கூடும்!
பாமரர்க்கு வேறென்ன தெரியும்? நன்கு
செழித்திருக்கும் செடிகொடிகள் மலர வேண்டின்
சித்திரையே உன்னுடைய உதவி வேண்டும்!

முதன்முதலில் இளவேனி லாகிப், பின்னர்
முதுவேனில் என்றாகிச் சிறிது காலம்
அதிகாரம் செய்வதற்கு வந்தி ருக்கும்
அருங்கோடைச் சித்திரையே! இந்த நாட்டில்
துதிபாடிப் பிழைப்பவர்கள் அதிகம்! உன்னைத்
துதிபாட என்னுள்ளம் மறுத்த போதும்,
மதுவிலக்கை விரும்பாத வண்டும்; அந்த
மாங்குயிலும் உனைத்துதிக்க மறுப்ப துண்டோ?



# இசைக் கல்லூரியில் இனிய விழா

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா ஏப்ரல் 5ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகிக்க -மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாணவ மாணவியருக்குப் பட்டங்களை வழங்கினார்.

சரியாக காலை 10.40 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிந்தார்கள்.

இசைக் கல்லூரியின் முதல்வரும் இயக்குநருமான டாக்டர் பானுமதி ராமகிருஷ்ணா வரவேற்புரையாற்றுகையில், ''இன்று இந்தக் கல்லூரியில் பட்டம் பெறும் மாணவ, மாணவியர் மிகவும் பேறு பெற்றவர்கள். நாளை நமதே என்று சொல்லி இளைய சமுதாயத்தினருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் நமது முதல்வர் - பொன்மனச்செம்மல்-புரட்சித்தலைவர் அவர்களின் திருக்கரங்களால் மாணவ, மாணவியர் பட்டமும் பதக்கமும் பெறுகிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து கல்லூரி; அறிக்கையை வாசித்த வீணைப் பேராசிரியர் திருமதி ராஜலட்சுமி நாராயணன் தெரிவித்ததாவது:

தற்போது 315 மாணவ, மாணவியர் இங்கு இசை பயில்கின்றனர். 28 இசை மேதைகள் பணியாற்றுகிறார்கள். தற்போது பல்வேறு துறைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் செம்மையாக நடப்பதற்கு புதிய கட்டடம் உருவாக வேண்டும். அத்துடன் கலை அரங்கமும் அமைக்கப்பட வேண்டும்'' என்று தெரிவித்த அவர், ''மாலை நேரக் கல்லூரியில் பணிபுரியும் இசை ஆசிரியர்கள் 300 ரூபாய் சம்பளம் பெறுகின்றனர். சிலர் 400 ரூபாய் பெறுகின்றனர். 300 ரூபாய் சம்பளம்வாங்குவோருக்கு 500 ரூபாயும், 400 ரூபாய் சம்பளம் பெறுபவர்களுக்கு 700 ரூபாயும் ஊதியம் தரவேண்டும்.

''மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியாலும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் ஒத்துழைப்பாலும், இந்த இசைக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாற வேண்டும்''

தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''முந்நூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்தக் கல்லூரியில், இசையிலும் அது தொடர்பான நுண்கலைகளிலும் பயிற்சி பெறுகிறார்கள். மாலை



நேர வகுப்புகளில் 200 பேருக்கு மேல் பயில்கிறார்கள்.

''இந்தக் கல்லூரி வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. மேலும் உயர்கின்ற வாய்ப்பு இதற்கு உள்ளது. இங்கே ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டபடி, எதிர்காலத்தில் இது பல்கலைக் கழகமாக மாறும் என்ற நம்பிக்கை உள்ளது.''

''வளர்ச்சி என்பது சமுதாயத்தில் மாறுதலும் முன்னேற்றமும் ஏற்படுவது. மரபு ரீதியாகவும், பயிற்சி மூலமாகவும் கிடைத்து வருவது வளர்ச்சி அல்ல. ஆராய்ச்சி செய்து அடைவது தான் வளர்ச்சி.அந்த இடத்தைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு நமது இசைக் கல்லூரி விளங்க வேண்டும்.''

''படித்தவர்கள் இக்கலையில் பயிற்சி பெறுவது என்பது நமக்கு நம்பிகை தரும் வகையில் உள்ளது. கலைஞர்கள் இசைக் கலைஞர்களாக மட்டுமல்ல; இசை அறிஞர் பெருமக்களாக மிளிர வேண்டும். அதன் மூலம் நமது கலை உலகப் புகழ் பெற வேண்டும்.''

உரையை முடித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைத்து ஒரு கருத்தைத் தெரிவித்தார். உடனே முதல்வரின் சார்பில் கல்வி அமைச்சர் அதனை அறிவித்தார்:

"மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அறக்கட்டளையை நிறுவுகிறார்கள்.அதிலிருந்து வாய்ப்பாட்டு,வீணை, வயலின், பரதக் கலை ஆகிய 4 பிரிவுகளிலும் மிகச் சிறந்த மாணவருக்கு ரூபாய் ஆயிரம் வழங்கப்படும். 1986-ஆம் கல்வி ஆண்டிலிருந்து இது நடைமுறைக்கு வருகிறது.

''பகுதி நேர ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. ஊதிய உயர்வு தரலாம். இந்த மாதத்திலேயே தரலாம். இதன் மூலம் ரூ. 300 பெறுபவர்களுக்கு ரூ. 500 ஆகவும் ரூ.400 பெறுவோர்க்கு ரூ. 700 ஆகவும் ஊதியத் தொகை உயர்த்தப்படுகிறது.''

இந்த இரு அறிவிப்புகளைக் கேட்டதும், மாணவ மாணவியரும், இசைக் கல்லூரி ஊழியர்களும் கரஒலி எழுப்பி வரவேற்றார்கள்.

அதன் பின்னர், 1985ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற 87 மாணவ, மாணவியர்க்குச் சான்றிதழ்களை வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.



நாட்டிய விசாரதா தேர்வில் முதல் வகுப்புப் பெற்ற செல்வி சின்னம்மை, சங்கீத வித்வான் பட்டத்தேர்தலில் குரலிசையில் முதல் வகுப்புப் பெற்ற செல்வி பிரேமா, வீணை முதன்மைப் பாடத்தில் முதல்வகுப்புப் பெற்ற செல்வி உஷாசுப்ரமணியம், வயலின் முதன்மைப் பாடத்தில் முதல் வகுப்புப் பெற்ற சுதர்சன் ஆகியோருக்கும் கல்லூரியில் சிறந்த மாணவர் தி. வேணுகோபால், சிறந்த மாணவி ஜி.வி. லதா ஆகியோருக்கும் தங்கப் பதக்கங்களை வழங்கினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''இந்த இசைக் கல்லூரி பல வகையிலும் வெற்றி பெற - எல்லா வகையான நலன்களையும் செய்வதற்கு, தமிழகஅரசு காத்திருக்கிறது''.

அடுத்து,

மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

''ஸ்வர சுதாம்ருதங்க தாளமு'' என்ற பாடலை மாணவ மாணவியர் அனைவரும் சேர்ந்து இசைத்தனர்.

அடுத்து ராகமாலிகைப் பாடல் ஒன்றைப் பாடினர்.

அதன் பின்னர் தாராபுரம் சுந்தரராஜன் இசை அமைத்து கவியரசு கண்ணதாசன் அவர்களின் பாடல் ஒன்றைப் பாடினார்.

மாணவ மாணவியரின் இசையை முதல்வர் அவர்கள் மிகவும் ரசித்தார். இடது கை விரல்களால் வலக்கையில் தாளம் போட்டு ரசித்து மகிழ்ந்தார்.

இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் செல்வி தீபாவின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. ''கிருஷ்ணா நீ பேகனே பாரோ'' என்ற பாடலுக்கும் சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா என்ற பாடலுக்கும் அபிநயம் செய்த தீபா அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார். நிகழ்ச்சி முடிந்ததும் அவரை அன்புடன் அருகில் அழைத்து, ஆசி வழங்கினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அடுத்து, இசைக் கல்லூரி மாணவியர் - பாரத மாதாவை வாழ்த்தி வணங்கும் நடனக் காட்சி நடைபெற்றது. ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி எழுச்சியாக இருந்தது. ஒருமைப் பாட்டையும் ஒற்றுமை உணர்வையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

நிகழ்ச்சி முடிவுற்றதும் அதில் பங்குபெற்ற அனைவரையும் அழைத்துப் பாராட்டினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

விழா இறுதியில் வாய்ப்பாட்டு விரிவுரையாளர் திரு பி.கிருஷ்ணமூர்த்தி நன்றி நவிலும்போது, ''சென்ற ஆண்டு இதே பிரார்த்தனைக் கூடத்தில் நாமமர்ந்து, முதல்வர் அவர்கள் நலம்பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்தோம். இந்த ஆண்டு அதே பிரார்த்தனைக் கூடத்திற்கு முதல்வர் அவர்கள் வந்து, பட்டங்களை வழங்கியது நமக்கெல்லாம் பெருத்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது" என்று குறிப்பிட்டார்.

''இசைப் பயிற்சி பெற வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் உள்ள அரசுக்கல்லூரிக்குச்சென்று கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இசைக் கல்லூரிப் பட்டமளிப்பு விழா இதயத்தில் நிறைந்த விழாவாக ஒளி வீசியது.

—நமது செய்தியாளர்.



# தமிழ்ச்சொல்லாய்வு காட்டும் இந்திய இலக்கியப் பண்பாடு

## பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்

இலக்கியம், இலக்கணம் என்ற சொற்களில் வேர்ப் பகுதி இலக்கு என்பது. இலக்கியம் மனிதயின வாழ்வில் இலக்கு நோக்கியது என்பது இச்சொற்களின் பொருளாகும். இதை இந்திய தேசிய இலக்கிய வானில் சென்று காண்போம்.



தமிழ் இனக் காப்பியங்களில் இருவகை உண்டு. ஒன்று இன வகை. மற்றது சமயவகை. இன வகையில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தலைமை வகிக்கின்றன. சமய காப்பியங்கள் இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகியவை.

சிலம்பில் கண்ணகி, மாதவி ஆகியோர் பெண் பண் ஓவியங்கள். கோவலன் ஆண் பண் ஓவியம். பெண் பண் ஓவியங்களில் கண்ணகி கற்புத் தெய்வமாக இலக்கிய வடிவில் திகழ்கிறாள். கவிஞர் கண்ணதாசன், 'கண்ணகி கற்பினும் மாதவி கற்புக் குறைந்தது அன்று சிறந்தது' என்று வாதிட்டார். கண்ணகி வாம்பப் பெரும் தெய்வம் என்று கவிஞர் இளங்கோ அறிமுகப் படுத்துகிறார். இதன் பொருள் புதிய கற்புத் தெய்வம் என்பது ஆகும்.

தமிழர் பழைய கற்புத் தெய்வம் முல்லைத்திணைத்தெய்வமான கண்ணனின் மனைவி நப்பின்னை அல்லது ராதை ஆகும். கற்புக் கடவுள் ஆகிய ராதையைப் பிற்காலக் கதைகள் இழிவுபடுத்தினாலும் குஜராத்திப் பெண் கவிஞர் மீரா அவரையே தனிப்பெரும் தெய்வமாகத் தீட்டிக் காட்டுகிறார். அவரையே தனிப்பெரும் தெய்வமாகக் கொண்டு ராதை சத்சங்கம் என்ற அமைப்பு இன்றும் இயங்கி வருகின்றது. உலகப் பெண் கவிஞர்களுள் ஒரு சேக்ஸ்பியரான மீரா தமிழ்ப் பக்தரின் முத்தமிழ்ப் பண்புடன் பாடியுள்ளார்.



நப்பின்னை கற்பினை அவர் காதலின் முழு நிறைவாகிய தெய்வக் கற்பாக்கிக் காட்டுகிறார். கண்ணகியின் கற்புடன் மாதவியின் கற்பும் இணைத்த முழுப் பண்பே இது. வேதாந்தத்தின் இத்தகைய கற்பையே பக்தியாக நமக்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

## தூய இலக்கியம்



**கா**கிதத்தில் பேனா வைத்து நீங்கள் எழுதத் தொடங்குமுன் பெண் என்பவளை உங்கள் சொந்தத் தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே வறட்சியால் வாடிக்கிடக்கும் வையகத்திற்கு வானிலிருந்து வண்ணமழை பொழிவதுபோல் உங்கள் எழுதுகோலிலிருந்தும் தூய்மையான இலக்கியம் பொழிந்துவிடும்!

—காந்தியடிகள்

வின் முதல் இலக்கியம் சிலம்பே. இராமாயணம்12ஆம் நூற்றாண்டுக் குரியது என்று இன்று கருதப் பட்டாலும், பழம் பாடல் ஒன்று அதனை 10ஆம் நூற்றாண்டுக்கு உரியதாகவே கூறுகிறது. சமஸ் கிருதத்தில் இராமனைக் கடவு ளாகக் கூறும் மற்றொரு வால் மீகியின் ஆத்தியாதமா இராமா யணமும், கண்ணனைக் கடவு ளாகக் காட்டும் பாகவதமும் 10ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட் டவையே என்று சமஸ்கிருத இலக்கிய வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். ஆனால் தமிழில் கண் ணனை, பாகவதத்தைவிடச் சிறப் பாகப் பெரியாழ்வார் என்ற பக்திக் கவிஞர் 9ஆம் நூற்றாண் டிலேயே பாடி இருக்கிறார்.

சிலம்பில் கோவலன் மேற் பார்வைக்கு ஒரு வீரப் பண் ஓவிய மாகக் காணாமல் இருக்கலாம். ஆனால் இது வெறும் தோற்றமே. அவன் காதலிலும் நிறைவுடைய வன், கலையிலும் நிறைவுடைய வன். அவன் வீரப் பண்பை சமய காப்பியங்களின் தலைவனான கண்ணனுடன் ஒப்பிடலாம். உண்மையில் கோவலன் என்ற சொல் கண்ணனின் மற்றொரு பெயராகிய கோபாலன் ஆகும்.

சமஸ்கிருதத்தில் இராமா யணம் இயற்றிய வால்மீகி இராமனின் வீர இலக்குப் பண் ஓவியத்துடன் காப்பியத்தைத் தொடங்குகிறார். மாந்தருள் உத் தமன் யார் என்ற இந்திரன் கேள்விக்கு நாரதர் கூறும் விளக்க மாகவே இராமாயணக் கதையை நமக்குத் தருகிறார்.

தமிழில் இராமாயணம் இயற் றிய கம்பர், சிலம்புக் காவியம் ஆராய்ந்து படித்தவர். கண்ணகி யுடன் மாதவியும் சேர்ந்தாலே முழுத் தெய்வக் கற்பரசி ஆவாள் என்பதை அவர் அறிந்து இருந் தார். எனவே ஒழுக்க நிறைவு காட்டும் இராமாயணம் பண் ஓவியத்தோடு பக்தி நிறைவு காட் டும் கண்ணன் பண் ஓவியமும் சேர்ந்தால்தான் அது வீரத் தெய் வப் பண்பிலக்கு ஆகும் என்று கருதினார். இதனாலேயே அவர் இராமனைப் பாடும்போதெல்லாம் கண்ணனை நினைத்துக்கொண்டு அவனை ஆடவரும் கண்டு மயங் கிப் பெண்மையை விரும்ப வைக் கும் ஆண் அழகனாக, அஞ்சன வண்ணனாக வருணித்துக் காட்டி னார். கண்ணகி வடிவில் கரந்து ஒளிரும் மாதவி அழகையெல்லாம் கண்ணகி வருணனையில் இளங்கோ தீட்டுவது போல, இராமன் வருணனையில் எல்லாம் இந்தக் கண்ணனின் மாய அழகைக் கம்பபிரான் தீட்டத் தவற வில்லை.

இராமனையும், கண்ணனை யும் திருமாலின் இரு தெய்வ வடி வங்களாகக் காட்டும் இந்தியா



"தொல்இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத
செவிஎன்ன செவியே!
திருமால்சீர் கேளாத
செவிஎன்ன சேவியே!

என்று இளங்கோவும்,

தோள் கண்டார் தோளே
கண்டார்
தொடுகழல் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்
தடக்கை கண்டாரும் அஃதே

என்று கம்பரும் தமிழ்ப்பண்பு ஒரு சிறிதும் குன்றாது, கற்பும் காத லும் வீரமும் அழகும் ஒருங்கு பொருந்திய முழு இலக்கு வடி வையே தெய்வப் பண் ஓவியமா கத் தீட்டினர்.

இலக்கியம் என்ற சொல்லுக் குத் தமிழர் தந்த விளக்கம் சமஸ் கிருதமோ, ஆங்கிலமோ வேறு எந்த உலக மொழியோ காட்டாத ஒன்று. இத்தகைய தற்காலப் புது விளக்கக் கருத்தை அடிப் படையாகக் கொண்டே இந்திய இலக்கியம் ஆறாயிரம் ஆண்டு களுக்கு முன் இருந்தே உருவாக் கப்பட்டு இருப்பது வியப்புக்கு உரியது அன்றே?

கம்பரைப் போன்ற தெய்வக் கவிஞர்கூட இராமனைப்போன்ற நல் ஓவியங்களைத் தீட்டுவதில் கண்ட வெற்றியை விட, கும்ப கர்ணன் போன்ற அரைகுறை தீய ஓவியங்களைத் தீட்டுவதில்தான் மிகுவெற்றி கண்டு இருக்கின் றார். மில்டன், சேக்ஸ்பியர் போன்றவர் நிலையும் இதுவே. தற்கால கலைப் பேராசிரியர் கள் காட்டும் இந்தப் பண்பை அன்றே தமிழன் அறிந்து இருந் தான் என்பதை மேற்கூறிய விளக் கங்கள் காட்டுகின்றன. கண்ணகி யும், மாதவியும் ஒரே ஒரு நிறை பண்பின் அரை வடிவங்களாகத் தரப்படுவதன் காரணம் இதுவே!

வாழ்க்கையை விரும்பவும் வேண்டாம். வெறுத்துத் தள்ளவும் வேண்டாம். வாழ்வதை மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும்.

—மில்டன்



## இளம்வேனிற் பெண்ணே வாழி!

கவிஞர். கு. சா. கிருஷ்ணமூர்த்தி



**சி**த்திரைத் திங்க ளென்னும்
தெய்வீக எழில்கு லுங்கும்
புத்தாண்டு பிறந்த தென்றும்
புளகித்துப் போற்றி பத்தன்
முத்திரை தனைப்ப திக்கும்
மோகன முறுவல் காட்டி
இத்தரை மீது வந்தாள்
இளம்வேனிற் பருவ மங்கை!

முதுவேனில் ஆடிக் காற்று
முடிவதன் முன்னே பொன்னிப்
புதுவெள்ளம் பாய்ந்து செய்கள்
பூரித்துப் பயிர் செழிக்க
நதிவெள் ளத்தோடு வானம்
நல்கிடும் கார்கா லத்தை
எதிர்பார்க்கும் உழவன் உள்ளம்
இனித்திட மாரி பெய்யும்!

மாரிக்கா லத்தில் சீறும்
மாபெரும் புயலி னாலே
வாரிதிக் கரை கடந்து
வரம்பிலாக் கொடுமை செய்யும்
யாரிதைத் தடுப்பா ரென்று
அலமலர்க் தரற்றும் போதே
சீறிடும் கூதிர்க் காலம்
சிறுத்தைபோல் நம்மைத் தாக்கும்!

முன்பனிக் காலத் தொல்லை
முழுவதும் நீங்கு முன்பே
பின்பனிக் காலம் வாடைப்
பேய்க்காற் றாய்நமை வதைக்கும்
இன்னல்கள் தீர்ந்து வாழ்வில்
இனிமையைச் சேர்ப்ப தற்கே
கன்னலாய்க், கரும்பாய்த், தேனாய்க்
கன்னிசித் திரைப்பெண் வந்தாள்!

பழுத்திடும் இலைஉ திர்ந்து
பசுந்தளிர் துளிர்த்தே எங்கும்
செழித்திடும் மலர்கள் பூத்துச்
சிரித்திடும்! எழிலைக் காட்டும்!
விழித்திடும் திசைகள் தோறும்
விளங்கும்காய், கனி, கிழங்கு
கொழித்திடும்! வளங்கள் சேர்க்க
கோதைசித் திரையாள் வந்தாள்!

சந்தனப் பொதிகை தன்னில்
சார்ந்துள மூலி கைகள்
விந்தைசேர் தாவ ரங்கள்,
விண்தொடும் தருக்கள் பூக்கும்
கந்தமா மலரில் மேவிக்
கவின்மிகு தென்றல் காற்றாய்
இந்தமா நிலத்தில் வீசும்
இளவேனிற் பெண்ணே வாழி!

முக்கடல் திரைகள் ஆர்த்து
முழங்கிடும் குமரி எல்லைத்
திக்கிலே முழுநி லாவின்
சித்திரைத் திங்கள்கீழ், மேல்
பக்கலில் தோன்றும் கோலம்
பரிதியோ! நிலவோ! என்று
விக்கித்துப் போவார்! அந்த
விந்தைஉன் வரவால் அன்றோ?

புத்தாண்டைத் தோற்று விக்கும்
புனிதை நின்வரவி னாலே
இத்தரை மாந்த ரெல்லாம்
இனிமையும் வளமும் பெற்று
சத்தியம், சமாதா னத்தில்
தளர்விலா ஊக்கம் கொண்டு
நித்தம்நல் வாழ்வு காண
நீயருள் செய்வாய் அம்மா!



பேரார்வம்காண்பித்ததன்காரணமாகவும் பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை அமைக்கும் பணி விரைவுபடுத்தப்பட்டது.

நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்கமுள்ள தொழில்களுக்கு மத்திய அரசு அளித்து வரும் ஊக்கம் இத்தொழிற்சாலை அமைவதற்கு மற்றொரு காரணமாகும்.

சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு பெரிய தொழில் மையமாக உருவாகியுள்ள மணலியில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை அமைக்க அரசு 23 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்தது. தமிழ்நாடு அரசு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, தொழிற்சாலை அமைப்போரின் மூலதனப் பங்குத் தொகையாக ரூ. 80 இலட்சம் வழங்கியது. மத்திய அரசு, தொழிற்சாலை அமைக்க அனுமதியும், தொழிற்சாலையில் பொருத்தப்படுவதற்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கும் உள்நாட்டில் வாங்கப்பட்ட இயந்திரங்களுக்கும் சுங்கவரி விலக்களித்தது.

தொழிற்சாலையில் நிறுவியுள்ள 'கேங் சா' ( Gang Saws ) எனப்படும் பாறை அறுக்கும் இயந்திரங்கள் பெரிய பாறைகளை 2 சென்டிமீட்டர் குறைந்த கனத்தில் அறுக்கும் திறனுள்ளவை. இவை ஒரே நேரத்தில் சுமார் 240 கற்பலகைகளை அறுக்கக் கூடியவை. கட்டடங்களின் முகப்புகளில் பதிக்கக்கூடிய கற்பலகைகளுக்கு பெருகிவரும் உலகச் சந்தையைக் கருதி மேற்கண்ட தொழிற்சாலையில் இவ்வகை 'கேங் சா' பொருத்தப்பட்டுள்ளன. பிளாக் சர்குலர் சா (Block Circular Saw) எனப்படும் மற்றொரு வகை அறுவை இயந்திரம் 10 முதல் 15 சென்டி மீட்டர் கனமுள்ள நினைவுக் கற்களை அறுக்கக் கூடியவை. இவ்வியந்திரம் சுமார் நாற்பது கற்களை நிற்காமல் தொடர்ந்து அறுக்கக்கூடிய திறன் கொண்டதாகும்.

அறுத்து முடித்த பாறைகளைப் பளிங்கு போல் மெருகிடும் இயந்திரங்கள் (Grinding & Polishing Line) நவீனமானவை; உற்பத்தித் திறன் மிக்கவையுமாகும்.

முனைகளை அறுக்கும் இயந்திரங்கள் (Edge Cutting Machine) மூன்று இங்கே உள்ளன. அவை, அறுவைகளை ஒரே நேரத்தில் துல்லியமாக பிசிறில்லாமல் செய்யக் கூடியவை. இந்த இயந்திரங்கள் தேவைக்கு ஏற்ப இடைவெளி விட்டுப் பாறைகளின் முனைகளை அறுக்கவல்லவை. அறுக்கப்பட்ட முனைகளை மெருகிடக்கூடிய இயந்திரங்கள் தாமாக இயங்கக்கூடியவை. கற்பலகை மற்றும் நினைவுக் கற்களின் எல்லா முனைகளையும் பளபளப்பாக மெருகிடும் திறன் மிக்கவை.

மற்றொரு சிறந்த அம்சம் தொழிற்சாலைக் கட்டடங்களாகும். இயந்திரங்களின் இயக்கத்திற்குத் தக்க வகையில் நேர்த்தியாகவும் உறுதியாகவும் கட்டடங்கள் கட்டப் பெற்றுள்ளன. கட்டடத்தின் வளைந்த கூரை அமைப்பு. இயந்திரங்கள் எழுப்பும் இரைச்சலைக் குறைத்து. அவற்றை இயக்குவோருக்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது. உலகப் புகழ்பெற்ற லார்சன் அண்டு டியூப்ரோ நிறுவனத்தைச் சேர்ந்த இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் (ECC) தனது கட்டடத் திறனைக் காட்டி, குறித்த காலத்தில் உறுதியாகவும் அழகாகவும் விளங்கக் கூடிய வகையில் கட்டடங்களைக் கட்டி முடித்துள்ளது. முன்னரே உருவாக்கிப் பொருத்தப்பட்ட கான்கிரீட் கூரை அமைப்புடன் இந்தியாவில் முதல் முறையாக இப்போது தான் கட்டப்பட்டுள்ளது. இவ்வகைக் கட்டட அமைப்பில் செலவு குறைவு. அத்துடன் விரைவாகவும் கட்டுமானப் பணிகளை முடிக்கலாம்.

இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டு 1986 பிப்ரவரியில் மாதிரி ஓட்டம் செய்யப்பட்டது.

தொழிற்சாலையின் மூலதனம் ரூ. 640 இலட்சமாகும். இதில் அரசு ரூ. 80 இலட்சம் அளித்துள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (I.D.B.), இந்திய தொழில் முதலீட்டுக் கழகம் (I.F.C.I.), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (L.I.C.) ஆகிய நிதி நிறுவனங்கள் எல்லா இனங்களையும் ஆய்ந்து பார்த்து ரூ. 325 இலட்சம் கடனுதவியளித்துள்ளன.

இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50,000 சதுர மீட்டர் மெருகிட்ட கற்பலகைகளையும் 10,000 சதுர மீட்டர் மெருகிட்ட நினைவுக் கற்களையும் தயாரிக்கும் திறன் கொண்டது. ஆசியாவில் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. துவக்கத்தில் 50 விழுக்காடு பயன்படுத்தும் திறனுடன் ( Capacity utilisation ) விளங்கும் இத்தொழிற்சாலை முற்றிலும் ஏற்றுமதி நோக்குடையது. முதலாண்டு விற்பனை வருவாய் ரூ. 266 இலட்சம். இது மூன்றாமாண்டில் ரூ. 450 இலட்சத்திற்கு உயரக் கூடும்.

இத்தொழிற்சாலை பொறியியல் வல்லுநர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை உள்ளடக்கி சுமார் 120 பேர்களுக்கு நேரடியாக வேலை



வாய்ப்பளிக்கிறது. மறைமுகமாக சுமார் 500 பேர் இத்தொழிற்சாலையால் வேலை வாய்ப்புப் பெறுவர்.

தமிழ்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை மிக அதிகஅளவில் ஈட்டித் தரும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இந்தத் தொழிற்சாலை பிப்ரவரி 25ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது.

தொடக்க நாளன்று மணலிப் பகுதியே எழுச்சிக் கோலம் கொண்டிருந்தது. பொது மக்கள் உற்சாகமாக அணி திரண்டு வந்து விழாவைக் கண்ணுற்றனர். தங்கள் வீட்டில் நடைபெறும் விழாவாகவே அவர்கள் கருதி ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

வண்ண விளக்குகள் வானத்து நட்சத்திரங்கள் போல் ஆங்காங்கு ஒளி வீசின. விழா நடைபெறும் அரங்கில் ஏராளமான பார்வையாளர்கள் மதியம் 2 மணியிலிருந்தே காணப்பட்டார்கள்.

கங்கை அமரன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி பிற்பகல் மூன்று மணிக்குத் தொடங்கியது. திரைப்பாடல்களையும் பல தனிப் பாடல்களையும் பாடி, ம களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்தனர் இசைக் குழுவினர்.

சரியாக ஆறேகால் மணிக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் மேடைக்கு வருகை புரிந்ததைப் பார்த்ததும், இசைக் குழுவைச் சேர்ந்த தீபன் சக்கரவர்த்தி 'முத்தமிழ்த் திருநாட்டில்உத்தம குணங்கொண்ட சத்தியத் திருநாயகா' என்ற பாடலை முழங்கி முதல்வரை வரவேற்றார். அடுத்து 'இதயக் கனியே வருக! பொன் மனச் செம்மலே வருக' என்ற பாடலை மலேசியா வாசுதேவன் பாடினார். தீபன் சக்கரவர்த்தி, பாடகி ஒருவருடன் இணைந்து 'வாராய்! நீ வாராய்!' என்ற இருகுரலிசைப் பாடலைப் பாடினார். இதைக் கேட்ட மாண்புமிகு முதல்வர் பழைய நினைவுகளில் மூழ்கித் திளைத்தார்.

கிருஷ்ணமூர்த்தி என்னும் பாடகர், முதல்வருக்கு மிகவும் விருப்பமான - கவியரசர் கண்ணதாசன் எழுதிய 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்ற பாடலைப் பாடினார். இந்தப் பாடலை மாண்புமிகு முதல்வர் மிகவும் ரசித்துக் கேட்டார். பாடியவரின் பக்கமே அவரது பார்வை இருந்தது. அவரது வதனத்தில் பூரிப்பு அலைகள் பொங்கித் ததும்பின. அந்தப் பாடலுடன் இசை நிகழ்ச்சி முற்றுப் பெற்றது.

இசை ஒலி முழக்கம் நின்றவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், கனிம நிறுவனத்தின் தலைவரும் மேலாண் இயக்குநருமான டாக்டர் சரவணன் அவர்களை அழைத்துப் பேசினார்.

''எனக்கும் முதல்வருக்கும் இடையே இங்கே ஒரு ரகசியம் நடைபெற்றது. இசைக் குழுவினர் தங்களது கச்சேரியைத் தாங்களே முடித்துக் கொண்டார்களா, இல்லை நீங்கள் தலையிட்டு நிறுத்தி விட்டீர்களா என்று முதல்வர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள்' என்று தெரிவித்து விட்டு, தமது வரவேற்புரையைத் தொடங்கினார் டாக்டர் சரவணன். அப்போது அவர் குறிப்பிட்டார்:



8 அடி உயரமுள்ள கருங்கற் பாறையில் பொறிக்கப்பட்ட முதல்வரின் உருவப் படம்

'இருளடைந்த நாடு என்று எவரோ சொன்னார்; அந்த இருளகற்ற பாரதியார் வந்தார்,' என யாரோ ஒரு கவிஞர் பாரதியைப் போற்றிச் சொன்னார். அது போல கனிம வளத்தில் சூழ்ந்திருந்த இருளை நீக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால் இன்று இந்த இடத்தில் இவ்வளவு பெரிய தொழிற்சாலை உருவாகியுள்ளது. இதற்கு மூல காரணமாக - வித்தாக இருந்தவர்- பொன்மனச் செம்மல் நமது முதல்வர்.

''ரஷ்ய நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர் மக்கள் ஆட்சியை அமைத்த மாவீரர் லெனின் ஆன்றோர்களையும் சான்றோர்களையும் அழைத்து கணிதம், கனிமம் ஆகிய இரு துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்தார்.

''அதேபோல நாடு முன்னேற வேண்டுமானால் கனிமத்துறைக்கு முக்கியம் கொடுத்தே ஆக வேண்டும் என்று எண்ணி கனிம வளத்துக்கு என ஒரு நிறுவனத்தை உருவாக்கினார் நமது முதல்வர்.

''அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம், மேற்கு வங்கம் அங்கெல்லாம் கூட, தமிழ்நாட்டில் அமைந்திருப்பதுபோல நிறுவனம் கிடையாது.

''உலகிலேயே அதிக விலை தரப்படுவது நமது கரும்பாறைக்குத்தான். ஒரு கன அடி 1032 டாலர் விலைக்குப் போகிறது.

''வெளிநாட்டவர் நம்நாட்டிற்கு வந்து காத்திருந்து, கரும்பாறையை வாங்கிச் செல்லும் அளவுக்கு நமக்குப் பெருமையைத் தேடித் தந்தவர் நமது முதல்வர் அவர்கள்தான்.

"இங்கு அமைந்துள்ள தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும். தொடக்க காலத்தில் ஆண்டுக்கு ரூபாய் 17 இலட்சம் நட்டத்தில் இருந்த இந்த நிறுவனம் தற்போது இலாபத்தில் நடைபெறுகிறது.

இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு மைய அரசின் அமைச்சர் பெருமக்களும் தமிழக அமைச்சர்களும் மிகவும் ஒத்தாசை புரிந்தார்கள்.''

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்:

''தமிழ்நாட்டில் பெரிய நிறுவனமாக வளர்ந்து நல்ல அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற தொழிலாக உருவாகியிருக்கிறது கரும் பாறை வாணிபம்.

"தனிப்பட்டவர்கள், பாறைகளை வெட்டி எடுக்கும் தொழி

புதிய ஆண்டு பிறக்கிறது! இது ஆண்டாண்டுக் காலமாக நடக்கக் கூடிய ஒரு சாதாரண நிகழ்வே யாம். ஆயினும் புதிய ஆண்டுப் பிறப்பின் தத்துவத்தை அறியத் தலைப்படுவார்க்கு எண்ணற்ற விளக்கங்கள் தோன்றும். புத்தாண்டுப் பிறப்பு உணர்வார்க்கு ஒளிவிளக்கு. ஆம்! ஆண்டுகள் விரைந்து ஓடுகின்றன. அதுவே இயற்கை! ஆனால் வாழ்க்கையின் பயன் தெரிந்தார் காலத்தை முழுதாகப் பயன்படுத்துவர். வாழ்க்கைக்குக் காலமே முதற் பொருள்! காலம் பொன் போன்றது என்பர். பொன் இழந்தால் திரும்பப் பெறலாம். காலம் இழந்தால் திரும்பப் பெற முடியாது. ஆதலால் காலம் பொன்னினும் உயர்ந்தது. ஏன்? இந்த உலகத்திலுள்ள அனைத்திலும் உயர்ந்தது. காலத்தின் அருமை தெரிந்து உரிய காலத்தே உரிய முயற்சி மேற்கொண்டு வையகம் பயனுற வாழ்தலே வாழ்வு.

காலவெள்ளத்தை நிறுத்திப் பயன் கொள்ள வேண்டும். பல்வேறு பொருள்களை ஈட்டுதல் போலவே, காலத்தையும் ஈட்டுதல் வேண்டும். உலகம் தோன்றிய நாள் தொட்டுத் தன்னிச்சையாக இயங்கிவரும் காலத் தத்துவத்தை ஈட்டுதல் யாங்ஙனம்? ஈட்டுதல் இயலாது என்பர். ஆனால் காலமும் ஈட்டக்கூடிய ஒன்றே! காலம் ஈட்டுதலில் முதல் முறையாவது காலத்தைப் பணிகளில் பயன்படுத்தும் பொழுது சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகப்பணிகளைச் செய்தல். அதாவது காலத்தை வீணாக்கா திருத்தல். எடுத்துக் காட்டாக, சுருங்கச் சொல்லுதலுக்குப் பதில் வழவழா என்று பேசிக் கொண்டிருத்தல், குறைந்த நேரத்தில் முடிக்கக் கூடிய பணிக்கு அதிக நேரம் செலவழித்தல், பொருள்களை-ஆவணங்களை முறையாக ஓரிடத்தில் வைத்து எடுக்காமல் அடிக்கடி தேடிக் கொண்டிருத்தல், :மற்றவர்களுக்காகக் காத்திருத்தல் முதலியன.

குரோதன ஆண்டு ஓடி விட்டது! அட்சய ஆண்டு பிறக்கிறது. சென்றோடிய பன்னிரண்டு மாதங்களில் என்ன செய்தோம்? அதன் பயன் என்ன? படிப்பினைகள் என்ன? என்று கணக்குப் பார்க்க வேண்டும். கணக்கின் முடிவு வாழ்க்கைக்கு ஆக்கம் தருவதாக இருக்கிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும். ஆய்வின் முடிவு ...ளத் தெளிந்த உறுதியுடன் ...றுக் கொள்ள வேண்டும். முடி...ள் முனைப்பான முயற்சிகளில் நம்மை ஈடுபடுத்த வேண்டும்.

சென்ற ஆண்டு, குரோதன ஆண்டு! நம்முடைய நாடு அதன் பெயருக்கு ஏற்றாற்போலவே குரோதனத் தன்மை சார்பான பல துன் பியல் நிகழ்வுகளைச் சந்தித்திருக்கிறது. பஞ்சாபில் இன்னமும் அமைதி தோன்றவில்லை. நாட்டில் பரவலாக இங்கும் அங்குமாகச் சாதிசமயச் சண்டைகள் நடைபெற்று வந்தன. இது வருந்தத்தக்க நிகழ்வு.

சுதந்தரம் என்ற பேராலும் உரிமை என்ற பேராலும் நாம் நாள்தோறும் இழைத்துக் கொண்டு வருகிற அநீதிகள் எண்ணற்றவை. ஒருவருடைய சுதந்தரம் மற்றவருடைய சுதந்தரத்திற்கு இடையூறாக இருத்தல் கூடாது. இன்று நம்முடைய நாட்டில் இந்த மரபு புறக்கணிக்கப்படுகிறது. கட்டுப்பாடுள்ள சுதந்தரம்தான் உண்மையான சுதந்தரம். அதுபோலவே சுதந்தரமில்லாத கட்டுப்பாடும் சுதந்தரமன்று. இந்தச் சூழ்நிலையில் வேந்தலைக்கும் கொல்குறும்பர் கள் மிகுதியாகத் தோன்றுவர். தமிழக மக்கள் சுதந்தரத்தையும் கட்டுப்பாட்டையும் போற்றிப் பாதுகாத்திடுதல் வேண்டும். நம்முடைய நாடு ஒரு வளர்முக நாடு. சுதந்திரத்திற்குப் பிறகு நாடு வளர்ந்துள்ளது உண்மை. ஆனால், வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை.

ஹீரோஷீமாவில் அணுகுண்டுகள் வீசப்பட்டன. அப்பொழுது எழுந்த அணுப்புகை விண்ணகத்தையே மறைத்தது. சப்பான் தேசம் நிறைந்த அழிவுக்குள்ளாயிற்று. சப்பான் தேசத்து மக்கள் அழிவிலிருந்து நாட்டை மீட்டதோடு, தங்கள் நாட்டை வளமும் வலிவும் பொருந்திய நாடாக உருவாக்கிவிட்டனர். இந்த அதிசயம் எப்படி நடந்தது? அலாவுதீன் அற்புத விளக்காலா? இல்லை, இல்லை! சப்பான் தேசத்து மக்களிடத்தில் அடியிற்கண்ட மூன்று விழுமிய குணங்கள் இடம் பெற்றுள்ளன. அவையே அந்த நாட்டின் முன்னேற்றத்திற்குரிய உந்து சக்தி! அந்த மூன்று குணங்களாவன: 1. நாட்டுப்பற்று 2, கடின உழைப்பு, 3. சமூகமனப்பான்மை. இதுபோலவே செர்மன் தேசத்து வரலாறும் அமைந்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்தில் செர்மன் தேசம் உருவமேயில்லாத வகையில் பாழாக்கப்பட்டது. இன்று செருமானியர் தங்கள் தேசத்தையும் மிகவும் சிறப்பாக வளர்த்துக் கட்டுமானம் செய்திருக்கிறார்கள். இஃதோர் அரிய சாதனை! நமது நாட்டில் என்ன நிகழ்கிறது? தலைமுறை தலைமுறையாக நமது சமுதாயத்தினரை வருத்திவரும் துன்பங்கள் அகன்றபாடில்லை. ஏன் இந்த நிலை? நமக்குக் கடின உழைப்பு தேவை! சென்ற ஆண்டு நமது

# சிந்தனை செய்வோம், செயல்படுவோம்!

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இந்தியப் பொருளாதாரம் செறிவும் சீர்மையும் உடையதாக இல்லை. இதற்குக் காரணம் என்ன? ஒரு நாடு முன்னேறுவதற்கு மற்ற நாடுகள் எளிதில் உடன்படுவதில்லை. இஃதோர் ஆதிபத்தியப் போட்டி! இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஜப்பான் தேசத்து நாகசாகி,



நாட்டின் உழைப்பைவிட நடப்பாண்டில் கூடுதலாக உழைக்க வேண்டும் என்று உறுதியெடுத்துக் கொள்வோமாக! நாட்டுப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவோமாக!

மணிமேகலையில் அட்சய பாத்திரம் என்ற சொல்லின் முதல்நிலைச் சொல் "அட்சய"! வரப்போகும் புத்தாண்டும் அட்சய! பசித்துன்பத்தை மாற்றியது அட்சயபாத்திரம்! நடப்பாண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாக ஏற்றுக் கொள்வோமாக! வறுமை நீக்கம் என்பது அறிவியல் சார்ந்த தொழில் நுட்ப வாழ்க்கையை மேற்கொண்டால் தான் இயலும்! மனித நேயமிக்க பொன்மனச் செம்மல் தலைமையில் வறுமை ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவோமாக! சமாதானத்தை விரும்பும் பாரதத்தின் தலைமையை உலகத் தலைமையாக்குவோமாக! இந்த வகையில் புத்தாண்டில் சிந்தனை செய்வோமாக! செயல்படுவோமாக!






# தொழில் வளம் நிறைந்த தமிழகம்

தமிழ்நாட்டில் கனிம வளங்கள் மிக அதிகம். அவை ஒரு காலத்தில் தனியார் உடமையாக இருந்தன.

தனிப்பட்ட முதலாளிகள், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பாறைகளை வெட்டி எடுத்து, மெருகூட்டி, வெளி நாடுகளுக்கு அனுப்புவதன்மூலம் பல இலட்ச ரூபாய் வருமானம் பெற்று வந்தார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் பணம் சேர்ப்பதையே குறிக்கோளாகக்கொண்டிருந்தார்களே தவிர, நாட்டின் நலனையோ தொழிலாளர்களின் நலனையோ கருதவில்லை.

கனிம வளத்தின் மூலம் நல்ல வருவாய் வருவதையும், தனியார்கள் அளவுக்கு மீறி வெட்டி எடுத்து, பல கேடுகளை உருவாக்கி வந்தனர் என்பதையும் அறிந்து கொண்ட மாண்புமிகு



தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், தமிழ் நாட்டின் கனிம வளத்தைப் பாதுகாக்க முற்பட்டார். அதனால் கனிம வளங்கள் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானவை என்று அறிவித்து, அதற்குரிய சட்டங்களையும் உருவாக்கினார். அதன் மூலம் தமிழ்நாடு கனிம நிறுவனம் TAMIN 1978ல் தோன்றியது; தமிழகத்தின் ஆண்டு வருவாயைப் பெருக்க உதவியது. ஆண்டுதோறும் அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித் தருகிறது.

1985-86-ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 5 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாறைகளும் பல வண்ணக் கற்களும் மேற்கு ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பாறைகளை வெட்டி எடுத்து அப்படியே ஏற்றுமதி செய்வதை விட, அறுத்து மெருகேற்றி அனுப்பினால் பல மடங்கு அதிக விலை கிடைக்கும் என்பதை உணர்ந்து, பாறைகளை அறுத்து மெருகிடும் தொழிற்சாலையை உருவாக்கும் முயற்சியில் டாமின் ஈடுபட்டது. வெளிநாட்டு இறக்குமதியாளர்கள் டாமின் உற்பத்தி செய்யும் - அறுத்து மெருகிடும் பாறைகளை வாங்குவதற்குப்



# காலம் வாழிய!

புதிய ஆண்டுகள் காலவெளிகளில்
பூத்திடும் போது
உதயம் ஆவது என்னவோ அதே
பழைய கதிர்தான்!

இதய உணர்வுகள் கூடப்
பழைய உணர்வுகளையே கொஞ்சம்
புதுமைப் படுத்தும்!

ஜல்லிக்கட்டு வீரரைப் போற்றி
மணந்துகொண்டாள் அன்றைய மங்கை!
கிரிக்கெட்டு வீரரைப் போற்றி
மணந்து கொள்கிறாள் இன்றைய மங்கை!
வெற்றி என்பது இப்படித்தானே
வேறு வேறு வடிவம் பெற்று
மற்றவர் மனத்தை மயக்குகின்றது!

ஆதிசங்கரர் அவதரித்தது
காலடி என்னும் திருத்தலம் ஆகும்!
அந்த ஊர் உள்ள சேர நாட்டில்
அவதரித்த இளங்கோ அடிகள்
செந்தமிழ்த் தாயின் காலடிக்குச்
சிலம்பை அணிவித்துச் சிறப்புச் செய்தார்!
சக்தியை வணங்கினார் சங்கரர் பெருமான்!
கற்பின்
சக்தியை வணங்கினார் இளங்கோ அடிகள்!

வழிபாடு சிறுசிறு மாற்றத்தோடு
வெளிப்படுவது பூமியின் இயல்பே!
காலம் அதற்குக் காரணம் எனலாம்!

அந்தக் காலமே ஆண்டுகளாகி
இந்தப் பூமியை நோக்கி
இனிது வருகிறது!
'காலமே நீ வாழிய!' என்று
கைகூப்பி வணங்குவோம்!

—டாக்டர் குருவிக்கரம்பை சண்முகம்

# கொள்ளை லாபம்

**—தாமரை மணாளன்**

பத்திரிகையில் வந்த அந்தச் செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை.

''[illegible]ளம் கிராமத்திலுள்ள [illegible] வயது நிரம்பிய [illegible] என்ற விவசாயி...''

[illegible] அந்த ரௌடி செங்கண்ணனைத் தவிர வேறொரு செங்கண்ணன் அந்த வயதில் என் சொந்த ஊரான அந்தச் செட்டிகுளத்தில் இல்லவே இல்லை. பதினைந்து வருடங்களுக்கு முன்னால், நான் அந்த ஊரை விட்டுப் பிரிந்து வந்துவிட்டிருந்தாலும், என் ஞாபக சக்தி ஒரேயடியாக மழுங்கி விடவேயில்லை.

ஊரான் பயிரை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்த செங்கண்ணன், விவசாயி ஆகியிருக்கிறானாம்! அதுவும் அந்த மாவட்டத்திலேயே அதிக விளைச்சலுக்குப் பரிசு வாங்கியிருக்கிறானாம்!

பத்திரிகையில் வெளியாகியிருந்த புகைப்படத்தை உற்றுப் பார்த்தேன். அந்த உருவம் அவனைப் போலத்தான் இருந்தது. யாராவது ஒரு அதிகாரியிடம் அவன் ஏதாவது ஒன்று வாங்குவான் என்றால், அது நீதிபதி ஒருவரிடம் வாங்கக்கூடிய மரண தண்டனையாகத் தோன்றிய-ஊர்ஜிதமாகியிருந்த கணிப்பு.

செங்கண்ணனுக்கு என் வயசுதான் இருக்கும். இருந்தும் அந்தக் காலத்தில் அவனைக் காணும்போது நான் நடுங்கிய நடுக்கம் இன்னும் என் உணர்வில் நிலைத்திருக்கிறது. புத்தகக் கட்டும் டிபன் பாக்ஸுமாகப் பக்கத்து ஊர்ப் பள்ளிக்கூடத்திற்குப் போகும் நான், வழிப்பாதையில் என் டிபனை அவனிடம் பறிகொடுத்த நாட்கள் எத்தனையோ! பாதி வழியில் என்னை மறித்துக்கொண்டு, ''ஏலே, உங்கம்மா இன்னிக்கு என்ன கொடுத்திருக்கிறா?'' என்று அதட்டல் போடுவான்.

''இடியாப்பம்'' என்று இடிந்த குரலில், அழுவேன். ''இங்கே கொண்டாலே!' என்று உறுமுவான். அதற்கப்புறம் இடியாப்பத்தில் எனக்குப் பாத்தியதை கிடையாது! டிபன் பாக்ஸுக்குள் கையை விட்டுத் துழாவிச் சாப்பிட்டுவிட்டு, ''ஏலே, மத்தியானம் ஸ்கூல்லே வைச்சுக் கழுவிக்கோ'' என்று எச்சில் பாத்திரத்தை நீட்டுவான்.

ஒரு மனிதன் தன் முப்பது வயதுக்குள் மூன்றில் ஒன்றைப் பெற்றுவிட வேண்டும் என்பது ஒரு பழமொழி. அதாவது அந்த வயதுக்குள் அவன் பிரபலமாகிவிட வேண்டும். செங்கண்ணன் இருபது வயதுக்குள்ளேயே பிரபலமாகி விட்டான். எங்கள் பகுதிவாசி யாராவது ஒருவர் அகராதி தயாரித்திருந்தால், அதில் 'செங்கண்ணன்' என்ற பேரையும் சேர்த்து, பக்கத்தில் 'கொள்ளை, களவு, பழி-இத்யாதிகளின் மறு பெயர்' என்று அர்த்தமும் எழுதி விட்டிருப்பார்.

வயற்பகுதிகளில் இரவு நேரங்களில் புகுந்து, அங்கு கிடைக்கும் விவசாய சாமான்களைப் பக்கத்து ஊர்களுக்குக் கடத்திச் சென்று விற்பது, தப்பித் தவறி யாராவது பார்த்து விட்டால் அவர்கள் பார்த்துவிட்ட தோஷத்திற்காகவே கண்மண் தெரியாமல் அவர்களை உதைப்பது, வெட்டுவது, இதெல்லாம் அவனுக்குச் சர்வசாதாரணமான காரியங்கள். அவன் ஒரு விஷயத்தில் மாபெரும் அபேதவாதி. பணக்காரன், ஏழை என்று அவன் பேதம் பாராட்டுவதில்லை. அவனறிய யார் வீட்டில் பணம் இருந்தாலும் சரி, அது பிள்ளையின் வைத்தியச் செலவுக்குப் பெண்சாதியின் தாலியை விற்றுக்கொண்டுவந்திருக்கும் பணமாக இருந்தால்கூட அதை அபகரிப்பது அவனுக்கு ஒரு பொருட்டல்ல. அப்படி ஒரு மனப்பக்குவம்!

எங்கள் ஊரிலேயே என்னிடம் மட்டும் அவன் கொஞ்சம் இரக்கம் காட்டிப் பேசுவான். ஏனென்றால், நான் ஒருவன் தான் அவன் கோபப்படுவதற்கு முன்னாலேயே என் கையிலிருப்பதை அவனுக்குக் கொட்டிக் கொடுத்துவிடும் தீரன். அதோடு, இரண்டு வார்த்தை பேசினாலும் அவனைச் சிரிக்க வைக்கக்கூடிய 'ரெடிமேட்' கேள்வி ஒன்று என் கைவசம் உண்டு.

''அண்ணனுக்குக் கல்யாணம் எப்போ?' என்ற கேள்வி தான் அது.

அதை வெகு கரிசனமாக அக்கறையாகக் கேட்பேன். நான் அப்படிக் கேட்டதும் அவனுக்கு குஷி பிறந்து விடும். 'எனக்கு ஏற்ற பொம்பளை எவள்டா இங்கே இருக்கா? அவ்வளவும் பயந்து சாகிற கழுதைகள். இந்தச் செங்கண்ணன் இதுகளை ஏறெடுத்துப் பார்ப்பானா?''

பத்திரிகையில் அவனைப்பற்றி புதுச் செய்தி கண்டதற்குப் பின் அவனுக்குக் கல்யாணம் ஆகியிருக்குமோ என்ற கேள்வியும் எனக்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

ஓர் அற்பச் சாக்குக் கிடைத்தது. தூரத்து உறவினர் ஒருவர் வீட்டுக் கல்யாணத்துக்குச் சும்மா ஒப்புக்காக அழைப்பிதழ் அனுப்பியிருந்தார்கள். அதை எடுத்துப் பாக்கெட்டில் செருகிக்கொண்டு கிளம்பி விட்டேன்.

செங்கண்ணனின் பழைய குடிசை எனக்குத் தெரியும். அது குடிசை கூட இல்லை. கோழிக்கூடு.

ஆனால், நான் அலைந்து திரிந்து தேடிப் பார்த்தேன். அந்தக் குடிசையை அங்கே காணவே காணோம். அது இருந்த இடத்தில் ஒரு சிறிய, ஆனால் கச்சிதமான காரைக்கட்டு வீடு இருந்தது.

ஒரு முதியவர், 'இதுதான் செங்கண்ணன் ஐயா வீடு'' என்று மரியாதையாகக் குறித்ததும் அவனுடைய உயர்வின் முழுச்சாயலும் என் நெஞ்சில் பதிந்துவிட்டது.

வில் ஈடுபட்டிருந்தபோது, தொழிலாளர்களுக்கு குறைந்த கூலி கொடுக்கப்பட்டது. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும்கிடையாது. வயிறாரச் சோறு கிடையாது. ஆடை கிடையாது என்ற நிலைதான் இருந்தது.

"அரசுத் துறைக்கு இது மாற்றப்பட்ட பின்பு பாதுகாப்பு, நல்ல கூலி, அந்நியச் செலாவணி ஆகியவை கிடைக்கின்றன. தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே சிறப்புப் பெறுகிறது இது. இதற்கு யார் காரணம்? பொன்மனச் செம்மல்தான் காரணம். அவர் மட்டும் சிந்தித்துச் செயலாற்றாமல் இருந்திருந்தால் இவ்வளவு உயர்ந்த விலை நமக்குக் கிடைத்திருக்க முடியாது.

"தேவையான அளவு வெட்டி எடுக்கும் நிலையையும், இடைத்தரகர் இல்லாத நிலையையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார். அதன் பிறகு தான் நமது கரும் பாறைக்கு மதிப்பு - நாட்டுக்கு மதிப்பு ஏற்பட்டது. அந்நியச் செலாவணியும் கிடைத்தது".

இந்தத் தொழிற்சாலை தொடக்க விழாவைப் பாராட்டி மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங், மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி, மத்திய அரசின் மாண்புமிகு தொழிலமைச்சர் திரு திவாரி, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எஸ். குரானா ஆகியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

அதன் பிறகு, கரும்பாறைகளை ஏற்றுமதி செய்யும் ஜப்பான் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் - தொழில் கருவிகளை வழங்கிய ஜெர்மனி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் - கட்டடத்தை உருவாக்கிய பொறியியல் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோரெல்லாம் இத்தொழிற்சாலைக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

தொழில்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு வி. செல்வராஜ், இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

'உலகப் புகழ் பெற்ற தொழிற்சாலைகள் உள்ள இந்த மணலியில் இன்று உலகப் புகழ் பெற்ற மற்றொரு தொழிற்சாலையான கரும்பாறை மெருகிடும் தொழிற்சாலை உருவாகியிருப்பது தனிச் சிறப்புக்குரியது."

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர்

**மணலியில் உருவாக்கப்பட்டுள்ள கரும்பாறை அறுவை மற்றும் மெருகூட்டும் தொழிற்சாலைக் கட்டடங்கள் நவீன முறையிலும் உறுதியான விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் புயல் வந்தாலும் அதனைச் சமாளித்து நிற்கக்கூடிய திறன் கொண்டவை அவை.**

ஜெகதீசன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

"கறுப்புக் கல்லை டாலர் ஆக்க முடியும் - ரொக்கமாக்க முடியும் என்ற நிலையை உருவாக்கியவர் நமது புரட்சித் தலைவர். அரசு இந்தத் தொழிலைத் தொடங்கியபோது நம்மிடம் 3 குவாரிகள் தான் இருந்தன. இன்று 30 குவாரிகளிலிருந்து பாறைகளை வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற அளவுக்குப் பெருகியுள்ளது.

'முதல்வர் அவர்களின் முயற்சியால், இன்று தமிழகம் தொழில் துறையில் முன்னேறி வருகிறது. அனைத்திந்தியாவிலும் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது தமிழகம். பொன்மனச் செம்மலின் கைபட்டால் கறுப்புக் கல் மட்டுமென்ன கரியைத் தொட்டாலும் பொன்னாக மாறும்.

மாண்புமிகு உணவமைச்சர் திரு எஸ் திருநாவுக்கரசு அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

"புரட்சித் தலைவரின் ஆட்சியில் தமிழகத்தில் தொழில் புரட்சி ஏற்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் உருவாகியுள்ளன.

"கரும்பாறை மெருகிடும் தொழிற்சாலை மட்டுமல்ல, தனியாரின் ஆதிக்கத்தில் இருந்த மாக்னசைட் தொழிற்சாலையும் அரசு நிறுவனமாகியுள்ளது. தோல் வாணிகத்தின் மூலம் அந்நியச் செலாவணியைத் தேடித் தரும் தோல் வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. பல நாடுகளிலும் வளர்ந்து வரும் மின் அணுத் தொழிலைத் தமிழ் நாட்டிலும் வளர்ச்சி பெறச் செய்யும் வகையில் எல்காட் மின்னணு நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. 200 கோடி ரூபாய் செலவில் செய்தித்தாள்-காகிதத்தாள் உற்பத்தி ஆலை உருவாக்கப்பட்டுள்ளது."

தொழிலாளர்களுக்குப் பரிசுகள் வழங்கியமாண்புமிகுஉள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள், "இந்தத் தொழிற்சாலை வளர்ச்சிபெற்றுச் சிறந்து விளங்க இனிய வாழ்த்துக்களை வழங்குகிறேன்" என்றார்.

மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், தமது உரையில் தெரிவித்ததாவது :

"சில தனியார்களின் வேட்டைக் காடாக விளங்கிக்கொண்டிருந்த தொழில்களை அரசுத் தொழில்களாக மாற்றியுள்ளார் தமிழகத்தின் தளநாயகர்.

"தான் உழைத்துச் சம்பாதித்த சொத்துக்களை பொதுமக்களுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் இயற்கைச் செல்வங்களும் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற உள்ளத்துக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவர்.

"ராமாயணத்திலே ராமனின் கால்பட்டதும் கல் பெண்ணானது. புரட்சித் தலைவரின் கரம் பட்டால் கறுப்புப் பாறையும் கறுப்புத் தங்கமாக மாறும் என்பது வரலாறாகியுள்ளது. முன்பு நிலக்கரிதான் கறுப்புத் தங்கம் என்று சொல்லப்பட்டு வந்தது. தற்போது கரும்பாறை கறுப்புத் தங்கமாகியுள்ளது.

"இதற்கு முன்பும் கரும்பாறை இருக்கத்தான் செய்தது. அது வெளிநாட்டுக்குப் பயணமும் செய்தது. எத்தனை கோடிபணம் கிடைத்தது என்ற கணக்கு மட்டும் தெரியாமலே இருந்து வந்தது.

"அண்மையில், பல்வேறு மாநிலங்கள் பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கின்றன. எல்லாம் பற்றாக்குறை பட்ஜெட்கள் தான். மத்திய அரசும் பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் அளித்திருக்கிறது. தமிழக அரசு சுமார் 8 கோடி ரூபாய்தான் பற்றாக்குறை என்ற அளவில் பட்ஜெட் தயாரித்துள்ளதுடன், 22 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்துள்ளது. இதைப் பார்த்துப் பொருளாதார நிபுணர்கள் திகைக்கிறார்கள்.

"மத்திய அரசிடம் ஓவர் டிராப்ட் கேட்காத மாநில அரசு, தமிழக அரசுதான்! திட்டங்களைத் தீட்டிவிட்டு, அவற்றிற்கு அனுமதி தாருங்கள் என்று மைய அரசைக் கேட்கின்ற அரசு, தமிழக அரசு! இதனால் தான் மற்ற மாநில அரசுகளெல்லாம் ஆச்சரியப்படுகின்றன. அதற்கு அடிப்படைதான் இப்படிப்பட்ட தொழிற்சாலைகள்!"



தொழிலாளர்களுக்குச் சீருடை வழங்கிய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

"தோல் ஏற்றுமதித் தொழில் ஒன்றுதான் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்து கொண்டிருந்தது. இப்போது கருங்கல்லும் அந்தப் பெருமையைப் பெறுகிறது.

"இந்த மணலி முக்கியமான— கேந்திரமான பகுதி. இங்கு ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன.

"சென்ற ஆண்டு மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த போபாலில் ஒரு தொழிற்சாலையில் வாயுக் கசிவேற்பட்டு ஆயிரக் கணக்கானவர்கள் பலியான அவலச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் நமது தமிழ்நாட்டிற்கு அந்த நிலை வந்துவிடக் கூடாது என்று கருதி மாண்புமிகு முதல்வர் அவர்கள், சாந்தப்பா தலைமையில் ஒரு குழுவை அமைத்து, என்னென்ன குறைகள் உள்ளன, அவற்றைக் களைவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறியச் சொன்னார்கள். அந்தக் குழு ஆய்வு நடத்தி, தனது கருத்தைச் சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்துகள் நிறைவேற்றப்பட உள்ளன. அப்படி நிறைவேற்றப் படும்போது இந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களின் நலன் பெருகும்."

தமிழ்நாடு கனிம நிறுவனம் உருவாக்கியிருந்த மலரை மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார்.

பின்னர் நாவலர் தமது உரையில் தெரிவித்ததாவது :

'கரும்பாறைத் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் மட்டும் தான் அமைக்க முடியும். காரணம், உலகத்திலேயே கடினமான பாறை-கனமான பாறை-அருமையான பாறை தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் கிடையாது. பளபளப்புத் தரும் பாறை — அழுத்தமான பாறை-உறுதியான பாறை - அடர்ந்து விளையும் பாறை-முதிர்ந்த பாறை தமிழகத்துப் பாறைகள். தென்னகத்தில் மட்டும்தான் இமயமலைக்குத் தாத்தாவுக்குத் தாத்தா இருக்கின்றது.




"நூற்றுக்கு நூறு சதவிகிதம் ஏற்றுமதியாகின்ற கருங்கற் பாறையின் மூலம் நமக்கு அந்நியச் செலாவணி அதிக அளவில் கிடைக்கிறது. இதன் காரணமாக மக்களுக்கு நன்மை, அவர்களது வரிச்சுமை குறையும். நாட்டின் வருவாய் பெருகும்",

தலைமை வகித்த மாண்புமிகு தொழில் அமைச்சர் இராசாராம் அவர்கள், "கருங்கல் பாறை மெருகிடும் தொழிற்சாலை திறப்பு விழா என்றுதான் நான் நினைத்தேன். இங்கு பேசிய அமைச்சர் பெருமக்கள் அனைவரும் தமிழக அரசின் தொழிற் சாதனை மாநாடாக மாற்றி விட்டார்கள்" என்று குறிப்பிட்டதைக் கேட்டு, பார்வையாளர்கள் அனைவரும் கைதட்டி மகிழ்ந்தார்கள். அதன் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாமின் கிரானைட் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார்கள்.

தருமபுரியைச் சேர்ந்த ஓவியர் ஒருவரால் கருங்கல்லில்பொறித்திருந்த முதல்வர் அவர்களின் திருவுருவப் படம் முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

[illegible]

வெளிநாட்டினருக்கு நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

கருங்கல்லாலான நினைவுப் பரிசு ஒன்றினை இருவர் சுமந்து வந்து முதல்வரிடம் கொடுக்க, அவர் தமது இருகரங்களால் அதனை இலகுவாக வாங்கி, வெளிநாட்டுப் பிரமுகர்க்கு வழங்கினார்.

50 கிலோ எடையுள்ள ரோசாப்பூ மாலையை ஐந்தாறு பேர் ஆர்வத்துடன் சுமந்து வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அணிவித்தனர். கனமான மாலை அவரை அழுத்தும் என நினைத்துச் சிலர் அந்த மாலையைத் தாங்கிப் பிடித்தனர். அவ்வாறு பிடித்தவர்கள் அனைவரையும் மாலையை விட்டுக் கரங்களை எடுத்துக் கொள்ளுமாறு முதல்வர் கூறவே அவர்கள் அவ்வாறே நடந்து கொண்டனர். அதன் பின்னர் முதல்வர் அவர்கள் 50 கிலோ எடையுள்ள அந்த மாலையைத் தாம் ஒருவரே சுமந்து கொண்டார். பின்னர் சில நிமிடங்களில் அதனை அனாயாசமாகக் கழற்றி-பார்வையாளர்கள் அனைவரையும் வியக்கச் செய்தார்.

விழா இறுதியில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இயக்குநர் திரு எம். காதர்சா, எம்.பி., நன்றியுரை கூறினார்.

டாமின் கிரானைட் தொழிற்சாலை தொடக்க விழா- வரலாற்றுப் புகழ்மிக்க விழாவாகத் திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது!

நமது செய்தியாளர்.

வீட்டுக்குள் சென்று விசாரித்தேன். என்னாலேயே அந்த இடத்தில், 'ஐயா இருக்காரா' என்று மரியாதையாகத்தான் விசாரிக்க முடிந்தது. வெளியே போய் இருப்பதாகவும் பத்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுவாரென்றும் வேலைக்காரி தகவல் சொன்னாள்.

பத்து நிமிஷம் காத்திருக்கலாமென்று இரும்புக் கிராதியில் அழிபாய்ச்சியிருந்த முன் கட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சுவரை நோட்டம் விட்டேன். அங்கிருந்த ஒரு படம் என் கவனத்தைச் சுண்டி இழுத்தது.

அது செங்கண்ணனின் கல்யாணப் புகைப்படம். அவன் தன் லட்சிய மனைவியின் யோக்கியதாம்சம் குறித்து முன்பு சொன்னது நினைவுக்கு வந்தது. யார் அந்த வீரதீரப் பெண்மணி என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் எழுந்து சென்று படத்தை உற்றுப் பார்த்தேன்.

வடிவாம்பாள்!

வடிவா அவன் மனைவி! 'பய்ந்து சாகிற' பெண் பிறவிகளில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போகக்கூடியவள் வடிவு. அவளை இவன் எப்படி ஏறெடுத்துப் பார்த்தான்? அவள் இவனைக் கட்டிக் கொள்ள எப்படிச் சம்மதித்தாள்?

வடிவுக்கு, நான் ஊரைவிட்டுப் புறப்படுகிற சமயத்தில் வேறோர் இடத்தில் கல்யாணம்கூட ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அது எப்படிக் குலைந்தது. எப்படிச் செங்கண்ணனோடு அவள் வாழ்க்கை இணைந்திருக்க முடியும்?

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. செங்கண்ணன்தான்.

என்னவோ தெரியவில்லை. அவனைக் கண்டதும், என்னால் திண்ணையில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஏதோ ஓர் உணர்ச்சி உந்தலினால் சட்டென்று எழுந்து நின்று அவனை வரவேற்றேன். அப்படி ஒரு கவர்ச்சிகரமான மரியாதைக்குரிய களை அவன் முகத்தில் புதிதாக ஏற்பட்டிருந்தது.

இரண்டு நிமிஷத்தில் சௌஜன்யமாகிவிட்டோம்.

வெகு நேரத்திற்குப் பின்னர்தான் என்னுடைய சந்தேகங்களுக்கு விடை காண நாசூக்காகப் பேச்சைத் துவக்கினேன்.

செங்கண்ணன் விவரித்தான்.

வடிவாம்பாளின் கல்யாணத்துக்குச் சம்பிரதாயமான சடங்குதான், நிச்சயதார்த்தம் வைக்கவில்லை. மற்றபடி, எல்லா விஷயமும் நிச்சயமான மாதிரிதான். வடிவின் தாயார் தன் பெயருக்கிருந்த நிலத்தில் பெரும் பகுதியை விற்று, மாப்பிள்ளை வீட்டார் கேட்டபடி மகளுக்கு நகை செய்துவிட்டார். யாருமற்ற விதவை இரண்டாயிரம் ரூபாய்க்கு நகை செய்யக்கொடுத்திருக்கிறாள் என்ற துப்புக் கிடைத்ததும் செங்கண்ணனுக்கு கை பரபரத்தது. நகைகள், பெண்ணின் மேனியிலும் ஏறியாயிற்று.

செங்கண்ணனுக்குப் பாதி வேலை குறைந்துவிட்டது போல் இருந்தது. நகைக்காகச் சுவரேறிக் குதித்துப் பெட்டிகளை எல்லாம் உருட்டிக் கொண்டிருக்க வேண்டாமே! கூரையைப் பிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தோமோ, பெண் கழுத்திலிருந்து சுண்டி இழுத்து அறுத்துக்கொண்டோமோ என்று நொடியில் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிடலாம். வடிவாம்பாளின் வீட்டை நோக்கி அப்படியே புறப்பட்டுவிட்டான்.



மங்கலான சிமினி விளக்கு வெளிச்சத்தில், வடிவு, கழுத்திலும் காதிலும் புது நகை மின்னப் படுத்திருந்தாள், தாயை அருகில் காணோம்.

வேறொரு தெருவில் கூத்து நடந்து கொண்டிருந்தது. கல்யாணப் பெண்ணை அழைத்துச் செல்லக்கூடாது என்பதற்காக விட்டுச் சென்று இருந்தாள் போலும்.

காரியத் துடிப்புடன் வடிவை நெருங்கினான். இன்னும் ஒரு விநாடி....

அடுத்த விநாடியில் அது நிகழ்ந்துவிட்டது.

அரவம் கேட்டு விழித்துக் கொண்ட வடிவு, சிமினி விளக்கொளியில் செங்கண்ணனை அடையாளம் கண்டு கொண்டாள். அதே சமயம் அவனும் தன் கரங்களை அவளுடைய கழுத்துப் பக்கம் கொண்டு போனான். சட்டென்று அவள், தன்னுடைய கழுத்தை நோக்கி நீண்ட அவனுடைய கரங்களைப் பற்றி இழுத்துத் தன் பின்பக்கமாகத் தள்ளினாள். அதனால் அவனுடைய கரங்கள் அவள் உடம்பைச் சுற்றி அணைத்த நிலைக்கு வளைந்துவிட்டன.

தான் ஓர் ஆடவனின் அரவணைப்பு நிலையிலிருப்பதை உணர முடியாமலேயே நகையை அவனுடைய கரங்கள் கைப்பற்றி விடாதபடி தடுக்கும் ஒரே சிந்தனையில், அவள் அவனுடைய கரங்களை அந்த நிலையிலேயே இறுகப்பற்றி இருத்திக்கொண்டாள்.

அவனுடைய கரங்களின் இறுகலான அணைப்பில் அவளுடைய பூவுடல் இருந்தது.

இந்தச் சம்பவத்தைச் சொல்லிக் கொண்டு வந்த செங்கண்ணன் சில வினாடி அப்படியே மெய்மறந்து, பழைய நினைவின் இறுக்கத்தில் மௌனமானான். பின், தொடர்ந்தான்.

''தம்பி, அந்த ஒரு சில வினாடிகளை என் வாழ்க்கையிலே மறக்க முடியாது. தன் நகைகளைக் காக்கணும் என்கிற ஆவேசத்தைத் தவிர, வேறே எந்த நோக்கமும் அவளுக்கு இல்லை. என் கையை விட்டுவிட்டால், நான் நிச்சயமா அவள் கழுத்திலிருக்கிற நகையைப் பறித்துவிடுவேன்னுதான் அவள் என் கையை விடவில்லை. 'வேணும்னா என்னைக் கொன்னு போட்டுடு. ஆனா என் நகையை நீ எடுத்திட்டுப் போனால், அதனாலே அவமானப்படறதைவிட, சாகிறதே தேவலாம்' அப்படீன்னு அவள் சொன்னாள்!

''தம்பி, உனக்குத் தெரியும். பெண் சகவாசமே எனக்குக் கிடையாது. அப்படிப்பட்டவன் வயதுப் பெண்ணொருத்தியோடு அந்த நிலையிலே..என் பலத்தையெல்லாம் இழந்துட்டு ஒரு சூறாவளிக்குள்ளே சிக்கிக்கிட்ட மாதிரி ஆகிப் போனேன். இத்தனைக்கும் வேறே ஒண்ணும் தப்புத் தண்டாவா நடக்கல்லே! எத்தனையோ ஆம்பளைங்களை அடிச்சு உதைச்சு ஜெயிச்ச நான், அந்த இடத்திலே தடுமாறிட்டேன். நான் மூச்சுப் பேச்சுக் காட்டலை. மனசு குன்றிப்போய், பேசாமல் எழுந்து கதவைத் திறந்துக்கிட்டு வெளியே வந்துட்டேன்...

''இரண்டு நாள் கழிச்சு, யாரோ வந்து சொன்னாங்க, வடிவு தனக்கு நிச்சயமான கல்யாணம் வேண்டாம்னு சொல்லிவிட்டதாம். 'அந்தப்பாவி செங்கண்ணன் கையை நான் தொட்டுட்டேன். அவன் கையும் என் உடம்பிலே பட்டுட்டுது. இனிமேல் நான் ஒருத்தருக்கும் வாழ்க்கைப்பட மாட்டேன்'. அப்படீன்னு சொல்லிட்டாளாம்''

இதைச் சொல்கையில் செங்கண்ணன் கண்களில் பனித்துளிபோல் நீர் கோத்தது.

'அதனால்தான் வடிவு உங்களைக் கல்யாணம் கட்டிக்கச் சம்மதிச்சுட்டாளா?'' என்று கேட்டேன்.

''அவ்வளவுக்கு அவள் முட்டாள் இல்லை தம்பி! நான் இனிமே வாழ்வதானால் அவனோடதான் வாழணும். ஆனால் இப்படிக் கேவலமாக, திருடனாய், ரவுடியாய் வாழ்கிறவனை நான் கட்டிக்க மாட்டேன். அவன் திருட வந்த இரண்டாயிரம் ரூபாய் நகையையும் விற்று அவனுக்கே நிலம் வாங்கிக் கொடுக்கிறேன். விவசாயம் பண்ணி நேர்மையாய்ப் பிழைத்தானானால் நான் அவனைக் கட்டிக்கிறேன்னு' சொல்லியனுப்பிச்சுட்டா, தம்பி, என் பழைய வாழ்க்கையிலே தோற்ற முதல் இடம் நான், என் மனுஷத் தன்மை ஜெயிச்ச இடம்,' என்றான் செங்கண்ணன்.

## நல்வரவு கூறுவோம்

திருச்சி பாரதன்



அட்சய ஆண்டே வந்திடுக
அமைதியை என்றும் தந்திடுக!

அண்ணன் தம்பி ஒற்றுமையே
அவனி எங்கும் தங்கிடவும்
எண்ணம் செய்கை யாவிலுமே
இனிமை அன்பு பொங்கிடவும்
மண்ணிலும் விண்ணிலும் சாதனைகள்
மகத்துவ நிலைகள் பல்கிடவும்
கண்ணிலே பசுமைக் காட்சிகளே
கவினுற விளங்கி நின்றிடவும்

அட்சய ஆண்டே வந்திடுக
அமைதியை என்றும் தந்திடுக!

இந்திய நாட்டில் நதியெல்லாம்
இணைந்து ஒருநதி ஆகிடவும்
இந்திய மொழிகள் தம்முரிமை
எய்தியே செழித்து ஓங்கிடவும்
நிந்தனை யில்லா அரசியலே
நிலைத்திட உணர்வு தோன்றிடவும்
இந்தநன் னாளில் தனியுறுதி
ஏற்றினி வாழ்ந்து வாழ்த்திடுவோம்!

அட்சய ஆண்டே வந்திடுக!
அமைதியை என்றும் தந்திடுக!



# தமிழிசைப் பண்கள்

- டாக்டர் சேலம் ஜெயலட்சுமி

"பாவோ டனைதல் இசை
யென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தானம் எட்டா
னும்-பாவாய்
எடுத்தல் முதலா இரு நான்கும்
பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று
பார்'

பல இயற்பாக்களோடு, நிறத்தை இசைத்தலால் இசை என்று பெயர். ஏழிசையாகிய ச, ரி,க,ம,ப,த,நி என்ற சுரங்கள் பல வண்ணக் கலவைகளாக, பல உருக்களைக் கொள்வதே பண்களாகும். பண் என்பதே இக்காலத்தில் இராகம் என்று சொல்லப்படுகிறது.

பெருந்தானம் எட்டினும் கிரியைகள் எட்டானுட் பண்ணிப் படுத்தலால், பண்ணென்று பெயராயிற்று; எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் ஒலி, உருட்டு, தாக்கு என இக்கிரியைகளால் பலவாறு தொழிற்படுத்திப் பாடுதலே பண்ணாகும்.

தமிழிசைப் பண்கள் மிகப் பழமையானவை. தமிழிசையில் பதினோராயிரம் ஆதி இசைகள் இருந்தன என்று கூறப்படுகிறது. முத்தமிழில் ஒன்றான இசைத் தமிழைப் பற்றி சங்க இலக்கியம், நமக்கு ஏராளமான செய்திகளைத் தருகின்றது. தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றிலும் இசையைப் பற்றியும் இசை கருவிகளைப் பற்றியும் குறிப்புகள் வருகின்றன.

"அளபிறந் துயிர்த்தலும்
ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசை
யொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார்
புலவர்'

என்று தொல்காப்பியம் கூறும். இக்காலத்தில், விஞ்ஞானிகள், பேசும் மொழியும் பயிலும் இசையும் இரண்டும் பிறக்குமிடம் ஒன்றே என்று கூறுவதை மேற்குறித்த தொல்காப்பியப் பாடல் குறிக்கின்றது.

தொல்காப்பியம் நிலங்களுக்குரிய கருப்பொருள்களைக் குறிக்கும்போது தமிழிசைக் கருவிகளாகிய யாழ், பறை ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றது.

"தெய்வம் உணாவே மாமரம்-
புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு
தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென
மொழிப"
—பொருளதிகாரம்அகத்திணை
இயல்,

வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பாகத் தமிழ் மொழி-நிலங்களைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்து வகையாகப் பிரித்து அவைகளுக்குரிய குறிஞ்சி யாழ், பாலை யாழ், முல்லை யாழ், மருதயாழ், நெய்தல்யாழ் என்று கருவிகளை அமைத்து அவற்றிற்குரிய பண்களைக் குறிஞ்சிப் பண், பாலைப் பண், முல்லைப் பண்,மருதப்பண், நெய்தற் பண் என்று வகுத்துள்ளது மிகுந்த வியப்பிற்குரியதாக இருக்கிறது.

இப்பண்கள் பருவத்திற்கும், காலத்திற்கும் உரியவைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் மேனாட்டு Symphony orchestra 'இசைகளுக்கு ஒத்ததாக Music ecoording to landscape seasons and times என்று இயற்கை நலனோடு இணைந்த இசைப்பண் பாட்டினைத் தமிழர்கள் அக்காலத்திலேயே அமைத்திருக்கிறார்கள். ஆனால் மேனாட்டு இசையைப்போல் பன்னிரண்டு அரைச் சுரங்களே கொண்ட அதாவது 12 S:mitimes இசையாக மட்டுமின்றித்தமிழிசை நுண்ணிய காற் சுரங்கள் ஏன், அதனினும் நுண்ணிய அரைக்காற் சுரங்களைக் கொண்ட மிக நுட்பமான இசையையும் வளர்த்திருக்கின்றது.

இப்போது கர்நாடக இசை என்று வழங்கி வரும் தென்னாட்டிசை நமது பழந்தமிழ் இசையைத் தவிர வேறு எதுவுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லலாம். ஏன் எனில் பல பண்களின் பெயர்கள் நாளடைவில் மாறுபட்டு வந்தனவேயன்றிப் பண்களின் உருவங்கள் மாறாமலே இருந்து வருகின்றன.

சிந்துவெளி நாகரிகத்தின் ஆராய்ச்சியின் மூலம் ஒரு காலத்தில் இப்பழமையான திராவிடப் பண்பாடே இந்தியா முழுவதும் பலுசிஸ்தானம், வங்காளம் முதலியவை உள்பட பரவியிருந்தது என்பது நமக்குத் தெரிய வருகிறது. இன்றும் இந்திய நாடெங்கிலும் மக்கள் பண்பாட்டிலே பல ஒற்றுமைகளை நாம் காண்பதற்கு இதுவே அடிப்படைக் காரணமாகும்.

தமிழ் நாகரிகம், பழம்பெரும் நாகரிகங்களாகிய கிரேக்க, எகிப்திய, சீன நாடுகளின் பழங்காலப் பண்பாட்டிற்கு இணைந்ததாக இருந்திருக்கிறது என்பதையும் பல ஆராய்ச்சிகள் மூலம் நாம் அறிகிறோம். தமிழ்நாட்டின் தென்பகுதி கடல் கொள்ளப்பட்டதால், பல சான்றுகள், பழந் தமிழ் நூல்கள் இவைகளை நாம் இழந்துவிட்டோம். எனினும், அழியா மரபு என்றும், மயங்கா மரபு என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறியுள்ளது போல், நம்முடைய இசைமரபு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் ட ர்பும் பரம்பரையாக மரபு வழிய இ ன்றும் நூற்றுக்கணக்கான பண்கள் உருவில் உயிரோடு உலவி வருகின்றன.

இடைக்காலத்தில் இசையுலகில் பல குழப்பங்கள் ஏற்பட்டன.



தமிழை நன்கு அறியாத பிற மொழியினர், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வழக்கில் இருந்த பண்களைக் கொண்டே இசைக்கு இலக்கணம் வகுக்கத் துணிந்ததுதான் இதற்குக் காரணம். பழந்தமிழ் இசை இலக்கண நூல்கள் அருகிப் போனமையும், இதற்கு ஒரு காரணமாகும். இசையின் அடிப்படை இலக்கணங்களை நாம் தேடிச் செல்லும்போது இன்னும் நாம் தமிழிசை இலக்கணங்களைத் தான் நாடிச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பிற்காலத்து இசை நூல்கள் 72 மேளகர்த்தா முறையை வகுத்த வேங்கடமகி உள்பட 12 அல்லது 16 சுரங்களைக்கொண்ட இசை முறையைப் பற்றிப் பேசுகின்றனர். 12ஆம் நூற்றாண்டில் இருந்த சாரங்க தேவரும் தமது "சங்கீத இரத்னாகரம்" என்னும் நூலில் 22 சுருதிகள் என்று 'காற்சுர' முறையைக் குறிப்பிடுகின்றார். அதற்கு முன்பு 'பரத நாட்டிய சாஸ்திரம்" என்ற நூலில் சாதிப்பண்களைப் பற்றியும் பேசப்படுகின்றது. ஆனால் சிலப்பதிகாரத்தை நாம் ஆராயும் போது, நாட்டிய சாஸ்திரத்தில் காணும் செய்திகளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக தமிழிசை இலக்கணம் பற்றிய செய்திகளை நாம் பெறுகின்றோம். ஆகவே பிற மொழியில் இருந்து, இந்த ஒப்பற்ற இசையிலக்கணங்களை நாம் பெற்றோம் என்பது பொருந்தாது. பரத நாட்டிய சாஸ்திரமும் சங்கீத இரத்னாகரமும் தட்சிண தேசத்தைப் பற்றிய இசை நடனக்கலையை வெகுவாகப் புகழ்கின்றன. சங்கீத இரத்னாகரம், தேவாரவர்த்தினி என்று தேவாரப்பண்களைக் குறித்தும் பேசுகின்றது.

சங்க இலக்கியங்களில் பண்களைப் பற்றியும், யாழ், குழல், தோற்கருவிகள் முதலியவை பற்றியும், பாணன், பாடினி, விறலியார், ஆகியோர் மரபு பற்றியும் ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன. பெரும்பாணர், சிறுபாணர் என்று பாண் குடியினர் பேரியாழ், சீறியாழ், செங்கோட்டி யாழ் என்று பலவகையான யாழ்களைச் சிறப்போடு இசைத்த வரலாறுகள் கூறப்படுகின்றன. பரிபாடலில் பண்களைப் பற்றியும் பாடலை இயற்றியவர் பற்றியும், பாடலுக்குப் பண் அமைத்தவர் பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன.

"தொல்லியல் புலவ நல்யாழ் பாண" என்று பாணன் போற்றப்படுகின்றான். "ஏழ்புழை ஐம்புழையாழிசை கேழ்த்தன்னஇம் வீழ்தும்பி வண்டொடு நிமிறு ஆர்ப்ப" என்று கூறும் பரிபாடல் (Cycle of Fourtns and cycle of Fifths) என்ற அடிப்படை இலக்கணத்தைக்கூறுவதைக் காண நமக்குப் பெரும் வியப்பு உண்டாகிறது. ஏழிசையாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற சுரங்கள் பிறக்கும் இலக்கணத்தை "வண்ணப் பட்டை யாழ்மேல் வைத்து"என்று சிலப்பதிகாரம் விரிவாகப் பேசும். "பண்ணென்னாம் பாடற்கியைபின்றேல் கண்ணென்னாம் கண்ணோட்டமில்லாத கண்" என்று திருக்குறள் பண்ணின் இலக்கணம் கூறும்.

சிலப்பதிகாரம் ஏழ் பெரும் பாலைகளைப் பற்றியும் பண்ணிருபாலைகளைப் பற்றியும் நாற்பெரும் பண்களும் நால்வகை சாதிகளும் என்று நூற்றிமூன்று பண்களைப் பற்றியும் விரிவாகக் கூறும். கி.பி.5ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு சைவ சமயத்தைச் சார்ந்த நாயன்மார்களும் வைணவத்தைச் சார்ந்த ஆழ்வார்களும் பண்சுமந்த பதிகங்களாகத் தெய்வீகப் பாடல்களை வெள்ளமெனப் பொழிந்தனர். சமண மதமும் புத்த மதமும் நாளடைவில் நலிவுற்று, பெருமையை இழந்து அரசியலில் புகுந்து குழப்பம் விளைவித்த காலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாண்டிய, பல்லவ மன்னர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தி திருநெறிய தெய்வத் தமிழையும் பழம்பெரும்சைவத்தையும் நிலைநாட்டினர். தமிழ்நாட்டில் திருக்கோயில்கள் தோறும் சென்று யாழுடனும், குழலுடனும் தன்னுமை, தாளம், மத்தளம் போன்ற இசைக்கருவிகள் பின்னணி கூட்ட, தேனினும் இனிய தேவாரப் பாடல்களை இசையுடனும் பண்ணுடனும் பாடி மக்களிடையே அமுதத் தமிழைப் பரப்பினர்.

"நாளும் இன்னிசையால்
தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்
முன்
தாளம் ஈந்து-அவன்பாடலுக்கு
இரங்கும்
தன்மையாளனே!!'

என்று திருஞான சம்பந்தரைப் போற்றிப் பாடுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய ராஜராஜ சோழன் சிதம்பரத்தில் மறைவாய் புதைபட்டுக் கிடந்த தேவாரப் பதிகங்களை வெளிப்படுத்தி ஒவ்வொரு கோவிலிலும் அத்திருப்பதிகங்கள் பாடவேண்டுமென ஓதுவார் மூர்த்திகளை நியமித்து, அவர்களுக்கு நிவந்தங்களை ஏறற்படுத்தி, அழியாப் புகழ் கொண்டான். வடமொழியிலும், தெலுங்கிலும் 200 ஆண்டுகளுக்கு முன் தஞ்சையில், திருவாரூரில் பிறந்த கர்நாடக மும்மூர்த்திகள் எனப்படும் தியாகராஜசுவாமி, முத்துசாமிதீட்சதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இசைப்பாடல்களை இயற்றினர்.



பாடல்கள் எந்த மொழியில் இருப்பினும், இசை நமது தமிழ் இசைதான் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. இப்பெரியார்கள் வேறு மாநிலத்தில் தோன்றியிருந்தால் இத்தகைய இசை வளம் செறிந்த பாடல்களை இயற்றி இருக்க முடியாது. இயற்றியிருந்தாலும் அவை பாதுகாக்கப்பட்டிருக்கர்து.

இதற்குச் சான்றாகக் கர்நாடகத்தில் பிறந்த புரந்தரதாசர், ஆந்திர நாட்டில் பிறந்த அன்னமாச்சாரியார் இவர்களைக் கூறலாம். இன்று இவர்களுடைய பாடல்கள் மட்டுமே இருக்கின்றன. இவற்றில் பண் அமைப்புப் பற்றி ஏதும் சுவடே இல்லை.

பரத நாட்டியத்திலும் இசைக் கலையிலும் சிற்பக் கலையிலும் தமிழகமே தனிச் சிறப்புக் கொண்டு விளங்குகிறது. ஆடலுக்கும் பாடலுக்கும் தலைவனான கூத்தபிரானும் தென்னகமாகிய சிதம்பரத்திலே உறைகின்றார். நடராஜ பெருமான்' (Cosmic Dancer" என்றும்' God in action என்றும் உலகெங்கிலும் சிந்தனையாளர்களால் போற்றப்படுகிறார். இன்றுவரை திருக்கோயில் தோறும் பாடப்பெற்றுவரும் தேவாரப் பண்ணிசையும் நாதசுவர இசையும் நமது பாரம்பரியமான இசைக்கலையைப் பன்னெடுங்காலமாக, பல நூற்றாண்டுகளாக அழியா மரபாகக் காப்பாற்றி வருகின்றன என்று சொன்னால், அது மிகையாகாது.

"ராணி, நான் சொல்லச் சொல்ல பேசாமல் இருக்கிறயே! இன்னும் சிறிது நேரமானால் தண்ணீர் நின்று விடும். பிறகு சமையலுக்குத் திண்டாடிப் போகும். சட்டென்று இரண்டு பக்கெட் அடித்து எடுத்து வா" என்றார் அம்மா.

"என்னை டிஸ்டர்ப் பண்ணாதே அம்மா. நான் படித்துக் கொண்டிருக்கிறேன்" - பட்டென்று பதில் வந்தது மகளிடமிருந்து.

"குழந்தையை ஏன் தொந்திரவு பண்ணுகிறாய்? உனக்குத் தண்ணீர் தானே வேண்டும்! எங்கே அந்தத் தடியன் சேகர்? அவனை அடிக்கச் சொல்" என உரக்கச் சொன்னார் அப்பா ராகவன்.

"நன்றாகத்தான் இருக்கிறது நீங்கள் சொல்வது! யார் எந்த வேலை செய்வது என்று ஒரு கணக்கு இல்லையா? இப்படியே உட்கார்த்தி, உட்கார்த்தி அவள் நாளை போய் எப்படிக் குப்பை கொட்றது?" என்றாள் அம்மா லட்சுமி.

"அதைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அவள் போகிற வீட்டில் சமையல்காரி இருப்பாள். அவள் குப்பையைக் கொட்டுவாள். அவள் ஒன்றும் உன்னைப்போல் சமையல் அறையில் உழலப் பிறந்தவள் இல்லை. என் பெண்ணை உண்மையிலேயே ராணியைப் போல் தான் வாழ வைப்பேன்" என்றார் ராகவன் அழுத்தம் திருத்தமாக.

"ராணி எனப் பெயர் வைத்தால் ராணியாகி விடமுடியுமா? இன்னும் சொல்லப்போனால் ராணிப் பெருமை எல்லாம் புல் முளைத்துப் போய்விட்டது.-




பெண்ணைப் பெண்ணாக வளர்க்க வேண்டாமா? என்ன செல்லம் வேண்டியிருக்கு? எனக் கசந்து கொண்ட லட்சுமி பக்கெட்டை எடுத்துக்கொண்டு தண்ணீர் அடிக்கச் சென்றாள்.

ராகவன் மிகவும் உயர்வாக வளர்க்கிறோம் என்ற நினைப்பில் அவளை எந்த வீட்டு வேலையும் செய்ய அனுமதிப்பதில்லை. அவள் மிகவும் நன்றாகப் படிக்கிறாள் என்பதிலும், நாகரீகமாக ஆங்கிலம் பேசுகிறாள் என்பதிலும் ராகவனுக்குப் பெரிய பெருமை. வீட்டில் அவள் சொல்லுக்கு மாற்றுச்சொல் கிடையாது. அவள் நினைத்தது தான் நடக்கும்.ராணிக்கு படிப்பு அதிகமாக, அதிகமாக பருகுவதற்குக் கூடப் பானத்தைக் கையில் கொண்டு வந்து கொடுக்க வேண்டியிருந்தது. வீட்டில் ஓர் ஆண் மகனைப் போலத்தான் அவள் வளர்ந்தாள்.

பட்டம் பெற்றதும் நல்ல நிலையில் உள்ள கண் நிறைந்த பையனாகப் பார்த்து ராணியைத் திருமணம் செய்து கொடுத்தார் ராகவன். முடிந்த அளவு நன்றாகவே செய்தார். ஆனால் ராணியின் அன்னை லட்சுமி பயந்து கொண்டே தான் இருந்தாள். ராணிக்கு எந்தவித வீட்டு வேலையும் தெரியாது. இவள் அங்குபோய் எப்படிச் சமாளிப்பாள் என்ற கவலையும் லட்சுமியிடம் ஓங்கியிருந்தது.

நாசூக்காகவும் மிகவும் நாகரீகமாகவும் உடுத்தவும், பேசவும் தெரிந்த ராணிக்கு உள்புகுந்து வேலை செய்ய வணங்கவேயில்லை. தெரியவும் இல்லை. பிறந்த வீட்டில் நடந்தது போல் உட்கார்ந்த இடத்தில் எல்லாம் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தபொழுது அவளுக்குத் தன்னை அறியாமல் கோபம் பீறிட்டது.

கணவர் வீட்டுக்கு நான் என்ன சம்பளம் வாங்காத வேலைக்காரியா எனப் பொறுமினாள் அவள். அழகாகச் சிங்காரித்துக் கொண்டு கணவருடன் உல்லாசமாகப் பவனி வரவும், கேளிக்கைகளில் பங்கு பெறவும், புத்தகங்கள் படிக்கவும் தான் ராணி விரும்பினாளே தவிர வீட்டுக்குள் புகுந்து சமைக்கவும், வீட்டில் உள்ளோர் தேவைகளைக் கவனித்து செய்யவும் அவள் சிறிதும் விரும்பவேயில்லை. வீட்டில் எந்த வேலையையும் பொறுப்புடன் ஏற்று அவள் செய்வதில்லை. இதனாலேயே வீட்டில் எப்பொழுதும் மாமியாருக்கும், மருமகளுக்கும் சண்டை நடந்துகொண்டே இருந்தது.



சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் தன் தந்தைக்கு, 'புகுந்த வீட்டில் மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள். இவர்களுக்குக் கலையுணர்வே இல்லை. எப்பொழுதும் வீட்டு வேலை செய்துகொண்டிருக்க வேண்டும் என்கிறார்கள். மாமியார் ஓயாமல் கத்துகிறாள்' எனக் கடிதங்கள் எழுதிக் கொண்டே இருந்தாள்.

இதனைப் படித்ததும் ராகவன் பெரியதாகச் சத்தம் போடுவார். 'என்ன என்று என் பெண்ணை நினைத்தார்கள் இவர்கள்! அவளுடைய சாமர்த்தியம் என்ன? படிப்பு என்ன? அவர்கள் வீட்டில் மாவரைக்கவா என் பெண்ணை அனுப்பினேன்?' எனக் குதிப்பார்.

லட்சுமி சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம், "இப்படியெல்லாம் கடிதம் எழுதிக்கொண்டிருக்காதே ராணி. சின்ன விஷயத்தை எல்லாம் பெரிது செய்து அப்பாவிடம் நீ சொல்லிக்கொண்டு இருக்கக்கூடாது. பெண்களுக்குப் பொறுமையும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் மிக அவசியம். நீ சொல்வதைக் கேட்டு உன் அப்பா கோபப்பட்டுக் கத்துவது உன் தாம்பத்திய வாழ்வைப் பாதிக்கும்.கொஞ்சம் யோசித்துப் பார். நான் இப்படி நடந்து கொண்டிருந்தால் இன்று இந்தக் குடும்பம் என்று ஒன்று இருந்திருக்குமா? உண்மையிலேயே உன் அத்தையும், பாட்டியும் என்னை எவ்வளவு படுத்தியிருக்கிறார்கள் தெரியுமா?" என்றாள்.

"அது உன் தலையெழுத்து. நீங்க நான்கு பெண்கள்! உன் அப்பா ஒவ்வொரு பெண்ணையும் திருமணம் செய்து கொடுத்தால் போதும் என்று இருந்தார்.நான் என் அப்பாவின் செல்ல மகள். ஒரே மகள்" என்றாள் தலையை நிமிர்த்தி.

'எல்லாக் குடும்பங்களிலும் இந்த கோபதாபங்கள் இருக்கத் தான் செய்யும் ராணி. ஆண்களுக்கு இதைச் சமனப்படுத்தத் தெரியாது. படபடவென்று பேசிக் கெடுத்து விடுவார்கள். அதனால் இதை எல்லாம் அவர்களிடம் சொல்லவே கூடாது" என அம்மா கூறியது எல்லாம் பலன் இல்லாமல் தான் போயிற்று.

"ராணி ரொம்ப ஆசையாகக் கேட்ட பட்டுப் புடவையை வாங்கித் தர முடியாது எனச் சொல்லி விட்டாராமே மாப்பிள்ளை. அவள் குற்றாலம் அருவியைப் பார்க்க வேண்டும் என்றால் அதற்கெல்லாம் இப்பொழுது செலவு செய்ய முடியாது என்கிறாராம் மாப்பிள்ளை" என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார் ராகவன்.

'எனக்கு ஏன் தான் கலியாணம் என்று ஒன்றைச்செய்து இப்படி என் தந்தை .....! நான் எவ்வளவு ஜாலியாக ,சுதந்திரமாக இருந்தேன்" என அங்காலாய்த்துப்போனாள் ராணி.

வீட்டில் மாமியாருடன் பேசுவதில்லை, மற்றவர்களை லட்சியம் செய்வதில்லை என்ற ராணியின் போக்கு அவள் கணவரை மிகவும் கோபப்பட வைத்தது. ஆரம்பத்தில் அவள் கோபப்பட்டுக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போவது, பிறகு ஏதோ சமரசம் பேசி அவள் கணவர் அழைத்துப் போவது என்பதெல்லாம் படிப்படியாகக் குறைந்துவிட்டது. கடைசியாக அவள் கோபித்துக் கொண்டு பிறந்தகம்போனபோது அவள் கணவன் கவலையே பட்டுக் கொள்ளவில்லை. பேசாமல் இருந்து விட்டான்; இந்தக் காலகட்டம் அதிகமாகி விவாகரத்தில் முடிந்து விட்டது.

"போதும் இந்த அடிமை வாழ்வு! உனக்கு இருக்கும் அறிவுக்கும், புத்திசாலித்தனத்துக்கும் நீ நாட்டை ஆளப் பிறந்தவள் அம்மா. எவன் வீட்டுக்கோ சமையல்காரியாகப் போக என்ன தலையெழுத்து உனக்கு?" என்றார் அப்பா.

'இவர்கள் கண் முன் பெரிய பதவி வகித்துக் காட்டுகிறேன்' என வீரசபதம் போட்டாள் மகளும்.

இந்த முடிவை நினைத்து மனம் நொந்து ஒருவருக்கும் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டது அன்னை லட்சுமி தான்.

வருடங்கள் ஓடின. ராணி சொன்னபடி ஐ.ஏ.எஸ். தேறி நல்ல பதவியிலும் அமர்ந்து கொண்டாள்.

ராகவன் தலை நிமிர்ந்து நடந்தார். அவர் பெண் பெரிய பதவியில் அமர்ந்து விட்டாள். அந்த மாஜி மாப்பிள்ளை முகத்தில் கரி பூசியாகி விட்டது என்பதில் பெரிய திருப்தி.

'இதுவும் ஒரு வாழ்க்கையா? இதில் எல்லாம் அமைதி கிட்டுமா?' எனத் தனக்குள் குமைந்து கொண்டாள் லட்சுமி.

தந்தையும், மகளும் உலக விஷயங்களை அலசுவார்கள். விவாதிப்பார்கள். வேளா வேளைக்கு உணவைத் தயார் செய்துகொடுப்பது லட்சுமியின் வேலை.

'குழந்தை மழலையைக் கேட்டு மகிழ வேண்டிய இந்த நேரத்தில் இப்படி ஒரு வாழ்வா' என அலுத்துக்கொண்டாள் லட்சுமி.

ராணியின் காரியாலய வாழ்வும் அவ்வளவு இனிமையாக இருக்கக் காணோம். அவளுடைய படபடப்பு, வளைந்து கொடுக்காத முரட்டுத் தனம், எதிலும் தன் வார்த்தை தான் எடுபட வேண்டும் என்ற குணம் எல்லாமாகச் சேர்ந்து அவளை விரும்பத்தகாத அதிகாரியாகச் செய்து விட்டது. இதனால் அடிக்கடி அவளை ஊர், ஊராக மாற்றினர். எந்த இடத்திலேயும் எந்த முத்திரையையும் அவளால் பதிக்க முடியவில்லை.

ஒரு நாள் பக்கத்து வீட்டில் நடக்க இருக்கும் குழந்தையின் முதலாண்டு நிறைவு விழாவுக்கு அழைக்க அந்தப்பெண் வந்திருந்தாள். 'நீங்கள் அவசியம் முகூர்த்தத்துக்கு வந்து விடுங்கள். அக்காவுக்கு வேலை அதிகம். அவசியம் மாலை வரச்சொல்லுங்கள்' என்றாள்.

லட்சுமி முகத்தில் முறுவலுடன் தலையை ஆட்டினாலும் அவள் கண்களில் நீர் கோத்தது. ராணி விவாகரத்துச் செய்தவள் என்பதால் இந்த உலகம் எவ்வளவு நாசுக்காக அவளை ஒதுக்குகிறது. இவள் மிகவும் உயர்வாக நினைத்து இறுமாந்து போகும் இந்தப் பதவி எந்த விதத்தில் இவைகளை சமனப்படுத்துகிறது என்றும் நினைத்தாள்.

அன்று மாலை வரும்பொழுதே உடனடியாக வேறு ஊருக்குப் போக வேண்டும் என்ற உத்தரவோடு வந்தாள் ராணி.



மாற்றலைக் கேள்விப்பட்டதும் அதிர்ந்து நின்றனர் ராகவனும் லட்சுமியும்.

''இதற்கெல்லாம் ஒரு முடிவே கிடையாதா? நாம் என்ன நாடோடிகளா, நாளுக்கு ஓர் ஊருக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஓட? நீ படித்த படிப்புக்கு ஒரு மரியாதை இல்லையா?'' என ஆத்திரத்தில் படபடத்தார் ராகவன்.

''நீங்கள் என்னைக் கேட்டு விட்டீர்கள். இதை நான் எப்படி அவர்களிடம் கேட்கமுடியும்? இஷ்டமில்லாவிட்டால் வேலையை விட்டுப் போ என்பார்கள். வேலையையும் விட்டால் என் வாழ்க்கை என்ன ஆவது? வளைந்து கொடுத்துத் தான் சமாளிக்க வேண்டும்'' என்றாள் ராணி தொண்டையை அடைக்க.

''வளைந்து கொடுத்தால்தான் வாழ முடியும் என்பதை அன்றே நான் சொன்னேன். அப்பொழுது அது அடிமைத் தனமாக அப்பாவுக்கும் பெண்ணுக்கும் தோன்றியது. கட்டிய கணவனிடம் வளைந்து கொடுத்து வாழ முடியாது என்று சவால் விட்டபெண் இன்று யாருக்கோ, வளைந்து கொடுத்து வாழத் தயாராக இருக்கிறாள், உத்தியோகம் என்ற போர்வையில்! இதில் மட்டும் பெரிய கௌரவம் இருக்கோ? உன்னைச் சொல்லித் தப்பில்லை. இதற்கெல்லாம் முக்கிய காரணம் உன் அப்பா! உன்னைப் பெண்ணாக வளர்க்காமல் செல்லம் எனக்கூறி ஆணவத்தை வளர்த்தது தான்! பெண் கெட்டிக்காரியாக இருக்கலாம். ஆனால் பெண்மைக் குணம் இல்லாவிட்டால் வெற்றுக் காகித மலர் தான் அவள்!

''இப்பொழுது நான் கேட்கிறேன். எனக்கு சுய கௌரவம் கிடையாதா? விருப்பு வெறுப்பு கிடையாதா? அப்பாவுக்கும், பெண்ணுக்கும் வாய் திறக்காமல் வேளா வேளைக்கு நான் மட்டும் சமைத்துப் போட்டுக்கொண்டு இருக்கணுமா?'' லட்சுமியின் குரலில் இத்தனை நாட்களாக அடைத்து வைத்திருந்த ஆத்திரம் பீறிட்டது.

எங்குமே வாழ விரும்புபவர்கள் விட்டுக் கொடுத்து, வளைந்து கொடுத்து உடன் இருப்பவர்களை அரவணைத்து வாழ முற்பட்டால்தான் வாழ்வில் வெற்றி பெற முடியும். இன்பமாகவும் இருக்க முடியும். நீங்கள் மட்டும் இல்லை. உங்களைப் போல் எத்தனையோ தந்தைமார் பெண்ணை ரொம்ப அருமையாகவும், உயர்வாகவும் வளர்ப்பதாக நினைத்துக்கொண்டு இப்படித் தான் பெற்ற பெண்ணின் வாழ்க்கையை வீணாக்கி விடுகிறார்கள். கொடி வளைவதாக இருந்தால் தான் அழகாக இருக்கும். அது விறைத்துக் கொண்டு மரம்போல் இருந்தால் யார் தான் விரும்புவார்கள்? பெண்ணும் இனிமையாகப் பேசுபவளாக, எதற்கும் சமாளித்துக் கொண்டு அன்பை வளர்ப்பவளாக ,எல்லோரிடமும் நேசத்தை வளர்ப்பவளாக, எந்தக் கோபத்தையும் உடனே மறந்து விடுபவளாக இருக்க வேண்டும். பெண் உரிமை, கேட்டுப்பெறுவதில்லை. அன்பால் உருவாக்கிக் கொள்வதாகும். இப்படிப்பட்ட பெண் இருக்கும் இடமெல்லாம் இன்பம் இருக்கும். நீங்கள் வளர்த்திருக்கும் பெண் என்றும் தானும் துன்பப்பட்டுக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் துன்பத்தில் ஆழ்த்துபவளாகத்தான் இருக்க முடியும்' என்றாள் லட்சுமி அழுத்தமாக.

வாழ்க்கையில், முதன் முறையாக அம்மா சொல்வதை மறுக்க முடியாமல் ராணியின் கண்கள் தரையை நோக்கின.

''போகிறது! பிறக்கும் அட்சய வருடத்திலாவது உறுதி செய்து கொள். ஆணவத்தைத் துறந்து பெண்மைக்குரிய பெருமைகளோடு வாழ்வேன் என்று'' லட்சுமி கூறினாள்.

ஆமோதிப்பது போல் தலையசைத்தாள் ராணி, ராகவன் மௌனமானார். அந்த மௌனமே அவர் உணர்ந்ததைப் பேசியது.

# ராஜசேகரன் நினைவு ஓட்டம்



**ம. அரிகிருஷ்ணன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்.**

இராஜசேகரன் நினைவு ஓட்டம் ஏற்கெனவே சென்னை மாநகரில் 1985ஆம் ஆண்டு நடைபெற்றது. தற்போது மதுரை மாநகரிலும் மார்ச் 16ஆம் நாளன்று நடைபெற்றது. இந்த ஓட்டத்தை இந்திய விளையாட்டு ஆணைக்குழுவும், தமிழக இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையும் இணைந்து நடத்தின.

7 வயது முதல் 70 வயது வரை உள்ள ஆண், பெண் அனைவரும் ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் செலுத்தி இந்த ஓட்டத்தில் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டிருந்தது. பள்ளி, கல்லூரிகளும், பல்வேறு முக்கிய இடங்களிலும் முன் கூட்டியே நுழைவுச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

மார்ச் 16ஆம் தேதி காலை 6.30 மணிக்கு தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஓட்டம் துவங்கி பந்தயத்திடலில் முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று காலை 5 மணி அளவிலேயே பள்ளி, கல்லூரி மாணவிகளும், மற்றும் பொதுமக்களும் ஓட்டத்தில் கலந்து கொள்வதற்காக தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் கூடிவிட்டார்கள். ஏறக்குறைய 33,000 பேர் இதில் கலந்து கொண்டனர். மேலும் ஓட்டத்தைப் பார்க்க வந்திருந்த பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டார்கள்.

இராஜசேகரன் ஓட்டத்தில் பங்கேற்கப் பெருந்திரளாகக் கூட்டம் கூடிவிட்டதால், நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டி காலை 6.30க்குத் துவங்கவேண்டிய ஓட்டம் 6 மணிக்கெல்லாம் துவக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் வெள்ளைக் கொடியை அசைத்து ஓட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப., தமிழக இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை இயக்குநர் திரு ஆர். நாகராஜன், இ. ஆ. ப., மாநகராட்சி ஆணையர் திரு மா. தேவராஜ், இ. ஆ. ப., ஆகியோர் உடனிருந்தார்கள்.

தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியிலிருந்து அண்ணா சிலை, வைகை மேம்பாலம், அழகர் கோயில் சாலை வழியாக பந்தயத் திடல் வரை 5 கி.மீ. தொலைவு நடைபெற்ற ''இராஜசேகரன் நினைவு ஓட்டம் 1986'' இது வரை தமிழகத்தில் பார்க்க முடியாத அளவிற்கு பங்கேற்றவர்களையும், பார்வையாளர்களையும் கவர்ந்திருந்தது. அதிகாலையிலேயே இளைஞர்கள் உற்சாகத்துடன் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

கனடா நாட்டைச் சேர்ந்த டெரிபாக்ஸ் என்ற விளையாட்டு வீரர் புற்றுநோயினால் ஒரு காலை இழந்து செயற்கைக்கால் பொருத்திய நிலையிலும், நாட்டின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு ஓடிக் கடந்து, அதன் மூலம் நிதி திரட்டி, துன்புற்றவர்களுக்கு அளித்தார். இந்த மனிதாபிமான, குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, ''இராஜ

## 1. அண்டர்மகன் குறுவழுதியார்

பாடிய பாடல்கள் 4 : அகம். 150, 228;

குறுந். 345; புறம். 346.

இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்
தேர்
வரைமரு ணெடுமணற் றவிர்த்தனி ரசைஇத்
தங்கினி ராயிற் றவறோ தகைய
தழைதா ழல்கு லிவள்புலம் பகலத்
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென வொலிக்கு மாங்கட்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

(குறுந்—345. நெய்தல்)

பகல்வந்து ஒழுகுவானைத்
தோழி இரா வா என்றது.

## 2. இளங்தேவனார்

பாடிய பாடல்கள் 4

அகம். 58, 298, 328; நற். 41.

பைங்கண் யானைப் பருஉத்தாள் உதைத்த
வெண்புறக் களரி விடுநீ றாடிச்
சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்
பா(அ)ர் மலிசிறு கூவலிற் றணியும்
நெடுஞ்சேண் சென்று வருந்துவர் மாதோ
எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்
கிளரிழை அரிவை நெய்துழந்து அட்ட
விளருன் அம்புகை யெறிந்த நெற்றிச்
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே.

(நற்-41. பாலை)

பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலை
மகளைத் தோழிவலியல் கூறி வற்புறுத்
தியது.

## 3. இறையனார்

புலவர் தலைவர்

பாடிய பாடல்:1. குறுந்.2

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே.

திணை-குறிஞ்சி

துறை-இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழித்
தலைமகளை இயற்கைப்புணர்ச்சிக்கண்
இடையீடுபட்டு நின்ற தலைமகன் நாணின்
நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப் பயிறல்
முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திப் பாடு
மாற்றாற் கூடிய தனது அன்பு தோற்ற நலம்
பாராட்டியது.

## 4. உக்கிரப் பெருவழுதி

(கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெரு
வழுதி)

பாண்டிய நாட்டு வேந்தன்; அகநானூற்றைத்
தொகுப்பித்தவன்.
பாடிய பாடல்கள்: 2; அகம்.26; நற்.98.

எய்ம்முள் அன்ன பருஉமயிர் எருத்திற்
செய்யம்ம மேவற் சிறுகட் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதிற் றாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் நாடன்
எந்தை ஓம்பும் கடிப்புடை வியனகர்த்
துஞ்சாக் காவலர் இகழ்பதம் நோக்கி
இரவின் வரூஉ மதனினும் கொடிதே
வைகலும் பொருந்தல் ஒல்லாக்
கண்ணொடு வாராவென் நாரில் நெஞ்சே.
—நற்.98

திணை-குறிஞ்சி

துறை-இரவுக் குறிவந்து ஒழுகும் தலைவனைத்
தோழி வரைவுகடாயது.

## 5. ஒல்லையூர் தந்த பூதபாண்டியன்

பாண்டிய வேந்தன்; இவன் மனைவி பெருங்
கோப்பெண்டும் பாவலள் (பூதபாண்டியன்
தேவி பெருங்கோப் பெண்டு காண்க)

பாடிய பாடல்கள்:2; அகம்.25; புறம்.71.

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்(து),
அடங்காத் தானை வேந்த ருடங்கியைந்(து)
என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
அறனிலை திரியா அன்பி னவையத்துத்
திறனில் லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின வியக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களிமகிழ் நகை இழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்குநீள் குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்.
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே
—புறம்.71

திணை-காஞ்சி

துறை-வஞ்சினக் காஞ்சி

## 6. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்

பாடிய பாடல்கள் 6

புறம் 54,61,167,180,197,394.

நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்பு ணோய்
தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெ
திர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி-னெனவே.

புறம்—180

திணை-வாகை; துறை — வல்லாண்

முல்லை; பாணாற்றுப் படையுமாம்.
ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறனைப் பாடி
யது

## 7. மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்

பாடிய பாடல்கள்:7

அகம்.84, 207; குறுந். 90, 226,247;
நற்.69,261.

பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன்வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ லூங்கே

—குறுந். 226

திணை-நெய்தல்

துறை-வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற
தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

## 8. நக்கீரனார்

(மதுரைக் கணக்காயனார் மகனார்
நக்கீரனார்)

பாடியபாடல்கள்

அகம்.36, 57, 78, 93, 120, 126,141,
205, 227, 249, 253, 290, 310,
340, 346, 369, 389;

குறுந். 75, 105, 131, 143, 161, 266,
280,368;

நற். 86, 197, 258, 340, 358, 367;

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை;
புறம். 56, 189, 395,

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பேம் என்னே தப்புந பலவே.
புறம்.189

திணை-பொதுவியல்

துறை-பொருண்மொழிக் காஞ்சி.

## 9. நல்லந்துவனார்

கலித்தொகை தொகுத்தவர்

பாடிய பாடல்கள்: 39. அகம்.43; கலித்.
நெய்தற்கலி(33 பாடல்கள்); நற்.88;
பரிபா.6, 8, 11, 20

மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த உயர்மணல் எக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளலருந் துறைவ
கேள்;
ஆற்றுத லென்பதொன்றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப்
பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்
நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்
வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப்
பொறுத்தல்;
ஆங்கதை அறிந்தினி ராயினென் தோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பால் உண்பவர் கொள்கலம் வரைதல்
நின்றலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே.
—கலித்.நெய்.16.

துறை-தலைவன் தெருளாதவனைத் தெருட்டி
வரைவுகடாயது.

## 10. நல்லிறையனார்

பாடிய பாடல் 1; புறம். 393.

பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடல்நசை மறந்தவெங் குழிசி மலர்க்குங்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்
வள்ளன் மையினெம் வரைவோர் யாரென

சேகரன் நினைவு ஓட்டம்'' நடத்தப்பட்டது.

இராஜசேகரன் தமிழ்நாட்டிலுள்ள தஞ்சை மாவட்டத்தில் பிறந்து இந்தியாவின் சார்பில் பல தட களை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர். பல வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட ஒலிம்பிக் விளையாட்டு வீரர். இவர் தனது 42வது வயதில் இருதயநோயால் திடீரென மரணமுற்றார்.

கனடா நாட்டு டெரிபாக்ஸ் அவர்கள் கடைப்பிடித்த மனிதாபிமான அடிப்படையைக் கருத்தில்கொண்டு ''இராஜசேகரன் நினைவு ஓட்டம்'' ஏற்பாடு செய்யப்பட்டது.

இராஜசேகரன் நினைவு ஓட்டத்தில் கலந்து கொண்ட 33,000 நபர்கட்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 33,000 நபர்கள் ஓட்டத்தில் கலந்து கொண்டதால், போதிய சான்றிதழ்கள் இருப்பில் இல்லாததாலும், இருக்கும் சான்றிதழ்களைப் பெருந்திரளான கூட்டத்திற்கிடையே வழங்க இயலாது என்பதாலும், ஓட்டத்தில் கலந்து கொண்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தலைமை ஆசிரியர் மூலமாகவும், பொதுமக்கள் தங்கள் அனுமதிச் சீட்டின் மூலம் மாவட்ட விளையாட்டு அலுவலகத்திலும் மார்ச் 23ஆம் தேதிக்கு பின்னர் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயர்ந்த நோக்கத்திற்காக நடத்தப்பட்ட இராஜசேகரன் நினைவு ஓட்டத்தில், இளைஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டது, விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியைக் காட்டுகிறது.

## குறளின் பெருமை

அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களைக்கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

குறளை ஊன்றிப்படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அடங்கியுள்ளன.

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறியூட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் ''எங்கள் குறள்'', ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

—தந்தை பெரியார்



உலகத் தமிழ்ச் சங்கம்
மதுரை

# உலகம் போற்றும் உலகத் தமிழ்ச் சங்கம்

**1986** அட்சய ஆண்டு சித்திரைத் திங்கள் மலர்கின்றபோது அன்னைத் தமிழின் புகழ்வரலாற்றில் பொன்னேடு ஒன்று இணைக்கப்படுகிறது. ஆம்! அன்றுதான் உலகத் தமிழ்ச் சங்கம் உருவாகுகின்ற திருநாள்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்நெறியை உயிர் நெறியாகக் கொண்டு உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களையெல்லாம் இணைக்கின்ற நட்புப் பாலம் - நல்லுறவு மையம்-பண்பாட்டுப் பேரவையே - உலகத் தமிழ்ச் சங்கம்!

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரை மாநகரில் 1981இல் நடந்தேறியபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமது விழாப் பேருரையில் உலகத் தமிழ்ச் சங்கம் உருவாக்கப்படும் என்று உரைத்தார்கள். அது இன்று திட்டமாகக் கனிந்து, செயல் வடிவாகி உலகத் தமிழ்ச் சங்கமாக உருவாகியுள்ளது! தமிழ் கூறும் நல்லுலகின் இந்த நீண்ட நாள் கனவை நனவாக்கி உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தமது பொற்கரங்களால் 1986ஆம் ஆண்டு ஏப்ரல் 'திங்கள் 14ஆம் நாள் தொடங்கி வைக்கிறார் தமிழக முதல்வர் அவர்கள்.

வரலாற்றை உருவாக்கும் தமிழக முதல்வரின் தணியாத தமிழார்வத்தால் வையைக் கரையில் அமைகிறது உலகத் தமிழ்ச் சங்கம்!

தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் செழிக்கும் வண்ணம் செய்வதற்காக உலகத் தமிழ்ச் சங்கம் உருவாக்கப்படுகிற இந்த நன்னாளில், அன்று மதுரையிலிருந்து தமிழ்வளர்த்த மாபெரும் புலவர்கள் அறுபத்து இரண்டு பேரை நினைவு கூர்வதற்காக, நினைவுத் தூண் ஒன்று எழுப்பப்படுகிறது. காலத்தால் அழியாத சங்கப் புலவர் பாடல்களில் சில வரிகளும் அதில் இடம் பெறுகின்றன.

சங்கப் புலவர்கள் எந்தெந்த ஊரில் வாழ்ந்தார்களோ, அந்த ஊர்களிலேயே அவர்களுக்கு நினைவுத் தூண் அமைக்கப் பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விருப்பத்துக்கிணங்க, முதலில், சங்கம் வளர்த்த மதுரையைச் சார்ந்த புலவர்களுக்கு, கூடல்மாநகரில் நினைவுத்தூண் நிறுவப்படுகிறது.

அந்த நினைவுத் தூணில் அறுபத்து இரண்டு மதுரைச் சங்கப் புலவர்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. அவர்களில் சில புலவர்களின் பாடல் வரிகளும் இடம் பெறுகின்றன.

வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழியாகிய வளமார் தமிழுக்கு அமைக்கப்படுகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க நாளில் அறுபத்தி இரண்டு புலவர்களின் பாடல்களில் சிலவற்றை வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'



## 21. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்

பாடிய பாடல்கள்: 13. அகம். 33, 144,174, 244, 314, 344, 353 ,
குறுந். 188, 215.
நற். 82, 297, 321.
புறம். 388.

படரும் பைபயப் பெயரும் சுடரும்
என்றூழ் மாமலை மறையும் இன்றவர்
வருவர்கொல் வாழி தோழி நீரில்
வறுங்கயந் துழைஇய விலங்குமருப் பியானை
குறும் பொறை மருங்கின் அமர்துணை இழீக்
கொடுவரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கிற் சுரனிறந்தோரே.
— குறுந். 215

திணை - பாலை

துறை - பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

## 22. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

(அறுவை — துணி)

பாடிய பாடல்கள்:.12. அகம். 56, 124, 230, 254, 272,302,
குறுந். 185.
நற். 33, 157, 221, 344,,
புறம். 329.

இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி
நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீ இய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கைத் தாயினும் வரிமிடற்(று)
அரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்கண் நோக்கா திரவலர்க்(கு)
அருகா தீயும் வண்மை
உரைசால் நெடுந்தகை யோம்பு மூரே.
—புறம். 329

திணை - வாகை

துறை - மூதின் முல்லை.

## 23. மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார்

பாடிய பாடல்:1 குறுந் . 144.

கழிய காவி குற்றுங் கடல
வெண்டலைப் புணரி யாடியும் நன்றே
பிரிவில் ஆய முரியதொன் றயர
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல் பாற் படுப்பச் சென்றனள் மாதோ
சென்மழை தவழும் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விளங்குமலை நாடே.

திணை - பாலை

துறை - மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

## 24. மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்

பாடியபாடல்: 1. புறம். 309

இரும்புமுகஞ் சிதைய நூறி ஒன்னார்
அருஞ்சமங் கடத்தல் ஏனோர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவும்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
ஆற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளனென வெரூஉம் ஒரொளி
வலனுயர் நெடுவேல் என்னைகண் ணதுவே.

திணை-தும்பை

துறை-நூழிலாட்டு.

## 25. மதுரை இளங்கௌசிகனார்

பாடிய பாடல்: 1. அகம். 381.

அருஞ்சுரம் நீந்திய நம்மினும் பொருந்தார்
முனையரண் கடந்த வினைவல் தானைத்
தேனிமிர் நறுந்தார் வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ்கொண்ட மேனியள் நெடிதுயிர்த்து
வருந்துங்கொல் அளியள் தானே சுரும்புண
நெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை
எதிர்மலர் இணைப்போ தன்னதன்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.
(13-21)

திணை-பாலை

துறை-தலைமகன் இடைச்சுரத்துத்தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

## 26. மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்

பாடியபாடல்கள்:3 அகம்.102,348, நற்.273.

உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்
புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சாந்தின் ஊரல் இருங்கதுப்(பு)
ஐதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும்(1-9)
—அகம் 102

திணை-குறிஞ்சி

துறை-இரவுக் குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

## 27. மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்

(பாடம்: மேலைக்கடை)
பாடியபாடல்:1. புறம்.350

தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற்
சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொல் தானே தாங்காது
படுமழை உருமின் இரங்கு முரசிற்
கடுமான் வேந்தர் காலை வந்தெம்
நெடுநிலை வாயிற் கொட்டுவர் மாதோ
பொருதா தமருவ ரல்லர் போருழந்து
அடுமுரண் முன்பிற் றன்னையர் ஏந்திய
வடிவேல் எஃகிற் சிவந்த வுண்கட்
டொடிபிறழ் முன்கை யிளையோள்
அணிநல் லாகத் தரும்பிய சுணங்கே

திணை-காஞ்சி

துறை-மகட் பாற்காஞ்சி.

## 28. மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்

பாடிய பாடல்:2. நற்.250, 369.

நகுகம் வாராய் பாண பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவிற்
றேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைந்த சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாந்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினே மாகப்
பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறிருங் கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து
வெரூஉமான் பிணையின் ஒரிஇ.
யாரை யோவென் றிகந்துநின் றதுவே
—நற்.250

திணை-மருதம்

துறை-புதல்வனோடு புக்க தலைமகன் ஆற்றானாய்ப் பாணற்குரைத்தது.

## 29. மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார்

பாடிய பாடல்: 1. குறுந்.223.

பேரூர் கொண்ட ஆர்கலி விழவிற்
செல்வாஞ் செல்வாம் என்றி யன்றிவண்
நல்லோர் நல்ல பலவால் தில்ல
தழலும் தட்டையும் முறியுந் தந்திவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான்யாம் இன்னமால்இனியே

திணை-குறிஞ்சி

துறை-வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு, வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி கூறியது.

## 30. மதுரைக் கணக்காயனார்

இவர் நக்கீரனார் தந்தையார். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்'' என்னும் பெயரால் அறியலாம்.

பாடிய பாடல்:5.
அகம்.27, 338, 342;
நற்.23; புறம்.330;

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவன் ஆகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற்பெருங்
கடற்கு
ஆழி யனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மையோனே
—புறம்.330

திணை-வாகை

துறை-மூதின்முல்லை.

## 31, மதுரைக் கண்டரதத்தனார்

பாடியபாடல்:1. குறுந்.317

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்து,
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும் நாடன்
நம்விட்ட மையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே

திணை-குறிஞ்சி

துறை-பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

## 32, மதுரைக் கண்ணத்தனார்

பாடிய பாடல்: 2 அகம்.360. நற்.351.

இளமை தீர்ந்தனள் இவளென வளமனை
அருங்கடிப் படுத்தனை ஆயினுஞ் சிறந்திவள்
பசந்தனள் என்ப துணராய் பன்னாள்
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி
வருந்தல் வாழிவேண் டன்னை கருந்தாள்
வேங்கையங் கவட்டிடைச் சாந்திற் செய்த
களிற்றுத்துப் பஞ்சாப் புலியதள் இதணத்துச்
சிறுதினை வியன்புனம் காப்பிற்
பெருகுவள் மன்னோ எவன், தோழிதன் னலனே
—நற்351

திணை-குறிஞ்சி

துறை-தோழி அருகுசொத்தது.

## 33. மதுரைக்கவுணியன் பூதத்தனார்

பாடியபாடல்:1. அகம்.74.

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்
சிறந்து
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதுறு காலைக்
குருதி யுருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கிற் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்கும் தண்கமழ் புறவிற்
கருங்கோட் டிரலைக் காமர் மடப்பிணை
மருண்டமா னோக்கம் காண்டொறும் நின்
நினைந்து

திண்டேர் வலவ கடவெனக் கடைஇ
இன்றே வருவ ரான்றிகம் பனியென
வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும்
நின்வலித் தமைகுவன் மன்னோ அல்கற்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்
கோற்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருந்தாக் காலே

உள்ளிய உள்ளமொ டுலைநசை துணையா
...கவக மெல்லா மொருபாற் பட்டென
மலர்தா ரண்ணல்நின் நல்லிசை யுள்ளி
ஈர்ங்கை மறந்தவெ னிரும்பே ரொக்கல்
கூர்ந்த எவ்வம்விடக் கொழுநிணங் கிழிப்பக்
கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
ஈன்ற வரவி னாவுருக் கடுக்குமென்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
அகன்றுமடி கலிங்கு முடீஇச் செல்வமுங்
கேடின்று நல்குமதி பெரும மாசில்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
ஆடுமக ளல்கு லொப்ப வாடிக்
கோடை யாயினுங் கோடி. . .
காவிரி புரக்கும் நன்னாட்டுப் பொருந
வாய்வாள் வளவன் வாழ்கெனப்
பீடுகெழு நோன்றாள் பாடுகம் பலவே.

—புறம். 393.

திணை —- பாடாண் திணை; துறை—கடை
நிலை.
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய
கிள்ளிவளவனைப் பாடியது.

## 11. நல்வழுதியார்

(வழுதி-பாண்டியன்)
பாடியபாடல் 1. பரிபா.12.

வளிபொரு மின்னொடு வானிருள் பரப்பி
விளிவின்று கிளையொடு மேன்மலை முற்றித்
தளிபொழி சாரற் றதர்மலர் தாஅய்
ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்
அகரு வழைஞெமை யார மினையத்
தகரமும் ஞாழலும் தாரமும் தாங்கி
நளிகடல் முன்னியது யதுபோலும் தீநீர்
வளிவரல் வையை வரவு (1-8)

நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே
(101-2)

துறை-கார்ப்பருவத்து வையைநீர் விழவணியிற் பல்வேறு வகைப்பட்ட இன்பங் கூறி, இவ் வகைப்பட்ட இன்பத்தையுடைய நின்னையும் நினைத்திலரென வையையை நோக்கித் தலைமகன் கேட்பத் தோழி இயற்பழித்தது.

நந்நாகனார் இசை; பண்ணுப் பாலையாழ்.

## 12. பாண்டியன் அறிவுடை நம்பி

பாண்டிய நாட்டு வேந்தன்.

பாடிய பாடல்கள்: 4.
அகம்.28; குறுந்.230
நற். 15; புறம்.188.

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும்இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே.
புறம்,188

திணை-பொதுவியல்

துறை-பொருண்மொழிக்காஞ்சி

## 13. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

பாண்டிய வேந்தன்

பாடிய பாடல்.1; புறம்.183.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே

திணை-பொதுவியல்

துறை-பொருண்மொழிக் காஞ்சி

## 14. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்

(ஏனாதி, படைத் தலைவர்க்கு உரிய பட்டம்)

பாடிய பாடல்கள். 2; அகம். 373; குறுந். 156.

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொ லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ மயலோ இதுவே.
—குறுந். 156.

திணை-குறிஞ்சி

துறை-கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.

## 15. பாண்டியன் கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி

பாண்டிய நாட்டு வேந்தன்
பாடிய பாடல்கள்: 2 பரிபா.15; புறம்.182

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
—புறம்182

திணை-பொதுவியல்

துறை-பொருண்மொழிக்காஞ்சி.

## 16. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

பாண்டிய வேந்தன்.
பாடிய பாடல். 1. புறம். 72

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென் உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரு மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்(று)
உறுதுப் பஞ்சா துடல் சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎனாயிற்பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது.
கொடியனெம் இறையெனக் கண்ணீர்
பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக.
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக.
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூற
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே.

திணை-காஞ்சி

துறை-வஞ்சினக் காஞ்சி

## 17. பாண்டியன் பன்னாடு தந்தான்

பாண்டிய வேந்தன்.
பாடிய பாடல் 1. குறுந். 270

தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மலுள்ளமொடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாண்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே

திணை-முல்லை.

துறை-வினைமுற்றிப் புகுந்த தலைவன் கிழத்தியொடு உடனிருந்து கூறியது.

## 18. பாண்டியன் மாறன் வழுதி

பாண்டிய வேந்தன்.
பாடிய பாடல்கள். 2; நற். 97,301.

நீள்மலைக் கலித்த பெருங்கோற் குறிஞ்சி
நாள்மலர் புரைய மேனிப் பெருஞ்சுனை
மலர்பிணைத் தன்னமாயிதழ் மழைக்கண்
மயிலோரன்ன சாயற் செந்தார்க்
கிளியோ ரன்ன இளவிப் பனைத்தோட்
பாவை யன்ன வனப்பினள் இவளெனக்
காமர் நெஞ்சமோடு பலபா ராட்டி
யாய்மறப் பறியா மடந்தை
தேமறப் பறியாக் கமழ்கூந் தலளே.
— நற். 301.

திணை-குறிஞ்சி

துறை-சேட்படுத்துப் பிரிவின்கண் அன்பின் இயற்கையில் தகுவகையதோர் ஆற்றாமையினான் என்று தோழி தன்னுள்ளே சொல்லியது.

## 19. பெருவழுதி

(வழுதி — பாண்டியன்)
பாடிய பாடல்கள் 2; நற். 55, 56,

குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉம் கவின்பெறு காலை
எல்வளை நெகிழ்த்தோர்க் கல்ல லுறீஇச்
சென்ற நெஞ்சம் செய்வினைக் கசாவா
ஒருங்குவரல் நசையொடு வருந்துங்கொல்லோ
அருளா னாதலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்தவென் பொன்னிறம்
நோக்கி
ஏதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே.
—நற். 56.

திணை - பாலை

துறை - வரைவிடை மெலிவாற்றுவிக்குந் தலைவி சொல்லியது.

## 20. பூத பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு

பாண்டி நாட்டுப் பேரரசி. இவள் கணவன் பூத பாண்டியனும் பாவலன் (ஒல்லையூர் தந்த பூத பாண்டியன் காண்க)

பாடிய பாடல். 1; புறம் . 246

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் செல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே.
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளேட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே

திணை-பொதுவியல்

துறை-ஆனந்தப் பையுள்
பூத பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது.

இவள்நலந் தாரா தமைகுவ ரல்லர்.
என்னா வதுகொல் தானே தெண்ணீர்ப்
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொள் மருதின் பூஞ்சினை முனையிற்
காமரு காஞ்சித் துஞ்சும்
ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே.

திணை - காஞ்சி.

துறை - மகட்பாற் காஞ்சி.

## 46. மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்

பாடிய பாடல்:1. நற். 322.

ஆங்கனந் தணிகுவ தாயின் யாங்கும்
இதனிற் கொடியது பிறிதொன் றில்லை
வாய்கொல் வாழி தோழி வேயுயர்ந் (து)
எறிந்துசெறித் தன்ன பிணங்கரில் விடர்முகை
ஊன்தின் பிணவின் உட்குபசி களை இயர்
ஆளியங் கரும்புழை யொற்றி வாள்வரிக்
கடுங்கண் வயப்புலி யொடுங்கு நாடன்
தண்கமழ் வியன்மார் புரிதினிற் பெறாது
நன்னுதற் பசந்த படர்மலி யருநோய்
அணங்கென வுணரக் கூறி வேலன்
இன்னியங் கறங்கப் பாடிப்
பன்மலர் சிதறிய பரவுறு பலிக்கே

திணை-குறிஞ்சி.

துறை- 1) தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

2) தலைமகள் பாங்கிக்கு உரைத்ததூஉமாம்

## 47. மதுரைப்பாலாசிரியர் நப்பாலனார்

பாடிய பாடல்:1. அகம். 172.

வாரணம் உரறு நீர்திகழ் சிலம்பிற்
பிரசமொடு விரைகிய வங்குவெள் ளருவி
இன்னிசை யிமிழியங் கடுப்ப இம்மெனக்
கன்முகை விடாகஞ் சிலம்ப வீழும்
காம்புதலை மணந்த ஓங்குமலைச் சாரல்
இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்.
விரிமலர் மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து
வரிநுதல் யானை அரு நிறத் தழுத்தி
இகலடு முன்பின் வெண்கோடு கொண்டு தன்
புல்வேய் குரம்பை புலர ஊன்றி
முன்றில் நீடிய முழவுறழ் பலவிற்
பிழிமகிழ் உவகையன் கிளையோடு கலிசிறந்து
சாந்த நெகிழியின் ஊன்புழுக் கயருங்
குன்ற நாட நீ அன்பிலை யாகுதல்
அறியேன் யானஃ தறிந்தனெனாயன்
அணியிழை யுண்கண் ஆயிதழ்க் குறுமகள்.
மணியேர் மாணலஞ் சிதையப்
பொன்னேர் பசலை பாவின்று மன்னே.

திணை-குறிஞ்சி

துறை-தோழி தலை மகளை இடத்துய்த்து வந்து தலைமகனை வரைவு கடாயது.

## 48. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்

பாடிய பாடல்:1. அகம். 92.

நெடுமலை யடுக்கங் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குற்
குஞ்சரம் நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்கண் இரும்புலி குழுமஞ் சாரல்
வாரல் வாழியர் ஐய நேரிறை
நெடுமென் பணைத்தோள் இவளும் யானும்
காவல் கண்ணினம் தினையே நாளை
மந்தியும் அறியா மரம்பயில் இறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்
தண்பல் லருவித் தாழ்நீர் ஒருசிறை
உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
இருள்மென் கூந்தல் ஏமுறு துயிலே.

திணை-குறிஞ்சி

துறை-இரவுக் குறிச்சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்குந் தலைமகனை பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது.

## 49. மதுரைப் புல்லங் கண்ணனார்

பாடிய பாடல் :1. அகம் . 161.

வினைவயிற் பிரிதல் யாவது வணர்சுரி
வடியாப் பித்தை வன்கண் ணாடவர்
அடியமை பகழி யார வாங்கி
வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலைப்
படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி
எருவைச் சேவல் ஈண்டுகிளை பயிரும்
வெருவரு கானம் நீந்திப் பொருள் புரிந்(து)
இறப்ப எண்ணினர் என்பது சிறப்பக்
கேட்டனள் கொல்லோ தானே தோட்டாழ்பு
சுரும்புண ஒலிவரும் இரும்பல் கூந்தல்
அம்மா மேனி யாயிழைக் குறுமகள்
சுணங்குசூ ழாகத் தணங்கென வுருத்த
நல்வரல் இளமுலை நனையப்
பல்லிதழ் உண்கண் பரந்தன பனியே.

திணை-பாலை.

துறை-பிரிவுணர்த்திய தோழி தலைமகளது வேறுபாடு கண்டு, முன்னமே யுணர்ந்தாள் நம்பெருமாட்டியென்று தலைமகனைச் செலவு விலக்கியது.

## 50. மதுரைப் பூதனிள நாகனார்

பாடிய பாடல். 1 புறம். 276.

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்காழ் அன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பால் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாம் தானா யினனே.

திணை-தும்பை.

துறை-தானை நிலை

## 51. மதுரை பூவண்ட நாகன் வேட்டனார்

பாடிய பாடல்:1. நற். 317

நீடிருஞ் சிலம்பிற் பிடியொடு புணர்ந்த
பூம்பொறி யொருத்தல் ஏந்துகை கடுப்பத்
தோடுதலை வாங்கிய நீடுகுரற் பைந்தினை
பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவரும்
உயர்வரை நாட நீ நயந்தோள் கேண்மை
அன்னை அறிகுவ ளாயிற் பனிகலந் (து)
என்னா குவகொல் தானே; எந்தை
ஓங்குவரைச் சாரற் றீஞ்சுனை யாடி
ஆயமொடு குற்ற குவளை
மாயிதழ் மாமலர் புரைகிய கண்ணே

திணை-குறிஞ்சி

துறை-தோழி தலைமகனை வரைவு கடாயது.

## 52. மதுரைப் பெருங் கொல்லனார்

பாடிய பாடல்:1. குறுந். 141.

வளைவாய்ச் சிறுகிளி வினை தினை கடீஇயர்
செல்கென் றோளே அன்னை எனநீ
சொல்லின் எவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை இரும்புலி கொலைவல் லேற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிருள் நடுநாள் வருதி
சாரல் நாட வாரலோ வெனவே

திணை-குறிஞ்சி

துறை-இற் செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதமஞ்சிப் பகற்குறி நேர்ந்த வாய் பாட்டான் அதுவும் மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

## 53. மதுரைப் பெருமருதனார்

பாடிய பாடல்:1. நற். 241.

உள்ளார் கொல்லோ தோழி கொடுஞ்சிறைப்
புள்ளடி பொறித்த வரியுடைத் தலைய
நீரழி மருங்கின் ஈரயிர் தோன்ற
வாளரா வாடை யுளர்புநனி தீண்டலின்
வேழ வெண்பூ விரிவன பலவுடன்
வேந்து வீசு கவரியிற் பூம்புத லணிய
மழைகழி விசும்பின் மாறி ஞாயிறு
விழித் திமைப் பதுபோல் விளங்குடி மறைய
எல்லை போகிய பொழுதின் எல்லுறப்
பனிக்காற் கொண்ட பையுள் யாமத்துப்
பல்லித முண்கண் கலுழ
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே

திணை-பாலை

துறை-தலைமகன் வன்புறை எதிரழிந்தது-

## 54. மதுரைப் பெருமருதிள நாகனார்

பாடிய பாடல்:1 நற். 251.

நெடுநீர் அருவிய கரும்பாட் டாங்கண்
பிணிமுத லரைய பெருங்கல் வாழைக்
கொழுமுத லாய்கனி மந்தி கவரும்
நன்மலை நாடனை நயவாய் யாமவன்
அளியே ரன்பின் நின்குற லோப்பி
நிற்புறங் காத்தலுங் காண்போய் நீயென்
தனிநேர் மேனித் தொல்கவின் அழியப்
பலிபெறு கடவுட்பேணிக் கலி சிறந்து
நுடங்கு நிலைப் பறவை யுடங்குபீன் கவரும்
தோடிடங் கோடாய் கிளர்ந்து
நீடினை விளைமோ வாழிய தினையே.

திணை - குறிஞ்சி

துறை - சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

## 55. மதுரைப் பேராலவாயர்

(ஆலவாய் — மதுரை)

பாடிய பாடல்கள்: 6. அகம். 87, 296: நற். 51, 361, புறம். 247 , 262

யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எழுப்பி
மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்தல் இரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்குந்தன் இளமைபுறங்
கொடுத்தே.
— புறம். 247

திணை - பொதுவியல்

துறை - ஆனந்தப்பையுள்
பூத பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாளைக் கண்டுசொல்லியது.

## 56. மதுரைப் போத்தனார்

பாடிய பாடல்:1. அகம் 75.

கன்னெறிப் படர்குவே ராயின் நன்னுதற்
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்
வாய்
அவிர்தொடி முன்கை யாயிழை மகளிர்
ஆரந் தாங்கிய அவ்ர் முலை யாகத்(து)
ஆராக் காலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவின் உள்ளி யென்றும்
இரங்குந ரல்லது பெயர்தந் தியாவரும்
தருநரு முளரோ இவ்வுலகத் தானென
மாரி யீங்கை மாத்தளி ரன்ன
அம்மா மேனி ஐதமை நுசுப்பிற்
பல்காசு நிறைத்த கோடேந் தல்குல்
மெல்லியற் குறுமகள் புலந்துபல கூறி
ஆனா நோயை யாக யானே
பிரியச் சூழ்தலு முண்டோ
அரிதுபெறு சிறப்பின் நின்வயி னானே.
(9—23 )

திணை - பாலை

துறை - பொருள் வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது.

## 57. மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்

பாடிய பாடல்கள்:2. நற். 329,352.

வரையா நயவினர் நிரையம் பேணார்
கொன்றாற்றுத் துறந்த மாக்களின் அடு
பிணன்
இடுமுடை மருங்கின் தொடுமிடம் பெறாஅது
புனிற்று நிரை கதித்த பொறிய முதுபாறு

திணை-முல்லை.

துறை-தலைமகன் பிரிவின்கண் அழிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.

## 34. மதுரைக்கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்

பாடியபாடல்கள்:2. அகம்.170; புறம்.316.

கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக் கனந்தர்த் துஞ்சு வோனே
அவனெம் இறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவ ள் வைத்தனன்; இன்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்; இது
கொண்(டு)
ஈவதி லாளன் என்னாது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தோம் யாமகிழ் தூங்கச்
சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே
புறம்-316.

திணை-வாகை

துறை-வல்லாண்முல்லை.

## 35. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்

(பாடம்:காமக்காணி)

பாடியபாடல்:1 அகம்.204

உலகுடன் நிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போல் தானைக் கலிமா வழுதி
வென்றம ருழந்த வியன்பெரும் பாசறைச்
சென்றுவினை முடித்தன மாயின் இன்றே
கார்ப்பெயற் கெதிரிய காண்டகு புறவிற்
கணங்கொள் வண்டின் அஞ்சிறைத் தொழுதி
மணங்கமழ் முல்லை மாலை யார்ப்ப
உதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் நல்வினை நெடுந்தேர்
வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ளோப்பும்
காய்நெற் படப்பை வாணன் சிறுகுடித்
தண்டலை கமழும் கூந்தல்
ஒண்டொடி மடந்தை தோளிணை பெறவே.

திணை-முல்லை

துறை-வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

## 36. மதுரைக் காருலவியங் கூத்தனார்

பாடியபாடல்1. நற்.325

கவிதலை எண்கின் பருஉமயி ரேற்றை
இறைதேர் வேட்கையின் இரவிற் போகி
நீடுசெயற் சிதலைத் தோடுபுனைந் தெடுத்த
அரவாழ் புற்றம் ஒழிய ஒய்யென
முரவாய் வள்ளுகிர் இடப்ப வாங்கும்
ஊக்கருங் கவலை நீந்தி மற்றிவள்
பூப்போ லுண்கண் புதுநலஞ் சிதைய
வீங்குநீர் வாரக் கண்டும்
தகுமோ பெரும தவிர்கநுஞ் செலவே.

திணை-பாலை

துறை-தோழி செலவழுங்குவித்தது.

## 37. மதுரைக் கூத்தனார்

பாடியபாடல்:1 அகம்.334

ஓடா நல்லேற் றுரிவை தைஇய
ஆடுகொள் முரசம் இழுமென முழங்க
நாடுதிறை கொண்டன மாயிற் பாக
பாடிமிழ் கடலின் எழுந்த சும்மையொடு
பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்
வீழ்த்(து)
இரும்பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ
வணங்கிறை மகளிர் அயர்ந்தன ராடுங்
கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்
பெயல் தொடங்கின்றால் வானம் வானின்
வயங்குசிறை யன்னத்து நிரைபறை கடுப்ப
நால்குடன் பூண்ட கால்நவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிரா(து)
இனமயில் அகவும் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட் டாழி ஈர்நிலந் துமிப்ப
ஈண்டே காணக் கடவுமதி பூங்கேழ்ப்
பொலிவன அமர்த்த வுண்கண்
ஒலிபல் கூந்தல் ஆய்சிறு நுதலே

திணை-முல்லை.

துறை-வினைமுற்றிய தலைமகன் தேர்ப் பாகற்குச் சொல்லியது.

## 38. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

(மதுரைச் சீத்தலைச் சாத்தன்;
கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்)

பாடிய பாடல்கள்:10;
அகம். 53,134,229,306,320;
குறுந். 154, நற்.36, 127,339;
புறம்.59

ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பின்
தாள்தோய் தடக்கைத்-தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே என்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையை நின் பகைவர்க்குத்
திங்க ளனையை எம்ம னோர்க்கே
புறம்.59

திணை-பாடாண்டினை

துறை-பூவை நிலை
பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியது.

## 39. மதுரைக் கொல்லன் புல்லன்

பாடியபாடல்:1. குறுந்.373

நிலம்புடை பெயரினும் நீர்திரிந்து பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை
தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சிக்
கே டெவ னுடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்ப லூகக் கறைவிர_ லேற்றை
புடைத்தாடு புடைய பூநாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனோ டமைந்தநந் தொடர்பே

திணை-குறிஞ்சி

துறை-அலர் மிக்கவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

## 40. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்

பாடியபாடல்கள்;2. அகம்.363; நற்.285

அரவிரை தேரும் ஆரிருள் நடுநாள்
இரவின் வருதல் அன்றியும் உரவுக்கணை
வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமா னேற்றையொடு
மனைவாய் ஞமலி யொருங்குபுடை யாட
வேட்டுவலம் படுத்த உவகையன் காட்ட

நடுகாற் குரம்பைத்தன் குடிவயிற் பெயரும்
குன்ற நாடன் கேண்மை நமக்கே
நன்றால் வாழி தோழி என்றும்
அயலோர் அம்பலின் அகலான்
பகலின் வரூஉம் எறிபுனத் தானே
—நற்.285

திணை-குறிஞ்சி

துறை-தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைவன் கேட்ப அம்பலும் அலருமாயிற் றென்றுசொல் லியது.

## 41. மதுரைச் சுள்ளம போதனார்

பாடிய பாடல்: 1. நற். 215.

குணகடல் இவர்ந்து குருஉக்கதிர் பரப்பி
பகல்செழு செல்வன் குடமலை மறையப்
புலம்புவந் திறுத்த புன்கண் மாலை
இலங்குவளை மகளிர் வியனகர் அயர
மீனினந் தொகுத்த வூனெய் ஒண்சுடர்.
நீனிறப் பரப்பிற் றயங்குதிரை யுதைப்பக்
கரைசேர் பிருந்த கல்லென் பாக்கத்(து)
இன்று நீ இவனை யாகி எம்மொடு
தங்கின் எவனோ தெய்ய செங்கோற்
கொடுமுடி யவ்வலை பரியப் போகிய
கோட்சுறாக் குறித்த முன்பொடு
வேட்டம் வாயா தெமர்வா ரலரே.

திணை - நெய்தல்.

துறை - 1) பகற் குறி வந்து மீள்வானை அவள் ஆற்றுந் தன்மையள் அல்லள்; நீயிர் இங்குத் தங்கற் பாலீர்; எமரும் இன்னதொரு தவற்றினர் எனத் தோழி தலைமகற்குச் சொல்லியது.
2 இரவுக்குறிமறுத்து வரைவு கடாயதூஉமாம்

## 42. மதுரைத் தத்தங் கண்ணனார்

பாடிய பாடல்:1 அகம். 335.

இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருள்நன் குடைய ராயினும் ஈதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானும் அறிவென் மன்னே: யானைதன்
கொல்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்(து)
இன்னா வேனில் இன்றுணை யார
முளிசினை மராஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்..
(1—8)
நீரினும் இனிய வாகிக் கூரெயிற் (று)
அமிழ்த மூறும் செவ்வாய்
ஒண்டொடிக் குறுமகட் கொண்டனஞ்
செலினே(24-26)

திணை-பாலை

துறை - தலை மகன், பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவழுங்கி யது.

## 43. மதுரைத் தமிழக் கூத்தன் நாகன் தேவனார்

பாடிய பாடல்: 1 அகம். 164.

கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கரந்து மாறி
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலங்
காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலிற்
பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியேன் றன்றே வீகமழ் கானம்
எவன்கொல் மற்றவர் நிலையென மயங்கி
இகுபனி யுறைக்கும் கண்ணொடினைபாங்(கு)
இன்னா துறைவி தொன்னலம் பெறூஉம்
இதுநற் காலங் கண்டிசின் பகைவர்
மதில்முக முருக்கிய தொடிசிதை மருப்பிற்
கந்துகா லொசிக்கும் யானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே.

திணை - முல்லை.

துறை - பாசறைக்கண் இருந்த தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

## 44. மதுரைத் தமிழ்க் கூத்தனார்

பாடிய பாடல்:1 புறம். 334

காமரு பழனக் கண்பின் அன்ன
தூமயிர்க் குறுந்தாள் நெடுஞ்செவிக் குறு
முயல்
புன்றலைச் சிறாஅர் மன்றத் தார்ப்பிற்
படப்பொடுங் கும்மே. . பின்பு............
.........................னூரே மனையோள்
பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவும
ஊனொலி யரவமொடு கைதூ வாளே....:
பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையும் கைதூ வானே.
(1-7; 10-11)

திணை - வாகை.

துறை - மூதின் முல்லை.

## 45. மதுரைப் படைமங்க மன்னியார்

பாடிய பாடல்: 1. புறம். 351.

படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரும் மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் தானை
வென்றெறி முரசின் வேந்தர் என்றும்.
வண்கை எயினன் வாகை யன்ன

இறகுபுடைத் திற்ற பறைப்புண் தூவி
செங்கனைச் செறித்த வன்க ணாடவர்
ஆடுகொள் நெஞ்சமோ டதர்பார்த் தல்கும்
அத்த மிறந்தன ராயினும் நத்துறந்து
அல்கலர் வாழி தோழி உதுக்காண்
இருவிசும் பதிர மின்னிக்
கருவி மாமழை கடல்முகந் தனவே.

—நற்.329

திணை - பாலை.

துறை - பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவங் காட்டி வற்புறுத்தது.

## 58. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்

பாடிய பாடல்கள்:3. அகம். 247, 364; நற். 388.

அம்ம வாழி தோழி நன்னுதற்கு
யாங்கா இன்றுகொல் பசப்பே நோன்புரிக்
கயிறுகடை யாத்த கடுநடை யெறியுளித்
திண்திமிற் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைச்
கடல்மீன் தந்து கானற் குவைஇ
ஓங்கிடும் புன்னை வழிநிழ லிருந்து
தேங்கமழ் தேறல் கிளையோடு மாந்திப்
பெரிய மகிழுந் துறைவனம்
சிறிய நெஞ்சத் தகவல்வறி யானே.

—நற். 388.

திணை - நெய்தல்.

துறை - (1 வரைவு நீட ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகன் சிறைப்புறமாகச்சொல்லியது. 2) மனையுள் வேறுபடா தாற்றினாய் என்றாற்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்.

## 59. மதுரை மருதங்கிழார் மகனார் இளம் போத்தனார்

பாடிய பாடல்:1 குறுந். 332.

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந் தரும்படா தீர நீ நயந்து
கூறின் எவனோ தோழி நாறுயிர்.
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றகச் சிறுகுடி யிழிதரும்
மன்றம் நண்ணிய மனைகிழ வோற்கே

திணை - குறிஞ்சி

துறை - வரையாது வந்தொழுகா நின்ற காலத்துக் கிழவன் கேட்பக் கிழத்திக்குத் தோழி கூறியது.

## 60. மதுரை வேளாசான்

பாடிய பாடல்:1. புறம். 305.

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்.
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே

திணை - வாகை.

துறை - பார்ப்பன வாகை.

## 61. மாலைமாறன்

பாடிய பாடல் 1. குறுந். 245.

கடலங் கானல் ஆயம் ஆய்ந்தவென்
நலமிழந் ததனினும் நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றாழை
மாலை வேனாட்டு வேலி யாகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோ ரறியப் பரந்து வெளிப் படினே.

—குறுந். 245. நெய்தல்

வரைவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

## 62. முடத்திருமாறன்

பாடிய பாடல்கள் 2: நற் 105,228.

முளிகொடி வலந்த முள்ளரை யிலவத்து
ஒளிர்சினை யதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயில் மருங்கிற்
கடுநடை யானை கன்றொடு வருந்த
நெடுநீர் அற்ற நிழலி.லாங்கண்
அருஞ்சுரக் கவலைய என்னாய் நெடுஞ்சேட்
பட்டனை வாழிய நெஞ்சே குட்டுவன்
குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை
வண்டுபடு வான்போது கமழும்
அஞ்சி லோதி அரும்பட ருறவே.

— நற் 105 பாலை.

இடைச் சுரத்து மீளலுற்ற நெஞ்சினைத் தலைமகன் கழறியது.





உணவு, உடை, உறைவிடம் எப்படி ஒரு மனிதனுக்கு மிக மிக அவசியமோ, அதே போல் இசையும் மனிதனுக்கு மிகமிக இன்றியமையாததாகும். வாழ்நாள் முழுவதும் எங்கும் இசை! எதிலும் இசை! அப்படிப்பட்ட இசை வளர - வாழ-நாம் என்ன செய்யலாம்?





# இசைப்பயிர் வளர்ப்போம்

டாக்டர் சீர்காழி எஸ்.கோவிந்தராஜன்

நானும் பாடுகிறேன். எனது மைந்தன் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரமும் பாடுகிறார் என்பதை வைத்து நாங்கள் பரம்பரை இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று யாரும் எண்ணி விடாதீர்கள். எனது குடும்பம் இசைக்குடும்பம் அன்று. ஆனால், இசையை ரசிக்கும் குடும்பம். ஆம்! எனது அப்பாவும், சித்தப்பாவும் இசைப் பிரியர்கள்.

எங்கள் வீட்டில் கிராமபோன் பெட்டியில் செம்பை வைத்தியநாத பாகவதர், முசிறி சுப்பிரமணியம் போன்றவர்களின் கர்நாடக இசைப் பாடல்களும், தியாகராஜபாகவதர், பி.யூ. சின்னப்பா, எஸ்.ஜி. கிட்டப்பா போன்றோரின் பாமர ரஞ்சகமான கர்நாடக இசைப் பாடல்களையும் தாங்களும் கேட்டு, எங்களையும் ரசிக்க வைத்தார்கள். அதுவே, எனது இசை வாழ்வுக்கு வித்து விழுந்த முதலிடம். மெய் மறந்து கேட்போம். திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை போன்ற நாதசுர இசை மேதைகளின் நாதசுர இசைத்தட்டுக்களைக் கேட்டு, இசையிலே லயித்து இன்பத்தை உணர்ந்தேன்.

நான் பள்ளியில் ஆறாவது படிக்கும்போது, இசைக்குத் தனியான வகுப்பு ஒன்று இருக்கும். அதில் இசையாசிரியர் தேவாரம், திருவாசகம், திரு அருட்பா, கோபால கிருஷ்ண பாரதியார் பாடல்கள் போன்ற பல பாடல்களைப் பாடிச் சொல்லித் தருவார்கள். "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே" என்ற அருட்பா பாடலைப் பள்ளியில் இறை வணக்கமாகப் பாடுவோம். அந்தப் பாடலையே சீர்காழியில் உள்ள பூங்காவில், தந்தை பெரியார் அவர்கள் பொதுக் கூட்டத்தில் பேச வந்தபோது, நான் எனது 12வது வயதில் அவர்முன் பாடினேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அந்த இசைவித்து வளர்ந்தது பள்ளிப் பருவத்திலே தான்!

அந்த வயது அப்படி! பசுமரத்தாணி போல் பதியும் வயது. காதில் விழுந்த ஒவ்வொரு சொல்லும் நெஞ்சில் பதியும். உரை நடை உள்ளத்தைத் தொடுவதைவிட, இசை நடை அல்லவா நெஞ்சில் இடம் பிடித்து விடும்! நல்ல நல்ல பாடல்கள் என் இதயத்தை மெல்ல மெல்ல ஆட்கொண்டது. இசையும், அவை சொல்லும் நன்னெறிகளும் நெஞ்சில் நிறைந்தன.

அந்த நிறைவு தான் இன்று இறைவன் அருளால் என்னை ஓர் இசைக்கலைஞனாக ஆக்கி வைத்துள்ளது. தமிழிசைக் கல்லூரியிலும், கர்நாடக இசைக் கல்லூரியிலும் என்னை இசைபயில வைத்தது. என்னை "இசைமணி"யாகவும் சங்கீத வித்வானாகவும் ஆக்கியது. இன்று விஞ்ஞான யுகம்! திரைப்படங்களிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும் இசை முதலிடம் வகிக்கிறது. நல்லதை கிரகிக்கவும், அல்லதைத் தள்ளவும் உள்ளம் பயிற்சி பெறவில்லையே! உள்ளத்தில் நல்ல இசை இடம் பிடிக்க நாம் எதுவும் செய்யவில்லையே!

பள்ளிகளிலே ஐந்தாம் வகுப்பிலிருந்தே இசைக்கென ஒருநேரம் (வகுப்பு) ஒதுக்கி இளம் உள்ளங்







களை இசைவயப்படுத்தினால் நல்ல திசைகளிலே அந்தப் பிஞ்சு உள்ளங்கள் செல்லும். ''நீதி போதனை'' என்ற வகுப்பும் ''இசைப்பயிற்சி'' என்ற வகுப்பும் அவசியம் தேவைப்படும் இரண்டு கண்களாகும்.

தமிழிசைக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி போன்ற பல நிறுவனங்களின் இசை பயின்று வெளிவரும் எத்தனையோ பேர்களுக்கு வேலைவாய்ப்பும் தந்து இசையை வளர வைக்கலாம். இசை கற்றோரை வாழவும் வைக்கலாம்.

''நல்ல நல்ல பிள்ளைகளை
நம்பி- இந்த
நாடே இருக்குது தம்பி''—

என்று பொன் மனச் செம்மல், தமிழக முதல்வர், டாக்டர், எம். ஜி. ஆர். அவர்கள் அழுத்தம் திருத்தமாக வெளியிட்டுள்ளார். அந்த நல்ல நல்ல பிள்ளைகளை உருவாக்குவதில் இசை வகுப்புகள் நிச்சயம் பயன் தரும்; உள்ளங்கள் பலன் பெறும். எனவே பள்ளிகளில் இசையாசிரியர்களைச் சேர்த்து, அதன் மூலம் இசையுணர்வு ஊட்டுவோம்! இசைப்பயிர் வளர்ப்போம்! வாழ்க தமிழ்! வளர்க தமிழிசை!!


அண்ணாவின் கனவுகள் நனவாகும்
செயல்வடிவக் காட்சிகளுக்கு
தமிழரசு ஒரு சாட்சி...!

கோடித் தமிழர்கூடி மகிழும்
சிங்கார மாமதுரையின் சிறப்புக்கு
எங்கள் நிறுவனமும் ஒரு சாட்சி..!..!

போன்: 24117.

அம்சவல்லி உணவகம்,
40-41, கீழவெளி வீதி,
மதுரை-1.

ஜீவா & கோ

சேவையும் சுவையும் உவகை தரும்


—பரணி



# இன்னும் ஒரு மாணவிதான்



—எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

மாலையில் தபாலில் வந்த நீலக் கவரை மறுபடியும் எடுத்து விளக்கொளியில் பிரித்துப் பார்த்தாள் ஜகதா. மலர்போல அழகாக இதழ் விரித்த வண்ணமடல். உள்ளே அவளுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள் எழுதி அனுப்பி இருந்தாள் ஆசிரியை நிர்மலா.

மறுநாள் அவளுக்குப் பிறந்த தினம். அவளுடைய குடும்பத்தாருக்கே அது நினைவு இருக்குமோ என்னவோ? பதினாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து அவளுக்கு, சரியாக முதல் நாளன்று இந்த மாதிரி வாழ்த்துக் கடிதம் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, கார்வை ஏறிய ராகத்தின் அணுவைப்போல, நயம் துலங்கும் பொன்னின் மெருகைப்போல, மனத்தில் ஒரு உணர்ச்சி பரவி நிற்கிறது.

அன்று காலையிலிருந்தே வீட்டில் அமைதிஇல்லை. தினமும் தோன்றும் வாக்குவாதம்தான். இம்மாதிரி எத்தனை கோபங்கள் சண்டைகள்-வாய் மாத்திரம் அல்ல; கை மிஞ்சல் கூட—ஆனால் அவைகளே கடைசியில் அவளுக்கு வெற்றியாக அமைந்துவிடும். சாந்தா அவள் கண்டிப்புக்குப் பணிந்து விடுவாள்.

பெண்மையின் வளர்ச்சி முழுமையும் எட்டாமல், குழந்தைத்தனமாகவும் இருந்துவிடாமல்..சாந்தாவுக்குப் பதின்மூன்று வயது-பச்சை முற்றாத பருவம். எதைச் சொன்னாலும் பதிலுக்கு வார்த்தை வெடிக்கும். குரல் முனகல் குற்றம் காட்டும். படிக்கச் சொல்வது, வீணை வாசிக்கச் செய்வது, சமையலறையில் உதவிக்கு அழைப்பது, எல்லாவற்றுக்குமே பதில் அனல் வீசும் பார்வை தான்.

வாரத்துக்கு இரண்டு நாட்கள் எதிர் வீட்டில் 'டெலிவிஷன்', ஒரு சினிமா, ஒரு சபா நாடகம்என்று நேரம் நழுவி விடும்போது இவற்றுக்கு நேரம் மிஞ்சுவதில்லை. அதை ஜகதா சுட்டிக்காட்டினால் சாந்தாவுக்குச் சீற்றம் அலை சுருண்டு வரும். சிரிப்பும் இரு கூறாய் வெட்டுவது போலத் தான் உதிரும்.

குழந்தைகளைக் கண்டித்துத் தான் வளர்க்கவேண்டும் என்பது அவளுடைய கொள்கை. அதற்காகத் தன் தாய்மைப் பிரிவைப் பின்னுக்குத் தள்ளி வைக்க அவள் தயங்கியதில்லை. கல் மனம் வெளிப்படும் கடுமை. தடித்த பற்களிடையே சீறும் கோபம்-சாந்தாவுக்குத் தெரியும். அவை தன் நன்மைக்காகத்தான் என்று. ஆயினும் பதிலுக்கு உணர்ச்சிகள் புரளும்; கடைசியில் அவள் கைகள் அம்மாவின் கழுத்தை வளைத்துக் கொண்டு ஏளனம் மிளிரும் புன்னகையுடன் ராசி ஆகும் வரை.

'குழந்தைகளைக் கண்டித்துத் துன்புறுத்தக்கூடாது. அதுவும் பெண் குழந்தைகளை இப்படி வாட்டக்கூடாது. கலியாணம் செய்து கொண்டு போய்விட்டால் அப்புறம் வேணுமென்றால்கூடக் கனிவைக் காட்ட உனக்குச் சந்தர்ப்பம் இராது' என்று குறுக்கிடுவான் கணவன் விசுவம்.

வீட்டில் இப்படி மூன்று பக்கமாக, வாதங்கள் சேர்ந்து கொள்ளும்போதுதான் குரல் ஓங்கி, உணர்ச்சிகள் முற்றிவிடும். வேகம் படிப்படியாக உயர்ந்து, படுதாவாய்ப் படர்ந்த குரல் நடுக்கங்களை எட்டி, அழுகையில் முடிந்துவிடும். அப்படியும் ஜகதாவின் மனம் இளகாது. அதைக் கண்டு விசுவத்துக்குப் பற்றிக் கொண்டு வரும். கும்மட்டியின் நடுக்குழியில் தேங்கிக் கணகணக்கும் குங்குமப் பிழம்பாய் முகம் மாற 'விர்' ரென்று வெளியே போய்விடுவான்.

அன்று வெளியே போகவில்லை அவள். கைமிஞ்சி சாந்தாவை அடித்துவிட்டாள். அதன் எதிரொலியாய் அவனும் அவளை அடித்துவிட்டான். அன்று முழுவதும் அப்புறம் தேங்கி நின்ற மௌனம்தான். வீட்டில் கனமாய் அழுந்தும் நிசப்தம் தான். இப்போது வேளை ஒய்ந்து, வேலையும் ஒய்ந்து தலை, தலையணைமீது சாயும் நேரத்தில், புரண்டெழும் உணர்ச்சிகளின் பெருக்கு.

அந்த நாள் ஆசிரியையின் ஞாபகம். வருகிறது. நிர்மலாவின் கண்டிப்பும் கடுகடுத்த முகமும் நினைவுக்கு வருகின்றன. முடிவிலாத ஊர்வலமாய் நெஞ்சத் திரையில் நகரும் நிகழ்ச்சிகள்.

அவளுடைய ஐந்து வருடக் கல்லூரிப் படிப்பும் ஒரே இடத்தில்தான். ஆனால் கடைசி இரண்டு ஆண்டுகளில்தான் அவள் ஆசிரியை நிர்மலாவை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியதாயிற்று. கடுகடுப்பும் துரிதமும் அவளுடைய கவசங்கள். கண்டிப்பும் கட்டுப்பாடும் அவளுடைய இணைகோடுகள். அந்த இரண்டு கோடுகளில்தான் நிதானமாக ரயில்போல அவளுடைய வேலைகள் ஓடிக்கொண்டிருக்கும். அந்தத் தண்டவாளங்களிலிருந்து அந்த இரயில் இறங்கியதே இல்லை.

எல்லா மாணவிகளுக்குமே அந்தக் கெடுபிடியைக் கண்டால் பயம். அது என்ன நடுக்கமோ? அவர்கள் உலகமே பயமயம். அதிலே கொஞ்சம் கால் ஊன்றி நிமிர்ந்தவள் ஜகதா மட்டும் தான்.

''என்ன செய்து விடுவாள் பார்க்கலாம்? நேருக்கு நேர் மறுத்தால் தானே சீற முடியும்? மறைமுகமாகக் கிண்டல் செய்தால் என்ன செய்வாளாம்?'' என்று கேட்பாள் ஜகதா. ''செய்து பாரேன்'' என்று சவால் விட்டவர்களும் உண்டு. ''உனக்கு ஏன் இந்த வம்பெல்லாம்?'' என்று எச்சரிக்கை செய்தவர்களும் உண்டு. இளமை முறுக்கேறிய பருவம்; கிண்டல் என்றால் கொண்டாட்டம் என்று, கை-

தட்டிக் கலீர் என்று சிரிக்கும் மனப்பான்மை.

கல்லூரியில் நடந்த விழாவில், பல்கலை நிகழ்ச்சியில் ஜகதா மாறு வேடப் போட்டியில் கலந்து கொண்டாள். நிர்மலாவைப் போலவே உடை அணிந்து, மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு, கூந்தலை அரைகுறை நரையாக்கி கறுப்புச்சாயம் போட்டு ஜோடித்துக் கொண்டு, கடுகடுவென்ற முகத்துடன் கொப்புளிக்கும் குரலில் அவள் பேசியபோது, பலருக்கும் புரொபஸர் நிர்மலாவே மேடைக்கு வந்துவிட்டாளோ என்று ஒரு சந்தேகம்.

பார்க்க வந்திருந்தவர்களிடையே ஏகப்பட்ட கைதட்டல், சிரிப்பு, மாணவிகளுக்குக் கரை கடந்த உற்சாகம், பலமான பாராட்டுக்களுக்கு நடுவே ஜகதாவுக்கு முதற்பரிசும் கிடைத்து விட்டது. பிரின்ஸிபால் கொஞ்சம் குஷிப்பேர் வழி. அந்தப் பரிசை புரொபஸர் நிர்மலாவின் கைகளாலேயே அவளுக்குக் கொடுக்கச் செய்தார்....

மேடையில் நேருக்குநேர் அப்படிச் சந்தித்துக் கொண்டபோது, நிர்மலாவின் துருவும் பார்வை அவளை ஒரு கணம் நடுங்க வைத்து விட்டது. கடுகடுப்பான முகத்துக்கு அந்த மலர்ச்சி ஒரு முகமூடிதானோ என்று ஒரு சந்தேகம். கை குலுக்கியபோதுகூட விரல்கள் இரும்புப் பிடியாகத்தான் இருந்தன.

''ஜகதா, இனிமேல் பாரேன். உனக்கு ஓயாத தொந்தரவுகள் தாம். நிர்மலா உன் கிண்டலை 'ஸ்போர்டிவ்' ஆக எடுத்துக் கொள்ளவில்லை'' என்று தோழிகள் பயமுறுத்தினார்கள். அவள் பயப்படவில்லை. ஆனாலும் அடி நெஞ்சில் ஏதோ ஒரு கலக்கம் தலைகாட்டி நச்சரித்தது.

எவ்வளவோ சிரமப்பட்டு 'ரிகார்ட்' நோட்புக்கை அழகாகத் தயார் செய்வாள். ஆனால் மார்க்கு சுமாராகத்தான் விழும். நிச்சயமாக ஒரு 'வெரிகுட்' கிடைக்கும் என்று நினைத்துக் கட்டுரையைத் தயார் செய்திருப்பாள், ஆனால் அதன் பக்க ஓரத்தில்பதிவாகும் குறிப்பு, ''முயன்றால் இதை விட நன்றாக நீ செய்ய முடியும்'' என்பதுதான். அதைப் படித்தால் இன்னும் சிறப்பாக முயலவேண்டும் என்ற உணர்ச்சிதோன்றாது. அலுத்துச் சலித்து நோட்புக்கைப் 'பொத்' தென்று மேஜை மேல் போடத்தான் தோன்றும்.



நிர்மலாதான் ஹாஸ்டல் வார்டன். இரவு பத்து மணி வரையில் படிக்க வேண்டும். சற்று அசந்துபோய்த் தூங்கி விட்டால் ஒரு ரூபாய் அபராதம். மறுநாள் அந்தப் பெயர் நோட்டீஸ் பலகையில் பளிச்சென்று வெளியாகி விடும். நாலைந்து பேராய் வந்து விசாரிக்கும்போது, வெட்கத்தின் கீறலில் நெஞ்சில் இரத்தம் வடியும். அன்று முழுவதும் சாப்பாடு இறங்காது.

கல்லூரிப் படிப்பைத் தவிர ஏதாவது ஒரு பொது சேவை செய்ய வேண்டும் என்பது கட்டாயம். அவளும் மற்ற சில தோழிகளும் கோழி வளர்ப்பை எடுத்துக் கொண்டிருந்தார்கள். கண்காணிப்பாய் கவனிக்க வேண்டிய வேலை. தீவனம் போடுவது, சுத்தம் செய்வது, சிறு நோய் கண்டாலும் உடனே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வது, எல்லாவற்றிலுமே அனுபிசகாத, கத்தி முனை நடைதான்.

ஜகதாவின் கவனம் சற்றே பிசகிவிட்டது. அவள் பொறுப்பிலிருந்த பத்துக் கோழிகளில் நான்கு நோய்கண்டு இறந்து விட்டன. அறைக்கு வரச் சொல்லி நிர்மலாவிடமிருந்து அழைப்பு வந்தது. முதல் தடவையாக ஒரு நடுக்கத்துடன் போனாள் ஜகதா. நெஞ்சில் அடக்க முடியாமல் ஒரு தவிப்பு அலை மோதிற்று.

நிர்மலா அவளை முகம் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஜன்னலைப் பிடித்துக்கொண்டு, வெளியே பார்த்தபடி நின்றிருந்தாள். அவள் குரலின் அரவம் தணல் மாதிரி ஜுவலித்துக் கொண்டு சிந்திற்று. ஒரு நாள் முழுவதும் வெயிலில் தனியாக நின்றுசெய்ய வேண்டிய தோட்ட வேலை — அதுதான் தண்டனை.

தவறு செய்யாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் அதில் சிலர் தாம் இப்படி அகப்பட்டுக் கொள்கிறார்கள். காற்றில் அலையும் சருகுபோல உடல் நடுங்கிற்று. எத்தகைய அவமானம்? நாள் முழுவதும், மற்றப் பெண்கள் எல்லோரும் பார்த்துக் கேலியாகச் சிரித்துக் கொண்டு போக, அவள் வியர்வை வடிய, வெயிலில் நின்று வேலை செய்தாக வேண்டும். இதிலிருந்து தப்ப வழி இல்லை.

ஜகதா மன்னிப்புக் கேட்டுக் காலில் விழுந்திருக்கலாம். ஆனால் அதற்கு அவள் மனம் ஒப்பவில்லை. அந்தத் தண்டனையையும் தலை வணங்காமல், ஒரு வீம்புடன்தான் ஏற்றுக் கொண்டாள். நாளின் முடிவில், மூச்சிறைப்பு காற்றில் பறக்கும் இறக்கை உதிரிபோல முன் தள்ள, தொய்ந்து போன பார்வையுடன் மறுபடியும் நிர்மலாவின் அறைக்கு வந்து அவள் முன் நின்றபோது...

''தண்டனையை ஒப்புக்கொண்டு நிறைவேற்றிவிட்டது பெரிது இல்லை ஜகதா. இதிலிருந்து தவற்றை உணர்ந்து மறுபடி அது நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இதற்குத் துளிக்கூடப் பலன் இல்லை'' என்று முகம் சிறிதும் கலையாமல், குரல் இளகாமல் சொன்னாள் நிர்மலா.

''தாங்க்யூ மேடம்''! என்று சொல்லிவிட்டு, முகம் முழுவதும் வியர்வை ஸ்நானமாய்க் கொட்ட அறைக்குத் திரும்பியபோது நெஞ்சில் இடித்த அவமான உணர்ச்சி? ''எனக்கும் ஒரு சந்தர்ப்பம் வரும் பதிலுக்குக் காட்டுகிறேன்' என்று கறுவிக் கொண்ட ஆற்றாமை...!

ஜகதாவுக்கு அது கடைசி ஆண்டுப் படிப்பு. நிர்மலாவுக்கும் கல்லூரியில் அது கடைசி ஆண்டுப்பணி. அவர்களுடைய இறுதிப் பரீட்சை வருவதற்கு ஒரு மாதம் முன்பாக வேலையிலிருந்து ஓய்வு பெற்று விலகி விட்டாள் நிர்மலா.

''மேடம்! உங்களுக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்த வேண்டும் என்று நினைக்கிறோம். நீங்கள் மறுக்கக்கூடாது'' என்று தன் பதினைந்து தோழிகளுடன் அவள் முன் போய் நின்றாள் ஜகதா. நிர்மலாவுக்கு அந்த வேண்டுகோள் நம்பக் கூடியதாகவே இல்லை. கல்லூரியில் வேறு எந்தப் பிரிவிலும் அவள் எந்த உபசாரத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே குரலில் ''நீங்கள் எங்களுக்கு அம்மா மாதிரி. நீங்கள் எங்கள் வேண்டுகோளை மறுக்கக் கூடாது'' என்று சொன்னபோது அவளால் தட்ட முடியவில்லை.

சிற்றுண்டி முடிந்து ரோஜா மாலையும் போட்ட பிறகு ஜகதா எழுந்து நிர்மலாவைப் பாராட்டிப் பேசினாள். ''உங்களைப்போன்ற கருணை உள்ளம் படைத்த ஒருவரை நாங்கள் பார்த்ததே கிடையாது. என்ன தயாளம்? எவ்வளவு இரக்கமான சுபாவம்? எங்களை எவ்வளவு தூரம் அன்பொழுக நடத்தி இருக்கிறீர்கள்? எங்களுடைய சிறு சாதனைகளையும் எவ்வளவு தாராள மனத்துடன் பாராட்டி இருக்கிறீர்கள்? இந்த அன்பையும் பரிவையும் எங்கள் ஆயுள் முழுவதும் மறக்க மாட்டோம்....''




பேச்சில் கிண்டலும் பரிகாசமும் விளையாடின. ஒவ்வொரு சொல்லும் மெதுவாக ஏறும் ஊசி போலக் குத்திற்று. அத்தனை மாணவிகளும் நமுட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அசைவின்றி இடிந்தாற்போல உட்கார்ந்திருந்த நிர்மலாவைப்பார்த்து, உள்ளூற ஒரு குரூரத் திருப்தி நிறையப் பேசிக்கொண்டு போனாள் ஜகதா.

பேச்சு முடிந்தது. 'மேடம்! எங்களுடைய ஞாபகார்த்தமாக இது உங்களிடம் இருக்கட்டும்'' என்று ஒரு ஆல்பத்தை அவளிடம் கொடுத்தாள் ஜகதா. அதைப் பெற்றுக் கொண்டு ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டு வந்தாள் நிர்மலா.

ஒவ்வொரு மாணவியின் புகைப்படமும் அதில் ஒட்டப்பட்டிருந்தது. அடியில் மாணவியின் பெயரும், பிறந்த நாளும், அவள் படித்த வகுப்பு ஆண்டுகளும் குறிக்கப்பட்டிருந்தன. சிறு புன்னகையுடன் புரட்டிக்கொண்டே வந்தாள் நிர்மலா. கடைசிப் பக்கத்துக்கு வந்ததும் அவள் பார்வை நின்றது. அந்தப் புன்னகையும் மறைந்து விட்டது. அதை எதிர்பார்த்ததே போல, பெரிய சிரிப்பு ஒன்று - அந்தக் கூட்டத்திலிருந்து எழுந்து அடங்கிற்று. ஒரு நிமிடம் புளியம்பழம் உதிர்ந்தது போன்ற கைதட்டல்.

ஜகதா ஒரு வெற்றிப் புன்னகையுடன் நிர்மலாவைப் பார்த்தாள். ஆனால் அவள் பார்வை அந்தப் பக்கத்திலிருந்து அசையவே இல்லை. கடுகடுவென்ற முகத்துடன், கண்டிப்பான பார்வையுடன், பெண்மைக்குப் பொருந்தாத கடின உணர்ச்சியுடன், அந்தப் பக்கத்தில் வரைந்திருந்த சிறு ஓவியத்தில் காட்சி அளித்தாள் நிர்மலா. அதன் அடியில் இருந்த குறிப்பில் அவளுக்குக் 'கடுவன் பூனை' என்று ஒரு பட்டமும் அளிக்கப்பட்டிருந்தது!

நிர்மலா எழுந்து நின்றாள். அவளுடைய கண்கள், வாழ்க்கையிலேயே முதன் முறையாக இளகி இருந்தன. பேசத் தொடங்கினாள். கம்மிய குரலில் சொற்கள் வெளிப்பட்டன. ஆனால் அதில் கலக்கமோ நடுக்கமோ இல்லை.

''இதை என்னுடைய வாழ்நாளிலேயே மறக்க முடியாத ஒரு நாளாகச் செய்துவிட்டீர்கள். நான் இன்று மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்.''

ஜகதா உற்று விழித்துப் பார்த்தாள். மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் நிர்மலாவின் முகம் பிரசன்னமாக இருந்தது. அவளுடைய உணர்ச்சிகளில் ஒளிவு மறைவு இல்லை.

''நான் வாழ்ந்து பழகியதைப் போல ஒரு ஆசிரியையாக இருப்பது மிகவும் கடினம். ஆனால் ஒரு ஆசிரியை அப்படி இருப்பது தான் மாணவிகளுக்கு ரொம்ப நல்லது. நான் சுலபமாக ஒரு 'பாப்புலர்' ஆசிரியையாக இருந்திருக்கலாம். நான் கடைப்பிடித்த கண்டிப்பும் கட்டுப்பாடும் மாணவிகளுக்குப் பிடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். எனக்கு நீங்கள் கடுவன் பூனை என்று பெயர் வைத்தது எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும்.

'இந்த சர்வீஸில் முப்பது ஆண்டுகளாக நான் உங்களுக்காக வாழ்ந்திருக்கிறேன். உங்களிடம் நான் எதிர்பார்த்த கொள்

கைகள், வரவழைக்க நினைதத திறமை, எல்லாமே சற்று அதிகம் தான். ஆனால் உங்களால் அந்த அளவுக்கு உயர முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் விட்டுக் கொடுத்திருக்க லாம். ஆனால் அப்போது நான் என்னையே ஏமாற்றிக் கொண்ட வளாக ஆகி இருப்பேன்.

''வாழ்க்கையில் எப்போதும் இதைவிட என்னால் உயர முடியும். இதைக் காட்டிலும் சிறப்பாகச் செய்ய முடியும்'', என்று நினைத்துக் கொண்டே செயல்படுங்கள். நீங்கள் அப்படி வாழ வேண்டும் என்பதுதான் என் ஆசை. அப்படி உங்களை வளர்க்கப் பாடுபட்ட நான் கொடுத்த சிரமங்களை எல்லாம் மறந்து விடுங்கள். என்னைக்கூட மறந்துவிடுங்கள். பரவாயில்லை. அந்த உன்னதமான குறிக்கோள் மட்டும் இருந்தால் போதும்.''

நிர்மலா பேசிவிட்டு உட் கார்ந்து விட்டாள்; எல்லோரு டைய கண்களும் நனைந்திருந் தன. இந்த முறையும் நிர்ம லாவை அவர்களால் ஜெயிக்க முடியவில்லை. விடைபெறும் போது, குலுக்கிய கை விரல்கள் உணர்ச்சி மிகுதியினால் நடுங் கின....

பதினாறு ஆண்டுகள் ஆகி விட்டன. நிர்மலா யாரையும் மறக்கவில்லை. அவர்கள் கொடுத்த 'ஆல்பத்தை' வைத் துக்கொண்டு ஒவ்வொருவருக் கும் ஞாபகமாக, பிறந்தநாள் வாழ்த்து அனுப்பிக்கொண்டிருக் கிறாள்.

ஆசிரியை சொன்ன வார்த்தை களை அவளும் மறக்கவில்லை. கண்டிப்பாக இருப்பது ஜகதாவின் வாழ்க்கையில் ஒரு அம்சமாக ஆகிவிட்டது. ஆனால் அதற்குக் கிடைத்த பலன்? அவளுடைய மகள் அவளை வெறுக்கிறாள். அவளுடைய கணவன் அவளு டைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு பாராட்டுவதில்லை. இருந்தாலும் அவளால் அந்தக் கொள்கையை விட முடியவில்லை. நிர்மலா அன்று எப்படி உணர்ந் திருப்பாள் என்ற அனுபவத்தை இப்போது அவளால் அந்தரங்க மாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

அவள் நிலை நிர்மலாவைப் போலச் சுலபமானது இல்லை. அது எளிய வாழ்க்கையை மக்கள் நம்பி எளிமையாக இருந்தகாலம். இப்போது அப்படி இல்லை. அது கல்லூரியில் கழித்த சில ஆண்டுகள். இது ஒரு முழு வாழ்க்கை. நோட் புத்தகத்தில் அவளுக்கு நிர்மலா எழுதிய குறிப்பு இன்னும் மறக்கவில்லை. ''முயன்றால் இதைவிட இன்னும் நன்றாக நீ செய்ய முடியும்''— அதை அவள் தன்னுடைய வாழ்க்கையில் எடுத்துச் சொல் வது சுலபமாக இல்லைதான்.

வாழ்க்கையிலும் இன்னும் அவள் மாணவியாகவே இருக் கிறாள். படித்து, அனுபவத்தில் கற்று, தெரிந்து கொள்ள வேண் டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது....

விடிந்து விட்டது.

அன்று அவளுக்குப் பிறந்தநாள். ஆனால் சாந்தாவுக்கோ, விசு வத்துக்கோ ஞாபகம் இருந்த தாகக் கூடத் தோன்றவில்லை. மறக்காமல் அவளை வாழ்த்திய வள் ஆசிரியை நிர்மலா தான். நினைக்கும்போதே உள்ளே ஏதோ ஒரு மலர் இதழ் விரித்துச் சிரித்தது. கண்களில் ஸ்படிகம்.

காப்பியைக் கலந்து கொண் டிருந்தாள். பின்புறமிருந்து இரட்டைக் குரல் கேட்டது. கலீர் என்ற சிரிப்பு கூடவே மிதந்து வந்தது.

''ஹாப்பி பர்த்டே டூயூ!''

சாந்தாவும் விசுவமும் ரிப்பன் கட்டிய அட்டைப் பெட்டி ஒன் றைக் கையில் வைத்துக்கொண்டு நின்றார்கள். அவளால் சிரிக்க முடியவில்லை. நெஞ்சுள் ஏதோ கிளர்ந்தது. இவர்களையா—

''நீ பதிலுக்குச் சிரிக்காவிட் டால் பரவாயில்லை. போனால் போகிறது. கடுவன்பூனை மாதிரியே இரு. நீ வழக்கமாக இருக்கிற மாதிரியே இருந்தா லும் எங்களுக்கு உன்னை ரொம் பப் பிடிக்கிறது. உன் சுபாவத் தையும் ரொம்பப் பிடிக்கிறது.''

சாந்தாவின் வழக்கமான குறும்புக் குரல். ஆனால் அதில் அவளை வருத்தும் வேதனை இல்லை. இருவர் கண்ணிலுமே நெஞ்சத்தைத் தொடும் மன அண்மை அவள் பார்வைக்குத் தெரிந்தது. அவள்தான் அவர் களைச் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை.

வாழ்க்கையில் இன்னும் அவள் ஒரு மாணவிதான். கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது......!







# நீள்பார்வை

"மஹி"



வந்த வழியென்னும் வளைவில்லா நேர்கோட்டில்
சிந்தை திருப்புகிறேன், சிரிக்கின்றேன், சிலிர்க்கின்றேன்

நீண்ட நெடியவழி நினைவெண்ணும் எல்லையெலாம்
தாண்டி யோர் பாழ்வெளியில் தனியான சூனியத்தில்

மூண்ட கனல் தகிப்பில் முகிழ்த்த வைம் பூதத்தில்
தூண்டித் துளிர்த்து எழும் துளிர் உயிரின் கொழுந்துகளாய்

எத்தனை பிறப்பெடுத்தேன் என்னென்ன வேடமிட்டேன்
அத்தனை பிறப்புகளின் அனுபவத்துச் சட்டைகளைப்

போர்த்த பிறப்புதனில் புரியாத புதிர் வாழ்வின்
ஆர்த்த மனத்திமிரால் அத்தனையும் நோக்குகிறேன்.

மண்ணுள் புதைந்துவிட்ட மிகப்பெரிய சாம்ராஜ்ய
எண்ணிக்கை யெத்தனையோ எல்லாமே மறைந்ததன் பின்

அகழ்ந்தெடுத்த ஹரப்பா மொஹஞ்ச தா ரோக்களிலும்
புகழ்மிக்க அஜந்தாவின் புல்லரிக்கும் ஓவியத்தில்

இடிபாட்டின் குவியல்களில் இதயத்தால் தேடுகிறேன்
சுடுகாட்டுச் சாம்பரிலே சரித்திரங்கள் காண்கின்றேன்.

மூலம் ஏதென் றறியாது மூண்டே தொடர்ந்து வரும்
காலத்தின் நெடுவழியில் காய்ந்தஇலைச் சருகு களாய்

மரத்தில் இலையிருந்த மந்திரத் தழும்புகளாய்
மரத்தில் பதிந்தவடு வரலாற்று மாக் கதைகள்

புகழ்மிக்க சரித்திரமாய் புராணக் கதை களுமாய்
அகழ்ந்தெடுத்த புதையல்களாய் ஆதரிசம் ஆகிறது

எத்தனை யெத்தனையோ பிறப்புப் புதுமைகளில்
இத்தரை மண்ணுடனே இணைந்தே தொடர்பு கொண்டேன்.

சங்கரரின் எதிர் நின்றும் சண்டாள உருக்கொண்டும்
'இங்குறையா தெட்டிப்போ' என்றவரே சொல்லுகையில்

"எட்டிப்போ என்பதெதை? உடற் பொதியா? உயிர்ப் பொறியா?
சுட்டுகிற இவ்வுருவின் சூக்குமத்தின் பொருளென்ன?"

சிறந்துள்ள ஆத்மாவின் சிறகடிப்பை வலுவூட்டிப்
பிறப்பின் அநுபவத்தின் பயனை வகுத்தமைத்தேன்.

இன்றே பிறந்திங்கு இமயத்தை நோக்குகிறேன்
நின்றே திரும்பு கிறேன் நிற்கின்றாள் குமரியன்னை.



இந்த நிலப்பரப்பில் எத்தனைதான் மொழிவகைகள்?
அந்த மொழிப் பிரிவுகளில் எத்தனைதான் ஜாதிவகை?

ஆத்துமப் பொறிபிரிந்தே அவரவரின் தொழில்செய்யும்
சுத்திரத்தை மேல்கீழாய் செய்ததெவர் செய்கைகளோ?

இறைவன் படைப்பினிலே இருத்தலிலை மேல் கீழ்கள்
உறையும் உயிர்வகையுள் உயர்வில்லை தாழ்வில்லை.

ஒன்றே உயிர்க்குலங்கள் உருவத்தால் மாறிடினும்
நன்றாய் உறவுகொண்டு நானிலத்தில் வாழ்ந்திடனும்.

சங்கரன் அறிந்திதைச் சரித்திரமாய்ப் படிக்கின்றோம்.
சங்கரர்கள் இன்றில்லை. சாதிவெறி நிலைத்திருக்கும்!

இந்நிலையை மாற்றுதற்கே எத்தனைபேர் முயன்றார்கள்?
அந்நிலைகள் வேற்றுருவில் உருமாறிச் சுழல்கிறது.

நானென்று மார்தட்டும் நல்லுடலுள் ஆத்மாவோ
தான் கொண்ட ஜாதிகளைத் தனிவரிசை யாக்கிடுது.

புல்லாகி மண்முளைத்தும் புழுவாகி மண் நுழைந்தும்
நெல்லாகி உணவாகி நிலையில்லா உயிர் வளர்ப்போம்.

செல்லாகி உயிர்நீக்கிச் சென்றுவிட்ட பின்னாலும்
வில்லை உதைத்த கணை வீச்சாகி மீள் பிறப்போம்.

எத்தனை உருவெடுத்தே இவ்வுலகைக் காண்கின்றேன்.
அத்தனையில் "நான்" அழியா அதிசயமே தெரிகிறது.

எங்கிருந்து 'நான்' பிறந்தேன் எங்கே! நான் சென்றடைவேன்
அங்கே என் உயிர்ப்பொறியில் அமைந்த ஒரு ஜாதியில்லை.

நாயுயிரும் நரருயிரும் உயிர்அளவில் சரிசமமே!
பேயுருவில் பேதமில்லை பிறந்தபின் பேதங்கள்.

மண்ணில் பிறந்ததன்பின் மாறுதலின் காரணம்ஏன்?
மண்ணில்வீழ் மழைநீராய் மாசுகளில் கரைந்ததுவால்..

பின்னாலே திரும்புகையில் பிரமிட்போல் பழம்பெருமை
முன்னாலே என்எதிரில் மூண்டுஎழும் ராக்கெட்கள்

இதனிடையில் ஊசலிடும் இன்றென்னும் பொய்ப்பொழுதின்
சதைக்களத்துத் திமிர்நினைவு கண்கட்டி மாயைசெயும்.

எங்குமே இருட்சூழல் எல்லாமே புதிர்ப்பொதிவு.
தங்கும் மனக்குகைக்குள் தனிஏக்கத் தாபங்கள்.

முன்னேயும் பின்னேயும் மூண்டுள்ள பெருங்காடு
என்னை இழுத்தேகும் எத்தனையோ மனப்பிசைவு

பசிபோக்கும் முயற்சிகளின் புசிக்கும் புதர்முட்கள்
நிசியில்லா நிலையினிலும் நீண்டுவிடும் இருட்போர்வை

அவ்விருளின் நடுவிருந்தே இன்னிசையாய் ஒருகுரலும்
பல்லியமாய் சமத்துவத்தின் பாட்டொன்றைப் பாடியது.

யாரங்கே பாடியது? எவர் குரலோ? எங்கேயோ?
வேறெங்கே? 'மஹாத்மா'தான் நம்நினைவில் வருகின்றார்.









# இயல் இசை நாடக மன்றத்தின் இணையிலாப் பணிகள்



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமாக, இசை, நாடகம், நாட்டியம், கதா காலட்சேபம், தெருக் கூத்து, திரைப்படங்கள் போன்ற நுண் கலைகளுக்கு ஊக்கம் அளித்து, பேணிக் காத்திடத் தமிழக அரசால் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட கலை நிறுவனமாகும்.

**தலைசிறந்த கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருது வழங்குதல்:**

ஆண்டுதோறும் தமிழகம் முழுதும் பல்வேறு கலைத் துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களைத் தேர்வு செய்து 'கலைமாமணி' விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றது. இதுவரையில் மன்றம் 662 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது.

ஏழ்மை நிலையில் வாழும் 'கலைமாமணி' விருதுபெற்ற கலைஞர்களுக்கு இவ்வமைப்பு ரொக்கப் பரிசுகள் வழங்கி வருகிறது. கலைஞர் ஒவ்வொருவரும் ரூ. 1,000 ரொக்கப்பரிசுத் தொகை பெறுவர். இதுவரையில் 123 கலைஞர்கள் ரொக்கப் பரிசுகள் பெற்றுள்ளனர்.

கலைத் துறையில் புகழோடு தோன்றி மறைந்துள்ள கலைஞர்களை இளம் சந்ததியினர் அனைவரும் அறியும்வண்ணம் அக்கலைஞர்களின் திருவுருவப் படங்களை மன்றம் ஆண்டுதோறும் விருது வழங்கும் விழாவின்போது திறந்து வைத்துப் புகழாரம் சூட்டுகின்றது. இதுவரையில் திறந்து வைக்கப் பெற்றுள்ள கலைஞர்களின் திருவுருவப் படங்களின் எண்ணிக்கை 112 ஆகும்.

உரிய காலத்தே உதவி செய்யும் பண்பாட்டு அமைப்புகள் அல்லது சபாக்கள் உரிய பாராட்டுப் பெறுவதிலும் என்றும் விடப்படவில்லை. நுண்கலை வளர்ச்சிக்கு அவை ஆற்றும் பணிக்காக ஒவ்வொரு சபாவுக்கும் கேடயம் வழங்கப்படுகிறது.

**ஏழ்மை நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம்:**

வறுமையில் வாடும் நலிந்த, வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு மாத ஓய்வு ஊதியம் வழங்க வகை செய்யும் திட்டம் மன்றத்தின் நடைமுறையில் உள்ளது. மாதம் ரூ. 75 ஓய்வு ஊதியமாக உள்ளதை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1-4-1980 முதல் ரூ. 150 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்தார்கள். இதுவரையில் இததிட்டத்தினால் பயன்பெற்றுவரும் கலைஞர்களின் எண்ணிக்கை 1767 ஆகும்.

**இசை, நாட்டியக் கலைஞர்களை ஊக்குவிக்க சபாக்களுக்கு உதவி மானியம் அளிக்கும் திட்டம்:**

கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், கடம், புல்லாங்குழல், கதா காலட்சேபம், நாதசுரம், வீணை, நாட்டியம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் தகுதி பெற்ற இளம் கலைஞர்களுக்கு, கலை நிறுவனங்களின் வாயிலாக வாய்ப்புகள் நல்கும் வண்ணம், சிறந்த, திறமையுடன் நடத்தி வரும் சபைகளைத் தேர்வு செய்து, மானியம் வழங்கி, அச்சபைகளின் வாயிலாக நிகழ்ச்சிகள் நடத்திட மேற்சொன்ன திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு வருகின்றது.



இதுவரையில் இத்திட்டத்தினால் தமிழகம் முழுதும் உள்ள கலை நிறுவனங்களின் வாயிலாக சுமார் 750 கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**படிப்பு உதவித் தொகை-பயிற்சி உதவித் தொகை வழங்கும் திட்டம்:**

இசை, நாடகம், திரைப்படம் இயக்குதல், நடித்தல், முதலியவற்றில் பயிற்சி பெறும் தகுதி வாய்ந்த மாணவர்கட்குப் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் இதுவரை சுமார் 25 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளனர்.

**ஏனைய பணிகள்:**

தமிழில் புதிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்ற தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு மானிய உதவி அளித்து ஊக்கமளித்து வருகிறது. இதனால் தொழில்துறை நாடகக்குழுக்கள் பல, பயன்பெற்றுள்ளன.

நம் நாட்டு இளம் கலைஞர்களும் மேல்நாட்டு ஆராய்ச்சியாளரும் கேட்டு இன்புறவும், அதன் வாயிலாகத் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவும் இசைத் துறையில் சிறந்து விளங்கிய பல மேதைகளின் நிகழ்ச்சிகளைக் கலைக் களஞ்சியமாக நாடாப் பதிவு செய்து பேணி வருகிறது. பல இசை மேதைகளின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்து வருகிறது.

இசை (வாய்ப்பாட்டு) மற்றும் வயலின், வீணை, மிருதங்கம், கடம், கஞ்சிரா, புல்லாங்குழல், நாதசுரம், நாட்டியப் பயிற்சியளித்து வரும் பல பள்ளிகளின் பராமரிப்புக்காகவும், இசைக்

கருவிகள் - இசை சம்பந்தமான புத்தகங்கள் வாங்குவதற்கும், மானியம் அளித்து வருகிறது. இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 15 கலைப் பயிற்சி நிறுவனங்கள் பயன் பெற்று வருகின்றன.

இசை, நாட்டியம், நாடகம், கிராமியக் கலை முதலிய துறைகளில் பல புதிய அரிய கலை நூல்கள் வெளியீட்டிற்கு மானிய உதவி அளித்து, அக்கலை நூல்கள் மக்களுக்குப் பயன்படும்படி செய்து வருகின்றது.

இயல், இசை, நாடகம், நாட்டியம், கிராமியக் கலைகள், முதலிய துறைகளில் புகழ் பெற்ற கலைஞர்களைக் கொண்டு பல நிகழ்ச்சிகளை ( Lectures and Demonstrations ) நிகழ்த்தி வருகின்றது.

பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள பல கிராமியக் கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், உடைகள் மற்றும் மேடைப் பொருள்கள் வாங்குவதற்கும், மன்றம் மானியம் அளித்து வருகின்றது. இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் 4 அல்லது 5 குழுக்கள் பயன் பெற்று வருகின்றன.

பரம்பரை நாட்டிய நாடகமான பாகவத மேளா நலிந்து போகாமல் இருக்க வருடா வருடம் மானியம் அளித்து அக்கலையின் பெருமையைப் பாதுகாக்க வழிவகை செய்து வருகிறது. மேலும் இதுபோன்ற அரிய நிகழ்ச்சிகளை ஒளி, ஒலிப் பதிவும் செய்து வருகின்றது.

**மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பகிர்வுத் திட்டம்:**

மைய அரசின் மாநிலங்களிடையே பண்பாட்டுப் பகிர்வுத் திட்டத்தின்கீழ், தமிழகத்திலிருந்து கலைக் குழுக்களை இந்திய நாட்டின் பல மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கிறது.



கலைமாமணி விருது வழங்கு விழா



**இயல், இசை, நாடகம், மக்கட்கு அறிவு வளர ஆர்வமூட்ட அக மகிழ்ச்சி பிறக்க, நன்னெறியைக் காட்டப் பயன்பட வேண்டும்.**

**பேரறிஞர் அண்ணா.**

அரசின் துணையுடன் சுமார் மூன்று கலைக் குழுக்களைத் தேர்வு செய்து அயல் மாநிலங்களுக்கு மன்றம் அனுப்பி வருகின்றது. அதேபோன்று மற்ற மாநிலங்களிலிருந்து வரும் கலைக் குழுக்களை வரவேற்று அவற்றின் கலை நிகழ்ச்சிகளைச் சென்னையில் மாத்திரமின்றி அரசின் உறுதுணையுடன் தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்களில் நடத்துவதற்கு மன்றம் நடவடிக்கை மேற்கொள்கிறது. ஆண்டுதோறும் ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று அயல் மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று, நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

மேலும், நாடகப் பயிற்சிப் பள்ளி நிறுவுதல், மலைவாழ் மக்களின் நடனத்தைத் திரைப்படம் ஆக்குதல், கலைஞர்களைப் பற்றிய 'யார் எவர்' நூல் வெளியிடுதல், இசைக் கருவிகள் தயாரித்தல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த மன்றம் எண்ணியுள்ளது.

**மறைந்த கலைஞர்களின் குடும்பத்திற்கு மானியம் வழங்குதல்:**

புகழ் பெற்ற கலைஞர்களின் மறைவால் அவதியுறும் கலைக் குடும்பத்திற்கு குடும்பப் பராமரிப்புச் செலவுக்கென மன்றம் ரூ. 2,000 (இரண்டாயிரம்)வரையில் வழங்கி வருகின்றது.

மேலே கூறியவை போன்ற பல கலைப் பணிகளைச் செய்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்து வருவது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகும்.

இந்தியாவில் இயங்கும் பல மாநில அகாடமிகளில் நமது தமிழ்நாடு அகாடமி சிறந்தது என்று வெளிநாட்டுக் கலைஞர்களாலும் நமது நாட்டுக் கலைஞர்களாலும் பாராட்டுதல் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



கலைமேதைகளின் உருவப்படங்கள்



# வாய்மையே வெல்லும்

**பேராயர் அருளப்பா**

இச்சொற்கள் தமிழக அரசின் விருது வாக்குபோல் விளக்குகின்றன. இது ''சத்யமேவ ஜயதே'' என்னும் வடமொழிச் சொற்றொடரின் தமிழாக்கம் என்றே பெரும்பாலும் கருதப்படுகின்றது. வட மொழியில் ''சத்தியம்'' என்ற சொல்லுக்கு 'உண்மை' 'மெய்'என்னும் பொருளே உண்டு.

''வாய்மையும் பொய்மையும் கண்டோர் சுட்டி''....

''வாய்மை கூறலும்,
பொய்தலைப் பெய்தலும்....''

என்னும் தொல்காப்பிய வரிகளினின்று வாய்மை என்பது பொய்மைக்கு எதிர்ச் சொல்லாகக் கூறப்படுவது காண்கிறோம். ஆனால் 'வாய்மை' என்னும் சொல்லுக்கு உண்மை, மெய், மெய்ம்மை என்னும் பொருளுடன் இணைந்ததாய் வேறு பொருளும் உள்ளதாகத் திருக்குறளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

வாய்மை என்னும் சொல்லுக்கு மெய், உண்மை என்னும் பொருள் மட்டுமே எனத் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் கருதியிருந்தால்,

''வாய்மை எனப்படுவது யாதெனின் ..'' என்று குறளைத் தொடங்குவதன் நோக்கம் என்ன? ''மெய்' என்பது என்ன என்று மக்களுக்குப் புதிதாக விளக்க விரும்பினாரா? அங்ஙனம் விரும்பினார் என்னும் கூற்று பொருத்தமாகத்தோன்றவில்லை. மெய், உண்மை என்பது தமிழக மக்களுக்கு அது வரையிலும் தெரியவில்லை என்றாகி விடும். இது சற்றும் ஏற்புடைய கருத்தாகாது.

மெய்ம்மை, உண்மை என்ற பொருளைத்தான் அவர் கூற விரும்பினார். எனின்..''யாதெனில்'' என்ற சொல்லுக்குப் பின் ''யாதொன்றும் பொய்மை இலாத சொலல்'' என்று அருமையாகக் குறளை முடித்திருக்கலாமே! ''பொய்மை என்பதற்குப் பதிலாக 'தீமை' என்று கூறியதேன்? ஏனெனில் ஆசிரியர் கூற விரும்பியது, தம் நூலில் தாம் கூறும் அறவாழ்க்கைக்குப் 'பொய்மை' இலாத சொலல் மட்டும் போதாது. ''யாதொன்றும் தீமை இலாது சொலலும்'' இன்றியமையாததாகும்- என்னும் கருத்தையே என்க.

இனி, ''தீமை இலாத சொலல் மட்டும் அறவாழ்க்கைக்குப் போதுமா எனில், போதாது. ஏனெனில் ஒருவன் தீமையிலாததை வாயால் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

''சொல்லுதல் யார்க்கும்
எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்பதற்கேற்ப சொல்வது அல்லது பேசுவது எளிது, செய்தல் அரிது. ஆகவே தீமையில்லாதன சொல்லிக் கொண்டு, சொலவதை விட அரிதான செய்வதை மேற்கொள்ளாமல் நன்மை சொல்லி திமை செய்வானாயின் எங்ஙனம்' அறத்தான் வரும் இன்பத்தை (குறள் 39) அடைய இயலும்?

தீமையால் இன்பம் பெற இயலாதன்றோ? அங்ஙனமாயின் "யாதொன்றும் தீமையிலாத சொலல்'' என்ற சொற்களால் ஆசிரியர் வேறு ஏதோ கருத்தை மனத்தில் கொண்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அக்கருத்து எதுவாயிருக்கலாம் என்பதே கேள்வி.

யாதொன்றும் தீமையிலாததைக் கொண்டுள்ளது நன்மையே உருவாம் இறைவனைத் தவிர வேறு யார்? வேறு எது? 'இறைவனைச் சொலல்' என்றால் பொருள் என்ன? பொருளற்ற தற்புகழையோ, பிறர் கூறும் வீண்புகழ்ச்சியையோ விரும்பாமல் பரம்பொருளும் உலகத்தைக் கடந்த கடவுளும், புகழ்ச்சிக்கெல்லாம் உரியவனும், பொருள் நிரம்பிய புகழுக்குத் தகுதியுடையவனுமாகிய இறைவனது புகழ் புரிவதே (குறள் 5 காண்க) என்க. 'புரிதல் என்ற சொல்லுக்கு, 'செய்தல், விரும்பல், தியானித்தல், சொல்லுதல் என்றெல்லாம் பொருள் உள்ளது, கவனிக்க. ஆகவே, 'யாதொன்றும் தீமையிலாத சொலலும்' 'இறைவன் பொருள் சேர் புரிதலும்' ஒன்றே எனக் கூறலாம், இதுவே வாய்மை என்க.

'வாய்மை' அதிகாரத்தில் மற்ற பாக்களில் மெய்ம்மை பற்றிக் கூறுவது போல் தோன்றினும் முதல் குறளிலும் இறுதிக் குறளிலும் மேற்கூறிய பொருளில் தான் ஆசிரியர் கூறுவதுபோல் தோன்றுகிறது. உண்மை பேசுவது பற்றி ஆசிரியர் இவ்வதிகாரத்தில் பேசவில்லை என்பதன்று, அதைப் பற்றிக் கூறும் அதே நேரத்தில் மேற்கூறிய பொருளில் உண்மை வடிவாம் இறைவனின் புகழ் புரிதல் பற்றியும் கூறுகிறார் என்றே கொள்ளுதல் வேண்டும்.

உண்மை பேசுவது மட்டும் போதாது. வள்ளுவர் கூறும் இறைவனடி சேர - நீடு வாழ்வு பெற; உண்மை பேசி, தீமை செய்யக் கூடுமல்லவா? உண்மை பேசுவதுடன், தீமை எதுவும் செய்யாமல் இருப்பதுடன் உண்மைக்கும் நன்மைக்கும் உறைவிடமாகிய இறைவன் புகழ் புரிதலும் வேண்டும். அப்போதுதான் நூல் கற்றதன் பயன் விளங்கும். நிலைத்து நிற்கும் வான் வீட்டில் நீடு வாழ்வு அடைய முடியும். யாண்டும் இடும்பையின்றி, மனக் கவலை நீங்கி வாழ முடியும். இதுவே உண்மையான நன்மை, இதையே மனிதன் நாடுதல் வேண்டும்.

இதை மனத்திற்கொண்டே வள்ளுவர் வாய்மை அதிகாரத்தின் இறுதிக் குறளாக—

''யாமெய்யாக் கண்டவற்றுள்
இல்லைஎனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற''

என்றார். மெய்யானவை பலவற்றுள்ளும், வாய்மையினும் நல்லது வேறெதுவும் இல்லை எனின் அது, ''யாதொன்றும் தீமையிலாத'' இறைவனைச் சொலல், அவனை தியானித்தல், அவன் புகழ் கூறுதல் அன்றி வேறெதுவாயிருக்க முடியும்?

இப்பொருளில் தான் கிறிஸ்துவும், 'எம்மனிதனையும் நல்லவன் என்று கூறுதல் முற்றும் பொருந்தாது. இறைவன் ஒருவனே நல்லவன்' என்றார் (லூக் 18, 19) காண்க.





# உழவன் பாட்டு

முகவை இராஜமாணிக்கம்

(உழவனது பன்னிரண்டு திங்கள் நிகழ்ச்சி நிரல்)

தன்னேரிலா உழவன் பொன்னேரு பூட்டி — வெறுந்
தரிசுதனை உழுவது நற்சித்திரையிலே;
நெல்மணிகள் பொலிகான உரமடித்து விளைநிலத்தைப்
பொன்வயலாய் ஆக்குவது வைகாசியிலே

ஆழ உழுவது ஆனியிலே—அழகாய் விதைப்பது ஆடியிலே;
ஆடிப்பட்டம் தேடி விதைத்த பின்னர் —
தாரணித் தாயின் கர்ப்பத்திலே
தானிய மணிகள் தவங்கிடக்கும்;
மேழிபட்ட மகிழ்ச்சியிலே
நிலமகள் சிலிர்த்தனள்! நெல்மங்கை முளைத்தனள்!

பச்சைப் பசேலென வளர்ந்துவரும் பயிர்
பார்க்க மிகக்குளிர்ச்சி ஆவணியிலே — இடையில்
நச்சுப்போலே முளைச்சிருக்கும் களைகளையே
நறுக்குத் தெரிச்சாப்போலே களைந்திடவே —

வாருங்கடி பெண்டுகளா! வரப்பைவிட்டு இறங்குங்கடி!
களைவிடாமலே பாருங்கடி! கைவிரசாக முடியுங்கடி!
நாத்து முடிச்சை அவிழ்த்துப்பிரிச்சு நிரைவிடாமே நடவுங்கடி!
நாட்டியப் பெண்டுகள் போலே வரிசையாக நட்டுமுடிச்சு நிமிருங்கடி

பயிரும் வளர்ந்து பருவமும் அடைந்து
பண்ணை கட்டிக்கிட்டுக் கருதுகள் பிரியப்
பாய்ச்சணும் நீர் புரட்டாசியிலே

மண்வெட்டி கையுமாய் வயலைச்சுத்தியே
கண்ணிமைக்காமல் திரியணுமே.

ஐப்பசி தன்னிலே அடை மழையிலே
அத்தனை பேருமே வரப்பிலே;
ஆடை மெலிஞ்சதால் உடல் குன்னிக்கிட்டுக்
காவலும் காக்கணும் இரவிலே



கார்த்திகை தீபத்திலே சொக்கப்பன் தீக்கொழுந்து
வேர்ப் பூச்சியை அழிக்கும் கை கண்ட மருந்து,
மார்கழியும் பிறந்திருச்சி! கதிர்கள் முற்றிச் சிவந்திருச்சி!
பாரம் ரெம்பக் கனத்திருச்சு! நெற்குலையும் சாய்ஞ்சிருச்சு!

கதிர் அறுப்போம்! நெல்-கதிர் அறுப்போம் — செங்
கதிர் அறுப்போம்! பொற்-கதிர் அறுப்போம்!
அறுத்துக்கட்டிக் களம்கொண்டு சேர்த்துப்
போரடித்து நெல்மணிகளைக் குவிப்போம்!
பதரைத் தூற்றி படியளந்து
கண்டுமுதல்தனைக் கணக்கிடுவோம்

நெல்லும் கரும்பும் மஞ்சளும், இஞ்சியும்
வீடு நிறைஞ்சிடும் போதிலே
நல்ல திருநாள் — பொங்கல் பெருநாள்!
தைத் திங்கள் நாளும் பிறந்திடுமே!

குலவையிட்டுச் சங்கொலி முழங்கப்
பொங்கல்பானையும் பொங்கிடுமே! தைப்
பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!
என்ற ஒலியும் எழுந்திடுமே!

பொங்கல்போனதும் பனிவந்த தோடே
மாசி பிறந்தது மூட்டத்திலே
மங்களமாம் சிவராத்திரி விரத
மகிமை கேட்டிடும் நாட்டத்திலே.

பொங்குபனி நீங்கிடவும் செங்கதிரோன் ஓங்கிடவும்
பங்குனி உத்திரமும் வந்திடும்-பால்குடங்கள் நேர்த்திக்கடன் வந்திடும்
சந்தனக் காவடி தூக்கிச் சந்தத் தமிழ் சிந்துபாடத்
தீர்ந்திடும்-துன்பம் தீர்ந்திடும்! வினைகள் தீர்ந்திடும்

நாடு செழிக்கணும் நல்ல மழை பேயணும்
காடு விளையணும் களஞ்சியம் நிறையணும்
பாடு குறையணும் பாரெல்லாம் வாழணும்!
ஆட்சி சிறக்கணும் வாழ்வு சுரக்கணும்!







ஆண்டிபட்டியை அரசபட்டியாக மாற்றிய
மாண்புமிகு முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின்
பொன்னான ஆட்சி தொடர
இந்நன்னாளில் வாழ்த்துகிறேன்.

பி. பாண்டித்துரை, பி.ஏ.பி.எல்..
பெருந்தலைவர்,
ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம்
ஆண்டிபட்டி, மதுரை மாவட்டம்,
தொலைபேசி: 4695



பரணி

நல் வாழ்த்துக்கள்

M.A.V.M.M. பாலிடெக்னிக்
திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

சிவில்
மெக்கானிக்கல்
எலக்ட்ரானிக்ஸ் அண்டு கம்யூனிகேஷன்

ஆண், பெண் இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இவண்,
P. ராதாகிருஷ்ணன்
செயலாளர்

பரணி


# புத்தாண்டுக் குயில் வாழ்த்து!

—கவிஞர் சுப்பு ஆறுமுகம்





காஞ்சிபுரத்துக் குயில்
காலத்தையே வெல்லும் குயில்
வாஞ்சைமிகு அண்ணாவோடு வாழ்ந்தது! —அது
வரலாற்றுக் கோட்டைப் பக்கம் வந்தது!
அண்ணாவின் கனவை எல்லாம்
அழகுறவே நனவு ஆக்கும்
தமிழ"சை வாழ்த்த வந்தேன் என்றது — நானே
தமிழ்க்குயில் என்று சேதி சொன்னது!

தேமதுர கீதம் கேட்க
திருவையாறு பறந்து சென்றேன்!
மாமனிதர் தமிழகத்தின் முதல்வரு — நல்ல
வீணை தந்தார் வாங்கினாரு பிரதமரு!
வீணையாக இவர் இருக்க,
விரலாக அவர் இருக்க,
ஆனந்தமாய் சுதிலயமும் சேருது! — மைய
அரசுடனே நம் அரசும் மகிழுது!

சத்துணவும், பாட நூலும்
சீருடையும் இலவசமாய்
எத்தனையோ லட்சம் பேர்க்குக் கிடைக்குது — இங்கு
எதிர்கால சமுதாயம் வளருது..!
நோய் நொடிகள் ஏதும் வராமல்
தாய் மடியில் இருப்பது போல்
நூறாண்டு நல வாழ்வு வாழவே — செய்யும்
நுட்பமான மருத்துவங்கள் வெல்கவே..!

கோயில், குளம், கோபுரத்தின்
தமிழ்க்குயில் நான் பறந்து சென்று
கொடிமரத்தின் மேலிருந்து பார்க்கிறேன்! — பக்தர்
கூட்டமெலாம் பேசுவதைக் கேட்கிறேன்!
கருவறையில் இறைவனிடம்
தமிழ்மறையே ஒலிக்குதம்மா!
கடவுளுக்கு இப்பொழுதே மகிழ்ச்சியாம்! — தனிப்பெரும்
கருணையான புரட்சி காணும் ஆட்சியாம்!

எங்கெங்கும் தொழில் வளர
தொழில் புரிவோர் நிலை உயர
அங்கங்கே வழிவகைகள் செய்யுது! — நாட்டில்



அறிவியலும், உழவியலும் சிறக்குது!
கதர், கிராமத் தொழில் வளர
கலை வளர, தொழில் கல்வி
நிலை உயர பொருள் வளமும் உயருது! — முதல்வர்
நெஞ்சினிலே அண்ணா நாமம் ஒலிக்குது..!

அந்தத் துறை, இந்தத் துறை
எந்தத் துறையானாலும்
அண்ணாவின் முத்திரையே தெரியுது — தமிழ்
அரசுக்கு இது வாழ்த்தாக அமையுது!
பொன்மனத்துச் செம்மல் உள்ளம்
பூமணத்து அண்ணன் மனம்
ஒன்றும் ஒன்றும் சேர்ந்தும்ஒன்றே ஆனது! — அதனால்
உலக சாதனைகள் இங்கு நடக்குது..!

வல்லினமும், மெல்லினமும்
இடையினமும் தனித்தனியே
நல்லெழுத்தைத் தமிழுக்காகத் தந்தது! — மூன்றின்
நல்லுருவே 'தமிழ்' என்று வந்தது! — இந்தத்
தன்மைபோல, தமிழரசும்
வல்லினத்தில் இடையினத்தில்
மெல்லினத்தில் தமிழகத்தை வாழ்த்துது! — புது
மேன்மையான வரலாறும் படைக்குது!

காவிரி, வைகை, பொருனை
ஓடிவரும் போதிலே
கலகல-ன்னு ஓசை வரும் காதிலே — அதை
மொழி பெயர்த்தேன் — வந்ததிந்தச் சேதியே!
தமிழகத்தின் முதலமைச்சர்
எம்.ஜி.ஆர். வாழ்க என்றே
தாவி வரும் நதிகள் சேதி கூறுதே — அதில்
தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்தும் கேட்குதே..!

'அட்சய' என்னும் பேரில்
அரும்பி வரும் புத்தாண்டு
அட்சய பாத்திரம் போல விளங்கவே! — செல்வம்
அள்ளி அள்ளி வற்றாமல் வழங்கவே!
ஓராண்டு வளர்ச்சி தன்னை
ஒவ்வொரு நாளிலும் கண்டு
உலகப்புகழ் தமிழரசு பெறுகவே! — ஏழை
ஒருவர்கூட இல்லா நிலை அமைகவே!

சித்திரையே! உன்னில் வரும்
முழுவடிவ சந்திரன் போல்
மக்கள் முதல்வர் இராமச்சந்திரன் வாழ்கவே! — எங்கள்
முத்தமிழ்த்தாய் முன்னின்று வாழ்த்தவே!
எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்றே
புதுவைக் குயில் எங்கிருந்தோ இசைக்குதே!— நம்மை
காஞ்சிக் குயில் சேர்ந்துபாட அழைக்குதே!





# கற்பனை வரங்கள்

கவிஞர் வல்லம் வேங்கடபதி

நித்திரை போகாத சித்திரை வானம்
முத்திரை அழகின் மோக வாகனம்!
எத்திசை திரும்பினும் எழில், எழில் எழிலே!
ஒத்திசை பாடும் தென்றல் ஓர் குழலே!
பௌர்ணமி வெள்ளமோ! பாலாபி ஷேகமோ!
பட்டாடை உடுத்திய பாவைப் பிரகாசமோ!
இயற்கை ஓவியன் இதயக் கோயிலில்
மூலத் தானத்து முழுநிலா உதயமோ!
கம்ப காவியம் ஓவியம் ஆனதோ!
அந்தர முகில்கள் ஆடும் ஊஞ்சல்கள்!
சந்திர பிம்பங்கள் சந்தனக் கிண்ணங்கள்!

சூரிய ஒளிக்கதிர் தூரிகை தொடத்தொட
ஜோதி வேள்விகள்; வீதி ஊர்வலங்கள்!
பட்டுத் தெறிக்கும் பலப்பல நிறங்கள்!
கட்டுப் படாத கற்பனை வரங்கள்
மேக வர்ணங்கள்! மோக மயக்கங்கள்!
தாகச் சிலிர்ப்புகள்! தணலின் தவிப்புகள்!
தலைக்கும் மேலே தவழ்பொன் விரிப்புகள்
தளதள வென்றே தழைந்திடும் சிரிப்புகள்!
தங்க நிலாத்தீத் தழுவிடும் எரிப்புகள்
எங்குமே வெளிச்ச எழுச்சிப் பரப்புகள்!
வானக் கூடமோ! வண்ணக் கூடமோ!
வரையும் ஓவிய வளர்கலைக் கூடமோ!
மண்ணெலாம் கண்ணாய் மலர்ந்து கண்டாலும்
விண்ணை ஓர் பார்வையால் விழுங்கவும் கூடுமோ?

# தமிழ் இலக்கியத்தில் திருவள்ளுவர் புரட்சி

பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற புகழ் பெற்ற நூலைப் பலர் படித்திருப்பீர்கள். அதற்கு அணிந்துரை வழங்கிய தமிழ்ப் பெரியார் திரு.வி.க. 'இது ஒரு புரட்சி நூல்' என்றார். மு.வ.வின் பார்வையில் புரட்சி பூத்ததற்குக் காரணம் திருவள்ளுவரின் திருக்குறள் பார்வையில் புரட்சி பூத்தமையே ஆகும்.

திருவள்ளுவர் திருக்குறள் செய்த காலம் உறுதியாகக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலம். இது இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் வரும் திருக்குறள் ஆட்சிகளால் தெளிவாகும். ஏசு கிறித்துவின் தோற்றத்துக்குச் சற்று முன் என்பது மறைமலை அடிகளார் கருத்து; தமிழக அரசு பின்பற்றும் திருவள்ளுவர் ஆண்டும் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டதே.

திருக்குறள் கருத்தும் நடையும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகைக்கு இடைப்பட்டதே. அதனாலேயே பெரிதும் நீதி நூல்களைக் கொண்டே பதினெண்கீழ்க் கணக்குள் அது இடம் பெற்றது எனலாம்.

தொல்காப்பிய நூற்பாக்களுள் பல ஓரடியால் இயன்றவையே. ஆனால் ஈரடிகளே கொண்ட ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல்களைக் கொண்ட ஒரு முழு நூல் திருக்குறள். தொல்காப்பியத்துள்ளும் பத்துப்பாட்டு எட்டுத்தொகையுள்ளும் காணப்படும் வகை தொகை முறையை மேலும் வளப்படுத்தும் நூல் திருக்குறள்.

மனித வாழ்வு முழுதுக்கும் பயன்படும் அரிய பெரிய கருத்துக்களை அணுவையும் கடுகையும் துளைத்து ஏழுகடலைப் புகுத்துவது போல எளிய-இனிய ஏழு சீர்களில் திருவள்ளுவர் அமைத்திருப்பது உலக இலக்கியத்திலேயே - இலக்கிய உலகத்திலேயே அவர்தம் முதல் புரட்சி. அதனாலேயே அதுபோன்ற பல காரணங்களாலேயே அவர் 'முதற் பாவலர்' எனப்படுகிறார்



போலும். அடுத்து 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாய் வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர் உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ளம் உருக்கும்' ('திருவள்ளுவமாலை-24) உயர்வினதாய் ஒரு நூல் செய்தமையாகும். மூன்றாவதாகத் திருவள்ளுவமாலையே (23) தெரிவிப்பது போல அந்தணர்க்கே உரியதாய் வடமொழி வேதம் விளங்க அனைவருக்கும் உரியதாய்த் திருவள்ளுவர் திருக்குறள் திகழுவதே ஆகும். நன்காவதாக, சங்க நூல்கள் பெரிதும் காதலையும் போரையுமே புகழ்ந்திருக்கத் திருவள்ளுவர் திருக்குறள் அறத்தையே முழுதும் போற்றுவதாய் அமைந்துள்ளமை ஆகும். ஐந்தாவதாகப் பழந்தமிழ் நாகரிகம் பிற நாகரிகங்களால் கெடாதவாறு இந்நாளில் Appropriate Transfer / Alternate technology என்றெல்லாம் அறிவியலில் போற்றப்படும் செயல்நுட்ப மாற்றங்களை நினைவூட்டும் வகையில் 'வேள்வி' 'தவம்' முதலியவற்றுக்குப் புதுப்பொருள் - புதுப் பொருண்மை கண்ட புரட்சியாகும். ஆறாவதாகப் பழந்தமிழகத்தில் நாகரிகமாகக் கருதப்பட்ட மதுவருந்தல், புலால் உண்ணல், சூதாடல், பரத்தமை ஆகிய நான்குள் மது, சூது, பரத்தமை மூன்றையும் பொருட்பாலிலேயே வைத்துக் கண்டித்தல். ஏழாவதாக காலமெலாம், வாழ்வெலாம், ஞாலமெலாம் பின்பற்றத்தக்க அறங்களையும் நெறிகளையும் வற்புறுத்தல்.

சற்று முன் சொன்னவற்றுள் எல்லாம் சிறப்புடைத்தான 'வேள்வி', 'தவம்' பற்றிய திருவள்ளுவரின் கருத்துப்புரட்சியை முதலில் காண்போம். முதலாவதாக 'வேள்வி' பற்றி.

இனைத்துணைத் தென்ப
தொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப்
பயன்(87)

**டாக்டர்**
**ந.சஞ்சீவி**

இக்குறளின் தெளிவுரை: விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறத்தக்கது அன்று; விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும் என்பதாகும்.

பரிந்தோம்பிப் பற்றற்றேம்
என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.(88)

இக்குறளின் தெளிவுரை: விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர் பொருள்களை வருந்திக் காத்துப் (பின்பு இழந்து) பற்றுக்கோடு இழந்தோமே என்று இரங்குவர்' என்பதாகும். மேற்கண்ட இரு குறள்களிலும் சிறப்பாக இதோ ஒரு குறள்-

அவிசொரிந் தாயிரம் வேட்ட
லின்ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை
நன்று (259)

இக்குறளின் தெளிவுரை: நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஒன்றன் உயிரைக் கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது என்பதாகும்.

இந்தத் திருக்குறளில் திருவள்ளுவர் தெளிவாக ஆரிய வேள்வியைக் கடிந்து கூறல் கருதத்தக்கது. இனி 'தவம்' பற்றித் திருவள்ளுவரின் கருத்துப்புரட்சியைக் காண்போம்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்
குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு(261)

இக்குறளின் தெளிவுரை: தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்தலும் மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும் என்பதாகும்.

இக்குறளில் 'அற்றே' என்று திருவள்ளுவர் பயன்படுத்தும் சொல் கருதத்தக்கது. 'அற்றே' என்பதற்கு 'அவ்வளவே' என்று பொருள். இதேபோல் அறத்தைப் பற்றியே திருவள்ளுவர் ஓதியுள்ள ஒரு குறளும் உன்னத்தக்கது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

இக்குறளின் தெளிவுரை: ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை என்பதாகும்.

இந்தக் குறளிலும் 'அற்றே' என்பது போல 'அனைத்து' என்ற சொல் அழுத்தத்துடன் பயன்படுத்தப்பட்டிருக்கும் அருமைப்பாடு கருதத்தக்கது.

திருவள்ளுவர் 'அற்றே' 'அனைத்து' என்ற சொற்களை 'அறன் வலியுறுத்தல்', 'தவம்' என்ற அதிகாரங்களில் உயிர்நாடி-உயர்நாடிக் கருத்தாகப் பயன்படுத்தி இருக்கும் பாங்கு கண்டே-பாங்கு கொண்டே-அவர் ஆரிய-ஆரவாரக் கருத்துகட்கு மாறுபட்ட எளிமை-தூய்மைப் புரட்சியைப் போற்றினார் என்பது விளங்கும். இவ்வுண்மை புறநானூறு போன்ற நூல்களைப் படிப்பார் 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' போன்ற அரசர்கள் பெயரை அறிவதாலேயே உணரலாம். தமிழ் நாகரிகத்தைக் காக்கத் திருவள்ளுவர் செய்த புரட்சியை 'சமயஞ்சாரா சமுதாயப் புரட்சி' எனலாம்.- Seeular against Sectarian. இக்கொள்கையே நம் இந்திய அரசியல் அமைப்பு உள்ளிட்ட உலக நாடுகள் பெரும்பாலானவை போற்றுவதாகும். அவ்வாறு போற்றாத நாடுகளின் புன்மையும் நாமறிந்ததே.

திருவள்ளுவர் 'அறம்', 'தவம்' 'வேள்வி' ஆகிய கருத்துக்களுக்குப் புதுப்பொருள் - புதுப் பொருண்மை கொடுத்த புரட்சியைப் பார்த்தோம். இவ்வாறே 'தூய்மை' என்ற கருத்துக்கும் மிக எளிமையான -ஆனால் -மிக அடிப்படையும்இன்றியமையாததுமான தெளிவைத்தருகிறார் திருவள்ளுவர்.

தூய்மை என்பது அவாவின்மை
மற்றது
வாய்மை வேண்ட வரும்.(364)

இக்குறளின் தெளிவுரை: தூய நிலை என்று கூறப்படுவது அவா இல்லாதிருத்தலேயாகும்; அவா அற்ற அத்தன்மை, மெய்ப் பொருளை விரும்புவதால் உண்டாகும் என்பதாகும். 'அவாவறுத்தல்' அதிகாரத்தில் உள்ள மெய்ஞ்ஞானப் பிழிவான மேற்கண்ட திருக்குறள் 'துறவு' அதிகாரத்தின் இறுதிக் குறளிலும் அழகுடனும் உறுதியுடனும் போற்றப்படுவது கருத்ததக்கது. அக்குறள் வருமாறு:

பற்றுக பற்றற்றான் பற்
றினைஅப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (350)

இந்த இறைப்பற்றும் இல்லா— வீடும் வேண்டா விறலே-'நினைப்பற நிற்கும் நிலை'யே (Choiee-less awarness 'இந்நாள் ஜே. கிருஷ்ணமூர்த்தியும் வேண்டுவது.

இன்றைய உலகம் சரிபாதி பங்கிற்கு மேல் பொதுஉடைமை நாடுகளைக் கொண்டதாய் உள்ளது. உலகில் மிகப் பெரிய நாடுகளாகிய ரஷ்யாவும் சீனாவும் முழுக்கமுழுக்கப் பொதுஉடைமை நோக்கிப் பயணம் செய்கின்றன. பொதுஉடைமைக்கு மாறான தனி உடைமை நாடுகளும் தங்கள் போட்டி வாழ்விலும் பொதுவுடைமைத் தாக்கம் பெற்றே விளங்குகின்றன. திருவள்ளுவரை 'பொய்யில் புலவன்' என்று போற்றும் மணிமேகலை' அறமெனப்படுவது மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் '(25:229.-231) வழங்குதலே என வற்புறுத்துகிறது. இவ்வுண்மை புறநானூறு போன்ற நூல்களிலும் முன்னமே போற்றப்பட்டுள்ளது. ஆயினும் பொதுமறையாகிய திருக்குறள் இவ்வடிப்படைத் தேவையை,

சிறப்பொடு பூசனை செல்
லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும்
ஈண்டு(18)

தானம் தவம் இரண்டும்தங்கா
வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்(19)

நீர் இன்று அமையாதுஉல
கெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது
ஒழுக்கு (20)

என்று 'வான்சிறப்பு' அதிகாரத்தின் முடிவான மூன்று குறள்களில் வற்புறுத்தல் வருங்காலப் பொது உடைமை உலகத்திற்கும் வழிகாட்டுவதாகும்.

இன்னும் ஒரு பெரிய செய்தி-திருவள்ளுவர் 'ஈகை' அதிகாரத்தில் இல்லை!-'கொல்லாமை' அதிகாரத்தில்,

பகுத்துண்டு பல்லுயிர்ஓம்புதல்
நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம்
தலை (322)

என்று கூறும் குறளாகும். இக்குறளின் தெளிவுரை:

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுப் பொது உடைமை உலகிற்குப் புறநானூற்று வழி அடியெடுத்துக் கொடுத்திருத்தல் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

அவ்வாறே பேச்சன்று-செயலே, செயல் திறமே மனிதனின் மாண்பு என்ற கருத்தை 1330 அருங்குறள்களுள் நடு நாயகமாக உள்ள 665ஆம் திருக்குறளில்

வீறெய்தி மாண்டார் வினைத்
திட்பம் வேந்தன் கண்
ஊறெய்தி உள்ளப் படும் (665)

என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்தியிருப்பதும் தேர்ந்துபோற்றத்தக்கது.

(இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தெளிவுரைகள்பேராசிரியர் டாக்டர் மு. வ. வின் எழுத்துகளாகும்.)



# சித்திரை நிலவு சிரிக்குது

கவிஞர் வானம்பாடி

சித்திரை நிலவு சிரிக்குது! அல்லி
சித்திர இதழை விரிக்குது!
—சித்திரை நிலவு சிரிக்குது......



நித்திரை கொள்ளாத விழிகளைப் பார்த்து
நித்திய கிண்டலை நிலையாகச் சேர்த்து
முத்திரை வைத்த கன்னத்தைத் தெரிந்து
முல்லை மலர்களை அள்ளிச் சொரிந்து
—சித்திரை நிலவு சிரிக்குது......

ஆடை மலர்ந்திடும்; அழகு விரித்திடும்
அள்ளும் மலர்க்கோல விந்தை—அந்த
வாடை பிடித்திடும் வண்டினம் வந்திடும்
வதுவை புரிந்திடும் சிந்தை!
—சித்திரை நிலவு சிரிக்குது......



வண்ணப் பசுமை வழங்கும் புதுமை
வசந்தக் குயில்களோ பாடும்!—அந்த
எண்ணம் புரிந்து இளைய மயில்களோ
எழுந்து தெரிந்து ஆடும்!
—சித்திரை நிலவு சிரிக்குது......

மங்கல வாத்தியம் எங்கும் முழங்க
மாவிலைத் தோரணம் மணத்தை வழங்க
மங்களம் ஜெய மங்களம் பாட
மகிழ்ச்சிக் கதைகள் மணங்களில் கூட!
—சித்திரை நிலவு சிரிக்குது......









**தா. நீலகண்டன்**

**ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,**

நாடகமே உலகம். உலகம் ஒரு நாடகமேடை: நாம் அனைவரும் பாத்திரங்கள்; ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் ஓர் அரிய கலை நாடகக் கலை. கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் இனிய கலை. பழமைக்கும் புதுமைக்கும் ஈடு கொடுத்து என்றும் வாழும் உயிரோட்டமுள்ள கலை. இதனைக் கூத்து என்றும் அழைத்தனர். பழங்காலத்தில் மரத்தால் செய்த பாவைகளை வைத்துக்கொண்டு 'மரப்பாவைக் கூத்து' நடத்தினார்கள். பின்னர் அழகான பொம்மைகளைச் செய்து பின்னாலிருந்து கயிற்றால் இயக்கினார்கள். இதற்குப் 'பொம்மலாட்டம்' என்று பெயர். இதே போல தோலினாலும் பொம்மைகளைச் செய்து 'தோற்பாவைக் கூத்து' நிகழ்த்தினர். இப்படி ஒரு காலத்தில் தோன்றிய இந்த நாடக விளையாட்டு பாவைக் கூத்து முதல் பலவகைக் கூத்துகளாக முன்னேறி வளர்ந்து நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி, இன்று நாம் காணும் நவீன நாடகமாக மாறியுள்ளது.

அவற்றினும் தனிப் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடுவதை நாட்டியம் என்றனர். ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் புனைந்தாடுவதை நாடகம் என்றனர். இரண்டிற்கும் உரிய பொதுப் பெயர் கூத்தாகும். ஆடலும் பாடலும்தான் நாடகமாக இருந்தது என்பதை ஆட்டம் என்ற பதம் விளக்கும். இத்தகைய நாடகங்களது வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் நிற்பது கண்கூடு.

தற்போதும் தமிழ் நாடக வளர்ச்சிக்கு உறுதுணையாக மேடை நாடகங்கள், நாடக நூல்கள், தொலைக்காட்சி, வானொலி போன்றவை அமைந்திருக்கின்றன.

**மேடை நாடகங்கள்**

ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழ் நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டு வருகின்றன. தெருவோரம் தேம்பிக் கிடந்த தமிழ்க் கூத்தினை நல்ல மனம் படைத்த தமிழர்கள் மேடைக்குக்கொண்டு வந்து மாண்புறச் செய்தனர். மேடை நாடகங்கள், சுவையினையும், நாடகக் கலைத் தன்மைகளையும் புலப்படுத்துவன. சென்னையில் மட்டும் நாடகத்திற்கென நூற்றுக்கு மேற்பட்ட நாடக சபாக்கள் உள்ளன. ஆண்டுதோறும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்கள் அரங்கேறுகின்றன. சென்னையில் உள்ள சபாக்கள் இசை, நடனம், நாடகம் ஆகிய முக்கலைகட்கும்

முழு ஆதரவு கொடுக்கும் சாதனங்களாக அமைகின்றன.

**நாடக நூல்கள்**

இன்று தமிழகம் முழுவதும் பல நூற்றுக்கணக்கான நாடக ஆசிரியர்கள் உள்ளனர். அவர்கள் புராண இதிகாச, புனைவு, இலக்கிய நாடகங்களை எழுதி வருகின்றனர். இந்நாடகங்கள் சமூகப் பிரச்சினைகள், சிக்கல்களைச் சுட்டிச் செவ்வனவாக அமைகின்றன. நாலுருவிலும், தொடர் இதழ்களிலும், நாடகங்கள் வருகின்றன. ஓரங்கம், முழு நீளத் தொடர் நாடகம் என்ற தன்மையிலும் அவை அமைகின்றன.



**நாடகம் நல்லாசான்**

*நாடகம்: இன்று நள்ளிரவுச் சத்தமல்ல - நடையாலும், உடையாலும், விழியாலும், மொழியாலும் அரைத் தூக்கத்திலிருப்பவர்களுக்கு ஆனந்தம் தர முயற்சிக்கும், வெறும் ஆடல் பாடல் அல்ல! நாடகம், இன்று நாட்டுக்கு ஒரு நல்லாசானாக முன்வந்திருக்கிறது - துணிவுடன்.*

**வானொலி நாடகங்கள்:**

வானொலி நாடகங்கள் கலையம்சங்கள் யாவும் நிறைந்து காணப்படுகின்றன. வானொலி நாடகத்தில் பாலுணர்ச்சிக்கோ, வன்முறைக்கோ இடமில்லை. 1938-ஆம் ஆண்டு தோன்றிய சென்னை வானொலி நிலையமும், 1939-ல் தோன்றிய திருச்சி வானொலி நிலையமும் அதன் பின்னர் அமைந்த கோவை, பாண்டிச்சேரி, திருநெல்வேலி, நாகர்கோவில் வானொலி நிலையங்களும் அன்றிலிருந்து இன்று வரை நாடகங்களை ஒலிபரப்புச் செய்கின்றன. வானொலியில் தினமும், வாரத்திற்கொருமுறை, தொடர்நாடகங்கள், குழந்தைகள் நாடகங்கள், பசுமைப்புரட்சி நாடகங்கள் எனப் பல்வேறு வகையில் நாடகங்கள் ஒலிபரப்பாகின்றன.

**தொலைக்காட்சி:**

தொலைக்காட்சியில், இலக்கிய நாடகம், புதிர் நாடகம், அலை நாடகம், நகைச்சுவை நாடகம், மனோதத்துவ நாடகங்கள் என, வானொலி போன்று ஒளிபரப்பப்படுகின்றன.

1975-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சென்னை தொலைக்காட்சி நிலையம் நாடகங்களை ஒளிபரப்பி வருகின்றது. இந்நாடகங்கள் பொழுது போக்கு, கொள்கை பரப்புதற்கு என்ற வகையில் அமைகின்றன. வாரம் தோறும் செவ்வாய் இரவு முக்கால் மணிநேரம் ஒளிபரப்பாகும். இவை தவிர பல குறுநாடகங்கள் வயலும் வாழ்வும், உழைப்பவர் உலகம், நலவாழ்வு, கொஞ்சம் நில்லுங்கள், வாழ்க்கைக் கல்வி போன்ற நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. இவை பிரச்சார நோக்கினவாகும்.

# பூத்துக்குலுங்கும் புத்தாண்டில்

# பொன்னான வாழ்த்துக்கள்!

MADRAS METROPOLITAN WATER SUPPLY AND SEWERAGE BOARD
METRO WATER
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்



சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்
கழிவு நீரகற்று வாரியம்




நாடகக்கலை மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் இருக்க வேண்டும். நாடகம் என்றால் அறிவீனமான, முடநம்பிக்கையான கருத்துக்களுக்கு இடம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதோடு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவகையில் -- முன்னேற்றத்திற்கேற்ற வகையில் இருக்கவேண்டும்.

**பத்திரிகைகள்:**

நாடக வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் பத்திரிகைகள் மிகவும் குறைவு. மதுரை சதங்கை கலைத் தொடர்பக வெளியீடும், சபா நாயகன் இதழுமே பூரணமாக நாடக இதழ்களாகும். தினமலர், தினமணி, இந்து, எக்ஸ்பிரஸ் பத்திரிகைகள் மாதம் ஒருநாள் நாடகம் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. ஆனந்த விகடனும், தாய் பத்திரிகையும்



சில இதழ்களில் நாடகத் திறனாய்வு மட்டும் எழுதுகின்றன.

நாடகத்தை வெறும் கலையாகக் கருதுபவர்கள் அதைப் பொழுது போக்காகக் கருதிச் சுவைப்பதோடு மனநிறைவு பெற்றுவிடுகின்றனர். நாடகம் வாழ்க்கைக்தாகவே என்று எண்ணுபவர்கள், அது மானிட வாழ்வை உயர்த்தப் பயன்படும் வகையில் நாடகத்தை அமைப்பது சாலச் சிறந்தது. பாலுணர்வும் வக்கிரமும் இல்லாத நல்ல நாடகங்களை எழுதி மேடையேற்றினால் கலைக்கும் மொழிக்கும் நன்மை பயப்பதாகும். இவற்றை மனத்தில் கொண்டால் தமிழ் நாடகம் இன்னும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆடு மேய்க்கும் கண்ணன்—என்
அருமை மிக்க நண்பன்;
காடு நோக்கிச் சென்றால—அங்கே
காண லாமே நன்றாய்

பாட்டுப் பாடித் திரிவான்—அவன்
பம்ப ரம்போல் சுழல்வான்,
ஆட்டு மந்தை யிடத்தே—மிக
அன்பாய் நடந்து கொள்வான்

என்றன் கூடப் படித்தான்—அவன்
இரண்டு வகுப்பை முடித்தான்
அன்புத் தந்தை இறந்தார்—பின்னர்
ஆடு மேய்க்கச் சென்றான்.

படிப்புச் சொல்லிக் கொடுத்து—தினம்
பகலில் உணவும் கொடுத்து
உடைகள் கூட அளித்தும்—அவன்
தொடர விலலை படிப்பை!

நோயி னாலே உடம்பு—மிக
நொந்து வாடி வதங்கும்
தாயைக் காக்க வேண்டி—அவன்
தனது படிப்பை முடித்தான்.

மொததம் முப்ப தாடு—அவன்
மேய்த்துக் கொண்டு வருவான்
மொத்த ரூபாய் மாதம்—அவன்
மூன்று பத்துப் பெறுவான்.

அரிசி, பருப்பு வாங்கி—தினம்
அம்மா வுக்கே உதவி,
சுறுசுறுப்பாய் இருப்பான்—என்
தோழன் இனிய கண்ணன்.





## சென்ற இதழில்....

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அழைத்துச் செல்லும் காட்சி சென்ற இதழ் (1.4.1986) அட்டையை அலங்கரித்தது.

# பார்த்தோம் படித்தோம்

பார்வையற்றோர் திருமணம் குறித்து எழுதப்பட்ட கட்டுரையைப் படித்ததும் மனம் நெகிழ்ந்துவிட்டது.

சொ. அருணாசலம்,
புதுவயல்.

பண்டிதர் ஜெக வீர பாண்டியனார் வரலாறும், நூற்றாண்டு விழாச் செய்தியும் அருமை! அருமை!

மு. மாணிக்கவேல்,
திண்டுக்கல்.

தமிழரசு 16-3-86 இதழில் வெளி வந்த ஏ. ஆர். என். துரைராஜ் அவர்களின் கீழாநெல்லி கட்டுரை படித்தேன். அதற்கு எத்தனை விதமான மருத்துவ குணங்கள் உள்ளன என்பதை நன்கு விளக்கமாகத் தந்துள்ளமைக்குப் பாராட்டுகள்.

சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்.

தமிழரசு 1-3-86 இதழ் அட்டைப் படம் மிகச் சிறப்பாக இருந்தது. நாளும் வளர்ந்திடும் கல்வி, சேலம் செழிக்கிறது, அந்த நாள் ஞாபகம் போன்ற கட்டுரைகள் அருமை. ஒவ்வொரு பக்கத்தையும் புள்ளி விவரவாரியாக வெளியிடுவது தமிழரசு ஒன்றேதான். பத்திரப்படுத்தி வைக்கவேண்டிய இதழ் தமிழரசு.

எஸ்.என். சிங்காரம்,
செருகடம்பூர்.

ஹேலி வால்நட்சத்திரம் பற்றி சுவையான கட்டுரையை வழங்கிய தமிழரசுக்குப் பாராட்டு.

—எம். எஸ். நாராயணன்,
வேலூர்.

தமிழரசில் வரும் கதைகள் மிகச்சிறப்பாக உள்ளன. கருத்தாழம் மிக்க கட்டுரைகள், கண்ணைக் கவரும் படங்கள், அருமையான கவிதைகளுடன் அறிவுக்கு விருந்தாய் வரும் மாணவர் பக்கமும் தமிழரசின் பெருமையை மேலும் உயர்த்துகிறது. அனைவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய புத்தகம் தமிழரசு என்பதில் சந்தேகமில்லை.

எஸ். எஸ். ஆர்.
உடையார்கோவில்.

'வரிகள் பல நீக்கம் - வளமான பணிகளுக்கு ஆக்கம்' என்ற தலைப்பில் நிதிநிலை அறிக்கையை விவரமாக வெளியிட்டிருந்தீர்கள். நன்றி.

மீனா மணாளன்,
கோயம்புத்தூர்—12.

தமிழரசு (16-2-86) அட்டைப் படம் மல்லி, முல்லை, ரோஜா மலர்கள் போல் மலர்ந்த முகத்துடன் வண்ணத்தில் சிறந்து எண்ணத்தில் நிறைந்தது. கட்டுரைகளுடன் புகைப்படங்களும் மெய் மறக்கச் செய்து வருகின்றன.

எஸ். எஸ். வாசன்,
தென் எலப்பாக்கம்.

காவலூர் வானியல் ஆராய்ச்சி நிலையம் ஆசியாவிலேயே பெரியது என்பதை தமிழரசு மூலம் உணர்ந்தேன். வியப்படைந்தேன்.

கோவிந்தசாமி,
கோவில்பட்டி.



DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23











# உழைப்பு — உழைப்பாளர்!

[redacted]ஞர் அண்ணா

* சமதர்மம் ருசிகரமான வார்த்தை - நாட்டிலே இன்று பலராலும் பேசப்பட்டுவரும் இலட்சியம். பலராலும் என்றால், உண்மையிலேயே அந்த உயர்ந்த இலட்சியத்தின்படி சமூகம் திருத்தி அமைக்கப்படவேண்டும்!

* நீதியையும் நேர்மையையும், சமுதாயத்தில் அமைதியையும், சுபிட்சத்தையும் விரும்பும் எவரும், தொழிலாளர் பிரச்னையை அலட்சியப் படுத்தி விடவோ, அல்லது அடக்குமுறைகளால் அழித்துவிடக் கூடுமென்றோ எண்ணமுடியாது.

* பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள், வாழ்வுக்காக-விடுதலைக்காக-உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது; 8 மணிநேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது; மற்ற 8 மணிநேரம் ஓய்வாக இருப்பது-இந்தத் திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது!




* பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின் இடையிலே ஒருநாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங்கால கணக்கைப் பார்க்கும் திருநாளே இந்த மே நாள்!

* வேலை, மனிதத் தன்மையை மாய்க்காத அளவு இருக்க வேண்டும்!

* உலகம் மாயம் இல்லை; உழைப்பவன் வாழ்வும் மாயமன்று; ஆனால், உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது!

* உழைப்பு உருக்குலைந்து விடக் கூடாது-உடலையும் சரி, உள்ளத்தையும் சரி, வாழ்விற்காக வசதி தேடுவதற்கு உழைத்து, அந்த உழைப்பினாலே உருக்குலைந்து போகும் நிலை மனிதனுக்கு ஏற்படுமானால்-அவன் முட்டையிட்டதும் செத்துவிடும் கோழி; அரும்பு விட்டதும் பட்டுப்போகும் செடிபோலப் பயன் காணாமலும்-பயன்தராமலும் போய்விடுகிறான்!

* பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள், நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள்; அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம் நாட்டிலே எனச் சிந்திக்க வேண்டும்!



ஏழை என்றும் பணக்காரன் என்றும் இருவர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக்கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம் அளவு,கட்டுதிட்டம் இன்றி முதலாளிகளால் குறையாடப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று துவக்கப்பட்ட முதல் முயற்சி மேதினம்.



# உலகத் தமிழ்ச் சங்கம் மலர்ந்தது

இலண்டனில் வாழும் என் தமிழ்த் தோழி!

எப்போதும் நலன் விசாரணை ஒன்றையே முன்வைத்து நான் உனக்குக் கடிதம் எழுதுவேன். ஆனால் இம்முறை, நலன் விசாரணையாக மட்டுமல்ல — தமிழகத்தில் நடைபெற்ற எழுச்சி மிகும் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவைக் குறித்த இனிய செய்திகளின் தொகுப்புரையாகவும் எனது கடிதம் அமையப் போகிறது.

வங்கக் கடலா, வானத்து நட்சத்திரங்களா என்று சந்தேகப் படும் வகையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும்



மதுரை மாநகருக்கு திரண்டு வந்திருந்தனர் பொதுமக்கள்.

ஏப்ரல் 12ஆம் நாளே விழா தொடங்கிவிட்டது.அன்று மாலை 5.30 மணியளவில், மருத்துவக் கல்லூரி அரங்கத்தில் மதுரை அரசு இசைக் கல்லூரி மாணவ மாணவியரின் இசை நிகழ்ச்சியுடன் விழா தொடக்கம் ஆகியது. பின்னர் 6.30 மணியளவில் திரு தி.எல்.மகராசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இரவு 8-30 மணியளவில் கலைமாமணி சொர்ணமுகி குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

**மறுநாள் நிகழ்ச்சி, 13.4.86 காலை 9.30 மணியளவில் மருத்துவக் கல்லூரி அரங்கத்தில், திரு எம்.பி.என். சேதுராமன், திரு எம்.பி.என்.பொன்னுசாமி குழுவினரின் நாயன இசையுடன் தொடக்கமாகியது.**

அதன் பின்னர் அரசுக் கவிஞர் திரு புலவர் !;லமைப்பித்தன் அவர்கள் தலை...மயில் 'சங்கச் சான்றோர்கள் நன்மொழி' என்ற தலைப்பில் நடைபெற்ற பாட்டரங்கத்திற்கு வருகை புரிந்திருந்த பெருமக்களை, டாக்டர் ஔவை நடராசன் வரவேற்றுப் பேசினார்:

''தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மரபை, தமிழ்ப் பண்பைக் காக்கவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கிறது. தமிழ் இலக்கியங்களைத் தேர்ந்து கொள்ள ஓர் அமைப்பு வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் நீண்ட காலமாக நினைத்து வருகிறார்கள். அதன் விளைவே இந்த உலகத் தமிழ்ச் சங்கம்!'' என்று குறிப்பிட்டார்.

பாட்டரங்கத்தைத் தொடங்கி வைத்த எங்கள் மாநிலத் தொழிலமைச்சர் திரு.க. இராசாராம் அவர்கள்,

''உலகத் தமிழ்ச் சங்கத்தை நமது முதல்வர் அவர்கள் தொடங்கி வைப்பது, காலத்தின் கட்டாயமாகும் இந்த சங்கத்தின் மூலம் பல்வேறு நல்ல பணிகளைச் செய்ய வேண்டும்'' என்ற கருத்தைத் தெரிவித்தார்.

கவிஞர் நா.காமராசன், கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம்,கவிஞர் அரசு மணிமேகலை, கவிஞர் முத்துலிங்கம்,எம்.எல்.சி.,கவிஞர் இ.முத்துராமலிங்கம், கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம், புலவர் மரியதாசு, கவிஞர் இளந்தேவன் ஆகியோர் கவிதை பாடினர்.

பிற்பகல் நிகழ்ச்சி மருத்துவக் கல்லூரித் திடலில் அமைக்கப் பெற்ற மேடையில், கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லிசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. 'தமிழ்த்தாய் வந்தாள்' என்ற தலைப்பில் பற்பல அரிய செய்திகளை எடுத்துச் சொன்னார்.

அடுத்து, இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் தமது இனிய குரலால் பாடி அவையினை ஈர்த்தார்.

இரவு 8 மணியளவில், எங்கள் வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்களின் தலைமையில், 'சங்கத் தமிழ்க் கலைகள்' என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தோரை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் வரவேற்று உரையாற்றுகையில்,

''அன்னைத் தமிழின் புகழ் தமிழகத்தையும் கடந்து தரணியெல்லாம் பரவியுள்ளது. தற்போது 41 நாடுகளில் ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. உலகளாவிய அளவில் செயல்படுத்த இன்று ஓர் தனி அமைப்பு இல்லையே என்ற ஏக்கம் போக்கும் வண்ணம் தமிழ் கூறும் நல் உலகின் நீண்டநாள் கனவை நாளை நனவாக்குகிறார் முதல்வர்'என்று தெரிவித்தார்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த எங்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்.

''பட்டினப் பாலைபாடிய உருத்திரன் கண்ணனாரைத்திருமாவளவன் ஆதரித்தான். கலிங்கத்துப் பரணிபாடிய ஜெயங்கொண்டாருக்கு தாழிசைக்கு ஒரு தங்கத் தேங்காயை வழங்கினான் குலோத்துங்க சோழன்.கபிலரை

## அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்குபெற்ற கருத்தரங்கு



பெற்ற கருத்தரங்கிற்கு-திரு எஸ் இராகவானந்தம் தலைமை ஏற்றார்.

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு சு.செல்லப்பன் அவர்கள்,

"முன்பு தோன்றிய தமிழ்ச் சங்கங்கள் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நின்றுவிட்டன. தற்போது நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெறும் தமிழ்ச் சங்கம் உலகளாவிய பார்வை கொண்டது. உலகத் தமிழர் அனைவரும் போற்றும் பண்பாட்டுச் சங்கமாக இது அமைகிறது" என்று தெரிவித்தார்.

தலைமை ஏற்ற திரு எஸ். இராகவானந்தம், தமிழ் மொழியின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்;

"இயற்கை தோன்றிய நாளிலேயே இன்தமிழ் தோன்றிவிட்டது. பண்பாட்டு மொழி தமிழ்! அதனால் தான் அது இன்னும் இளமையோடு இருக்கிறது

உலகம் அறிந்த தமிழை, உலகம் கற்கும் தமிழாக மாற்ற வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றிய எங்கள் மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன்,

உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள் என்று கூறினார் கார்ல் மார்க்ஸ். உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள் என்கிறார் புரட்சித் தலைவர்" என்று குறிப்பிட்டார்.

' கிறிஸ்துவ முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் பெர்னாண்டோ பேசுகையில்,, 'மருத்துவப் பல்கலைக் கழகம், சட்டப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் " என்று குறிப்பிட்டார்.

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த மார்க்கபந்து, "சங்க கால ஆட்சிமுறை போன்றே புரட்சித் தலைவரின் ஆட்சிமுறையும் விளங்குகிறது. உணவு வழங்கும் திட்டம் மற்ற மாநிலங்கள் எல்லாம் பின்பற்ற வேண்டிய திட்டமாகும்" என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு.அய்யணன் அம்பலம், "தமிழுக்கு ஆபத்து, சரிவு ஏற்பட்ட போதெல்லாம், மதுரை அதனைக் காப்பாற்றி வந்திருக்கிறது. என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்ற வந்த முற்போக்கு முஸ்லிம் லீகைச் சேர்ந்த செங்கம் ஜபார்.

"தமிழகத்தில் அரசியல் கட்சிகளில் பல வண்ணங்கள்-எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் புரட்சித் தலைவர் தமிழ்த்தொண்டு செய்கிறார் என்பதில் ஒருமித்த கருத்து அனைத்துக் கட்சிகளுக்கும் உண்டு" என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அழகிரிசாமி,

"இளங்கோ ஒரு காப்பியத்தை எழுதினார். மூவேந்தரும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டும் என்பதைத்தான் அதில் குறிப்பிட்டார். இந்த ஒற்றுமைக்கு வித்து இடப்படும் இடம் மதுரை. நிச்சயமாக இது புரட்சித் தலைவர் அவர்களின் பெருஞ்சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்" என்று தெரிவித்தார்.

அடுத்து, அகில இந்திய பார்வர்டு பிளாக்கைச் சேர்ந்த ஆண்டித்தேவர்,



சொர்ணமுகி நாட்டியம்





"ஆங்கில ஆட்சியின்போது தமிழ் அடிமையாகியது போல எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது. அதற்குரிய நடவடிக்கைகளைப் புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன்,

"வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் ஐயம் தீர்க்கும் மையம் ஒன்று தேவை. தமிழக ஏடுகளில் வெளிவரும் பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதற்குப் பிழை தீர்க்கும் கிழமை ஏடு ஒன்று தேவை" என்று குறிப்பிட்டார்.

ஜனதா கட்சியைச் சேர்ந்த ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம், "தமிழ் நாட்டில்உள்ள தமிழறிஞர்களுக்கு அனைத்து நாட்டு மொழிகளையும் கற்பித்து, அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, தமிழைக் கற்பிக்க வேண்டும்"என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் திரு ப.மாணிக்கம், "வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் பல நாடுகளுக்குச் சென்று வாழ்ந்து வரும் தமிழர்களைப் பற்றிய செய்திகள் நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

திராவிடர் கழகத்தைச்சேர்ந்த திருவாரூர் திரு கே. தங்கராசு உரையாற்றுகையில்,"தேசிய நூல் இல்லை. அது திருக்குறளாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் திரு.எம். பழனியாண்டி உரையாற்றுகையில்,

"இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் தமிழ் இலக்கியங்கள் வெளிவரவேண்டும் " என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 6 மணியளவில் மதுரை சோமு குழுவினரின் இன்னிசையுடன் தொடங்கியது.

அடுத்த நிகழ்ச்சி தொடங்கப்பட இருந்தது. அனைவரும் எங்கள் முதல்வரை எதிர்நோக்கியிருந்தார்கள். உலகத் தமிழ்ச் சங்கத்தை அவர் தொடங்கிவைப்பதற்குள் மற்றொரு கடமையைத் தமுக்கத்தில் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

சங்கப் புலவர்கள் நினைவுத் தூணை எங்கள் முதல்வர் திறந்து வைத்தார். புலவர்கள் வாழ்ந்த இடத்தில் அவர்களுக்கு நினைவுத் தூண் எழுப்பப்பட வேண்டும் என்பது அவரது குறிக்கோள்.

அறுபட்டை வடிவம் கொண்ட இந்த நினைவுத் தூணில் மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர் 62 பேர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுள் பத்துப் புலவர்களின் பாடல்களில் சில வரிகளும் இடம் பெற்றிருந்தன. தமுக்கம் கலை அரங்கின் தலைவாயிலில் உள்ள தமிழ் அன்னை சிலைக்கு வலப்புறத்தில் நிறுவப் பட்டுள்ள இந்த நினைவுத்தூண் 14 அடி உயரமும் 5அடி அகலமும் கொண்டதாகும்.

நினைவுத் தூணைத் திறந்து வைத்த முதல்வர் சரியாக இரவு 7.40 மணிக்கு, உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நடைபெறும் மேடைக்கு வந்தார். அதன்பின் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா முறையாகத் தொடக்கம் ஆகியது.

மதுரை மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராசுலு, இ.ஆப., அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு நனவாகும் வகையில் நமது முதல்வர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடக்கி வைக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

தொடக்க விழாவிற்கு எங்கள் கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமை ஏற்றார்.



சந்திரா தண்டாயுதபாணி குழுவினர் நடனம்



வாழ வைத்தார் பாரி வள்ளல். ஔவைக்கு அருங்கனி கொடுத்து உதவினான் அதியமான். சடையப்ப வள்ளலின் ஆதரவு இல்லாவிட்டால் கம்பர் வாழ்ந்திருக்க முடியாது. பொப்பண்ண காங்கேயரின் பேராதரவுதான் வில்லிபுத்தூராரை வாழவைத்தது. அந்த வகையில் தமிழுக்குக் கிடைத்த தலையாய வள்ளலாக புரட்சித் தலைவர்-தமிழக முதல்வர்-டாக்டர் எம்.ஜி.ஆர். திகழ்கிறார்'' என்று தெரிவித்தார்.

தொடக்க உரை ஆற்றிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. அய். சுப்ரமணியம்,

''கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை - சென்னை மாகாணத்தில் 449 புலவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்திருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

''தமிழ் இயற்கைமொழி, அதன் ஒவ்வொரு சொல்லுக்கும், அசைவுக்கும் பொருள் உண்டு'' என்று கூறினார் புலவர் இரா. இளங்குமரன்.

'நாடகப் பாங்கு' குறித்து உரையாற்ற வந்த டாக்டர் ஆறு அழகப்பன், ''தமிழகம் மிகப் பழங்காலத்திலேயே அதாவது 5000 ஆண்டுகளுக்கு முன்பே நாடகக் கலையை அறிந்திருக்கிறதுஎன்றார்.

'புற இலக்கியம்' குறித்து உரையாற்றிய டாக்டர் சி.பாலசுப்ரமணியம்,

''மன்னனைப் புலவர் பாடிய செய்யுள் என்று குறிப்பிடுவதற்கு அவனை அவர் பாடியது என்பார்கள். மன்னன் அவனாகவும் புலவர் அவராகவும் வழங்கப்படுவது தமிழ் பெற்ற சிறப்பு'என்றார்.

'அறிவியற் கொள்கைகள்' என்னும் பொருள் குறித்து உரையாற்றிய டாக்டர் க.ப. அறவாணன், ''போர், அரசியல், பொருளாதாரம், சமூகம், குடும்பம், தனி மனிதன் என 6 வகையில் அறங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்என்றார்.

'சங்ககால வாணிகம்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் தமிழண்ணல், ''இந்த வாணிகம்தான் இன்றைய உலகத் தமிழ்ச் சங்கத்திற்குத் தோற்றுவாய் ஆகும். தமிழன் உலகில் உள்ள நாடுகளுக்கு வாணிகம் செய்யச் சென்றதால் தான் அங்கெல்லாம் தமிழ் பரவியது'' என்று குறிப்பிட்டார்.

'சங்ககால நாட்டுப்புறப் பாடலியல்' குறித்து உரையாற்றிய டாக்டர் விசயலட்சுமி நவநீத கிருட்டிணன்.

''தொல்காப்பியர் காலத்திலேயே நாட்டுப்புறப் பாடல்கள் இருந்தன'' என்றார்.

'சங்க இலக்கியத்தில் அயல் நாட்டுத் தொடர்பு' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் கா.பொ. இரத்தினம், ''உலகத்தில் தமிழர்கள் எந்தெந்த நாட்டில் இன்று வாழ்ந்தாலும் அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டைத் தாய் நாடாகக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

'சங்க இலக்கியத்தில் மகளிர்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் திருமதி இராதா தியாகராஜன்', 'கணவனையும் மகனையும் பேணுவதால் பெண் என்று சொல்லப்படுகிறாள்' என்று குறிப்பிட்டார்.

'அக இலக்கியம்' என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் வ.சுப.மாணிக்கம்,

''இன்னொரு உயிருக்குத் தீங்கு செய்து, தான் இன்பம் அடைவது கூடாது என்று சொல்கிறது சங்க இலக்கியம்'' என்று தெரிவித்தார்.

'மாந்தர் ஒழுங்கும் கட்டுப்பாடும்' என்னும் பொருளில் உரையாற்றிய திரு.சு.ஸ்ரீபால்,



பாட்டரங்கம்







''கள்வர், காவலர், ஆடவர், வேந்தர் ஆகிய நால்வரையும் பொறுத்துத்தான் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்து வந்தது'' என்று குறிப்பிட்டார்.

'சங்க கால சமூகம்' என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் சை.வே.சிட்டிபாபு,

''கூட்டு மனப்பான்மையில் வாழ வேண்டும்; பிறருக்காக வாழவேண்டும் என்ற நிலை அந்நாளில் இருந்தது. பிறரது பசிப் பிணியைப் போக்க வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது'' என்று குறிப்பிட்டுவிட்டு, ''இன்று நமது முதல்வர் அவர்களும் இந்தப் பசி தீர்க்கும் பணியை உலகம் பாராட்டுகின்ற அளவுக்குச் செய்து வருகிறார்'' என்று எடுத்துரைத்தார்.

அவரது உரையுடன் கருத்தரங்கம் முடிவுற்றது.

பார்வையாளர் பகுதியில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்த எங்கள் முதல்வர், மேடையை நோக்கிப் பீடுநடையுடன் சென்றார்.

'மதுரை மாநகரில் சில புதிய திட்டங்கள் முதல்வரின் கையால் தொடங்கி வைக்கப்படுகின்றன'' என்பதை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராசுலு, இ.ஆ.ப., எடுத்துரைத்தார்.

''மதுரை எழுகடல் தெருவில் 75 லட்ச ரூபாய் செலவில் ஒரு விற்பனை மையக் கட்டடம் உருவாக இருக்கிறது. தற்போது புதுமண்டபத்தில் உள்ள கடைகள் எல்லாம் அந்த மையத்தில் இனிமேல் செயல்படும். புதுமண்டபம் கலைச் சிற்பங்கள் நிறைந்தது. அது பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருதுகிறார்கள்.

''மதுரை டவுன் ஹால் ரோட்டில் உள்ள கூடலழகர் ஆலயத்தைச் சேர்ந்த தெப்பக்குளத்தில் சுரங்கக் கடைகள் அமைக்கப்படும். டெல்லி மாநகரில் உள்ள பாலிகா பஜார் போன்ற அமைப்பில் இது உருவாக்கப்படும். அது குளிர்பதனம் செய்யப்படும். 105 இலட்ச ரூபாய்த் திட்டம் இது.

''வீடற்றோர்க்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ், அவனியாபுரத்தில் 2000 வீடுகள் கட்டும் திட்டம் ரூ.2 கோடி 38 லட்சம் மதிப்பீட்டில் செயல்பட உள்ளது''

மாவட்ட ஆட்சியாளரின் இந்த அறிவிப்புக்குப் பின்னர், எங்கள் பொன்மனச் செம்மல் முதல்வர் இந்தத் திட்டங்களுக்கெல்லாம் தமது பொற்கரத்தால் அடிக்கல் நாட்டினார். புதிய எழுச்சியையும் புதிய வசதிகளையும் மதுரை மாநகருக்கு அவர் வழங்குவதை எண்ணி, மதுரை மக்கள் உள்ளம் பூரித்தனர்.

அந்தப் பூரிப்பின் கார்வை சிறிதும் குறையக்கூடாது என்ற வகையில், டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் இன்னிசை முழக்கம் செய்தார்.



கருத்தரங்கம்

சித்திரை முதல் நாள் நிகழ்ச்சி (14.4.86) காலை 9.30 மணியளவில் அரசுக்கலைஞர் ஷேக் சின்ன மௌலானா குழுவினரின் நாயன இசையுடன் தொடங்கியது.

'சங்க கால இசை நயம்' பற்றி டாக்டர் வீ.ப.கா. சுந்தரம் மிக அரிய விளக்கங்களுடன் எடுத்துரைத்தார்.

''மிக நுணுக்கமான இசைச் சொற்கள் தமிழில் உள்ளன. என்று குறிப்பிட்டார்.

அடுத்து, 'உலகளாவிய உயர் தமிழ்' என்ற தலைப்பில் நடை



''மதுரை மாநகரில் 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தி, தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் இன்று உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் தொடங்கி வைக்கிறார். உலகத் தமிழ்ச் சங்கம் நூல்களை ஆயும் நிறுவனமாக மட்டும் இருக்கப் போவதில்லை, தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்க — தமிழர்களிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இது பயன்படும். தமிழை உலகமொழியாக ஆக்குகின்ற அந்தஸ்தை முதல்வர் வழங்குகிறார்'' என்று தெரிவித்தார் கல்வி அமைச்சர்.

எங்கள் செய்தி — அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், தமது உரையில்,

உலகத்தில் 55 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். 33 பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆய்வு செய்யப்படுகிறது. தமிழ் உயர் தனிச் செம்மொழி. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 5 கோடிப் பேர். இவர்களில் 1 கோடிப் பேர் தமிழகத்தை விட்டு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் துன்பம் துடைப்பதற்கு —அவர்களுக்கு ஆபத்து வரும்போது அதனை நீக்குவதற்கு இந்தச் சங்கம் அமைகிறது'' என்றார்.

பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 4 ஆம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. முத்து மலைச்சாமி பேசுகையில், புதிய தமிழ்ச் சங்கம் உருவாகியிருப்பது தமிழின் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும்'' என்று குறிப்பிட்டார்.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் உரையாற்றுகையில்,

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

என 4 சொற்களை உலகம் வியக்கச் சொன்னவன் தமிழன். அந்தத் தத்துவங்களைத் தந்த தமிழைப் பாதுகாப்பது தமிழர்களின் கடன்'' என்றார்.

திருக்குறளார் வீ. முனிசாமி உரையாற்றுகையில், ''உலகத்தை முன் நிறுத்தி உயர்ந்த அறங்களைச் சொன்னவன் தமிழன்.'' என்று கூறினார்.

இலங்கைத் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், ''தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியது உலகத் தமிழ்ச் சங்கத்தின் கடமையாகும். என்றார்.

சட்டமன்ற மேலைவத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் உரையாற்றுகையில்,

''தமிழ் இலக்கியத்தில் உலகு என்ற சொல் தொடக்கச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அது மங்கலச் சொல் மட்டுமல்ல — மானச் சொல்லும் ஆகும்.



வில்லிசை

''தமிழர்கள் அனைவரையும் தமிழ் மூலம் ஒன்று படுத்துகிறோம் — அரசியலால் அல்ல! தமிழை இழக்காமல் தமிழன் உலகத்தோடு இருப்பான். சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் உருவில் அமர்ந்து உலகத் தமிழ்ச் சங்கத்தை நமது முதல்வர் தொடங்கி வைக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது உரையில்,

''உலகத்தில் மனித இனச் சிக்கல்களை நீக்குவதில் தமிழ் போல் வேறெம் மொழியும் வெற்றி பெறவில்லை'' என்றார்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில், பொற்பூ உள்ள தங்கச் சங்கிலியை அவருக்கு அணிவித்தார் எங்கள் முதல்வர்.

உலகத் தமிழர்களின் சார்பில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத் தக்கார் திரு பொன்னுசாமி, முதல்வர் அவர்களுக்குப்பொன்னாடைபோர்த்தி 2 கிலோ எடையுள்ள பொற்றாமரையை வழங்கினார்.

தமக்குச் செய்த மரியாதையை ஏற்றுக் கொண்ட வாரியார் நன்றி தெரிவிக்கும் வகையில் தமது ஏற்புரையை வழங்கினார்.

''தமி என்றால் துணையின்றித் தானே இயங்குவது என்று பொருள். தமிழ் என்பது வேறொரு மொழியின் துணையின்றி, தானே இயங்க வல்லது. தமிழ் என்னும் சொல் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் படித்தால் பண்பாடு வந்து விடும்'' என்று தெரிவித்தார் வாரியார்.

எங்கள் நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் உரையாற்றுகையில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் தமிழ் வளர்ச்சி பெற்று வருவதைப் பட்டியல் போட்டுக் கூறினார்.

''தமிழுக்கெனத் தனித் துறையை உருவாக்கினால் தான் தமிழ் வளர வேண்டிய முறையில் வளரும் என்ற எண்ணத்துடன் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறையை முதல்வர் அமைத்துள்ளார்.

''அரசாங்கத்தின் செயல் முறைகளில் உருவாக்கப்படும் கோப்புகள் அனைத்தும் தமிழ் மொழியில் தான் நகர வேண்டும் என்று சட்டமிட்டார்.

''அரசு அதிகாரிகள் தமிழில் தான் கையொப்பமிட வேண்டும் என்று ஆணையிட்டார்.

''பெயர்ப் பலகை, விளம்பரப் பலகை ஆகியவற்றில் முதல் பெயர் தமிழாகத்தான் இருக்க வேண்டும். கீழே வேறு மொழிகள் இடம் பெறலாம் என்று ஆணை பிறப்பித்தார்.







''வேற்று மொழிப் படங்களைத் திரையிட்டு வரும் திரையரங்குகள் குறிப்பிட்ட காலத்திற்குத் தமிழ்த் திரைப்படங்களைத் திரையிட வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தார்.

''தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்.

''சிறந்த தமிழ் மொழி பெயர்ப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

''சான்றோர்களின் பிறந்த நாள் விழாக்களையும் நூற்றாண்டு விழாக்களையும் கொண்டாடி வருகிறார்.

''வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்கள் வாட்டம் கொள்ளக் கூடாது என்ற வகையில் 250க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 நிதி உதவி அளித்து வருகிறார்.

''தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழகத்தில் அமைய வேண்டுமென்று தமிழவேள் உமாமகேசுவரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் கண்ட கனவை, முதல்வர் நனவாக்கியுள்ளார், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியிருப்பதன் வாயிலாக!

''நாட்டில் திருக்குறள் நெறி பரப்பப்பட வேண்டும் என்ற வகையில் குறள் நெறி பரப்பு மையத்தை உருவாக்கியுள்ளார்.

''பழங்கலைகளைக் காப்பதற்காகப் பழங்கலை இயக்ககத்தை உருவாக்கியுள்ளார்.

''மன்னர் ராஜராஜனின் 1,000-மாவது முடிசூட்டு விழாவையொட்டி, தஞ்சையில் முடிசூட்டு விழாவை மறைந்த பிரதமரைக் கொண்டு நடத்தியிருக்கிறார்.

''சிறந்த கவிஞருக்கு ஆண்டு தோறும் தங்கச் சங்கிலியும் 10 ஆயிர ரூபாய் தொகையும் கொண்ட பாவேந்தர் விருதினை அளித்து வருகிறார்.

''சிறந்த எழுத்தாளர்க்கு ஆண்டு தோறும் அண்ணா பிறந்த நாளில் திரு.வி.க. விருது வழங்கி வருகிறார்.

''சிறந்த தமிழ்ப் படங்களுக்குப் பரிசுத் தொகை — உதவித் தொகை ஆகியவற்றை ஆண்டு தோறும் வழங்கி வருகிறார்.

''சிறந்த நாடகங்களுக்குப் பரிசு வழங்கி வருகிறார்.



ஐந்திறம் நூலை வெளிக்கொணர்ந்த புலவர் வீரபத்திரனுக்குப் பொன்னாடை அணிவிக்கிறார் முதல்வர்.

''மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர்களுக்கு அவர்களது பெயர்கள் பொறித்த நினைவுத் தூண் ஒன்றை அமைத்திருக்கிறார்.''

— என்று எங்கள் முதல்வரின் தமிழ்த் தொண்டுகளை நாவலர் தொகுத்துச்சொன்னதைக்கேட்டு, அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் உற்சாகமடைந்தார்கள். இத்தனை தொண்டுகளா என்று வியந்து போற்றினார்கள்.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கத்தைக் குறித்தும் எங்கள் நிதி அமைச்சர் விவரித்தார்.

''இந்த உலகத் தமிழ்ச் சங்கம் உலக நாடுகளை அளாவி நிற்கும்; பிற மாநிலங்களை அளாவி நிற்கும். அங்குள்ள தமிழர்களை ஒருமனப்படுத்தி அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தும்; தமிழ் இலக்கியச் சிந்தனையை-தமிழ்ப் பண்பாட்டை நிலைபெறச் செய்வதுடன் தமிழைப் பரப்புவதும் இதன் தொண்டாகும். சிறந்த நாடகத்தை, நாட்டுப் புற இயலை, மருத்துவக் கலையை உலக நாடுகளுக்கும் பிற மாநிலங்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்குத் துணை புரிவது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

''தமிழ் கற்க, பேச விரும்பும் பிற மாநிலத் தமிழர் அல்லாதவர்களுக்கு நூல்கள் தந்து உதவும்.

''தமிழாசிரியர்களை அனுப்பி வைக்கும்.

''பதிவு நாடா, வீடியோ தொலைக் காட்சி மூலம், தமிழைப் பரப்புவதும் இதன் நோக்கங்களில் ஒன்று.

'உலகத் தமிழ்' என்ற இதழையும் வெளியிடும்.

''தமிழ்க் கலைஞர்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்.

''தனிப் பெரும் நூல் நிலையம் ஒன்றை அமைக்கும்.

''இனி உலகில் நடைபெறப் போகும் உலகத் தமிழ் மாநாடுகளை இந்த உலகத் தமிழ்ச் சங்கம்தான் நடத்தும்.

''என்றென்றும் இதன் காப்பாளராக முதல்வர் புரட்சித் தலைவர் விளங்குவார்.

''செயற்குழு, பொதுக்குழு மாநில அளவிலும் உலகம் தழுவிய அளவிலும் அமையும்.''

உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் இடம் பெறுவதற்குரிய புத்தகங்களைச் செய்தி அறநிலையத் துறை அமைச்சர், கல்வி அமைச்சர், அரசுக் கவிஞர் மற்றும் பல பெருமக்கள் எங்கள் முதல்வரிடம் வழங்கினார்கள். அதன் பின்னர் வெளிநாட்டிலிருந்து வந்த தமிழரல்லாத - ஆனால் தமிழ் கற்றுவருகின்ற பிரதிநிதிகள் சிலர், எங்கள் முதல்வருக்கு மாலை யணிவித்து மனமகிழ்ச்சி பெற்றார்கள்.

ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஹெவோஸ் ரொமாடிகா முதல்வருக்கு மாலையை அணிவித்து விட்டு, தனது மன நெகிழ்ச்சியை மக்கள் மன்றத்தின் முன்னே வார்த்தை வடிவில் எடுத்துச் சொன்னார். தமிழை வெளி நாட்டார் பேசும்போது அதிலும் ஓர் இன்பம் இருக்கத்தான்செய்கிறது. ஜப்பான்காரர் பேசியதை நீயும் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா, அவரது வாசகத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

''நான் நாலரை வருடங்களாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் சங்க இலக்கியத்தில் இந்து சமயத்தின் நிலை பற்றி ஆய்ந்து வருகிறேன்.

''ஜப்பான் மொழியில் எழுத்துகள்கூட இல்லாத நிலை இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் தமிழர் உயர்ந்த ஆன்மிகத் தன்மையில் வாழ்ந்து வந்ததை அறிந்து ஆச்சரியப்படுகிறேன்.

''தமிழ்ப் பண்பாட்டை, ஆராய அதனைப் பரப்ப இந்தச் சங்கம் தொடங்கப்படுவது நியாயமானது. இது மேலும் சிறந்து வாழ வாழ்த்துகிறேன்.''

4ஆம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவ



ரின் அண்ணனின் பேரனான திரு ராஜேந்திரன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார் எங்கள் முதல்வர்.

பின்னர் 'ஐந்திறம்' என்னும் நூலையும், மதிவாணன் எழுதிய 'அரசும் தமிழும்' என்ற நூலையும், கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம் எழுதிய கவிதை நூலையும், மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 'தமிழ்ப் பாவை என்ற இதழையும் எங்கள் முதல்வர் வெளியிட்டு, நூலாசிரியர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.

பின்னர் உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். முதல்வர் பொத்தானை அழுத்தியதும் திரை விலக, உள்ளே, தாமரை மலர் காட்சி தர, அதன் மேலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முழக்கம் கொண்ட உலகப் பந்து சுழன்று வர, நாதசுர இசை பின்னணியில் முழங்க அக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

எழுச்சி சேர்த்த இந்த விழாவில் எங்கள் முதல்வர் அவர்கள் இனிய உரையாற்றினார். அவரது உரையை இங்கே குறிப்பிடுகிறேன்.

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்க்குலமே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன் பிறப்புக்களே; தமிழ் அறிஞர் பெருமக்களே!

''நம்முடைய நீண்ட நாள் கனவு நனவாகிறது. சங்கம் வளர்த்த மாமதுரையில் இன்று உலகத் தமிழ்ச் சங்கம் அமைகிறது. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு சிறப்புடன் இயங்கி வருகிறது. இன்று மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்படுகிறது. நம்முடைய விருப்பங்கள் செயல்வடிவம் பெற்றதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்.

''இன்று தொடங்கும் தமிழ்ச் சங்கம் சங்ககாலத்தமிழ்ச்சங்கத்தின் மறுவடிவம் என்றே கொள்ளல் வேண்டும். இது என்றும் புகழ்பட நின்று நிலவிட வேண்டும்.

''தமிழ் மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் இச்சங்கம் பொதுவானது.

''இதில் அரசியல் புக இடமில்லை. மீண்டும் சொல்கிறேன் - இதில் அரசியல் புக இடமில்லை.

''தமிழ்க் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழ் நாகரிகம் இவற்றின் பெருமைகளை உலகம் முழுவதும் பரப்புவதே இச்சங்கத்தின் பணி.

'தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ்வர்; தமிழ் நாடும் வாழும்' என்று அமரர் பேறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

''தமிழர், வாழ்வில் வளம்பெறவும், இச்சங்கம் பாடுபடும். தமிழ்க் கலை, சிற்பம், கலாச்சாரம், இலக்கியம் இவை எல்லாம் நமது ஆற்றலுக்குச் சிறந்த சான்றுகள்.

''காலத்தால் அவை இன்று தூசு படிந்தும் சிதைந்தும் கீறல்கள் விழுந்தும் காணப்படுகின்றன. அவற்றை நீக்கி தமிழ்கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றின் உண்மையான வடிவத்தையும், பெருமைகளையும் நாம் நிலை நாட்ட வேண்டும் என்று அமரர் பேறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

''அந்த உன்னதக் குறிக்கோளை நிறைவேற்றவே இந்த உலகத் தமிழ்ச் சங்கம் பிறக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தொடங்கி வைக்கிற அரிய வாய்ப்புக்கு நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

''உலகத் தமிழ்ச் சங்க அமைப்புப் பணிக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 கோடி ரூபாய்க்கு மேல் எவ்வளவு செலவானாலும் அதை அரசு ஏற்றுக்கொள்ளும்.

''இந்தச் சங்கத்தை உலகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி-வணக்கம்.''

உரையை நிகழ்த்திய முதல்வர் மேடையை விட்டு இறங்கி வந்து, அரங்கின் முன்னே பார்வையாளர் வரிசையில்அமர்ந்துவிட்டார். அடுத்து நடைபெற்ற திருமதி சந்திரா தண்டாயுதபாணி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியைக் கண்ணுறுவதில் அவர் ஆர்வம் காட்டினார். சில விநாடிகளுக்குள்ளேயே நாட்டியம் தொடக்கமாகிவிட்டது.இந் நிகழ்ச்சியுடன் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிறைவு பெற்றது.

இன்னொரு செய்தி! நீ முன்பு அனுப்பிய வீடியோ கருவியின் உதவியால், தமிழ்ச் சங்க விழாக் காட்சிகளை என் கணவர் படமாக்கியுள்ளார். அதன் பிரதி ஒன்றினையும் உனக்கு அஞ்சலில் அனுப்பி இருக்கிறேன்.

வளமார் தமிழுக்கு வாழ்வு தரும் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிகழ்ச்சிகளை நீ கண்ணாரக் கண்டு, மனமார மகிழ்ந்து,வாயாரப் போற்றுவாய் என்பது எனது எண்ணம். விழா நிகழ்ச்சிகள் உனக்குப் புதிய உற்சாகத்தைத் தருவது திண்ணம்!

உன் அன்புத் தோழி,
**செந்தமிழ்ச் செல்வி.**





# தமிழகத்தில் குடும்பநலத் திட்டச் சாதனை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் எச். வி. ஹண்டே**



குடும்பநலத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல பல வெற்றிகளை ஈட்டிய ஒரு மாநிலமாகத் திகழ்கிறது தமிழ் நாடு. தேசியத் திட்டமாகக் குடும்பநலத்திட்டம் அறிவிக்கப்பட்டு, இந்தியாவில் செயல்படுத்தத் துவக்கிய காலத்திலிருந்து தமிழகத்தில் இத்திட்டம் வெற்றி நடை போட்டு வருகிறது. திட்டம் இன்று தமிழகத்தில் வெற்றி பெறுவதற்குரிய அடிப்படையான காரணங்களில் மிக முக்கியமானதாக, ஏன் முழு முதற் காரணமாக இருப்பது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் மிகுந்த தொலை நோக்கோடு 1920-30ஆம் ஆண்டுகளிலேயே மக்களிடையே இத்திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்துப் பிரசாரம் செய்து சமுதாயம் இத்திட்டத்தை ஏற்கின்ற அளவுக்கு மக்கள் மனநிலையில் மாற்றத்தை உருவாக்கியதுதான் என்று சொல்லலாம்.

கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக வெற்றி பெற்று வருகிறது. தமிழகத்தின் தளநாயகராக இருப்பவரும், மக்களுடைய உள்ளங்களிலே நீங்கா இடம்பெற்றிருப்பவருமான மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மக்களிடையே பெற்றிருக்கும் தனிச் செல்வாக்கு இத்திட்ட வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது என்று கூறலாம்.

வெற்றிநடை போட்டுவரும் குடும்பநலத் திட்டம் மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியுடன் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலிருக்கும் பல்வேறு மாநிலங்களைவிடத் தமிழகம் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முன்னணியில் இருக்கிறது. மிகச் சிறந்த முறையில் திட்டச் செயலாக்கம் தமிழகத்தில் இருப்பதனால் வேறு பல மாநிலங்களும் மத்திய அரசும் தமிழகத்தைப் பாராட்டி வருகின்றன.

தமிழகத்தில் குடும்பநலத் திட்டம், மக்கள் தாங்களே முன்வந்து தன்னிச்சையாக ஏற்கும் ஒரு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசியல் கட்சிகளும், பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களும், தன்னியக்க நிறுவனங்களும், மகளிர் நிறுவனங்களும், அரசு ஊழியர்களும் இத்திட்டச் செயலாக்கத்திற்குத் தங்கள் முழு ஒத்துழைப்பை நல்கி வருவது குடும்பநலத்திட்டம் தமிழகத்தில் ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி வருகிறது என்பதைக் காட்டுகிறது. மேலும், திட்டமிட்டுக் குடும்பத்தை அமைத்துக் கொள்வதை மக்கள் வாழ்வின் ஒரு கூறாகவே ஏற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். நடப்பு ஆண்டு 1986 ''திட்டமிட்ட குடும்ப ஆண்டு''என அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1981ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டின் மக்கள் தொகை 4.84 கோடி ஆகும். 1971ஆம் ஆண்டு முதல் 81ஆம் ஆண்டுவரை தமிழகத்தில் ஏற்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி 17.5 சதவிகிதம் ஆகும். இதே கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள தேசியமக்கள் தொகை வளர்ச்சி 25 சதவிகிதமாகும். அனைத்திந்திய சராசரியைவிட தமிழகத்தின் மக்கள் தொகை வளர்ச்சி 7.5% குறைவாக ஏற்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அதே போல தமிழ்நாட்டினுடைய பிறப்பு விகிதம் 1000க்கு 26.1 என்றும், இறப்பு விகிதம் 1000க்கு 10.9 என்றும் குறைந்திருக்கிறது. ஆனால் தேசிய அளவில் பிறப்பு விகிதம் 1000க்கு 33.9 என்றும், இறப்பு விகிதம் 1000க்கு 12.5 என்றும் ஆனது. தேசியப் பிறப்பு விகிதத்தைவிட தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் 1000க்கு 7.8 அளவுக்குக் குறைவாக இருப்பது, மக்களிடையே செல்வாக்கு மிக்கவராய் இருக்கும் புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் தமிழகத்தில் குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய தன் பயன் என்று கூறலாம். கி.பி.2000 முடிவதற்குள் பிறப்பு விகிதத்தை 1000க்கு 21 என்றும், இறப்பு விகிதத்தை 1000க்கு 9 என்றும் குறைகக வேண்டுமென்பதும், அதே சமயத்தில் 60 சதவிகித தகுதிவாய்ந்த தம்பதியர்களைக் குடும்பநலத்திட்ட முறைகளை அனுசரிக்கச் செய்ய வேண்டும் என்பதும், குழந்தைகள் மரண விகிதத்தை 1000க்கு 60 என குறைக்க வேண்டும் என்பதும் தேசிய இலக்கு ஆகும். இந்த இலக்குகளையெல்லாம் தமிழ்நாடு 1989-90ஆம் ஆண்டுக்குள்ளாகவே எட்ட வேண்டும் என்ற நோக்கில் குடும்ப நலத்திட்டம் தமிழகத்தில் போர்க்கால குணத்தோடு அவ்வளவு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1956ஆம் ஆண்டு முதல் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 42.47 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிக்சைகளைச் செய்து முடித்திருக்கிறது. மகாராஷ்டிர மாநிலம் 69.83 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளையும், ஆந்திரமாநிலம் 44.94 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளையும் செய்து முடித்து, தமிழகத்தைவிட அதிகமாக நிரந்தரச் சிகிச்சைகளைச் செய்த மாநிலமாகத் திகழ்கின்றன. இந்த இரண்டே மாநிலங்கள் தான் தமிழகத்தைவிட அதிகமாகச் செய்திருக்கின்றன என்றாலும், மகாராஷ்டிர மாநிலமும், ஆந்திர மாநிலமும் தமிழ்நாட்டைவிட அதிகமான மக்கள் தொகையை உடையனவாய் இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும். இந்த இரண்டு மாநிலங்களைத் தவிர, தமிழ்நாட்டைவிட மிகப் பெரிய மாநிலங்கள் என்று




சொல்லத் தக்க மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் எல்லாம், தமிழகத்தைவிட மிகக் குறைவாகவே குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளைச் செய்து முடித்து இருக்கின்றன. குடும்பநல நிரந்தரச் சிகிச்சை நிறைவேற்றத்தில் தொடர்ந்து சாதனைகளை உருவாக்கி வந்த தமிழ்நாடு, 1984-85ஆம் ஆண்டு மிகப் பெரிய சாதனையை ஏற்படுத்தி, அதற்காக இந்திய அரசிடமிருந்து தேசியவிருதாக ரூ.2.5 கோடி ரூபாயைப் பரிசாகப் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டம் வெற்றியடைவதற்கு அடிப்படையாக அமைவது மக்களுடைய ஒத்துழைப்பு ஆகும். மக்களிடையே காலங்காலமாக இருந்துவரும் நடைமுறைப் பழக்கவழக்கங்கள் (Attitude and behaviour) அதன் வழி உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துள்ள எண்ணங்கள் இவற்றையெல்லாம் மாற்றித் திட்ட ஆதரவாளர்களாக அவர்களைத் திருப்ப வேண்டும். முழுமனத்துடன் கூடிய மக்கள் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமானால் இந்தப் பணியை அவசியமாகத் தொய்வில்லாமல் செய்தேயாக வேண்டும். புதிது புதிதாகச் சமுதாயத்தில் சேர்ந்து கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் திட்டமிட்டுக் குடும்பங்களை அமைத்துக் கொண்டாலன்றி திட்டம் வெற்றி பெறாது. எனவேதான் குடும்பநலத்துறையின் மிக முக்கியமான பணியாக இருப்பது மக்களுக்குத் தகவல்களை எல்லாம் தந்து இவ்வகையிலான கல்வி அளித்து மனமாற்றம் ஏற்படுத்தி, திட்டத்திற்கு ஆக்கம் தேடுவதே ஆகும்.

குடும்பநல விளம்பரப்பணிகளை முடுக்கி விடுதல், விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல், சேவைப் பணிகளை விரிவாக்குதல், பின் கவனிப்புப் பணிகளைக் கட்டுக் கோப்பாக மேற்கொள்ளுதல் மற்றும் தாய் சேய் நலப் பணிகளைக் கவனத்துடன் நிறைவேற்றுதல் ஆகிய ஐம்பெரும் பணிகளை அடிப்படையாகக் கொண்டு, புதிய புதிய உத்திகளுடன் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. குறிப்பாகச் சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்களிடையே ஒரே மாதிரியான கருத்தை எடுத்துச் சொல்லாமல், அவரவர்களது தொழில், வாழ்க்கை முறை ஆகிய பின்னணிகளைக் கருத்தில் கொண்டு பொருத்தமான முறையில் செய்திகள் ( Audience Specific Messages ) தயாரிக்கப்பட்டு திட்டம் பரப்பப்பட்டு வருகிறது. அதாவது, விவசாயிகளுக்கென்றும், தொழிலாளர்களுக்கென்றும், அரசு ஊழியர்களுக்கென்றும் இப்படி ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்றவகையில், வகைவகையாகச் செய்திகள் தயாரிக்கப்பட்டு திட்டக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன.

சிறப்பாக திரைப்படங்கள், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள் போன்றவை மூலம் திட்டம் பரப்பப்பட்டு வருகிறது. குடும்பநலக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துரைக்கும்திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ. 1 இலட்சம், இரண்டாவது பரிசு ரூ.50,000 மூன்றாவது பரிசு ரூ.25,000 எனவும், குடும்பநலப்பிரச்சார நாடகங்களுக்கும் முதல் பரிசு ரூ.15,000, இரண்டாவது பரிசு ரூ. 10,000 என்றும் அரசு தெரிவித்துள்ளது. அரசே 11 குடும்பநலத் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. மேலும் கிராமப் புறங்களில் செல்வாக்குப் பெற்ற கிராமத் தலைவர்களுக்கென குடும்பநலத் திட்டப் பயிற்சி முகாம்களை நடத்தித் திட்டத்திற்கு ஆக்கம் தேடப்பட்டு வருகிறது.

இதுபோன்ற இன்னும் பல்வேறு நடவடிக்கைகள் திட்ட மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் காரணமாக நடப்பு ஆண்டின் திட்ட இலக்கையும் விஞ்சக் கூடிய அளவுக்குச் சாதனை ஏற்படுத்த அனைத்து மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்!

(சென்னைவானொலியில் 16.3.86ல் ஆற்றிய உரை.)



# சுற்றுலாப் பொருட்காட்சியில் பரிசு பெற்ற அரங்குகள்



சென்னையில் சுற்றுலா, தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா 20.4.86 அன்று நடைபெற்றபோது, சிறந்த அரங்குகளுக்குரிய பரிசுகளை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் வழங்கினார்.

அரசுத்துறை - ஏ பிரிவு முதற் பரிசு - இந்து சமய அறநிலையத்துறை









இரண்டாம் பரிசு - தீயணைப்புத்துறை

மூன்றாம் பரிசு - கால்நடை பராமரிப்புத்துறை





## அரசுத்துறை - பி பிரிவு

இரண்டாம் பரிசு - அரசு புனர் வாழ்வு மருத்துவ நிலையம்







## மாவட்ட அரங்குகள்

முதற் பரிசு - சேலம் மாவட்டம்





இரண்டாம் பரிசு - மதுரை மாவட்டம்





மூன்றாம் பரிசு - பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்





குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

## தமிழ்நாடு கனிம நிறுவனம்
### சென்னை-600 005.
( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு -32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்எஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE


# நட்புக்கு நட்பு

—கோமகள்

"இன்னிக்கு நான் புறப்பட்டு அடையார் வரை போய்ட்டு வரேன் கமலம்!" கல்யாண ராமன் சலவை உடைகளை உடுத்தியவாறே கூறினார்.

"நாளைக்குப் போகக் கூடாதா?" மெல்ல மொழிந்தாள் சங்கரி.

"என்ன நீ! டில்லியை விட்டு மெட்ராஸ் வந்து ஒரு மாசமாகுது. வாடகைக்கு விட்டிருந்த நம்ம வீட்டை மறுபடியும் வெள்ளையடிச்சு, பெயின்ட் பண்ணி சமையலறையிலே மேடை கட்டி அம்மி கல்லுரலை நிர்மாணம் பண்ணியாச்சு! தோட்டத்திலேயும் முருங்கை, வாழை, மாமரம் எல்லாம் வச்சாச்சு. குரோட்டன்ஸ் தொட்டிகளையும் வரிசையா அமர்த்தியாச்சு. இன்னும் என்ன குறை? மனிதனைக் கொஞ்சம் வெளியே போக விடேன்..."

"சரி சரி! இனிமே நீங்க நிக்க மாட்டீங்க, புறப்படுங்க" வாசல் வரை வந்து கணவனை வழியனுப்பி விட்டு கதவைச் சாத்திக் கொண்டாள் கமலம்.

கடற் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது.

டில்லியில் பனிக்காற்று வீசும் போது, உடம்பைப் பொத்திப் போர்த்திக் கொண்டுதான் புறப் படணும்.

பஸ்ஸைப் பிடித்து அடையாரில் வந்து இறங்கினார்.

காந்தி நகரின் நாலாவது தெருவுக்கு நடந்தவாறே சங்கர மூர்த்தியின் வீட்டு எண்ணைத் தேடினார்.

உலாவப் புறப்பட்ட சங்கர மூர்த்தி வீட்டு வாசலில் நிற்கவே, இவர் "சங்கரா!" என்றவாறே குரல் கொடுத்தார்.

"கல்யாணமா? வாடா.... சௌக்கியமா! டில்லியிலே



ஒரு மெடிக்கோவுக்கு, மெடிக் கோவே மனைவியா வந்தால், அவள் கணவனுக்காகக் காத் திருக்க முடியுமா? மகிழ்ச்சியைத் தான் தர முடியுமா?'' என்றான் அருண்.

''ஆமாம்ப்பா! நான் பொறி யியல் படிச்சுட்டு, என் மாமியா ரோட டயாபெட்டீஸுக்குப் பணி விடை செய்ய முடியுமா? எனக் குப் பிடிச்ச வாழ்க்கையை உங்க ளால் தேர்ந்தெடுக்க முடியா துப்பா...'' குரல் தழதழக்கக் கூறினாள் மாலா.

''ஐயோ குழந்தைகளே! கல் யாணராமன் வந்தா நான் என்ன பதில் சொல்லுவேன்? அவனை முதலில் தூண்டி விட்டது நான் தானே?'' நொந்து கொண்டார் சங்கர மூர்த்தி.

ஒரு கனைப்புச் சத்தம் கேட் டது.

கல்யாணராமன் உள்ளே வந் தார்.

''உட்கார் கல்யாணம்!'' குரல் நடுங்க உபசரித்தார் சங்கர மூர்த்தி.

கல்யாணராமன் உட்காரவும் சுந்தரும், சுகன்யாவும் சட்டென எழுந்து உள்ளே போய் விட்ட னர்.

''அனுசுயா!'' என்று சங்கர மூர்த்தி விளிக்கவும் தடுத்தார் கல்யாணராமன்.

''வேண்டாம் சங்கரா. உங்கள் சாப்பாடு எனக்கு ஒத்துக் கொள் ளவில்லை.! சம்பந்தமும் அப்படி தான்!''

''கல்யாணம்!''

''ஏன் சங்கரா இப்படிக் கலங் குறே? என்ன இருக்கு இதிலே? குழந்தைகளோட மகிழ்ச்சிதான் நம்ப நட்பைவிடப் பெரிசு! ரொம் பவும் முன்னாடியே திட்டம் போட்டாலும் அதுக்கு ஆயுசு கம்மி தான்!''

''உண்மைதாண்டா கல்யாண ணம்! என் பெண் இனிமையாக மறுத்தாள். என் பையன் கார சாரமாக எதிர்த்தான். என் மனைவி கசப்போடு எதிர்த்தாள். நான் என்ன செய்ய முடியும்? நான் குழந்தைகளுக்கு எந்தச் சுவைகளை ஊட்டினேனோ அதே சுவைகளை அவர்கள் நேர் மாறான முறையில் திருப்பித் தருகிறார்கள்!''

''வருத்தப்படாதே சங்கரா! நாம் வருங்கால உறவுக்குத் திட்ட மிட்டோம். இவர்கள் புது யுகம். பிரிவுக்குத் திட்டமிட்டு எதிர்க்கி றார்கள்... என் வீட்டிலும் இதே கதைதான்! இந்த அதிர்ச்சியை நாம் விழுங்கி விடுவோம். வரட் டுமா?'' என்று கல்யாணராமன் எழுந்தார்.

''கல்யாணம்! நாம் எத்தனை ஆண்டுகள் கழித்து மீண்டும் சந் தித்தோம்! நம் நட்பு நீறு பூத்த நெருப்பு மாதிரி உயிர்த்து வந் திருக்கு. நட்பு உறவாகட்டும் என்று நினைத்தோம். ஆனால் உறவு முறை ஒன்றினால் தான் நட்பு நிலைக்குமா என்ன? நட் புக்கு நட்புதான் பதில். நட்புக்கு நட்புதான் துணை. நாம் அதைக் கடைசி வரையில் காப்போம்.!'' சங்கரமூர்த்தி கல்யாணராமனின் கைகளைப் பற்றிக் கொண்டு தழ தழத்தார்.

''சங்கரா! நீ சொன்னதே சரி. நம் நட்பை நம் குழந்தைகளின் மனநிலை குலைத்து விடாது. நாம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழ மையும் நாலு மணிக்கு 'ஆவின் மில்க்' பாருக்கு வருவோம். ஆளுக்கு ஒரு வாசனைப் பாலை வாங்கிப் பருகியவாறே நட்பைக் கொண்டாடுவோம். மனம் விட்டு அளவளாவுவோம். நீ உடம்பு சரி யில்லாதவனாச்சே, நானே உன்னை வீட்டில் விட்டு விட்டு, பெசன்ட் நகர் போகிறேன். ஓ.கே..?'' என்று கூறினார் கல் யாணராமன்.

இரண்டு முதிய உள்ளங்கள், தங்கள் நட்பை இளமையாக்கி மகிழ்ந்தன. தங்கள் அன்பைப் புதுப்பித்துக் கொண்டு பிரிந்தன.








## சத்துணவு மையத்தில் தாய்மனத்து முதல்வர்

உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவை யொட்டி மதுரைக்கு வருகை புரிந்திருந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், 15.4.86 அன்று ஷெனாய் நகரில் உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குத் திடீரென்று சென்று, அங்குள்ள சத்துணவு மையத்தைப் பார்வையிட்டார். அங்குள்ள குறை பாடுகளை அறிந்து அவற்றைக் களைவதற்கு ஆவன செய்யுமாறும், குறைபாடுகளுக்குக் காரணமான வர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசலு, இ.ஆ.ப. அவர்களிடம் தெரிவித்தார் மாண்புமிகு முதல்வர். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி உடன் இருந்தார்.

அமுதம் சிறப்பங்காடி, பாண்டியன் சூப்பர் மார்க்கெட் ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வை யிட்டார் மாண்புமிகு முதல்வர்.



இருந்து எப்பாது வந்தே? நாலு நாள் இருப்பியா, ரெக்கையை கட்டிகிட்டுப் பறக்கப் போறியா?'' வீட்டுப் படியிறங்கி வந்து கல்யாணராமனின் கைகளைப் பற்றிக் கொண்டார் சங்கரமூர்த்தி.

''இனிமேல் ரெக்கையாவது ஒண்ணாவது? ரிட்டயர்ட் ஆயாச்சுடா! பெசன்ட் நகர்லேதான் ஒரு பிளாட் வாங்கிப் போட்டிருந்தேன். இப்போது அங்கே வந்து குடியேறியாச்சு.''

''வா உள்ளே உட்காரலாம்.'' என்ற சங்கரமூர்த்தி, ''அனுசுயா! வந்துட்டுப் போ!'' என்று குரல் கொடுத்தார்.

அனுசுயா கல்யாணராமனைக் கண்டதும் முந்தானையால் முதுகைப் போர்த்திக் கொண்டாள்.

''அடிக்கடி சொல்வேனே..என் நண்பன் கல்யாணராமன்!''

''வாங்க! உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்கார். ஒரு நாள் வீட்டிலே எல்லோரையும் அழைச்சுகிட்டு வரணும்.''

''சரி, வளவளன்னு பேசிகிட்டிருக்காம, டிபன் காபி கொண்டு வா! ஸ்ட்ராங் டிகாக்ஷன் போடு!'' என்று கூறிய சங்கரமூர்த்தி நண்பனைப் பார்த்துச் சிரித்தார்.

''சரி சரி! கல்யாணம், இப்பச் சொல்லு. எப்படியிருக்கு உன்னோட ரிட்டயர்ட் லைப்? உடம்புக்கு டயாபடீஸ், ப்ளட் பிளஷர், அல்சர்னு ஒண்ணுமில்லாமே இருக்கியா? குழந்தைகள் சொன்ன பேச்சு கேக்கறதுகளா? இல்லே தான் தோன்றிகளா? எல்லா விஷயத்தையும் சொல்லுடா'' உற்சாகமாகக் கேட்டார் சங்கரமூர்த்தி.

''பகவான் கிருபையிலே, நீ சொன்ன எந்த வியாதிகளையும் நான் இன்னமும் சந்திக்கலைடா. இனிமேல் எப்படியோ? என் மனைவிக்கு மட்டும் டயாபெட்டீஸ் இருக்கு'' என்றார் கல்யாணராமன்.

''பரவாயில்லே! இந்த விஷயத்திலே நீ கொடுத்து வச்சவன் தான்! எனக்கு அல்சர் தொந்தரவு இருக்கு.''

''அடடா! நீ சின்ன வயசுலே நிறைய காரம் சாப்பிடுவியே அதனாலே. . .''

''அது உண்மை தான்! அதனாலே இப்பவும் வாய்கட்ட முடியறதில்லை. எப்பவும் கொஞ்சம்



காரம், மசாலா சேர்ந்தாதான் சாப்பாடு நாக்குக்கு ருசிக்கறது. சமயத்திலே வயத்துக்குள்ளே குடல்லே ஒரு வலி தோணும் பாரு, அப்படியே துடிச்சுப் போயிடுவேன்.''

''அப்படின்னா காரத்தைக் குறைச்சுக்க வேண்டியது தானே? நாக்கு ருசியை விட்டுத் தொலைச்சுடுடா!''

சங்கர மூர்த்தியின் முகம் வாடியது. ''ஆமாம்! அப்படித் தான் இருக்கணும். ஆனா இந்தப் பாழும் நாக்கு ருசியை என்னால் வெல்ல முடியலைடா.''

''சங்கரா! வருத்தப்படாதே. உணவுக் கட்டுப்பாட்டை கொஞ்சம் கொஞ்சமா ஏத்துக்கோடா.''

அனுசுயா டிபன் தட்டை கல்யாணராமன் எதிரில் வைத்தாள்.

மைசூர் பாகு மென்மையாக இருந்தது. ஒரு விள்ளல் வாயில் போட்டதுமே சுரீரென இனிப்புச் சுவை பொங்கி நாவின் ருசி மொட்டுக்களை மலர்த்தி மயக்கியது. அதைச் சரிக்கட்ட காரா பூந்தியை ஒரு வாய் போட்டுக் கொண்டதுமே, சற்று முன் இனிப்பால் மலர்ந்த நாவின் ருசி மொட்டுக்களை சுரீரென்று சுட்டுத் தீய்த்து, கண்களில் நீரைப் பொங்க விட்டது காரம். அவசரமாகத் தண்ணீரைத் குடித்ததும் புரை ஏற, தலையைத் தட்டிக் கொண்டார் கல்யாணராமன்.

''இவர் இனிப்பிலேயும் அதீதம். காரத்திலேயும் அதீதம். இதெல்லாம் இவர் ருசிக்கேத்த மாதிரி தான் பண்ணியிருக்கு'' மெல்லக் குரல் கொடுத்தாவாறே காபியை வைத்தாள் அனுசுயா.

டிபனைத் தள்ளி விட்டு காபியை ஒரு டம்ப்ளரில் கொஞ்சமாக ஊற்றிச் சுவைத்தவர், ''ஏண்டாப்பா சங்கரா! கசப்பிலேயும் நீ அதீதம் தானா?'' என்று காபியை தூரத் தள்ளினார்.

சங்கர மூர்த்தி சிரித்தார். ''ஸாரிடா! உனக்கேத்த மாதிரி என் வீட்டு டிபன், காபி அமையவில்லை. ஒரு நாள் உன்னைக் கூப்பிட்டு உப்பு, சப்பில்லாமே சமைச்சு விருந்து வைக்கிறேன். ஓ.கே?... உம்! உன்னை ஒண்ணு கேட்கணுமேடா. உன் பிள்ளைகள் சுந்தரும்,சுகன்யாவும் என்ன பண்றாங்க, இப்போ ?''

''சுந்தர் பொறியியல் படிக்கறான்.சுகன்யா மருத்துவம் படிக்கிறாள். ஆமாம்! மாலாவும் அருணும் என்ன பண்றாங்க?''

''நீ சொன்னதையே திருப்பிப் போடு! அருண் மெடிக்கல் படிக்கிறான். மாலா என்ஜினீயரிங் பண்றாள்.''

''அடேடே' !''-சங்கர மூர்த்தியின்கண்கள் மகிழ்வில் விரிவடைந்தன. தனக்குள் சிரித்த சிரிப்பு அவர் கண்களிலும், உதடுகளிலும் அப்பிக் கொண்டது.

''என்னடா சங்கர்! உனக்குள்ளே மகிழ்ந்து போறே?''

''ஒண்ணுமில்லைடா கல்யாணம்! நம்ப ரெண்டு பேருக்கும் ஒரே தேதியிலே கல்யாண மண்டபத்திலே திருமணம் நடந்ததே, அப்போது நாம் ஒரு திட்டம் போட்டமே ஞாபகமிருக்கா?''

''எனக்கு மறக்குமா சங்கர்?'' மீண்டும் பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்ப்பது போல் கூறினார் கல்யாணராமன்.

நண்பர்கள் இருவருக்கும் திருமணம் முடிந்தகையோடு கொஞ்ச நேரம் ஒய்வு கிடைத்தது.

அப்போது இளைஞன் சங்கரமூர்த்தி, இளைஞன் கல்யாணராமனைப் பார்த்து ''டேய்! கல்யாணம்! நம் ரெண்டு பேருக்கும் ஒரே திருமணப் பந்தல்லே, ஒரே நேரத்திலே திருமணம் நடந்திருக்கு. நாம் இப்போது நண்பர்கள். எதிர்காலத்திலே நாமே சம்பந்திகளாகிடணும். நான் சொல்றது புரியுதோ?'' என்றான்.

''புரியுது! யாரோ ஒருத்தி குழந்தை வரம் வேண்டி, அரசமரத்தைச் சுத்தினாளாம். உடனே அடி வயித்தைத் தொட்டுப் பார்த்துக் கிட்டாளாம். அது போல் இருக்குடா!''

''அந்த நம்பிக்கைதான் நமக்கு வேணும்டா! புரியுதோ?''



''உம்! உன் நம்பிக்கை வாழட்டும். அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக் கொண்டான் கல்யாணராமன்.

''என்னடா கல்யாணம்! பழைய நினைவுகளைப் புதுப்பிச்சாகிறதா?''

''ஆமாம். ஒரு சின்ன ஃபிளாஷ்!''

''அப்புறம் என்ன? நாம் நல்லாயிருக்கும்போதே பசங்களை மணப்பந்தல்லே சேர்த்து வச்சுப் பார்த்துட்டால், சீக்கிரமே பேரன் பேத்திகளைப் பார்த்துடலாம். என்ன சொல்றே? நான் ஆரம்பத்திலிருந்தே என் குழந்தைகள் கிட்டே இதைப் பற்றிச் சொல்லியிருக்கேன் அடிக்கடி...''

''நிச்சயமா பண்ணலாம் சங்கரா! கல்யாணத்தை முடிச்ச உடனே பசங்க வேணா படிப்பையும் முடிச்சுக்கட்டும். நானும் கூட என் குழந்தைகள் கிட்டே நம்ம திட்டம் பற்றி அவ்வப்போது சொல்லியிருக்கேன் '' தன் பங்குக்கு கல்யாணராமனும் ஆமோதித்தார்.

மகன் அருணும், மகள் மாலாவும் அடுத்தடுத்து வீடு திரும்பியதும் அவர்களைக் கல்யாணராமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் சங்கரமூர்த்தி.

கல்யாணராமன் வீடு திரும்பும் போது இருட்டி விட்டது.

''என்ன இத்தனை நேரம்? பயந்தே போயிட்டேன். இதுகளும் இப்பத்தான் வந்ததுகள். வந்ததும் சுந்தர் பீச்சுக்குப் போறேங்கிறான். சுகன்யா கோயிலுக்குப் போறேங்கறாள். நீங்க வர்ரவரை அசையக் கூடாதுன்னு உட்கார வச்சிருக்கேன். இனிமேல் உங்கள் பாடு, அதுகள் பாடு'' என்று சலித்துக் கொண்டாள் கமலம்.

''சரிடாப்பா சுந்தர்! நீ கிளம்பு. மாலா! நீயும் கோயிலுக்குப் போய்ட்டு வாம்மா!'' என்றார் கல்யாணராமன்.

இரண்டுபேருமே அசையாமல், தாங்கள் புரட்டிக் கொண்டிருந்த புத்தகத்தையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதுவும் நல்லது தான்என்று எண்ணமிட்டவாறே தான் சங்கரமூர்த்தியை சந்தித்தது,நண்பர்கள் சம்பந்திகளாக வேண்டும் என்று அவர்களிருவரும் கனவு கண்டது, இன்று அது பற்றி சங்கரமூர்த்தி கூறியது எல்லாவற்றையுமே மூச்சு விடாமல் ஒப்பித்தார் அவர்.

''தெரிந்தவர்கள்னா நல்லது தானே? ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்ள முடியும் '' கணவரின் .கூற்றை ஆமோதித்தாள் கமலம்.

''எங்க பிளான் என்னன்னா அருணுக்கு சுகன்யா! சுந்தருக்கு மாலா!''



''அப்பா!'' மெல்ல அழைத்தாலும் சுந்தரின் குரலில் ஒரு அழுத்தம் தெரிந்தது.

''என்னடா சுந்தர்! என்ன சொல்ல வரே?''

''மன்னிச்சுடுங்கப்பா! மணல் வீடு கட்டி விளையாடறப்போ பேசின திருமணப் பேச்சு, இந்த எலக்ட்ரானிக் யுகத்திலே செல்லுபடியாகாது. உங்க திட்டத்துக்கு காலவரையறை நிர்ணயம் செய்யாவிட்டாலும் கூட, அது காலாவதியாகிட்ட திட்டம்ப்பா! நாங்க பிறக்கறதுக்கு முன்னமேயே, நீங்கள் எங்களைக் கைது பண்ணிட்டீங்கப்பா! ஆயுள் தண்டனையே பதினாலு ஆண்டுகள்தான். எனக்கு இருபது வயசாகிறது. எங்களுக்கு விடுதலை கொடுங்க. உங்க உடன்படிக்கையையும் ரத்து பண்ணுங்கப்பா!''

''சுந்தர்! என்னடா சொல்றே? உங்க சின்ன வயசிலிருந்தே நான் சொல்லி வந்ததுதானே இது?'' அவர் குரலில் நடுக்கம் பரவியிருந்தது.

''சுந்தர் சொல்றதிலே என்னப்பா தப்பு? உங்க பிரண்டோட மகனை நான் கல்யாணம் பண்ணி கிட்டா எனக்கு வேறே 'நோயாளிகள்' வேண்டாம். என் மாமனாருக்கு வந்திருக்கிற அல்சருக்கும், வரப் போற நாலு வகையான நோய்களுக்கும் வைத்தியம் பண்றதோடில்லாமல் பத்தியம் வேறு சமைச்சுப் போடணும். என்னாலே முடியாதுப்பா...'' படபடவென்று மொழிந்தாள் சுகன்யா.

''சுகன்யா! என்னம்மா, நீயா இப்படிப் பேசறே? உங்கப்பா கொடுத்த வாக்கை நினைச்சுப் பார்த்தியாம்மா?''

''வாக்கப்பற்றி நினைச்சுக்கிட்டே இருந்தா நாம் செல்வாக்கை மறந்துட வேண்டியது தான்.'' சுந்தர் கடுகடுத்தான்.

''சுகன்யா! சுந்தரமூர்த்தி கேட்டால் உயிரையே விட்டுடுவான்ம்மா! நீயாவது நான் சொல்றபடி கேளும்மா!'' அவர் குரலின் கெஞ்சல் மகளை அசைவிக்கவில்லை.

''அப்பா! என்னப்பா இது? யாரோ ஒருத்தர் உயிரை விட்டுடுவான்னு, நான் அந்தச் சிறையிலே போய் விலங்கைப் பூட்டிக்கணுமா? அது என்னாலே முடியாதுப்பா!... என்னை மன்னிச்சுடுங்க....'' பொறுமையிழந்து, தீர்மானமாகக் கூறினாள் சுகன்யா.

கல்யாணராமனின் உடம்பெல்லாம் நடுங்கியது. வாக்கு தவறி விட்ட குற்றத்திற்கு ஆளாகி விடுவோமோ என்ற அச்சம் அவரைச் சூழ்ந்தது. இரத்தமெல்லாம் தலைக்கு ஏறுவது போன்ற பிரமை. நெஞ்சில் சில ஊசிக் குத்தல்கள். வயிற்றில் பீதியின் புரளல். என்ன இது சங்கரமூர்த்தி கேட்டது போன்ற வியாதிகள் எல்லாம் தன்னிடம்படையெடுத்து விட்டனவா? ஆடிப் போய் விட்டார் அவர்.

ஒரு வாரம் அவர் உள்ளுக்குள் தீப்பந்தம் திகிலாக எரிந்தது.

''என்னடா அருண் இது? என்ன சொல்றே?'' சங்கரமூர்த்தியும் கல்யாணராமனைப் போல் அதிர வேண்டி வந்தது.

''இதோ பாருங்கப்பா! எங்க வாழ்க்கையை வைத்து விளையாடாதீங்க. உங்க சிறுபிள்ளைத்தனமான திட்டங்களை நாங்கள் ஏற்பதாக இல்லை. எங்களுக்காக பெண், மாப்பிள்ளை தேடும் சிரமம் உங்களுக்குவேண்டாம். நாங்களே தேர்ந்தெடுத்துக்கறோம்.



# நீங்களே சொல்லுங்கள்!

## பாவேந்தர் பாரதிதாசன்





சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே?

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! - உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே !

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச் சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை - சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை!

## எழுகடல் தெருவில் பழைய மண்டபம்

உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவை யொட்டி சங்ககாலப் புலவர்களின் நினைவுத் தூண் நிறுவப்படுவதற்காக, மதுரையில் எழுகடல் தெருவில் உள்ள வசந்தங்குழி என்னுமிடத்தில் தோண்டப்பட்டது. அப்போது பூமிக்கடியில் ஒரு மண்டபம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் நினைவுத்தூண் தமுக்கம் மைதானத்தின் தலைவாசலில் நிறுவுவதாக முடிவு செய்யப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட மண்டபம் ஒரு குகைப் பாதையாகச் செல்வதாகவும்-இது மீனாட்சியம்மன் கோவிலுக்குச் செல்லும் பாதையாக இருக்கலாம் என்றும் தெப்பக்குளத்துக்குச் செல்லும் வழியாக இருக்கலாம் என்றும் பலவிதமான கருத்துகள் சொல்லப்படுகின்றன.

இந்த மண்டபத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டார்.

"இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே மேலும் தோண்டிப் பாருங்கள். தொல் பொருள் ஆய்வாளர் துணையுடன் தொடர்ந்து தோண்டி ஆராய்ச்சி செய்யுங்கள் - இதற்கு வேண்டிய உதவியை அரசு செய்யும்" என்று மாவட்ட ஆட்சியாளரிடம் தெரிவித்தார் மாண்புமிகு முதல்வர்.





## கவிஞர் மன்னர் மன்னன்



கூர்வாள் ஏந்தும் கொற்றவனின் கொலு மண்டபத்தில் நிற்கும் கவி உதாரன்,

அவள் அழகு வெளிச்சம் அடித்ததென்மேல்
கொள்ளை வனப்பிலே
எனைக் காமனும் தள்ளிடக் காலிடறிற்று
கவிழ்ந்தவண்ணம் வீழ்ந்தேன்

எனத் தன்னிலை விளக்கம் தருகின்றான்
இது கேட்ட அரசன்,
'குவிந்த உன் உடற்சதையைப் பல
கூறிட்டு நரிதின்னக் கொடுத்திடுவேன்!' என்று
அச்சுறுத்திவிட்டுச்
'சிலையிடை இவனை வைத்தே-சிரச்
சேதம் புரிக' என்று கொலைஞர்க்கு ஆணை
யிடுகிறான்
சிலிர்த்தெழும் அரசிளங்குமரி
அமுதவல்லி செப்புகிறாள்.
'இலை உனக்கதிகாரம் அந்த
எழிலுடையான் பிழை இழைக்கவில்லை!'

தமிழ்க் கவிஞன் உதாரனையும் தன் மகள் அமுதவல்லியையும் கொன்றிட ஆணையிடுகிறான் ஊராள்வோன். கொலைக்களத்தில், நிறையுழைப்பாளரின் குருதியைக்குடித்த அரசன், குடிமக்கட்குப் புல்லளவு மதிப்பும் தராத இழிநிலையை எடுத்துரைக்கிறான் உதாரன். முறைகேட்டு மக்கள் கொதித்தெழுந்து, 'புவியாட்சி உனக்கில்லை' எனப் புரட்சி செய்கின்றதைக் கேட்டு அரசன் ஓடியொளிகிறான். முடியாட்சி கவிழ்ந்து குடியாட்சி தழைக்கிறது. செல்வமெலாம்-உரிமை எலாம் நாட்டாருக்கே எனச் சட்டம் இயற்றப்படுகிறது.

'பில்கணீயம்' என்ற வடமொழி நூலைத் தழுவியது—இந்தக் குறிப்புடன் பாவேந்தர் படைத்த இனிய காப்பியமான 'புரட்சிக்கவி'யில் காணும் இறுதிக் காட்சிகளைப் படித்துவிட்டு, மூல நூலான பில்கணீயத்தைத் தேடிப் பிடித்துப் படிக்கிறோம்.

1875ல் வ.கணபதிப்பிள்ளை முதன் முதலில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட்டது என்ற அடிக்குறிப்புடன் கிடைக்கும் இந்த நூலில் இன்னும் சில விவரங்கள் உள்ளன.

'யாழ்ப்பாணத்துப் புலோலி மகாவித்துவான் வ. கணபதிப் பிள்ளை மொழிபெயர்த்தது. திருமயிலை சே. வை. ஜம்புலிங்கம் பிள்ளை, பதிப்பு. 1928 சாது அச்சுக்கூடம் சென்னை.'

இந்நூலின் சில பகுதிகள் நம் கருத்தில் பதிகின்றன.

இளவரசி யாமினி பூரண திலகைக்கும் பில்கணனுக்கும் இடையிலே இடப்பட்ட திரைச்சீலை நீங்கியபின், கவிஞன் பாடுகிறான்:

**கொச்சகம்**

அன்னப்பெடையே அழகார் பசுங்குயிலே
கன்னியரசே கருதுமணி மாமயிலே
மின்னற்கொடியே மிளிர்காம பூஷணமே
உன்னைப் பிரிந்தேனேல் உய்வனோ கண்
மணியே
மானே மடக்கொடியே மாரவேள் சாயகமே
தேனே சுராமுதே தித்திக்குஞ் செங்கரும்பே
ஊனோ டுயிருருகி யுள்ளமெல்லாஞ் சோரு
கின்றேன்.
யானோர் செயலறியேன்யாது புரிவேன்மதியே

தொடர்கிறது வருணனை! எல்லாமே உடல் உறவுக்களியாட்டம். அது இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்பது தான் பில்கணனின் முடிவு. அந்த உடல் உறவின்பம் இல்லையேல் உயிர்வாழ முடியாது எனச்சாவை வரவேற்கிறான். கொலைத்தண்டனை பெற்றுக் கூர்வாள் முனையில் தலை நீட்டுகையில்,

''இப்பொழுதும் கூட அந்த எழிலரசியைக் கூடிப் பெறுகின்ற இன்பமின்றி நான் உயிர்வாழ்தல் என்பது இயலாத ஒன்று. அடங்காத இந்த வேட்கையை மாற்றிடச் சாவே சரியான மருந்து. உடனே என் தலையைக் கொய்து விடுங்கள்' எனப்புலம்புகிறான் கவிஞன்.

1914ல் வடமொழியிலிருந்து பில்கணீயத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பி.சேஷாத்திரி தன் முன்னுரையில்,

(தொடர்ச்சி 28-ஆம் பக்கம்)

(25- ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இது, 11 ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் வாழ்ந்த பில்கணன் என்ற கவிஞனின் சொந்த வாழ்க்கையே என அறிஞர்கள் கருதுகிறார்கள்'' என்கிறார்.

நமக்கு வியப்பு மேலிடுகிறது.

தமக்குக் கிடைத்த சின்னஞ்சிறிய காதல் (?) கதையைப் பாவேந்தரின் நெஞ்சம் எப்படிப் பார்த்திருக்கிறது?

அக உணர்ச்சிகளின் அடக்கமான பதிப்பாக மிளிரும் சங்கத் தமிழ் இலக்கியம் எங்கே!

உடல் உணர்ச்சி வெளிப்பாடான வடமொழியின் பில்கணீயம் எங்கே!

பாவேந்தரின் உள்ளம் 'இன்னலிலே தமிழ்நாட்டினர் இனிதாய்த் துயின்றிருக்கும் நிலையைக் காண்கிறது. இன்பக் கிளர்ச்சியை இன்னமும் ஊட்டுவதோ!

முடியாது-கூடாது!

தமிழ் இலக்கியம், இலக்கணம் கற்பிக்க வந்த ஏழைக் கவிஞனின் தலை மண்ணிலே உருளப்போகிறது. அவனின் கூரிய விழிகள், குவிந்திருக்கும் மக்கள் கூட்டத்தினரைப் பார்க்கின்றன.

உடைமைகள் யாருக்கு!

கோல் பிடித்து ஆள வந்திருக்கும் மன்னன் கொடுமை புரியத் தொடங்கினால், அவனைத் திருத்த வேண்டியவர்கள் குடிமக்கள் தாமே!

கண்ணுளே நெஞ்சை வைத்துப் பார்க்கிறான் தமிழ்க்கவிஞன். கருத்து மழைபொழிகிறான்.

''தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்;
தமிழ்க்கவியென்றெனை அவளும் காதலித்தாதான்!
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என்னாவி
அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ! அய்யகோ! என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ
உமையொன்று வேண்டுகின்றேன், மாசில்லாத
உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!''

தன்னலத்தை முற்றிலும் விட்டொழித்துத் தமிழின் மேன்மைக்குத் தன்னுயிரையும் ஈந்திட முன் வருகிறான் உதாரன். தன் அன்புக் காதலியோடு சாவைத் தழுவிடவும் அவன் தயங்கவில்லை.

தமிழ்ச் சமுதாயம் எந்த உணர்ச்சியை இந்த நாளில் பெறவேண்டும் என எண்ணினாரோ அந்தச்சிறிய குறிக்கோளைத் தன் காப்பியத்தில் வலியுறுத்துகிறார் பாவேந்தர்.

தமிழ் உணர்ச்சி பெருகவேண்டும் என்பது ஏன்?

இப்படிச் சிந்திக்கிறார் பாவேந்தர்

தமிழால் ஒன்று படவேண்டும். தமிழினம் மேன்மையுற இது ஒன்றே வழி எனக் கருதுகின்றார்.



'கவிதை கவிதைக்காகவே!' என்பாரும் உண்டு என்பதால், கவிதை மக்களுக்காகவே என்ற கருத்தின் முதல்வனாகத் தம்மை மெய்ப்பிக்கும் வகையில் தம் படைப்புக்களை உருவாக்குகிறார்.

பில்கணன் தன் உடல் உறவு இன்பத்துக்காக உயிர்துறக்கவும் முன் வருகிறான் எனில் அது வடித்தெடுத்த தன்னலம். அவர் உயிர் வாழ்வதாலோ இழப்பதாலோ சமுதாயத்துக்கு எள்ளத்தனை பயனும் இல்லை.

ஆனால், ஆணவத்தின் சின்னமாய் விளங்கும் அரசனின் கொடுங்கோலை முறித்திட மக்கட் சமுதாயத்தை அணியமாக்கும் உதாரன், தமிழ்க்காப்பியத்துக்கே புதுமையான எடுத்துக்காட்டாக மிளிர்கிறான்.



புதுமையின் விளைச்சல் எல்லாம் புவி மக்களின் மேன்மைக்கே ஆக வேண்டும்.

பழய பாட்டையில் சென்று சரிந்து மாளப் போகும் தமிழ்ச் சமுதாயம் பொட்டுப்பூச்சியாய்-புன்மைத் தேரையாய்-தொங்கும் நரம்பின் தூளாய் இருந்தது போதும்

தலையைத் தூக்கு!
ஏறு நீ மேலே மேலே!

எக்காளமிடுகிறார் பாவேந்தர், தன்னலத்தை மறந்ததாலே, தம் நாட்டு மக்கள் நலனை நினைத்ததாலே!

வளரும் தமிழ்ச் சமுதாயம் வளம் பெறுதற்கும் வலிமை உறுதற்கும் எங்கும் புதுமை பல செய்கிறார்—அதனால் தானே அவர் புரட்சிக்கவி!



# படமும் செய்தியும்



சென்னை மைலேடீஸ் கார்டனில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியில் சிறந்த பூச்செடிகளுக்குரிய பரிசுகளை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் வழங்கினார் (4-4-86)

விபத்து மற்றும் விபத்துத் தடுப்பு பற்றிய ஆய்வுக் கூட்டம் 21.4.86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. குடிபோதையில் நிதானமிழந்து வாகனங்களை ஓட்டுபவர்களைக் கண்டுபிடிப்பதற்கான புதிய கருவியின் செயல் முறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்.






புதுடெல்லியில் 7.4.86 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மத்திய அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்களைச் சந்தித்தார். மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் உடன் உள்ளார்.

அதே நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு என்.டி. இராமாராவ் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் சந்தித்தார்.




# வேளாண்மை ஆராய்ச்சி ஒரு கண்ணோட்டம்

**வி.ராஜகோபாலன்,**
**துணை வேந்தர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் இன்றளவும் பெரும் பங்கு வகிப்பது வேளாண்மைத் தொழிலாகும். வேளாண்மையை மேம்படச் செய்வதன் மூலமே தமிழகத்தின் தலையாய பிரச்சனைகளான வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சத்துணவுப் பற்றாக்குறை போன்ற அடிப்படைக் குறைபாடுகளை நீக்கிட இயலும். மக்களின் சமூக, பொருளாதாரச் சீர்கேடுகள் மறைந்து வளம் பெறவும் வேளாண்மை வளர்ச்சியே அடிப்படையாகும். வேளாண்மை வளர்ச்சிக்குப் பின்வருவன உறுதுணையாக உள்ளவையாகும்:

* "வேளாண்மையில் தீவிர ஆராய்ச்சிகள் மேற்கொள்வது. அவற்றின் முடிவுகளை விரைவாக் உழவர்களிடம் கொண்டு செல்வது.

* வேளாண் உற்பத்திக்கான இடுபொருள், காலத்தில் கிடைக்கச்செய்வது.

* பருவத்தில் பயிர் செய்திட உழவுக் கருவிகள் குறைந்த விலையில், காலத்தே கிடைக்க வகை செய்வது.

* வேளாண் விற்பனைக்கான வசதி மார்க்கட் மற்றும் சாலை வாகன வசதிகள் பொருள்களைச் சேமிக்கக் கிட்டங்கி வசதிகள் செய்வது.

* பால்வளம், கோழி மற்றும் பறவையினங்களின் பெருக்கத்திற்கு ஆய்வு மேற்கொள்வது.

* மீன்வளம், வனவளம் சீராக மேம்பட்டு வளர்வதற்கு வேண்டிய அறிவியல் முறைகளை ஆய்வது.

* மனையியல் ஆய்ந்து மனை மாட்சிக்கு வகை செய்வது.

இவற்றோடு விவசாயக் கடன் வசதி, வேளாண் விரிவாக்கக் கல்வி, கிராம, மாவட்ட மாநில மற்றும் தேசிய அளவிலான வேளாண் வளர்ச்சித் திட்டம் முதலியனவும் இணையும்போது வேளாண்மை விரைந்து வளர வாய்ப்புப் பெருகுகின்றது. மேற்கூறியவற்றில் தலையானதாக விளங்குவது ஆராய்ச்சி-வேளாண் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளைப் பின்வரும் முறையில் பாகுபாடு செய்யலாம்.

இவ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கம் புதிய பயிர் இரகங்களை உருவாக்குதல், தமிழகத்தின் தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கேற்றவையாகவும், நோய் மற்றும் பூச்சியெதிர்ப்பு கொண்டவையாகவும் தானிய மற்றும் தட்டு மகசூல் கொடுக்கக் கூடியவையாகவும், உணவு சத்து ருசி போன்றவற்றைக் கருதியும் வெப்பம் குளிர் நீர் வறட்சி தாங்கும் தன்மை ஆகியவற்றையும் மையமாக வைத்தும் புதிய இரகங்கள் உருவாக்கப்படுகின்றன.



நெல்லில் வெள்ளைப்பொன்னி, ஏ.எஸ்.டி.16, சோளத்தில் கோ. 26, கம்பில் கோ.7 பனிவரகில் கோ.3, நிலக்கடலையில் வி.ஆர். ஐ 1, கொண்டைக்கடலையில் கோ.3,சூரியகாந்தியில் கோ.2, தீவன காராமணியில் கோ.5 தீவனச் சோளத்தில் கோ.27,மஞ்சளில் பி.எஸ். 1, பப்பாளியில் கோ. 6, புடலையில் கோ. 2, துவரையில் பி.எஸ்.1, கேந்தியில் எம்.டி.யு.1 ஆகிய புதிய இரகங்கள் கண்டறியப்பட்டுத் தமிழக உழவர் பெருமக்களுக்கு வழங்கப் பெற்றுள்ளன.

பயிர்களை நன்கு பராமரிக்கவும்,உற்பத்திச் செலவைக்குறைக்கவும் ஏற்ற வழிகளை இவ்வாராய்ச்சிகள் தெரியப்படுத்துகின்றன. உயிரியல் உரமிடுதல், உர அளவை நிர்ணயம் செய்தல், விதைக்கும் பருவம், உரமிடும் பருவம், ஊடுபயிர் செய்தல், களைக்கொல்லிகள், நிலத் திருத்தம் போன்ற ஆய்வுகள் இதில் அடங்கும்.

**சில முக்கிய முடிவுகள் பின்வருமாறு:**

* நெல்லில் ஒரு எக்டருக்கு இட வேண்டிய 100கிலோநைட்ரஜனில் பாதியை உயிரியல் தழுவிய உரங்களான அசோலா, வேப்பம் பிண்ணாக்கு முதலியன மூலமாகவும், மீதியை செயற்கை உரமாகவும் அளித்தல் தானிய மற்றும் வைக்கோல் மகசூலை உயர்த்துகின்றது.

* எக்டருக்கு 90 கிலோ நைட்ரஜனை வேம்பு பூசிய யூரியா மூலமாகவும், அதோடு இரண்டுமுறை அசோலா இடுவதனாலும் ஏ.டி.டி 36ன் தானிய மகசூல் எக்டருக்கு 5.1 டன்னாகவும் ஐ.ஆர்.20ன் தானிய மகசூல் எக்டருக்கு 5.4 டன்னாகவும் உயர்ந்துள்ளது.

பதினைந்து கிலோ சோள விதையை பருவக் காற்று காலத்திற்கு இரண்டு வாரம் முன்பாக உரவிதை தெளிக்கும் கருவியின் மூலம் விதைப்பது சோள மகசூலை அதிகப்படுத்துகின்றது.

சோளத்தில் அவரையை ஊடு பயிர் செய்வதன் மூலம் சோளத்

தில் கதிர்ப் புழுவின் தாக்குதல் 2.30 சதவீதத்திற்குக் குறைகின்றது.

அசோஸ்பிரில்லத்தையும் மைக்கோரைசா பூஞ்சானத்தையும் சேர்த்து இடுவதன் மூலம் கேழ்வரகு மகசூல் 49% அதிகரிக்கின்றது.

உளுந்தின் களைகளைக் கட்டுப்படுத்துவதில் பாசலின், ஸ்டாம்ப் மற்றும் ரோன்ஸ்டார் ஆகியவை ஒரே அளவு திறன் கொண்டவையாக உள்ளன.

கொண்டைக் கடலையுடன், கொத்தமல்லி ஊடு பயிர் செய்வதன் மூலம் மொத்த எக்டர் மகசூல் அதிகரிப்பதோடு ஒரு எக்டரிலிருந்து பெறப்படும் வருமானமும் ரூ.3,200 ஆக உயர்கின்றது.




உளுந்து மற்றும் குசும்பாவை சேர்த்து 3:1 என்ற விகிதத்திலும், செடி எண்ணிக்கை முறையே 100% மற்றும் 25% என்ற விகிதத்திலும் பயிரிடுதல் பொருளாதார ரீதியில் சிறந்ததாக உள்ளது.

நிலக்கடலையில் காய் பிடிக்கும் சமயமே பாசன நீர் பாய்ச்சுதலில் மிக முக்கிய பருவமாகும்.

பருத்தியில் ஃபருகளோராலின் களைக் கொல்லியை (எக்டருக்கு 0.75 ஏ.ஐ) விதைப்பதற்கு முன் இடுவதனால் களைகள் கட்டுப்படுவதோடு களையெடுக்கும் செலவில் எக்டருக்கு ரூ.400ஐக் குறைக்கின்றது.



நெல் தரிசு பருத்திக்கு டையூரான் களைக்கொல்லி (0.5கிலோ எக்டர்) விதைப்பதற்கு முன் இடுவது பருத்தி மகசூலை அதிகப்படுத்துகின்றது.

கரும்புக்குக் கிளையடிக்கும் பருவத்தில் குறுகிய கால இடைவெளியிலும், முதிர்க்கும் சமயத்தில் அதிக இடைவெளியிலும் நீர் பாய்ச்சுவது மகசூலை அதிகரிப்பதோடு பாசன நீர் அளவையும் குறைக்கின்றது.

கரும்புச் சாற்றை பதப்படுத்தி வைப்பதற்கு சாற்றைப் பாட்டிலில் அடைப்பதற்கு முன் பொட்டாசியம் மெடபி சல்பைடை (350 பி.பி.எம்) கலப்பதன் மூலம் சாறு நல்லமுறையில் பாதுகாக்கப்படுகின்றது.

சோயாமொச்சையை அது பூத்ததிற்குப் பின் 50 நாட்களில் அறுவடை செய்வது நல்ல தரமான விதை மகசூலை அளிக்கிறது.

## பயிர்ப் பாதுகாப்பு:

பயிருக்கு வரும் நோய்கள், மற்றும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பற்றி ஆராய்ந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகள் பற்றி இவ்வாராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. பூச்சிகளைக் கொண்டே பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், இரசாயனப் பூச்சிக் கொல்லிகள் மற்றும்மருந்து உபயோகிப்பு முறை, அளவு அவற்றை பயிருக்கு அளிக்கும் சமயம், பூச்சிகளைப் பொறிகள் மூலம் பிடித்தல் போன்றவை இவற்றில் அடங்கும். அவைகளில் சில வருமாறு:

தார் பூசிய யூரியா இடுவதன் மூலம் நெல்லில் இலை சுருட்டுப் புழு மற்றும் தண்டுத் துளைப்பானில் தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகின்றது.

நெல்லில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் ஒரு சதவீதம் அதிகரித்தால் நெல் மகசூலில் 18.13 கிலோ குறைகின்றது. இலை சுருட்டுப் புழுவின் பொருளாதார சேத நிலை 5-6% பாதிக்கப்பட்ட இலையாக உள்ளது.

பதினெட்டு நாள் வயதுடைய கம்பு நாற்றுக்களை நடுவதன் மூலம் பசுங் கதிர் நோயின் அளவு 3.1% குறைகின்றது.

துவரையில் 375 மி.லி. ஃபென்வலரேட் தெளிப்பதன் மூலம் காய்ப் புழுத் தாக்குதலின் அளவு 16.57% ஆகக் குறைக்கப்படுகின்றது.

உளுந்து விதையில் ட்ரைகோடர்மா ஹார்சியானம் என்ற பூஞ்சானத்தைக் கலப்பதன் மூலம் அதன் முளைக்கும் திறன் 100 சதவீதமாக உயர்த்தப்படுகின்றது.

தென்னையில் மரமொன்றுக்கு 100 கிராம் போரான், மற்றும் 0.3, 0.15 மற்றும் 0.6 கிலோ நைட்ரஜன், பாஸ்பைரன் மற்றும் பொட்டாஸ் இடுவதன் மூலம் பென்சில் முளை வில்ட் நோயால் தாக்கப்பட்ட மரம் மீண்டும் நன்கு காய்க்கத்தொடங்குகின்றது. இவ்வாறு உரம் அளிக்கப்பட்ட மரத்தின் மகசூல் மரமொன்றுக்கு 43 ஆகவும், உரமளிக்கப்படாத மரமொன்றுக்கு 14 ஆகவும் இருந்தது.

## வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுகள்:

வேளாண்மை வளர்ச்சிக்கான சமூகப் பொருளாதாரக் காரணிகளைக் கண்டுபிடித்தல், புதிய திட்டங்கள் அமல்படுத்துவதன் மூலம் அவற்றால் வேளாண்மையில் ஏற்படும் மாற்றங்கள், ஊரக, வேலை வாய்ப்புப் பிரச்சனைகள், விவசாயத்திற்கும் பிற தொழில்கட்கும் இடையேயான தொடர்புகள், புதிய நுணுக்கங்களை விவசாயிகள் பயன்படுத்துதல்-பயன்படுத்தாமல் இருத்தல் போன்றவற்றை அறிந்து அவற்றிற்கான காரணங்களை அறிதல், விவசாயக்கடன், வேளாண் விற்பனை போன்றவற்றில் உள்ள பிரச்சனைகளைக் கண்டுபிடித்தல் போன்ற ஆய்வுகள் இதில் அடங்கும். அவைகளில் முக்கியமானவை:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பற்றிய ஆய்வில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மக்களுக்கு ஏற்படும் பயன்கள் பற்றி பரப்புதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூட விதிகளைத் தளர்த்தாமல் அவற்றை அப்படியே அமல்படுத்துதல், கூட்டுறவு விற்பனைக் கூடங்களின் ஈடுபாட்டை அதிகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பணிகளைச் சிறப்பாக ஆக்க இயலும்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தாரமங்கலம் மற்றும் வேலப்பட்டி சந்தைகளில் அவற்றின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மூலமாகவும் சந்தை நுழைவுக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமும் இச்சந்தைகளின் பணி மேம்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற நுகர்வோர்கள் அக்மார்க் பற்றி அறிந்திருப்பினும் அக்மார்க் செய்யப்பட்ட பொருட்களை நாடிச் செல்வது குறைவாக உள்ளது. அக்மார்க் மாதிரிகளைச் சரிவர சோதிக்காமலிருத்தல், சரியான தரத்தின் மீதுள்ள அதிக வரி, அக்மார்க் பொருட்களின் விலை அதிகமாக இருத்தல் போன்றவையே அப் பொருட்களை மக்கள் அதிகமாக நாடாமல் இருக்கச் செய்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்வேயில் பின்வருவன அறியப்பட்டன.

அ. தென்னார்க்காடு மாவட்டம் ஒரு பிற்பட்ட மாவட்டமாக உள்ளது.

ஆ. நெல் மற்றும் நிலக்கடலை தவிர பிற வேளாண் பயிர்களின் உற்பத்தியில் ஒரு ஸ்திரமற்ற தன்மை உள்ளது.

இ. இம்மாவட்டத்திலுள்ள கடல் பகுதிகளில் மீன் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பும் மற்றும் அங்குள்ள தாது உப்புகள் கிடைக்கும் தன்மையினால் தொழில் வளம் பெருகும் வாய்ப்பும் உள்ளது.

சாண எரிவாயு நிறுவுதலில் கிராமசேவக்குகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளார்கள். காதி மற்றும் கிராமக் கைத்தொழில் வாரிய சாண எரிவாயு சாதனத்தை விட, பல்கலைக்கழகச் சாதனமே அதிகமாக உபயோகத்தில் உள்ளது. நான்கு கன மீட்டர் அளவுள்ள சாதனமே பெரும்பாலான மக்களால் விரும்பப்படுகின்றது. ஒரு வீட்டில் சராசரியாக சாண எரிவாயு உபயோகப்படுத்தப்படும் நேரம் நான்கு மணிகளாகும்.

இடுபொருட்களைச் சரியான அளவில் சரியான நேரத்தில் வாங்க முடியாத நிலை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள், பாசன வசதியில்லாதிருத்தல் கூலியாட்கள் பற்றாக்குறை போன்றவையே நிலக்கடலை மகசூல் அதிகரிப்புக்குத்தடையாக உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

தோட்டப் பயிர்களான பழவகைகள், காய்கறிகள், மலர்கள், காபி, தேயிலை, ஏலக்காய் போன்ற பயிர்களில், பயிர் மேம்பாடு, நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு ஆகியன இதில் அடங்கும். சில சிறந்த ஆய்வுக் குறிப்புகளாவன.

வீரிய வெண்டை இரகம் உருவாக்கும் திட்டத்தின்கீழ் இரண்டு புதிய வீரிய ஒட்டு இரகங்கள் உருவாக்கப்பட்டு பரிசோதனையில் உள்ளன. 'மா'வில் எபிகாட்டில் ஒட்டு முறையில் 84-100% வெற்றி கிடைத்துள்ளது.

திராட்சையில் ஜிப்ரலிக் அமிலத்தை (50 பி.பி.எம்.)இரண்டு முறை தெளிப்பதன் மூலம் திராட்சை மகசூல் அதிகப்படுகின்றது.

பீச் விதைகளை ஐ.பி.எ.வில் (500 பி.பி.எம்) நடுவதன் மூலம் அதன் முளைக்கும் திறன் 95% ஆக உயர்கின்றது.

தக்காளியில் கொலமஸ் மொசக் என்ற பூஞ்சானம் இடுவதன் மூலம் தக்காளிக்கு வரும் வில்ட் நோய் கட்டுப்படுத்தப்படுகின்றது.

பனைக்கு டி.ஏ.பி. மற்றும் பொட்டாசியம் குளோரைடு 2% தெளிப்பதனால் பதனீரின் உற்பத்தி மரமொன்றுக்கு 206 லிட்டராக உயர்கிறது.



பனை விதை நன்கு முளைக்க விதைகளை அறுவடைக்குப் பின் மூன்று வாரங்கள் சேமிப்பில் வைக்க வேண்டும்.

யூகலிப்டஸ் போன்ற வன மரங்களோடு தானியப் பயிர்களைப் பயிர் செய்வதனால் மரங்களின் வளர்ச்சி குறைகின்றது.

காபிக்கு நுவக்ரான் பேடிஸ் செய்தல் காபி பயிருக்கு மூன்று மாதங்களுக்கு இலை சுரண்டும் பூச்சியிடமிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

விதைப்பதற்கு முன் காகிதப் பூச்சாற்றில் தக்காளி விதையை ஆறு மணி நேரம் ஊற வைப்பதன் மூலமாகவும் அல்லது விதைத்த பின் காகிதப் பூச்சாற்றை மண்ணில் நனைப்பதன் மூலமாகவும் தக்காளிக்கு வரும் 'டேம்பிங் ஆஃப்' என்ற நோய் தடுக்கப்படுகின்றது.

## வேளாண் பொறியியல் ஆய்வு

கீழ்க்கண்ட புதிய கருவிகள் இயந்திரங்கள் முதலியன இவ்வாய்வுகளின் மூலம் உருவாக்கம் பெறுகின்றன. அவையாவன:

ஹைட்ராலிக் டைனமோ மீட்டர், புஞ்சைக் களையெடுக்கும் கருவி, மாடுகளால் இழுத்துச் செல்லப்படும் இரும்புக் கலப்பை, விதை மற்றும் உரம் போடும் கருவி, நீர் இறைப்பதற்கேற்ற மலிவு விலை காற்றாலை, பெய்பைன் உலர்த்தும்சூரிய உலர்த்தி, வேளாண் கழிவுகளைப் பிரிக்கெட் செய்யும் கருவி ஆகிய கருவிகள் வேளாண் பொறியியல் பிரிவிலிருந்து உருவாக்கப் பெற்றுள்ளன.

ஆடு மாடுகள், எருமைகள், கோழி, வாத்து, ஜப்பானியக் காடைகள் ஆகியவற்றில் புதிய இனங்கள் உருவாக்குதல், அவற்றிற்கு வரும் பிணிகளை நீக்கும் முறைகள் கண்டறிதல், அவற்றை வளர்ப்பதற்கான கட்டுத்தறிகள் நிர்மானம் செய்தல், அவற்றிற்கான தீவனங்கள் கண்டுபிடித்தல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



வேளாண்மையில் கால்நடைகள் இன்றியமையாத பங்கு பெறுகின்றன. வறட்சியான பகுதிகளில் கால்நடை வளர்ப்பிலேயே வேளாண் பெருமக்கள் வருவாய் பெருகின்றனர். பல்கலைக் 'கழகம் கால்நடை வளர்ப்பில் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றது. அண்மைக் காலத்தில் சில ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகி உள்ளன.

ரைனோஸ்போர்டியோசிஸ் என்ற பூஞ்சன காளான்களால் கால்நடைகளின் மூக்கில், கட்டி உண்டாகி கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. என்று அறியப்பட்டது.

கிளிரிசிடியா மேக்குலேட்டா என்ற தாவரத்தின் இலைகளைத் தனி உணவாக வெள்ளாடுகளுக்குப் பயன்படுத்தலாமென அறியப்பட்டுள்ளது.

சவுண்டலை ஆடுகளுக்கு தரமான உணவாகப் பயன்படுத்தலாம் என்று ஆய்வின் முடிவுகளால் அறியப்பட்டுள்ளது.

ராணிக்செட் என்ற வெள்ளைக் கழிச்சல் கோழி நோய்க்கான தடுப்பு மருந்தினைப் பொரிக்கப்பட்ட கேழ்வரகுடன் கலந்து கோழிக்குஞ்சுகளுக்கு அளிக்கலாம். தொழில் நுட்ப அறிவு பெறாத விவசாயிகளும் இந்த தடுப்பு மருந்தினை எளிதாகப் பயன்படுத்த முடியும்.

முட்டையிடும் வாத்துக்களைக் கூண்டுகளில் வளர்ப்பதைக் காட்டிலும் ஆழ்குள முறையில்வளர்ப்பதே சிறந்தது என ஆராய்ச்சியின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

கலப்பின முயல்கள் நாட்டு முயல்களைவிட வேகமாக வளரும் திறன் கொண்டவை.

குரோமேசோம் குறைபாடுகள் உள்ள பொலி காளைகள் தரமுள்ள விந்துவை உற்பத்தி செய்யவில்லை என அறியப்பட்டது. அவற்றை உபயோகிப்பது தவிர்க்கப்பட்டது. இரண்டு கிடாரிகளிடம் குரோமோ சோம் குறைபாடு கண்டறியப்பட்டு அவைகளை மந்தையிலிருந்து நீங்க அறிவுரை வழங்கப்பட்டது.

**பாசன நீர் நுட்ப ஆய்வுகள்**

பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகள், புதிய முறையில் நீர் பாய்ச்சுதல் போன்ற ஆய்வுகள் இதில் அசங்கும். சொட்டு நீர்ப்பாசனம், தெளிநீர்ப்பாசன முறைகளில் ஆய்வுகள் நடந்து வருகின்றன. முக்கியமாக தமிழகத்தில் நீர் வளத்தைப் பாதுகாத்து, சிறந்த முறையில் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதுதான் முக்கிய நோக்கமாகும்.

**மீன்வள ஆய்வுகள்**

தமிழகத்தின் பலவகையான பகுதிகளுக்குகந்த மீனினங்கள் தேர்வு செய்தல் மீன் வளர்ப்பு முறைகளைக் கண்டறிதல், அவற்றின் உணவுப் பழக்கங்களைக் கண்டுபிடித்து உணவு திட்டம் தயாரித்தல், புதிய மீன்பிடி வலைகள் உருவாக்குதல்போன்ற ஆய்வுகள் இத்துறையில் செய்யப்படுகின்றன.

மீன்வளக் கல்லூரியிலிருந்து கிடைத்த சில ஆய்வின் முடிவுகளும் கீழே தரப்பட்டுள்ளன:

* மக்களுக்கு ஆர்டீமியா நபிலியை நாளொன்றுக்கு மூன்று கிராம் என்ற அளவில் தருவதானால் அவற்றின் எடை 50 நாட்களில் 33 கிராமாக உயர்கின்றது. கார்ப் மீன்களுக்கும் ஆர்டீமியாவை, நாளொன்றுக்கு 29 கிராம் எடையுள்ள மீனுக்கு மூன்று கிராம் அளவில் உணவாகத் தருவதானால் அவற்றின் எடை 15 நாட்களில் 25 கிராமாகக் கூடுகின்றது.

* புல்லவாலி உப்பளப் பகுதி **குரோசோண்ட்ரியா** ஆய்ஸ்டடர் வளர்ப்புக்கு ஏற்றது என்று அறியப்பட்டுள்ளது.

• உப்பளப் பகுதி மீன் வளர்ப்புக்கு **சிகானஸ்** கனாலிக்குலோட்டஸ் மீன் வகைகள் பொருத்தமானவையாக உள்ளன.

* வெம்ளா உணவு மீன்களுக்கு நல்ல உப உணவாக விளங்குகின்றது.

வேளாண் பல்கலைக் கழகம் தொலைநோக்கில் தன் திட்டங்கள் வகுத்துக் கொண்டு பணியாற்றி வருகின்றன.

1986-87ஆம் ஆண்டில் எடுத்துக் கொண்டுள்ள புதிய திட்டங்கள்:

### தட்டம்மைக்குத் தடுப்பு மருந்து

தட்டம்மைக்குத் "தடுப்பு ஊசி மருந்து" இன்னும் ஓராண்டுக்குள் கிடைக்கும் என்று அமெரிக்க நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"மெர்க்,ஷார்ப் அண்ட் டோமே" என்னும் அமெரிக்க மருந்துக் கம்பெனி இத்தடுப்பு மருந்தைத் தயாரித்துள்ளது. இது அபாயமற்றது, பாதுகாப்பானது என்று அந்த அதிகாரிகள் கூறினர்.

நல்ல ஆரோக்கியமான குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பு மருந்தை அளித்தால், அவர்களுக்குத் தட்டம்மை ஏற்படாமல் தடுத்துவிட முடியும்.

தற்பொழுது நடைபெற்று வரும் ஆராய்ச்சித் திட்டங்களும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள புதிய திட்டங்களும் பல்கலைக் கழக விஞ்ஞானிகளால் சிறப்புற நடத்தப் பெற்று அவற்றின் முழு பயனும் விவசாயிகளைச் சென்றடைவதுவேளாண்மை சம்பந்தப்பட்ட பல வேறு துறைகளின்- வேளாண்மைத் துறை, எண்ணெய் வித்துத்துறை, தோட்டக் கலைத்துறை, கூட்டுறவுத்துறை, வணிக வங்கிகள் போன்ற -ஒத்துழைப்பையும் சீரிய பணியையும் பொருத்ததாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பற்பல சாதனைகள் படைத்து வேளாண் பெருமக்களும் பொது மக்களும் ஏற்றம் கண்டிடமேலும் பல திட்டங்களை வரும் ஆண்டுகளில் நிறைவேற்றவும் சிறப்பாகப் பணிபுரியவும் பொதுமக்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் ஒத்துழைப்பை நாடுகின்றது.



அண்ணா மாவட்டத்தில்

# ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்டம்

குழந்தைகள் முறையாக வளர தாயன்பு, கவனிப்பு, உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் குழந்தைகள் மன ஆர்வ வளர்ச்சிகளைத் தூண்டும் உணர்வுகள் ( Stimulation of Mind ) ஆகியவை தேவைப்படுகின்றன. ஒவ்வொரு தாயும் இவைகளையே தன் குழந்தைக்கு வழங்க விரும்புகிறாள். ஆனால் எல்லாத் தாய்மார்களாலும் குழந்தைகளுக்கு இவைகளை எப்பொழுதும் வழங்க இயலுவதில்லை. வறுமை, கூட்டுக் குடும்பச் சூழ்நிலை, சுகாதாரமின்மை ஆகிய காரணங்களால் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை உரியமுறையில் வளர்க்க இயலாமல் போய்விடுகிறது. இப்படி வசதியற்ற நிலையில் உள்ள குழந்தைகளுக்கு உரிய விதத்தில் உதவி அளிப்பதே அரசின் நோக்கமாகும். ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதமும், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகளின் இறப்பு விகிதமும், ஒரு நாட்டின் பொருளாதார நிலையைத் தீர்மானிக்கின்ற இரண்டு முக்கிய புள்ளி விவரங்களாகும். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதற்கேற்ப இத்திட்டம் இந்திய பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் 15வது அம்சமாகும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நலத் திட்டமானது இந்தியாவில் 1975ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. சோதனைக் கட்டமாக (Pilot Project) 22 மாநிலங்களில் 33 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில், நிலக்கோட்டைப் பகுதியும், தர்மபுரி மாவட்டத்தில் 'தளி' பகுதியும் சென்னை மாநகரத்தில் ஒரு புறநகர்ப்பகுதியும்தேர்வுசெய்யப்பட்டு1975ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. 33 திட்டங்களில் 1[illegible] கிராமப் புறங்களிலும், 4 நகர்[illegible] புறப் பகுதியிலும், 10 மலைவா[illegible] மக்கள் பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் திட்டம் ஆண்டுக்கொருமுறை மதிப்பீடு செய்யப்பட்டு, இந்திய அரசாங்கத்தின் திட்டக் குழுவினாலும், மருத்துவக் கல்லூரி மருத்துவர் குழுவினாலும் மதிப்பீட்டு அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கப் பட்டது. சோதனைக் கட்டத்தில் வெற்றி கண்ட இந்தத் திட்டம், 1978-79ஆம் ஆண்டுகளில் மேலும் 200 திட்டங்கள் இந்தியா முழுவதும் துவக்கப்பட்டன. இந்த ஆறாவது ஆண்டுத் திட்டத்தில் 996 திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் 39 இடங்களில் இந்தத் திட்டம் மூலம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியப் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவ்வட்டாரத்தில் 100 குழந்தைகள் நலக் காப்பகங்களின் மூலம் நலிவுற்ற குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் பயன்பெற்று வருகின்றார்கள். நிலக்கோட்டை வட்டாரத்திலுள்ள 188 கிராமங்களில் 2370 தாய்மார்களும், 6வது மாதம் முதல் 2 வயது வரை உள்ள 2843 குழந்தைகளும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள 5128 குழந்தைகளும், 751 முதியவர்களும் பயனடைந்து வருகிறார்கள்.

1982ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் இத்திட்டம் துவக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நகரில் 100 குழந்தைகள் நலக் காப்பகங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்**






## கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்

ஆசிரியர்: மன்னர் மன்னன்,

வெளியீடு: முத்துப் பதிப்பகம்
269, புதுவை கிழக்குச்சாலை,
விழுப்புரம்-605 602

விலை: ரூ. 75 பக்கம்: 472

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 72 ஆண்டு வாழ்க்கை ஏட்டில் 54 ஆண்டுக் கால வாழ்க்கை வரலாற்றை இந்நூல் எடுத்துச் சொல்கிறது. பாவேந்தரின் மகனான மன்னர் மன்னனே இந்நூலை எழுதியிருப்பது நூலுக்குத் தனிச் சிறப்பு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அளித்துள்ள அணிந்துரை மற்றொரு சிறப்பு.

பாவேந்தரின் முன்னோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரைக் குறித்த செய்திகள் பல விரிவாகவும் ஆதாரபூர்வமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. பாவேந்தர் இறை வழிபாட்டுணர்வில் வாழ்ந்த காலத்தில் எழுதிய கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

தேச பக்தி கொண்டவர் பாவேந்தர் என்பதற்குப் பல்வேறு சான்றுகளையும் கவிதைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார், நூலாசிரியர். இவை எல்லாம் அரிய கருவூலங்கள் ஆகும். இவற்றைத் தேடிப் பிடித்து வெளிக் கொணர்ந்திருப்பதிலே - நூலாசிரியரின் ஈடுபாடும் பேருழைப்பும் தெற்றென விளங்குகிறது.

பாவேந்தர் திரைப்பட வசன ஆசிரியர் -பாடலாசிரியர் என்ற விவரங்களையும்-அவர் ஓர் ஓவியர் என்ற செய்தியையும் நூலாசிரியர் தக்கபடி விளக்கியிருக்கிறார்.

நூல்களைச் சமைப்பதில் மட்டுமல்ல; உணவைச் சமைப்பதிலும் பாவேந்தர் வல்லவர் என்பதை இந்நூலின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

பாரதியார் - பாரதிதாசன் தொடர்பு, இருவர்க்கும் இடையே இருந்த அன்புறவு அனைத்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பலர் பலவிதத்தில் கற்பனையாகச் சொல்லி வரும் செய்திகளை மறுத்து, ஆதாரபூர்வமான செய்திகளை நூலாசிரியர் வழங்கியிருக்கிறார்.

பாவேந்தர் சுயசரிதை எழுதாது சென்று விட்ட குறையை நூலாசிரியர் போக்கியுள்ளார். பிறப்பினால் மட்டுமல்ல - சுவையான எழுத்தினாலும் தான் பாவேந்தரின் வாரிசுதான் என்பதை நிரூபித்திருப்பதுடன் மகன் தந்தைக்காற்ற வேண்டிய உதவியைத் தக்க விதத்தில் ஆற்றியிருக்கிறார் நூலாசிரியர்.

நூலின் இடை இடையே - பாவேந்தருடன் தொடர்பு கொண்ட பெரு மக்களின் புகைப் படங்களையும் தேடிப் பிடித்து வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது மட்டுமல்ல, நூலாசிரியரின் கடின உழைப்புக்கும் சான்று பகர்வதும் ஆகும்.

எளிய இனிய நடையில், நிகழ்ச்சிகளைச் சுவையாகச் சொல்லி, பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றை வார்த்தை ஓவியமாக்கி நமது நெஞ்சச் சுவரில் பதித்து விடுகிறார் நூலாசிரியர்.

பாவேந்தரைப் பற்றி அறிய விரும்புவோர், அவசியம் படிக்க வேண்டிய நூல்.

— தமிழ்ப்பித்தன்

## பாலராமாயணம்

ஆசிரியர் : பண்டித கல்யாண ராமன்

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி,
த.பெ.எண்.617, மயிலாப்பூர்
சென்னை-600004.

விலை: ரூ. 8.50 பக்கம்: 108

வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி முறைகளைக் கூறும் இலக்கியங்கள், புராணங்கள் முதலானவை தமிழில் ஏராளமாக உள்ளன. அவற்றுள் ஒன்றான இராமாயணம், உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லோராலும் போற்றப்படுகின்றது.

'இராமாயணமா? அவ்வளவு பெரிய நூலை நாங்கள் படிக்க முடியுமா?' என்று குழந்தைகள் யாரும் ஏங்க வேண்டாம். 'பாலராமாயணம்' உங்கள் ஏக்கத்தைப் போக்கும் வகையில், எளிய நடையில் இராம கதையை அழகாகச் சித்திரிக்கிறது. நூலின் இறுதியில் இராம கதை கூறும் நீதிகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

## பாரதியின் குயில் பாட்டு

ஆசிரியர்: டாக்டர் மின்னூர் சீனிவாசன்,

வெளியீடு: மின்னூர் வெளியீடு,
22/7, தீர்த்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600005.

விலை: ரூ. 10 பக்கம்: 128.

மகாகவி பாரதியின் அரிய படைப்புகளில் குயில் பாட்டும் ஒன்று. அது கருத்தாழமும், பொருளழகும் கொண்டது. கவிதை நயம் மிக்க இந்தக் குயில் பாட்டை அலசி ஆராய்ந்து அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டியிருக்கிறார் ஆசிரியர் மின்னூர் சீனிவாசன்.

'குயில் பாட்டு பாரதியாரின் ஆன்மீக வாழ்வில் பெற்ற ஒரு நிறைவைக் காட்டுகின்றது - குயில் பாட்டில் இயற்கையின் அழகும் விந்தையும் பாடப்பட்டிருக்கின்றன - பாரதியாரின் குயில் பாட்டு, கதைத் தொடருக்காகத் தோன்றிய எளிய கவிதையன்று; கருத்து - உட்பொருள், தத்துவம், வேதாந்தம் ஆகிய செய்திகளைக் கூற ஓர் ஊடகமாக அமைந்த படைப்பு' என்று ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிட்டு, பல்வேறு இலக்கியக் கருத்துக்களை மேற்கோள் காட்டி தம்முடைய ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியிருக்கிறார். நூல் முழுவதும் தமிழ்மணம் கமழ்கிறது. தமிழ் அன்பர்க்கும், ஆராய்ச்சி மாணவருக்கும் சிறந்த கையேடாகக் காட்சியளிக்கிறது இந்நூல்.

— பி வி. கிரி





*6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உணவு, சுகாதார நிலையை உயர்த்துவது.*

*குழந்தைகளின் மனநிலை, உடல்நிலை, சமூக பழக்க வழக்கங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.*

*குழந்தைகளிடையே வளரக்கூடிய தொத்து வியாதிகள், இறப்பு விகிதங்கள், சத்துணவுக் குறைவு நிலைமை இவைகளை நீக்குதல்.*

*குழந்தைகள் பள்ளிக்குப் போகாத நிலைமையைப் போக்குதல்.*

*சத்துணவுக் கல்வி, சுகாதாரக் கல்வி, தாய்மார்களுக்குக் கல்வி முறையைக் கற்றுக் கொடுத்தல்.*

**இத்திட்டத்தின் முக்கியப் பணிகள்**

*இணை உணவு*
*தடுப்புஊசி வைத்தியமுறைகள்*
*உடல்நலப் பரிசோதனை*
*தொடர்பராமரிப்புச் சிகிச்சை முறை*
*முறைசாரா முன் பருவக்கல்வி.*
*உணவு சுகாதாரக் கல்வி.*

**திட்டத்தின் முக்கியப் பணிகள்**

*இணை உணவு:- இது ஆண்டுக்கு 300 நாட்கள் வரை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த இணை உணவின் மூலம் ஒரு குழந்தைக்கு 300 முதல் 400 கலோரி வரை கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய சத்துணவுப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. மாலைக்கண் நோயைப் போக்க வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. சோகையைப் போக்க குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன.*

*6 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு(சிஎஸ்எம்) புரதச்சத்து நிறைந்த சோயா பீன்ஸ் மாவு உருண்டை கொடுக்கப்படுகின்றது.*



**கேர் உணவு**

*1984 ஜனவரி 9 முதல் 'கேர்' உணவு தொடங்கப்பட்டது. 6 வயது முதல் 2வயது முடிய உள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கான்சோயாபீன்ஸ் மில்க் (Corn Soya lean milk ) 80 கிராமும், சாலிட் ஆயில் 7 கிராமும் அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும் கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும் 'கேர்' உணவு வழங்கப்படுகிறது.*

*இதன்மூலம் திண்டுக்கல் நகரில் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 2,751. 2 வயது முதல் 5 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு கொடுக்கப்படுகிறது. இதனால் பயன்பெறும் குழந்தைகள் 3954. இந்த இணை உணவுப் பணியில், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்குப் பர்கர்வீட் என்ற கோதுமை ரவை கொடுக்கப்படுகிறது. இதனால் பயனடையும் கர்ப்பிணிப் பெண்களின் மொத்த எண்ணிக்கை 1382. பாலூட்டும் தாய்மார்கள் 1996 பேர் இந்தச் சிறப்புணவின் மூலம் பராமரிக்கப்படுகிறார்கள்.*

*மாண்புமிகு தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 790 முதியோர்களுக்குச் சிறப்புணவும், 2 வயது முதல் 5 வயது முடிய 3954 குழந்தைகளுக்குச் சிறப்புணவும் பெற்று, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நலத் திட்டத்தோடு சேர்ந்து பயன் அடைந்து வருகிறார்கள். இந்த உணவுத் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் தினமும் 500 கலோரியும் 24 கிராம் புரதச் சத்தும் பெற்றுப்பயனடைகிறார்கள். இதன் மூலம் எடை குறைந்த நிலையில் குழந்தை பிறப்பது தவிர்க்கப்படுகிறது. ஒரு வயது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் நாள்தோறும் 300 முதல் 400 கலோரி மாவுச் சத்தும், 9ல் இருந்து 15 கிராம் புரதச் சத்தும் பெற்றுப் பயனடைகிறார்கள். சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட சவலை, நோஞ்சான் குழந்தைகள் தீவிர பராமரிப்பின்கீழ் கொண்டுவரப்படுகிறார்கள்.*

**தடுப்பு ஊசி**

*குழந்தைகளுக்கு வரக்கூடிய, தொடரக்கூடிய தொற்றுநோய்கள் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணவாத ஜன்னி, இளம்பிள்ளை வாதம், மணல்வாரி அம்மை, காசநோய், ஆகியவற்றிலிருந்து தடுக்க தடுப்பு வைத்திய முறைகள் 1982ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் 6 வயதுக்குட்பட்டுள்ள 90 முதல் 95 சதவீத குழந்தைகளுக் மூன்றுமுறை தடுப்பு ஊசியும், இளம்பிள்ளைவாதம் தடுப்புச் சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது. மணல்வாரி அம்மை தடுப்பு ஊசி முகாம்கள் 1984-85ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட குழந்தைகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது.*

**மருத்துவப் பரிசோதனை**
**(உடல் நலப் பரிசோதனை)**

*இந்தப் பணி மூலம் குழந்தைகட்கு மாதந்தோறும் எடை எடுக்கப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஆரோக்கியம் குன்றிக் குழந்தைகள் மீது தனிக் கவனம் செலுத்தி அவர்களின் உடல் நிலையைப் பரிசோதிக்க ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மருத்துவ அதிகாரியும், அவர்களுடன் தாய்மைத் துணைச் செவிலியர் நால்வரும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றனர். இதன் மூலம் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 21,066 ஆகும்.*



*இந்த மருத்துவப் பரிசோதனைப்படி கர்ப்பிணிப் பெண்கள் கருத்தரித்த 16வது வாரத்திலிருந்து பதிவு செய்யப்பட்டு மாதா மாதம் அவர்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன் இரணவாத ஜன்னி சிசுக்களைப் பாதிக்காமல் இருக்க கர்ப்பிணிப் பெண்களுக்கும் டெட்டனஸ் டாக்ஸாய்டு என்ற தடுப்பு ஊசியும் போடப்படுகிறது. கர்ப்பக் காலத்தில் விளைவுகள் ஏதும் வராமல் பார்த்துக் கொள்ள மாதாமாதம் மருத்துவப் பரிசோதனையைத் தாய்மைத் துணைச் செவிலியர் நால்வரும் செய்து வருகிறார்கள்.*

*கர்ப்பிணிகளுக்கு இன்னல்கள் ஏதாவது ஏற்பட்டால் தாய்மைத் துணைச் செவிலியரால் தீவிர மருத்துவப் பரிசோதனைக்காக திண்டுக்கல் மருத்துவ மனையின் மகப்பேறு மருத்துவப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள் 1382 பேர் பதிவு செய்யப்பட்டதில் 1095 பேர் இதன்மூலம் பயனடைகிறார்கள். பாலூட்டும் தாய்மார்களுக்குச் சோகையைத் தவிர்க்க இரும்புச் சத்து மாத்திரைகள் மாதா மாதம் கொடுக்கப்படுகின்றன. பாலூட்டும் தாய்மார்கள் முதல் 4 மாதம் தீவிர பரிசோதனை செய்யப்படுகிறார்கள். 1489 குழந்தைகளுக்குக் குடற் புழுவை நீக்கும் மருந்துகள் இதுவரை வழங்கப்பட்டு வருகின்றன. வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.*

*குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படும் காலங்களில் உடலில் ஏற்படும் வறட்சியைத் தடுக்க உப்புச் சர்க்கரை நீர் கலந்து கொடுக்கப்படுகின்றது. இந்த வயிற்றுப் போக்கினால் குழந்தைகட்கு ஏற்படும் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைக்கப்படுகிறது.*

**தொடர் பராமரிப்பு:**

*சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், தீவிர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையின் குழந்தைகள் நலப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். மேல்நிலை தீவிர மருத்துவப் பரிசோதனைக்குக் மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் குழந்தைகள் நலப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.*

**முறைசாரா முன்பருவக் கல்வி:**

*இந்த முக்கியப் பணியில் 3 வயது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயனடைகிறார்கள். இந்தப் பணியின் மூலம் 10,174 குழந்தைகள் பயனடைகிறார்கள். தினமும் இக்குழந்தைகளுக்கு 3 மணி நேரம் கல்வி போதிக்கப்படுகிறது. உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, சுகாதாரப் பழக்க வழக்கங்கள், பாட்டுக்கள், கதைகள் வாய்மொழிக் கல்வி ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன.*

*திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள் 100 மையங்கள் மூலம் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த 100 மையங்களில் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்களுக்குச் சுகாதாரம் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. மேலும் தாய்ப்பாலின் முக்கியத்துவம், இணை உணவின் முக்கியத்துவம், நோய் வரும் காலங்களில் குழ்ந்தைகளைப் பராமரிக்கும் விதம், நோய் வராமல் தடுக்கும் தடுப்பு வைத்திய முறைகள் சுற்றுப்புற சுகாதாரக் கல்வி ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. அங்கன்வாடி பணியாளர்கள் அவரவர்கள் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று, நோய்த் தடுப்பு முறைகள் குழந்தைகள் பராமரிப் மரிப்பு, குடும்பநலத் திட்டம் ஆகியவை விளக்கிக் கற்றுத்தரப்படுகின்றது.*

*''ஒளி படைத்த கண்ணினாய்*
*வா! வா! வா!*
*உறுதி கொண்ட நெஞ்சினாய்*
*வா! வா! வா!''*

*பாரதி கண்ட கனவு நனவாகும் வகையில், உள்ள வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் கொண்ட இளைய சமுதாயத்தினைக் காணுதற்கு இத்திட்டம் பெரிதும் துணையாகிறது.*

**அண்ணா மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி**

*அண்ணா மாவட்டத்தில், மிகச் சிறிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் அதிக வருமானம் கொடுக்கக்கூடிய பட்டுத் தொழிலை விரிவாக்கும் வகையில் பட்டுத் தொழில் புரியும் விவசாயிகளுக்கு ரூ. 7½ இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.*

*திண்டுக்கல், வேடச்சந்தூர், பழனி, நத்தம், நிலக்கோட்டை, கொடைக்கானல் ஆகிய தாலுக்காக்களில் உள்ள விவசாயிகள் பட்டு வளர்ப்புத் தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.*

*பட்டு வளர்ப்புத் தொழிலை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் திண்டுக்கல்லில் நிர்வாக அலுவலகம், பட்டுக்கூடு அங்காடி, பட்டு விற்பனையகமும், கிராமிய பட்டு நூற்பு பயிற்சி நிலையமும், பழனி, வடமதுரை, நிலக்கோட்டை ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் நுட்பச் சேவை மையமும், வேடசந்தூர், கன்னிவாடி, வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் விரிவாக்க அலுவலகமும், நத்தத்தில் முன்னோடி சேவை மையமும், பூம்பாறை (கொடைக்கானல்)யில் பட்டு வளர்ச்சி மையமும் செயல்பட்டு வருகிறது. இம்மையங்கள் மூலம் விவசாயிகளுக்குப் பட்டுப் புழுக்களை இரண்டாம் தோலுரிப்பு வரை (முதல் ஏழு நாட்கள்) அரசின் கண்காணிப்பில் இலவசமாக வளர்த்து வழங்கப்படுகிறது.*



*இம்மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 40 விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்பதற்குரிய மனை கட்டுவதற்தத் தலா ரூ. 3,000 வீதம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், பட்டுத்தொழிலுக்குரிய தளவாடச்சாமான்கள் வாங்குவதர்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.80 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.*

*இதில் தலா ரூ. 1200 வீதம் மானியத் தொகையாக ரூ.48 ஆயிரம் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 75 விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்புத் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிக் காலத்தில் தலா ரூ.500 வீதம் ரூ. 37,500 உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. பட்டுத் தொழில்புரியும் 100 விவசாயிகளுக்கு மானியம் இல்லாத கடன் தொகையாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ. 5 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பட்டுத் தொழில் புரியும் 250 விவசாயிகளுக்குக் குச்சி மானியமாக ஏக்கர் ஒன்றிற்குத் தலா ரூ. 100 வீதம் ரூ. 25 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.*

**டி.பி.எஸ். சுந்தரநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**அண்ணா மாவட்டம்**
**திண்டுக்கல்.**

# மாணவர் பக்கம்



## கம்ப்யூட்டர் விந்தைகள்

இன்றைய அறிவியல் ஆய்வுகளில் கம்ப்யூட்டர்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மொழி வேறுபாடு இல்லாத கம்ப்யூட்டர் இருப்பது 0, 1 என்ற மொழி மட்டுமே . அது எந்த நாட்டுக் கம்ப்யூட்டராயும் இருக்கலாம். இக் கம்ப்யூட்டர்களின் சாதனைகள் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஐந்தாவது தலைமுறை -கம்ப்யூட்டர்களில் Prolog என்று சொல்லக்கூடிய மொழியைப் புகுத்தி அறிவியல் வளர்ச்சியில் அரிய சாதனையைப் புரிவதில் ஜப்பானியர்கள், தற்போது ஈடுபட்டுள்ளார்கள். Logic programming எனும் Prolog மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

இன்று பழக்கத்திலுள்ள, Paseal basic fo.tran போன்ற வகைப்படுத்தும் மொழிகளில், ஒவ்வொரு கணக்கும், தீர்க்க வேண்டிய முறை, தெளிவாக்கப் பட்டால் மட்டுமே, முடிவு கிடைக்கும். அதாவது வகைப்படுத்துபவர் (Programmer) தீர்க்கவேண்டிய கணக்கை மட்டும் சொன்னால் போதாது. அக்கணக்கை Paseal, Basic, Fortran இவைகளில் ஏதாவது ஒரு மொழிக்கு மாற்றி தீர்க்க வேண்டிய ஒவ்வொரு வரியையும் முறையாகச் சொல்ல வேண்டும்.

ஆனால் Prolog மொழி மற்ற மொழிகளிலிருந்து வேறுபட்டு, தர்க்கரீதியாக உள்ளது. சட்டரீதியான உண்மைகள் அடங்கியுள்ள இம் மொழியில் அடுக்கடுக்கான கேள்விகள் கேட்கப்பட்டு உடனுக்குடன் பதில் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இம்மொழி பழக்கத்திற்கு வரும்பொழுது கம்ப்யூட்டர் எனும் இயந்திரம் பல நன்மைகளைச் செய்ய உள்ளது.

கம்ப்யூட்டர்களைக் கொண்டு வளமிக்க நவீன வீடுகளை அமைக்கும் முயற்சி அமெரிக்காவில் மூன்று இடங்களில் நடைபெற்றுள்ளது. Taxes, Brookline, Fores-Hill ஆகிய இடங்களில் இந்த மாதிரி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான நவீன வீடுகளில் குளிக்கும் தொட்டிகளில் தொலைபேசி வசதிகள், வானொலித் தொடர்பு, கம்ப்யூட்டரால் இயங்கக்கூடிய உடற்பயிற்சி சாதனங்கள் போன்ற வசதிகள் கிடைக்கின்றன. அதோடு, இந்த உடற்பயிற்சி சாதனங்களால் எந்த அளவு பயனடைந்துள்ளோம் என்று புள்ளி விவரங்கள் அடங்கிய பட்டியலும் அவ்வப்போது கொடுக்கப்படுகிறது. படுக்கும் கட்டிலிலேயே வானொலி, தொலைக்காட்சி, குளிக்கும்வசதி நீராவியை ஏற்படுத்தி சூடான சூழலை உண்டு பண்ணுதல், தானியங்கி _ குளிர்சாதனப்பெட்டியை அமைத்தல், குறிப்பிட்ட நேரத்தில் பாத்திரத்தைச் சுத்தம் செய்தல், குழந்தைகளுடைய சுவாசம், இதயத்துடிப்பு ஆகியவை மாறுபடும்பொழுது அவற்றை முன் அறிவித்தல் ஆகிய எல்லாப் பணிகளையும் இந்த நவீன வீடுகளில் உள்ள கம்ப்யூட்டர்கள் செய்கின்றன.

வீட்டை வெப்பப்படுத்தும், குளிரவைக்கும் சாதனங்களைக் கட்டுப்படுத்துதல், பாதுகாப்பை முறைப்படுத்துதல் போன்ற பணிகளையும் கவனிக்கிறது இக்கம்ப்யூட்டர். நடைபாதையில் போடப்பட்டுள்ள விரிப்புக்குக் கீழே துல்லியமான, குரல் கண்டு பிடிக்கப்படும் கருவி, ஜன்னல், கதவு ஆகியவற்றில் சப்தமிடும் கருவிகள் ஆகியவை கம்ப்யூட்டரால் காக்கப்படுகின்றன. சனி, ஞாயிறு போன்ற விடுமுறைநாட்களில், வீட்டைப்பற்றிக் கவலையில்லாமல் வெளியூர் செல்ல இவ்வமைப்பு உதவுகிறது. வீட்டிற்குள் திருடன் நுழைந்ததும் சப்தமிட்டு போலீஸை இக்கம்ப்யூட்டர் வரவழைத்துவிடும்

—நன்றி : வானொலி



## நாளை உனதே!

தமிழன்பன்

அன்பு ஒழுக்கம் சேவை
அரிய பண்புகள் யாவும்
சின்ன வயதினி லிருந்தே
சேர்ந்து வளரனும் தம்பி!

ஒன்று பட்ட உலகே
ஒவ்வொரு நாளும் கனவாய்
நின்று நிலைபெற வேண்டும்
நினைவில் கொள்வாய் தம்பி!

உன்னால் இந்த உலகம்
உயரும் நாளை எண்ணி
நன்றே பாடு படுவாய்
நாளை உனதே தம்பி!

## அறிவுச் சுடர்

* தட்டச்சுப் பொறியை ஹென்றி மில் என்பவர் 1,714-ல் கண்டுபிடித்தார்.
* 'தமிழ் நாடகத் தந்தை' எனப் போற்றப்படுபவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார்.
* 'விஜய நகரப் பேரரசு' ஹரிஹரர், புக்கர் என்பவர்களால் 1336-ஆம் ஆண்டு நிறுவப் பட்டது.
* பஞ்சாப் "இந்தியாவின் தானியக் கிடங்கு" என அழைக்கப்படுகிறது.
* இந்தியாவின் மிக நீளமான ஆறு பிரம்மபுத்திரா ஆகும்.
* மேற்குத் தொடர்ச்சி மலையில் மிக உயர்ந்த சிகரம் 'ஆனை முடி' ஆகும். உயரம் 2,703மீ.



பாவிகளே! என்று மனிதர்களை அழைப்பது பாவமாகும். மனித இயற்கைக்கு அது ஒரு பழிச்சொல்லாகும் ஓ, சிங்கங்களே, எழுந்திருங்கள்! என்றழையுங்கள்.

—விவேகானந்தர்

* இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதி 'கானிங் பிரபு' ஆவார்.
* 'வெடி வழிபாடு' உள்ள ஒரே கோவில் குமரி மாவட்டம் குழித்துறை அருகே உள்ள சாஸ்தா கோவில் ஆகும்.
* நாய்க்குடை, காளான் போன்றவை, தானே உணவை தயாரிக்க முடியாது.
* காந்தக் கல்லைத் திசை காட்டும் கல்லாக முதன் முதல் சீனர்கள் பயன்படுத்தினர்.

ந. பாலாஜி
பதினோராம் வகுப்பு 'ஈ' பிரிவு,
த.பி.சொ. அரசு மேல்நிலைப்பள்ளி,
பாவூர் சத்திரம், நெல்லை மாவட்டம்.



## தம்பிக்கு

அரக்கோணம்

சங்கரபாண்டியன்

வாழ்வை வெல்வோம்—தம்பி
வறுமையை ஒழிப்போம் தம்பி
தாழ்வைக் களைவோம்—தம்பி
தலைவர்கள் ஆவோம் தம்பி!

முயற்சிகள் செய்வோம்—தம்பி
முனைந்து உழைப்போம் தம்பி
பயிற்சிகள் பழகுவோம்—தம்பி
பண்பை வளர்ப்போம் தம்பி!

உயர்ந்து காட்டுவோம்—தம்பி
உலகை ஆளுவோம் தம்பி
அயர்வை அகற்றுவோம்—தம்பி
அன்பைப் போற்றுவோம் தம்பி!

## பெரியார் மாவட்டத்தில்

# கூட்டுறவு நூற்பு ஆலை

பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை 1963ல் 13 ஆயிரம் கதிர்களுடன் 91லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1975-ம் ஆண்டு 25 ஆயிரம் கதிர்களாக உயர்த்தப்பட்டது. அதற்கு, ஒரு கோடியே 15 லட்ச ரூபாய் செலவு ஆனது. அன்றைய மதிப்பு உபகரணங்களுடன் ரூ 3 கோடியே 96 லட்சம் ஆகும். இன்றைய மதிப்பு 18 முதல் 20 கோடி ரூபாய் ஆகும். தற்போது 888 தொழிலாளர்கள் இங்கு பணி புரிகின்றனர்.

இந்த ஆலைக்கு அரசு 74 லட்ச ரூபாய் முதலீடு செய்துள்ளது. சிறந்த நிலையான நூல்களை நியாய விலையில் தருவதற்கென்றே இந்த ஆலை தொடங்கப்பட்டது. இங்கு தயாராகும் நூல் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த ஆலையில் தற்போது நாளொன்றுக்கு 6328 கிலோ நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதத்திற்கு 1 லட்சத்து 96 ஆயிரம் கிலோ நூல் உற்பத்தியாகிறது. 1984-ஆம் ஆண்டு மிக அதிக உற்பத்தியாக 1 கதிருக்கு 89 கிராம் நூல் தயாரிக்கப்பட்டது. 85-ஆம் ஆண்டு மட்டும் இந்த விற்பனையில் 26 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. இந்த ஆண்டு 27 லட்சம் ரூபாய் லாபம் திரட்டக் குறீயீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 மாதத்தில் மட்டும் 4 லட்ச ரூபாய் லாபம் கிடைத்துள்ளது.



52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலையில் ஸ்டோர் வசதியும், கடன் வழங்கும் சங்கமும் உள்ளன. தொழிலாளர்கள் சிரமமின்றி ஆலைக்கு வருவதற்காக அவசியப்பணியாளர்களுக்கு 12 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு இரவு நேரத்தில் தேநீர் இலவசமாக வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கென மருந்துச் செலவிற்காக 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆலை மூலம் லாபத்தை அதிகரிக்கச் செய்வதற்காக 22 லட்ச ரூபாய் செலவில் ஒரு சைசிங் மில் தொடங்கப்பட்டுள்ளது. 11 லட்ச ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியமாகவும் 11 லட்சம் ரூபாய் தமிழக அரசு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக மானியமாகவும் அளிக்கப்படும். இங்கு வேலைக்கு அமர்த்தப்பட உள்ள 40 ஊழியர்களில் 57 சதவீதம் ஆதிதிராவிடர்கள் அமர்த்தப்படுவர். மாதம் ஒன்றுக்கு 30 பீம் நூல் தயாராகும். அது விசைத் தறிக்கு அனுப்பப்படும்.

1,400 கிலோ வாட் திறன் உள்ள ஜெனரேட்டர் இங்கு இருப்பதால் 100 சதவீத மின் வெட்டையும் கூடச் சமாளிக்கும் திறன் இந்த கலைக்கு உள்ளது. தமிழக டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள காட்டன் சில்க் என்ற கமிட்டி மூலம் இந்த ஆலைக்குத் தேவையான பஞ்சு தரப்படுகிறது. இங்கு தயாராகும் நூலில் 60 சதவீதத்தை கோ-ஆப்-டெக்ஸ் வாங்கிக் கொள்கிறது. 40 சதவீதத்தை நெசவாளர் சங்கங்கள் பெற்றுக் கொள்கின்றன. ஆலையில் தயாராகும் நூல் ஐ. எஸ். ஐ. தரம் பெற்றதாகும். ஆர்டரின் பேரில் பாலிஸ்டர் நூலும தயாரித்துக் கொடுக்கப்படுகிறது.

**நா. தில்லைகோவிந்தன்**
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர்

## பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்

# ஓராண்டு வளர்ச்சிப் பணிகள்

நிர்வாக வசதிகளை முன்னிட்டு பெரிய மாவட்டங்களைப் பிரித்துப் புதிய மாவட்டங்களை, உருவாக்கி வருகிறார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இராமநாதபுர மாவட்டத்தைப் பிரித்து, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம் ஆகியவற்றை1984 ஜூலைத் திங்களில் தொடங்கி வைத்தார் முதல்வர். முறைப்படி 16.4.1985ல் மாவட்டம் உருவாகியது. ஓராண்டுக் காலத்துக்குள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒரு சில வருமாறு:

### தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு பல திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாதி ஊதியம். பணமாகவும், அரிசி, கோதுமையாகவும் வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது. காடு வளர்ப்பு 55 இடங்களிலும், தொகுப்பு வீடுகள் 223ம், சமுதாயக் கூடம் 8ம், கிராமச்சாலைகள் 85ம், சாலைப் பாலங்கள் 53ம், சேமிப்புக் கிடங்குகள் 5ம், தடுப்புச் சுவர்கள் 3ம், குடி தண்ணீர் வசதி 2ம், பள்ளிக் கட்டடங்கள் 3ம், கால் நடை மருந்தகங்கள் 2ம், கட்டப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட வேண்டிய மனித உழைப்பு நாட்கள் 4.025 இலட்சம். இலக்கை எஞ்சி 4.380 இலட்சம் மனித உழைப்பு நாள் பயன்படுத்தப் பட்டுள்ளது.

### ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் உள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்தில் குறைந்தது 100நாட்களாவது வேலை வாய்ப்பு கொடுக்கும் நோக்கில் மைய அரசினரால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு எல்லாமே மானியமா வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தினக்கூலியாக 1கிலே அரிசி, 2 கிலோ கோதுமையு வழங்கப்படுகிறது. பொதுப் பணித்துறை மூலம் 511 பணிகளும், நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலை வேலைகள் 21ம், கசிவு நீர் குட்டைகள் பணி 19ம், தொகுப்பு வீடுகள் 340ம் முடிக்கப்பட்டுள்ளன. இது வரை இத்திட்டத்திற்கு ரூ. 155 இலட்சங்கள் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.140 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8.87 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 6.7 இலட்சம் மனித உழைப்பு நாள் பெறப்பட்டுள்ளது.

### புவியியல் மற்றும் சுரங்கம்

மானாமதுரையில் கிடைக்கும் நல்லதரமுள்ள களிமண் மணலைக்கொண்டு 15 செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் காளவாசல்கள் இயங்கி நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

பூவந்திக் கிராமத்தில் சுமார் 8000 டன்கள் அளவில் உயர்ந்த சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. பாவனக்கோட்டை கிராமத்தில் 'கன்கர்' எனப்படும் கொக்கி கல் கிடைக்கிறது. சுண்ணாம்பு தயாரிக்கும்காளவாசல் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 40 இலட்சம் டன்கள் வெள்ளை மற்றும் வண்ணக் களிமண் சிவகங்கை தாலுக்காவில் கிடைக்கிறது. காவி வண்ணம் தயாரிக்கும் தொழிற்சாலை சிவகங்கையில் இயங்கி வருகிறது.

**வி. புண்ணியமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டம்.

### குடும்ப நலத்திட்டம் (லேபராஸ் கோபிக்)

மாவட்டம் தனியாக உருவாக்கப்பட்டதிலிருந்து ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் செயல்பட்டு வரும் ஆதார நல நிலையங்கள், ஐந்து நகர்ப்புற குடும்பநல மையங்கள் மற்றும் திருப்பத்தூரிலுள்ள 'சுவீடிஸ்' மருத்துவமனை ஆகியவற்றில் அறுவைச் சிகிச்சை மற்றும் கருத்தடை வளையம் வைப்பு முதலான வசதிகள் எல்லா நாட்களிலும் மக்களுக்குக் கிடைக்கப் பெறுகிறது. அரசு மருத்துவமனைகளில் 40 நவீன அறுவைச் சிகிச்சை முகாம்கள் மூலம் 10,718 நபர்களுக்கு லேபராஸ் கோபிக் (நவீன குடும்பநல அறுவை) சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

### பொதுச்சுகாதாரம்

பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத் துறையில் பல நோக்குச் சுகாதாரத் திட்டத்தின் மூலம் தாய் நலப் பிரிவின் கீழ் 14,572 கர்ப்பிணிகள் பதிவு



செய்யப்பட்டு 7527 பேருக்கு இரத்தப் பரிசோதனை செய்து மருத்துவ உதவியும் 2506 பேருக்கு சுகாதாரப் பணியாளர்களால் பிரசவமும் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 9482 பிரசவித்த பெண்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது. 27,275 குழந்தைகளுக்கு இளம் பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டு மருந்தும், 25,696 குழந்தைகளுக்கு முந்நோய்த் தடுப்பு ஊசியும், 99,630 குழந்தைகளுக்கு 'டைபாய்டு' காய்ச்சல் தடுப்பு ஊசியும், 95,284 குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' திரவமும் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

இம்மாவட்டத்தில் நெல் 63 சதம், சிறுதானியம் 9 சதம், பயறுவகை 9 சதம், எண்ணெய் வித்துக்கள் 12 சதம், காய்கறி 5 சதம், கரும்பு 2 சதம் என்ற சதவிகிதத்தில் பயிராகிறது. இம்மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவில் 19,800 எக்டரில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வந்து நெல் சாகுபடிப் பரப்பின் குறைபாடு சரிக் கட்டப்பட்டது. மழைகுறைந்த கண்மாய்களில் போதிய அளவு தண்ணீர் நிரம்பாததால் 67,725 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அரிசி 1.13589 டன்னும், சிறுதானியம் 43150 டன்னும், பயறுவகை 16438 டன்னும் பருத்தி 1694 பேல்கள், கரும்பு வெல்லம் 38700 டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**தொழில்துறை**

தொழிலில் பின் தங்கிய மாவட்டமாக உத்தரவிடப்பட்டு தொழில் துவங்குபவர்க்கு 15 சதவீதம் மத்தியஅரசுமானியமாக வழங்கி வருகிறது. புதிய மாவட்டமாக இருப்பதால், அரசு அலுவலகங்கள் கட்டுவதற்கும், அரசு அலுவலர்கள் தங்குவதற்கும் வீடு கட்டுவதற்கும் உரிய செங்கல் சூளை தயாரித்தல் மற்றும் தொழில் நுட்பத் தொழிலாகிய 'டிரில்ஸ்' 'கிரில்ஸ்' முதலிய தொழில்கள் மொசைக் இண்டஸ்ட்ரிஸ், தச்சுத் தொழில்கள் ஆகிய தொழில்களும், இம்மாவட்டத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இவ்வாண்டு தொழில்கள் துவங்குபவர்க்கு பிப்ரவரி'86 முடிய ஏறத்தாழ 400 தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்களும், 150 நிரந்தரச் சிறு தொழில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்தியப் பிரதமர் அவர்கள் வழங்கிய சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் 500 பேருக்கு ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கிராமதொழில் திட்டக் கடன் மூலமாக இயந்திரங்கள் மற்றும்கட்டடங்கள்கட்டுவதற்கு ரூபாய் 1 இலட்சம் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி இறுதி வகுப்பில் 50சதவீதம் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு வெக்கேஷனல் பயிற்சி, இம்மாவட்டத்திலுள்ள 7 தட்டச்சுப் பயிற்சி நிலையங்களில் பயிலும் 20 பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி உதவிப் பணம் மாதம் ரூ. 15 வழங்கப்பட்டுள்ளது. ரூ.3000 க்கு குறைவான வருடவருமானமுள்ள 180 விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும் / நோட்டுப் புத்தகங்களும் ரூ.6788.25க்கு வழங்கப்பட்டுள்ளன. 30 விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தங்ககளும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன. விதவைகள் மகள் திருமணத்திற்கு ரூ.1000 வீதம் 40 பேருக்கு ரூ. 40,000 வழங்கப்பட்டுள்ளது. 5 ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு ரூ.5000 வழங்கப்பட்டுள்ளது.

விதவைகள் மறுமணத் திட்டத்தின் கீழ் 5 பேருக்கு ரூ.5000/- வீதம் அஞ்சலக தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மானாமதுரையில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் 250 ஆதரவற்ற குழந்தைகள் உள்ளனர். 5 ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர வண்டிகளும், 2 ஊனமுற்றோருக்கு 2 சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 330 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. பயிற்சி மற்றும் உற்பத்தித் திட்டத்தின் கீழ் திருப்பாச்சேத்தியில் கம்பளிப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. மாதம் ரூ.30/- உதவித் தொகை கொடுத்து 15 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



**பட்டுத் தொழில் வளர்ச்சி**

இம்மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், மாநிலத் திட்டத்தின் கீழும் விவசாயிகளுக்கு முசுக்கொட்டைச் செடி நடவும் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்பட இருக்கின்றன. குன்றக்குடி, முத்தனேந்தல், சாலைக் கிராமம், கழனிவாசல், காளையார்கோவில், தமராக்கி, லாடநேந்தல் ஆகிய இடங்களில் மாதிரி மல்பரி பட்டுப் பண்ணையும், முறையூர், ஓ. புதூர் ஆகிய இடங்களில் இளம் புழு வளர்ப்பு மையமும், கம்பனூரில் பட்டுக் கிராமமும், சிவகங்கையில் அரசு பட்டுக்கூடு அங்காடியும் உள்ளன. கம்பனூரில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு குக்கிராமம் நிறுவப்பட்டு 100 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பும், 100 பேருக்கு குடியிருப்புகளும் கட்டப்படவுள்ளன. இது வரை ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மானாமதுரையில் உள்ள நூற்புப் பயிற்சி நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து 8000 கிலோ அளவிற்குப் பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 700 கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 170 பட்டு விவசாயிகளுக்குப்பட்டு வளர்ப்பு சம்பந்தமான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 125 ஏக்கரில் 213 விவசாயிகள் மல்பரி நடவு செய்துள்ளனர். இதில் 33 பேர் ஆதிதிராவிடர்கள்.

**சிவகங்கை 'கிராபைட்' திட்டம்**

சிவகங்கை அருகிலுள்ள புதுப்பட்டி, குமாரப்பட்டி, சேந்தி உடையநாதபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் கிராபைட் கிடைக்கிறது. உலகத்திலேயே மிகச் சிறந்த 'மடகாஸ்கர்' வகை கிராபைட்டுடன் ஒப்பிடத்தக்கது. இந்த 1000 ஏக்கர் நிலப் பரப்பில்.477 ஏக்கர் தனியாருக்குச்சொந்தமான நிலம். இதை நில எடுப்பு செய்யவும், அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கனிம நிறுவனத்திற்குச் சொந்தமாக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

**முதலமைச்சர் குழந்தைகள் கல்வி சத்துணவுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் 1749 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. குழந்தைகள் நலக் காப்பகங்கள் 587, பள்ளிச் சத்துணவுக் கூடங்கள் 1162. இத்திட்டத்தின் கீழ் இச்சத்துணவு மையங்களில் 4942 நபர்கள்





பணிபுரிந்து வருகிறார்கள். 918 பேர் விதவைகள், 209 பேர் கணவனால் கைவிடப்பட்டவர்கள். 436 பேர் ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்தவர்கள். ஒரு நாளைக்கு 1,89,161 குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டு வருகின்றது. பள்ளி செல்லா குழந்தைகள் 36,675. இக் குழந்தைகள் தவிர 5314 முதியவர்களுக்கு உணவளிக்கப்படுகின்றது. ஆக ஒரு நாளைக்கு ரூ.81,345-25 காசு செலவழிக்கப்படுகிறது.

**'சாண எரிவாயு' திட்டம்'**

இத்திட்டத்தில் இம்மாவட்டம், அரசு இலக்கை எஞ்சியுள்ளது. 4500 சுல்லாஸ் விளக்கு அமைக்கத் திட்டமிட்டதில் இதுவரை 4501 அமைக்கப்பட்டுள்ளது. புகையில்லா அடுப்பு 30 கிராமங்களில் அமைக்க அரசு திட்டமிட்டதில் 31 கிராமங்களில் மேற்குறிப்பிட்ட புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய சாண எரிவாயு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு வங்கிகள் கடன் வழங்க 1,631 விண்ணப்பங்கள் பெற்று 376 விண்ணப்பங்களுக்கு கடன் அனுமதி வழங்கியுள்ளன. 186 இடங்களில் முடிக்கப்பட்டுள்ளன.

**''நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை''**

பெரம்பலூர் - மானாமதுரை சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ரூ.97 இலட்சம் செலவு மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது. சார்புச் சுவர் வேலை முடிவு பெற்று விட்டது.

தேவகோட்டை நகராட்சி எல்லையில் வட்டாணம் சாலையில் மணிமுத்தாறு விரசுலியார் ஆற்றின் குறுக்கே ரூ.65/- இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. மித்ராவயல்-ஏம்பல் சாலையில் ரூ.15/- இலட்சம் மதிப்பீட்டில் சாலை உருவாக்கப்பட்டு வருகிறது. கப்பலூர் ஏம்பல் சாலையிலிருந்து குடிக்காடுக்கும் ரூ.13.76 லட்சம் செலவில் சாலை அமைத்தல் வேலை நடைபெற்று வருகின்றது.

பெரம்பலூர் - மானாமதுரை சாலையிலிருந்து வேலூருக்குச் சாலை உருவாக்கி மேம்பாடு செய்தல் பணி ரூ. 9.295 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. கண்ணங்குடி கூக்குடிச் சாலை உருவாக்கும் பணி ரூ.15/- இலட்சம் செலவு மதிப்பீட்டில் நடைபெறுகிறது. திருப்பனங்குடியிலிருந்து கோட்டையூர்-அறந்தாங்கி சந்திப்புச் சாலை உருவாக்கும் பணி ரூ.22.50 இலட்சம் செலவு மதிப்பீட்டில் நடைபெறுகிறது.

**கைத்தறி மற்றும் துணி நூல்**

மாஸ்டர் வீவர்களின் பிடியில் உள்ள நெசவாளர்களை விடுவித்து கூட்டுறவின் கீழ் கொண்டு வர, புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து அவர்கள் அதிகப் படியான கூலி பெறவும் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு உறுப்பினருக்கு ரூ.180 பங்குத் தொகை கடனாக 7% வட்டியுடன் 4 ஆண்டுகளில் திருப்பி செலுத்த அரசு உதவுகிறது. அரசே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உயர்ந்த பட்சம் 1 இலட்சம் பங்குகள் மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்**

மக்களின் ஊட்டச் சத்துக் குறை நோய்களின் மூல காரணங்களை அகற்றும் நோக்கத்தோடு தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் செயல்பட்டு வருகிறது. 6 மாதம் முதல் 36 மாதம் வரை உள்ள குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைகின்றன. இம் மாவட்டத்தில் மொத்த ஊட்டச் சத்து மையங்கள் 520, மொத்த சுகாதாரத் துணை நிலையங்கள் 163. இந்த ஆண்டு 36586 குழந்தைகள் பதிவு செய்து 30890 குழந்தைகள் எடை எடுக்கப்பட்டு 98896 குழந்தைகளுக்கு இணை உணவு கொடுக்கப்பட்டுள்ளது. 11450 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 19810 கர்ப்பிணி பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும், 41639 குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ, 70,867 குழந்தைகளுக்குப் பூச்சி நீக்க மருந்து, 14400 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி, 10592 குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாதச் சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சிங்கம் புணரி, தேவகோட்டை, இளையான்குடி, மானாமதுரை, சிவகங்கை ஆகிய ஒன்றியங்களில் மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 500 மையங்களில் 15,313 கற்போர்களும், 45 ஏட்டறிவு மையங்களில் 1,350 கற்போர்களும், கல்லூரிகளால் நடத்தப்படும் 50 மையங்களில் 1655 கற்போர்களும், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 300 மையங்களில் 9516 கற்போர்களும் 'ட்ருபா'( திருப்பத்தூர்) தொண்டு நிறுவனம் மூலம் 20 ஏட்டறிவு மையங்களில் 609 கற்போர்களும், 6 முறைசாராக் கல்வி மையங்களில் 180 கற்போர்களும் பயன் பெற்றுள்ளனர்.

கண்டனூர், புதுவயல் பேரூராட்சிகளில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து பெற்று குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 85 மீட்டர் ஆழ்துளைக் கிணறு போடப்பட்டுள்ளது. நிமிடத்திற்கு 740 லிட்டர் வீதம் 3.0 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீரேற்றப்படும்.

அத்தியாவசியப் பொருட்கள் குடும்பக்கார்டுகள் மூலம் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த 530 நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறன. இம்மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் எண்ணிக்கை 2,39,599. இதுகாறும் 20009 டன்கள் அரிசியும், 4585 டன்கள் சர்க்கரையும், 7699 லிட்டர் மண்ணெண்ணையும் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவையர் மற்றும் விவசாயக் கூலிகள் மொத்தம் 6612 பேருக்கு அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சம்பா பட்டத்தில் 210 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 16 கி.மீ. 110 கே.வி. மின் பாதையும், 26கி.மீ.உயர் அழுத்த மின்பாதையும் 72.5 கி.மீ. தாழ்வு அழுத்த மின்பாதையும் அமைக்கப்பட்டது. 22 மின் மாற்றிகள்

அமைக்கப்பட்டு விவசாய பம்பு செட்டுகளுக்கும், வீடு மற்றும் அனைத்துத் தேவைகளையும் இவை பூர்த்தி செய்துள்ளன. 153 சிறு தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 4500 வீடுகளுக்கும் 570 கடைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் குறியீடு 193. ஆனால் இதுவரை 209 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பும் 30 குடி நீர்த் தொட்டிகளுக்கும் குடிசைகளுக்கும் இலவச மின் இணைப்புக்குறியீடு 120. ஆனால் 490 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. 7200 சாதாரண விளக்குகள் குழல் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திற்கு இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்கு நிதி வசூலிக்க அரசு ரூ. 2.50 இலட்சம் இலக்கு நிர்ணயித்தது. இதுவரை ரூ. 5,98,852.80 காசு வசூல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்துள்ள '104 அகதிக் குடும்பங்கள் நாட்டரசன் கோட்டை, சோழபுரம், சாக்கோட்டை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ரூ.6,00,000 அரசு செலவழித்துள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 623 வேலைகள் ரூ.340 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 15 திட்டங்களும் 26 கால்வாய் மற்றும் 583 கண்மாய் மராமத்துப் பணிகளும் அடங்கும். விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ.7 இலட்சம் செலவில் 13 கண்மாய்களும், ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்துள்ள 11 கண்மாய்கள் ரூ.7.5 இலட்சம் செலவிலும், முன்னாள் ஜமீன் கண்மாய்கள் ரூ. 63.24 இலட்சம் செலவிலும் மராமத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் தேவகோட்டை, கந்ததேவி, வெங்களூர், செந்தனி போன்ற ஊர்களுக்குத் தண்ணீர் வழங்க ரூ. 23.73 இலட்சம் செலவில் தொன்னாற்றின் குறுக்கே அணை கட்டுதல் பணி கல்லல் பகுதியில் மாலகண்டான் கலுதாடி கண்மாய் அமைத்தல் பணி ரூ.1.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1985—86ஆம் ஆண்டில் 6 ஊராட்சி ஒன்றியங்கள் (கல்லல், சிங்கம்புணரி, இளையான்குடி, தேவகோட்டை, கன்னங்குடி, காளையார் கோவில்) ரூ.12 இலட்சம் வீதம் மானியம் பெற தகுதி பெற்றுள்ளன. ரூ. 4.13 இலட்சம் செலவில் மானாவாரி மாதிரிப் பண்ணை அமைக்கவும் ரூ.1.890 இலட்சம், செலவில் கத்தாழை வளர்க்கவும், கால்நடை பராமரிப்பிற்காக ரூ. 0.890 இலட்சமும் ரூ.1.50 கோடி ரூபாய் செலவில் காரைக்குடியில் பால் பதத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர் சங்கங்களை விரிவுபடுத்துவதற்காக ரூ. 4.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ.32 இலட்சம் செலவில் 35 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோட்டக் கலைத்துறை மூலம் 50 ஏக்கரில் ரூ.5.410 இலட்சம் செலவில் பழப்பண்ணை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துத் துறையின் மூலம் சிங்கம்புணரியில் ரூ. 1.50 இலட்சம் செலவில் ஒட்டுண்ணி தென்னை நாற்றுப் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்புத் துறை மூலம் 20,000 ஏக்கரில் பட்டுச் செடி வளர்க்க ரூ.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் நலத்துறையினால் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி 1, உயர் தொடக்கப்பள்ளிகள் 2; 30.9.85 முடிய ரூ. 20222, பள்ளி மாணவர்கள் மதிய உணவிற்குச் செலவிடப்பட்டுள்ளது. இந்த மாணவர்களுக்கு ரூ.1,30,990 செலவில் இலவசச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி, சீருடை மாணவர்கள் விடுதி 14ம், மாணவியர் விடுதிகள் 6ம் உள்ளன. உயர் நிலைப் பள்ளிவரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு ரூ. 75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 54590.25 காசு செலவிடப்பட்டுள்ளது.



**சமூகநலக்காடுகள்**

இம்மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்காக மரம் வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 4,40,000 நாற்றுகள் வழங்கவேண்டுமென்பது இலக்கு. இதன் மூலம் 2207 சிறு விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். மரம் வளர்ப்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 9 இலட்சம் நாற்றுகள் வழங்க வேண்டியது. இதுவரை 8,76,480 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பிற்பட்டகுக்கிராமங்களில் 12 ஆரம்பப் பள்ளிகள், ஒரு நடுநிலைப்பள்ளி, 2 மேல் நிலைப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன. புதிதாக 3 அரசு உயர் நிலைப்பள்ளி, 2 சத்துணவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த 257 தையல் எந்திரங்களின் மூலம் இம்மாவட்டத்திலுள்ள மேல் நிலைப்பள்ளிகளிலுள்ள மாணவிகள் அனைவரும் தையல் கலையைப் பயின்றுகொள்வதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. 8 முதல் 10வகுப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட 385 மாணவர்களுக்கு சிறப்பு மேற்பார்வைப் பயிற்சித் திட்டமும், 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் 165 பேருக்குச் சிறப்பு மேற்பார்வைப் பயிற்சி திட்டமும் சிறப்புற நடத்தப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க 6 பயிற்சி மையங்கள் (உயர் நிலைப்பள்ளிகளில்) ஏற்படுத்தப்பட்டன.

சிவகங்கையில் அரசு அலுவலர்கட்கு 288 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 210.05 இலட்சம் செலவிலும், காரைக்குடியில் 36 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய்18.83 இலட்சம் செலவிலும், தேவகோட்டையில் 60 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 46.50 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ளன.

காரைக்குடி அருகிடைத் திட்டத்தின் கீழ் கோட்டையூர் கிராமத்தில் 104.84 ஏக்கரும், தேவகோட்டை அருகிடைத் திட்டத்தின் கீழ் தேவகோட்டையில் 93.24 ஏக்கரும் வீடு கட்ட நில ஆர்ஜிதத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு அலுவலர்கட்கு 360 குடியிருப்புகள் ரூ. 344.65 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிலமற்ற ஏழைகள் 957 நபர்களுக்கு 699 ஏக்கர் 42 சென்ட் நிலம் வேளாண்மைக்கு வழங்கப்பட்டுள்ளது.



# முத்திரை பதித்த சித்திரைப் பொருட்காட்சி

சித்திரைத் திங்களென்றாலே மதுரை மக்களின் நெஞ்சத்தில் பேரானந்தம் குவிந்து விடும். மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா ஒரு காரணம் — அரசு நடத்தும் சித்திரைப் பொருட்காட்சி மற்றொரு காரணம்.

வழக்கம் போல் இந்த ஆண்டு அரசு சித்திரைப் பொருட்காட்சி தமுக்கம் மைதானத்தில் ஏப்ரல் 12 ஆம் நாளன்று மாலை தொடங்கியது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பொருட்காட்சியைத் தொடங்கிவைத்தார்கள். மதுரை மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராசுலு இ.ஆ.ப. விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

வரவேற்புரை ஆற்றிய செய்தி - மக்கள்தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ. ஆ. ப., குறிப்பிட்டதாவது:

"அரசின் சார்பில் நடத்தப்படும் 31-வது பொருட்காட்சி இது. 1978 ஆம் ஆண்டு முதல், பொருட்காட்சிகளை அரசே ஏற்று நடத்தி வருகிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் பொருட்காட்சியில் கேடுகள் இருந்தன. லாபமும் ஒருவருக்கே கிடைத்து வந்தது.

"இன்று தொடங்கப்படும் இந்தப் பொருட்காட்சி, அரசின் மூலம் மதுரை மாநகரில் 5 வது முறையாக நடத்தப்படுவதாகும்.

"ஒரு சிலருக்கே கிடைத்து வந்த வருவாயைத் தடுத்து. வருகின்ற லாபத்தில் 50 சதவிகிதத்தை மாநகராட்சிக்கு வழங்க வேண்டும்என்ற நல்லதிட்டத்தை அரசு செயலாற்றி வருகிறது.

"பொதுவாக செய்தித் துறை என்பது செலவு செய்யும் துறையாக இருந்தாலும் தமிழ்நாட்டில் மட்டும் தான் வருவாய் ஈட்டும் துறையாகச் செயல்படுகிறது.

"இங்கு இடம் பெற்றுள்ள அரசுத்துறை அரங்குகள் மூலம் நலத் திட்டங்கள் எளிய முறையில் மக்களுக்கு எடுத்து உணர்த்தப்படுகிறது.

"இந்த ஆண்டு நடைபெறும் பொருட்காட்சியின் மூலம் 5 இலட்சம் ரூபாய் இலாபம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 2½ இலட்சம்ரூபாய் மதுரை மாநகராட்சிக்கு அளிக்கப்படும்."

மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு தேவராஜ், தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்:

"மதுரையிலும் அதன் சுற்றுப் புறத்திலும் இருக்கின்ற மக்கள்






பகல் எல்லாம் மிகவும் கஷ்டப் பட்டு உழைக்கின்ற நிலை உள்ளது. அவர்களுக்கு மாலை நேரத்தில் மகிழ்ச்சி எய்துவதற்கு இந்த அரசுப் பொருட்காட்சி பயன்படும். கண்ணுக்கு மட்டு மின்றி, கருத்துக்கும் விருந்து கிடைக்கிறது, பொருட்காட்சியின் மூலம்.

''இளைய தலைமுறையினர், இப்பொருட்காட்சியில் உள்ள பல துறை அரங்குகளில் இடம் பெற் றுள்ள பல்வேறு தகவல்களைத் தெரிந்து அரசு எந்த வகையில் பணியாற்றுகிறது என்பதைப் புரிந்துகொண்டு, தாங்கள் பெரி யவர்களானதும் சமூகத்திற்கு எந்த விதம் தொண்டாற்றலாம் என்பதைத் தெரிந்து கொள்ள லாம்.''

திரு ஏ. சிவகுமார் எம்.எல்.ஏ. பேசுகையில், ''ஆண்டு தோறும் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி பொதுமக்களுக்கு அறிவூட்ட நடத்தப்படும் கண்காட்சியாகும்' என்று குறிப்பிட்டார்.

திரு எம். மாரிமுத்து, எம்.எல்.ஏ. பேசுகையில், ''ஒரு காலத்தில் சூதாடும் களமாக. மட்ட ரக மான பொருள்களின் விற்பனை மையமாக- மிக மோசமான நட னங்களின் அரங்கமாக இருந்த பொருட்காட்சியை சுற்றுலாத் தலமாக— சாதனை விளக்க கூட மாக மாற்றிய பெருமை இந்த அரசைச் சாரும்'' என்று தெரி வித்தார்.

திரு அன்பழகன் எம்.எல்.ஏ. உரையாற்றுகையில், ''சென்னை யில் சுற்றுலாப் பொருட்காட்சி யில் இடம் பெற்ற சில அம்சங் கள் இந்தப் பொருட்காட்சியிலும் இடம் பெற வேண்டும். குறிப்பா பாக யோகாசனக் காட்சிகள், இலக்கிய இன்பக் காட்சி இங்கே யும் இடம் பெற வேண்டும்'' என்று கூறினார்.

விளை பொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு பாண்டியன் உரையாற்றுகையில் ''சென்னை மக்களுக்கு பொழுது போக்குவதற்குக் கடற்கரை இருக்கிறது. மதுரை மக்களுக்கு அப்படி எதுவும் கிடையாது. சித் திரை மாதம் வந்தால் பொருட் காட்சி தொடங்கப்படுவதன் மூலம் குறைந்தது 45 நாட்களுக்கு மதுரை மக்களுக்கு மன மகிழ்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

**கைத்தறி விற்பனை ஆலோசனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு ராமலிங்கம் உரையாற்றுகையில், ''உலகத் தமிழ் மாநாட்டின் போது மதுரையில் அமைக்கப்பட்ட கண்காட்சிக்கு இணையாக இந்தப் பொருட் காட்சி அமைந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.**

தலைமை வகித்த மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரத ராசுலு இ.ஆ.ப. தமது உரையில் தெரிவித்ததாவது:

''அரசு மக்களுக்காகச் செய்து வரும் தொண்டுகளை — அம லாக்கும் திட்டங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கு இந்தப் பொருட்காட்சி பயன்படுகிறது''

''நான் ஜப்பான் நாட்டுக்குச் சென்ற போது அங்கு ஷிங்குபே என்ற சிறிய தீவில் ஒரு பொருட் காட்சியைக் காண வாய்ப்புக் கிடைத்தது. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் எப்படி இருப்பார்கள் என்று கற் பனை செய்து சித்திரம் தீட்டி யிருந்தார்கள். நமது பொருட் காட்சிகளும் தரம் வாய்ந்ததாக 'விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.''

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தமது உரை யில் தெரிவித்தார்:

''ஒவ்வொரு மாதத்து பௌர் ணமிக்கும் சிறப்பு உண்டு. என் றாலும் சித்திரை மாதத்து பௌர் ணமிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

''1978ல் தான் பொருட்காட்சி நமது மாநிலத்தில் தேசிய மயமாக் கப்பட்டிருக்கிறது. அதற்கு முன் பெல்லாம் சூதாட்டக் களமாக— களியாட்ட மைதானமாக -தனிப் பட்டவர்களின் கல்லாப் பெட் டியை நிரப்பும் சாதனமாக இருந்தது. அந்த நிலை மாறி அரசின் கருவூலத்திற்கு வந்து சேருகிறது வருவாய். ஆக்க பூர்வமான பணிகளுக்கும் பயன் படுகிறது.

''5 லட்ச ரூபாய் இலாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படு வதாகச் சொன்னார்கள். அவர் களது எதிர்பார்ப்பை மக்கள் பொய்யாக்க வேண்டும். 5 லட் சத்துக்கு மேல் அதிக வருமானம் கிடைக்கும் வகையில் மக்கள் அதிகமான அளவில் பொருட் காட்சிக்கு வருகை புரிய வேண் டும்.

''பல இடங்களில் நாம் தனித் தனியாகப் பார்க்கும் அரிய பெரிய காட்சிகளை எல்லாம் இந்த ஒரே இடத்தில் நாம் நன்றாகப் பார்க்க முடிகிறது. அருங்காட்சி-பொருட் காட்சி- அறிவு தரும் பல்கலைக் கழகமாக விளங்க வேண்டும்''.

**செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு அ. ராஜமாணிக்கம் நன்றி நவில, தொடக்க விழா நிறைவு பெற்றது.**

**– நமது செய்தியாளர்.**



## அரசுப் பொருட்காட்சி
## – சில செய்திகள்

*சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி, கும்பகோணம், ஈரோடு ஆகிய நகரங்களில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது.*

***இதுவரை மொத்தம் 29 பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. 405 லட்ச ரூபாய் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது. செலவு போக 114 லட்ச ரூபாய் நிகர வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.***

***சித்திரைப் பொருட்காட்சியில், அரசுத்துறை அரங்குகள் 16, அரசுச் சார்பு நிறுவனங்களின் அரங்குகள் 7, மத்திய அரசுத் துறை அரங்குகள் 2, தனியார் துறை அரங்குகள் 7 இடம் பெற்றுள்ளன. தனியார் கடைகள் 54 உள்ளன.***

***சிங்கம், புலி ஆகிய விலங்குகள் அடங்கிய விலங்குக் காட்சிச் சாலையும் இடம் பெற்றுள்ளது.***

***இந்த ஆண்டு மதுரையில் நடைபெறுவது ஐந்தாவது பொருட்காட்சியாகும். இதற்கு முன்பு, 1980, 1982, 1984, 1985 ஆகிய ஆண்டுகளில் மதுரையில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்றுள்ளது.***



## சென்ற இதழில்

மதுரை தமுக்கம் திடலின் நுழைவாயிலில் அமைந்திருக்கும் தமிழன்னையின சிலை சென்ற இதழ் (16.4.86) அட்டையை அலங்கரித்தது.

# பார்த்தோம்! படித்தோம்!

தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் கண்ணுற்றேன்; புத்தாண்டுச் சிறப்பிதழா, கவிதைச் சிறப்பிதழா என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டது. கவிஞர் சுரதாவில் தொடங்கி கவிஞர் அழ.வள்ளியப்பா வரை மொத்தம் 10 கவிஞர்களின் கவிதைகளை வாரி வழங்கியிருக்கிறீர்களே, உங்களுக்கு நன்றியைக் குவிக்கத்தான் வேண்டும்.

—எம். மோகனசுந்தரம்
கோயம்புத்தூர்-12.

சங்கம் கண்ட தமிழகத்தின் தங்கமன முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள தமிழ்ப்புத்தாண்டு செய்தி செந்தேனாக இனித்தது.

—கே. சண்முகநாதன்,
பழனி.

அடேயப்பா! இத்தனை விதமான பணிகளையா தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் செய்து வருகிறது! இதை அறிந்தபோது வியப்பு அலைகள் என்னை வட்டமிட்டன.

—மு. குருசாமி,
நிலக்கோட்டை

'தமிழரசு' தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழ் கலைக்கருவூலம் - கருத்துப் பெட்டகம் -பாதுகாக்கப்பட வேண்டிய பொற்பேழை.

—இரெ. கயற்கண்ணன்,
நெல்லை.

எனக்கோர் ஆசை! ஒவ்வொரு இதழும் சிறப்பிதழாக வெளிவரக் கூடாதா?

—ஏ. ஆர். எம். பழனியப்பன்,
காரைக்குடி.

சித்திரைச் சிறப்பிதழ் உண்மையிலேயே சிறப்பாக அமைந்திருந்தது. கவிதைகள், கதைகள், கட்டுரைகள் அனைத்தும் இதயத்தைத் தொட்டன.

—அ. சொக்கலிங்கம்
வேப்பேரி

'இசைக் கல்லூரியில் இனிய விழா' கட்டுரை இனிமையாக இருந்தது.

—எஸ். ரமேஷ்,
சைதாப்பேட்டை.

பன்மொழிப் புலவரின் ஆய்வுக் கட்டுரை இலக்கியத்தின் பெருமையை உயர்த்தியுள்ளது. இந்திய இலக்கியம் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாகியிருக்கிறது என்ற செய்தியைப் படிக்கும்போது உள்ளம் குளிர்கிறது.

—அ. சுப்பையா,
மதுரை.

குன்றக்குடி அடிகளாரின் 'சிந்தனை செய்வோம் - செயல்படுவோம்' கட்டுரை சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. மணிமேகலை காலத்திலிருந்த அட்சய பாத்திரத்தை -புதிய அட்சய ஆண்டுடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பது பொருந்தும்.

—தாயுமானவன்
திருச்சி-7.

அட்டையில் வெளியிட்டுள்ள தமிழன்னை சிலை எங்களை பக்தர்களாக்கிவிட்டது. அதைப் பார்த்ததும் எங்களின் கரங்கள் எங்களை அறியாமலேயே வணங்கத்தொடங்கி விட்டன.

—கதிர்வேல் மாணிக்கம்,
கனகவல்லி, பரமக்குடி

சங்கப் புலவர்கள் அறுபத்திருவரின் செய்யுள்களைத் தக்க நேரத்தில் வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளஉங்களுக்குப் பாராட்டுதல்கள்! போற்றுதல்கள் உரித்தாகுக! பாடல் வரிகளுக்குரிய அர்த்தத்தையும் எளிய தமிழில் தந்திருக்கலாமே!

—புலவர். நமச்சிவாயனார்,
சங்கரன்கோயில்.

'தமிழகம் வளர்க்கும் நாடகக் கலை' கட்டுரை நயமாக இருந்தது. நாடகம் குறித்து அமரர் அண்ணா-தந்தை பெரியார் ஆகியோரின் கருத்துக்களையும் எடுத்துக் காட்டியுள்ள விதம், 'தமிழரசுக்'கே உரியது!

—சண். நவநீதன்,
வத்தலக்குண்டு.

'டாமின்' தொழிற்சாலையின் தொடக்கவிழா நிகழ்ச்சிகள் சுவையாக இருந்தன. கட்டுரையைப் படித்தபோது நிகழ்ச்சியை நேரில் பார்ப்பது போன்ற திருப்தி ஏற்பட்டது.

—ஆர். சூர்யகுமார்.
வேலூர்.

இசைக் கலையைப் பற்றியும், இசைக் கருவிகளைப் பற்றியும் 'தமிழிசைப் பாக்கள்', 'இசைப் பயிர் வளர்ப்போம்' என்ற கட்டுரைகளின் மூலம் தெரிந்து கொள்ள வைத்த 'தமிழரசுக்கு' நன்றி.

—ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
கடலூர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23








கவியரசர் ரவீந்திரநாத் தாகூர்

தோற்றம் : 9-5-1861 மறைவு : 29-7-1941




சென்னையில் இருநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்களை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் 11-5-1986 அன்று, சென்னை மீனம்பாக்க விமான நிலையத்தில் வரவேற்றனர்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - வைகாசி 2
மலர் : 16 இதழ் : 22
16-5-1986



# பிளவக்கல் அணை சுற்றுலா மையம்

சுற்றுலாப் பயணிகளுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய ஒரு சுற்றுலா மையம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திட்டத்தின்படி, வளர்ந்து வரும் காமராஜர்மாவட்டத்தில் பிளவக்கல் என்ற அணை, சுற்றுலா மையமாக அமைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருப்பாவை அருளிய திருச்செல்வி அருள்பாலிக்கும் திருத்தலமான ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ளதுதான் பிளவக்கல்அணை! ஊர்ந்து செல்லும் பாம்புபோல் உடலமைப்புக்கொண்ட மேற்கு மலைத் தொடர்! இந்த மலைத் தொடரின் திருப்பாதங்களில் இயற்கை அன்னை தவமிருக்கும் அழகிய மலைப்பகுதியில்தான் காமராஜர் மாவட்டத்தின் வளர்ந்து வரும் சுற்றுலா மையமான பிளவக்கல் அணை உள்ளது.

தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் உதவியால் வளர்ந்தோங்கிவரும் புதிய மாவட்டமான காமராஜர் மாவட்டத்தில் கடற்கரைப் பகுதி எதுவும் இல்லை! அருவியுடன் கூடிய நதிகள் எதுவும் இல்லை இங்கே! மேற்கு மலைத் தொடர்ப் பகுதி மட்டும் இம்மாவட்டத்திற்கு எழில் சேர்க்கும் வண்ணம் சுற்றுலா இடமாக மாற்றிட வசதியாக உள்ளது.

இயற்கையிலேயே மிகப்பெரிய மலை ஒன்று அழகிய வண்ணம் இருகூறுகளாகப் பிளவுபட்டு இருப்பதால் இப்பகுதி 'பிளவக்கல்' என்று இப்பகுதி மக்களால் பெருமையுடன் அழைக்கப்படுகிறது. அடர்ந்த வனப்பகுதிகள் யானை, காட்டெருமை, கரடி, புலி ஆகிய வன விலங்கினங்கள் வாழ வழிவகுக்கின்றன.

பிளவக்கல் அணை, எஸ். கொடிக்குளம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இரண்டு அணைகள் பெரியார் அணை என்றும் கோவிலார் அணை என்றும் கட்டப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் ஒரே அணையாகக் கட்டத் திட்டமிடப்பட்ட இப்பணி, அந்தப் பகுதியில் போதிய அளவு நீர்வரத்து இல்லாததால், இரண்டு அணைகளாகப் பிரித்துக் கட்டப்பட்டது. ஒவ்வொன்றிற்கும் இடையே 4 கி.மீ. இடைவெளியுள்ளது. இரண்டு அணைகளில் இருந்தும் தண்ணீர் ஒரே வாய்க்கால் வழியாகத்தான் பாசனத்திற்காகச் செல்கிறது.

இந்தச் சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும், அவன் பணக்காரனோ, ஏழையோ, படித்தவனோ, படிக்காதவனோ, உழைத்துக் களைத்த மனத்திற்கு ஒரு மாற்றத்தைக் கொடுக்கவும், சந்தடி மிகுந்த நகரவாழ்க்கையிலிருந்து ஒய்வு எடுக்கவும், தன்னுடைய நடைமுறை வாழ்க்கையிலிருந்து ஒருமாற்றத்தைப் பெறவும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களுக்கு அடிக்கடி சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு அவர்கள் சென்று வருவதால் மனத்திற்கு ஒரு நிம்மதியையும் உடலுக்கு உற்சாகத்தையும் பெற வழி ஏற்படுகிறது.

தற்காலக் கல்வி முறையில் கூட இளைஞர் சமுதாயம் தன்னுடைய நடைமுறைக் கல்வி பயிலுகின்ற வழக்கத்திலிருந்து சிறிதுகாலம் விடுபட்டு, சுற்றுலாப் பயணம் சென்று வரும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டு, அமல்படுத்தப்படுகிறது. மாணவர் சமுதாயத்தின் கல்விக்கு உதவிடும் வகையில் இந்த மேற்கு மலைத் தொடர் வனச்சரகம் உள்ளது! புண்ணியத் தலமும், இயற்கைச் சூழ்நிலையும் நிரம்பிய இந்தப் பகுதி, சுற்றுலா மையமாக வளர்ந்தோங்க வாய்ப்புகள் நிறைய உள்ளன.

விருதுநகரிலிருந்து 58 கி.மீ. தூரத்திலும், மதுரையிலிருந்து 86 கி.மீ. தூரத்திலும் குற்றாலத்திலிருந்து 118 கி.மீ. தூரத்திலும், இது அமைந்துள்ளது.

மதுரை - ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் உள்ள கிருஷ்ணன் கோவில் என்ற இடத்திலிருந்து இந்த அணைக்குச் சாலை செல்கிறது. தற்சமயம் வத்திராயிருப்பு என்ற ஊரிலிருந்து கிழவன் கோவில்வரை செல்லும்பேருந்துப் பாதை செப்பனிடப்பட்டு, தார் போடப்பட்டு நல்லமுறையில் உள்ளது. இந்த அணைக்குச் சென்று வர, தற்பொழுது மூன்று பேருந்துகள் உள்ளன. மேலும் அருகிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி ஆகிய நகரங்களிலிருந்து அடிக்கடி சென்று வரும் வகையில் பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கள் பொருள்களைப் பாதுகாப்புடன் வைக்கும் வகையில் பொருள்கள் வைக்கின்ற அறையுடன், சிற்றுண்டி விடுதி ஒன்றுடன் கூடிய பேருந்து நிலையம் ஒன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி உதவியுடன் கட்டப்படவுள்ளது. மற்றும் பேருந்து நிலையத்திற்கு அருகில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 50,000 செலவில் அங்காடிக் கட்டடம் கட்டப்படுகிறது.

**எல். என். விஜயராகவன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
காமராஜர் மாவட்டம்.



இங்கு சுற்றுலா வருகின்ற பயணிகள் தங்கிச் செல்வதற்கு ஏற்ற வகையில் தற்பொழுது இரண்டு அறைகளுடன் கூடிய ஒரு சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டுச் செயல் பட்டுவருகின்றது. மேலும் அதிக அளவில் வருகின்ற அனைத்துத் தர மக்களும் வசதியுள்ளவரோ, வசதியில்லாதவரோ இங்கு தமது வசதிக்கேற்பத் தங்கிச்செல்கின்ற வகையில் 50 நபர்களுக்கு மேல் தங்குகின்ற வகையில் தங்கும் விடுதி ஒன்று ரூபாய் 90,000 செலவில் பாண்டியன் போக்குவரத்துக் கழக நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமுதாயத்தின் அடித்தள மக்களும் இந்த அணையைச் சுற்றிப் பார்த்துத் தங்கிச் செல்வதற்கு, அனைத்து வசதிகளுடன் கூடிய சமுதாயநலக் கட்டடம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ரூபாய் ஒரு லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலையின் மடியில் இந்த அணை அமைந்துள்ளதால் வனவிலங்குகள் வாழ்வதற்கு ஏற்ற இயற்கைச் சூழ்நிலை அமைந்துள்ளது. இங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் கண்டு மகிழுகின்ற வகையில் வுனவிலங்குச் சரணாலயம் மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 80,000செலவில் அமைக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடர்த்தியானசோலை ஒன்றை உருவாக்க - மரங்கள் நட்டுப் பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பெரியவர், சிறியவர் என அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் உலாவிடும் வகையில் வைகை அணை, சாத்தனூர் அணையில் அமைக்கப்பட்டுள்ளது போன்ற அழகிய மலர்கள், வண்ணச் செடிகள், அழகை அள்ளித்தரும் மரங்கள், புல் வெளிகள் ஆகியவற்றுடன் உயிருடன் இருப்பது போன்ற நீருற்றுடன் கூடிய அழகுப் பதுமைகள் கொண்ட வண்ணப் பூங்கா ஒன்று மாநில சுற்றுலாத் துறையின் நிதி ஒதுக்கீட்டில் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

பூங்காவைச் சுற்றி வருகின்ற பயணிகள், களைப்பைப் போக்க பூங்காவில் அழகிய வட்டவடிவமாக ஒய்வுக்கூடம் ஒன்று, ரூபாய் 50,000 செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.




வருகின்ற பயணிகள் உல்லாசமாக நீந்திக் குளிப்பதற்கென நீச்சல்குளம், ரூபாய் 1.41 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது.

இந்தச் சுற்றுலா மையத்தை மேலும் மெருகூட்டிடவும், சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்ந்திடும் வகையிலும் ரூபாய் 80,000 செலவில் மீன்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

கடற்கரை, நதி என இல்லாத மாவட்டத்தில் ஊட்டி, ஏர்க்காடு போன்று இம்மாவட்ட மக்கள் படகில் பயணம் செய்து கொண்டே வனவிலங்குகள், மற்றும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவித்து மகிழும் வகையில் தற்பொழுது ஒரு படகு மட்டும் அணைக்கட்டுப் பகுதியில் இயங்கி வருகிறது. மேலும் அபிவிருத்தி செய்து இயந்திரப் படகுஒன்றும், ஒருகைத் துடுப்புப் படகு ஒன்றும், பரிசல் படகு ஒன்றும் விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் சுற்றுலா மையத்தின் அழகைக் கூட்ட, கண்கவரும் தொங்கு பாலம் ஒன்று, 2 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கிறது.

அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ள இந்தச் சுற்றுலா மையத்தில் உணவு விடுதி விரைவில் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் நிறைந்த - வரண்ட இம்மாவட்டத்தில், இம்மாவட்ட மக்கள் மட்டுமின்றி அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மக்கள் இச் சுற்றுலா மையத்திற்கு வருகை தந்து, கண்டு மகிழ்ந்து, உள்ளத்திற்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இம்மாவட்டம் செயல்படத் துவங்கிய 6 மாதத்திற்குள் செம்மையாகத் திட்டங்கள் தீட்டி, நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுலா மையமாக மாற்றப்பட்டுள்ளது.

'சுற்றுலா' என்பது மனிதவாழ்வில் அத்தியாவசியமான ஒன்றாகிவிட்ட சூழ்நிலையில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள இயற்கை வளங்களை வெளிக்கொணருவது நாட்டிற்கும், மக்களுக்கும் நலம் பயக்கும். அத்தகைய எண்ணத்தில்தான் மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

வளர்ச்சிப்பாதையில் ஓராண்டை நோக்கி அடி எடுத்து வைக்கும் இப்புதிய மாவட்டம் மென்மேலும் வளர்ச்சி அடையும். இது ஒரு திருத்தல மாவட்டமாக, சுற்றுலா மாவட்டமாக மாறும் என்பது வரலாற்று உண்மை!

# வங்கம் தந்த தங்கக்கவிஞர்




**1912**ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு மாலைப்பொழுது. லண்டன் மாநகரில் வில்லியம் ரோதென்ஸ்டின் என்ற ஓவியரின் வீட்டில் இலக்கியச் சுவைஞர்கள் திரண்டிருந்தார்கள். அவர்களில் பலர் ஆங்கில இலக்கிய உலகில் புகழ்க்கொடி நாட்டிய பெருமக்கள் ஆவர். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆங்கிலக் கவிஞர் யேட்ஸ் அந்தக் கூட்டத்தில் இருந்தார். அவரது கரத்திலே கவிதைகளின் கையெழுத்துப் படிவம் இருந்தது. அதை அவர் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார்.

அந்தக் கவிதையை முடித்து விட்டு அடுத்த கவிதையைப் படித்தார். இப்படி ஒருசில கவிதை வரிகளை அந்த அவையிலே படித்து முடித்தார்.

அந்தக் கவிதைகளை வங்க மொழியில் எழுதிய இந்தியக் கவிஞரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தார். அங்குள்ள சுவைஞர்கள், தமது கவிதையை எந்த அளவு விரும்பி வரவேற்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு அந்தக் கவிஞரின் உள்ளம் மிகவும் அவாவியது. ஆனால், சுவைஞர்கள் அமைதிக் கடலாகக் காட்சியளித்தார்கள். சில நிமிடங்களில் அந்தக் கூட்டம் கலைந்து சென்று விட்டது.

கவிஞருக்கு மிகவும் ஏமாற்றமாகிவிட்டது. "உபசாரத்திற்காகக் கூட ஒரு பாராட்டு வார்த்தை கிடைக்கவில்லையே! இந்த ஆங்கிலக் கவிஞர் யேட்ஸ், நமது கவிதைகளை எதற்காக இந்தச் சுவைஞர்களுக்குப் படித்துக் காட்டினார்?" என்று எண்ணி வருந்தினார்.

மறுநாள், பலரிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் படையெடுத்து வந்தன. திகைப்பு-வியப்பு அனைத்தும் கவிஞருக்கு ஏற்பட்டன.

"உண்மையைத்தான் சொல்கிறார்களா, ஏதோ மரியாதைக்காக இப்படியெல்லாம் புகழ்மொழிகளை அள்ளித் தருகிறார்களா?" என்ற சந்தேகம் கவிஞருக்கே தோன்றியது.

தொடர்ந்து இங்கிலாந்து முழுதும் கவிஞரின் கவிதை பற்றியே பேசப்பட்டது. பலரும் அவரை அழைத்து விருந்து கொடுத்துப் பெருமைப்படுத்தினார்கள். அந்தக் கவிஞர்தான் ரவீந்திரநாத் தாகூர். அவரது கீதாஞ்சலிக் கவிதைகளில் ஒருசிலவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புத்தான் அன்று சுவைஞர்கள் முன்னிலையில் கவிஞர் யேட்ஸால் படிக்கப் பட்டது.

அவ்வப்போது இறைவனை வணங்கும் வகையில் எழுதப் பட்ட வங்கமொழிக் கவிதைகள் தான் பின்னர் கீதாஞ்சலி என்னும் தொகுப்பு நூலாக மலர்ந்தது. அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு 1913ஆம் ஆண்டில் கவிஞருக்கு நோபல் இலக்கியப் பரிசு பெற்றுத் தந்தது. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் அடைந்ததன் வாயிலாக இந்தியாவுக்கும் பெருமை சேர்ந்தது.

கவியரசர் என்றும். குருதேவர் என்றும் அழைக்கப்பெற்ற ரவீந்திரநாத் தாகூர், 1861ஆம்ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாளன்று, கல்கத்தாவில் ஜோர்ஸாகூன் வட்டாரத்தில் மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் -சாரதா தேவி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

சிறுவயதிலேயே,ரவீந்திரருக்குக் கவிதையிலும், பாட்டிலும் ஈடுபாடு ஏற்பட்டது. குறிப்புப் புத்தகங்களில் பாடல்களை எழுதி வைப்பார். தாம் உருவாக்கிய கவிதையைப் பிறரிடம் சொல்லிக் காட்டுவதில் அவருக்குப் பேரானந்தம் அதிகம். அவரது

**தமிழ்ப்பித்தன்**

தந்தையார்,அவரது கவிதையைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி எய்துவார்.

கல்கத்தாவில் செயின்ட் ஜேவிஸ் பள்ளியில் ரவீந்திரர் சேர்க்கப்பட்டார். இந்திய மொழிகளை எல்லாம் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது.

வங்காளத்தில் அந்நாளில் மறுமலர்ச்சி உதயமாகிக் கொண்டிருந்தது. பங்கிம் சந்திர சட்டர்ஜி இலக்கியத்தில் புதிய எழுச்சியை உருவாக்கி வந்தார். அவரது 'வங்க தரிசனம்' என்னும் பத்திரிகை புகழ்பெற்று விளங்கியது. அறிவியல் கட்டுரைகள், சிறுகதைகள், தத்துவ விளக்கங்கள் ஆகியவை அதில் இடம் பெற்றன. ரவீந்திரரும் 'வங்க தரிசன'த்தை விடாது படித்து வந்தார்.

'சர்வார்த்த சங்கிரகம்''ஆரிய தரிசனம்' என்ற மாத இதழ்களும் ரவீந்திரரைக் கவர்ந்தன. பங்கிம் சந்திரரின் நவீனங்களையும் சிறுகதைகளையும் ரவீந்திரர்-தனது வீட்டுப் பெண்மணிகளிடம் படித்துக் காட்டுவார்.

சிறிது காலத்திற்குப் பின்-ரவீந்திரரின் தமையனார்



## தாகூரின் அணுகுமுறை

ஒருமுறை ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் ஒரு வீட்டில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நெடுங்காலமாகப் பயன்படுத்தாத அறை சுத்தம் செய்து அவருக்குத் தரப்பட்டது. அதில் தங்கினார்.

இரவு அசதியாகத் தூங்கிக்கொண்டிருந்த போது திடீரென்று அவரது கால் விரலை ஏதோ கவ்வியது போன்ற உணர்வு ஏற்பட்டது. 'சுளீர்' என்று வலித்தது. சில விநாடிகளில் வலி தலைக்கு ஏறியது. தேள் தம்மைக் கொட்டியிருக்கிறது என்பதை அறிந்தபோது அவர் துடித்துப் போனார். அந்த நள்ளிரவில் யாரை எழுப்புவது என்ற தவிப்பும் அவருக்கு ஏற்பட்டது.

[illegible] உடலைக் கொட்டியதா, இல்லை உள்ளத்தைக் கொட்டியதா? இந்தத் தேகம் ரவீந்திரனா, அல்லது இந்த ஆத்மாவா" என்றெல்லாம் சிந்திக்க முற்பட்டார்.

தன்னைத் தன் உடலினின்றும் பிரித்து நோக்கினார். உடனே விஷக் கடியினால் ஏற்பட்ட எரிச்சல் சட்டென்று மறைந்தது. மறுநாள் காலையில் பார்த்தபோது, தேள் கொட்டியதன் அடையாளம் [illegible].

ஜோதீந்திரநாத், 'பாரதி' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றைத் தொடங்கினார். மூத்த தமையனார் துவிஜேந்திரநாத் - அதன் ஆசிரியரானார். ரவீந்திரரும் கதை, கட்டுரை, கவிதைகளைப் படைத்து அப் பத்திரிகையில் வெளிவரச் செய்தார்.

ஜோதீந்திரநாத் நாடகங்கள் எழுதுவதில் வல்லவர். எழுதிய நாடகங்களை வீட்டுக்குள்ளேயே நடிப்பதுண்டு. ரவீந்திரருக்கும் நடிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. கல்விப் பயிற்சியில் அவருக்கு அக்கறை குறைந்தது.

இங்கிலாந்துக்குச் சென்ற அவரது தமையனார் சத்யேந்திரர், ரவீந்திரரையும் அழைத்துப் போனார். பிரிட்டனில் உள்ள ஒரு பள்ளியில் ரவீந்திரர் சேர்க்கப்பட்டார். பின்னர் லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியில் சேர்ந்தார்.

ஐரோப்பியப் பயணம் குறித்து ரவீந்திரர் எழுதிய கடிதம்'பாரதி' இதழில் வெளிவந்து, பாராட்டைச் சேர்ந்தது. அப்போது அவருக்கு 17 வயதுதான். அந்த வயதிலேயே உலகக் கண்ணோட்டம் அவருக்கு இருந்தது.

ஏற்கெனவே சேக்ஷ்பியரின் நாடகம் ஒன்றை அவர் வங்க மொழியில் கவிதை வடிவில் எழுதியிருக்கிறார். அதுவும் 'பாரதி' இதழில் வெளி வந்தது. ஆங்கிலத்திலும் கட்டுரைகள் தீட்டும் ஆற்றல் அவருக்கு இருந்தது. இங்கிலாந்தில் இருந்த போது 'பக்னதரீ' என்ற கவிதையையும் 'வக்னஹிருதய' என்ற நாடகத்தையும் உருவாக்கினார். இந்தியா திரும்பியதும் 'வால்மீகி பிரதியா' 'கால மிருகயா' என்ற இசை நாடகங்களை உருவாக்கினார். ரவீந்திரரும் அந் நாடகத்தில் நடித்தார். அவரது குடும்பத்தினரும் நடித்தனர்.

பேனிராய் சௌத்ரீ என்பவரின் மகள் மிருணாளினியை 1883-ஆம் ஆண்டில் திருமணம் புரிந்தார். கணவரிடம் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் கொண்ட மிருணாளினி, தன் கணவரின் பணிகளுக்கெல்லாம் ஒத்துழைப்பாக இருந்தார். வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிதனின் பின்னணியில் ஒரு பெண் இருக்கிறாள் என்ற மொழி ரவீந்திரரின் வாழ்க்கையிலும் உண்மையாயிற்று.

கவிதைகளிலும் கற்பனைகளிலும் மூழ்கி, நாட்டு நடப்பை மறந்து விடவில்லை ரவீந்திரர். தாய்நாட்டின் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். அதன் விளைவாக 'ஜனகனமன அதிநாயக ஜெயஹே' என்ற பாடலை எழுதினார். புகழ்பெற்ற அந்தப் பாடல்தான் நமது இந்திய நாட்டின் தேசிய கீதமாகத் திகழ்கிறது.

அந்நாளில் ஆங்கிலக் கல்வி நாட்டில் பரவிக்கொண்டிருந்தது. தாய்மொழியை மறந்து அயல் மொழியான ஆங்கிலத்தைக் கற்கத் துடித்தனர் வங்க மக்கள், ஆங்கிலம் பயிற்று மொழியாகவும் விளங்கிக் கொண்டிருந்தது.

'தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்பதே சிறப்பு' என்ற கருத்தை ரவீந்திரர் பத்திரிகைகளில் வலியுறுத்தி வந்தார். சொற்பொழிவிலும் எடுத்துரைத்தார்.

வங்காளப் பல்கலைக் கழகத்தில் ஒருமுறை பட்டமளிப்பு விழா உரை ஆற்றக் கலந்து கொண்டார். அவர் ஆங்கிலத்தில் பேசுவார் என்று எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் - தாய் மொழியான வங்க மொழியில் பேசி -அனைவரையும் வியப்புக் கடலில் ஆழ்த்தி விட்டார். இந்தியாவில், அதுவரை எந்தப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிலும் தாய்மொழியில் யாரும் உரையாற்றியது கிடையாது. ரவீந்திரர் புது மரபை உருவாக்கினார். நாட்டின் ஏனைய பல்கலைக் கழகங்கள் - கல்கத்தா பல்கலைக் கழகத்தைப் பின்பற்றின.

வங்க இலக்கியத்திலும் மறுமலர்ச்சியை உருவாக்கினார் ரவீந்திரர்; புதுமையும் எளிமையும் அவரது எழுத்தோவியங்களில் மின்னின. எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத பண்டித நடையை ஒதுக்கிவிட்டு, எளியநடையில் - இலக்கியங்களை உலாவரச் செய்தார்.

ரவீந்திரரின் புகழ், வங்கத்தில் நாளும் வளர்ந்தது. சில கவிதைகளைத் தொகுத்து 'நைவேத்தியம்' என்ற பெயரில் நூலாக 1900-ல் வெளியிட்டார்.

இலக்கியத்தில் புதுமையைப் புகுத்திய ரவீந்திரர் கல்வித்துறையில் பழமையையே விரும்பினார். தமது நாட்டில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறையில் இருந்து வந்த குருகுல முறைக் கல்வியில் அவருக்கு மிகுந்த மரியாதை இருந்தது. அந்த முறையில் ஒரு குருகுலத்தை அமைக்க விரும்பினார். போல்பூரில் தமது குடும்பத்திற்குச் சொந்தமான 'சாந்திநிகேதனம்' என்ற இடத்தில் புதிய பள்ளிக்கூடத்தைத் தொடங்கி 'பிரம்மசரியாசிரமம்' என்ற பெயரை அதற்குச் சூட்டினார்.

தொடக்கத்தில் மாணவர்கள் அதிக அளவில் சேரவில்லை என்றாலும் ரவீந்திரர் நம்பிக்கையை இழக்காமல் தொண்டாற்றி வந்

தார். பல நூல்களின் உரிமையை விற்றார். மனைவியின் நகைகளை விற்றார். என்றாலும் சிரமங்கள் குறையவில்லை.

இந்தக் குருகுலத்தை அமைப்பதற்கு அவர் சந்தித்த பொருளாதார நெருக்கடி குறித்து. ஒரு சந்தர்ப்பத்தில் அவரே தெரிவித்த செய்தி - நெகிழ்ச்சிக்குரியது. அது வருமாறு:

1940-ஆம் ஆண்டு உடல் நலத்திற்காக இமயமலைச் சாரலில் காலிம்பாக் என்ற இடத்துக்கு அண்மையில் உள்ள மங்பூவில் மைத்ரேயிதேவி என்னும் அம்மையாரின் இல்லத்தில் தங்கியிருந்தார் ரவீந்திரர். அப்போது மைத்ரேயியும் வேறு சிலரும் ரவீந்திரரைச் சூழ்ந்து கொண்டு "உங்களுக்குத் திருமணம் நடந்த கதையை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறோம்! தயவு செய்து தெரிவியுங்கள்" என்று வேண்டினர்.

உடனே ரவீந்திரர் சொன்னார்:

"கதைக்கு அதில் ஒன்றுமில்லை! என் அண்ணிமார்கள் எனக்குத் திருமணம் செய்து வைப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். உங்கள் விருப்பம்போல் எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் முடியுங்கள். ஆனால் கல்கத்தாவில் என் இடத்திலேயே மணச்சடங்கு நடைபெற வேண்டும் என்று தெரிவித்தேன்.

"இந்தச் சமயத்தில் மற்றொரு செய்தி நினைவுக்கு வருகிறது. வங்க மாநிலத்துக்கு வெளியே வேறொரு மாநிலத்திலிருந்து ஓர் இடம் வந்தது. பெரிய செல்வந்தரின் ஒரே மகள். ஏராளமான சொத்துக்கு - எட்டு லட்ச ரூபாய்க்கு அதிபதி அவள். அவளைப் பார்க்கச் சென்றேன். கூடத்தில் இரண்டு பெண்கள் அமர்ந்திருந்தனர். ஒருத்தி நல்ல அழகி, மற்றொருத்தி குள்ளமாக குறுகலாக இருந்தாள்.

"பணக்காரர் அந்த அழகான பெண்ணைக் காட்டி, 'இது என் மனைவி' என்றும், குரூபியான பெண்ணைக் காட்டி, 'இது என் மகள்' என்றும் அறிமுகம் செய்து வைத்தார். எனக்குத் திக்கென்றது. 'பெண் பிடிக்கவில்லை' என்று சொல்லித் திரும்பிவிட்டோம்.

"அப்புறம் எனக்குப் பல சமயம் தோன்றியது உண்டு. அவள் குரூபியானால்தான் என்ன? நறுக்கென எட்டு லட்சம் வருகிறதே- விசுவபாரதியை நடத்த இப்படிப் பணத்திற்குத் திண்டாடாமல் இருக்கலாம் அல்லவா?"



தாகூரின் நாத நடையினைக் கண்டதும் சங்கை கொண்டோர் வங்கத்திலே இல்லை. அவர் மொழி, வங்க மக்கள் எவரின் விழியிலும் களிப்புத் துளி எழச் செய்ததே அன்றி, காய்ச்சலும் குளறலும் எழச் செய்யவில்லை. வங்கம் தாகூரை உச்சி மோந்து முத்தமிட்டு வாரி அணைத்து வாஞ்சையுடன் கொஞ்சிற்று.

—பேரறிஞர் அண்ணா

சாந்திநிகேதனத்தில் சங்கீதம், நடனம், ஆகிய கலைகளும் கற்பிக்கப்பட்டன. காலையில் இன்னிசையுடன் ஆசிரம வேலைகள் தொடங்கி, மாலை இசையுடன் முடிவடையும். வசந்தம், கோடை மழை முதலிய பருவங்களை வரவேற்கத் தனித்தனிப் பாடல்கள் முழங்கின. பருவ முடிவின்போது சிறு நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டு வந்தது. பெரும்பாலும் மாணவர்களே பங்கேற்று வந்தனர்.

தொடக்கத்தில் மாணவர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. பின்னர் சில மாதங்களுக்குப் பிறகு, மாதம் பதினைந்து ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது. பல ஆசிரியர்கள், சிறிது காலம் பணியாற்றிவிட்டு, நின்றுவிட்டனர். ஒரு சில அறிஞர்கள் ரவீந்திரருக்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள்.

ஆசிரமத்தின் ஓராண்டு நிறைவுக்குள் ரவீந்திரரின் துணைவியார் மிருணாளினி தேவி இயற்கை எய்தினார், பின்னர் சிறிது காலத்தில் மகள் ரேணுகா உயிர் துறந்தாள். மறு ஆண்டு, ஆசிரமத்தை நிறுவ உதவிய அவரது நண்பர் சதீஷ் சந்திரராய் மறைந்தார். 1905-ல் ரவீந்திரரின் தந்தையார் தேவேந்திரநாத் மறைவெய்தினார். அந்தக் கவலை அகலுமுன் ரவீந்திரரின் இளைய மகன் பதின்மூன்றாவது வயதில் மடிந்தான். இந்தப் புயல்களுக்கு நடுவிலும், மனம் தளராமல் நம்பிக்கை ஒளியுடன் ஆசிரமத்தை நடத்தி வந்தார் ரவீந்திரர்.

நோபல் பரிசு பெற்ற ரவீந்திரரின் பெருமையை அறிந்த கல்கத்தா பல்கலைக் கழகம் அவருக்கு இலக்கியத்தில் முனைவர் விருது அளித்துச் சிறப்பித்தது. 1915-ஆம் ஆண்டில் இந்திய அரசு 'சர்' பட்டம் வழங்கியது.

நோபல் பரிசுத் தொகையாகக் கிடைத்த ஒரு லட்ச ரூபாயை ரவீந்திரர் - சாந்தி நிகேதனின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார். சாந்தி நிகேதனை 'விசுவ பாரதி' என்ற பல்கலைக் கழகமாக்கினார். 1921-ல் பணி தொடங்கியது.

உலகத்திலுள்ள பல்வேறு பண்பாடுகளும் இலக்கியங்களும் கலைகளும் கூடுமிடமாக விசுவ பாரதி விளங்க வேண்டும் என்று ரவீந்திரர் விரும்பினார். பல மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் அங்கு வந்து கல்வி பயின்றனர். மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும் விசுவ பாரதியில் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசுவபாரதியில் ஓவியம், சிற்பம் இசை, நடனம் ஆகிய கலைகளும், சமஸ்கிருதம், இந்தி முதலிய இந்திய நாட்டு மொழிகளும், ஏனைய நாட்டு மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. ரவீந்திரரின் கனவு நனவாகியது. விசுவ பாரதி இன்றும் அவரை நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறது.

ரவீந்திரர் ஓவியம் தீட்டுவதிலும் ஒப்பற்றவராக விளங்கினார். அவரது ஓவியங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் புகழ் பெற்றன. லண்டன், பாரிஸ் போன்ற நகரங்களில் அவரது ஓவியக் கண்காட்சி நடைபெற்றது.

ரவீந்திரரின் 80-வது பிறந்த நாள் விழா 1941-ல் சாந்தி நிகேதனில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டின் தொடக்கத்திலேயே நோய்வாய்ப்பட்டிருந்த அவர், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவர்கள் அவரைக் காப்பாற்றுவதில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். ஆனால் பலனளிக்கவில்லை. 1941 ஜூலை திங்கள் 29-ஆம் நாள் அவர் மறைவெய்தினார்.

மண்ணை விட்டு அவர் மறைந்தாலும், தாயகத்து மாந்தரின் மனத்தை விட்டு அகலாத மகா கவியாக அவர் விளங்கினார்; விளங்குகிறார். நாள்தோறும் இந்திய நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்படும் போதெல்லாம் ரவீந்திரநாத தாகூர் நம் இதயங்களின் உள்ளே அமர்ந்து இன்னிசைச் சுரங்களை எழுப்பிக்கொண்டிருக்கிறார்.





# அறிவியல் தமிழுக்கு விருது

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகம், 'வளர்தமிழ் மன்றம்' என்றோர் அமைப்பை நிறுவியுள்ளது.

தமிழில் - அறிவியல், தொழில் நுட்பவியல் இலக்கியம் உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுவதும் அதற்குத் துணையான முயற்சிகளை ஊக்குவிப்பதும் இம்மன்றத்தின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

அந்த வகையில் - அதிக அளவிலே அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டு, அவ்வகை எழுத்தாளர்களை ஊக்குவித்து அறிவியல் தமிழ் வளர உதவிடும் பத்திரிகை ஆசிரியர் (1984) என்பதற்கான விருது 'தினமணி' நாளேட்டின் ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

சிறந்த அறிவியல் தமிழ் நூல்களை வெளியிட்ட பதிப்பாசிரியர் என்பதற்கான விருது (1985) காலஞ்சென்ற டாக்டர் ஜி. ஆர். தாமோதரனுக்கு வழங்கப்பட்டது.

பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த விருதுகளை வழங்கும் விழா (7-5-86) அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தர் கலை அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார். கற்றறிவாளர்க்கும் பொன்னாடை போர்த்தி, விருதுகளை மேலவைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் வழங்கினார்.

வளர்தமிழ் மன்றத் தலைவரும், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தருமான டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

"நாம் அறிவியல் யுகத்தைத் தமிழில் காண விரும்புகிறோம். அறிவியல் வளர்ச்சியின் பரிமாணம், அதன் வேகம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. அறிவு வளர்ச்சியின் மொத்தத்தொகுப்பு பத்தாண்டுக்கு ஒருமுறை இரட்டிக்கிறது. இலக்கியப் பாரம்பரியத்தில் இணையற்று விளங்கும் நமது மொழி, சமய தத்துவ வளத்தில் தலைதூக்கி நிற்கும். நமது மொழி அறிவியல் துறையிலும் ஆக்கப் பெற வேண்டுமானால் அதற்குச் சில மாற்றங்கள் தேவை. அதை நாம் புறக்கணிக்கலாகாது-' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

"அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு அண்ணா பல்கலைக் கழகம் தன்னால் இயன்ற பணியைச் செய்யும் நோக்குடனேயே வளர் தமிழ் மன்றம் நிறுவப்பட்டுள்ளது அதன் சார்பில் - களஞ்சியம்' என்கிற காலாண்டு இதழ் வெளியிடப்படும்' என்று மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

**அமைச்சர் உரை!**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

"நாம் வளர்க்கும் கல்வியறிவு நம் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்றே அரும்பாடு பட்டு பல கல்வி நிறுவனங்களை நிறுவுகிறோம். ஆனால் நம் எண்ணம் ஈடேறுகிறதா என்றால் இல்லை. ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருப்பதால்தான் தமிழ்நாட்டில் அறிவியல் கல்வி பெற்றவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். அவர்கள் அறிவு நமக்குப் பயன்படாமலே போகிறது.

"சிந்திப்பது என்பது இயல்பாகவே தாய்மொழியில்தான் நடைபெறும். அதனால்தான் தாய்மொழிக் கல்வி என்கிறோம். தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும் என்பதன் காரணம் தமிழ்ப் பற்றாலோ, தமிழ் வெறியாலோ

மட்டுமே அல்ல. அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழிச் சிந்தனையே சிறந்தது. அறிவியல் தமிழ் வளர்ச்சி என்பது தமிழனின் வளர்ச்சி மட்டுமேயல்ல; அது தமிழகத்தின் தமிழினத்தின் வளர்ச்சியுமாகும்.

''நாங்கள் இந்தியை எதிர்ப்பது அரசியல் ரீதியாக மட்டும் அல்ல; அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே பயன்பட வேண்டும் என்கிற கருத்தின் அடிப்படையிலுமே இந்திக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

—இவ்வாறு பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்களே 'வளர்தமிழ் மன்றப் பணி'யைப் பாராட்டினார்.

**மேலவைத் தலைவர் உரை**

திரு. ஏ.என். சிவராமன் அவர்களுக்கும், காலஞ்சென்ற திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்களின் மகன் திரு. டி. பத்மநாபன் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி - உரையாற்றுகையில் மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டதாவது :

''நானும் மாண்புமிகு கல்வியமைச்சரும்தான் இந்த வளர் தமிழ் மன்றத்தைத் துவக்கி வைத்தோம்; அம்மன்றம் இப்படி நன்முறையிலே பணியாற்றுவது கண்டு பெருமைப்படுகிறேன்.

''இங்கே விருதுபெறும் ஏ.என். சிவராமன் சுதந்திரப் போராட்டக் காலம் முதலே எனக்குப் பழக்கமானவர். பலமொழியும் கற்றவர். உலகம் சுற்றிய தமிழர். இலக்கியத் துறையிலே வளம் பெற்ற தமிழ் அறிவியல் துறையிலும் வளம் பெற பத்திரிகை மூலம் பெருந்தொண்டாற்றி வருபவர். ஆங்கிலப் பத்திரிகை மூலம்தான் அறிவியல் அறிவு பெற முடியும் என்ற கருத்தை மாற்றிய பெருமை இவருடைய கட்டுரைகளுக்கு உண்டு. இதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.



''பல அரிய சொற்களைக் கண்டுபிடித்து உதவி அறிவியல் தமிழை வளர்த்த பெருமையாளர் ஜி. ஆர். தாமோதரன். தமிழில் அறிவியல் வளர தனியே கலைச்சொல் அகராதியே படைத்தளித்த அவர் பணி பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.



அறிவை நம்புங்கள்; அப்போது தான் விஞ்ஞான அற்புதங்களை யெல்லாம் நம்மால் செய்ய முடியும்

மனிதன் எந்த அளவுக்குப் பகுத்தறிவால் தெளிவு பெறுகிறானோ, அந்த அளவுக்குப் பக்குவமாகி விட்டான் என்று பொருள்.

—தந்தை பெரியார்

''அறிவியல் நூல்கள் தமிழில் பெருகவேண்டுமானால், அவற்றை வாங்கிப் படிப்போரின் எண்ணிக்கை பெருக வேண்டும். ஆங்கில நூல்களைப் மொழி பெயர்க்கும்போது அவற்றைப் பழகு தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். பல்கலைக் கழகங்களில் மொழிபெயர்ப்புக்காகவும் சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப்படவேண்டும். மொழி பெயர்ப்பில் நமக்குப் பிடிவாதமோ வைதீகமோ கூடாது.

''ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் பிடித்தாக வேண்டும் என்பதற்காக அல்ல; ஆங்கிலத்துக்கு விட்டு வைத்தோமே, அந்த இடத்தை நாம் மீட்டாகவேண்டும் என்பதற்காகவே இதை நான் சொல்கிறேன்.



''விஞ்ஞானப் பாடங்களுக்கே தமிழ் போதனா மொழியாக வேண்டும். அப்போதுதான் தமிழில் அறிவியல் வளருமே தவிர, இப்படிப்பட்ட சுற்றுப்புறப் பணிகளால் மட்டுமே தமிழில் அறிவியல் வளர்ந்து விடாது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். ஆங்கிலேயனால்தான் நாம் அறிவியல் அறிவு பெற்றோம் என்கிற எண்ணம் நம்மில் தடிப்பேறிப் போயிருக்கிறது; 'எய்ட்ஸ்' நோயை விட இது கொடுமையானது.'

**நன்றியுரை**

தமக்களிக்கப்பட்ட விருதுக்கு நன்றி தெரிவித்து திரு ஏ.என். சிவராமன் அவர்களும், ஜி.ஆர். தாமோதரன் சார்பில் விருது பெற்ற அவரது புதல்வர் டாக்டர் டி. பத்மநாபனும் உரையாற்றினர்.

தமது தந்தையார் தொடங்கிய பணியைத் தானும் கவனமாகத் தொடர்வதாகத் தெரிவித்த திரு டி. பத்மநாபன், ஜி. ஆர். டி. அறக்கட்டளை சார்பில் வளர்தமிழ் மன்றத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை வழங்குவதாகத் தெரிவித்தார்.

விருது பெற்ற இருவரையும் எம். ஐ. டி. நெறியாளர் திரு. சே. சாதிக், அண்ணா பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் முத்துக்குமரன் ஆகியோர் அறிமுகப்படுத்தி பேசினார்கள். விழா முடிவில், வளர் தமிழ்மன்றச் செயலாளர் டாக்டர் பா. இளங்கோ நன்றியுரையாற்றினார்.

**நமது செய்தியாளர்**





# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

சுகவனேஸ்வர் இ.ஆ.ப., ஆணையர் மற்றும் அரசுச் செயலர் வணிகவரி மற்றும் அறநிலையத் துறை

தமிழகம் ஒரு விவசாய நாடு. தமிழக மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே, நிலம் வைத்திருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் நிலத்தைச் சரிவரப் பாதுகாத்துக் கொள்ளவும், அந்த நிலத்தின் மூலம் அவர்கள் அடையக்கூடிய பயனை எவ்வித தங்கு தடையுமின்றி எளிதாகப் பெறச் செய்வதும் அரசின் தலையாய கடமைகளாகும். இதை மனத்தில் கொண்டு தமிழகத்தில் சுமார் 80,000 ச.கி.மீ. கொண்டுள்ள பரப்பளவில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம் அரசினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மொத்தப் பரப்பு 1,30,069 ச.கி.மீ. ஆகும். இவற்றில் ஒதுக்கப்பட்ட காடுகளும், அண்மையில் மறுநில அளவை செய்யப்பட்ட பகுதிகளும், தீவிர உட்பிரிவுத் திட்டத்தின் கீழ் பணி நடைபெற்ற வட்டங்களும் போக மிருதியுள்ள 99 வட்டங்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள நில அளவைப் பதிவேடுகளில் நில உடைமையில் அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்கள் சாவரப் பதியப்படவில்லையாதலால், விவசாயப் பெருங்குடி மக்கள் அரசாங்கத்தாலும், ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களின் மூலமும் பெறக்கூடிய பலதரப்பட்ட பயன்களைப் பெறுவதில் சிரமம் அடைகின்றனர். மேற்படி பதிவேடுகளைப் பராமரிக்கும் பணி சாதாரணமாக மறு நில அளவை மற்றும் மறு நிலவரித்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டு வந்தது. எல்லாப் பகுதிகளிலும் மறு நிலஅளவை மற்றும் மறு நிலவரித் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமானால், வெகு அதிகமான பணச் செலவும், நேரமும் ஆகும் என்பதை மனத்தில் கொண்டு, குறைந்த செலவிலும், குறுகிய காலத்திலும் மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டத்தினால் ஏற்படக்கூடிய எல்லாப் பலன்களையும் பெறுவதற்கான வழியை ஆராய்ந்து அறிந்து இப்புதியதொரு திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்தது.

**செயல்முறைகள்:**

1.6.79-ல் நில அளவைத்துறையில் பணிபுரியும் ஊழியர்களைக் கொண்டும், ஒரு சிலபுதிய ஊழியர்களை அனுமதித்தும் இத்திட்டம் சோதனை முறையில் 30 வட்டங்களில் 28 அலகுகளுடன் எடுத்துக் கொள்ளப்பட்டது. 5.1.82-ல் இத்திட்டத்தின் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்திட்டம் கிராம அளவில் சமூக, பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையானதாகவும், கணிசமான அளவில் வேலை வாய்ப்புகளைத் தருவதாகவும் உள்ளதால், இம்மேம்பாட்டுத் திட்டத்தை இரண்டு முதல் மூன்று ஆண்டுக்கால வரையறைக்குள் மாநிலம் முழுவதும் முடிக்க வேண்டுமெனக் கொள்கையளவில் முடிவு எடுத்து, அதற்குத் தேவையான ஊழியர்களை அனுமதித்து உள்ளார்கள். அத்தகைய கூடுதலாக அனுமதித்த ஊழியர்களைக் கொண்டு தற்போது 16 மாவட்டங்களில் மேற்படி 28 அலகுகளுடன் மொத்தம் 108

அலுவலகங்களின் மூலமாக இத்திட்டம் தமிழகத்தில் 1986ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் முடிவடைந்துள்ளது. அண்மையில் இத்திட்டம் மேலும் 49 வட்டங்களில் 105 அலகுகளுடன் ஏற்கெனவே தீவிர உட்பிரிவுத் திட்டம் நடந்த கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்களின் விவரம் நில அளவைச் சட்டத்தின்படி முதலில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்படுகிறது. அதன் பின் ஒவ்வொரு கிராமத்திலும் பணி துவங்கும் முன் தண்டோரா மூலமும், விவசாயிகளுக்கு எழுத்து மூலமும் அறிவிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பட்டாக்களில் தவறு இருந்தால், அதனைத் திருத்திக் கொள்ள நில உரிமைதாரர்களுக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இது தவிர, கிராமவாரியாக அங்குள்ள நில உரிமைதாரர்களைக் கொண்டு சிறு விழாக்கள் நடத்தி, நிலச் சொந்தக்காரர்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது. இத்திட்டம் நல்ல முறையில் நடைபெற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் ஒத்துழைப்பு நல்குவதுடன் தங்கள் உரிமைகள் பற்றிய சரியான தகவல் கொடுப்பதும் மிகவும் அவசியமாகும்.

**நில உடைமைப் பதிவுமேம்பாட்டுத் திட்டத்தின் முழுப் பயனைப் பெற நில உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பல்வேறு வாய்ப்புகள்.**

ஒரு கிராமத்தில் நில அளவை தொடங்கும் முன்பே, அக் கிராமத்திலுள்ள நில உரிமையாளர் அனைவரும், அவர்களது நிலங்களைப் பற்றிய முழு விவரங்களை நில அளவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும், நில எல்லைகளைக் குறிக்கும் வரப்பு இல்லாது போனால், வரப்பிட்டுக் கொள்ளுமாறும் எழுத்து மூலம் அவர்கள் கோரப்படுகிறார்கள். அவ்வாறு பெறப்படும் விவரங்களின் அடிப்படையிலேயே நில எல்லை அளந்து குறிக்கப்படுகிறது.

தற்போதுள்ள கிராமச் சிட்டாவின்படி ஒரு நிலத்தின் உரிமையாளர் ''அ'' என்றிருந்து, விசாரணையின் போது 'ஆ' தான் அந்நிலத்தின் உரிமையாளர் எனத் தெரியவருகிறது என்று வைத்துக் கொள்வோம். நிலத்தை இடம் காணும் பணியின் போதே, ''அ'' என்பவருக்குத் துணை ஆய்வாளரின் கையொப்பத்துடன் அறிக்கை அனுப்பப் பட்டு வருகிறது. இதன் மூலம் ''அ'' பாதிக்கப்பட்டிருப்பின், அவர் தனி வட்டாட்சியருக்கு (நில உடைமப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்) மேல்முறையீடு செய்ய வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

ஒரு கிராமத்தில் நில அளவை நடந்து கொண்டிருக்கும்பொழுது ஆய்விற்காகக் கிராமத்திற்கு வரும் நில அளவை அலுவலர்களிடம் தங்கள் குறைகளைக் கூறும் மனுக்களை அளிக்கலாம். ஆய்வு செய்ய வரும் அலுவலர்கள் அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

நில அளவை நடந்து முடிந்ததும், ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் அவருக்குச் சொந்தமான புல எண், அதன் பரப்பு ஆகிய விவரம் நில அளவை எல்லைச் சட்டப் பிரிவு 9(2) படியான அறிவிக்கையில் தரப்படுகிறது. அதன் எல்லைகளைப் பற்றிய தகராறு ஏதும் நில அளவை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாத நிலையில், அவை பற்றித் தகராறு இல்லையெனப் பதிவு செய்வதாக அதில் கூறப்பட்டிருக்கும். அதை ஆட்சேபித்து எல்லை மற்றும் பரப்பில் குறைபாடுகள் பற்றி மேல்முறையீடு செய்ய வேண்டுமெனில் அறிக்கை கிடைத்து மூன்றுமாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கோ, ஆய்வாளருக்கோ மேல்முறையீடு செய்ய வேண்டும். உரிமையாளர் பெயர்ப் பதிவில் ஏற்படும் தவறு குறித்து அறிவிக்கை கிடைத்து 60 நாட்களுக்குள் தனி வட்டாட்சியருக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

பதிவில் தகப்பனார் பெயர், கணவன் பெயர், மனைவி பெயர் மற்றும் உரிமையாளர் பெயர் தவறாக இருந்தாலும், மேல்முறையீடு செய்யலாம்.

மனுதாரர் தனது நிலத்தின் பழைய நில அளவை எண்கள் பத்திரப்படியோ, சிட்டாப் படியோ, தன் மனுவில் குறித்தல் போதுமானது. தோராய பட்டா ஆட்சேப மனுக்கள் மீது விசாரணை செய்து, நடவடிக்கை எடுப்பதைப்போலவே, நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட தனி வட்டாட்சியர்கள் இந்த மேல்முறையீட்டு மனுக்களின் மீது விசாரணை நடத்தி, முடிவெடுப்பார்கள்.

நில அளவை நடக்கும்போது நில உரிமையாளர் நில வழக்குத் தொடுத்து, அதன் மீது நில அளவை எல்லைச் சட்டப்பிரிவு 10ன் படி தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், அதை ஆட்சேபித்துப் பிரிவு 11ன் கீழ் மேல் முறையீடு செய்ய வாய்ப்புள்ளது. தீர்ப்பு நகல் கிடைத்து மூன்று மாதத்திற்குள் மேல்முறையீடு செய்யவேண்டும்.

தனி வட்டாட்சியர் பதிவு சம்பந்தமான மேல்முறையீட்டின் மீது போட்ட உத்தரவை ஆட்சேபித்து, கோட்ட வருவாய் அலுவலருக்கு, இரண்டு மாத காலத்திற்குள் மேல்முறையீடு செய்யலாம்.

நில அளவை முடிவடைந்து, நில அளவை எல்லைச் சட்டத்தின் 13வது அறிக்கை பிரசுரிக்கப்பட்ட பின், மூன்றாண்டுகளுக்குள் அளவை அல்லது பரப்பில் குறைபாடுகள் குறித்து நில உரிமையாளர் வழக்குத் தொடரும் வாய்ப்பும் உள்ளது.



ஆவணங்கள் வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு விட்ட பின்னர், வட்டாட்சியர் பராமரிப்புப் பணியில் நடைமுறையில் பதிவு மாற்ற இனங்களில் நடவடிக்கை மேற்கொள்வதைப் போல, பதிவுகளில் ஏற்பட்ட பிழைகளைத் திருத்தவும் நடவடிக்கை மேற்கொள்வார்.

பதிவு பற்றிய மனுக்களின் மீது நீதி மன்றக் கட்டணவில்லை ஒட்டி அனுப்பத் தேவையில்லை. சாதாரணத் தாளில் மனு எழுதி அனுப்பினால் போதுமானது. ஆனால் நில அளவை எல்லைச் சட்டத்தின்கீழ் முதல் நில வழக்காயினும், மேல்முறையீடாயினும், துணை இயக்குநர் பதவிக்குக் கீழ் நிலையில் உள்ளவருக்கு மனுச் செய்கையில் முறையே ரூ. 1 மற்றும் 1.50க்கான நீதிமன்றக் கட்டணவில்லையும், துணை இயக்குநருக்கு மேல்முறையீடாயின் ரூ.2 மதிப்புள்ள நீதிமன்றக் கட்டணவில்லையும் ஒட்டி மனுச் செய்ய வேண்டும்.

**திட்டத்தின் நன்மைகள்**

புதுப் பட்டா ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பட்டாவுடனும், அப்பட்டாவில் கண்டுள்ள நிலங்களின் புலப்படங்கள் நான்கு பக்க அளவுகளுடன் கொடுக்கப்படுகின்றன. விவசாயிகள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் ஒவ்வொரு புலங்களுக்கும் வடக்குப் பக்கமுள்ள பட்டாதாரரின் பெயரும் எழுதிக் காண்பிக்கப்படுகிறது.

கூட்டுப்பட்டாக்கள் தனிப் பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதற்கென பிரத்தியேகமாக நில உரிமையாளரிடமிருந்து விண்ணப்பம் இல்லாமலே செய்து தரப்படுகிறது.

கிராமங்களிலும், வட்ட அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் மூல ஆவணங்களான செட்டில்மெண்ட் பதிவேடு, நிலச்சுவடி, சிட்டா, கிராமப்படம் ஆகியவை புதியதாகத் தயாரிக்கப்பட்டு, எதிர்வரும் 30 ஆண்டுகளுக்குப் பயன்படுமளவிற்குச் செய்து கொடுக்கப்படுகிறது.

இத்திட்டம் தமிழக அரசால் கொண்டு வந்துள்ள நில உரிமைப் பதிவேடு சட்டத்தினைச் செயல்படுத்தப் பெரிதும் உதவும்.

நிலங்களிலுள்ள காணாமற் போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

அரசுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, வட்டாட்சியர்களுக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

கிராமங்களில் நஞ்சையாகப் பதிந்துள்ள நிலங்கள் தற்போது புஞ்சையாகவும், புஞ்சையாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் நஞ்சையாகவும் இருக்குமானால், அத்தகைய மாற்றங்களும், அதுபோல் பூமியில் தற்போது உபயோகத்தில் உள்ள நடைபாதை, வண்டிப்பாதை, போன்ற பொது மக்கள் உபயோகித்துவரும் இடங்களைப் புறம்போக்காக மாற்ற ஏதுவாக அத்தகைய புலங்களும் கணக்கெடுக்கப்பட்டு, வருவாய்த் துறைக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்பப்படுகின்றன.

இத்திட்டம் சுமார் 10,000 ஊழியர்களுக்கு மாத சம்பளத்திலும், சுமார் 20,000 நபர்களுக்கு தினப்படியாகவும் வேலை கிடைக்க வழி செய்கிறது.

**பணிகள்**

30.9.85ல் 70,485ச.கி. மீட்டர் பரப்புள்ள 9942 கிராமங்களில் அளவைப்பணி முடிந்து விட்டது. 31.3.1986ல் பட்டா வழங்குதல் போன்ற பணிகள் முடிந்துவிட்டன.

இத்திட்டம் அமல்படுத்தப்படு முன் 31.65 இலட்சம் தனிப் பட்டாதாரர்களும், 22.25 இலட்சம் கூட்டுப் பட்டாதாரர்களும் இருந்தனர். இத்திட்டத்தை அமல்படுத்திய பின், 31.3.86 வரை இது 53.24 தனிப்பட்டாதாரர்களும், 20.10 இலட்சம் கூட்டுப் பட்டாதாரர்களும், என மாறி விட்டது. இத்திட்டத்தினால், பயன் அடைந்த விவசாயிகள் 1.10 கோடிப் பேர் ஆவர்.

கூட்டாக அனுபோகத்தில் உள்ளவையும், பிரிக்க முடியாதவையும் ஆன, கூட்டுக் கிணறுகள், சமுதாய நிலங்கள் மற்றும் பொதுப்பாதைகள் போன்றவை ஒரு சிறிய சதவிகிதத்தில் அமைகின்றன.

''அ'' பதிவேடுகளை அச்சிடும் பணியையும் சேர்த்து இத்திட்டத்தின் செலவுத் தொகை சுமார் 40 கோடி ரூபாயாகும். தமிழ் நாட்டில், செலவின் பெரும்பகுதி, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நில உடைமையாளர்கள் உத்தேசமாக நஞ்சைக்கு 27.30 ரூபாயும் புஞ்சைக்கு 19.30 ரூபாயும் செலுத்த வேண்டியவர்களாகிறார்கள்.

இந்திய அரசின் 20 அம்சத் திட்டத்தின் 4வது அம்சமாக நில உடைமைப் பதிவும், பட்டா வழங்கலும் அமைகின்றன. இத்திட்டம் குடியானவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும், எல்லோராலும் வரவேற்கப்படுவதாகவும் அமைந்துள்ளது.

## உலகிலேயே அதிக சக்திவாய்ந்த தொலைநோக்கி

சாதாரணத் தொலைநோக்கிகளால் பார்க்கக்கூடிய தூரத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிக தூரத்துக்கு விண்வெளியை ஆராயும் சக்திவாய்ந்த தொலைநோக்கியொன்று கலிபோர்னியா தொழில்நுட்பக் கழகத்தின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஹவாய் தீவில் உள்ள 'டபிள்யூ எம். கெக்' வானியல் ஆய்வுக் கூடத்தில் இந்தத் தொலைநோக்கி பொருத்தப்படும். உலகிலேயே அதிக சக்தி மிக்க வான ஆராய்ச்சித் தொலைநோக்கியாக இது திகழும். தற்போது, கலிபோர்னியா தொழில்நுட்பக் கழகத்தின் பாலோமர் வானியல் ஆய்வுக் கூடத்தின் தொலைநோக்கிதான் அதிக சக்தி மிக்கதா[illegible] உள்ளது.

புதிதாக [illegible]வாக்கப்படும் தொலைநோக்கி[illegible]ல் 36 அறு கோணக் கண்ணாடிகள் பொருத்தப்படும்; இவை இணைந்து 1016 சென்டிமீட்டர் அளவுள்ள கண்ணாடிப் பரப்பை ஏற்படுத்தும். மிகவும் தொலைதூரத்திலுள்ள பொருட்களையும் இது உருப்பெருக்கிக் காட்டும்.

சந்திரமண்டலம் அளவு தொலைவில் இருக்கும் ஒரு மெழுகுவர்த்தியின் ஒளியைக்கூடப் பார்க்கும் அளவுக்குத் துல்லியமான சக்தி படைத்ததாக இது இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்கத் தகவல் நிலையம்



# ஒலி வேகத்தை விஞ்சும் விமானம்

உலகம் முழுவதையும் மூன்றே மணி நேரத்தில் வலம் வந்து விடக்கூடிய திறமை படைத்த— புரட்சிகரமான 'ஹைப்பர்சானிக்' விமானத்தை உருவாக்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இந்த விமானத்தின் வேகம், ஒலியின் வேகத்தைவிட 25 மடங்கு அதிகமாக இருக்குமாம். டல்லாஸ் (வாஷிங்டன்) விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு 2 மணி நேரத்தில் டோக்கியோ சென்றடைந்துவிடும்.

ஜெட் விமானக் கண்டுபிடிப்புக்குப் பிறகு, விமானப் பயணத் துறையில் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய திட்டம் இது. இந்த விமானத்தை உருவாக்க, வருகின்ற பத்து ஆண்டுகளில் 300 கோடி டாலர்கள் செலவாகும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதர சாதாரண விமானங்களைப் போலவே, வழக்கமான ஓடுபாதைகளில் ஏறவும் இறங்கவும் இந்த விமானத்தால் முடியும். கிளம்பியவுடனேயே இந்த விமானம் வெகு விரைவில மணிக்கு 23,680 கிலோ மீட்டர்கள் வேகத்தை எட்டிவிடும். (இது ஒலியின் வேகத்தைப் போல் 20 மடங்காகும்). பின்பு இதிலுள்ள 'ராக்கெட் பூஸ்டர்' இயந்திரத்தை இயக்குவதன் மூலமாக, இவ்விமானத்தை பூமியைச் சுற்றிலும் ஒரு தனிச் சுற்றுப் பாதையில் செலுத்த முடியும்.

இந்த விமானம் ஒரு 'ஏரோஸ்பேஸ்' விமானமாகவும், 'ஹைப்பர்சானிக்' விமானமாகவும் செயல்படும்; ஏரோஸ்பேஸ் விமானம் என்பது, செயற்கைக் கோள்களைப் போலவே பூமியிலிருந்து விண்வெளிக்குப் பளுவை ஏற்றிச் செல்லக்கூடியது; விண்வெளியில் சுற்றி வருகின்ற விண்வெளிக்கூடங்களுடன் தொடர்பு கொண்டுவிட்டு பூமிக்குத் திரும்பி வரும் திறன் படைத்தது.

'ஹைப்பர்சானிக்' விமானம் என்பது பூமியில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அதிவேகமாகப் பயணம் செய்யக் கூடியது; கண்டங்களையும், கடல்களையும் சில நிமிடங்களில் கடக்கக் கூடியது.

வேகத்தை அதிகரிப்பதற்காக, இந்த விமானத்தில் 'ஸ்கிராம் ஜெட்' என்னும் புதிய வகை ஜெட் இயந்திரத்தைப் பொருத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சாதாரண ஜெட் விமானங்களில் இருக்கும் கனமான ''கம்ப்ரெஸ்ஸர்'' இயந்திரம் இதில் இருக்காது. அதற்கு வேறுவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். பளுகுறைவதனால் இந்த விமானம் வேகமாகச் செல்ல இயலும்.

சாதாரண ஜெட் விமானங்களில், இறக்கைகளுக்குக் கீழே எஞ்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன. இப்போது தயாரிக்கப்படும் புதிய விமானத்தில் அதன் பிரதான உடல் பகுதியின் அடிப்பாகத்தில் நெடுக்குவாட்டத்தில் எஞ்ஜினை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின் மூலம், இந்த விமானத்தின் உந்து விசை கூடும்.

விண்வெளி ஓடத்திற்கு ஒரு மாற்றாக இந்தப் புதிய விமானம் தயாரிக்கப்படுகிறது. விண்வெளி ஓடத்திற்கு ஆகும் செலவில் பத்தில் ஒரு பங்கு முதல், நூறில் ஒரு பங்கு அளவுக்கு இந்த விமானத் தயாரிப்புச் செலவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

## பல் சொத்தையைப் போக்கப் புது மருந்து

பல் சொத்தையை அகற்றிவிடும் புதிய மருந்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். பசை வடிவில் உள்ள இந்த மருந்து 'காரிடெக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது.

பல்லில் சொத்தை விழுந்திருக்கும் இடத்தில் இந்த மருந்தைப் போட்டால், பழுதடைந்த அந்தப் பகுதியை மட்டும் இந்த மருந்து அகற்றி விடுகிறது. பல்லில், துளை போடுவதோ, மயக்க மருந்து தருவதோ இனிமேல் தேவை இருக்காது. வலி ஏதும் இல்லாமல், இந்த மருந்து விரைவாகப் பணியாற்றுகிறது.

மாஸச்சூஸட்சில் உள்ள டப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவர்கள் இருவர் 'காரிடெக்ஸ்' என்னும் இந்த மருந்தை உருவாக்கியுள்ளனர். அமெரிக்கப் பல் மருத்துவக் கழகமும் இந்த மருந்தை அங்கீகரித்துள்ளது.





# திட்டங்கள் வெற்றி பெற திட்டமிட்ட குடும்பம் தேவை

"மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஐந்தாண்டுத் திட்டத்தின் பயன்கள் வீணாகிவிடுகின்றன. எனவே, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் குடும்ப நலத் திட்டத்தில் அரசும், அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் அக்கறை காட்ட வேண்டும். சிறு குடும்ப நெறியை ஏற்றுக் கொள்கிறவன்தான் உண்மையான நாட்டுப்பற்றுள்ள குடிமகன் ஆவான்'' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் கூறினார்.

மாநில குடும்ப நலத் தலைவர்கள் பயிற்சி முகாமின் நிறைவு விழா 8-4-86 அன்று எழும்பூரில் உள்ள மகளிர் நோய் இயல் நிலையத்தில் நடந்தது. தலைமைச் செயலாளர் திரு. டி. ஏ. அந்தோணி, இ.ஆ.ப. தலைமை வகித்துப் பேசினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு நிறைவுச் சொற்பொழிவு ஆற்றும்போது மேலும் கூறியதாவது :

''30 ஆண்டு காலத்திற்கு முன்பே நாம் குடும்ப நலத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆனாலும் சமுதாயத்தில் இந்தத் திட்டம் உரிய முக்கியத்துவத்தைப் பெறவில்லை. இது வேதனை தரக்கூடிய ஒன்று. ஆகவே கட்சி, மாநில, மொழி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் ஆகியவைகள் குடும்ப நலத் திட்டம் பற்றித் திட்டம் போட்டுச் செயல்பட வேண்டும். எந்த மாநிலப் பிரச்னைகளுக்கும் அடிப்படைக் காரணம் மக்கட்தொகைப்பெருக்கமே!

''சிறு குடும்பம் உடைய ஒருவன்தான் நாட்டின் மீது உண்மையான தேசபக்தி கொண்டவனாக இருக்க முடியும். மனிதனுடைய சராசரி வாழ்க்கை நிலை உயரவும், வருமானம் பெருகவும்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்ற பெருந் திட்டங்களை அரசு தீட்டுகிறது. ஆனால் அவைகள் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறுவதில்லை. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முதலீட்டு மூலம் மனிதனின் சராசரி வருமானம் இன்னும் 5 சதவிகிதம் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் இரண்டரை சதவிகிதம் தான் உயர்ந்துள்ளது.

"மக்கள்தொகைப் பெருக்கத்தால்தான் இது போன்ற திட்டங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. இதனை மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும்படி இந்த இயக்கம் இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும்.''

இவ்விழாவில், குடும்பநலத் துறை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மக்கள் கல்வி அதிகாரி மெய்யப்பன், உதவி இயக்குநர் நல்லரசு, டாக்டர்கள் திருமதி கொடிமணி, திருமதி ராணி கந்தசாமி; திருமதி ஏஷியா, ஜி. சடைப்பா முத்து ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடும்ப நலத் திட்ட விளம்பரத்துறையில் புதிய சிந்தனைகளை உருவாக்குவதற்காக, சென்னை எழும்பூரில் 9-4-86-ல் நடைபெற்ற குடும்ப நல இலக்கியக் கருத்தரங்கத்தை சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு ஜி. டி. ஐயங்கார் துவக்கி வைத்தார். தமது உரையில், 'சிந்தனையாளர்கள் பங்கேற்கும் இச்சிரிய கருத்தரங்கம் மக்களின் மனப்போக்கினை மாற்றத் தக்கதாக அமையும்' என்றார்.

இக்கருத்தரங்கில் எழுத்தாளர்களும் கவிஞர்களும் கலந்து கொண்டனர். கவிஞர் காமராசன், திரு ஹேமா ஆனந்த தீர்த்தன், கவிஞர் மேத்தா, கவிஞர் மன்னர் மன்னன், திரு ஐசரி வேலன், திரு பால்யூ, மஞ்சுளா ரமேஷ், ஓவியர் ஜெயராஜ், திரு அலியூர் ரஹீம் ஆகியோர் பங்கேற்றனர்.

எழுத்தாளர் ஹேமா ஆனந்த தீர்த்தன், ஆண்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சையால் உடலும் உள்ளமும் நலமாக உள்ளன என்றும், தான் 30 ஆண்டுகளுக்கு முன்பே குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாகவும் தெரிவித்தார். 'எனவே அறுவைச் சிகிச்சை பற்றி ஆண்கள் அச்சப்படத் தேவையில்லை' என்றும் கூறினார்.

'தொலைக் காட்சியில் வருகிற விளம்பரதாரர் தரும் நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் குடும்ப நலக் கருத்து இடம் பெறச் செய்ய வேண்டும்' என்று திரு மன்னர் மன்னன் கருத்துத் தெரிவித்தார்.

கருத்தரங்கத்திற்குக் குடும்ப நலத் துணை இயக்குநர் திரு கோ. இராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு மெய்யப்பன் வரவேற்புரையாற்றினார். மக்கள் கல்வித் தகவல் அலுவலர் திரு அப்பர் சுந்தரம் நன்றி நவின்றார்.

நமது செய்தியாளர்




# ஓவியக்கலை வளர்க்கும் ஒப்பற்ற மன்றம்

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும் கைவினைக் கலை மன்றமாகிய ஓவிய நுண்கலைக்குழு, ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலைகளின் வளர்ச்சிக்காக, கலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. அவை வருமாறு:

**ஆண்டுதோறும் கலைக் கண்காட்சி நடத்துதல்:**

ஓவியம், சிற்பம் முதலிய கலைகள் - அதில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்கள் - அவர்களின் கலைப் படைப்புகள் - இன்றைய கலைச்சூழல் ஆகியவற்றைப் பற்றிய ஒரு பொது அறிவை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலுள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களிடமிருந்து கலைப்படைப்புகளை வரவேற்று, ஒரு கலைக்காட்சி அமைத்து வருகிறது. காட்சியில் மிகச் சிறப்பாக விளங்கும் கலைப்படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**தமிழ்நாட்டின் தலை சிறந்த கலைஞர்களைச் சிறப்பித்தல்:**

ஓவிய நுண்கலைக் குழு, ஆண்டுதோறும், தமிழ்நாட்டின் தலைசிறந்த கலைஞர்கள் இருவரைப் பாராட்டும் வகையில், பொன்னாடை போர்த்தி, பரிசுகள் வழங்கி, பெருமைப்படுத்துகிறது.

**கலையாசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்:**

தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளி மாணவர்களிடையே நுண்கலையறிவைப் பேணி வளர்க்கவும், புதிய அணுகுமுறை நுணுக்கங்களைக் கற்பிக்கவும் உதவும் வகையில், இத்திட்டத்தினைத் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு செயல்படுத்தி வருகிறது.

**செயல் விளக்கம்-சொற்பொழிவுகள்:**

பொது மக்களிடையே கலையறிவை மேம்படுத்தவும், இன்றைய கலை வளர்ச்சியினைத் தெரியப்படுத்தவும், மாவட்டந்தோறும், சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களைக் கொண்டு செயல் விளக்கங்கள் அளிக்கவும், சொற்பொழிவுகள் நடத்தவும், ஓவிய நுண்கலைக் குழு ஏற்பாடுகள் செய்து வருகிறது.

**கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகைகள்:**

சென்னை மற்றும் கும்பகோணத்திலுள்ள அரசு கலைத் தொழிற் கல்லூரிகளிலும் மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியிலும் மாணவர்களுக்கு, ஆண்டுதோறும் படிப்புதவித் தொகைகளும், இராசஸ்தானிலுள்ள ''பனசுதாலி கல்வி நிறுவனத்தில்'' சிறப்புப் பயிற்சி பெறச் செல்லும் மாணவர்களுக்கு உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**ஏற்பளிப்புப் பெற்ற கலை நிறுவனங்களுக்கு மானிய உதவி:**

ஓவிய நுண்கலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்நாட்டிலுள்ள கலைப்பணிகளுக்காக, அவைகளுக்கு ஓவிய நுண்கலைக் குழு, ஆண்டுதோறும் மானியங்கள் வழங்கி வருகிறது.

**'நுண்கலை'—நூல் வெளியீடு:**

ஓவிய, சிற்பக் கலைகளின் இன்றைய வளர்ச்சி - அதற்காகப் பணிபுரியும் தமிழ்நாட்டுக் கலைஞர்கள் - தமிழ்நாட்டின் பண்பாட்டு மேம்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள்கொண்ட 'நுண்கலை' என்னும் இதழினை, ஓவிய நுண்கலைக் குழு, ஆண்டிற்கு இருமுறை வெளியிடுகிறது.

**தமியர்-கண்காட்சி நடத்த மானிய உதவி அளித்தல்:**

தமியர் -கண்காட்சி நடத்த விரும்பும், தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கும், ஓவிய நுண்கலைக் குழு மானிய உதவி அளித்து வருகிறது.

மேற்காணும் திட்டங்களைத் தவிர, 'தமிழ்நாட்டுக் கலைஞர்கள் - யார் எவர்' புத்தகம் வெளியிடுதல், தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களைப் பற்றிய ''காணொலி (வீடியோ) ஒளிப்பதிவு செய்தல்'', அவர்களைப் பற்றிய நூல்கள் வெளியிடுதல் போன்ற திட்டங்களும் செயற்படுத்தப்பட உள்ளன.

**இளைஞர்கள் கலைக் காட்சி**

உலக இளைஞர் ஆண்டினை யொட்டி, 35 வயதுக்குட்பட்ட இளங் கலைஞர்களிடமிருந்து கலைப் படைப்புகளை வரவேற்று 'இளைஞர்கள்' கலைக் காட்சியினை ஓவிய நுண்கலைக் குழு நடத்தியது. காட்சியில் மிகச் சிறப்பாக விளங்கிய கலைப் படைப்புகளை உருவாக்கிய இளங் கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.





**நாட்டுக்குழை தம்பி—இந்த**
**நானிலத்தை எண்ணி!**
**வீட்டுக்குழை தம்பி—இங்கு**
**மீதிப்பெயர் எண்ணி!**

**—பாவேந்தர் பாரதிதாசனார்**

# இராமநாதபுர மாவட்டத்தில் கடன் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் ஆணையின்படி பிரிக்கப்பட்ட புதிய இராமநாதபுரம் மாவட்டம் கடந்த 15-3-85முதல் இயங்கி வருகிறது. இப் புதிய இராமநாதபுரம் மாவட்டம் பெரும்பாலும் கடலும், கடலைச் சூழ்ந்த பகுதியும் ஆகும். இது அடிக்கடி வறட்சிக்கோ வெள்ளத்திற்கோ இலக்காகும் பகுதியாகும். இப்பகுதி மக்கள், சுயமாக உழைத்து, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற சீர்மிகு கருத்துக் கொண்டுள்ளவர்கள் ஆவார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட முதன் முதலாக மாவட்டக் கடன் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் முன் வரைவு இம்மாவட்ட கடன் திட்டத்தில் அமைந்துள்ளது.

ரூ. 13 கோடியே 16 இலட்சத்திற்கான இராமநாதபுரம் மாவட்ட கடன் திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் வாலியா, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆய்வுக்கூட்டத்தில் வெளியிட்டார்கள். இக் கடன் திட்டம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தயாரித்ததாகும். இதில் பயிர்க் கடனுக்காக ரூ. 6 கோடியும், விவசாயக் கடனுக்காக ரூ. 2 கோடியே 76 இலட்சமும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நலிந்த பிரிவினருக்கு ரூ. 1 கோடியே 22 இலட்சமும்நீர்ப்பாசனவசதியைப் பெருக்குவதற்கு ரூ.98.34இலட்சமும் மீனவர்களுக்கு இயந்திரப் படகு, கட்டுமரம் வாங்க ரூ. 20 இலட்சமும், தொழில் வளர்ச்சிக்காக ரூ. 1 கோடியே 47 இலட்சமும், படித்த வேலையற்ற பட்டதாரிகளுக்குச் சுயமாக வேலை தொடங்க ரூ. 1 கோடியே 57 இலட்சமும், கிராமத் தொழில்களுக்கு ரூ. 25.43 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையில் பெரும் பகுதியை இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், பாண்டியன் கிராம வங்கியும், பாரத ஸ்டேட் வங்கியும் வழங்கும். இதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் 40 ஆயிரத்து 700 குடும்பங்கள் சேவை வாய்ப்புப் பெறும்

1986-ஆம் ஆண்டிற்கான மாவட்ட கடன் திட்டத்தினை வெளியிட்டுப் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் வாலியா, இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டதாவது: 'தற்போது வெளியிட்டுள்ள 1986-ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்டக் கடன் திட்டம் பழைய முறையை பின்பற்றித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கதர் கிராமத் தொழில் துறையின்மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைப் பொருட்கள் தொடர்பான தொழில்கள் பெருக்குவதற்கான 5 ஆண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 20 ஆயிரம் நபர்கள் மேலும் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள். இதனைக் கருத்துருவாகக் கொண்டு 1986-ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கடன் திட்டமும் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். இக்கடன் திட்டம் மாற்றி அமைக்கும் பணி இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். விவசாயிகளுக்கு வழங்குகின்ற பயிர்க் கடன்களை, காலத்தில் வழங்குதல் வேண்டும், பருவ காலத்தை மனத்திற்கொண்டு, இக்கடன் வழங்கப்படல் வேண்டும். இம் மாவட்டத்தில் மாங்கன்று நடுதல் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் ஊடு பயிராக மல்லிகை பயிரிடப்பட்டு வருகின்றது.

'டிரைசம்' மூலம் இதுவரை 370 நபர்கள் பயிற்சி பெற்றவர்கள். இவர்களுக்கு பிணைப்புத் திட்டத்தின் மூலம் சுயமாகத் தொழில் புரிய கடன் வழங்கப்படும் .

**கோ. தி. மோகன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுர மாவட்டம்**

மனைகள் மூலம் ஆண்டுதோறும் 40,000 கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், 4320 கால்நடைகளுக்கு வீரிய இனச் செயற்கை முறைக் கருவூட்டலும் அளிக்கப்பட்டு வருகின்றன.

சிறு பாசனத்தைப் பெருக்கும் வகையில் 4 அணைக்கட்டுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, சுமார் 400 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நல்ல வருவாய் அளிக்கக் கூடிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 ஊரக இளம் புழு வளர்ப்புப் பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டு, இதுவரை 200 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாதிரி மல்பரிச் செடி உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு, ஆண்டுதோறும் 10 சிறு விவசாயிகளுக்கு மல்பரிச் செடிகள் வழங்கப்பட்டு, ஆண்டுதோறும் 50 ஏக்கர் பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 6000 கிலோ பட்டு இழை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டக்கலைப் பணியை விரிவுபடுத்தும் நோக்கில் 1000 எக்டேரில் பழக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. தோட்டக்கலைப் பயிரை நவீன சாகுபடி முறையில் விளக்க 200 செயல் விளக்கத் திடல்கள் செய்து காட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் 7000 மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் 6500 மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 3,50,000 மனித வேலை நாட்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 45,000 எக்டேரில் ஆண்டுதோறும் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தரமான நிலக்கடலை விவசாயிகளுக்கு வழங்கிட வெள்ளாள விடுதியில் மாநில எண்ணெய் வித்துப்பண்ணை துவக்கப்பட்டு 1250 ஏக்கருக்கு எண்ணெய் வித்துக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 62 மெட்ரிக் டன் உற்பத்தியும், ரூ. 2.5 இலட்சம் கூடுதல் வருவாயும் கிடைக்கும் வாய்ப்புப் பெருகியுள்ளது.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 305 எக்டேரில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1985 -86-ஆம் ஆண்டில் 2,25,000 கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வன விரிவாக்க மையம் ஒன்று துவக்கப்பட்டு விவசாயிகளுக்குக் காடுகள் வளர்ப்புப் பற்றிய பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

**பால் வளம் பெருகிட....**

கால்நடை வளர்ப்பின் மூலம் தனி மனிதன் வருமானத்தையும் மாநில வருமானத்தையும் உயர்த்தும் வாய்ப்பினை அதிகரிக்க தமிழ்நாடு அரசு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் கண்டு செயலாக்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 3.2.1977 முதல் புதுக்கோட்டை மற்றும் கீரனூர் மண்டலங்களின் கட்டுப்பாட்டில் 50 கிளை நிலையங்களின் கீழ் 233 வருவாய் கிராமங்களில் செயல்பட்டு வரும் இத்திட்டம், உயரினக் கால்நடைகளின் விந்து சேகரித்துச் செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் கலப்பினக் கன்றுகளை உருவாக்கி, பால் உற்பத்தியைப் பெருக்குவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது.

1985-ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி இத்திட்டம் செயல்படும் கிராமங்களின் கால்நடைகளின் எண்ணிக்கை 1.7 இலட்சம். இதில் ஈனத் தகுந்த கால்நடைகள் 77,808 ஆகும். ஈனத் தகுந்த கால்நடைகளில்.39 சதவிகிதம் அதாவது 30,500 கால்நடைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் செய்ய இலக்காகக் கொண்டு 1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய 25,225 கால்நடைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது. இது இலக்கில் 82 சதவிகிதச் சாதனையாகும். சென்ற ஆண்டின் சாதனையைக் காட்டிலும் 10 சதவிகிதம் கூடுதல் சாதனை ஆகும். திரவ விந்து மூலம் நடைபெற்று வந்த செயற்கை முறைக் கருவூட்டல்



பிப்ரவரி 1986 முதல் 19 கிளை நிலையங்களுக்கு உறை விந்து வினியோகம் விரிவாக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1986-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய செயற்கை முறை கருவூட்டல் மூலம் பிறந்த கலப்பினக் கன்றுகள் எண்ணிக்கை 5366 ஆகும். இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 53,66,000. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 28 சதவிகிதம் அதிகமாகும்.

தரமற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்வதன் மூலம் தரமற்ற கால்நடைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். இந்நோக்கில் இவ்வாண்டில் 3470 காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. தக்க தருணத்தில் தடுப்பூசி போடுவதாலும், தகுந்த சிகிச்சை அளிக்கப்படுவதாலும், கால்நடை இழப்பைத் தவிர்க்கலாம். இவ்வாண்டில் சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகள் 66,249 ஆகும். குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை 22,730 ஆகும். தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 1,10,258. இப்பணிகள் சாதனை இலக்கையும் விஞ்சியுள்ளன.



## ஒரு சொல் கேளீர்!

**படித்தவன் உழ வேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பால் அறிவுப் பசியைத் தீர்க்க - உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்படவேண்டும்!**

—பேரறிஞர் அண்ணா

கால்நடை பராமரிப்பில் தீவனப் பெருக்கத்தின் அவசியத்தையும் மக்களுக்கு உணர்த்தி உயர் விளைச்சல் தரும் புல் துணுக்குகள், விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பிப்ரவரி '86 முடிய வழங்கப்பட்டு உள்ள புல் துணுக்குகளின் எண்ணிக்கை 9,37,500; வழங்கப்பட்டுள்ள விதை 4176 கிலோவாகும்.

பால் உற்பத்தியின் அதிகரிப்பை முக்கிய நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தின் செயலாக்க விளைவால், சென்ற ஆண்டைக்காட்டிலும் இவ்வாண்டில் பால் உற்பத்தி, கணிசமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டில் பால் உற்பத்தியின் விளவு 96,000 கிலோ; சென்ற ஆண்டின் பால் உற்பத்தி 72,344 கிலோ.

ஒவ்வொரு மாதமும் கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம் மற்றும் மலட்டுத் தன்மை நீக்க முகாம் நடத்தி, மக்களுக்கு இத்துறைப்பணிகள் பற்றி விளக்கியும் செயற்கை முறைக் கருவூட்டல், தடுப்பூசி போடுதல், ஆண்மைநீக்கம்செய்தல் போன்ற பணிகள் ஆற்றியும் திட்டப் பணிகள் சீரிய முறையில் செயலாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் இதுவரை நடத்தப்பட்டுள்ள மக்கள் தொடர்பு முகாம் 40. மலட்டுத் தன்மை நீக்க முகாம் 24.

இத்திட்டத்தின் கீழ் கன்று வளர்ப்பு மானியமும், தீவனப் பயிர்ப் பெருக்க மானியமும் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் கன்று வளர்ப்பு மானியமாக ரூ.1,30,522 மற்றும் தீவனப் பயிர்ப் பெருக்க மானியமாக ரூ 12,600 வழங்கப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மானியத் தொகை ரூ.21,76,700. இதில் 31.1.1986 வரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.17,85,352 ஆகும்.

விவசாயிகள் இத்திட்டத்தின் பலனை அடையவும், கால்நடை வளர்ப்பில் அவர்களுக்கு ஊக்கம் ஏற்படவும் ஆண்டுதோறும் கன்றுகள் பேரணி மற்றும் கால்நடைக்கண்காட்சி விழா எடுத்து, சிறந்த கால்நடைகளுக்குப் பரிசளிக்கப்படுகிறது.



## 50 ஆண்டுகளுக்குப் பிறகு அன்னவாசலில் புதிதாக சந்தை துவக்கம்

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் பேரூராட்சியில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் புதிய சந்தை துவக்கப்பட்டது.

புதிய சந்தையினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) திரு எம். அப்துல்லாஷா துவக்கி வைத்தார். விழாவிற்கு அன்னவாசல் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு இரா. சின்னத்தம்பி தலைமை தாங்கினார்.

# பொங்கி வரும் எண்ணெய் ஊற்று

நரிமணம் ஆயிரம் மக்கட் தொகையுள்ள சிறிய கிராமம். இது, தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்திய எண்ணெய் வள வரை படத்தில் இக்கிராமம் இடம் பெற்றுள்ளது. சோதனை உற்பத்தியில் நாளொன்றிற்கு 12,000 லிட்டர் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்துள்ளது. இதுவரையில் நரிமணத்திலிருந்து நாளொன்றிற்கு 12,000 லிட்டர் கச்சா எண்ணெய் மேலும் சுத்திகரிப்பதற்காகச் சென்னை சுத்திகரிப்பு நிலையத்திற்கு 35 எண்ணெய் கொள்கல வண்டிகளில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நரிமண கச்சா எண்ணெய்யில் கந்தகக் கலப்பு மிகக் குறைவாகக் காணப்படுவதால் இந்தியாவில் கிடைக்கும் கச்சா எண்ணெய்களில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கச்சா எண்ணெய் இலேசானதாகவும், மண்ணெண்ணெய் மணமுடையதாகவும் உள்ளது. சுத்திகரிப்புச் செலவு குறைவாக உள்ளதால் பொருளாதார ரீதியில் சிறந்தது. இப்பகுதி மக்களிடையே தொழிற்சாலைகள் அமைக்க ஏற்கெனவே எதிர்பார்ப்புக்களை உண்டு பண்ணியுள்ளது.

காவிரிப் படுகையில் எண்ணெய் தேடும் பணி இருபது ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. 1958-ல் புவியியல் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. 1963-ல் துரப்பண ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சில சமயங்களில் எண்ணெய் இருப்பதும், பின்பு ஒன்றும் இல்லாமல் இருப்பதும் பிரச்னைகளாக உருவெடுத்தன. 15 இடங்களில் துரப்பணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நரிமணம் பகுதி நம்பிக்கை அளிப்பதாக அமைந்தது.

நரிமணம் தவிர தேவூர் பகுதியிலும் 53 மீட்டர் ஆழ துரப்பணப் பணியை ரஷ்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் மேற்கொண்டனர். இந்தப் பகுதி கிணறு 3,500 மீட்டர் ஆழத்திற்குத் துரப்பணம் செய்யப்பட வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதைத் தவிர கோவில் கலப்பால் பகுதியில் மூன்று கிணறுகளை எண்ணெய், இயற்கை எரிவாயு குழு எடுத்துள்ளது.

இரண்டாம் கிணறு வறண்டு காணப்பட்டது.

மூன்றாவது கிணற்றிலுள்ள துரப்பணக் குழாய்கள் வெளியில் எடுக்கும் பணி முன்னேறி வருகிறது. கோவில்கலாப்பால் முதல் கிணறு பணி முடிவடைந்து கிறிஸ்மஸ் மர வடிவ எரிவாயு சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. இக்கிணற்றிலிருந்து கிடைக்கும் எரிவாயுவின் அளவு இன்னமும் மதிப்பிடப்படவில்லை.

**எண்ணெய் எவ்வாறு வெளிப்படுகிறது?**

உயர் அழுத்தத்தோடு துரப்பணப் பணி மேற்கொள்ளப்படும்போது எண்ணெய், திரவ வடிவில் தயாராகக் கிடைக்கும் என்று எல்லோராலும் நம்பப்படுகிறது. ஆயின் அவ்வாறு கிடைப்பதில்லை. புவியியல் ஆய்வு, புவி விஞ்ஞான, புவி உட்கூறுப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், ஹைட்ரோ கார்பன் படிவங்கள் அளவு கண்டறியப்படும். பின்னர் துரப்பணப் பகுதியும் ஆழமும் நிர்ணயிக்கப்படும். துரப்பணச் சாதனங்களைப் பொருத்த, ஒன்றரை மாதத்திலிருந்து இரண்டரை மாதங்கள் வரை பிடிக்கும்.



அப்போது 120-லிருந்து 140 வரையில் பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், களப்பணியாளர்கள், உதவியாட்கள் தேவைப்படுவர். ஒரு கிணறு தோண்டப்பட்ட பின்னர் துரப்பணக் கருவிகள் மற்றொரு கிணற்றுக்கு எடுத்துச் செல்லப்படும்.

எண்ணெய்க் கிணற்றின் ஆழம் நிர்ணயிக்கப்பட்ட பின்னர், சிமெண்ட், நீர் கலந்த கலவை இரண்டு குழாய்களுக்கிடையே செலுத்தப்படும். மேற்பரப்பிலிருந்து அதிக அழுத்தம் செலுத்தப்படும். கிணற்று மேற்பரப்பில் அழுத்தத்தை வெளியேற்றக் கட்டுப்பாட்டுச் சாதனம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். துரப்பணப் பணி மேற்கொள்ளும்போது 15லிருந்து 20 டன் வரையில் உயர் அழுத்தச் சக்தி பயன்படுத்தப்படும்.

எண்ணெய்க் கிணற்றின் முழு ஆழப்பணி முடிந்த பின்னர் ஹைட்ரோ கார்பன் கண்டுபிடிக்கும் பணி மேற்கொள்ளப்படும். இது மின்சார அளவீட்டு ஆய்வு என்றழைக்கப்படும். கோவில் கலப்பால் மூன்றாவது கிணற்றில் இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**கிறிஸ்துமஸ் மரம்:**

எண்ணெய்க் கிணற்றின்மீது காணப்படும் சாதனம் கிறிஸ்மஸ் மரம் என்றழைக்கப்படும். இச்சாதனத்தில் அழுத்த வால்வுகள் எண்ணெய் வெளியேறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும். கிறிஸ்துமஸ் மரத்திலிருந்து எண்ணெய் தானாக வெளியேறும். நரிமணத்தில் சோதனை உற்பத்தி துவங்கியுள்ளது. வெளிப்புறம் எப்போதும் குளிர்ச்சியாக வைக்கப்பட்டிருக்கும்.

எண்ணெய்யும் எரிவாயும் இணைந்து வெளிவரும் ஒரு குறிப்பிட்ட நிலையில் அவை தனித்தனியாகப் பிரிக்கப்படும். எண்ணெய் கொள்கலன்களில் சேமிக்கப்பட்டு பின்னர் சுத்திகரிப்பதற்காக எடுத்துச் செல்லப்படும். நரிமணம் எண்ணெய்க் கிணற்றிலிருந்து நாளொன்றிற்கு 4,000 கன மீட்டர் எரிவாயு வெளிப்படுகிறது. சிறிய அளவான இந்த எரிவாயு வர்த்தகத்திற்குப் பயன்படாததால், எரிவாயு எரிக்கப்பட்டுவிடுகிறது.

எண்ணெய் உற்பத்தியில் நாடு தன்னிறைவுப் பாதையில் மேலும் ஒரு மைல் கல்லைத் தாண்டியுள்ளது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**சி. பி. இராமநாதன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1982-83-ஆம் ஆண்டு முதல், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி மற்றும் திருவரங்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல், சிறுபாசனம், பட்டுவளர்ச்சி, காடுகள் வளர்ப்பு, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, எண்ணெய் வித்துக்கள், தோட்டக்கலை ஆகிய திட்டங்களை மிகச் சிறப்பாக வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தும் பொருட்டு 1982-83 ஆம் ஆண்டு முதல் 1985-86 ஆம் ஆண்டு முடிய ரூ. 250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள், திருந்திய நவீன சாகுபடி முறைகளைக் கையாள, செயல் முறை விளக்கத்திடல்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 300 மெட்ரிக் டன் கூடுதல் உற்பத்தியாகியுள்ளது. மேலும் 500 எக்டேரில் உயர்ரக சிறு தானியங்கள் மற்றும் 100 எக்டேரில் காய்கறி உற்பத்தியும் செய்யப்பட உள்ளது.

பயிர்களுக்குக் கோடையிலும் பாசன வசதி அளிக்க இதுவரை 37 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு சுமார் 1000 எக்டேர் கூடுதலாக வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆழ்குழாய்க் கிணறுகளின் மூலம் மணிக்கு 20,000 முதல் 40,000 காலன் தண்ணீர் பூமியிலிருந்து வெளிக் கொணர்ந்து வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 1500 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.



மைக்கேல்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணற்றின் மூலம் 73 விவசாயிகளுக்குச் சொந்தமான 50 ஏக்கரில் இரண்டு முறை கடலையும், மூன்றாம் போகச் சாகுபடியாக எள் மற்றும் சோளம் போன்ற பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படு முன்னர் 1 ஏக்கர் நிலத்தில் கடலைச் சாகுபடி செய்தால் ஆண்டு வருமானம் ரூ.1000 பெறுவதே மிகவும் சிரமமாக இருந்தது என்றும், தற்போது இரண்டு சாகுபடியில் கடலையும், மூன்றாம் சாகுபடியாகச் சோளம், எள் போன்றவைகளையும் பயிரிட்டு வருகிறோம் என்றும் மைக்கேல்பட்டி கிராம விவசாயிகள் கூறி மகிழ்ந்தனர்.

சுமார் 4000 எக்டேர் நீர் பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 2000 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். கால்நடை மருத்துவமனைகள் நான்கும், நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ஒன்றும் இத்திட்டத்தின் கீழ் துவக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவ




# பெரியார் மாவட்டத்தில் ஒரு நூலகம்

பவானி வட்டத்தில் உள்ளது அம்மாப்பேட்டை, இங்குள்ள கிளை நூலகத்தில் திரு. க. நடராசன் நூலகராகப் பணியாற்றி வருகின்றார். இவர் 'டி' கிரேடாக இருந்த இந்நூலகத்தின் தரத்தை 'பி' கிரேடாக உயர்த்தி உள்ளார்.

தேசத் தலைவர்கள் படங்கள்-11, சுவர்க் கடிகாரம்-1, மின் விசிறிகள்-3, அறிவிப்புப் பலகைகள்-8, எவர்சில்வர் குடிநீர்ப் பாத்திரம், டம்ளர், இரும்பு அலமாரி, மேசை, நாற்காலிகள், ஸ்டூல்கள், தபால் எடைபோடும் தராசு, புத்தகங்கள், டியூப் லைட்டுகள்-2, முதலிய ரூ. 10,000/- மதிப்புள்ள பொருட்களைப் பொது மக்களிடமிருந்து இந்நூலகத்திற்கு நன்கொடையாகப்பெற்றுள்ளார். இந்நூலகர், மேலும் நூலகப் புத்தகங்களை நன்கொடை மூலம் பைண்டு செய்துள்ளார். வார, மாதப் பத்திரிகைகளும் தொடர்ந்து நன்கொடையாகப் பெறப்பட்டு வருகிறது. நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு 5-சென்ட் இடம் பெறவும் முயற்சித்து வருகிறார்.

இந்நூலகத்தில் புத்தகங்கள் பொருள் வாரியாகச் சிறப்புற வைக்கப்பட்டுள்ளன. இதனால் வாசகர்கள் தேவைப்படுகிற புத்தகங்களை எளிதில் பெற முடிகிறது.

குழந்தைக்கென 'சிறுவர் பகுதி'யும் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்தின் சுத்தமும், அமைதியும், வசதிகளும் வாசகர்களை மேலும், மேலும் நூலகத்திற்கு வரத் தூண்டுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு, மரம் வளர்த்தல், சிறுசேமிப்பு, தண்ணீரைச் சேமித்தல், திருக்குறள், நூலகப் பணி ஆகியவற்றின் முக்கியத்துவங்களை வலியுறுத்தும் அட்டைகள் நூலகத்தின் சுவரின் அழகாக வைக்கப்பட்டுள்ளன. "ஒரு நூலகம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்" என்ற நியதியில் இந்நூலகம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் 'நூலக வார விழா'வின் போது நூல்கள் அறிமுகங்கள், புத்தகக் கண்காட்சி, சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன.

ஒரு சின்ன ஊரில் இந்த அளவிற்கு மக்கள் படிக்கத் தூண்டுகோலாக இருந்து வரும் நடராசன், நூலகத் துறையில் பட்டம் பெற்றவர். ஒரு பொது நூலகம் எப்படி நடத்தப்பட வேண்டும் என நடத்திக் காண்பிப்பவர். இந்த நூலகத்திற்கு மேலும் இருவர் உதவிக்கு வேண்டும் என்கின்றார்.

சு. சம்சுதீன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்

பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட அம்மாப்பேட்டையில் சுமார் 800 உறுப்பினர்களுடன் செயல்படும் கிளை நூலகத்தில், தற்சமயம் உள்ள புத்தகத்தின் எண்ணிக்கை 10 ஆயிரம். இங்குள்ள புத்தகங்கள் அனைத்திற்கும் அட்டை போட்டு பைண்டிங் செய்து கொடுத்தவர்கள் இவ்வூர்ப்பொது மக்கள் தான்!





# வளர்ந்து வரும் வட ஆர்க்காடு மாவட்டம்

இ.எஸ். தானியல் குணாநிதி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், வடஆர்க்காடு மாவட்டம்

'எல்லாரும் எல்லாமும் பெற
வேண்டும்—இனி
இல்லாமை இல்லாத நிலை
வேண்டும்.'

என்ற நிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும் பாடுபட்டு வருகின்றார்கள்.

சமூக நீதியையும், பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்கத்தில், மறைந்த இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 82-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் நாட்டுக்குப் புதிய இருபது அம்சத் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டம் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இத்திட்டம் துவக்கிய நாளிலிருந்து சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

20 அம்சத் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டில் அதாவது கடந்த ஆண்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நல்ல முறையில் அமல்படுத்தியதன் காரணமாக மாநிலத்திலேயே வட ஆர்க்காடு மாவட்டம் முதலிடம் பெற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ. 10 இலட்சம் பரிசுத் தொகையாக இம்மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது. இத்தொகையினைக் கொண்டு, இம்மாவட்டத்தில் நல்ல பல காரியங்களைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு என்பது ஒரு நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திஅவர்கள் நாட்டுக்கு அறிவித்த புதிய இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாகிய 'குடும்பநலத் திட்டத்தைக் கொண்டு அடிப்படையில் ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்புதல் வேண்டும்'' என்பது குறிக்கோள் ஆகும். இதன் அடிப்படையில் கடந்த ஆண்டில் 53,200 நபர்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 65,959 அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, மாநிலத்திலேயே வட ஆர்க்காடு மாவட்டம் முதல் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய அளவில் குடும்பநலத் திட்டத்தினை நிறைவேற்றியதில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றமைக்கு வட ஆர்க்காடு மாவட்டம் சீரிய பங்கினை ஆற்றியுள்ளது என்பதனைச் சுட்டிக் காட்டுவதில் பெருமையடைகிறேன். இவ்வாண்டும், முதல் இடத்தை அடைய தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சிறுசேமிப்பு:**

சிறுசேமிப்புத் திட்டங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டிற்கு ரூ. 599.30 இலட்சம் வசூலிக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இலக்கை மிஞ்சி ரூ. 746.32 இலட்சம் வசூலித்து மாநிலத்திலேயே முதல் இடம் பெற்ற மாவட்டமாக விளங்கியது. இதற்கென, சுழற்கேடயமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இம்மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும், இத்திட்டத்தின் கீழ் முதன்மை இடத்தைப் பெற முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஈட்டுறுதியுடன் இணைந்த ஒய்வு உதவிச் சிறப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 2 இலட்சத்து 75 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டு, மற்ற மாவட்டங்களைவிட 1 இலட்சம் உறுப்பினர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டு மாநிலத்திலேயே முதலிடத்தில் உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் இதரப் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குச் சமமாக உயர்வடையும்படி அனைத்து வழிகளிலும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில், பழங்குடியினர் மக்கள் தொகை 38,706 ஆகும். பழங்குடி மக்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கெனத் துணைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூபாய் 422.13 இலட்சம் ,பழங்குடியினர் மேம்பாட்டிற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ரூ. 39.50 இலட்சத்தில் பழங்குடியினர் நல்வாழ்விற்காகப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஜவ்வாது மலையில் அடங்கியுள்ள காவலூர் கிராமத்தில் விண்வெளி ஆய்வுக்கூடத்தினைத் திறந்து வைக்க இந்தியப் பிரதமர் அவர்கள் ஜனவரி 6-ந் தேதி வருகை தந்தார். இவ்வாய்வுக் கூடம் ஆசியாவிலேயே மிகப் பெரிய நிலையம் ஆகும். பழங்குடியினர் முன்னேற்றத்தினை விரைவுபடுத்த ஜமுனாமரத்தூர் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் செயல்பட்டு வருகிறது.

களும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், ஏற்படுத்தி,தொழில் வளர்ச்சியிலும் மிகுந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது. இம்மாவட்டம் தோல் பதனிடும் தொழிலில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. இதன் மூலம் தயாராகும் பொருட்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அன்னியச் செலாவணியைப் பெருக்குகிறது. பால் வளத் துறையிலும், வட ஆர்க்காடு மாவட்டம் மாநிலத்தில் ஒருசிறந்த மாவட்டமாகத் திகழ்கிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரியும், வேலூர்க் கோட்டையும், திருவண்ணாமலையில் அருள்மிகு அருணாச்சலேசுவரர் கோயிலும் சாத்தனூரில் சிறந்த அணைக்கட்டும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களாக அமைந்துள்ளன.

நமது நாட்டைப் பாதுகாக்கும் இராணுவத்தினர் அதிகம் பங்கு

வாங்க 8771 நபர்களுக்கு 88.97 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தொழில் வாணிப சேவை உதவித் திட்டத்தின் கீழ் 8323 நபர்களுக்கு மானியமாக ரூ.120.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 8503 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மானியமாக ரூ. 106.98 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் பயனடைந்த பெண்கள் 5367 ஆவர். தற்போது 982 இளைஞர்களுக்கு 18 தொழில்களில் சுயவேலை வாய்ப்புப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதில் 175 நபர்கள் பயிற்சி முடித்து உள்ளார்கள்.

**விவசாய உற்பத்திப்பெருக்குத் திட்டம்**

விவசாய உற்பத்திப்பெருக்குத் திட்டத்தின் கீழ் 7860 நபர்களுக்கு மானியமாக ரூ. 59.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் பயனடைந்த் ஆதிதிராவிடர் குடும்பங்கள் 2012 ஆகும்.



**ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம்:**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள 12 நகராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 10 நகராட்சிகளில் ரூ. 382.66 இலட்சத்தில் 49 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொழில்துறையில் இம்மாவட்டத்தில், மத்திய அரசின் தொழில் நிறுவனமாகிய பாரத கன ரகமின் தொழிற்சாலையும், சிப்காட் நிறுவனம் மூலம் சிறு தொழில்

பெற்றிருக்கும் வட ஆர்க்காடு மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் வளர்ந்து வருகிறது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

28.2.86 முடிய 18,196 நபர்களுக்கு ரூ.237.42 இலட்சம்மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. இதில் கால்நடை பராமரிப்பதற்காகக் கறவை மாடுகள், ஆடுகள்

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்கு இம்மாவட்டத்திற்கு ரூ. 378.55 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

இந்த ஒதுக்கீட்டில் ஊரகப் பகுதியில் உள்ள பேரூராட்சி எல்லைக்குச் சமுதாயத்திற்குப் பயன் பெறும் சொத்துக்களை ஏற்





படுத்தி பல திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

மீதம் உள்ள ரூ. 313.31 இலட்சத்தில் 36 ஊராட்சி ஒன்றிய எல்லைக்கும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 160 எக்டேர் பரப்பளவில் தரிசு நிலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரம் நடுவதற்குத் தேவையான பைஞ்செடிகள் உற்பத்தி செய்யவும், மார்ச்சில், ஏரிகளில் கருவேலன் நடவும் ரூ.63.75 இலட்சம் செலவிட திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு 900 குடியிருப்புக் கட்டடங்கள் கட்டித் தரத்திட்டமிடப்பட்டு 900 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

111 சமுதாய நலக்கூடங்களும், 108 முதலமைச்சர் சத்துணவு மையங்களுக்கான சமையலறைக் கட்டடங்களும், 22 அரிசி மற்றும் சிமெண்ட் கிடங்குகளும் , கட்ட தீர்மானிக்கப்பட்டு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. இது வரை ஒரு பக்கா கட்டடம கூட இல்லாத 14 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு , பக்கா கட்டடங்களும், 13 நீர்த்தேக்கத் தொட்டிகள், 9 குடிநீர்க் குழாய் இணைப்புகளும், 16 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும் கட்ட, திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஊரகவளர்ச்சித் திட்ட கோட்டத் தலைமையிடங்களில் தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், பராமரித்தலுக்குத் தேவையான எந்திரங்களைப் பாதுகாத்து வைக்க வசதியாக 5 கட்டடங்கள் கட்டவும், கால் நடை துணை நிலையங்கள் வைக்க வசதியாக 5 கட்டடங்கள் கட்டவும், கால்நடை துணை நிலையங்கள் தவிர ஒன்றாக ஐந்து கட்டிடங்கள் கட்டவும், 55 இணைப்புச் சாலைகள் மற்றும் ஆதிதிராவிடர் மலை வாழ்மக்கள் பகுதிக்கும் கல்வர்ட்டுகள் கட்டவும் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் அடிப்படை வசதிகள் செய்ய 6 கட்டடங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இதர பலவகை வேலைகள் சேர்த்து இதுவரை 1956 புதிய வேலைகள் செய்ய, திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தில் 2117 மெ.டன் அரிசி வழங்கப்பட்டது. 325.43 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை செய்யப்பட்ட வேலைகளுக்கான கூலியாகவும், வாங்கப்பட்ட தளவாடப் பொருட்களும் ரூ.332.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு (1985-86) 204 வேலைகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன. இவற்றில் 154 பணிகள் பாசன வசதியைப் பெருக்க ஏரிகள், கால்வாய்கள், மதகுகள் ஆகியவையாகும். 94 சாலைகள் கருங்கல், சல்லி போடுதல், தார்ச்சாலை அமைத்தலாகும். 56 பணிகள் கசிவு நீர்க்குட்டைகள் ஏற்படுத்தி பாசனக் கிணறுகள் தண்ணீர் பெறவசதி செய்வதாகும். இது தவிர்த்து ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு தொகுதி வீடுகள் 1255 கட்ட அனுமதிக்கப்பட்டு1255 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. மற்றும் 119 பாசனப் பணிகள், 53 மேல் சாலைகளும் 53 கசிவு நீர்க் குட்டைகள் முடிக்கப்பட்டன. ரூ.25.28 இலட்சம் செலவு செய்து 1.86 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கி ஒவ்வொரு வட்டாரத்திலும் 200 எக்டேர் நிலப்பரப்பளவுக்கு குறையாமல் மரம் நடுவதற்குத் தேவையான பைஞ்செடிகள் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு 255.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 268.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதுவரை 22.43 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாகப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மனறத்தின் சார்பில் 1985-86-ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது வழங்கும் விழா சீரும் சிறப்புமாகச் சென்னை மாநகரில் நடைபெற்றது. 27.4.86 அன்று, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, மேதகு ஆளுநர் திரு.எஸ்.எல். குரானா அவர்கள் தலைமை தாங்கினார்.

பிழைத்துக் கொள்ளும். அவ்வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டதே தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை. அதன் ஓர் அங்கமான இயல் இசை நாடக மன்றம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் குறிப்புணர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்போதுள்ள அலுவலகம் போதுமான இடவசதி உள்ளதாக இல்லை.

சிறந்த கலைஞரான தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். தேசிய ஒருமைப்பாட்டுணர்வைப் பாதுகாப்பதில் இந்தியப் பிரதமர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் பெரிதும் முயற்சியோடு செயல்பட்டு வருகிறார்கள். அரசியல் வாதிகள் மேடையேறி-கருத்தரங்கம் நடத்தி ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பதைவி - இப்படிப்பட்ட

# கலைமாமணி

## விருது வழங்கும் விழா



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்துவைத்து, விருது பெற்ற கலைஞர்களுக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்நாடு இயல் இசைநாடக மன்றத் தலைவர் கவிஞர் வாலி வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''ஒரு நாட்டின் மொழியும் கலையும் மேம்பட்டால், அந்த நாட்டின் பண்பாடு தானே



எனவே, இங்கே திறந்து வைக்கப்படும் படங்களையெல்லாம் மாட்டத்தக்க தாகவும் நூலகம் இயங்கத் தக்கதாகவும் இடவசதியோடு கூடிய பெரிய கட்டிடம் அளித்து ஆதரிக்க வேண்டும்.''

### கலைமாமணி விருது

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தாம் தலைமை உரையாற்றுகையில்,

''இங்கே விருதுபெறும் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்தவரே மிகச்

கலைஞர்கள் மூலம் - கலைகள் மூலம் வளர்ப்பது எளிதாக இருக்கும் என்பது எனது கருத்து'' என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் திரு அ.ச.ஞானசம்பந்தன் (இயற்றமிழ்க் கலைஞர்), நாகர்கோவில் திரு.கே.மகாதேவன் (இசைக் கலைஞர்), திரு.சி.கே.சியாம்சுந்தர் (கஞ்சிராக் கலைஞர்), திருவாரூர் திரு. தி. சுப்பிரமணிய தேசிகர் (இறையருட் பாடற் கலைஞர்), திருமதி.என்.எஸ்.









ஜெயலட்சுமி (பரதநாட்டிய ஆசிரியை), திரு.ராஜேஷ் (திரைப்பட நடிகா), செல்வி. எஸ். அம்பிகா (திரைப்பட நடிகை), திரு.கே.ஜே.யேசுதாஸ், (திரைப்படப் பின்னணி பாடற் கலைஞர்), திரு. கங்கைஅமரன் (திரைப்பட இசையமைப்பாளர்), திரு.கே.

திரு.எஸ்.கே. கரிக்கோல்ராஜ் (நாடக நடிகர்), திருமதி ஜி.டி. தாராபாய் (இசை நாடக நடிகை), திரு.பி.எஸ்.சிவானந்தம் (நாடக தயாரிப்பாளர்), நாகூர் திரு. அம்பிஐயர் (மிருதங்கக்கலைஞர்), கவிஞா திரு வானம்பாடி என்கிற சுந்தரேச துரை (நாடகப் பாட

வேணுகோபால் பிள்ளை (1896-1985), நடிக மேதை எம்.கே. ராதா (1910-1985), நாதசுர மேதை திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை (1905-1986), திரைப்படத் தயாரிப்பாளர் ஏ. எல்.சீனிவாசன் (1923-1978), நாடக ஆசிரியர் டி.என்.சுகி



நாராயணன் (கரக-காவடிக் கலைஞர்) ஆகியோருக்குக் 'கலைமாமணி' விருதுவழங்கப்பட்டது.

### பொற்கிழி வழங்கல்

முன்பே 'கலைமாமணி' விருது பெற்றவர்களான திரு. வி.எஸ். முத்துசாமிப் பிள்ளை (பரதநாட்டிய ஆசிரியர்), கவிஞர் திரு. பூவை செங்குட்டுவன் (நாடகப் பாடலாசிரியர்), திருமதி ஷோபா (நாடக நடிகை), திரு.முருகேசக் கவிராயர் (நாடகப் பாடலாசிரியர்), ஏ.சண்முகசுந்தரப் புலவர் (நாடக நடிகர்), திரு. ஏ. கே. வீராச்சாமி (நாடக நடிகர்), திருமதி எம்.கே. கமலம் (இசை நாடக நடிகை), திருமதி கோமளலட்சுமி (இசை நாடக நடிகை).

லாசிரியர்), திருமதி என்.விஜயகுமாரி (நாடக நடிகை) ஆகியவர்களுக்குப் பொற்கிழி -மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களால் வழங்கப்பட்டது.

இவர்கள் எல்லோருடைய வாழ்க்கை வரலாறுகளை மேடையில் நின்று டாக்டர் பத்மாசுப்பிரமணியம், திரு பூரணம் விஸ்வநாதன், டாக்டர் கே.சமரசம் ஆகியோர் படித்தறிவித்தார்கள்.

### படத்திறப்பு

விழா மேடையில் -பரதநாட்டிய மேதை திருமதி ருக்மிணி தேவி (1904-1986), இயற்றமிழ் மேதை மகாவித்வான் மே.வீ.

சுப்பிரமணியம் (1917-1986) திரைப் படப் பாடலாசிரியர் டி. சி.வடிவேலு நாயக்கர் (1890-1954), நாடக நடிகர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி (1902-1947), நாடக நடிகர் டி.கே.சுந்தரராவ் ஆகிய பத்துப் பேர்களின் திருவுருவப் படங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

1985-86ஆம் ஆண்டின் சிறந்த கலை நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்'திற்கான பரிசை திரு.பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் பெற்றுக்கொண்டார். சிறந்த நாடகக் குழுவாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட 'யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்ஸ் 'சுக்



கான பரிசை திரு.ஒய்.ஜி.பார்த்த சாரதி பெற்றுக்கொண்டார்.

**நாவலர் சிறப்புரை**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

“மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால், தமிழக அரசுமூலம் இதுவரை 672 கலைஞர்பெருமக்கள் ‘கலைமாமணி’ விருது பெற்றிருக்கிறார்கள். 133 பேர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. 1957 நலிந்த கலைஞர்களுக்கு இதுவரை இந்த இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. 176 பழம் பெருங்கலைஞர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சிறந்த கலை நிறுவனங்கள் 12 பரிசு பெற்றிருக்கின்றன. சிறந்த நாடகக் குழுக்களாக இதுவரை 4 தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசளிக்கப்பட்டிருக்கின்றன.

''தண்ணீரும் காவிரியே, தார் வேந்தன் சோழனே, மண்ணாவதும்சோழமண்டலமே...' என்பார்கள். அப்படிப் புகழ்வாய்ந்த தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஐந்து கோடி ரூபாய்த் திட்ட மதிப்பில் உருவாகச்செய்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களுடையது ஆகும். பல் கலைக் கழகக் கட்டடம் த-மி-ழ் நா-டு என ஐந்தெழுத்து வடிவிலே அமைக்கப்படும். விமானத்திலே செல்லுவோர், மேலிருந்து பார்த்தாலும் தமிழ்நாடு என்கிற பெயர் வடிவிலேயே கட்டடங்கள் காட்சியளிக்கும். இதற்காக 1000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது.

''அண்மையில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் உலகத்தமிழ்ச் சங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது. ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்றான் பாரதி. அதைச் செயல்படுத்தும் வகையிலே உலகத் தமிழ்ச்சங்கம் செயல்படும்.''

**நன்றியுரை - கலை நிகழ்ச்சிகள்**

விருதுபெற்ற கலைஞர்களின் சார்பில்-நடிகர் திரு ராஜேஷ், நடிகை செல்வி அம்பிகா, பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், நாகர்கோயில் திரு. கே.மகாதேவன் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், அதன் செயலாளர் திரு.வி.எஸ்.ராகவன் நன்றியுரையாற்றுகையில் அம்மன்றத்தின் ஊழியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

விழா நிகழ்ச்சிகளின் இறுதியாக ஜப்பானிய மாணவி செல்வி யுயோமிகோ டனாகா, கலாசேத்ராவைச் சேர்ந்த திருமதி என்.எஸ்.ஜெயலட்சுமி ஆகியோரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து, தமிழ்நாடு சிறப்புக் காவல் ஐந்தாவது அணியைச் சேர்ந்த திரு.கே.நாராயணனின் கரகம் - காவடியாட்ட நிகழ்ச்சியும் பின்னர் திரு கங்கை அமரன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

தனது துணைவியார் திருமதி ஜானகி அம்மையாருடன் வருகை தந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், கலை நிகழ்ச்சிகளையெல்லாம் இறுதிவரை இருந்து கண்டுகளித்தார்.

- **நமது செய்தியாளர்.**





# உன்னாட்டம் ஒரு புதையல்



அம்பாரி கட்டி இருக்கும்—கண்ணே
ஆனையொரு பத்து இருக்கும்!
ஆளுஅம்பு கூட இருக்கும்—கண்ணே
அன்னாடம் நெய்யி மணக்கும்!

மாடுமனை நூறு இருக்கும்—கண்ணே
மச்சுவீடு ரொம்பி இருக்கும்!
கன்னுக்குட்டி துள்ளி நடக்கும்—கண்ணே
தட்டுத்தட்டா தங்கம் இருக்கும்!

ஏலக்கா வாசம் மணக்கும்—கண்ணே
ஏழுஊரு வாயைப் பொளக்கும்!
வேட்டி, சேலை கோடி இருக்கும் கண்ணே
வேணமட்டும் பணம் இருக்கும்!

ஊருக்குள்ளே பேரு இருக்கும்—கண்ணே
ஒய்யார நடை நடக்கும்!
உள்ளுக்குள்ளே குறை இருக்கும்—கண்ணே
ஓயாமே மனஞ் சலிக்கும்!

ஓயாமே மனஞ் சலிக்கும்—கண்ணே
ஒருகவலை தினம் அரிக்கும்!
ஒருபிடி சோறு வெறுக்கும்—கண்ணே
உன்னபடி புசல் அடிக்கும்!



உன்னாட்டம் ஒரு குழந்தை—கண்ணே
உலகிலே அவர்க் கில்லையே!
பொன்னாட்டம் மகனைக் கொஞ்ச—கண்ணே
பூமியிலே பொசிப் பில்லையே!

கட்டியொரு முத்தம் கொடுக்க—கண்ணே
குட்டிப்பையன் ஒர்த்தன் இல்லியே!
தொட்டு ஒரு முத்தம் கொடுக்க—கண்ணே
குட்டிப்பொண்ணு ஒண்ணு இல்லியே!

ஏழையின்னு என்னைச் சொல்லுறார்—கண்ணே
ஏழையாடா நானு கண்ணே!
உன்னாட்டம் ஒரு புதையல்—கண்ணே
உலகிலே கண்ட பின்னே!

—அரசு மணிமேகலை

# நடப்பதில் உலகச் சாதனை

தொடர்ந்து இடைவிடாது நடப்பதில் தமிழர் ஒருவர் உலகச் சாதனை நிகழ்த்தியுள்ளார். இதுவரை ஏற்படுத்தப் பட்ட உலக ரிக்கார்டை இவர் முறியடித்துள்ளார்.



வீரபத்திரன்

காஞ்சிபுரத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கைத்தறி அலுவலராகப் பணியாற்றும் திரு.க.வீரபத்திரன், 11.1.86 சனிக்கிழமை காலை 7.35 மணிக்கு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு.ஆர். ஆறுமுகம், இ.ஆ.ப., தலைமையில், திரு.மலைச்சாமி, இ.ஆ.ப., மற்றும் கோ-ஆப்டெக்ஸ் தலைவர் திரு.அனகாபுத்தூர் இராமலிங்கம், எம்.எல்.சி., முன்னிலையில், தொடர் நடைப்பயணம் ஆரம்பித்தார். சென்னை அண்ணா நகர் மேற்கில், மொகப்பேறு ரோடு, பாடி ரோடு, கட்டிங் ரோடு, ஏழாவது அவெனியூ வழியாக நடந்து, 16.1.86 வியாழக்கிழமை காலை 7.35 மணிக்கு முடித்தார். இப்படி 120 மணி நேரம் தொடர்ந்து 541 கி.மீ. தூரம் நடந்து உலகச் சாதனை புரிந்துள்ளார் இவர்.

இதற்கு முன், இங்கிலாந்து வீரர் டாம் பென்சன் (Tom Benson) பிரிஸ்டன் என்ற இடத்தில், 1982ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் நாள் ஆரம்பித்து, ஜூலை 3ஆம் நாள் முடித்து, 147 மணி ஒரு நிமிடத்தில் 476 கி.மீ. தூரம் நடந்து உலகச் சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இவர் இடம் பெற்றுள்ளார்.

தமிழ் வீரர் திரு.வீரபத்திரன் தொடர் நடைப் பயணம் தொடங்கியதும் மழை பிடித்துக் கொண்டது. கொட்டும் மழையில் குடைபிடித்துக்கொண்டு நடந்தே இந்த அரிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். குளித்தல், ஆடை மாற்றுதல், டர்பண்டைன் எண்ணெய் தேய்த்தல், நிருபர்களுக்குப் பேட்டியளித்தல் ஆகியவைகளுக்காக மொத்தம் 1½ மணி நேரம் ஓய்வெடுத்துக் கொண்டுள்ளார்.

கடல் நீச்சல், பின்னால் நடப்பது, தண்ணீரில் மிதப்பது, ஒற்றைக் காலில் நிற்பது, தொடர்ந்து கைதட்டுவது ஆகிய இந்த ஐந்து கலைகளிலும் உலக சாதனை நிகழ்த்த இவர் உறுதி பூண்டுள்ளார்.

காஞ்சிபுரம் அலுவலகத்தில் பகலில் அலுவல் பார்ப்பதும், இரவில் காஞ்சியைச் சுற்றி நடப்பதும், காஞ்சி - உத்திரமேரூர், காஞ்சி-சென்னை இப்படிப் பல ஊர்களுக்கு நடந்து சென்று வருவதுமாகக் கடுமையான பயிற்சி மேற்கொண்டார்.

**மு. முத்துக்காளத்தி, எம்.ஏ.,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கல்பட்டு மாவட்டம்,**

உலகச் சாதனை நிகழ்த்தியதும், இவரது கால்கள் யானைக் கால்கள் போல் வீங்கிவிட்டன. அந்தத் தொல்லையைக் கூட பொருட்படுத்தாமல் நடந்ததால் தான், இன்று [illegible] சாதனையை நிகழ்த்தியுள்ளார் திரு வீரபத்திரன்.

**தமிழகத்தின் உலகச் சாதனைகள்**

(1) திருச்சி மாவட்டம், சிவப்பூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கிராமப்புற வளர்ச்சி அதிகாரியாக வேலை பார்க்கும் திரு.வி. ஜெயராமன், 18.12.85 வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு, ஆரம்பித்து ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு, 54 மணி நேரம் தொடர்ந்து கைத்தட்டி முடித்து கொண்டார்.

ஒரு நிமிடத்திற்கு சராசரி 160 தடவை கை தட்டினார். ஒரு மணி நேரத்தில்5 நிமிடம் ஓய்வு எடுத்துக் கொண்டார். முதல் 15 மணி நேரம் ஓய்வெடுக்கவில்லை. 54 மணி நேரத்தில் 270 நிமிடம் (4½ மணி நேம்) ஓய்வெடுத்துள்ளார்.

இவர் வயது 30. மதுரை மாவட்டம். பெரியகுளம் வட்டத்தில் உள்ள லட்சுமிபுரத்தைச் சேர்ந்தவர் இவர்.

(2) திரு.ஆர்.சண்முகம் என்ற கான்ஸ்டேபிள் 1984ஆம் ஆண்டில் சென்னை மெரீனா கடற்கரையில் தண்ணீரில் 83 மணி நேரம் மிதந்து சாதனை புரிந்துள்ளார்.

(3) கோயம்புத்தூர் சத்திய மங்கலத்தைச் சேர்ந்த திரு.ரவி என்பவர், 34 மணி நேரம் ஒற்றைக் காலில் நின்று உலகச் சாதனை நிகழ்த்தி, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

## சூரியசக்தி மூலம் சிகிச்சை!

ஆஸ்த்மா, நிமோனியா, நரம்பு மண்டல நோய்கள் முதலியவற்றினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சுமார் 300 க்கும் அதிகமான நோயாளிகள், தாஷ்கெண்டில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்திச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தனர். ஒரு முனைப்படுத்தப்பட்ட சூரிய கிரணங்களும், மற்ற சிகிச்சை முறைகளும், அவர்கள் முழு குணம் பெற உதவின.

"மூட்டுக்களில் கடுமையான வலியுடன் நான் சேர்க்கப்பட்டேன். நடமாடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. எனக்கு 18 முறை சூரிய ஒளிச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று மருத்துவர்கள் தீர்மானித்தனர். 10வது முறை சிகிச்சை பெற்றவுடனேயே என் வலி பெரிதும் குறைந்தது. சிகிச்சையின் முடிவில் எனக்கு வலியே இல்லை. முழங்கால் மூட்டுக்களில் படிந்திருந்த உப்புக்களைக் கரைக்க, சூரிய சக்திச் சிகிச்சை உதவியது என்பது, சில மாதங்களுக்குப் பின் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து தெரிந்தது. நான் மீண்டும் வேலைக்குச் செல்லும் நிலையில் இருந்தேன்" என்கிறார் ஒரு ரஷ்யப் பொறியாளர்.

—சோவியத் செய்திக் கட்டுரை





# திராட்சையில் தேமல் நோய்

திராட்சை ஒரு இலாபகரமான பயிர். இருப்பினும் திராட்சை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள், 1. சாகுபடி செய்யப்படும் ஆரம்ப காலத்தில் குழிதோண்டி செடி நடுவதற்கும், பந்தல் அமைப்பதற்கும் ஆகும் அதிகச் செலவு. 2 போதிய நீர்ப் பாசன வசதி இல்லாதது. 3. பூச்சி, நோய்களினால் உண்டாகும் அதிகச்சேதமும், அவைகளை நிவர்த்தி செய்வதற்காக ஆகும் செலவும் ஆகும்.

**நோய்கள்**

திராட்சையில் அநேக நோய்கள் சேதம் விளைவித்தாலும் சாம்பல் நோய், அடிச்சாம்பல் நோய் எனப்படும் அடித்தேமல் நோய், பறவைக்கண் நோய் எனப்படும் ஆந்தரக்னோஸ் நோய் ஆகியவை அதிக அளவில் சேதமுண்டாக்குகின்றன. ஆந்தரக்னோஸ் நோயை விவசாயிகள் ஆந்திரா நோய் என்றும் சொல்வதுண்டு. இந்நோய்களுள் திராட்சைக்கு அதிகம் சேதம் விளைவிப்பது அடிச்சாம்பல் நோய்தான். ஏறத்தாழ 70 சதம் சேதம் இந்நோயினால் ஏற்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த வாரம் ஒருமுறை மருந்தடிக்க வேண்டியுள்ளது. இன்னும் சில நேரங்களில் முக்கியமாக மழைக் காலங்களில் தினந்தோறும் மருந்தடித்தாலும் இந்நோயை முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் செலவுதான் கூடுகிறது.

**அடித்தேமல் நோய்**

பிளாஸ்மோபாரா விட்டிகோலா எனப்படும் ஒரு பூஞ்சாளத்தினால் அடிச்சாம்பல் நோய் உண்டாகிறது. மழைக்காலத்தில் இந்நோயின் பெருக்கம் அதிகமாக இருக்கும். திராட்சை இலைகள் கொழுந்து இலையிலிருந்து மாறி வளரும் பருவத்தில் இந்நோயின் தாக்குதல் அதிகமிருக்கும். நன்றாக முதிர்ந்த இலையில் அடிச்சாம்பல் நோயின் சேதம் இருப்பதில்லை. பொதுவாகக் காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது இந்நோயின் தீவிரம் அதிகமாக இருக்கும். காற்றில் ஈரப்பதம் 70-85 சதவிகிதம் இருப்பின் இளவயது இலைகளையும், 80-100 சதவிகிதம் இருப்பின் முதிர்ந்த இலைகளையும் இந்நோய் தாக்கும். பகலில் இருப்பதைக் காட்டிலும் இரவில் அடிச்சாம்பல் நோய் அதிகமாகப் பரவும். உஷ்ணம் குறைவாக (13°Cலிருந்து 33°C வரை) இருந்தால் இந்நோய் கடுமையாக இருக்கும். அதாவது 25°C உஷ்ணம் பகலில் இருந்தால் அடிச்சாம்பல் நோயின் அறிகுறியை நாம் கண்டிப்பாக எதிர்பார்க்கலாம்.

**நோயின் அறிகுறிகள்**

அடிச்சாம்பல் நோய்,திராட்சை வேர்களைத் தவிர ஏனைய பாகங்கள் அனைத்தையும் தாக்குகிறது. முக்கியமாக இலைகளை அதிக அளவில் தாக்குகிறது. நோயின் கடுமை அதிகமாக இருக்கும்போது இலைகள் அனைத்தும் கீழே கொட்டிவிடுவதுண்டு. பூக்களையும், பிஞ்சுகளையும், இலைக்காம்புகளையும், கொடிகளில் கணுக்களுக்கு இடையேயுள்ள பாகத்தையும், நுனித்தளிர்களையும் இந்நோய் தாக்குகிறது. இதனால் கொடியின் வளர்ச்சி பாதிக்கப்படும். இந்நோயின் ஆரம்பக் கட்டத்தில் இலைகளின் மேல்பாகத்தில் இளம் மஞ்சளான நிறத்தில் அங்கங்கே புள்ளிகள் தோன்றும். இலைகளிலுள்ள பச்சையம் இந்நோயினால் சேதமாவதனால் மஞ்சள் நிறம் தோன்றுகிறது. மறுநாள் அந்த மஞ்சள் புள்ளிகளுக்கு நேர் கீழே இலைகளின் அடிப்பாகத்தில் திட்டுத் திட்டாக வெண்மையான சாம்பல் படிகிறது. நோயின் தீவிரம் அதிகமாக இருக்கும் பொழுது இலைகளின் மேல் பாகத்திலுள்ள மஞ்சள் நிறம் இளஞ்சிவப்பு நிறமாக மாறி காய்ந்து விடுகிறது. மேலும் இலைகள் பிடிப்பு இல்லாததனால் இலைக் காம்பிலிருந்து கீழே விழுந்து விடுகின்றன. இதனால் திராட்சையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூலும் குறைந்து விடுகிறது.

கொடிகளையும், இளந்தளிர்களையும் இந்நோய் தாக்கும் பொழுது திசுக்கள் பாதிக்கப்பட்டு பழுப்பு நிறத்தில் குழிகள் தோன்ற ஆரம்பிக்கும். இதனால் வளர்ச்சி குன்றி விடுகிறது. மேலும் வலுவில்லாததனால் ஒடிந்துவிடுவதுமுண்டு. இதே மாதிரி பழுப்பு நிறக்குழிகள் குலைகளின் காம்பிலும், காய்களின் காம்புகளிலும் தோன்றுகின்றன. பிஞ்சுகள் முற்றி, காய்களாக மாறும் பருவத்தில் இந்நோய் தாக்கப்பட்டால் காய்களின் மீது சாம்பல் படிந்து விரைவில் காய்கள் வாடி வதங்கிவிடும். காய்கள் வளர்ச்சியடைந்தபின் தாக்கப்பட்டால் காய்கள் பழுக்காமல் பழுப்பு நிறத்துடன் காணப்படும். இதனால் காய்கள் அழுகிவிடுவதுமுண்டு.

**நோய் உண்டாவதற்கான காரணங்கள்**

1. திராட்சைத்தோட்டங்களில் பந்தல் ஆறு அடிக்கும் குறைவாகத் தாழ்வாக இருக்கும் சமயத்தில் பந்தலுக்குக் கீழேயுள்ள காற்று மண்டலத்தின் ஈரப்பசை மிக அதிகமாக இருக்கும். இதனால்

அடிச்சாம்பல் நோயின் தாக்குதல் ஏற்படும்.

2. திராட்சைப் பந்தலைச் சுற்றித் தடுப்பு இல்லாததனால் வெளிக் காற்றின்மூலம் அடிச்சாம்பல் நோய் உண்டாவதற்கான பூஞ்சாளங்கள் காற்றினால் பந்தலுக்குள் பரவி திராட்சையைத் தாக்கும்.

3. மழைக்காலங்கள், மேகங்கள் அதிகமாக இருந்து வானிலை மப்பும் மந்தாரமுமாக இருக்கும் போது, உஷ்ணம் குறைந்து, காற்றின் ஈரப்பசை அதிகமாவதனால் பூஞ்சாளக் கிருமிகள் விரைவில் பெருகி, சேதமுண்டாக்கும்.

4. குளிர் காலத்தில் இலைக் கொடிகளின் மீது பனி படர்வதனால் பூஞ்சாளங்கள் விரைவில் பரவுகின்றன.

5. முதிர்ந்த இலைகளில் சுண்ணாம்புச்சத்து அதிகமாகவும், சாம்பல் சத்து குறைவாகவும் இருப்பதனால் அடிச்சாம்பல் நோய் தாக்குவதில்லை. ஆனால் இளவயது இலைகளில் சுண்ணாம்புச்சத்து குறைவாக இருந்து சாம்பல்சத்து அதிகமாக இருப்பதனாலும் அடித்தேமல் நோய் தாக்குதல் தீவிரமாக இருக்கும்.

**திராட்சை இரகங்களின் எதிர்ப்புத் தன்மை**

பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் 17 வகை திராட்சை இரகங்கள் பயிரிடப்பட்டு அவைகளின் பலன் ஆராயப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் மாதம் நடப்பட்ட செடிகள் இப்போது பந்தல் முழுவதும் படர்ந்து வளர்ச்சிப் பருவத்தில் உள்ளது. சென்ற அக்டோபர் மாதத்தில் அடிக்கடி பெய்த மழையினால் திராட்சையில் அடித் தேமல் நோயின் சேதம் அதிகமாக உள்ளது. இளந்தளிர்களிலும், இளவயது இலைகளும் இருப்பதனால் அடிச்சாம்பல் நோய் அதிகமாகப் பரவியிருந்தது. சாதாரணமாக இச்சமயத்தில் ஏனைய தோட்டங்களில் திராட்சைக் கொடிகள் கவாத்து செய்வதற்குத்தயாரான நிலையில் இருக்கும். அதனால் இலைகள் யாவும் முதிர்ந்து இருக்கும். பொதுவாக முதிர்ச்சியடைந்த இலைகளை அடிச்சாம்பல் நோய் தாக்குவதில்லை. புதிதாகத் தோன்றும் இலைகளையே இந்நோய் அதிக அளவில் தாக்கும். மழையினால் வளர்ச்சி அதிகமாகி புதிய இலைகள் நிறையத்தோன்றியதனால் அடிச்சாம்பல் நோய் இத்தோட்டத்தில் அதிகமாக இருந்தது. இரகங்களுக்குத் தக்கவாறு நோயின் வீரியம் காணப்பட்டது. காந்




தாரி, அனாப்-இ-சாகி, பச்சை திராட்சை, அர்காவதி ஆகிய இரகங்களில் அதிக அளவிலும், பெங்களூர் புளூ, பன்னீர் திராட்சை இரகங்களிலும் குறைவாகவும் காணப்பட்டது.

**தடுப்பு முறைகள்**

அடிச்சாம்பல் நோயை முற்றிலும் கட்டுப்படுத்த 1% போர்டோக் கலவையைத் தெளிக்க வேண்டும். கொடிகள் வளரும் சமயத்தில் 1% போர்டோக் கலவையைத் தெளிக்கக்கூடாது.

ஏனெனில் கொடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். கொடி வளர்ச்சிக்காலங்களில் 0.2% ஜிராம் அல்லது ஜினாப் அல்லது 0.2% டெல்டான் அல்லது 0.2% குமான் எல். போன்ற மருந்துகளைத் தெளித்து இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். மேற்படி மருந்துகளை இலைகளின் மீது முழுவதும் படரும்படி தெளிக்க மருந்து திரவத்துடன் ஒட்டுத் திரவத்தையும் கலந்து அடிக்க வேண்டும். இதனால் மருந்து அடிப்பதன் முழுப்பயனையும் பெறலாம். நான்கு லிட்டர் மருந்துக் கலவைக்கு ஒரு மில்லி என்ற அளவில் ஒட்டுத்திரவத்தைத் தெளிக்கலாம். ஒட்டுத்திரவங்கள் ஃபைட்டோவெட், டிபால், சேண்டோவிட் போன்ற பல்வேறு பெயர்களில் கடைகளில் கிடைக்கின்றன.

போர்டோக், கலவையைத் தவிர ஏனைய மருந்துகளுடன் (ஜிராம், ஜினாப், டெல்டான்) ஒட்டுத்திரவம் சேர்த்துத்தெளிக்க வேண்டும். நான்கு லிட்டர் மருந்துக் கலவைக்கு ஒரு மில்லி என்ற அளவில் ஒட்டுத் திரவத்தைச் சேர்த்துத்தெளிக்கவேண்டும்.

ஆகவே, திராட்சையைப் பயிரிடும் விவசாயிகள் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த சரியான மருந்தைத் தேர்ந்தெடுத்து தெளிப்பதனால் இந்நோயை முழுவதும் கட்டுப்படுத்தலாம். போர்டோக்கலவை 1% தெளிக்கும்போது நல்ல பலன் கிடைக்க வாய்ப்புள்ளது. ஒரு சதவிகித போர்டோக் கலவை திராட்சைக் கொடி வளர்ச்சிக் காலத்தில் தெளிக்கக்கூடாது. இம்மாதிரி நேரத்திலும் மேலும் ஒரு சதவிகித போர்டோக்கலவை தயாரிக்கத் தெரியாத விவசாயிகள் இருப்பின் 0.2% ஜிராம், ஜினாப், டெல்டான் மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளித்து அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**தகவல் :**

**இரா. செ. அழகிய மணவாளன்,**
**ஆர். இராமசாமி,**
**அ. நாராயணன்,**
**மண்டல ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**
**பையூர்**
**தருமபுரி மாவட்டம்.**

## அமெரிக்காவில் ஆரம்பப் பள்ளிகளிலும் கம்ப்யூட்டர் கல்வி

*அமெரிக்காவில் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமன்றி பெரும்பாலான ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் 'கம்ப்யூட்டர் கல்வி' கற்பிக்கப்படுகிறது.*

*அமெரிக்காவிலுள்ள மொத்தம் 50 மாநிலங்களில், 25 மாநிலங்கள் இவ்வாறு ஆரம்பப் பள்ளிகளிலேயே கம்ப்யூட்டர் கல்வி போதனையை அளிக்கின்றன; 1982-83ம் ஆண்டில் இருந்ததைவிட 400 சதவீதம் இது அதிகரித்துள்ளது.*

*கம்ப்யூட்டர் தொழில்நுட்பப் படிப்பில் தேறினால்தான் கல்லூரிகளில் சாதாரணப் பட்டமே அளிக்க முடியும் என்று 9 மாநிலங்கள் நிபந்தனை விதித்துள்ளன. நியூயார்க் மாநிலத்தில் பள்ளி மாணவர்கள் 13 வயதை எட்டுவதற்குள் ஓராண்டுக்காலக் கம்ப்யூட்டர் தொழில்நுட்பப் படிப்பில் தேர்ச்சி பெற்றாக வேண்டும்.*

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**



மாணவர் பக்கம்:

# சுடராய் ஒளிர்வோம்!





நத்தை ஆமை நாமில்லை
நடப்போம் ஆடிப் பாடிடுவோம்!
வித்தைக் குரங்கின் வாலில்லை
விண்ணில் ஏறிப் பறந்திடுவோம்!



சுத்தம் தூய்மை அறிந்திடுவோம்!
சோம்பல் அறவே களைந்திடுவோம்
கத்தும் கடலைக் கடந்திடுவோம்
கன்னித் தமிழால் உயர்ந்திடுவோம்!



பத்தும் நூறும் பலகலையும்
பாங்காய் முயன்று பயின்றிடுவோம்
நித்தம் நித்தம் திருக்குறளை
நெஞ்சில் பதித்து வளம்பெறுவோம்!



புத்தன் காந்தி போற்றிடுவோம்
புனிதத் தொண்டு புரிந்திடுவோம்
சொத்தை யில்லை நாங்களென
சுடராய் ஒளிர்ந்து பயன்படுவோம்!

—சின்ன மாணிக்கம்

## எங்கே, சொல்லுங்கள் பார்ப்போம்!

—வி. ஜெயந்தி—



1. நத்தை, மண்புழு ஆகியவைகளில் ஆண்-பெண் இனத்தைப் பிரித்துணர்வது எப்படி?
2. முதலைக்குக் கண் இமைகள் எப்படியிருக்கும்?
3. வண்ணத்துப் பூச்சிக்கு ருசி அறிய உதவும் உறுப்பு எது?
4. அறவே செவியுணர்வு இல்லாத ஜீவராசிகள் உண்டா?
5. வண்டின் ரீங்காரம் வாயினால் எழுப்பப் படுவதா?
6. ஈக்களுக்கு ஒரு நிறத்தைப் பிடிக்காது; அது எது?
7. கொசுக்கள் எந்த நிறத்திடம் நெருங்காது?
8. நான்கு கால் பிராணிகளில் நீந்தத் தெரியாதது உண்டா?
9. முதன் முதல் ராக்கெட் விடப்பட்டது எப்போது - யாரால்?
10. ஹர்த்தால், முதலில் கடைப் பிடிக்கப் பட்டது எப்போது?
11. அமெக்காவில் 'குழந்தைகள் தினம்' எனக் கொண்டாடப்பட்டது எது?
12. கண்பார்வையற்றோர் படிக்கும் பிரெய்லி எழுத்து முறையைக் கண்டுபிடித்தவர் யார்?









(விடை அடுத்த பக்கம்)

# மொழி பல கற்போம்!

நாம் தமிழர்கள்; தமிழ் நமக்குத் தாய்மொழி; அம்மொழியைப் பழுதறக் கற்று நாமெல்லாம் பண்படவேண்டும்.

அதே நேரத்தில் மற்றெந்த மொழிகளின் மீதும் நமக்குப் பகை கூடாது. நாம் மற்ற மொழிகளை மதித்தால், நம் மொழியை மற்றவர்கள் மதிப்பார்கள்.

நம்முடைய தமிழ்மொழி தொன்மைப் புகழ் வாய்ந்த மொழி என்பதற்கு நிறைய வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றன. அத்தகைய அருமை பெருமை மிக்க நம் மொழிப் புகழுக்கு ஊறு விளைவிக்காத வரை, எல்லா மொழிகளையும் நாம் மதிப்பதில் தவறில்லை. அப்படி மதிப்புத் தருகிற காரணத்தால், நம்முடைய மொழிக்குத் தனிமதிப்பு மென்மேலும் ஏற்படும்; நமக்கும் அதனால் தனி மரியாதை கிடைக்கும்.



திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல்

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' படைத்த கால்டுவெல் வரலாறு இதற்கு மிகச் சரியான எடுத்துக்காட்டு ஆகும்.

அயர்லாந்து நாட்டில் பிறந்து, ஸ்காட்லாந்து நாட்டில் வளர்ந்து, ஆங்கில மொழிப் புலமையில் சிறந்து விளங்கியவர் கால்டுவெல்.

லண்டனில் இருந்த சமயத் தொண்டர் சங்கத்தில் சேர்ந்து பலமொழிகளையும் அறிந்து பி. ஏ. தேர்வில் முதன்மை பெற்றார் இவர். பிறகு தமது 23வது வயதில் ஆன்னமேரி என்ற கப்பல் மூலம் 1838ல் சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னையிலிருந்து 400 மைல் தொலைவில் உள்ள திருநெல்வேலிக்கு அவர் நடந்தே செல்லலானார். வசதியின்மை இதற்குக் காரணம் அல்ல. போகிற வழியிலெல்லாம் உள்ள தமிழ் மக்களோடு பேசிப் பழகி, தமிழ்மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளவேண்டும் என்கிற ஆர்வத்தாலேயே அவர் அப்படி நடந்தார்.

இடையான் குடியை அடைகிற வரை பல ஊர்களிலும் தங்கி அவர் தமிழ் அறிந்தார்.

கிறிஸ்தவ மத பிரச்சாரத்திற்காகத்தான் அவர் இங்கு வந்தார். ஆனால், தமிழ் இலக்கணம் அவரைக் கவர்ந்தது. அதன் காரணமாகத்தான் கால்டுவெல் ஒப்பிலக்கனம் உருவாக்கி நமக்குத் தந்தார். இதற்காகவே தமிழின் இனமாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலான பல மொழிகளையும் ஆர்வத்தோடு அவர் கற்றார். இவ்வகையில் அவருக்குப் பேருதவி புரிந்தார் அவருடைய மனைவி எலிசா.

வேற்று நாட்டுக்காரர் ஆனாலும், திருநெல்வேலியின் வரலாற்றை நமக்கு முதன்முதல் எழுதித் தந்தவர் அவர்தான். அதற்காகவே சென்னை அரசு அவருக்கு அப்போது ஆயிரம் ரூபாய் பரிசளித்தது.

முப்பத்து மூன்றாண்டுகள் அரும்பாடு பட்டு இடையன்குடியில் கால்டுவெல் ஒருகோயில் கட்டினார். கடைசிக் காலத்தில் கொடைக்கானலில் வாழ்ந்த போது மறைந்த அவரது உடல் இடையன்குடிக்குக் கொண்டு வரப்பட்டு அங்குதான் அடக்கம் செய்யப்பட்டது.

— கு. வசந்தா

## தெரிந்து கொள்ளுங்கள்!

1. நத்தையிலும் மண்புழுவிலும் ஆண் பெண் எனத் தனித்தனியே கிடையாது. எல்லாம் ஒன்றே!
2. முதலைக்கு இமைகளே கிடையாது. தூங்கும் போதும்கூட கண்களைத் திறந்தபடியே உறங்குவது அது!
3. தனது கால்கள் மூலமே ருசி அறியக் கூடியது வண்ணத்துப் பூச்சி!
4. ஈயும் எறும்பும் அறவே கேட்கும் சக்தி அற்றவைகளாகும்!
5. வேகமாக அசையும் இறக்கைகளின் மூலம் ஏற்படுவதே வண்டின் ரீங்காரம்!
6. நீல நிறத்தை ஈக்களுக்கு அடியோடு பிடிக்காது!
7. வெள்ளை மஞ்சள் ஆகிய நிறங்களைக் கண்டால் கொசு நெருங்காது!
8. ஒட்டகத்திற்கு நீச்சல் தெரியாது!
9. முதன்முதல் 1232ல், சீனர்களால் ஒகோடை என்கிற மங்கோலிய மன்னனின் படைமீது ராக்கெட் விடப்பட்டது!
10. காந்தியடிகள் 'ரௌலட்' சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் துவக்கிய போதுதான் முதன்முதல் இந்தியாவில் ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது!
11. மேதினம் தான் அமெரிக்காவில் 'குழந்தைகள் தினம்' என ஆரம்ப காலத்தில் கொண்டாடப்பட்டது!
12. பார்வையற்றோர் படிக்க உதவும் பிரெய்லி எழுத்து முறையை முதலில் கண்டு பிடித்து அறிவித்தவர் பிரான்ஸ் நாட்டவரான லூயி பிரெய்லி.



# மனம் வலிக்கிறது

— இனியவன்



'இந்தக் கதையும் திரும்பி வந்துவிட்டதா?....'' -மெலிதான அதிர்ச்சியால் அவன் பாதிக்கப்பட்டான்; இதயத்தில் இலேசான வலி தெரிந்தது.'எதனால் இப்படி நேர்கிறது?''

புரியவே இல்லை!

அனாவசியமாகத் தபால்காரரை மனத்துள் திட்டினான்; உதவி ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் வெறுத்தான்.

பள்ளிப் பருவத்தில் - புனை பெயர் வைத்துக் கொள்ளத் தெரியாத காலத்தில் - பத்திரிகைகளுக்கு அனுப்பும் முறை சரிவரப் பிடிபடாத தருணத்தில் அவன் எழுதிய முதல் கதையே பரிசுக் கதையாக வந்ததே!



அதைத் தொடர்ந்து, எத்தனை எழுத்தோவியங்கள், எவ்வளவு போட்டிகளில் வென்றிருக்கின்றன!

எழுத யாரும் கற்றுத் தந்ததில்லை. எழுதியது எதுவும் திரும்பி வந்ததில்லை!

'எங்கோ -எண்ணியதும் எட்டாத தொலைவில் அமர்ந்து கொண்டு - எப்படி என்னால் இவ்வளவு சாதிக்க முடிந்தது? இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் ,நான்கு சுவர்களுக்கு உள்ளான ஒரு குறுகிய உலகில் இருந்தபடியே நான்தான் எவ்வளவு வெற்றி கண்டிருக்கிறேன்! அனுபவங்கள் அதிகமற்ற அந்த இள வயதில் -எப்படியோ, வாழ்வின் அம்சங்களையும், பிரச்சினைகளையும் ஒரு தார்மீகக் கனவோடும் இலட்சியத்தோடும் அலசி......'

ஓ... எவ்வளவு புகழுரைகள்! எவ்வளவு போற்றுதல்கள்!

அவனாகக் கதை அனுப்பிக் காத்திருக்கிற காலம் போய், 'கதை தேவை' என்று பத்திரிகைகளே கேட்டு எழுதுகிற காலம் வந்து மலைக்க வைத்து...

'உம்...' -அந்தப் பொன்னேடுகள் நெஞ்சில் புரளவும், வேதனை மிகுந்தது.

கடந்த பத்து வருட இலக்கியப் பயணத்திற்குப் பிறகு, இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி, ஏதோ கொஞ்சம் உலக அறிவு சேர்ந்திருப்பதாகக் கருதும் இந்தக் காலக் கட்டத்தில் அவனுக்கு அடுக்கடுக்காய்த் தோல்விகள்!

சிறுகதையில் தொடங்கி, இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் புகுந்து புகழ் பெற்றவனால்-இப்போது எதையும் அச்சேறும்படி செய்ய முடியவில்லையே ,ஏன்?

அவன் எழுத்தில் சத்தியத்தின் ஆத்மா புலனாவதாகச் சொல்வார்களே! மண்மணம் கமழ்வதாக மனமாரப் பாராட்டுவார்களே!

'இப்போது, எல்லாருக்கும் என்ன ஆயிற்று? உண்மையும், மனிதாபிமானமும், நாட்டு வாசனையும் இனி தேவையே இல்லையா?' - நெஞ்சில் கனல் மூளத் தொடங்கியது.

* * *

அவனுடைய ரசிகை ஒருத்தி கடிதம் எழுதியிருந்தாள்: 'உங்கள் கதை இல்லாத இதழ் நிலவில்லாத வானம் மாதிரி இருக்கிறது. எதனால் இந்த நிலை? ஒரு வேளை, காலத்துக்கு ஏற்ப எழுதாததாலா? அப்படி யானால் உடனே நீங்கள் மாற வேண்டும் என்பது என் அன்பான வேண்டுகோள். இலக்கியம், அந்தந்த நாளின் யதார்த்தங்களைப் பிரதிபலித்துக் காட்டுவதில் தப்பே இல்லை. உங்களைப் போன்ற நல்ல எழுத்தாளர்கள் இப்படித் தேங்கிவிடக் கூடாது. உங்கள் படைப்புக்களுக்காக, என்னைப் போல் எத்தனையோ ஆயிரம் பேர் ஏங்கிக் கிடப்பார்கள். எனவே, பத்திரிகைகளோடும், பதிப்பகங்களோடும் ஒரளவு காம்ப்ரமைஸ் செய்து கொண்டு...'

சில சுவைஞர்கள், அவனைத் தேடி வந்து ஏறத்தாழ இதே கருத்தை வலியுறுத்தினார்கள்.

அவனுடைய நெருங்கிய நண்பர்களும் அவனுக்குப் 'புத்தி' சொல்லாயினர்.

ஆரம்பத்தில் எரிச்சலாக இருந்தது; கோபம் கூட வந்தது.

'பெயர்கள் மாடர்னாக இருக்கட்டும்; கொஞ்சம் 'செக்சியாக' எழுதுங்கள். மார்க்கட் பிக்கப் ஆகிவிடும்? என ஒரு வாசகர் 'உபதேசம்' அனுப்பியிருந்தார்.

மரபில் பிடிவாதமாயிருந்த ஓர் எழுத்தாளர்கூட அதற்கு உடன்பாடாய்ப் பேசினார்: ''கடைகளில் பார்த்தீர்களா, எவ்வளவு தரக் குறைவான பத்திரிகைகள்-வார்னீஷ் அட்டைகளோடு பளபளக்கின்றன? இந்தப் போக்கை நான் தவறு என்று சொல்ல மாட்டேன்! மக்கள் விரும்புகிறார்களே சார்? அவர்களின் ரசனையை அனுசரித்து, எழுதியே ஆக வேண்டும். அப்போதுதான் இங்கே எழுத்தாளர்களாக நிற்க முடியும். நீங்கள் வேண்டுமானால், மற்றவர்கள் போல்ஒரேயடியாகக் கீழே இறங்க வேண்டாம். ஆனாலும், கொஞ்சம் புதுமையாக எழுத முயலலாம் அல்லவா?....''

அவன் எல்லையில்லாத சங்கடமடைந்தான்: 'எது புதுமை?...




ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு லம்பாடிப் பெயர் வைப்பதா? அவளுக்கு அல்ப உடை அணிவிப்பதா? அவளைச் சிகரெட் புகைக்க விடுவதா? போதையோடு ஆங்கிலம் பிதற்றச் செய்வதா? எல்.எஸ்.டி.யிலும், மசியுவானாவிலும் மிதக்கிற ஒரு 'லாங் ஹேர்' வாலிபன் அல்லது கோணல் குணமுள்ள ஒரு குறுந்தாடிக்காரன் - அவளை 'ஹாய்...' என்று அழைத்து அணைப்பதா? அவள், ஏதோ அஜீரணத்துக்கு மாத்திரை சாப்பிடுகிற மாதிரி அபார்ஷனுக்கு மாத்திரை விழுங்குவதா? கடைசிக் காலத்தில் ஓர் அப்பாவியை மணப்பதா? அப்புறமும் துரோகம் விளைவிப்பதா? கொலைகாரி ஆவதா?''...

—ஒவ்வொரு நாளும் அவன் குமைந்து கொண்டிருந்தான். அதே சமயம், அவனையும் அறியாமல் அவன் இசைந்து கொண்டும் இருந்தான்.

* * *

ஒரு பெரிய இடைவெளிக்குப் பிறகு, பிரபல வார இதழ் ஒன்றில் அவன் கதை வெளியாகியிருந்தது....

பல பேர் அவனைப் பாராட்டினார்கள்...

சில பேர் அவனிடம் வருத்தம் கொண்டு கண்டித்தும் எழுதியிருந்தார்கள்.

அப்படி ஒன்றும் அது மோசமான கதை இல்லை. 'நவீனமாக எழுத வேண்டும்' என்கிற முனைப்போடு உட்கார்ந்தானே தவிர, பழகிய தடத்தில் தான் பேனா ஓடியது...

எப்படியோ, சிரமப்பட்டு, மண்பாதைக்குத் தார் போட்டான். இயல்பான மனித முகங்களுக்குப் பொய் முகங்கள் பூட்டினான். அங்கங்கே கூச்சமும், உறுத்தலுமாய்க் கொஞ்சம் கவர்ச்சியான விஷயங்களைத் தெளித்தான். எதிர்பாராத முடிவு அமைய வேண்டும் என்பதற்காகச் செயற்கையாய்ப் பாடுபட்டான்...

அதற்குத்தான் எவ்வளவு வரவேற்பு!

ஆனால், அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் மீறி, மிகச் சிலரின் எதிர்ப்புக் குரல்களே மேலோங்கி வாட்டின.

அதிலும், எழுத்தாளர் இதயதாசனின் உரிமை அன்புடன் கூடிய கடித வரிகள்-உள்ளத்தின் மிக நுண்ணிய பகுதியில் ஊடுருவி வருத்தின.

'உங்கள் பேனா இப்படிப்பட்ட கதையை எழுதலாமா? தொடக்க காலத்திலிருந்து உங்களைக் 'கவனித்து' வருகிறவன் என்கிற வகையில், நீங்கள் சறுக்கிச் சாக்கடையில் விழுவதை என்னால் ஏற்க முடியவில்லை..ஓ... சின்ன வயதிலேயே எவ்வளவு பண்போடும், பொறுப்போடும் எழுதியிருக்கிறீர்கள், நீங்கள்! இப்போது என்ன ஆகிவிட்டது, உங்களுக்கு? இனி இப்படித்தான் எழுதமுடியும் என்றால், உடனே பேனா உழவை நிறுத்துங்கள். கலப்பை உழவில் மும்முரமாக ஈடுபடுங்கள்....'

—வாழ்க்கையே வெறுக்கிற மாதிரி இருந்தது, அவனுக்கு.

இதயதாசனிடம் அவனுக்கு ஓர் அலாதியான பற்று உண்டு. சென்ற பத்தாண்டுகளில், அவர் ஆறு பத்திரிகைகளில் பணி புரிந்திருக்கிறார்.

அவனுடைய கதைகளை உடனுக்குடன் அச்சேற்றுவதில் அவருக்கு அளவற்ற அக்கறை இருந்தது. அவ்வப்போது அவனுடைய புகைப்படத்தையும், வாழ்க்கைக் குறிப்பையும் வெளியிட்டு அவன் வளர்ச்சிக்கு எவ்வளவோ உதவியிருக்கிறார்.

இப்போது, அவர் எந்த இதழிலும் இல்லை. அச்சகம் ஒன்றில் பிழை திருத்திப் பிழைப்பு நடக்கிறது.

''உங்கள் கதைகள் உன்னதமாய் இருக்கின்றன. அதற்கு, அலட்டல் இல்லாத நடை ஒரு காரணம். அந்த அமைதி என்றென்றும் யாருக்கும் அலுக்காத ஒன்று. இலக்கியத்தை நிலை நிறுத்த, ஆரவாரமில்லாத நடையமைதி மிகவும் முக்கியம்.



மேலும், உங்கள் மொழியழகு, மண் மணம் கமழ வாழ்க்கையை வரைந்து காட்டும் நேர்த்தி, இவையே உங்களுடைய தனிச் சிறப்புக்கள். இந்தப் பாணியை விட்டுவிடாதீர்கள் '' என்று, பார்க்கவாய்க்கும் போதெல்லாம் வலியுறுத்துவார் இதயதாசன்.

'அவர் அப்படிச் சொல்லிச் சொல்லியே, என்னை ஒரே பாதையில் போகச் செய்துவிட்டிருக்கிறார்! அதனால் அல்லவா பத்திரிகைகள் புறக்கணித்துவிட்டன!' என்று அலுத்துக் கொண்டான், அவன்.

* * *

இதயதாசனைச் சந்தித்த சமயம், அவன் கேட்டான்: ''இப்போது எந்தப் பத்திரிகை யோக்கியமாய் இருக்கிறது? எந்த எழுத்தாளர் பண்பாட்டை மீறாமல் எழுதுகிறார்? எந்த வாசகர்..''

அவர் வெற்றிலை - சீவல் மென்றபடியே சிரித்தார்: ''பல குடும்பப் பத்திரிகைகள் மாறிப் போனது உண்மைதான். இலக்கியப் பத்திரிகைகள் என்று நடத்துகிறவர்கள்கூட, யதார்த்தம் என்ற பெயரில் சோரம்போவது மெய்யே. ஆனால், அதற்காக நீங்கள் உடைந்து போக வேண்டியதில்லை. புரிகிறதா?..''என்று கேட்டு மேலும் சிரித்தார்.

''உங்களுக்குத் தெரிய நியாயமில்லை, குமாரி காமினி, செல்வி ஸ்வப்னா, மிஸ் ஜானி என்கிற பெயர்களில் எழுதுகிறவர்கள் யார் யார் என்று தெரிந்தால் நீங்கள் தாங்கமாட்டீர்கள்! இவர்கள் எல்லாருமே, ஒருகாலத்தில், 'தரமான எழுத்தாளர்கள்' என்று புகழப்பட்ட பிரபலங்கள் தான். பண ஆசையால், திடீரென்று 'புஷ்பவதிகளாகிப் புடைவை கட்டிக்' கொண்டிருக்கிறார்கள். இப்படியாகி ஒரு புகழ்ப் போதையை நீங்கள் பெற வேண்டுமா? அதனால் வரும் பணம் உங்களுக்கு அவசியம்தானா?.'' என உணர்ச்சிவசப்பட்டுப் பேசியவர் மறுபடி சீவலை எடுத்தார்.

''இன்னொரு முறை இப்படிக் கேட்காதீர்கள். எவனாவது எப்படியாவது எழுதட்டும். நீங்கள், கடைசிவரை நீங்களாகவே இருங்கள். புல்லாங்குழல் மிழற்றத் தெரிந்தவர் கிடாருக்குப் போவானேன்? இதுவும் சாதகம் மறந்து, அதுவும் சரியாய் வாசிக்கப்படாமல் போவதில் எனக்குச் சம்மதமில்லை!'' என்றவாறு வெற்றிலையை மடித்தார்.

''புல்லாங்குழலுக்கு வாய்ப்பு இல்லாத நிலையில், கிடாரைப் பயன்படுத்திக் கொள்வது தானே புத்திசாலித்தனம்?...'' என்று குறுக்கிட்டான், அவன்.

''அந்தப் பச்சோந்தித்தனம் உங்களுக்கு வேண்டாம். நீங்கள் ஒரே நிறத்தில் இருங்கள். 'இனி எழுதவே வாய்ப்பில்லை' என்றால் கூட, நீங்கள் முடிந்தபின்னும் தரமான ரசிகர்களால் பேசப்படுவீர்கள்!'' என்று இரண்டாவது சுருளை வாயில் திணித்தார் இதயதாசன்.

அவனுக்கு வியப்பாக இருந்தது: 'இவரால் எப்படி இவ்வளவு உறுதியாக இருக்க முடிகிறது? கற்பு, பொற்பு பற்றிப் பேசுகிற இலக்கணம் வழுவாத கதைகளைத் தம்மால் முடிந்த வரை எழுதியவர்-பத்திரிகைகள் புறக்கணித்த நிலையில் மௌனமாகச் சமாளித்துவிட்டாரே! தம்முடைய பெயரை அடிக்கடி அச்சில் பார்க்க முடியாதது பற்றி இவர் வருத்தப்படவே இல்லையே! இந்த மன உறுதி நமக்கு ஏன் ஏற்படவில்லை?

சஞ்சலத்துடன் நடக்கையில், சாரிசாரியான பத்திரிகைகள்....

'இப்போதெல்லாம், கடைகளில் பத்திரிகைத் தோரணங்களை எவ்வளவு அழகாக அமைக்கிறார்கள்!...'

பருவப்பெண்......இளமை விருந்து...சிவப்பு விளக்கு..வசந்த இரவு...பாவை மேனி...

'சே!...இந்தப் பத்திரிகைகள் எல்லாம் வந்தல்லவா மக்களின் ரசனையை மாற்றிவிட்டன?.... 'இவற்றால் நம் விற்பனை பாதிக்குமோ?' என்று அஞ்சியல்லவா நல்ல பத்திரிகைகளும்'...

* * *

மறு நாளே சென்னையிலிருந்து, பிறந்த மண்ணுக்குத் திரும்பிவிட அவன் மனம் துடித்தது. ஆனால், நண்பர் ஒருவர், ''நானும் உங்கள் கிராமத்துக்கு வருகிறேன். என் தம்பியின் திருமண அழைப்பு இன்று மாலை அச்சாகி விடும். வாங்கிக்கொண்டு புறப்படலாம். சில பேருக்கு நேரில் தரவேண்டும்...'' என்று நிறுத்திவிட்டார்.

''என்னங்க யோசனை?.....'' என்ற நண்பரிடம், ''ஒன்றுமில்லை....'' என்று தொடங்கி, தன் மன வேதனையை விவரிக்கலானான் அவன்.

''அங்கே இத்தனை செக்ஸ் பத்திரிகைகள் வருவதற்கு, 'ஒரே ஒருவர்தான் காரணம்' என்று சொல்கிறார்கள்!'' என்றார் நண்பர்.



''ஒருவரே இத்தனை பத்திரிகைகளை நடத்த முடியுமா, என்ன!....''

''நடத்துகிறவர்கள் யார் யாரோ...ஆனால், அந்த மாதிரியான எல்லாப் பத்திரிகைகளுக்குமே பெருமளவு 'மேட்டர் சப்ளை' பண்ணுகிறவர் ஒருவர் தானாம்!''

அவனால் நம்ப முடியவில்லை.....

''நான் வேண்டுமானால் அவரை நேரிலேயே காட்டுகிறேன்.....'' என்றார் அவர். ''ஒரு காலத்தில், பெரிய பத்திரிகைகள் எல்லாவற்றிலுமே சிறப்பாக எழுதியவர்தானாம்.... இப்போது, அங்கேதான் பிழை திருத்துகிறார்....''

தயாபரி அச்சகம்..தயாபரி...

அவன் மூளையில் ஒரு தாக்குதல் நேர்ந்து, மனம் வலித்தது.

'இதயதாசன் இந்த அச்சகத்தில் அல்லவா பிழை திருத்தி வாழ்க்கை நடத்துவதாகச் சொன்னார்?.. ஒரு வேளை.....'

படபடப்போடு விசாரித்தான். ''நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்?....''

உள்ளமோ, 'அவராக இருந்துவிடக்கூடாது' என்று தவித்தது. 'பொற்கனவு கண்டு, புது யுகம் படைக்க வேண்டிய ஒருவர் -மறுபடி கற்காலம் வர வேண்டும் என்று நினைப்பாரா?' மக்களை மிருகங்களாய், காட்டுமிராண்டிகளாய் மாற்ற இலக்கியம் படைப்பாரா? அதிலும் அவர்....'

''அவரை உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் தெரிந்திருக்கலாம். இதயதாசன் என்று பெயர்! ஆனால், இப்போது அவர் அந்தப் பெயரில் எழுதுவதே இல்லையாம்! வேறு வேறு புனை பெயர்களில், பல விரசமான விஷயங்களை எழுதி வயிற்றைக் கழுவுகிறார் என்கிறார்கள்!....'' என்றார் நண்பர்.

'எனக்கு வேதம் ஓதியது தேவன் இல்லையா?....சாத்தான் தானா?......' -அவன் கால்கள் துவண்டன.



# ஆனைகட்டி இருளர்

நே. தேவசகாயம்
காப்பாட்சியர்,
மாந்தவியல் அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

**வே**ட்டையாடுதலிலும் உணவுப் பொருள்களைத் திரட்டுதலிலும் ஈடுபட்டுள்ள ஓரிலக்கத்திற்கும் மேற்பட்ட இருளர் பழங்குடிகள் குறிப்பாகத் தமிழ்நாட்டில், செங்கற்பட்டு, வடார்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சி மாவட்டங்களிலும், பாலக்காட்டுப் பகுதியிலும், கருநாடக மாநிலத்தின் மைசூர், பெங்களூர் மாவட்டங்களிலும் இருளர் ,இருளிகர் ( Iruligas ) என்னும்பெயர்களுடன் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். சுருட்டை மயிர், எழும்பியுள்ள தாடைகள், அகன்ற மூக்கு, பொதுவான உயர அளவில் தோற்றமளிக்கும் கருஞ்சிவப்புத்தோலைக்கொண்ட இருளர், நீக்ரோ இன வகைக்கு மிகவும் நெருங்கியவர்களாகக் காட்சியளிக்கின்றனர். இவர்கள் ஆந்திரத்து ஏனாதிகளை (Yenadis) ஒத்துள்ளனர். இவர்களின் மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகத் தெரிகிறது.

கோவை மாவட்டத்தில் அறுபதுக்கு மேற்பட்ட காட்டுக் குடியிருப்புப் பகுதிகளில் கோவை இருளர் வாழ்கின்றனர். இப்படியாக இருளர் வாழ்ந்து வரும் ஒரு பகுதியே தூமனூர் இருளர் குடியிருப்பாகும். இது டூமனூர் என வழங்கப்படுகிறது. இப்பகுதி, கோவைக்கு இருபத்தேழு கல் தொலைவில் கோவை - ஆனைகட்டி நெடுஞ்சாலையை ஒட்டினாற்போல மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது. யானையைக் கட்டுதல் என்னும் பொருள் தழுவி ஆனைகட்டி என்னும் இடப்பெயர் யானைகள் நிறைந்த இந்த அடர்ந்த காட்டுப் பகுதியைக் குறிக்கிறது. தூமனூர் பகுதி ஓர் மலைச்சரிவு. நான்கு வரிசைத் தட்டிகள் கொண்ட சுவரும் காட்டுப் புல்லால் வேயப்பட்ட கூரையும் கொண்ட வீடுகள் இந்த இருளர் சிற்றூரை அணி செய்கின்றன. இருபது குடும்பத்தினர் இங்கு அமைதியாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கண்கவர் காட்சிகளாக நம்முன்

இங்கு இருளர் சிறுவர்களுக்குப் பள்ளியில்லாத குறையைப்போக்க அண்மையில் ஆயுர்வேத ஊரக நிறுவனம் ( Ayurvedic Rural Centre) ஒரு துவக்கப் பள்ளியைத் தொடங்கியுள்ளது. இந்த இருளர்களால் மூங்கிலினாலும், காட்டுப் புல்லினாலும் கட்டப்பட்டுள்ள இந்தச் சிறிய பள்ளி, திரு. எம். வித்தியாசாகர் என்னும் ஆசிரியரின் தலைமையில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 3 முதல் 11 அகவைக்குட்பட்ட 32 மாணவ, மாணவியர் பயிலுகின்றனர். இதில் தமிழ் வாயிலாகக் கல்வி முறை கற்பிக்கப்படுகிறது. தமிழும், கணிதமும் தலைமையான பாடங்கள். இருளர் சிறுவர்கள் பாட்டில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆகவே சமுதாயத்தையும், பண்பாட்டையும் ஒத்த பாடல்கள் கற்பிக்கப்படுகின்றன.

மாதந்தோறும் கோவைக்குச் சுற்றுலாச் செல்லவும், ஆயுர்வேதக் கல்லூரியில் உடல்நலப் பரிசோதனை செய்துகொள்ளவும்

நிற்பன இரண்டு. அவர்கள் மாட்டு மந்தையை அழகாக மலைச்சரிவுகளில் மேயவைத்துக் கொண்டிருக்கும் காட்சி முதலாவது. மற்றொன்று இவர்கள் வீட்டின் கூரையில் செருகியுள்ளது.

தூமனூர் இருளர், காட்டின் சரிவுப் பகுதிகளில் ஏரைக் கொண்டு நிலங்களில் உழுது சோளம், கேழ்வரகு, கொள்ளு, சாமை, உளுந்து, தட்டைப்பயறு, துவரை ஆகியவைகளைப் பயிர் செய்கின்றனர். காடுகளில் கிடைக்கும் தேன், கடுக்காய், ஆகியவைகளைத் திரட்டுதலிலும் ஈடுபடுகின்றனர். மலைச்சரிவு உழவுத் தொழில் மழையை நோக்கியிருப்பதால் குடி தண்ணீருக்காகச் சில ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூரைச் சார்ந்த ஊராட்சி ஒரு பெரிய கிணற்றை வெட்டியுள்ளது. இதனைத்தூர் எடுத்தால் வேண்டிய அளவு நீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சிறுவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. சிறுவர்கள் சிறு கைத்தொழில்களில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இருளர்களின் பெருகிய குடிசைத் தொழில்களான பாய், கூடை முடைதல், கயிறு திரித்தல் ஆகியவைகளைப் பள்ளியிலும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். பள்ளியின் அருகிலேயே காய்கறிகளைப் பயிரிட வாய்ப்புள்ளது. இலவச உணவு, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சீருடைகள், வெகுவிரைவில் இப்பகுதிக்கும் விரிவாக்கப்படும் என்று தெரிய வருகிறது.

வீட்டின் கூரையில் செருகப்பட்டுள்ள வானொலி செய்தி அறிவிக்கும் கருவியின் உதவியால் இருளர் விவசாயிகள், காலையிலும் மற்றும் மாலையிலும் விவசாய முன்னேற்றத்தை ஒட்டிய குறிப்புகளையும், தட்பவெப்ப நிலை பற்றிய அறிவிப்புகளையும் தெரிந்து செயல்படுகின்றனர். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டுள்ள இந்த வானொலிக் கருவி விரைவில் சீரமைக்கப்படும் என்று இருளர் கருதுகின்றனர். உழவுத் தொழிலில் இவர்களுக்கு உதவியாக உள்ள எருதுகளை வாங்க,பல குடும்பங்களுக்கு அரசு கடன் அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தூமனூருக்கு அருகிலுள்ள புதூர், கொண்டனூர் ஆகிய இருளர் இருப்பிடங்களில் மண் வீடுகளுக்குப் பதிலாக கருங்கல் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. விரைவில் மாற்றங்கள் பெற்று வரும் இதர இருளர் இருப்பிடங்களைப் போன்றே, நல்ல சாலை வசதி, மின்சார வசதி ஆகியவைகளை தூமனூரும் பெறும் என்ற நம்பிக்கை இருளர்களிடம் இருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்ட இருளர்கள் (பொன்னேரிப் பகுதி) கோவை இருளரைப் போல, காடுகளில் வாழாமல், தங்கள் முன்னோர்களின் பழங்குடியிருப்பான காட்டை விட்டு,பல சிற்றூர்களில் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர். ஆங்கில ஆட்சி வந்தகாலத்தில், தங்கள் காடுகளின் உரிமைகள் பறிபோன காலத்தில் சிற்றூர்களுக்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் தோட்டங்களில் வேலையாட்களாகவும், வீடுகளில் பணியாளர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்கள் தேனெடுப்பதிலும், வேட்டையாடுவதிலும் இன்றும் கவனத்தைச் செலுத்துகின்றனர். முக்கியமாக எலியைப் பொறி வைத்து, வலை வைத்து மற்றும் புகையினால் மூச்சுத் திணரவைத்தும் பிடிப்பர். காலம் மாற மாற,

தற்காலத்தில் இவர்கள், காடுகளில் கிடைக்கும் இயற்கை வைத்தியத்திற்கு உதவும் மருத்துவச் செடி கொடிகளைக் கண்டுபிடித்து அவைகளைப் பல வைத்தியங்களுக்கு உபயோகிக்கின்றனர். குறிப்பாக எலிக்கடி, பாம்புக்கடி இதர பூச்சிகள் கடி போன்றவைகளை இந்த மருந்துச் செடிகளின் மூலமாகக் குணப்படுத்துகின்றனர்.

இவர்கள் பாம்பைப் பிடிக்கும் தொழிலில் வல்லுநர்கள். ஒரு கடப்பாறையும், ஒருகோணியுமே இவ்வேலைக்குத் தேவை. 1972ஆம் ஆண்டில் பாம்பை வேட்டையாடுதல் தடைசெய்யப்பட்டது. இருளர்களின் பாம்பைப் பிடிக்கும் கலைத் தன்மையை உயர்த்தும் வகையில் 1982ஆம் ஆண்டு ''இருளர் பாம்பு பிடிக்கும் கூட்டுறவுச் சங்கம்'' (Irula Snake catcher's Industrial Co-operative) சென்னையில் தொடக்கப்பட்டது. கிண்டி பாம்புப் பூங்காவில் (Guindy Snake Park) அமைந்துள்ள இச் சங்கத்தில் 50 இருளர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் நான்கு வித நச்சுப் பாம்புகளைப் பிடித்து இக்கூட்டுறவிற்கு விற்கின்றனர். பாம்புகளின் விஷம் எடுக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்பட்டு, மூன்று அல்லது நாலு வாரக் காலங்களில் இவ்வேலை முடிந்தவுடன் பாம்புகள் திரும்பவும் உயிருடன் காட்டில் விடப்படுகின்றன. இவ்வேலையில் இருளர் முக்கிய பங்கை ஏற்று நடத்துகின்றனர்.

செங்கை இருளரைப் போலவே அசாம் மாநிலத்தில் லங்கா என்ற பகுதியில் வாழ்ந்து வரும் பதியா (Badias) எனப்படும் நாடோடிப் பழங்குடிகள்,பாம்பு பிடிப்பதையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் எட்டு மாதங்கள் காடுகளின் வழியே குழுவாக நடந்து சென்று காட்டு மரங்களில், புதர்களில், புற்றுகளில் காணப்படும் நச்சுப் பாம்புகளைக் கைவன்மையினால் பிடித்து (சிறுவரும்கூட) அவைகளை ஊர்ச் சந்தைகளில் விற்கின்றனர். இவ்விதப் பாம்புகள், பாம்பாட்டியின் பாம்புகளாக மாற்றப்படுகின்றன.

வட ஆர்க்காடு இருளர், குறிப்பாக ஒதுக்கத்தூர் பகுதியிலுள்ள பாக்கம், இருளர் மேடு கிராமங்களிலுள்ளவர்கள், பயிர் நிலத்தில் எலி பிடிப்பதில் வல்லுநர்களாகக்



காணப்படுகின்றனர். இவ்வேலைக்கு ஒரு கடப்பாறையும், துளையுள்ள ஒரு பானையுமே தேவை. நெல் வயல் ஓரங்களில் காணப்படும் எலிப்பொந்துகளில் அகல வாயுள்ள பானையின் பக்



கத்தால் மூடி, பானையில் வைக்கோலை வைத்து தீ மூட்டி, எதிர்ப்புறமுள்ள துளையின் வாயிலாக நெருப்பை ஊதி, புகையைக் கிளப்பி, புகை நேராகப் பொந்துக்குள் கடைசி வரை சென்று எலிகளை மூச்சுத் திணற வைக்கிறது. சில எலிகள் வெந்தும், சில மயக்கத்திலும் விழுந்து கிடக்கும். பெரிய, நீண்ட கடப்பாறையின் மூலமாக அந்தப் பொந்தின் வழியே தோண்டிச் சென்று கடைசியில் சுமார் 12 முதல் பல எலிகளை இந்த இருளர் பிடிக்கின்றனர். மேலும் இந்தப் பொந்திலிருந்து இரண்டு மூன்று படி நெல்லையும் சேகரிப்பர்.

நீலகிரி இருளர், எலியை உண்பதில்லை. மற்ற மாவட்ட இருளர்கள் எலியை உண்கிறார்கள். நீலகிரி இருளரிடையே எட்டுக் குலங்கள் உண்டு. கோவை இருளரிடமோ பன்னிரெண்டு குலங்கள் உண்டு. நீலகிரி, கோவை இருளரிடம் மொழி ஒன்றுபட்டும், வேறுபட்டதாகவும் காணப்படுகிறது.

ஆகவே இருளர்கள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பரவி இருந்தாலும், அவர்களின் முக்கிய பொருளாதார வாழ்க்கை உணவுப் பொருள் சேகரிப்பும், வேட்டையாடுதலுமே. அவர்களின் குடியிருப்பு காடே. சிலர் காட்டை விட்டு, கிராமங்களில் குடிபெயர்ந்தும், சிலர் காட்டு மலைச் சரிவுகளிலேயும், பயிர்த் தொழிலைச் செய்கின்றனர். பயிர்த்தொழிலில் ஈடுபட்டு இருந்தாலும் இன்னமும் அவர்கள் வேட்டையாடுவதையும், பொருள் சேகர முறைகளையும் அறவே ஒழித்துவிடவில்லை. தற்காலத்தில் தங்களது வேலை திறமையைக் காட்டும்படியாகப் பல்வேறு துறைகளுக்குத் தங்களின் உழைப்பைச் செலுத்துகின்றனர். எலி பிடித்தல், பாம்பைப் பிடித்தல் என்று நின்றுவிடாமல், பாம்பின் நச்சை எடுப்பதிலும், அதைப் பக்குவப்படுத்துவதிலும், காட்டில் கிடைக்கும் மூலிகைகள், மருந்துச் செடிகளை கண்டு, அவைகளினால் பல்வேறுபட்ட நோய்களைக்குணப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர். சாதகமாக, தற்கால இருளர்கள் முன்னேற்றப் பாதையில் செல்லுகின்றனர்.



கடந்த ஆண்டில் வட ஆர்க்காட்டில் பாக்கம், இருளர்மேடு ஆகிய சிற்றூர்களையும், கோவை, ஆனைகட்டி மலையின் தூமனூர் இருளர் இருப்பிடங்களைக் காணவும் அவர்களிடமுள்ள மறைந்து வரும் கைவினைப் பொருள்களை சென்னை மற்றும் வேலூர் அரசு அருங்காட்சியகங்களுக்குப் பெறவும் அவற்றை ஆய்வு செய்யவும் தக்க வாய்ப்புக் கிடைத்தது.






## ஏன்-என்ன-எப்படி?

ஆசிரியர்: சலாவுத்தீன்.

வெளியிட்டோர்: தமிழ்க் கடல் பதிப்பகம்,
ஐ.19, டார்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு.
நந்தனம், சென்னை-600 035.

பக்கம்:164 விலை ரூ.12.50

அறிவியல் இல்லாமல் நாம் இல்லை என்கிற நிலை நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது. எனவே, இக்கால இளைஞர் சமுதாயம் ஏற்கத் தக்க எளியநடையிலே அறிவியல் நூற்கள் வெளிவருவது மிகவும் அவசியம் ஆகிறது.

அந்த வகையில் வெளியிடப்பட்டிருப்பதே இந்த நூல்.

இராட்சசர்கள் என்ற ஓர் இனம் உண்டா?... என்ற முதல் கட்டுரையிலிருந்து, வேகமாகச் செல்லும் நிலவு என்ற கடைசிக் கட்டுரை வரை ஏறத்தாழ 75 துணைத் தலைப்புகளின் கீழே அரிய கட்டுரைகள் பல அணிவகுத்துள்ளன.

ஹார்மோன், பிளாஸ்மா, குருதிஅழுத்தம், செராக்ஸ் பிரதி எடுத்தல் எவ்வாறு? நிலவு எங்கிருந்து வந்தது? கதிரவன் எப்பொருளால் ஆனது? வாத்து எவ்வாறு மிதக்கிறது? 24 காரட் தங்கம் என்றால் என்ன? புதிய மின்விளக்கு போன்ற பலதுறை விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ள அறிவியல் முத்துக்களின் குவியலே இந்நூல்.

நூலாசிரியர் இதை எளிய நடையில் எழுதியிருப்பதும், ஆங்கில அறிவியல் சொற்களுக்கு ஈடான புதுப்புதுத் தமிழ்ச்சொற்களை உருவாக்கித் தந்திருப்பதும் பாராட்டத்தக்கது.

படிக்கப் பயனுள்ள நூல்.

## அன்றாட உணவில் வைத்தியம்

ஆசிரியர்: மருத்துவர் மதுரை இளநாகன்,

வெளியிட்டோர்: தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ.19, டார்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு,
நந்தனம், சென்னை-600 035.

பக்கம்:330 விலை ரூ.30

'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால், அளவறிந்து உண்டு, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கொப்ப நம்மில் எத்தனை பேர் வாழ்கிறோம்?.

அப்படி நம்மை வாழத் தூண்டுவதே இந்நூல். சைவ உணவு, அவற்றில் உள்ள சத்துப்பொருட்கள், அவைகளே மருந்தாகி உயிர் காக்கும் விதம் ஆகியவை நயம்பட நூலாசிரியரால் விவரிக்கப்பட்டுள்ளன.

இலைகளும் கீரைகளும், தண்டு கிழங்கு வகைகள், பூ பிஞ்சு காய் வகைகள், குழம்புப் பதார்த்தங்கள், பயறு தானியவகைகள், எண்ணெய் வகைகள், அன்ன ஆகார வகைகள், பழங்களும் பானங்களும், தாம்பூலத்தின் மருத்துவக் குணங்கள்... என்றிப்படி பல்வேறு தலைப்புகளின் கீழே நாம் உண்ணும் உணவு பற்றி நமக்கே தெரியாத பல விஞ்ஞான உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன இந்தப் புத்தகத்தில்.

தேரையர் குணபாடம், அகத்தியர் குணபாடம் போன்ற பழந்தமிழ் நூற்களில், உணவே மருந்தாகும் விதம் பற்றியுள்ள பாடல்கள் சில ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. நலம் சேர்க்கும் நல்ல செய்திகளைத் தருவதால் இந்நூல் எல்லோராலும் வரவேற்கப்படலாம்.

**இல. இராசேந்திரன்**

## இந்தியக் குடிமகனின் உரிமைகளும் கடமைகளும்

ஆசிரியர்: கு.ராஜாராம்.

வெளியிட்டோர்: ஸ்டார்பிரசுரம்,
72, பெரியதெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

பக்கம்:88 விலை ரூ. 6-50

எல்லாரும் இந்நாட்டு மன்னர், நமது ஆட்சிமுறை, மக்களாட்சி, அடிப்படை உரிமைகள் அடிப்படைக் கடமைகள் எனும் ஐந்து பெருங்கட்டுரைகள் இந்த நூலில் அடங்கியிருக்கின்றன.

உரிமைகளைக் கோருவதில் தவறே இல்லை; அதே நேரத்தில் நாம் நம் கடமைகளைச் சரிவரச் செய்தாக வேண்டும்; அப்போதுதான் வெற்றி மீது வெற்றி வந்து நம்மைச் சேரும் என்பதை இந்த நூல், சட்ட நுணுக்கங்களோடு விவரிக்கிறது. இடையிடையே படங்களும் போடப்பட்டுள்ளன.

இதிலுள்ள விவரங்கள், நாம் எல்லோரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவைகளாகும்.

**—ராஜு**

## நம்பிக்கைக்கு ஒரு முத்தம்

ஆசிரியர்: நாகை மனோகரன்,

வெளியிட்டோர்: மணிமலர் பதிப்பகம்,
மலையடி வேம்பாக்கம்,
செங்கல்பட்டு-603 111.

பக்கம்:80 விலை ரூ.6

'என்னைப் பற்றிய மதிப்பீட்டை நீங்கள் இந்த நூலைக் கொண்டு எழுதிவிட முடியாது; கூடாது' என்று தனது முன்னுரையிலே கூறியிருக்கிறார் ஆசிரியர். நூலை மதிப்பிடலாம் என்கிற நம் எண்ணத்தையும் அந்த வரிகள் அசைத்து விடுகின்றன.

'மகோன்னதமான மனித நேயம் பாடி, தென்ஆப்பிரிக்க நிறவெறி அரசின் அடக்குமுறையினை எதிர்த்து, தூக்குக்கயிற்றை முத்தமிட்ட கவிதை வானம்பாடி 'மலீசா பெஞ்சமின் மொலாய்ஸ்'க்கு வீரவணக்கமாக படைக்கப்பட்டுள்ள இந்நூல் முழுவதும் புதுக்கவிதைப் பழத்தோட்டங்கள்தான். ஆங்காங்கே ஹைக்கூ

கவிதை இரைந்திருக்கிறது.

புதுக்கவிதை நேயர்கள் பிரியமாகப் படிக்கலாம்.

—பி.எல்.ஆர்.

## சீவக சிந்தாமணி வினை விளக்கம்

ஆசிரியர்: பேராசிரியர் ஜெ. ஸ்ரீ சந்திரன்

வெளியீடு: ஏ.எம். ஜெயின்கல்லூரி மீனம்பாக்கம், சென்னை-600 114.

விலை: ரூ.15 பக்கம்: 144

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றானதும், திருத்தக்கத் தேவரால் இயற்றப்பட்டதுமான சீவக சிந்தாமணி பற்றிய விளக்க நூலே இது.

சிந்தனையைக் கிளறும் வண்ணம், கதைப்போக்கில் எழுதி, ஆசிரியர் தம் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

### முந்து தமிழ்

உள்ளத்தின் சிந்தனையை வெளிப்படுத்த உதவுவது மொழி. அந்த மொழியில் இனிமை வேண்டும். கரடுமுரடாக இருக்கக் கூடாது. நான்கு பேர் நடந்து செல்கிறார்கள். அதில் ஒருவன் மட்டும் ஒல்லியாக இருக்கிறான். ஏனையோர் கனமாக உள்ளனர். இவர்களில் ஒல்லியானவன்தான் வேகமாக நடை போடுவான். மொழிகள் எல்லாம் இறைவனை நோக்கிப் பயணம் செய்யுமானால் அவற்றில் தமிழ்தான் முந்திச் செல்லும். அதன் மென்மைதான் காரணம்! அதனால்தான் முந்து தமிழ் மாலை கோடிக் கோடி என்று பாடினார் அருணகிரியார்.

—திருமுருக கிருபானந்த வாரியார்

(உலகத் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவில்)

''இப்பைந்தமிழ்க் காப்பியத்தைப் பலர் ஆராய்ந்துள்ளனர். எனினும் இந்நூல் ஒரு தனிப் பார்வையுடையது. காப்பியத்தில் ஆயிரம் ஆயிரம் அழகுகள் இருந்தாலும் கவிஞர் உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்த உணர்வுகளைத் தொகுத்துத் தருவது; பறை அறைவிப்போன் முதல் பாராளும் வேந்தன் வரை அனைவரும் வினையின் இயல்பை உணர்ந்து, உணர்த்துவதன் மூலம் வினைக் கொள்கையை ஒரு தேசியக்கொள்கையாகக் காட்டுகிறார் திருத்தக்கத்தேவர்'' என்று நூலாசிரியர் கோடிட்டுக் காட்டி, நூல் முழுவதும் வினைக்கொள்கை விளக்கம் தருகிறார். புதுமையான முயற்சி. தமிழ் ஆர்வலர் அனைவரும் படித்து இன்புற வேண்டிய ஆய்வு நூல்.

—பி.வி.ஜி

## திறனாய்வுச் செல்வம்

ஆசிரியர் : நா. பார்த்தசாரதி.

வெளியீடு: நவபாரதி பிரசுரம், 6 நல்லதம்பி தெரு, சென்னை-600 002.

விலை ரூ. 10. பக்: 144

இலக்கியக் கட்டுரைகள் பத்தொன்பது கொண்ட தொகுப்பு இது. முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப் பரணி, பத்துப்பாட்டு, விறலிவிடு தூது, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்கள் குறித்து ஆய்வு முறையில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் சுவையாக உள்ளன.

கலைகளைக் குறித்துத் தீட்டப்பட்டுள்ள கட்டுரைகள் தகவல் களஞ்சியங்களாக மிளிர்கின்றன. பழமொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் தக்க வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

திறனாய்வும் இலக்கியமும் என்ற கட்டுரை திறனாய்வின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

'கணிதமோ அறிவியலோ எவர் எழுதினும் எத்துணை முறை எழுதினும் ஒரே விதமான முடிவு தரக் கூடியது. இலக்கியம் அப்படி அன்று, ஒவ்வொருவர் எழுத்துக்கு ஒரு சுவை' என்று நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது.

இலக்கியக் கட்டுரைகள் இன்சுவைக் கனிகளாக விளங்குகின்றன. பல நூல்களைப் படித்த திருப்தி இந்நூலைப் படிக்கும் போது ஏற்படுகிறது. ஆசிரியரின் ஆரவாரமில்லாத - ஆனால் அழுத்தமான நடை நம்மைக் கவர்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## பஞ்சாயத்துப் பற்றிய சட்டங்களும் நிர்வாக முறைகளும்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு; மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் ரோடு, தியாகராய நகர், சென்னை-600 017.

விலை ரூ. 10. பக்:127

கிராமங்களில் தான் இந்தியாவைக் காண முடிகிறது என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். கிராம வளர்ச்சியில் நமது அரசு கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. கிராம ஆட்சி மன்றங்கள் பல்லாண்டுகளாகவே பணியாற்றி வருகின்றன. அவை பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் என்றெல்லாம் சொல்லப்படுகின்றன.

அவற்றின் செயல் முறைகள், அதிகாரங்கள், கடமைகள், வருமான வழிவகைகள், வரி விதிப்பு முறைகள், வரவு செலவுத் திட்டங்கள், உறுப்பினராவதற்குள்ள தகுதிகள், தேர்ந்தெடுக்கப்படும் விதம், ஆணையாளரின் அதிகாரம் ஆகியவை குறித்தும் மேலும் பற்பல விதிமுறைகள், நடைமுறைகள் ஆகியவை குறித்தும் இந்நூலில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எளிய நடை நூலுக்கு எழிலைச் சேர்க்கிறது.

## எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்

ஆசிரியர் : டாக்டர் சி. கே. மாணிக்கவாசகம்.

வெளியீடு: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தியாகராய நகர், சென்னை-17.

விலை : ரூ. 12.50. பக்:180.

வேம்பு, வேல், வில்வம், மா ஆகிய மரங்களின் இலைகள் மருந்துக்குப் பயன்படுத்தப்படுவதையும், அவற்றின் மூலம் நீங்கப் பெறும் நோய்கள் குறித்தும் இந்நூலில் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

விஷக்கடி உட்பட, ஏறக்குறைய 40 வகையான நோய்கள் நீங்குவதற்குரிய மூலிகைகள் குறித்தும், அவற்றைக்கொண்டு மாத்திரைகள், கஷாயங்கள் தயாரிக்கும் முறை குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

கசப்புச் சுவை உணவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பதையும் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார் ஆசிரியர்.

எளிய இனிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—எஸ். எஸ். சுந்தரம்





## படமும் செய்தியும்

உலக சமாதான ஆன்மிக மாநாட்டையொட்டி மேதகு குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்கள், பங்காரு அடிகளார் முன்னிலையில் 10.5.1986 அன்று சென்னையில் கலச விளக்கு பூசையைத் தொடக்கி வைத்தார். மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 30-4-1986 அன்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்களைச் சந்தித்தார்.







மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் 3.5.86 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.







# தொழுநோயைக் குணப்படுத்தலாம்

தொழுநோய் ஒரு குறிப்பிட்ட வயதினரையோ, மதத்தவரையோ, இனத்தவரையோ மட்டுமே தாக்குவதில்லை. குறிப்பாக ஏழைகளிடையேதான் தொழுநோய் அதிகம் காணப்படுகிறது என்ற தவறான கருத்தும் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் உண்மையில் தொழுநோய் ஏழைகளுக்கு மட்டும் வருவதில்லை.

தொழுநோய் ஒரு தோல் சம்பந்தமான வியாதி என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள். அதுவும் இல்லை, இது முற்றிலும் நரம்பு சம்பந்தப்பட்ட ஒரு நோயாகும். நோயின் தன்மை தோல் மூலம் வெளிப்படுத்தப் படுவதாலேயே இது ஒரு தோல் நோய் என்று பெரும்பாலோராலும் கருதப்படுகின்றது.

ஆனால் தொழுநோய் ஒரு பயங்கரமான தொற்று நோய் அல்லவா என்று நீங்கள் வினவக் கூடும். இல்லை! எல்லா வகையான தொழுநோய்களும் தொற்றக்கூடியவை அல்ல. பெரும்பாலான பிரிவின்படி தொழுநோயைத் தொற்றும்நோய், தொற்றா நோய் என இருவகைப் படுத்தலாம்.

நாம் அன்றாடம் ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் காணும் உருவிழந்து காணப்படும் தொழுநோய்க்காரர்கள் தொற்றா தொழுநோய் வகையைச் சார்ந்தவர்கள். ஏனென்றால் தொற்றாத் தொழுநோயில்தான் உடலின் வடிவமைப்பு விரைவில் சீர்குலைந்து விடுகிறது. உண்மையில் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் தொற்றுத் தொழுநோய், உடல் வடிவமைப்பை இழக்கச் செய்வதற்கு நீண்ட ஆண்டுகளை எடுத்துக் கொள்கிறது.

இந்தியாவில் தென் மாநிலங்களில்தான் தொழுநோயின் பாதிப்பு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக தமிழகத்தில்தான் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் தொழுநோய் பரவலாக உள்ளது. தற்போதுள்ள கணக்கெடுப்பின்படி இந்தியாவில் சுமார் 212 மாவட்டங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். இதில் மிகவும் வியக்கத்தக்க ஒன்று 100-க்கு 25 சதவிகிதத்தினர் குழந்தைத் தொழுநோயாளிகளாக இருப்பதுதான்.

ஒரு தொழு நோயாளியின் வாழ்க்கையில்தான் எத்தனை போராட்டங்கள்! சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுதல், இயல்பான பொதுவாழ்க்கை வாழ முடியாத நிலை, சுயமாகச் செயல்பட முடியாத நிலை போன்றவை ஒரு தொழுநோயாளியின் மனப் போராட்டங்களை அதிகரிக்கச் செய்கின்றன. தொழுநோயின் மிகக் கொடூரமான பாதிப்புகளில் ஒன்று, தன் சொந்தக் குடும்பத்தினரே தன்னை ஒதுக்கி வைக்கின்ற நிலை ஒரு நோயாளிக்கு ஏற்படுவதேயாகும்.

இவ்வாறு படித்தவர்கள், படிக்காதவர்கள், ஏழை, பணக்காரர் போன்ற எல்லோர் மனதிலுமுள்ள தொழுநோய் பற்றிய தவறான எண்ணங்களைப் போக்கி தொழுநோயையும் நன்கு குணப்படுத்தலாம். அவர்களும் பூரண சுகமெய்தி நல்வாழ்க்கை வாழலாம்.

தொழுநோய் தொடர்பான எந்த ஒரு நலத்திட்டத்தின் இறுதி நோக்கமும் தொழுநோயாளிகள் சமூகத்தோடு இணைந்து வாழ்வதை நோக்கமாகக் கொண்டதாக அமையும். இதுதான் பல்வேறு சேவை மையங்களின் இலட்சியமாகும்.

இந்த வகையில் 1916-ல் தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் துவங்கிய நிலையம் ஒன்று துரிதமாக முன்னேறி வருகிறது. கும்பகோணத்தை அடுத்த சாக்கோட்டையில் 'தி சேக்கரட் ஹார்ட் லெப்ரசி சென்டர்' துவக்கப்பட்டபொழுது அதன் நோக்கம் நோயாளிகளுக்கு உணவு, தங்குமிடம், கிடைக்கக்கூடிய மருத்துவ வசதியை வழங்குவதுதான். தற்பொழுது இந்த மையத்தோடு இணைந்த பெரிய மருத்துவமனை ஒன்று செயல்படுகிறது. புனர்வாழ்வு மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இங்கு சீர்செய்வதற்கான அறுவைச் சிகிச்சை, உடற்பயிற்சி, விசேஷப் பள்ளிகள், தொழிற் பயிற்சிகள், பணியிலமர்த்துதல் ஆகிய சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. புற நோயாளிகளுக்கும் தங்கும் நோயாளிகளுக்கும் இங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது. முழு வசதிகள் உள்ள சோதனைக் கூடமும் உள்ளது.

செயற்கைக்கால், விசேஷக் காலணிகள் தயாரிக்கும் நிலையமும் இந்த மையத்துடன் இணைந்து செயல்படுகிறது. 1982ல் இந்த மையத்தில் பல முனை சிகிச்சை அறிமுகம் செய்யப்பட்டது. அதுமுதல் சிகிச்சையில் தீவிர மாற்றம் ஏற்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு மருத்துவமனையில் இடம் தந்து நீண்ட நாளைக்குச் சிகிச்சை அளிப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது குறுகிய காலத்துக்கு மட்டுமேநோயாளிகள் தங்க அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை வழங்கப்படுகிறது. 750



நோயாளிகள் தங்க வசதி உள்ள இங்கு 700 நோயாளிகள் மட்டுமே தங்கி சிகிச்சை பெறுகிறார்கள். நாள் ஒன்றுக்குச் சராசரியாக 30

நோயாளிகள் சிகிச்சை பெறு கிறார்கள். அனைவருக்கும் முழுப் பரிசோதனைக்குப்பின் தொழு நோய் இருந்தால் அருகில் உள்ள சிகிச்சை நிலையத்திலோ மையத்திலோ சிகிச்சை அளிக்கப் படுகிறது. மற்ற மாவட்டங்களில் இருந்தும் பிற கட்டுப்பாட்டு நிலையங்களில் இருந்தும் பரிந் துரை செய்யப்படும் நோயாளி களுக்கும் சிகிச்சை வழங்கப்படு கிறது.

தொழுநோயாளிகளுக்கு மறு வாழ்வளிப்பதற்கு விசேட முக் கியத்துவம் தரப்படுகிறது. ஐ. ஆர். டி. பி., டிரைசெம் ஆகிய மத்திய திட்டங்களின்கீழ் தொழு நோயாளிகளுக்குப் பயிற்சி மற் றும் சுயவேலை வாய்ப்புக்கு வகை செய்யப்படுகிறது.

நோய் குணம் அடைந்த பலர், நெசவு, சோப் தயாரித்தல், விளையாட்டுச் சாமான்கள் தயா ரித்தல், பட்டுப்புழு வளர்த்தல், கை அச்சு ஆகிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். மையத் துக்கு 15 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இங்கு உடல் வலிமை உள்ள நோயாளிகள் உழைக்க வேண்டும். இதைத்தவிர மையத் தில் உள்ள நோயாளிகளுக்குத் தேவையான பொருள்களை. அளிக்க கால்நடைப் பண்ணை ஒன்றும், கோழிப்பண்ணை ஒன் றும் உள்ளது.

தொழுநோயாளிகளின் குழந் தைகளும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும் படிக்க, எட்டாவது வகுப்பு வரை உள்ள விசேடப் பள்ளி ஒன்று உள்ளது. இந்தப் பள்ளியில் ஆறு ஆசிரியர்கள் தற்பொழுது உள்ள னர். 85 குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். இந்த மையத் தின் ஈடுபாடு, தியாகம் காரண மாக உடல் ஊனமுற்றோர் நல னுக்கான தேசிய விருது இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள் ளது.

சாதாரண குடிமக்கள் அனு பவிக்கும் அனைத்து உரிமை களையும் தொழுநோயாளிகளுக் கும் கிடைக்கச் செய்வது மிகவும் அவசியம்; தொழுநோயைக் கட் டுப் படுத்துவது பற்றிய தகவல் களைச் சமூகத்துக்கு உணர்த்து வதன் மூலமே சமூகப் போக்கில் இத்தகைய மாற்றத்தினை ஏற் படுத்த முடியும். இத்தகைய மாற்றம் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் வெற்றி பெற உதவும்.



## தொழுநோய் தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டிய பத்து அம்சங்கள்

1. ஜலதோஷம், டைபாய்டு, மஞ்சள் காமாலை, இளம்பிள்ளை வாதம், சீதபேதி, சொரிசிரங்கு, படர்தாமரை நோய், சிபிலீஸ், காசநோய் மற்றும் பிற, தொற்று நோய்கள் ஆகும். தொழுநோயாளிகளோடு பழகும் ஒவ்வொருவருக்கும் தொழுநோய் வருவதில்லை.

2. தொற்றுநோய்களில் தொழுநோயும் ஒன்று. ஆனால் மிகவும் அரிதாக அடுத்த வருக்குத் தொற்றக்கூடியது. எல்லா தொழு நோயாளிகளும் நோயைப் பரப்பக்கூடிய வர்கள் இல்லை.

3. 80 சதவீத தொழு நோயாளிகள் நோயைப் பரப்பக்கூடியவர்கள் இல்லை.

4. தொழு நோயாளிகளோடு பழகக் கூடிய ஆரோக்கியமான 95 சதவீதம் பேருக்குத் தொழுநோய் வருவதில்லை.

5. தொழுநோய் ஒரு பரம்பரை வியாதி அல்ல.

6. தொழுநோய்க்கு நவீன சிகிச்சை பெறும் நோயாளிகள் அந்த நோயைப் பரப்புவதில்லை.

7. துவக்கத்திலேயே கிகிச்சை அளித்தால் உடல்ஊனத்தைத் தவிர்க்க முடியும். அங்கஹீனம் உள்ளவர்கள் நோயைப் பரப்புவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

8. தொழுநோயின் அடையாளங்கள்:

அ) உணர்வு இல்லாத, அரிப்பு இல்லாத தோல் பகுதிகள்.

ஆ) உணர்வு இல்லாமல் விரல்கள் பல வீனமடைதல்.

இ) மெதுவான எண்ணெய்ப்பசையுள்ள பளபளப்புள்ள சிவந்த தோல்.

9. தொழுநோய் ஒரு பால்வினை நோயல்ல.

10. தொழுநோயை நிச்சயம் குணப்படுத்த முடியும். அச்சம் தேவையில்லை.

— பத்திரிகைத் தகவல் அலுவலகம்




—கவிஞர் கோமகன்

நம் தமிழ் மொழியைச் சிலர் பிழையாகப் பேசுவதையும் பிழை யாக எழுதுவதையும் நாம் அன் றாடம் காண்கின்றோம். சிலர் விவரம் தெரியாமலேயே பிழை செய்து வருகின்றார்கள். சிலர் விவரம் தெரிந்தும் வேண்டு மென்றே பிழை செய்கின்றார் கள்! முன்னவர்களைத் திருத்து வது நமது முதற் கடமையாகும். பின்னவர்களைப் பற்றிப் பிறகு பார்ப்போம்.

பொதுவாக, தமிழில் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் இவற்றோடு நில்லாமல், சிலர் புதிதாக இப்போது நகைச்சுவைப் பிழைகளையும் செய்து நம்மைத் திகைக்க வைக்கிறார்கள்.

''கற்க்கள்'' என்று எழுதுவதும் ''வாளைப் பளம்'' என்று எழுது வதும் எழுத்துப் பிழை ஆகும். ''அவன் வந்தனர்'' என்பது இலக்கணப் பிழையாகும். இனி நகைச்சுவைப் பிழைகள் பற்றி விரிவாக ஈண்டுக் காண்போம்.

நாளிதழ் ஒன்றில் ''கோழி இறந்த துக்கத்தால் இளம்பெண் தற்கொலை செய்து கொண்டாள்' என்ற தலைப்பைக் கண்டு திடுக் கிட்டேன். இளம் பெண்ணுக்குக் கோழி வளர்ப்பதில் அவ்வளவு விருப்பமா? செய்தியை மேலும் விரிவாகப் படித்தவுடன் சிரிப்புத் தான் வந்தது. ''தோழி'' என்ப தற்குப் பதிலாகக் ''கோழி'' என்று தவறாக அச்சிட்டு இருப் பது பிறகு தான் தெரிய வந்தது. இது நகைச்சுவை அச்சுப்பிழை!

திருச்சிக்கு அருகே ஒரு சிற் றூரில் இவ்விடம் ''மூடி வெட் டப்படும்'' என்ற பெயர்ப்பலகை யுடன் ஒரு கடை இருந்தது. நாடி விசாரித்ததில் அது ஒரு 'முடி திருத்தும் நிலையம்'' என்று தெரிய வந்தது. 'முடி' என்று எழுதுவதற்குப் பதிலாக 'மூடி' என்று நீட்டல் விகாரமாக எழுதி விட்டார்கள்.

வியாசர்பாடியில் ஒரு கடை யில் ''இங்குத் தேங்காய் முடியும் கிடைக்கும்'' என்று எழுதி வைத் திருந்தார்கள். ஏதோ கயிறுதிரிக்க தேங்காய் முடி விற்பார்கள் போலும் என்று நினைத்தேன். நேரில் சென்று விசாரித்தேன். தேங்காயை முழுதாகவும், உடைத்து,மூடியாகவும் கொடுக்கி றோம் என்று கடைக்காரர் விளக்கிச் சொன்னார். ''மூடி'' என்பதற்கு ''முடி'' என்று எழுதி இருப்பதை அவரிடம் எடுத்துச் சொல்லி, திருத்தி எழுதும்படி சொல்லி வந்தேன். இது குறுக்கல் விகாரமாக அமைந்துவிட்டது.

செங்குன்றத்தில்ஒரு நிழற்படக் கடை முன்னே மிகவும் கவர்ச்சி யான ஒரு பெயர்ப் பலகை மாட் டப்பட்டிருந்தது. அதில் கடை யின் பெயரைப் பெரிதாக எழுதி அதன் கீழே ''இவ்விடம் நல்ல விதமாகப் போட்டோ எடுத்துக் கெடுக்கப்படும் '' என்று எழுதி இருந்தார்கள். போட்டோவை நல்லவிதமாக எடுத்து, பிறகுஏன் அதைக் கெடுக்கவேண்டும் என்று முதலில் சிந்தித்தேன். பிறகுதான் தெரிந்தது, ''கொடுக்கப்படும்'' என்று எழுதுவதற்குப் பதிலாக ''கெடுக்கப்படும்'' என்று எழுதி விட்டார்கள் என்று! கொடுப்ப தைக் கெடுப்பது கொலைச்செய லன்றோ! ''ஈவது விலக்கேல்'' என்று ஔவைப்பிராட்டி அன்றே சொல்லி வைத்தாரே!




முட்டை வியாபாரி, ''இவ் விடம்கோழிமுட்டைகிடைக்கும்'' என்றும், அரிசி வியாபாரி,'இவ் விடம் அரிசி முட்டை கிடைக் கும்'' என்றும் எழுதி வைத்து நம் மைச் சிரிக்க வைக்கிறார்கள். ''இரங்கும் வழி'' என்று சில பேருந்துகளில் எழுதி, நம்மை இரங்க வைக்கிறார்கள்!

ஒரு மாணவி ''நொண்டி'' என்று எழுதுவதற்குப் பதிலாக ''நெண்டி'' என்று எழுதினாள். ஏன் தவறாக எழுதுகிறாய் என்று கேட்டேன். ''நொண்டிக்கு ஏதுங்க கால்'' என்று என்னைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத் தாள். நொண்டிக்கும்கூட, எழுதும் போதாவது, கால் கொடுத்துப் பார்ப்பது தான் நமது தமிழின் சிறப்பு என்று அவளுக்கு விளக்கிச் சொன்னேன்!

பெரம்பூர் நண்பர் ஒருவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தங் கள் உதவிக்கு ''நண்றி'' என்று நான்கு சுழி போட்டு எழுதப் பட்டு இருந்தது. நான்கு சுழி எழுத்துத் தமிழில் உண்டா என்று அவரிடம் கேட்டேன். அச்சக அன்பர் ஒருவரின் மகள் திரு மணச் செலவுக்காகப் பெரம்பூர் நண்பர் நான்கு ஆயிரம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தா ராம். பெண்ணின் தந்தை தன் நன்றிப் பெருக்கை உணர்த்த ஓர் ஆயிரத்திற்கு ஒரு சுழி வீதம் நன்றிக்கு நான்கு சுழிகள் போட்டு விட்ட செய்தியை அவர் சொல் லக் கேட்டு வாய்விட்டுச் சிரித்து விட்டேன்.




பெரம்பூர் நண்பர் பத்தாயிரம் நன்கொடையாகக் கொடுத்திருந் தால், ''நன்றிக்கு''ப் பத்துச் சுழி ஏற்பட்டிருக்குமே என்று நினைத் தேன். உடம்பு புல்லரித்தது. இரயில் வண்டித் தொடர்நினைப் புத்தான் வந்தது. இதை நினைக் கும் போதெல்லாம் சிரித்து மகிழ் வேன்.

இரும்பு வியாபாரியின் மகன் ''அரம் செய விரும்பு'' என்று எழுதிக் கொண்டு வந்தான். ''அறம்''அரமாக மாறி விட்டது.

பரம்பரைத் தொழில் எழுத்து வடிவில் வந்துவிட்டது போலும்!

சச்சரவு என்ற சொல்லுக்கு பெரிய (வல்லின)ற போட வேண்டுமா? அல்லது சிறிய (இடையின) ர போட வேண்டுமா என்று ஒரு முதியவரைக் கேட்டோம். அவருக்குத் தெரியவில்லை. என்றாலும் சமாளித்து, விளக்கினார். ''சச்சரவு'' என்றால் ''சண்டை' என்று பொருள். நடந்த சண்டை பெரியதாக இருந்தால்''சச்சறவு'' என்றும், சிறியதாக இருந்தால் ''சச்சரவு'' என்றும் எழுதுங்கள் என்று சொன்னார். அந்த நகைச் சுவையை நான் என்றுமே மறக்க இயலாது.

காலி மனை விற்பவர் ''ஒரு 'மனைவியின்' விலை ரூ. 2,500 மட்டுமே'' என்று செய்தித்தாளில் கொட்டை எழுத்துக்களில் விளம்பரப்படுத்தி இருந்தார்! அவர் தாராள மனம் கொண்டவர் போலும்!




எண்கணித முறைப்படி எட்டு எழுத்துக்களில் திரைப்படப் பெயர்கள் வரக்கூடாது என்பதற்காக ஏழு எழுத்துகளில் எழுதி, வேண்டுமென்றே அதாவது தெரிந்தே தமிழைப் பிழையாக எழுதுகிறார்கள். இன்னும் சிலர் சுப்பையா என்பதை ''சுப்பைய்யா'' என்றும் கந்தையா என்பதை ''கந்தைய்யா'' என்றும் கைக்கு வந்தபடியெல்லாம் எழுதிக் களிப்புறுகிறார்கள்.

எண்ணிப் பார்க்காமல் செய்யப் பெறும் பிழைகள் ஏராளமானவையாகும். தமிழின் பெருமையைத் தரணி அறிந்து கொண்டாலும் தமிழர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள் போலும்! பிழை நீக்கி எழுதுவதில் பெருங் கவலை கொள்ளுதல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுதும் போதும் பேசும்போதும் ஒரு சிறு பிழையும் நேராவண்ணம் உறுதியாக நிற்பவர்கள் தமிழில் பிழை செய்யத் தயங்காத காரணம் என்னவோ?

தமிழின் உயர்வே தங்களின் உயர்வு என்பதைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அந்த நாள் விரைவில் மலர விழிப்போடு பணியாற்றுவோமாக!



**உலகத் தமிழ்ச்சங்கம் ஓங்கி உயர்க**
**அலகில் இறைவன் அருளால்—திலகமாம்**
**பொன்மனச் செம்மல் புகழுடனே வாழ்க**
**சின்மயமாய் என்றும் செழித்து**

*(உலகத்தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிகழ்ச்சியின் போது திருமுருக கிருபானந்த வாரியார் அளித்த வாழ்த்து)*

## மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் தமிழகத்திற்கு முதல் பரிசு

அகில இந்திய அளவில் மீனவர் காப்புறுதித் திட்டத்தைச் சிறப்பான அளவில் செயல்படுத்தியதற்காக 1984-85ஆம் ஆண்டிற்கான முதற் பரிசு தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது. தேசிய மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் சார்பில் இதற்கான பரிசு 8.5.86 மற்றும் 9.5.86 தேதிகளில் டெல்லியில் நடைபெறவிருக்கும் தேசிய மீனவர் கூட்டுறவுச் சங்க மாநாட்டில் வழங்கப்பட இருக்கிறது.

மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், தொழிலில் மீனவரின் இறப்பு அல்லது நிலையான மற்றும் ஈடுசெய்ய முடியாத இழப்புக்கு இத் திட்டத்தின்படி காப்புறுதி செய்யப்பட்ட தொகை ரூ. 15,000 வழங்கப்படும். அதே சமயம் பாதிப்புகள் ஒரு பகுதியாக இருந்தால், (ஒரு கண் பார்வை இழப்பு, ஒரு கால் இழப்பு அல்லது ஒரு கை இழப்பு ஆகிய பாதிப்புகளுக்கு) ரூ. 7,500 வழங்கப்படும். ஒரு மீனவரின் ஆண்டு பிரிமியமான 9 ருபாயை மாநில அரசும் மத்திய அரசும் சரிபாதியாக ஏற்கின்றன. இதுவரை 1,16,264 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

இதுவரை 148 மீனவர்களுக்கு ரூ.21.3 லட்சம் விபத்துக் காப்புறுதித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.






அண்ணா மாவட்டத்திற்கென தனிப்போக்குவரத்துக் கழகம் இயங்கும் என்ற அரசு அறிவிப்பின்படி இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரிலே புதிய போக்குவரத்துக் கழகம் 1.4.86 முதல் திண்டுக்கல்லைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் புதிய போக்குவரத்துக் கழகம் அண்ணா மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் பேருந்துகளை இயக்கும். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து கீழ்க்கண்ட பேருந்துகள் புதிய போக்குவரத்துக் கழகத்திற்கு அளிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| நகர்ப்பிரிவுப்பேருந்துகள் | 193 |
| புறநகர்ப்பிரிவுப்பேருந்துகள் | 184 |
| மலைப் பகுதிப்பேருந்துகள் | 69 |
| மொத்தம் | 446 |

**கிளைகள்:**

இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் கீழ்க்கண்ட கிளைகள் மற்றும் உப கிளைகள் அடங்கும்.

திண்டுக்கல் நகர் கிளை
திண்டுக்கல் புறநகர் கிளை
பழனி
பெரியகுளம்
போடி
தேனி
கம்பம்

**உட் கிளைகள்:**

நந்தம்
வத்தலக்குண்டு
ஒட்டன்சந்திரம்
கொடைக்கானல்
தேவாரம்
சின்னமனூர்
குமுளி

பேருந்துகள் ஓட்டப்படும் தூரம் 1,51,211 கி. மீ. (ஒரு நாளைக்கு)

இந்த புதிய போக்குவரததுக் கழகத்தில் இயக்கப்படும் பேருந்துகளில் பயணம் செய்யும் பிரயாணிகளின் எண்ணிக்கை 3,80,500 (ஒரு நாளைக்கு).

இந்தப் புதிய போக்குவரத்துக் கழகத்திற்காக பேருந்து கூடு கட்டும் பிரிவு (body building unit), உதிரி பாகங்கள் மற்றும் இஞ்சின்களை மறு சீரமைப்பு செய்யும் பிரிவு (reconditioning unit), டயர் புதுப்பிக்கும் பிரிவு (tyre retreading unit) முதலிய பிரிவுகள் திண்டுக்கல் தலைமையகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டங்கள் தேனியில் முடிவு அடைந்த நிலையிலும் திண்டுக்கல்லில் ஆக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன.

இந்தப்புதிய போக்குவரத்துக் கழகத்தில் பேருந்துகள் செல்லும் பகுதியிலேயே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலே கொடைக்கானல், தேக்கடி, சுருளி நீர் வீழ்ச்சி, கும்பக்கரை நீர் வீழ்ச்சி முதலிய சுற்றுலா இடங்களும் யாத்திரிகர்கள் செல்லக் கூடிய பழனி, வீரபாண்டி போன்ற புனிதத் தலங்களும் அடங்கியுள்ளன.

நெடுந்தூரப் பயணிகளின் வசதிக்கென ஒட்டன்சத்திரத்தில் சாலை ஓர திறந்த வெளி உணவு விடுதி (motel) ஒன்று ஏற்கனவே திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

**டி.பி.எஸ். சுந்தரநாதன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**அண்ணா மாவட்டம்.**



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





85376

## சென்ற இதழில்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையில் தொடங்கிவைத்த உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிகழ்ச்சிகளைச் சென்ற இதழ் (1-5-1986) அட்டைப்படம் அலங்கரித்தது.

# புகழ்மேல் புகழ் சேர்க்கும் சோழன் போக்குவரத்துக் கழகம்

சரித்திர கால சோழர்கள் பெரும் புகழும் வாய்ந்தவர்கள். அதேபோல இன்று தமிழ்நாட்டிலுள்ள சோழன் போக்குவரத்துக் கழகம் விளங்குகிறது. பரிசுகளையும் பாராட்டுகளையும் பெறுவது சோழன் போக்குவரத்துக் கழகத்தின் வாடிக்கையாகிவிட்டது. சேவை மற்றும் பணிகளில் சிறந்து விளங்குவது போல, உடல் ஊனமுற்றோருக்கு உதவுவதிலும் சோழன் போக்குவரத்துக் கழகம் முன்னணியில் உள்ளது. உடல் ஊனமுற்றோருக்காக வேலை வாய்ப்பினை வழங்கி, சிறந்த நிர்வாகிக்கான தேசிய விருது இந்த ஆண்டு இந்தக்கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது சோழன் போக்குவரத்துக் கழகத்திற்குப் புகழ் சேர்ப்பதாகும்.

சோழன் போக்குவரத்துக் கழகம் மாநில அரசின் நிறுவனமாக 1972ல் துவங்கியது. துவக்கம் முதலே அதன் பணிகளில் சிறந்து விளங்கி வந்துள்ளது.

1982-83ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சிரம விருது, 1982-83ஆம் ஆண்டுக்கான 'பி.சி.ஆர்.ஏ.' விருது, 1982ஆம் ஆண்டுக்கான தேசிய பாதுகாப்பு விருது, 1982ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது, 1984ஆம் ஆண்டுக்கான சிறந்த கிராமப்புற சேவைக்கான விருது ஆகியவைகளையும், 1976-77ஆம் ஆண்டுகளுக்கான மாநில தொழில் பாதுகாப்பு விருதுகளையும், 1983ஆம் ஆண்டுக்கான மாநில மட்ட சிரமவீர் விருதினையும் வென்றுள்ளது. இந்த ஆண்டு உடல் ஊனமுற்றோர் சேவைக்கான தேசிய விருது பெற்றுள்ளது.

இந்த நிறுவனத்தில் மொத்தம் 955 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களில் 18 பேர் உடல் ஊனமுற்றோர். இவர்கள் பின்னுவோர், இணைப்பு உதவியாளர்கள், வண்ணம் பூசுவோராகப் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குத் துவக்கத்தில் கடுமையான பயிற்சி வழங்கப்பட்டது. அந்தப் பயிற்சிக்குப் பின் தேவையான திறமையை இவர்கள் பெற்றவுடன் உரிய வேலைகளில் நியமிக்கப்பட்டனர். மற்ற தொழிலாளர்களுக்குச் சமமான சம்பளம் இவர்களுக்கும் வழங்கப்படுகிறது. மற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவும் இவர்களுக்கும் உண்டு.



நான்காவது சம்பளக் குழு குறித்து எழுந்த முரண்பாடுகளை ஆராய்வதற்காக தமிழக அரசால் நியமிக்கப்பட்ட தனிநபர் குழுவின் தலைவர் திரு வி. கார்த்திகேயன், தமது அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் 15.5.86 அன்று அளித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





DIPR/Effi